திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது exam கிடையாது. மக்களுடைய பிரச்சினை. மக்களுடைய பிரச்சினைகளைத் தெளிவாகப் பேசினால்தான் பத்திரிகையில் வெளிவரும். சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதி தொடர்பான குறைகளை சட்டமன்றத்திலே தெரிவித்து, மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, திட்டம் நிறைவேறுமென்ற ஓர் அடிப்படையில்தான் விவரமாக, விளக்கமாகப் பேச வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதாவது சட்டமன்றத்தில் விளக்கமாக ஒரு வார்த்தை சொன்னாலும் எல்லா உறுப்பினர்களுக்கும் புரியும். பத்திரிகையாளர்களுக்கும் புரியும். மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் உரையை முடித்துவிடுங்கள்.

திரு. கே.பி. அன்பழகன்: 25,524.69 கிலோ மீட்டர் சாலைகள், ரூ.16,129.93 கோடியிலும், மாநில நிதியின்கீழ் ஊராட்சி மற்றும் ஒன்றியச் சாலைகள் மாவட்ட இதர சாலைகளாகத் தரமுயர்த்தியது 2,489 பணிகள், 6,364.16 கிலோ மீட்டர், 3,875.48 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், NABARDமூலம் கதவணைகள் ஆற்றுப் பாலங்கள் 323 எண்ணிக்கை 1,016.62 கோடி ரூபாயிலும், மத்திய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் 95 பணிகள், 831.24 கிலோ மீட்டர், 17 பாலங்கள் 3,069.25 கோடி ரூபாயிலும், மத்திய சாலை நிதித் திட்டத்தின்கீழ் 206 சாலைகள் 1,689.88 கிலோ மீட்டர், 17 பாலங்கள் ரூ.3,102.32 கோடியிலும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன், முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில் இந்தப் பணிகள் முழுவதும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

2023 ஏப்ரல் 1] [திரு. கே.பி. அன்பழகன்]

முற்பகல் 11–55

பொதுப் பணித் துறையின் மூலமாக 11 மருத்துவக் கல்லூரிகள், 5 மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்கள் கட்டி முடிக்கின்ற வகையிலே அண்ணன் எடப்பாடியார் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது வழங்கினார். மருத்துவக் கல்லூரிகள் வழங்கியதோடு மட்டுமல்லாமல், கட்டடம் கட்டுவதற்கும் நிதியை ஒதுக்கித் தந்தார். அன்றைக்கு, மாவட்டங்களைப் பிரித்ததோடு மட்டுமல்லாமல், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடங்களையும் வழங்கினார்கள். அவற்றில், இன்றைக்கு பணிகள் நிறைவுபெற்று, அவை முழுமையாக மக்கள் பயன்பாட்டில் இருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்துகொள்கிறேன்.

ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் சர்வதேசத் தரத்தில் ரூ.477.7 கோடி மதிப்பீட்டில் சென்னை, கோவை, மதுரை உள்ளிட்ட இடங்களில் மூன்றாம் நிலை பராமரிப்பு மற்றும் திருவள்ளூர், சேலம், திருப்பூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் இரண்டாம் நிலை மருத்துவமனைகளுக்கு கட்டடங்கள் டிசம்பர் 2022–ல் முடிக்கப்படும் என 2022–2023 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பு பக்கம் 44–ல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதையே, மீண்டும் இன்றைக்கு பக்கம் 5–லே ரூ.615 கோடி மதிப்பீட்டிலே அது முடிவடையும் நிலையில் உள்ளது எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் என்ன இடைவெளி என்பதைப் பதிலுரையில் சொல்ல வேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உரையாற்றியது போதும். நன்றி சொல்லி, அமருங்கள்.

திரு. கே.பி. அன்பழகன்: அதோடுமட்டுமல்லாமல், 2022–2023–ல். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் மறந்துவிடுவதற்கு ஒன்றுமில்லை; அவர் கையில் விவரம் வைத்திருக்கிறார்.

திரு. கே.பி. அன்பழகன்: பாதசாரிகள் உட்கட்டமைப்பு வசதி, முகப்பேர் டி.ஏ.வி. மற்றும் வேலம்மாள் பள்ளிகள் அருகேயும் நடைமேம்பாலங்கள் அமைப்பது குறித்து 2022–2023–ல் கொடுக்கப்பட்டது பக்கம் 131, 132–ல் இருக்கிறது. 2023–2024 ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கக் குறிப்பில்

மீண்டும் அது 74–வது பக்கத்தில் இருக்கிறது. அதிலே இந்த அரசினுடைய செயல்பாடு எந்த வகையில் இருக்கிறது என்பதற்கு உதாரணத்தை எடுத்துக்கொள்ளலாம். இந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் அதற்குத் திட்ட மதிப்பீடுகூட தயார் செய்யப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

அதைப்போல, கொள்கை விளக்கக் குறிப்பு, சென்ற ஆண்டு புத்தகத்திலும் 98 ஆம் பக்கம், இந்த ஆண்டு புத்தகத்திலும் 98 ஆம் பக்கம். அதில், இரயில்வே மேம்பாலங்கள் அமைப்பதற்காக ரூ.402.7 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது என்று 2022–2023–ல் சொல்லப்பட்டிருக்கிறது. அது, இன்றைக்கு, 2023–2024–ல் Setu Bandhan *என்ற திட்டத்தின் மூலமாக சொல்லப்பட்டிருக்கிறது. அதில் என்ன வேறுபாடுகள்; இடர்பாடுகள் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

வாகனங்களின் வளர்ச்சி 2001 ஆம் ஆண்டில் சுமார் 52 இலட்சமாக இருந்தது; 2020–ல் 6 மடங்கு உயர்ந்து சுமார் 2 கோடியே 95 இலட்சம் வாகனங்கள் இருக்கின்றன என்று அன்றைக்கு, 2022–2023–ல், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையில் தெரிவித்திருக்கிறார்கள். அதில், இன்றைக்கு சாலை வசதி ஆமை வேகத்தில் சென்றிருக்கிறது என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உரையாற்றியது போதும். நன்றி சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு)*

திரு. கே.பி. அன்பழகன்: *ஒரேயொரு கருத்தை சொல்லிவிடுகிறேன். ஒரேயொரு* point.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, ஒரு* point*–உடன் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) ஒரு* point*–உடன் உரையை முடியுங்கள்.*

திரு. கே.பி. அன்பழகன்: *சென்னை–சேலம் எட்டு வழிச் சாலைத் திட்டத்தை மாண்புமிகு அண்ணன் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அன்றைக்குக் கொண்டு வந்தார். அன்றைக்கு அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள். இன்றைக்கு மத்திய நெடுஞ்சாலை துறை அமைச்சர் அவர்கள், கேள்விக்குப் பதில் சொல்கின்றபோது,*

2023 ஏப்ரல் 1] [திரு. கே.பி. அன்பழகன்]

*தமிழகத்தில் அந்தச் சாலை போடுவதற்கு எந்த எதிர்ப்பும் இல்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை அங்கே தெரிவித்திருக்கின்றார். வாகனங்களின் வளர்ச்சி, கால விரயம், தூரத்தின் அளவு குறைவு, எரிபொருள் மிச்சம், போக்குவரத்து நெரிசல் குறைப்பதற்கு, விரைவாகச் செல்வதற்கு, வாகன தேய்மானம் குறைவு போன்றவற்றையெல்லாம் கருத்தில் கொண்டுதான் அன்றைக்கு மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ரூ.10,000 கோடி மதிப்பீட்டில் அந்த எட்டு வழிச் சாலையைக் கொண்டு வருவதற்கான முயற்சியை மேற்கொண்டார். (மேசையைத் தட்டும் ஒலி) அன்றைக்கு மக்களின் எதிர்ப்பு என்பது 8 சதவிகிதம்தான்; 92 சதவிகிதம் ஆதரவாக இருந்தது. ஆனால் இன்றைக்கு அமைச்சராக இருக்கக்கூடிய அண்ணன் திரு. எ.வ. வேலு அவர்கள், திருவண்ணாமலையிலே அதற்கு மிகப் பெரிய எதிர்ப்புத் தெரிவித்து போராட்டத்தை நடத்தினார்; ஆர்ப்பாட்டமும் நடத்தினார்கள். அன்றைய நிலையிலே, பல்வேறு அமைப்பினரும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தினார்கள். இன்றைக்கு, அந்தச் சாலை வரக்கூடாது என்பது எங்கள் எண்ணமல்ல. ஆனால், அப்படி ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் எல்லாம், ** (மணியடிக்கப்பெற்றது) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் கேட்டு, தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அனுமதியில்லை. அவையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். உரையாற்றியது போதும், மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. அண்ணாதுரை அவர்கள். (குறுக்கீடு) அவர் எட்டு வழிச் சாலை குறித்து ஒரு கருத்தைச் சொன்னார்கள்; அது பதிவு செய்யப்பட்டுவிட்டது. (குறுக்கீடு)*

திரு. கே.பி. அன்பழகன்: *போராட்டம் நடத்தியவர்களெல்லாம் இன்றைக்கு வேண்டுமென்று கேட்கிறார்கள். நாங்கள் அதை வரவேற்கிறோம். இல்லையென்று சொல்லவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள், அதை அழகாகப் பதிவு செய்துவிட்டீர்கள். (குறுக்கீடு) பின்னர், அதற்கு எதிர்ப்பில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே இருந்த எதிர்ப்போடு அவர்கள் அதை நிறுத்திவிட்டார்களா என்று கேட்டீர்களா? (குறுக்கீடு)*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

திரு. கே.பி. அன்பழகன்: சுங்க வரிக் கட்டணம். இன்றைக்கு இந்தியா முழுவதும் 816 சுங்கச் சாவடிகள் இருக்கின்றன. அப்படி இருக்கின்றபட்சத்தில், இன்று அதிகாலை 12–00 மணி முதல் 29 சுங்கச் சாவடிகளில் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது.

நண்பகல் 12–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள் அதுகுறித்து பதிவு செய்துவிட்டார்கள். அதுகுறித்து நிறைய உறுப்பினர்கள் முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அதை நாம் ஒருநாள் எடுத்துக்கொள்ளலாம். அது ஒன்றிய அரசு சம்பந்தப்பட்ட விஷயம். (குறுக்கீடு) மாண்புமிகு முதல்வராக இருந்த உங்களுக்குத்தான் இதுபற்றி தெரியுமே! நாம் சுங்கக் கட்டணத்தை அதிகரிக்கவும் முடியாது; குறைக்கவும் முடியாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையாற்றும்போது அதற்குப் பதில் சொல்வார்கள். நன்றி, உட்காருங்கள். போதும்.

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்குள்ள சுங்கச் சாவடிகளில், 16 சுங்கச் சாவடிகளின் இடைவெளி 60 கிலோ மீட்டருக்குக் குறைவாக இருக்கிறது. ஒவ்வொரு சுங்கச் சாவடிக்கும் இடைவெளி 60 கிலோ மீட்டர் இருக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு பதில் சொல்லப்போகிறார்கள். நீங்கள் விஷயத்தைச் சொல்லிவிட்டீர்கள். நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. கே.பி. அன்பழகன்: இறுதியாக ஒரேயொரு point–ஐ மட்டும் சொல்லிவிடுகிறேன். பொதுவாக ஒரு சாலை அமைக்கின்றபோது, அந்த சாலைக்குத் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, டெண்டர் விடப்பட்டு, டெண்டர் எடுத்தவர்களுக்கு work order கொடுக்கப்பட்டு. பணிகள் மேற்கொள்ளப்படும். பணிகள் செய்து முடிக்கப்பட்ட பிறகு, அந்தச் சாலையினுடைய தரத்தை ஆய்வு செய்து, அவர்களுக்கு அதற்குரிய தொகை வழங்கப்படும். ஆனால், **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2023 ஏப்ரல் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இதை நான் பதிவு செய்ய முடியாது. இப்படியொரு தவறு நடந்திருந்தால், நீங்கள் அதற்குரிய ஆதாரத்தை என்னிடம் தர வேண்டும். (குறுக்கீடு) இல்லை, இல்லை, அதையெல்லாம் ஏற்றுக்கொள்ள முடியாது. நீங்கள் அவையிலே பேசும்போது, குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்யலாம். ஆனால், ஆதாரத்தை என்னிடம் காட்டிவிட்டு பதிவு செய்யுங்கள். நான் அதை பதிவு செய்துகொள்கிறேன். அடுத்த விஷயத்திற்கு வாருங்கள். மாண்புமிகு உறுப்பினர், போதும், போதும். (குறுக்கீடு) போதும், போதும்.

திரு. கே.பி. அன்பழகன்: பணி நீக்கமா, suspend–ஆ என்பதைக் கேட்பதற்காகத்தான் நான் பேசுகிறேனே தவிர, வேறொன்றும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உட்காருங்கள், நன்றி. மாண்புமிகு உறுப்பினர் திரு. அண்ணாதுரை அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிடட்டும். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிடட்டும். (குறுக்கீடு) ஒரேயொரு நிமிடமா; சரி தருகிறேன்; 12–02–க்கு முடிக்க வேண்டும்.

திரு. கே.பி. அன்பழகன்: 2022–2023 ஆம் ஆண்டிற்கான பொதுப் பணித் துறை அறிவிப்புகளிலே வரிசை எண் 23–ல், வாணியம்பாடி பொதுப் பணித் துறை ஆய்வு மாளிகை 1 கோடியே 82 இலட்சம் ரூபாயில் கட்டப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை வாணியம்பாடியில் கட்டாமல், ஜோலார்பேட்டையில் உள்ள சிட்டியப்பனூர் ஊராட்சியில் NHAI–க்குச் சொந்தமான இடத்திலே கட்டி வருகிறார்கள். ஏற்கெனவே வாணியம்பாடியில் ஒரு பேருந்து நிலையம் கட்டப்பட்டு, அது பயன்பாட்டில் இல்லாமல் இருக்கின்றது. அதற்கு NHAI அனுமதி தரவில்லை. ஆகவே, 1 கோடியே 82 இலட்சம் ரூபாய் அரசுக்கு வீணாகி விடக்கூடாது என்பதற்காக இதைச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் தொகுதி சார்பான கோரிக்கைகள் இருந்தால், அதை என்னிடம் கொடுத்துவிடுங்கள். அதை நான் பதிவு செய்துகொள்கிறேன். (குறுக்கீடு) இல்லை, நான் கூறியபடி உங்களுக்கு ஒரு நிமிடம் தந்துவிட்டேன்; 12–02 முடிந்துவிட்டது.

திரு. கே.பி. அன்பழகன்: *திட்டக்குடி-சிறுபாக்கம் சாலையில் புலிவலம் ஓடையின் குறுக்கே கட்டப்பட்டுள்ள உயர்மட்டப் பாலம், சௌந்தர்யசோழபுரம், கோட்டக்காடு ஆகிய ஊர்களுக்கிடையே வெள்ளாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலம், கடலூர், பெரம்பலூர் மாவட்டங்களை இணைக்கின்றது. இந்த இரண்டு பாலங்களுக்கும்* approach road *இல்லாதிருக்கின்ற காரணத்தால், பாலம் கட்டி முடிக்கப்பட்டும், மக்களுடைய பயன்பாட்டில் இல்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், விரைவில் அதை மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நல்ல கோரிக்கைதான் வைத்துள்ளீர்கள், போதும். (குறுக்கீடு) மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், போதும். (குறுக்கீடு) போதும்.*

திரு. கே.பி. அன்பழகன்: *தொப்பூர் முதல் மேட்டூர் பவானி நான்குவழிச் சாலை போடுவதற்காக ரூ.1,200 கோடி அண்ணன் எடப்பாடியார் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில் ஒதுக்கப்பட்டது. தற்போது, அந்த நான்குவழிச் சாலையைப் போடாமல்,* side-*ல் மட்டும் ஒரு மீட்டர் அதிகப்படுத்தி போடுகின்ற மாதிரி நாங்கள் பார்த்தோம். அதனுடைய நிலைப்பாடு என்ன என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி, நன்றி. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடு)*

திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறை சம்பந்தமான ஒருசில கோரிக்கைகளை நான் தங்களிடம் தந்துவிடுகிறேன். அதை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்கள் தொகுதிக் கோரிக்கைகளை என்னிடம் தந்துவிடுங்கள். அதை நான், நீங்கள் பேசியதாக அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்கிறேன். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உங்களுடைய தொகுதிக் கோரிக்கைகளைப் பதிவு செய்து கொள்கிறேன்.*

திரு. கே.பி. அன்பழகன்:

தொகுதிக் கோரிக்கைகள்:

மாட்லாம்பட்டி முதல் முருக்கம்பட்டி வரையிலுள்ள 11 கி.மீ. நீளமுள்ள ODR *தார்ச் சாலை 3.75 மீட்டர் அகலம் கொண்டதாக உள்ளது. இச்சாலையை 5.5 மீட்டர் சாலையாக அகலப்படுத்த வேண்டும். புலிக்கரை முதல் முக்குளம் வரையிலுள்ள சுமார் 16 கி.மீ. நீளமுள்ள* ODR *தார்ச் சாலை 3.75 மீட்டர் அகலம் கொண்டதாக உள்ளது. இச்சாலையை 5.5 மீட்டர் சாலையாக அகலப்படுத்த வேண்டும். கடமடை முதல் பேகாரஅள்ளி வரையிலுள்ள 6 கி.மீ. நீளமுள்ள* ODR *தார்ச் சாலை 3.75 மீட்டர் அகலம் கொண்டதாக உள்ளது. இச்சாலையை 5.5 மீட்டர் சாலையாக அகலப்படுத்த வேண்டும். பாலக்கோடு முதல் கேசர்குளி அணை வரை சுமார் 16 கி.மீ. நீளமுள்ள* ODR *தார்ச் சாலை 5.5 மீட்டர் அகலம் கொண்டதாக உள்ளது. இச்சாலையை 7 மீட்டர் சாலையாக அகலப்படுத்த வேண்டும். மொரப்பூர் முதல் மாரண்டஅள்ளி வரை 45 கி.மீ. நீளமுள்ள* MDR *தார்ச் சாலை 7 மீட்டர் அகலம் கொண்டதாக உள்ளது. இச்சாலையை 12 மீட்டர் சாலையாக அகலப்படுத்த வேண்டும்.*

அதியமான்கோட்டை-ஒசூர் சாலையில் மாநில சாலைகளுக்குட்பட்ட சாலைகள் தற்போது மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. பழுதடைந்துள்ள இச்சாலைப் பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேற்குறிப்பிட்ட சாலைகள் அனைத்தையும் அகலப்படுத்த வேண்டும்.

பஞ்சப்பள்ளியிலிருந்து காடுசெட்டிபட்டி வரை செல்லும் தார்ச் சாலையில், பஞ்சப்பள்ளி அருகிலுள்ள சிறுபாலத்தை உயர்மட்டப் பாலமாக மாற்றி அமைக்க வேண்டும். பிக்கனஅள்ளி முதல் குண்டாங்காடு வழியாக கொத்தளம் வரை செல்லும் தார்ச் சாலையில், பிக்கனஅள்ளி அருகேயுள்ள பழைய தரைப் பாலத்தை உயர்மட்டப் பாலமாக மாற்றி அமைக்க வேண்டும்.

3. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

சுங்கக் கட்டண உயர்வு—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுங்கக் கட்டண உயர்வு குறித்து ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள், எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் பல்வேறு மனுக்களை என்னிடத்திலும் கொடுத்திருக்கிறார்கள்; சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களிடத்திலும் கொடுத்திருக்கிறார்கள். இதுகுறித்து நான் ஒரு சிறிய விளக்கத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

தமிழகத்திலுள்ள தேசிய நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் 6,805 கிலோ மீட்டர்; அதில், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் பராமரிக்கப்படும் சாலைகளின் நீளம் 5,128 கிலோ மீட்டர்; மாநில நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்படும் சாலைகளின் நீளம் 1,677 கிலோ மீட்டர் ஆகும். இதில், BOT *என்கிற கட்டுமானம், இயக்கம், ஒப்படைத்தல் என்பதிலுள்ள 25 சுங்கச் சாவடிகளும்,* TOT *சுங்க வசூல் செய்வதில் 4 சுங்கச் சாவடிகளும்,* special purpose vehicle *என்கிற மணலி சாலை மேம்பாட்டுச் சிறப்புத் திட்டத்தின்கீழ் ஒன்றும்,* public funded project *மூலமாக 26 எனவும் தமிழ்நாட்டில் 58 சுங்கச் சாவடிகளில் சுங்கக் கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. இந்த 58 சுங்கச் சாவடிகளில், 37 சுங்கச் சாவடிகளில் ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதி, அதாவது இன்றைய தேதியிலிருந்தும், 27 சுங்கச் சாவடிகளில் செப்டம்பர் மாதம் 1 ஆம் தேதியிலிருந்தும் இந்தக் கட்டணத்தை வசூல் செய்ய வேண்டும் என்று ஒன்றிய அரசாங்கம் முடிவு செய்து, ஆணை பிறப்பிக்கப்பட்டதையடுத்து, இந்த வசூலைத் தொடங்கியிருக்கிறார்கள்.*

பிற்பகல் 12–05

காலையில் அதனை நான்கூட தொலைக்காட்சியில் பார்த்தேன். ஆங்காங்கு தொழிற்சங்கத் தலைவர்களெல்லாம் ஒரு போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதில் ஒன்றிய அரசாங்கம் என்ன சொல்கிறது என்று சொன்னால், நாங்கள் ஏற்கெனவே போட்டிருக்கிற சட்டத்தின் அடிப்படையில்தான் இவையெல்லாம் போடப்படுகின்றன என்று சொல்கிறது. BOT, TOT *என்ற அடிப்படையில் 32 சுங்கசாவடிகளைப் பொறுத்தவரை, அரசு மற்றும் தனியார் பங்களிப்பின் வாயிலாக முதலீடு செய்யப்பட்டு, அதற்கான சுங்கக் கட்டணம் குறிப்பிட்ட கால நிர்ணயத்தில், இந்தச் சாலைகள் 6 அல்லது 4 வழித் தடங்களாக இருப்பதால், இவற்றில் உள்ள சுங்கச் சாவடிகளை அகற்ற நடவடிக்கை எடுக்கும் நிலையில் ஒப்பந்ததாரருக்கு ஏற்படும் வருவாய் இழப்பினை நாங்கள்*

தர வேண்டியதாக இருக்கிறது; ஆகையால் அவற்றை வசூல் செய்துதான் கொடுக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில்தான் நாங்கள் வசூல் செய்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆணையையேற்று, கடைசியாக 18–3–2023 அன்று ஒரு கடிதம் எழுதினேன். ஏற்கெனவே, ஒன்றிய அரசின் மாண்புமிகு அமைச்சர் திரு. நிதின் கட்கரி அவர்களைப் பார்க்கின்றபோதெல்லாம், தொடர்ந்து தமிழ்நாட்டில் இருக்கிற சுங்கக் கட்டணத்தை நிறுத்த வேண்டும்; ஏற்கெனவே இந்தச் சாலைகள் அமைக்கப்பட்டதற்கெல்லாம் முழுமையாகச் செலவினங்கள் தீர்ந்துவிட்டன. இன்னும் வசூல் செய்வது நியாயமில்லை என்ற அடிப்படையில், 5 சுங்கச்சாவடிகள் அடையாளம் காட்டப்பட்டு, அவற்றையும் அகற்றுவதற்கு கடிதம் மூலமாகவும் நேரடியாகவும் எடுத்துச்சொன்னோம்.

அந்த அடிப்படையில், கடைசியாக எழுதிய கடிதத்தில்கூட கடினப் புருவங்களுடன்கூடிய இரு வழித்தடச் சாலைகளை அமைக்க 14 சுங்கச் சாவடிகள், சுங்கக் கட்டணம் வசூலிப்பதை நிறுத்த வேண்டும்; பொதுவாக மாநில அரசாங்கத்தினுடைய சாலைகளை, உதாரணமாக 10 மீட்டர் சாலை போடுகிறோம் என்று சொன்னால், இந்தப் பக்கம் ஒன்றரை மீட்டர், அந்தப் பக்கம் ஒன்றரை மீட்டர் மட்டும் ஒன்றிய அரசாங்கம் போட்டுவிட்டு, அந்தச் சாலையில் சுங்கக் கட்டணத்தை வசூல் செய்கிறது. அதேபோல் ஏழு, ஏழரை மீட்டர் சாலை இருக்கிற இடத்திலும்கூட இந்தப் பக்கம் ஒன்றரை மீட்டர், அந்தப் பக்கம் ஒன்றரை மீட்டர் மட்டும் போட்டுவிட்டு, அதிலேயும் சுங்கக் கட்டணம் வசூலிக்கிறார்கள். ஆகையால் இதுபோல் மாநில அரசாங்கத்திடம் கையகப்படுத்தி, 3 மீட்டர் மட்டும் போட்டுவிட்டு, அதிலே சுங்கக் கட்டணம் வசூல் செய்வது நியாயமில்லை என்ற அடிப்படையில், ஏறத்தாழ 14 சுங்கச்சாவடிகளில் இப்படி தமிழ்நாட்டில் வசூல் செய்யப்படுகிறது, அதையெல்லாம் நீங்கள் நிறுத்த வேண்டும் என்று கடிதம் மூலமாக நாங்கள் தெரிவித்தோம்.

அதோடு மட்டுமல்ல, நகராட்சி எல்லைக்குட்பட்டிருக்கிற 10 கிலோ மீட்டர் தூரத்தில் இருப்பவற்றையெல்லாம் எடுக்க வேண்டும் என்று ஏற்கெனவே ஒன்றிய அரசாங்கத்தின் விதி இருக்கிறது. அந்த விதியைக் காட்டி, 5 இடங்களில் உள்ள சுங்கச் சாவடிகள் அகற்றப்பட வேண்டும் என்று அதற்கும் கடிதம் கொடுத்தோம். அதோடு மட்டுமல்ல, மூலதனங்களெல்லாம் செலவு செய்யப்பட்ட சாலைகள், பரனூர்–ஆத்தூர் சாலை, அதேபோன்று கிருஷ்ணகிரியில்

இருக்கிற தப்பலூர் சாலை-இவற்றில் கட்டுமானப் பணிகளுக்கு தொகை செலவிடப்பட்டு, மீண்டும் வசூல் செய்யப்பட்டுவிட்டது. எனவே, இவற்றுக்கெல்லாம் நாங்கள் இனிமேல் 40 சதவிகிதம்தான் வசூல் செய்வோம் என்று ஒன்றிய அரசாங்கத்தினுடைய மாண்புமிகு அமைச்சர் திரு. நிதின் கட்கரி அவர்கள் நாடாளுமன்றத்தில் பதில் சொன்னார்கள். நீங்கள் 40 சதவிகிதம் வசூல் செய்யுங்கள் என்பதையும் குறிப்பிட்டு, அதேநேரத்தில் கிருஷ்ணகிரி போன்ற இடங்களில் பார்த்தோமென்றால், அங்கு நகரத்திற்குள்ளேயே மருத்துவக் கல்லூரியுடன்கூடிய மருத்துவமனை இருக்கிறது; மாவட்ட ஆட்சியர் அலுவலகம் இருக்கிறது; அதன் காரணமாக ஒட்டுமொத்த மக்களும் அங்கே சுங்கக் கட்டணம் கட்ட வேண்டிய சூழல் நிலவுகிற காரணத்தினால், இடங்களை மாற்ற வேண்டும் என்று கடிதங்கள் எழுதினோம். இப்படி தொடர்ந்து நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுடைய உணர்வைப் புரிந்துகொண்டு, நம்முடைய மாநில அரசாங்கம், சுங்கக் கட்டணத்தை நீக்கிட வேண்டும், குறைத்திட வேண்டும் என்று தொடர்ந்து நாங்கள் குரல் கொடுக்கிறோம். தொடர்ந்து கடிதங்கள் அனுப்பிக் கொண்டிருக்கிறோம். நான் குறிப்பிட்டதைப்போல, கடைசியாக 18–3–2023 அன்று நாங்கள் கடிதம் அனுப்பினோம். ஆனால், திரும்பத் திரும்ப அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், ஏற்கெனவே நாங்கள் Act-ன்கீழ் ஒப்பந்தம் போட்டிருக்கிறோம், விதிகளுக்குட்பட்டுத்தான் போட்டிருக்கிறோம், கட்டுமானப் பணிகளுக்கான முழு செலவினங்களும் நிறைவடைந்த பிறகுதான் நாங்கள் முடிவு எடுக்க முடியும் என்று சொன்னார்கள்.

Toll-க்குட்பட்டு இனிமேல் சுங்கக் கட்டணம் வசூல் செய்ய மாட்டோம்; App மூலம் ஒருவர் 60 கிலோ மீட்டர் பயணம் செய்தால், 70 கிலோ மீட்டர் பயணம் செய்தால், அதற்குரிய கட்டணத்தை மட்டும் நாங்கள் வசூல் செய்வோம் என்று இப்போது ஒன்றிய அரசின் மாண்புமிகு அமைச்சர் திரு. நிதின் கட்கரி நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டிருக்கிறார். எனவே, இந்த அரசைப் பொறுத்தளவிற்கு இந்தக் கட்டண வசூல், toll gate எல்லாம் முழுமையாக எடுக்கப்பட வேண்டும் என்பதும் அல்லது ஏற்கெனவே maintenance என்ற பெயரில்கூட அதனைச் செய்ய வேண்டும் என்று சொன்னால், 40 சதவிகிதத்திற்குக் குறைவாகத்தான் கட்டணம் வசூல் செய்ய வேண்டுமென்பதிலே இந்த அரசு உறுதியாக இருக்கிறது. தொடர்ந்து இந்தக் கட்டணக் குறைவுக்கு இந்த அரசு மேலும், மேலும் முயற்சி செய்யும்.

2023 ஏப்ரல் 1]

4. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 21 – நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை

(ஆ) கோரிக்கை எண் 39 – கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)

(இ) கோரிக்கை எண் 31 – தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. அண்ணாதுரை அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், பேசுங்கள்.*

திரு. கா. அண்ணாதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானமும், அறிவும், மனிதருக்கு அழகு. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் கேட்ட கேள்விக்குத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இவ்வளவு நேரம் பதிலளித்துக் கொண்டிருந்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. அண்ணாதுரை, பேசுங்கள்.*

திரு. கா. அண்ணாதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானமும், அறிவும் மனிதருக்கு அழகு என்று அறிவு ஆசான் தந்தை பெரியார், மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்ற மகத்தான ஜனநாயகவாதி, தி.மு.கழகம் எனும் மாபெரும் இயக்கத்தைக் கண்டு, நம் கரங்களில் ஒப்படைத்து சென்ற பேரறிஞர் அண்ணா (மேசையைத் தட்டும் ஒலி) ஒப்பாரும் மிக்காரும் இல்லா தலைவர், நம்மை வளர்த்து ஆளாக்கி, உலக அரங்கில் நமக்கென தனித்துவமான அரசியலைப் பயிற்றுவித்து, நமக்கு ஓர் அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்த நம் நெஞ்சம் நிறைந்த முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரை நெஞ்சில் நிறுத்தி என் உரையைத் தொடங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 12–10

திராவிடம் என்பது ஒரு காலத்தில் இடத்தைக் குறிப்பிடுவதாக இருந்தாலும், பின்பு அது ஓர் இனத்தின் பெயராய், மொழியின் பெயராய் மாறி, இன்று அது திராவிட சித்தாந்தம் அல்லது திராவிட கருத்தியலாக மாற்றம் பெற்றிருக்கிறது என்றும்; திராவிட

[திரு. கா. அண்ணாதுரை] [2023 ஏப்ரல் 1

மாடல் என்பது பகுத்தறிவு, சுய மரியாதை, சமூக நீதி, சம தர்மம் ஆகியவற்றை உள்ளடக்கியது என்றும், ஓங்கி ஒலிப்பதன்மூலம் இன எதிரிகளுக்கு சிம்ம சொப்பனமாய் விளங்குகின்ற திராவிட மாடல் ஆட்சியின் நாயகன் மாண்புமிகு முதல்வர் தளபதி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி)

"ஈன்ற பொழுதின் பெரிதுஉவக்கும் தம்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்"

என்ற வள்ளுவனின் வாக்கிற்கேற்ப, தாயாரின் வாழ்த்துகளோடு நேற்று முன்தினம் விளிம்புநிலை மற்றும் உழைக்கும் மகளிருக்கு, மகளிர் மேம்பாட்டுத் துறைமூலம் பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்து, தாய் எட்டடி பாய்ந்தால், குட்டி பதினாறு அடி பாயும் என்கின்ற முதுமொழிக்கேற்ப (மேசையைத் தட்டும் ஒலி) மானியக் கோரிக்கையில் அனைவரும் பாராட்டத்தக்க வகையில் பதிலுரை வழங்கிய மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், அடுத்த தலைமுறைக்கான தலைமை தயாராகிவிட்டது என்கின்ற உணர்வோடு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, கட்டடங்கள், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை ஆகிய மூன்று மானியக் கோரிக்கைகளில் கழகத்தின் சார்பில் உரையாற்றுகின்ற வாய்ப்பை எனக்கு வழங்கியிருக்கின்ற தங்களுக்கும், மேற்கண்ட துறைகளின் மாண்புமிகு அமைச்சர்களுக்கும் மற்றும் ஏனைய மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அரசுக் கொறடா ஆகியோருக்கும் என்னுடைய இதயபூர்வமான நன்றியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையும், நெடுஞ்சாலைத் துறையும் மிக முக்கியமான துறைகள். நாட்டினுடைய பொருளாதார மேம்பாட்டிற்கும், வேளாண் வளர்ச்சிக்கும் உட்கட்டமைப்பு வசதிகள் மிக முக்கியம். அந்த உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கித் தருவதில் மிக முக்கியமாகப் பங்காற்றக்கூடிய துறைகள் இந்த இரண்டு துறைகளாகும். 2023–2024 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறைக்கு 19 ஆயிரத்து 465 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதற்கு மாண்புமிகு முதல்வர்

அவர்களுக்கும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கையில் மிக முக்கியமான இரண்டு கோரிக்கைகளை, பட்டுக்கோட்டை தொகுதி மக்களின் நீண்டநாள் தேவையை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இந்த இரண்டு கோரிக்கைகளும் பட்டுக்கோட்டை பகுதிக்குத் தேவையான கோரிக்கைகள் என்றாலும், இந்தக் கோரிக்கைகள் என்பது பிற பகுதி மக்களுக்கும் தேவையானவையாகும். போக்குவரத்து நெரிசலுக்கும், மழைக் காலங்களில் தங்குதடையற்ற போக்குவரத்திற்கும் மிக முக்கியமானதாகும்.

முதலில் கண்ணனாறு, காட்டாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைப்பது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். தஞ்சை மாவட்டம், பாப்பாநாடு என்ற கிராமத்தில் தொடங்கும் சாலை, திருவாரூர் மாவட்டம், பெருகவாழ்ந்தான் வழியாகச் செல்கிறது. இந்தச் சாலையின் குறுக்கே ஓடக்கூடிய பாமனி ஆறு, திருமேனியாறு ஆகிய இரண்டு ஆறுகளின் குறுக்கே கடந்த காலங்களில் அணைகள் கட்டப்பட்டுவிட்டன. ஆனால், பல ஆண்டுகளாக இந்தச் சாலையின் குறுக்கே ஓடக்கூடிய கண்ணனாற்றின் குறுக்கே ஒரு மேல்மட்டப் பாலம் கட்ட வேண்டுமென்ற கோரிக்கை இருந்தாலும், இதுவரை நிறைவேற்றப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மழைக் காலங்களில் கண்ணனாற்றின் குறுக்கே கட்டப்பட்ட தரைப் பாலம் மூழ்கிவிடுவதால் தஞ்சாவூர் மாவட்டத்தையும், திருவாரூர் மாவட்டத்தையும் இணைக்கக்கூடிய இந்தச் சாலை துண்டிக்கப்பட்டுவிடுகிறது. இதன் காரணமாக மழைக் காலங்களில் இரண்டு மாவட்ட மக்களும் பெரிதும் துன்பத்திற்கு ஆளாகின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேல்மட்டப் பாலம் கட்ட வேண்டும் என்று சொல்லக்கூடிய இந்த இடம் என்பது மதுக்கூர் ஒன்றியத்திற்குட்பட்ட பெரியக்கோட்டை, சொக்கனாவூர், காடந்தங்குடி ஆகிய ஊராட்சிகளுக்கு உட்பட்டதாகும். இந்த இடத்தில்தான் பாமனி ஆறு, திருமேனியாறு, கண்ணனாறு ஆகிய மூன்று ஆறுகளும் அருகருகே ஓடுகின்றன. இதன் காரணமாக மழைக் காலங்களில் மூன்று ஆறுகளில் பெருக்கெடுத்து ஓடும் மழை நீர், வயல்களுக்குள் புகுந்து பெரிய அளவில் பயிர்ச் சேதத்தை இந்தப் பகுதி விவசாயிகளுக்கு ஒவ்வோர் ஆண்டும் ஏற்படுத்திவிடுகிறது.

[திரு. கா. அண்ணாதுரை] [2023 ஏப்ரல் 1
பிற்பகல் 12–15

குறிப்பாக, நம் நெஞ்சம் நிறைந்த தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இரண்டாவது முறையாக தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றிருந்த நேரத்தில், 1974–1975 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளச் சேதத்தைப் பார்வையிட இந்தப் பகுதிக்கு வந்திருந்தார். அப்போது, நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களிடம் அந்தப் பகுதி மக்கள் இந்த மேல்மட்டப் பாலத்தைக் கட்டித் தர வேண்டுமென்கிற கோரிக்கையை வைத்தனர். இப்போது, 6 ஆம் முறையாக கழகம் பொறுப்பேற்று, நம்முடைய தலைவர் தளபதி அவர்கள் மாண்புமிகு முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பிறகு, 2021 ஆம் ஆண்டு ஏற்பட்ட மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட, பயிர்ச் சேதத்தைப் பார்வையிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிக்கு வந்திருந்தார். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் உடன் வந்திருந்தார்கள். அன்று இரவு நேரத்தில், தஞ்சை மாவட்டத்தில் அந்த ஓர் இடத்தைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார் என்பதையும், அப்போது உயர்மட்டப் பாலம் தேவை என்பதை அந்தப் பகுதி மக்கள் கோரிக்கையாக வைத்தார்கள் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

கடந்த 22 மாதங்களாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பலமுறை வலியுறுத்தப்பட்ட கோரிக்கை இந்தக் கோரிக்கை. மாவட்ட நிர்வாகமும் இதற்கு முக்கியத்துவம் தந்து, பரிந்துரை செய்துள்ளது. துறையின் சார்பில் திட்ட மதிப்பீடு அறிக்கை தயார் செய்யப்பட்டு, அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அந்த மேல்மட்டப் பாலத்தைக் கட்டித் தர வேண்டுமென இந்த நேரத்திலே, இந்த அவையிலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இரண்டாவது முக்கியக் கோரிக்கையாக, பட்டுக்கோட்டை நகருக்கு மூன்றாம் கட்ட சுற்றுச்சாலை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, 2006–2011-ல் இரண்டாம் கட்ட புறவழிச்சாலைப் பணிகள் முடிவு பெற்றன. அதற்குப் பிறகு, கடந்த பத்தாண்டுகளாக மூன்றாம் கட்ட புறவழிச்சாலை அமைப்பதற்கான எந்தப் பணியும் நடைபெறவில்லை. தற்போது, விரிவான திட்ட அறிக்கை (DPR) மற்றும் நில திட்ட அட்டவணை (LPS) தயார் நிலையில் உள்ளது. மேலும், கிலோ மீட்டர் 7/4 முதல்

21/0 வரை, 13.60 கிலோ மீட்டர் நீளத்திற்கு நில எடுப்பிற்கான ரூ.42.82 கோடிக்கான மதிப்பீடு அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தற்போது, கிலோ மீட்டர் 7/4 முதல் 14/6 வரை, 7.20 கிலோ மீட்டர் நீளத்திற்கு தஞ்சாவூர் சாலை ஆலடிக்குமுளை தொடங்கி சேதுபாவாசத்திரம் SH 146 வரை மட்டும் நில எடுப்பிற்கான மதிப்பீடு சுமார் ரூ.38.61 கோடிக்கு தயார் செய்யப்பட்டு, அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. பட்டுக்கோட்டை நகரத்திலுள்ள சாலைகள் மிக குறுகலான சாலைகள். வெளி வாகனங்கள் நகரத்திற்குள் வர முடியாத ஒரு சூழ்நிலை இன்றைக்கு நிலவுகிறது. கடந்த மாதம் தஞ்சாவூர் நகரில் நடைபெற்ற பல்வேறு துறைகளின் மாவட்ட ஆய்வுக் கூட்டம், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்றபோது, அந்தப் புறவழிச்சாலையின் முக்கியத்துவம் குறித்து, எங்களுடைய மாவட்ட பொறுப்பு அமைச்சர், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களிடம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, இந்தப் புறவழிச்சாலையின் தேவையைக் கருத்தில்கொண்டு, முதற்கட்டமாக நில எடுப்பிற்கான மதிப்பீட்டுத் தொகையை அரசின் சார்பிலே ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பட்டுக்கோட்டை தொகுதி, மதுக்கூர் பேரூராட்சியில் சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட பயணியர் விடுதி தற்போது சிதிலமடைந்துள்ளது. பயன்படுத்த முடியாத நிலையிலுள்ள அந்தப் பயணியர் விடுதியின் இடத்தில் ஏறத்தாழ 48 சென்ட் நிலம் இருக்கிறது. அந்த இடத்தில் நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் ஒரு பயணியர் விடுதி கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை சார்பில் ஒருசில கருத்துகளை எடுத்துக்கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைய இணைய உலகில் தகவலே ஆற்றலுக்கும், அதிகாரத்திற்கும் அடித்தளம். இந்த அரசின் சமூக நீதிக் கொள்கையை நிலைநாட்ட, தகவல்களையும், வாய்ப்புகளையும் பரவலாக்கி, அனைவரையும் உள்ளடக்கிய சமுதாயத்தை உருவாக்குவது மிக அவசியமாகும் என்று நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கடந்த மாதம்

23 ஆம் தேதி தகவல் தொழில்நுட்பவியல் துறையின் சார்பில் நடைபெற்ற உச்சி மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரையாற்றுகின்றபோது, தொழில்நுட்பத்தில் சிறந்த வலிமையான மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடவும், புதுப்புது தொழில்நுட்பங்களுக்கான வாய்ப்புகளைக் கண்டறிவதிலும், அவற்றைத் தொடர்ந்து அளித்திடவும், அரசுத் துறைகள் ஓய்வின்றி உழைத்து வருகின்றன; அனைத்துத் தொழில் துறைகளின் பங்களிப்போடு. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், ஒரேயொரு நிமிடம். உங்களுடைய தொகுதிக் கோரிக்கைகளைச் சொல்லி, உரையை முடியுங்கள்.

திரு. கா. அண்ணாதுரை: 2030-க்குள் one trillion dollar economy என்ற இலக்கை எட்ட வேண்டுமென்று நாம் தீர்மானம் கொண்டிருக்கிறோம். மென்பொருள் சேவையைப் பொறுத்தவரையில், அத்துறையில் உலகளாவிய வகையில் நாம் முதன்மை அடைந்திருக்கிறோம் என்று பெருமிதத்தோடு குறிப்பிட்டார்கள். அந்த வகையில், நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதைப்போல, 7 மாவட்டங்களில், Neo-TIDEL Parks அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது என்றும், இதன் நீட்சியாக, ஈரோடு, திருநெல்வேலி, செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் தலா ஒரு இலட்சம் சதுரடி கட்டடப் பரப்பளவில் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைக்கப்படும் என்ற அறிவிப்புக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டம் முழுக்க, முழுக்க விவசாயத்தை நம்பியிருக்கக்கூடிய மாவட்டமாகும். அங்கு வேறெந்த தொழிற்சாலையும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவுக்கு இல்லை. எனவே, தஞ்சை நகரில் ஒரு தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

மீதமுள்ள எனது தொகுதிக் கோரிக்கைகளை நேரத்தின் அருமை கருதி, தங்களிடம் கொடுத்துவிடுகிறேன். அவற்றை பேரவையில் பதிவு செய்ததாகக் கருதி அவைக் குறிப்பில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

2023 ஏப்ரல் 1]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. இலட்சுமணன் அவர்கள்.*

டாக்டர் இரா. இலட்சுமணன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகள்மீது விவாதிக்கவும், எனது கருத்துகளை எடுத்துரைக்கவும் அளிக்கப்பட்டிருக்கும் வாய்ப்புக்கு முதற்கண் நன்றி கூறுகிறேன்.*

பல சரித்திர கதைகள் சொல்லும் இந்தச் சட்டமன்றம், இந்த ஆண்டு புதிய சரித்திரம் படைத்தது. ஆண்மைச் சிங்கத்தின் கூட்டம் என்றும், சிறியோர்க்கு ஞாபகம் செய் முழங்கு சங்கே! பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தால், சங்காரம் நிசமென முழங்கிய இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டமன்றத்தில் வீற்றிருக்கும் வீரத் தளபதியார் அவர்களுக்கு எனது சிரம் தாழ்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அன்புத் தலைவர், முத்தமிழறிஞர், கலைஞர் பெருமகனாரின் அர்ப்பணிப்பையும், துணிச்சலையும், சமூக நீதிக் கொள்கைகளில் பற்றுறுதியையும், தலைவர் தளபதியாரின் அயரா உழைப்பையும், முழுமையாகத் தன்னில் கொண்டிருக்கும் உதய சூரியனாம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் எங்கள் சின்னவர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் ஆகியோருக்கும் ஏனைய மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

An Uncertain Glory: India and its Contradictions *என்ற நூலிலிருந்து ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.* “Tamil Nadu is another interesting case of a State achieving rapid progress over a relatively short period, though it started from appalling levels of poverty, deprivation and inequality. . . Today, Tamil Nadu has some of the best public services among all Indian States and many of them are accessible to all on a non-discriminatory

basis. This was not just a reflection of kind-heartedness on the part of the ruling elite, but an outcome of democratic politics, including organized public pressure."

இது நோபல் பரிசு பெற்ற பொருளாதார அறிஞர் அமர்த்தியா சென் அவர்களும், அறிஞர் பெருந்தகை ஜான் டிரெஸ் (Jean Dreze) அவர்களும் அந்தப் புத்தகத்தில் அளித்திருக்கும் நற்சான்று.

மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் தளபதியார் அவர்கள் மீண்டும், மீண்டும், வலியுறுத்திக் கூறிவரும் திராவிட மாடலும் இதுதான். அந்தத் திராவிட மாடலின் விளைவுதான் தமிழ்நாடு அடைந்திருக்கும் வளர்ச்சிக்கு அடித்தளம். அந்த அடித்தளத்தின்மீது எழுப்பப்பட்டிருக்கும் சமத்துவக்கோட்டைதான் இந்த வரவு-செலவுத் திட்டம் என்று உளமாற வரவேற்கிறேன்; பாராட்டுகிறேன்.

தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை. இன்றைய உலகம் தகவல் தொழில்நுட்ப உலகம். இந்த நூற்றாண்டு தகவல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட நூற்றாண்டு. 1990-களின் தொடக்கத்தில், தமிழ்நாடுதான் தகவல் தொழில்நுட்பத் துறையில் மிகப் பெரிய நம்பிக்கை நட்சத்திரமாக இருந்தது. 1989 முதல் 1991 ஆம் ஆண்டில் கழக ஆட்சி கலைக்கப்படும் வரை நடைபெற்ற 22 மாத ஆட்சியில், முத்தமிழறிஞர் கலைஞர் தனக்கே உரித்தான தொலைநோக்குச் சிந்தனையுடன், தமிழ்நாட்டை தகவல் தொழில்நுட்பத் துறையில் முதன்மை பெறச் செய்திட மேற்கொண்ட முயற்சிகள் அடுத்தடுத்த ஆண்டுகளில் கைநழுவிப் போய்விட்டன. ஒவ்வொரு முறையும் தலைவர் கலைஞரின் ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் தமிழ்நாட்டிற்கான எந்த ஒரு தொலைநோக்குப் பார்வையுமற்ற ஆட்சியாளர்களால் பாழடிக்கப்பட்டன. நல்ல வேளையாக 2000 ஆம் ஆண்டில் கலைஞர் உருவாக்கிய டைடல் பார்க் தப்பியது.

தற்போது, 5-G தொழில்நுட்பத்தின் அறிமுகம். Artificial Intelligence என்ற செயற்கை நுண்ணறிவு, Big Data Analytics, Internet of Things, Cloud Computing போன்ற அதிநவீன தொழில்நுட்பங்களால், நம்முடைய தகவல் தொழில்நுட்பத் துறை மிகப் பிரம்மாண்டமான வளர்ச்சியைப் பெறப்போகிறது.

1990-களில் பெங்களூரும், ஹைதராபாத்தும் பெற்ற வளர்ச்சியை இந்த முறை நாம் தவறவிட வாய்ப்பே இல்லை.

காரணம், அடுத்த பல ஆண்டுகளுக்கு இடைவெளி இல்லாமல் தலைவர் தளபதியார் ஆட்சி தொடர இருப்பதால், (மேசையைத் தட்டும் ஒலி) continuity in Government Policy and follow-up in implementation இருக்கப்போகிறது.

குறிப்பாக, சென்னை, கோயம்புத்தூர் மற்றும் ஓசூரில், தமிழ்நாடு தொழில்நுட்ப நகரங்கள் TN Tech City அமைக்கப்படும் என்றும், இந்தத் துறையில் அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெற வேண்டும் என்பதற்காக தலைவர் கலைஞர் அவர்கள் நிறுவிய டைடல் பூங்காவின் நீட்சியாக, Neo-TIDEL Parks ஏழு மாவட்டங்களில் ஏற்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருப்பதை பெரிதும் வரவேற்கின்றேன்.

அதோடு, ஈரோடு, திருநெல்வேலி, செங்கல்பட்டில் தலா ஒரு இலட்சம் சதுரடி கட்டடப் பரப்பளவில் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைத்து 4,000 பேருக்கு புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்ற நிதிநிலை அறிக்கை அறிவிப்பு பாராட்டுக்குரியது. தமிழ்நாட்டு மக்களுக்கு இந்த வசதிகளை அளிக்க இந்த வரவு-செலவுத் திட்டம் உறுதியளித்திருப்பதைப் பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

பிற்பகல் 12-25

இவற்றோடு 'Simple Gov' என்ற புதிய முயற்சியிலும் நமது அரசு இறங்க இருப்பது, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் தளபதியார் அவர்கள் எந்த அளவுக்குத் தமிழ்நாட்டின் வளர்ச்சியில் அக்கறை கொண்டிருக்கிறார் என்பதை உணர்த்துகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, நெடுஞ்சாலைத் துறை. நெடுஞ்சாலைத் துறையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டுவரும் அரிய முயற்சிகளால் தமிழ்நாட்டின் சாலைகள் மீண்டும் புதுப்பொலிவு பெற்றுள்ளன. சென்னை மாநகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க எண்ணற்ற பாலங்களை உருவாக்கியவர் நம் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் தளபதியார் அவர்கள். சென்னையின் அழகுக்கு அழகு சேர்க்கும் ஜெமினி மேம்பாலம் என்ற அண்ணா மேம்பாலத்தை அமைத்தவரின் புதல்வரான நம் மாண்புமிகு முதலமைச்சரின் (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சியில், சென்னைக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில் ரூ.621 கோடி மதிப்பீட்டில் தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை

[டாக்டர் இரா. இலட்சுமணன்] [2023 ஏப்ரல் 1

வரை நான்கு வழி மேம்பாலம் அமைக்க இருப்பதாக பட்ஜெட் கூறுகிறது. மாண்புமிகு முதல்வரின் மனம் அறிந்து செயல்படும் மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின் நேரடி கண்காணிப்பில் புதிய பாலம் பொலிவுடன் அமைக்கப்பெற்று முத்தமிழறிஞர் கலைஞரின் (மணியடிக்கப்பெற்றது) நூற்றாண்டு விழா பாலமாக அமையும் என்று உறுதிபட நம்புகிறேன்.

அதேபோல் சென்னை கிழக்குக் கடற்கரை சாலையில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா (மேசையைத் தட்டும் ஒலி) நினைவு வளைவு அமைத்திட வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

முதலமைச்சரின் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.1,407 கோடி செலவில், 148 கி.மீ. சாலைகளை நான்கு வழிச் சாலைகளாக அகலப்படுத்தும் பணிகளும், 524 கி.மீ. சாலைகளை ரூ.803 கோடி மதிப்பில் இருவழிச் சாலைகளாக அகலப்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதைப் பார்க்கையில், தமிழ்நாடு வளர்ச்சிப் பாதையில் express வேகத்தில் செல்வது உறுதிப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை புறவட்டச் சாலைத் திட்டத்திற்காக 1,847 கோடி ரூபாயும், Chennai-Kanniyakumari Industrial Corridor Project-தொழில் வழித்தடத் திட்டத்திற்கு 1,500 கோடி ரூபாயும், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்-II-க்கு 645 கோடி ரூபாயும் இந்த நிதியாண்டின் (மணியடிக்கப்பெற்றது) வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது மட்டற்ற மகிழ்ச்சியளிக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் தொகுதிக் கோரிக்கைகளைக் கொடுங்கள், பதிவு செய்துகொள்ளப்படும்.

டாக்டர் இரா. இலட்சுமணன்: இத்தனை சிறப்புமிகு வரவு-செலவுத் திட்டத்தை, தமிழ்நாட்டு மக்களுக்கு அளித்திருக்கும், கழக அரசின் முயற்சிகள் வெற்றியடைய வாழ்த்துகிறேன். இந்த வரவு-செலவுத் திட்டத்தை முழுமையாக வரவேற்று, பாராட்டி மகிழ்கிறேன். எனது விழுப்புரம் சட்டமன்றத் தொகுதியின் கோரிக்கைகள் சிலவற்றை முன்வைக்கிறேன்.

கடந்த ஆட்சியில் விழுப்புரம் தொகுதியில் தளவானூர் கிராமத்தில் தென்பெண்ணையாற்றின் குறுக்கே ரூ.25 கோடி செலவில் கட்டப்பட்ட தடுப்பணை, ஒரே மாதத்தில் உடைந்து

சிதறியதால் சுமார் 62 டிஎம்சி தண்ணீர் வீணாகக் கடலில் கலந்தது. எனவே, வெகுவிரைவில் தளவானூர் அணைக்கட்டை கட்டி முடிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

விழுப்புரம் தொகுதி, வேலியம்பாக்கம், திருப்பாச்சனூர், பில்லூர், சேர்ந்தனூர், அரசமங்கலம் மற்றும் A.K. குச்சிப்பாளையம் கிராமங்களில் மலட்டாற்றில் வெள்ளத் தடுப்புக் கரைகளும், தடுப்புச் சுவரும் அமைத்துத்தர வேண்டுகிறேன்.

விழுப்புரம் தொகுதிக்குட்பட்ட நரியாற்றினைப் புனரமைத்துத் தரவும் வேண்டுகிறேன்.

விழுப்புரம் நகர எல்லைக்குட்பட்ட வி.மருதூர் ஏரியையும் புனரமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். விழுப்புரம் தொகுதி, கோலியனூர் வாய்க்காலின் எஞ்சியுள்ள பகுதியில் தூர்வாரும் பணிகளை மேற்கொள்ளவும், தடுப்பு சுவர் அமைத்திடவும் வேண்டுகிறேன்.

பில்லூர்–சேர்ந்தனூர் ஆகியவற்றுக்கிடையே மலட்டாற்றில் அமைந்துள்ள தரைப்பாலத்தை உயர்மட்டப் பாலமாக அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வி.புதூரிலிருந்து கரைமேடு வழியாக கெங்கராம்பாளையம் செல்லும் சுமார் 4.00 கி.மீ. சாலையை ஊரக வளர்ச்சித் துறையிடமிருந்து நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றி புனரமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வளவனூர்–பூவரசன்குப்பம் சாலையை முழுமையாக அகலப்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். தமிழ் எங்கள் உயிர் என்பதாலே, வெல்லும் தரமுண்டு தமிழர்க்கு இப்புவி மேலே! என்று கூறி, வாய்ப்பளித்த மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் தளபதியார் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி கூறி, அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியின் சார்பிலே நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, பொதுப் பணித் துறை, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையில் பேசுவதற்கு வாய்ப்புக் கிடைத்ததற்கு நன்றி சொல்கிறேன்.

[திரு. ஜே.ஜி. பிரின்ஸ்] *[2023 ஏப்ரல் 1*

குமரி மாவட்டத்தில் 2017–ல் துவக்கப்பட்ட 4 வழிச் சாலை, 2020–ல் முடிக்க ஒப்பந்தம் போடப்பட்டது, தற்போது கிடப்பில் போடப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். கன்னியாகுமரி மாவட்டம் என்பது மற்ற மாவட்டங்களைப்போல அல்ல. ஒவ்வொரு சென்ட் நிலத்திற்கும் அதிகமான விலை நிர்ணயம் உண்டு. குறுகிய மாவட்டம், மக்கள் அடர்த்தி அதிகமாக இருக்கக்கூடிய மாவட்டம். சாலைகள் சரியாக இல்லாததால் பல்வேறு விபத்துகள் ஏற்பட்டு மக்கள் கஷ்டப்படுகிறார்கள் என்பதை நான் பதிவு செய்கிறேன்.

பிற்பகல் 12–30

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகத் திறமையானவர், நீண்ட அனுபவம் உடையவர். நிலம் கையகப்படுத்துகிற சூழ்நிலையில் பல்வேறு வருவாய் கிராமங்களிலுள்ள மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கேரளாவில் ஒரு சென்ட் நிலத்திற்கு, நிலத்தின் விலையைவிட 3 மடங்கு அதிகமாக இழப்பீட்டுத் தொகை கொடுக்கிறார்கள். ஆகவே, வழங்கப்படும் நஷ்ட ஈடு சரியாக இருக்கிறது; துரிதமாகப் பணிகளும் நடைபெறுகின்றன. 2023 ஆம் ஆண்டுக்குப் பிறகும், நான்கு வழிச் சாலைப் பணிகளில் பாதியளவிற்குக்கூட பணிகள் முடியாத சூழலிருப்பது வேதனைக்குரிய விஷயம். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கென பிரத்யேகமாக மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து, தொய்வு நிலையிலுள்ள பணியை, நிறுத்தப்பட்ட பணியைத் தொடர்ந்து செயல்படுத்த முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல ஏழை மக்கள் தங்களுடைய 1 சென்ட், 2 சென்ட், வீடு உள்ளிட்டவற்றையெல்லாம் இழந்திருக்கிறார்கள். நஷ்ட ஈடு கிடைத்தாலாவது வாழலாம். கேரளாவில் உள்ளதைப்போல, நிலத்தை யார் கொடுக்கிறார்களோ, அவர்களுடைய வீட்டில் ஒருவருக்கு வேலை கொடுப்பதற்கு சம்மதம் கொடுக்கப்பட்டது. ஆனால், அது நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல, குறிப்பாக பல குளங்கள், பல நீர்வழித் தடங்கள், வாய்க்கால்கள் நிரப்பப்பட்டு, விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தற்போது நடைபெற்றுவரும் சாலைப் பணிகளுக்கு tender package *வழங்கப்படும் முறை இருந்து வருகிறது.*

அதை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், ஜனநாயக ரீதியில் மற்ற ஒப்பந்ததாரர்களுக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டால், பணிகளும் சிறப்பாக நடைபெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

குமரி மாவட்டத்தில் நடைபெறுகின்ற சாலைப் பணிகள் அனைத்தும் ஒரே ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டு வருகிறது என்பதை நான் காண்கிறேன். பணிகளும் சரியாக நடைபெறுவதில்லை என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். என்னுடைய தொகுதிக்குட்பட்ட, சுங்காங்கடை பகுதியில் இரண்டு ஓரங்களிலும் கரை அமைக்கப்படுகிறது. அந்தப் பணி 5 ஆண்டுகளாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால், அந்தப் பணி சரியாக நடைபெறவில்லை. துரு பிடித்த கம்பிகளால் கட்டப்பட்ட கரைச் சுவர்கள் எவ்வளவு காலம் உழைக்கும்? இதனை நான் புகாராகக் கொடுத்தும், நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

குறிப்பாக, கேரளாவை இணைக்கக்கூடிய களியக்காவிளை–கன்னியாகுமரி சாலையைத்தான் இரு மாநில மக்களும், சுற்றுலாப் பயணிகளும் பயன்படுத்துகின்றனர். சுற்றுலா மையமாக இருக்கும் கன்னியாகுமரியிலிருந்து களியக்காவிளைக்குச் செல்ல வேண்டுமென்றால் 2 மணி நேரமாகும். என்னுடைய வீட்டைத் தாண்டித்தான் போக வேண்டும். அந்தச் சாலை சரியாக இல்லை. சமீபத்தில் ரூ.16 கோடி ஒதுக்கப்பட்டு, அந்தச் சாலை செப்பனிடப்படும் என்று சொல்லப்பட்டது. ஆனால், அச்சாலையில் patch work மட்டும்தான் செய்யப்பட்டுள்ளது. வேறொன்றும் செய்யப்படவில்லை. I want you to clarify it. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் இதைக் குறையாகச் சொல்லவில்லை. இதனை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஏனென்றால், அந்தச் சாலை சரியாக இல்லை.

குமரி மாவட்டம், மழை அதிகமாகப் பெய்யக்கூடிய மாவட்டம். இன்னும் ஒரு சில மாதங்கள் கடந்துவிட்டால், மழைக் காலம் வந்துவிட்டால், அந்தச் சாலை complete ஆக பழுதாகிவிடும். திரும்பவும் சாலை அமைப்பதற்காக tender கோர முடியாது. அதனையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் வேண்டிக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், கன்னியாகுமரி மாவட்டத்திற்கென பிரத்யேகமாக கவனம் செலுத்த வேண்டும். மற்ற மாவட்டங்களில் tender tenure five years ஆக இருக்கிறது. எங்களுடைய மாவட்டத்திற்கு அதனைக் குறைத்து 3 ஆண்டுகளாக நிர்ணயிக்க வேண்டும். ஏனென்றால், தென்மேற்குப் பருவமழை, வடகிழக்குப் பருவமழை என எல்லா பருவக் காலங்களிலும் ஊட்டியைப்போல எங்களுடைய மாவட்டத்தில் மழை பெய்கிற காரணத்தினால் அந்தச் சாலைகள் சீக்கிரம் பழுதாகிவிடும்.

சாலைகளை இரவு நேரங்களில் போடுகிறபோது, அந்த work-ஐ supervise செய்வதற்கு Supervisors, Engineers இல்லை. அந்தச் சாலைகளை இரவில் போடக் கூடாது; பகல் நேரங்களில்தான் போட வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) சாலை அமைப்பதற்காக என்னென்ன பொருட்களைச் சேர்க்க வேண்டுமோ, அவற்றைத் தரமான பொருட்களாகச் சேர்த்து சாலைகள் அமைக்கப்பட வேண்டும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் விரும்பிக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், ஆரல்வாய்மொழி–நெடுமங்காடு, SH45 சாலை 7 மீட்டரிலிருந்து 10 மீட்டராக விரிவுபடுத்தப்பட வேண்டும். தமிழ்நாடு, கேரளாவை இணைக்கக்கூடிய கன்னியாகுமரி முதல் பழைய உச்சக்கடை SH 179 சாலை 7 மீட்டரிலிருந்து 10 மீட்டராக விரிவுபடுத்தப்பட வேண்டும். வடசேரி, திங்கள் நகர், புதுக்கடை சாலை 7 மீட்டரிலிருந்து 10 மீட்டராக விரிவுபடுத்தப்பட வேண்டும். என்னுடைய தொகுதிக்குட்பட்ட இரணியல் பகுதியிலிருந்து திங்கள் நகருக்குச் செல்கின்ற சாலை மிகக் குறுகலாக இருப்பதால், அதிகமான விபத்துகள் நடைபெறுகின்றன. நான் இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். அந்தச் சாலையையும் நிச்சயமாக 10 மீட்டர் சாலையாக விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரியில் தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம் உள்ளது. அதனை மாற்றப்போவதாக அறிந்தேன். அதனை தயவுசெய்து மாற்றிவிடாதீர்கள். அன்புக்குரிய மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால், மார்த்தாண்டம் பகுதியில் (குறுக்கீடு) அணுகு சாலை வேண்டுமென்று ஏற்கெனவே

2023 ஏப்ரல் 1] [திரு. ஜே.ஜி. பிரின்ஸ்]

இந்த அவையில் நான் பேசியிருக்கிறேன். அங்கு அணுகு சாலை இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நிச்சயமாக இல்லை. என்னுடைய வீட்டிலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் மார்த்தாண்டம் இருக்கிறது. மார்த்தாண்டம் பகுதியில் அணுகு சாலை இல்லை. ஆனால், அங்கு மோசமான நிலையில் மேம்பாலம் போடப்பட்டிருக்கிறது. மார்த்தாண்டம் பகுதி, ஒரு வியாபாரப் பகுதியாக இருக்கிறது. அந்தப் பகுதியில் development பணிகள் செய்ததன் காரணமாக, வியாபாரிகள் அனைவரும் மொத்தமாக அழிந்துபோய்விட்டார்கள். அந்தப் பகுதியை நேரில் வந்து பார்த்து, அணுகு சாலையைச் சரியாக அமைத்து, எல்லா வாகனங்களும் சிறப்பாகச் செல்வதற்கு வழிவகுக்க வேண்டுமென்று அன்புக்குரிய மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பாலம் அமைந்துள்ள பகுதியில்தான் இப்பிரச்சினை இருக்கிறது.

அதேபோல, தேசிய நெடுஞ்சாலை, மாநிலச் சாலைப் பணிகளை மேற்கொள்ளும்போது, இரண்டு புறங்களிலும் மண் போடப்படவில்லை. சாலைப் பணிக்காக tender கோரப்படுகிறது. இரு புறங்களிலும் மண் போடும் பணியையும் work order-ல் சேர்த்துக் கொடுத்தால், நன்றாக இருக்கும். அதற்கான மண் கிடைக்கவில்லையென்றால் பக்கத்திலுள்ள மாவட்டத்திலிருந்து வாங்கிக்கொள்ளட்டும். நிச்சயமாக இப்பணியைச் சிறப்பாகச் செய்வதற்கு அது வழிவகுக்கும்.

பிற்பகல் 12–35

என் வீட்டிற்கு அருகில் 4 கி.மீ. தொலைவில் அழகிய மண்டபம் பகுதியில் highways-ல், ஆபத்தான நிலையில் தாங்கு divider உள்ளது. அந்த divider அருகில்தான் bus stop உள்ளது. அங்கு வழியில்லை. அனைத்துப் பேருந்துகளும் அந்த bus stop-ல் நின்றுதான் செல்லும் நிலை உள்ளது. இதனால் 5 மணி நேரம் வாகனங்கள் நின்று போகக்கூடிய சூழ்நிலை உள்ளது. Traffic உள்ளிட்ட அதிக அளவிலான பிரச்சினைகள் வருகின்றன. அதனையும் மாற்ற வேண்டுமென்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள அரசுப் பள்ளிகளிலுள்ள ஓட்டுக் கட்டடம் மற்றும் asbestos sheets போட்ட கட்டடங்களையும் மாற்றி concrete கட்டடங்கள் அமைக்கப்பட வேண்டுமென்று

கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் பழுதடைந்த விடுதிகளை மாற்றி புதிய விடுதிக் கட்டடங்கள் அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகம் பழுதடைந்துள்ளது, அதை மாற்றி புதிய கட்டடம் அமைக்க வேண்டும். தமிழகம் முழுவதும் வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் நியாய விலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடங்கள் அமைக்க வேண்டும். சட்டமன்ற தொகுதி அலுவலகங்களில் CCTV cameras பொருத்த வேண்டும்.

சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் அனைத்து தளங்களிலும் கேமரா பொருத்த வேண்டும். சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் wifi வசதி செய்ய வேண்டும். சட்டமன்றத் தொகுதி அலுவலகத்தில் இ–சேவை மையம் அமைப்பது நல்ல செயல்; வரவேற்கிறேன். அதேவேளையில், இப்பணிகளைச் செய்வதற்கு மாதச் சம்பளம் கொடுத்து ஒருவரை நியமனம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறன். அதே நேரத்தில், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அதனை செய்யலாம் என்று சொல்லியிருப்பதற்காகப் பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது மட்டுமல்ல, முக்கியமாக போக்குவரத்துத் துறையில் பணியின்போது உயிர் நீத்த தொழிலாளர்களின் பட்டதாரி வாரிசுகளுக்குப் பணி நியமன ஆணை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இவை அனைத்தையும் மானியக் கோரிக்கை விவாதத்தின்போது உரையாற்றலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. தளபதி அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் இன்றைய மானியக் கோரிக்கையில் பேசவில்லை; இன்று போக்குவரத்து மானியம் இல்லை. அவர் அதுகுறித்து பேசுகிறார். (குறுக்கீடுகள்) சரி, பேசுங்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு முறை மட்டும்தான் பேச முடியும். கொஞ்சம் grace செய்யுங்கள். (குறுக்கீடுகள்) தயவு செய்து பேசுவதற்கு வாய்ப்பு கொடுங்கள். அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் சேர்த்துத்தான் கேட்கிறேன். 3 கோடி ரூபாய் நிதி அளிக்கிறீர்கள். Because of corona, ரூபாய் 3 கோடியில் ஒரு கோடி ரூபாய் தான் வழங்கப்பட்டது. நான் தற்போது கேட்கிறேன், இந்த நிதியில் அதனை எவ்வாறு மேற்கொள்ள இயலும்? (குறுக்கீடுகள்) ஓர்

2023 ஏப்ரல் 1] [திரு. ஜே.ஜி. பிரின்ஸ்]

அங்கன்வாடி மையம் அமைக்க வேண்டுமானால் 13 இலட்சம் ரூபாய் செலவாகிறது. எவ்வளவு அங்கன்வாடி மையக் கட்டடங்கள் கட்ட முடியும்? இந்த நல்ல அரசு, நன்றாக பணிகளைச் செய்கிறது; பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, நிச்சயமாக உரிமையாகக் கேட்பது, 3 கோடி ரூபாயாக இருப்பதை 6 கோடி ரூபாயாக உயர்த்திக் கொடுங்கள். யாருக்குச் செய்கிறோம்? மக்களுக்காகச் செய்கிறோம். பொதுமக்களுக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் வழியே செய்கிறோம் என்பதை நான் இங்கு பதிவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக அதைச் செய்ய வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) மேலும், முக்கியமாக,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நேரம் இல்லை,

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேளுங்கள், 1822 ஆம் ஆண்டில் எங்கள் மாவட்டத்தில் தோள்சீலைப் போராட்டம் நடந்தது. உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி என்று. ஆனால், மேல் சீலை, தோள்சீலை போட முடியாது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த நிகழ்வு நடைபெற்ற இடத்தில் ஆய்வு செய்ததைப் பெருமையாக நினைக்கிறேன். பாதிக்கப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், அதிக மக்கள் போராடிவிட்டுப் போய்விட்டார்கள். அவர்கள் தோள்சீலையைப் போடுவதற்கான அதிகாரத்தைப் பெற்றுத்தந்தார்கள். அந்த உண்மை மறைக்கப்பட்டிருக்கிறது. இங்கிலாந்தைச் சேர்ந்த Charles Mead என்ற ஒருவர் இப்படிப்பட்ட பரிதாப நிலையைக் கண்டு, நீதிமன்றத்திற்குச் சென்று பெரிய பிரச்சினை செய்து, அந்த அதிகாரத்தைப் பெற்றுத் தந்தார்கள். நமது பள்ளிக் கல்விப் பாட புத்தகத்தில் இந்த வரலாற்றைச் சேர்க்க வேண்டும். அதற்குப் போராடியவர்களுக்கு நினைவுச் சின்னம் அமைக்க வேண்டும் என்ற முக்கியமான கருத்தை முன்வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நேரமாகிவிட்டது. உரையை முடியுங்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: அதிக அளவில் உரையாட வேண்டிய matters உள்ளன. அவற்றையெல்லாம் பேசவில்லை. (குறுக்கீடுகள்) எங்கள் மாவட்டத்தில் கிறித்துவர்களுக்கும், இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் பிரச்சினை இல்லை. மதப் பிரச்சினை இல்லை. 1982 ஆம் ஆண்டில் Venugopal Commission மண்டைக்காடு

களத்தில் அமைக்கப்பட்டது; அந்த Venugopal Commission–ஐ நீக்க வேண்டும். அதனால் பட்டா பூமியில், ஒரு பழைய ஆலயத்தினை மாற்றி புதிய ஆலயத்தினைக் கட்டுவதற்கு முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த நிலையினை மாற்ற வேண்டும்.

தற்போது ஒரு முக்கிய பிரச்சினையை முன்வைக்கிறேன். கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், பூக்கடைப் பகுதியில் கடந்த 60 ஆண்டுகளாகப் புனித லூர்து மாதா ஆலயத்தில், 55–க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வழிபாடு செய்து வருகிறார்கள். அதற்கு மாறுதலாக, அருகில் ஒரு church புதிதாகக் கட்டுவதற்கு permission கிடைக்கவில்லை. நானும் களத்திற்கு நேரில் சென்று Collector–ஐ பார்த்தேன். அனைத்து அதிகாரிகளையும் பார்த்தேன். ஆனால், அனுமதி கிடைக்கவில்லை. நான் சொல்கிறேன், அந்த Venugopal Commission வேண்டாம். பட்டா பூமியில், சிறுபான்மை மக்களுக்கு இறைவனை வழிபடுவதற்கு அரசு உத்தரவு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) Unfortunately, CM இங்கு இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. தளபதி அவர்கள்.

பிற்பகல் 12–40

***திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வைக்கம் வீரர் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 10 நிமிடங்கள் ஆகிவிட்டன. அமைதியாக அமருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. தளபதி அவர்கள்.

திரு. கோ. தளபதி: முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் துயில்கொள்ளும் திசைநோக்கி வணங்குகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: இப்படிப்பட்ட நியாயமான என்னுடைய கோரிக்கையை legitimate rights–ஐ deny செய்யக் கூடாது. இந்த அவையில் தாக்கல் செய்து பணிவோடு வேண்டுகிறேன். இதைச்

2023 ஏப்ரல் 1] [திரு. ஜே.ஜி. பிரின்ஸ்]

செய்து தந்து மக்களை, சிறுபான்மை மக்களைப் பாதுகாக்கக்கூடிய இந்த அரசு அந்த அதிகாரத்தைத் தர வேண்டுமென்று கேட்டு வாய்ப்பிற்கு நன்றி சொல்லி, அமர்கிறேன். நன்றி.

தொகுதிக் கோரிக்கைகள்:

தோட்டியோடு-திங்கள்நகர்-புதுக்கடை சாலை, பள்ளியபடி-கோழிப்போர்விளை-மேட்டுக்கடை சாலை, இரவிபுதூர்கடை-கருங்கல் சாலை, முளகுமூடு முதல் திக்கணங்கோடு சாலை, இரணியல் பேரூராட்சி-ஆழ்வார்கோயில் முதல் இரணியல் காற்றாடிமூடு செல்லும் சாலை, இரணியல் பேரூராட்சி-ஆழ்வார்கோயில் வீரவிளை முதல் பள்ளிவிளை செல்லும் சாலை, கப்பியறை பேரூராட்சி-புலிமுகத்தான்குறிச்சி முதல் ஆலத்துறை செல்லும் சாலை, கப்பியறை பேரூராட்சி-செல்லங்கோணம் முதல் கருக்குபனை செல்லும் சாலை, நெய்யூர் பேரூராட்சி-குழிவினை கோமான்விளை கொல்வாய் செல்லும் சாலை, நெய்யூர் பேரூராட்சி-சேனம்விளை CSI தேவாலயத்தின் முன் இருந்து பிலாந்தோட்டம் செல்லும் சாலை, மண்டைக்காடு பேரூராட்சி-படர்நிலம் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கம் பகுதியிலிருந்து சேரமங்கலம் அரசு உயர்நிலைப் பள்ளியின் பின் பகுதியாக மாதவிளை குன்னங்காடு செல்லும் சாலை, திங்கள்நகர் பேரூராட்சி-புதுவிளையில் இருந்து மாங்குழி செல்லும் சாலை, திங்கள்நகர் பேரூராட்சி-பதவிளையில் இருந்து இரணியல் அரசு மேல்நிலைப் பள்ளி பின்புறம் செல்லும் சாலை, திங்கள் நகர் பேரூராட்சி-நடுத்தேரி பாலத்தில் இருந்து செட்டியார்மடம் செல்லும் சாலை, நாகர்கோவில் மாநகராட்சி 3-வது வார்டு, SS நகர் விரிவாக்கம் முழுவதும் உள்ள சாலை, நாகர்கோவில் மாநகராட்சி 2-வது வார்டு-சுங்கான்கடை முதல் பிராந்தநேரி செல்லும் சாலை, ஆத்திவிளை ஊராட்சி-தச்சன்பரம்பு பாலம் முதல் வட்டம் வரை செல்லும் சானல் கரை சாலை, ஆத்திவிளை ஊராட்சி-ஆலங்கோடு இரயில்வே crossing முதல் கண்ணோடு வழியாக இரணியல் செல்லும் சாலை, மருதூர்குறிச்சி ஊராட்சி-குழிக்கோடு LMS Church முதல் வெள்ளிக்கோடு சந்திப்பு வரை செல்லும் சாலை, துள்ளிவிளை ஊராட்சி-பேயன்குழி பிள்ளையார்கோயில் முன் இருந்து பூலன்கோடு வடக்கு பேயன்குழி செல்லும் சாலை, கக்கோட்டுத்தலை ஊராட்சி-குருந்தன்கோடு அம்மன்கோயில் முதல் ஞாறோடு செல்லும் சாலை மற்றும் வெள்ளிச்சந்தை ஊராட்சி-வாணியக்குடி முதல் மேற்கு சூரப்பள்ளம் செல்லும் சாலைகளைச் சீர் செய்ய வேண்டும்.

தோப்புவிளையில் இருந்து பெரும்செல்வவிளை வழியாக ஆசாரிப்பள்ளம் செல்லும் இணைப்புச் சாலை ஆக்கிரமிப்பை அகற்றி சாலையை விரிவுப்படுத்த வேண்டும். கப்பியறை–மருதூர்குறிச்சியை இணைக்கும் பழுதடைந்த பாலத்தை அகற்றி, புதிய பாலம் அமைக்க வேண்டும். பள்ளம்பாலம் வள்ளியாற்றில் தடுப்பணை அமைத்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த வேண்டும். சுங்கான்கடையில் நவீன புறநகர் பேருந்து நிலையம் அமைக்க வேண்டும். வில்லுக்குறி பேரூராட்சியில் உள்ள மாம்பழத்துறையாறு அணையை விரிவுபடுத்தி கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த வேண்டும். குளச்சலில் மின் மயானம் அமைக்க வேண்டும்.

மீனவர்களைப் பாதுகாக்க குளச்சல் தொகுதி, முட்டம் மீனவக் கிராமத்தில் ஹெலிகாப்டர் வசதி மற்றும் தளம் அமைக்க வேண்டும். மண்டைக்காடு புதூர் கடற்கரைப் பகுதியில் பழுதடைந்த தூண்டில் வளைவை விரிவுபடுத்தி, சிறிய துறைமுகமாக்க வேண்டும். குளச்சல் பகுதியில் மீன் பதனிடும் தொழிற்சாலை அமைக்க வேண்டும். குளச்சல் பாம்பூரி வாய்க்காலைத் தூர்வாரி ஆக்கிரமிப்புகளை அகற்றி இருபுறமும் தடுப்புச்சுவர் மற்றும் இடிந்த நிலையில் உள்ள தடுப்பணையை அகற்றி புதிதாகத் தடுப்பணை அமைக்க வேண்டும். குளச்சல் அரசு மருத்துவமனையைத் தரம் உயர்த்த வேண்டும். திங்கள்நகர் அரசு சித்தா மருத்துவமனையை நவீனப்படுத்த வேண்டும்.

திங்கள்நகரில் புதிதாக அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டும். முட்டம் கடற்கரையைச் சுற்றுலாத் தலமாகத் தரம் உயர்த்த வேண்டும். குளச்சல் டச்சுபோர் வெற்றி நினைவுத் தூண் பகுதியைச் சுற்றுலா மையமாக்க வேண்டும். வில்லுக்குறி பேரூராட்சி, மேலப்பள்ளத்தில் உள்ள தூவலாற்றின் குறுக்கே பாலம் அமைக்க வேண்டும். வெள்ளிமலை பேரூராட்சியையும் மணவாளக்குறிச்சி பேரூராட்சியையும் இணைக்கும் பாலாற்றின் குறுக்கே பாலம் அமைக்க வேண்டும். தொகுதிக்கு ஒரு விளையாட்டு அரங்கம் அறிவிக்கப்பட்டதை குளச்சல் லியோநகர் பகுதியில் அமைக்க வேண்டும். கட்டிமாங்கோடு பகுதியிலிருந்து புதிய பேருந்து இயக்க வேண்டும். குளச்சலை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அமைக்க வேண்டும். குளச்சல் AVM சானலை சீர் செய்ய வேண்டும்.

2023 ஏப்ரல் 1]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. தளபதி அவர்கள்.

திரு. கோ. தளபதி: ஓய்வறியா சூரியனாக, உழைப்பிற்குச் செயல்வடிவமாக விளங்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன். உதய சூரியனைப் புதிய சூரியனாக காக்க வந்த அன்பு சகோதரர் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கு வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள், மதுரை மாநகர வாக்காளப் பெருமக்கள், கழக உடன்பிறப்புகள் அனைவருக்கும் எனது நன்றி கலந்த வணக்கம்.

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கும், பொருளாதார வளர்ச்சிக்கும், தொழில் துறை, வணிகம் போன்றவற்றிற்கும் சாலைகளைப் பொறுத்துத்தான் அதன் பயன்பாடுகள் அமையும் என்பதால், நமது தமிழ்நாட்டிலுள்ள சாலைகளின் கட்டமைப்பு தரம் வாய்ந்ததாக உள்ளது என்று பெருமையோடு சொல்லிக்கொள்ளலாம். கடந்த காலங்களில் பெரும்பாலும், 12 அடி கொண்ட ஒருவழிச் சாலையாகவும், பெரிய நகரங்களுக்குச் செல்லக்கூடிய சாலைகள் மட்டும்தான் 7 மீட்டர் கொண்ட இருவழிச் சாலைகளாகவும் இருந்தன. மேலும், பாலங்கள் அகலமின்றி, குறுகிய பாலங்களாகவும், தாம்போக்கி என்ற தரைமட்ட பாலங்களாகவும் இருந்தன. அதனால், பல விபத்துகளும், போக்குவரத்து நெரிசலும், காலவிரயமும் ஏற்பட்டு வந்த நிலையில், இன்று நமது கழக ஆட்சியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி எங்கு பார்த்தாலும் ஒருவழிச் சாலைகள் இருவழிச் சாலைகளாகவும், பெரிய நகரங்களுக்குச் செல்லக்கூடிய முக்கியச் சாலைகள் நான்குவழிச் சாலைகளாகவும், அதுவும் மிகவும் நவீன தொழில்நுட்பத்தில் சாலைகளின் தரமும், அதிக வளைவுகள் இல்லாத வகையில் நேர்த்தியாகவும் இருக்கின்றன என்பதோடு, பாலங்கள் அதிக எண்ணிக்கையில் பெரிய பாலங்களாகவும், உயர்மட்ட மேம்பாலங்களாகவும், இரயில்வே மேம்பாலங்களாகவும் இருக்கின்றன என்பதோடு, பல நகரங்களில் புறவழிச் சாலைகள் புதியதாகவும், வருங்காலத்தில் இன்னும் அதிக எண்ணிக்கையோடு புறவழிச் சாலைகள் வரும் என்ற செய்திகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். புறவழிச் சாலைகள்

காலதாமத பயணத்தைக் குறைக்கும் வகையில், சீரமைக்கப்பட்டு வருகின்றன. நெடுஞ்சாலைகள் நெஞ்சைக் கவரும் வகையில் மேம்பாடு அடைகின்றன எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாநிலத்தின் உயிர்நாடியான சாலைக் கட்டமைப்பை மேம்படுத்த, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசின் இத்தகைய செயல்களின் காரணமாக—அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்து—பொதுமக்கள் மனதில் இத்துறையின்மீது, அதிக நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள் என்று தெரிவிப்பதோடு, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும், ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு, சட்டமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகளிடம் கருத்துகளைக் கேட்டறிந்து, திட்டங்களை நிறைவேற்றி வருகிறார் என்பதோடு, அவர் பல மாவட்டங்களுக்குச் செல்லும்போது, கள ஆய்வின்போது, சாலைகளின் தரத்தினைப் பரிசோதிப்பதாலும், பொறியாளர்களுக்கு அறிவுரை வழங்குவதாலும், நெடுஞ்சாலைத் துறை செம்மையான முறையில் நடைபெற்று வருகிறது எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தமட்டில், பொறியாளர்கள் களப்பணி மேற்கொள்ள பல நூறு கிலோ மீட்டர் தினமும் பயணம் செய்ய வேண்டியிருக்கிறது. இவர்களது வாகனங்கள் பழைய வாகனங்களாக உள்ளபடியால், கோட்டப் பொறியாளர், உதவிக் கோட்டப் பொறியாளர்களுக்கு புதியதாக வாகனங்கள் வாங்கித் தரும்படியும், தலைமைப் பொறியாளர், கண்காணிப்புப் பொறியாளர்களுக்கு Innova car வழங்கி உதவும்படியும் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, பொதுப் பணித் துறையால் இப்போது மிக அருமையாக உருவாக்கப்படும் 7 மாடி, 8 மாடி கொண்ட அடுக்குமாடிக் கட்டடங்கள், மருத்துவமனைகள், அரசு அலுவலகங்கள் மிக நேர்த்தியாக கண்ணைக் கவரக்கூடிய பல வண்ணங்களில் நவீன தொழில்நுட்பத்தின் அடிப்படையில் தரத்துடன் கட்டப்படுகின்றன. நிர்வாகத்திலும், அரசுத் துறை கட்டமைப்பிலும், பொதுப் பணித் துறை சாதனை செய்து வருகிறது. அப்படிப்பட்ட கட்டடங்களை ஆண்டுதோறும் பராமரிக்க வேண்டும். இல்லையென்றால், 60, 70 ஆண்டுகளுக்கு மேலாக, பயன்பட வேண்டிய கட்டடங்கள், பழுதடைந்து, தண்ணீர்

2023 ஏப்ரல் 1] [திரு. கோ. தளபதி]

கசிவுகள் ஏற்பட்டு, பயன்பாட்டிற்கு உகந்ததாக இல்லாமல் போய்விடுவதால் அதற்கான பராமரிப்பிற்கு அதிக நிதியினை நிதித் துறை ஒதுக்கீடு செய்வதன்மூலம் கட்டடங்கள் பாதுகாக்கப்படுவது அவசியம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கீழடி நாகரிகம், தமிழினத்தின் பண்பாடு, கலாச்சாரப் பெருமை அதன் அருங்காட்சியகத்தை உருவாக்கியது; அதைப்போல, மதுரைக்கு கிடைத்திருக்கும் பெரும் புகழாக, கலைஞர் நூற்றாண்டு நூலகம் இன்றைக்கு அறிவாலயமாக 114 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எட்டு தளங்களில் அது அறிவியல் அதிசயமாக விளங்குகிறது.

கடந்த ஆண்டு மானியக் கோரிக்கையில் பேசியபோது மாவட்ட நீதிமன்றங்களுக்குப் புதிய கட்டடம் வேண்டுமென்று கேட்டேன். அதற்கு இன்றைக்கு 166 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்து நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மதுரைக்கே வந்திருந்து நேரடியாக இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்ததற்காக எங்களுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பிற்பகல் 12–45

அதேபோல, சுங்கச் சாவடி என்பது இன்றைக்கு ஒரு மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. அதுவும், எங்களுடைய மதுரை மாவட்டம், திருமங்கலத்திற்கு அருகில், 1 கிலோ மீட்டர் அளவிலே கப்பலூர் என்ற இடத்தில் சுங்கச் சாவடி இருக்கிறது. அடிக்கடி அங்கே போராட்டங்கள் நடைபெறுகின்றன. நமது மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள், ஒன்றிய அரசை வலியுறுத்தி அதை இடமாற்றம் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை மாநகரத்திற்கென மக்கள் மனம் மகிழும் வகையில், பொழுதுபோக்குவதற்கு ஒரு சுற்றுலாத்தலம் வேண்டும் என, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் பலமுறை நாங்கள் கோரிக்கை வைத்திருந்தோம். எங்களது வேண்டுகோளின்படி, மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்கள் 100 கோடி ரூபாயிலே வண்டியூர் கண்மாய் அழகுபடுத்தப்படும் என்று அறிவித்திருந்தார்கள். ஆனால், இன்றைக்கு அதற்கு 50 கோடி ரூபாய் தான் நிதியொதுக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) ஆகவே, அத்திட்டத்திற்கு மேலும், 50 கோடி ரூபாய் ஒதுக்கி, உதவும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய வேண்டுகோள். அறுபடை வீடுகளில் ஒன்றான திருப்பரங்குன்றம் கிராமம், பழமையான கிராமம் ஆகும். சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு UDR–ல் 196 14a சர்வே எண் கிராமநத்தம் என்றும், 38 ஏக்கரில் பல வகுப்பினர் மேலத் தெரு, கோட்டத் தெரு, வடக்குத் தெரு, கிழக்குத் தெரு என பாரம்பரியமாக வீடுகள் கட்டி குடியிருந்து வருகிறார்கள். 2018–ல் திருக்கோயில் உதவி ஆணையருக்கும், அர்ச்சகர்களுக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் பத்திரப் பதிவுக்கு ஒரு தடையாணை பெறப்பட்டுள்ளது. அதை மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், உரிய விசாரணை செய்து, அந்த மக்களுடைய வாழ்வாதாரத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் அவர்கள் கோரிய அந்த கோரிக்கையானது இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடங்களில் பட்டா வழங்கப்படுவது குறித்ததாகும். ஏற்கெனவே நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் 2 நீதிபதிகள் அடங்கிய அமர்வால் இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடங்களுக்குப் பட்டா வழங்கக் கூடாது என்ற ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அந்தவகையில் மேல்முறையீடு செய்ய, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலில், இந்து சமய அறநிலையத் துறை முயற்சித்துக் கொண்டிருக்கிறது. இந்து சமய அறநிலையத் துறையில் இருக்கின்ற இடங்களில், இந்து சமய அறநிலையத் துறைக்குத் தெரியாமலேயே பத்திரப்பதிவுகள் நடைபெறுவதைக் கண்டறிந்து, எந்த இடங்களுக்கெல்லாம் போதிய ஆவணங்கள் இருக்கின்றனவோ, அந்த ஆவணங்கள் எல்லாம் சம்பந்தப்பட்ட Registrar Office–க்கு, பத்திரப் பதிவுத் துறைக்கு அனுப்பப்பட்டு, இந்த இடங்களுக்கு நீங்கள் எங்களுக்கு தகவல் கொடுக்காமல் பத்திரப்பதிவு செய்யக்கூடாது என்று அனைத்து திருக்கோயில்களுக்குச் சொந்தமான இடங்களினுடைய ஆவணங்களை பத்திரப் பதிவுத் துறைக்கு அனுப்பியதால், அவர் கோரிய அந்த இடத்தில், தற்போது, அங்கே ஆக்கிரமிப்பில்

இருப்பவர்கள் பத்திரப் பதிவு கோரி, செல்கின்றபோது, அவர்கள் தர மறுக்கிறார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் நினைவில் வாழும் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் 2010 ஆம் ஆண்டு ஓர் அரசாணை பிறப்பிக்கப்பட்டது. அந்த அரசாணையில் இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடங்களில் குழுவாகக் குடியேறியவர்களை வரன்முறைப்படுத்தி, அவர்களை உள் வாடகைதாரர்களாக ஆக்கிக்கொண்டால், அவர்களுக்கு வாடகை கட்டுகின்ற, அங்கே குடியிருக்கின்ற ஓர் உத்தரவை வழங்கலாம் என்று இருக்கின்றது. அதன்படி குழுவாகக் குடியேறியிருக்கின்ற, வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கின்றவர்களாக இருந்தால், அவர்களை இந்து சமய அறநிலையத் துறை உள் வாடகைதாரர்களாக ஏற்றுக்கொண்டு, அவர்களுடைய வாடகையை வரன்முறைப்படுத்தி, திருக்கோயில் வாடகைதாரர்களாக ஏற்றுக்கொள்ளலாம் என்ற ஒரு வழிவகை இருக்கிறதே தவிர, அவற்றை நிச்சயமாக இந்து சமய அறநிலையத் துறை பதிவு செய்யக் கூடாது என்ற கருத்துரு உள்ளது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் கோரியது, நிச்சயமாக முடியவே முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. தளபதி அவர்கள்.

திரு. கோ. தளபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்வது, நீங்கள் விசாரணை செய்யுங்கள். சுமார் 5,000 குடும்பங்கள், ஏறத்தாழ 200 ஆண்டுகளாக அங்கு குடியிருந்து வருகிறார்கள். அதுகுறித்து பார்த்துக்கொள்ளுங்கள்.

அடுத்து, வைகைக் கரையில் இருபுறமும் சாலைகள் போடப்பட்டிருக்கின்றன. சில இடங்களில் அது விடுபட்டுள்ளது. அந்த விடுபட்ட இடங்களில் சாலைகள் போடப்பட வேண்டும். திருச்சி சாலையிலிருந்து சக்குடி வரையிலும், இந்தப் பக்கம் திண்டுக்கல் நான்கு வழிச்சாலையிலும் இணைத்தால் போக்குவரத்துக்கு மிக அருமையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–50

அதேபோல AIIMS மருத்துவமனையைக் கட்டப் போகிறார்கள். கட்டப்படயிருக்கின்ற இடத்திலிருந்து விமான நிலையத்திற்கு ஒரு சாலை வேண்டும். ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் சொல்லியிருக்கிறேன். அந்தச் சாலையை அமைத்தால், தென் பகுதியிலிருந்து வரக்கூடியவர்கள் எல்லாம் short ஆக வந்துவிடுவார்கள்.

மதுரையில் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்காக 500 கோடி ரூபாய் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார். இருந்தாலும், அதனை இன்னும் சரி செய்ய வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரையில் தொழில்நுட்பப் பூங்காவிற்காக 600 கோடி ரூபாயை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதனை நான் வரவேற்று உடனடியாக அந்தப் பணியை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். Metro Rail திட்டத்திற்காக 8,500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். அதனையும் வருக, வருக என வரவேற்கிறேன்.

எனது தொகுதியில் பி.பி. குளம், முல்லை நகர் என்ற ஒரு area இருக்கிறது. அங்கு 50, 60 வருடகாலமாக மக்கள் வசித்து வருகிறார்கள். அந்த இடத்தினை நத்தம் நிலமாக அறிவித்து, அவர்களுக்குப் பட்டா வழங்க வேண்டும். அதற்கு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், மீதி கோரிக்கைகளைக் கொடுத்துவிடுங்கள். நீங்கள் படித்ததாக நான் அவற்றைப் பதிவு செய்துகொள்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் உரையாற்ற ஆரம்பித்து பத்து நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. கோ. தளபதி: ஒரு நிமிடத்தில் எனது உரையை முடித்துவிடுகிறேன். விமான நிலையத்தில் runway 7,500 அடி இருக்கிறது. அதனை 12,500 அடியாக மாற்ற வேண்டும். நெடுஞ்சாலைத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பில் எட்டு கிலோ மீட்டர் நீளத்திற்கு மாற்றுப் பாதைக்குத் தேவையான நிலங்களை கையகப்படுத்துவதற்கு ரூ.40.50 கோடி அனுமதித்து அறிவித்திருக்கிறார். ஆனால், underpass போட்டால் அந்தப் பிரச்சினையே தீர்ந்துவிடும். Underpass என்பது வாரனாசி, மைசூர்

போன்ற இடங்களில் இருக்கின்றது. Underpass போட்டால்தான் விரைவாக மக்கள் செல்வதற்கு வசதியாக இருக்குமென்று சொல்லி, இந்த வாய்ப்பிற்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார் அவர்கள்.

திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழினப் போராளி பா.ம.க. நிறுவனர் மருத்துவர் அய்யா அவர்களுக்கும், இளைஞர்களின் வழிகாட்டி, எங்கள் தலைவர் அண்ணன் அன்புமணி ராமதாஸ் அவர்களுக்கும், பா.ம.க. சட்டமன்றக் கட்சித் தலைவரும், தியாகச் செம்மலான திரு. ஜி.கே. மணி அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அண்ணன் திரு. எ.வ. வேலு அவர்களுக்கும், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் திரு. மனோ தங்கராஜ் அவர்களுக்கும், விழுப்புரம் மாவட்டத்தின் மாண்புமிகு அமைச்சர்கள், உயர் கல்வித் துறை அமைச்சர் அண்ணன் முனைவர் பொன்முடி அவர்களுக்கும், மாண்புமிகு சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அண்ணன் திரு. K.S. மஸ்தான் அவர்களுக்கும், அவையில் உள்ள மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் மற்றும் சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என் குல தெய்வம், என் தாய், தந்தையை வணங்கி, என்னை என்றும் அன்போடு அரவணைக்கும் விழுப்புரம் மாவட்ட மக்களுக்கும் என்னை இந்த மாமன்றத்திற்கு அனுப்பி வைத்த, மயிலம் சட்டமன்றத் தொகுதியின் கோரிக்கைகளை இந்த அவையில் பேச வாய்ப்பளித்த வாக்காளர்களின் பொற்பாதம் தொட்டு என் உரையைத் தொடங்குகின்றேன்.

2023–2024 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளில் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, பொதுப் பணித் துறை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறைகளின் மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் என் கருத்துகளை முன் வைக்கிறேன்.

[திரு. ச. சிவகுமார்] [2023 ஏப்ரல் 1

நெடுஞ்சாலைகள் மற்றும் பொதுப் பணித் துறை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை முக்கியத்துவம் வாய்ந்தவை. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், மக்களின் அடிப்படை தேவைகளுக்கும், அடித்தளமாக இருப்பது நெடுஞ்சாலைத் துறையும் மற்றும் பொதுப் பணித் துறையும் ஆகும்.

கடந்த ஆண்டைவிட, 2023–2024 ஆம் நிதியாண்டில் நெடுஞ்சாலைத் துறையின் சாலை மேம்பாட்டிற்காக 1,246 கோடி ரூபாய் கூடுதலாக நிதி ஒதுக்கியிருப்பதை வரவேற்கிறேன். முதலைமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டம் மற்றும் கிராமப்புற சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் சாலைப் பணிகள் மேற்கொள்வதை வரவேற்கிறேன்.

விழுப்புரம் மாவட்டத்தில், வானூர் பகுதியில் தொழில்நுட்பப் பூங்கா அமைத்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய மயிலம் சட்டமன்றத் தொகுதியில் ஒரு தொழில்நுட்பப் பூங்காவை அமைத்துக் கொடுத்திட வேண்டுமெனக் கோருகிறேன்.

கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் எனது கோரிக்கைகளை ஏற்று, எனது தொகுதியில் நிறைவேற்றப்பட்ட பணிகள். கூட்டேரிப்பட்டு மேம்பாலப் பணிகள். வெள்ளிமேடுபேட்டை முதல் மயிலம் வரையில் இருவழிச் சாலைகளை நான்கு வழிச் சாலைகளாக அகலப்படுத்திய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், தீவனூர், கோபாலபுரம், கூட்டேரிப்பட்டு வரை உள்ள இருவழிச் சாலை நான்கு வழிச் சாலையாக மாற்றி அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் உளுந்தூர்பேட்டை முதல் சேலம் வரையிலான தேசிய நெடுஞ்சாலையில் சில இடங்களில் இருவழிச் சாலையாகவும், சில இடங்களில் நான்கு வழிச் சாலையாகவும் உள்ளது. இருவழிச் சாலைகளின் குறுக்கே தற்காலிகத் தடுப்பு அமைக்கப்பட்டுள்ளதால் அடிக்கடி விபத்து ஏற்படுவதைத் தடுக்க நான்கு வழிச்சாலையாக மாற்றுவது குறித்து நான் பேசியிருந்தேன். தற்போது அதற்கான பணி நடைபெறுவதை வரவேற்கிறேன்.

எனது மயிலம் தொகுதியில் உள்ள முக்கியக் கோரிக்கைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டு வருகிறேன்.

2023 ஏப்ரல் 1] [திரு. ச. சிவகுமார்]

மயிலம் தொகுதியில், மயிலத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய தாலுகா அமைப்பதற்கு அனைத்து தகுதிகளும் உள்ளன. அதற்குரிய கருத்துரு மற்றும் தாலுகா எல்லைகள் அனைத்தும் வரையறை செய்யப்பட்டுள்ளன. மயிலம் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் அவர்கள் கனிவோடு பரிசீலித்து மயிலத்தை புதிய தாலுகாவாக உருவாக்கித் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தேசிய நெடுஞ்சாலை அருகாமையில் அமைந்துள்ள மயிலம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையமானது 30 படுக்கைகளுடன் செயல்பட்டு வருகிறது. தேசிய நெடுஞ்சாலை அருகில் இருக்கின்ற காரணத்தினால் தாலுகா மருத்துவமனையாகத் தரமுயர்த்தித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–55

எனது மயிலம் தொகுதி, நகராட்சியோ, பேரூராட்சியோ இல்லாமல் முழுமையாக ஊராட்சிகளை மட்டுமே கொண்டிருக்கின்ற காரணத்தினால், மயிலம் மற்றும் ரெட்டணை ஊராட்சிகளைப் பேரூராட்சிகளாகத் தரம் உயர்த்தித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மயிலம் தொகுதியில் எந்தவொரு உயர் கல்வியும் பயிலுவதற்கான வசதிகள் ஏதும் இல்லாத சூழ்நிலை உள்ளது. எனவே, மயிலம் தொகுதியில் ஒரு தொழில்நுட்பக் கல்லூரியோ அல்லது எங்கள் தொகுதி நீர்வளம், நிலவளம் கொண்ட தொகுதியாக உள்ளதால் ஒரு வேளாண்மைக் கல்லூரியோ அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மயிலம் தொகுதியில் ஏதேனும் தீ விபத்து ஏற்பட்டால், தீயணைப்பு வாகனம் அவ்விடத்தைச் சென்றடைய நீண்ட காலதாமதம் ஏற்படுவதால், எங்கள் தொகுதியின் மையப் பகுதியான ரெட்டணை பகுதியில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். வல்லம் ஒன்றியத்தின் கடைசி எல்லைக்குட்பட்ட ஊராட்சிகளிலிருந்து காவல் நிலையத்திற்கு சுமார் 30 கி.மீ. வரை செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. ஆகவே, வல்லம் ஒன்றியத்தின் மையப் பகுதியான வல்லம் ஊராட்சியில் ஒரு

புதிய காவல் நிலையம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். மயிலம் சட்டமன்றத் தொகுதியிலுள்ள விவசாய நிலங்களில் ஏராளமாக சவுக்கு மரங்கள் பயிரிடப்படுவதால், மயிலம் பகுதியில் காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றினை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மயிலம் ஒன்றியத்திலுள்ள நெடிமொழியனூர் ஊராட்சியிலுள்ள நெடி சிற்றூரைத் தனியாகப் பிரித்து, நெடி ஊராட்சியாக அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மயிலம் ஒன்றியத்திற்குட்பட்ட தென்ஆலப்பாக்கம் ஊராட்சியைப் பிரித்து கொரலூரை தனி ஊராட்சியாக அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வல்லம் ஒன்றியத்தில் மேல்சேவூர் ஊராட்சியில் உள்ள கட்டாஞ்சிமேடு சிற்றூரைத் தனி ஊராட்சியாகப் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை முதல் சேலம் வரை 8 வழிச் சாலைத் திட்டத்தில் கடந்த 15–3–2023 அன்று நாடாளுமன்றத்தில் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவரும், மாநிலங்களவை உறுப்பினருமான அண்ணன் திரு. அன்புமணி ராமதாஸ் அவர்கள் மாண்புமிகு மத்திய தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி அவர்களிடம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உரையாற்றியது போதுமே!

திரு. ச. சிவகுமார்: 'மாநில அரசு சுற்றுச்சூழலியல் தாக்க மதிப்பீடு பெற்றுள்ளதா' எனக் கேட்டதற்கு, 'அதுகுறித்து மாநில அரசு எதுவும் பெறவில்லை' என்றும், மேலும், '8 வழிச் சாலைத் திட்டத்திற்கு தமிழக அரசு ஏதேனும் மறுப்பு தெரிவித்துள்ளதா' எனக் கேட்டதற்கு 'தமிழக அரசு எந்தவித மறுப்பும் தெரிவிக்கவில்லை' என்றும் தெரிவித்துள்ளார். ஆகவே, இந்தச் சாலைத் திட்டம் குறித்து தமிழக அரசின் நிலைப்பாட்டை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

விக்கிரவாண்டி முதல் தஞ்சாவூர் வரையிலான 4 வழிச் சாலைப் பணிகள் நீண்ட நாட்களாக நடைபெற்று வருகின்றன. அந்தச் சாலைப் பணிகளை விரைந்து முடித்து, மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 1] [திரு.ச. சிவகுமார்]

திண்டிவனம்–கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கப் பணிகள் கடந்த ஒன்பது ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்று வருகின்றன. ஆனால், எப்பொழுது பணிகள் நிறைவுபெறும் என்ற கேள்விகளுக்கு எந்த அதிகாரியிடமும் அதிகாரபூர்வமான தகவல் இல்லாத சூழ்நிலை நிலவுகிறது. இச்சாலைப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 22–3–2022 அன்று நடைபெற்ற நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்கள் தமிழகத்தில் 60 கிலோ மீட்டருக்குள் இரண்டு சுங்கச் சாவடிகள் இருந்தால் ஒரு சுங்கச் சாவடி மூன்று மாதத்திற்குள் மூடப்படும் என்று அறிவித்தார்கள். ஆனால், ஓராண்டாகியும் இன்று வரை அந்த சுங்கச் சாவடிகள் மூடப்படவில்லை. 60 கிலோ மீட்டருக்கு ஒரு சுங்கச் சாவடி என்றால் தமிழகத்தில் 18 முதல் 19–தான் இருக்க வேண்டும். மாறாக, ஒரு வருடத்திற்குள் தமிழகத்தில் புதிதாக 7 சுங்கச் சாவடிகள் ஏற்படுத்தப்பட்டு, 48–லிருந்து 55 சுங்கச் சாவடிகளாக உயர்ந்துள்ளன. இதில், 29 சுங்கச் சாவடிகளில் 1–4–2023 நள்ளிரவு முதல் ரூ.5 முதல் ரூ.55 வரை சுங்கக் கட்டணத்தை உயர்த்தியிருப்பது கண்டிக்கத்தக்கது. இதுகுறித்து, மாண்புமிகு மத்திய அமைச்சரும், தமிழக அரசும் நடவடிக்கை எடுத்து, கட்டணத்தைக் குறைப்பதுடன், சுங்கச்சாவடிகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், தமிழகத்தில் உள்ள 500 கிலோ மீட்டர் நீளமுள்ள 8 மாநில நெடுஞ்சாலைகளை தேசிய நெடுஞ்சாலைகளாக மாற்ற திட்ட வரைவு கொடுக்கப்பட்டுள்ளது. இதில், என்னுடைய மயிலம் தொகுதிக்குட்பட்ட ஆற்காடு–திண்டிவனம் சாலையும் ஒன்று. இதை வரவேற்கிறோம். ஆனால், இதுபோல் தேசிய நெடுஞ்சாலையாக மாற்றினாலும் சுங்கக் கட்டணம் வசூலிக்கக் கூடாது என்று மாநில அரசு நிர்பந்திக்க வேண்டும்.

நெய்வேலியில் கொளப்பாக்கம், அரசகுழி, சிறுவரப்பூர் உள்ளிட்ட 26 கிராமங்களில் உள்ள 12,125 ஏக்கர் நிலங்களில் சுரங்கம்–3 எனும் அடுத்த திட்டத்தைச் செயல்படுத்தும் பணிகள் நடந்து வருகின்றன. இந்தப் புதிய சுரங்கம் 2026 ஆம் ஆண்டில் செயல்படத் தொடங்கும் என்று என்.எல்.சி. நிறுவனம் அதிகாரப்பூர்வமாகத் தெரிவித்துள்ளது. ரூ.3,755.71 கோடி மதிப்பீட்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்த

21–7–2022 அன்று என்.எல்.சி. இயக்குநர் குழுமம் ஒப்புதல் அளித்துள்ளது. இந்திய பங்குச்சந்தை அமைப்புகளான என்.எல்.சி. மற்றும் பி.எஸ்.இ. நிறுவனங்களுக்கு 7–9–2022 அன்று என்.எல்.சி. அளித்த சட்டப்படியான அறிக்கையில், புதிய மூன்றாவது சுரங்கம் 2026 ஆம் ஆண்டில் செயல்பாட்டிற்கு வரும் வகையில் வேலை நடந்துவருவதாகத் தெரிவித்துள்ளது. 12 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்களைக் கையகப்படுத்தும் திட்டத்தை அரசு கைவிடுவதுடன், விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படுவதை அரசு உறுதிப்படுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை, தாம்பரம், ஆவடி, கோவை, மதுரை, திருச்சி, சேலம் ஆகிய 7 மாநகராட்சிகளின் முக்கிய பொது இடங்களில் இலவச Wi-Fi சேவை வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதை தமிழகத்தில் உள்ள 21 மாநகராட்சிகள் மற்றும் 125 நகராட்சிகளுக்கும் நீட்டிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேசியது போதும், போதும்.

திரு. ச. சிவகுமார்: தகவல் தொழில்நுட்பம். தகவல் தொழில்நுட்பம் சார்ந்த நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் பணி நீக்கம் செய்யப்படுவது நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள், (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 5 நிமிடங்களுக்குப் பதிலாக 9 நிமிடங்கள் பேசியிருக்கிறார். இன்னும் 1 நிமிடம் கேட்கிறீர்கள். Right.

திரு. ச. சிவகுமார்: கடந்த 6 மாதங்களில் தமிழகத்தில் சுமார் 7,000 பேர் வேலை இழந்துள்ளனர். இதுபோல் வேலை இழப்பவர்களுக்கு மாற்று வேலை கிடைக்க தமிழக அரசு உதவிட வேண்டும்.

முதல்நிலை நகரங்களில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. அதேபோல் இரண்டாம் நிலை நகரங்களிலும் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைக்கப்பட வேண்டும். அடுத்த கட்டமாக, மாவட்டத் தலைநகரங்களில் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைக்கப்பட வேண்டும். இதனால் கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

பிற்பகல் 1-00

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று தமிழுக்கு செம்மொழி அந்தஸ்தைப் பெற்று தந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சி நடைபெறும் தமிழகத்தில் இன்றோ தமிழுக்கு உரிய அந்தஸ்து கிடைக்கவில்லை. உயர் நீதிமன்றத்தில் வழக்காடு மொழியாக தமிழை நடைமுறைப்படுத்த வேண்டுமென்றும், வணிக நிறுவனங்கள் மற்றும் அரசு அலுவலகங்களில் தமிழையும், தமிழில் பெயர் பலகையையும் கட்டாயமாக்க வேண்டுமென்ற மருத்துவர் அய்யா அவர்களின் கோரிக்கைகளுக்கு இணங்க, அவற்றைத் தமிழில் மாற்ற உத்தரவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாநிலச் சாலை. விழுப்புரம், திருவண்ணாமலை, தருமபுரி ஆகியவை பின்தங்கிய நிலையில் உள்ளதால், அனைத்து கிராம சாலைகளையும் தேர்வு செய்து நடப்பு ஆண்டிலேயே நிறைவேற்றி, இணைப்புச் சாலைகளையும் மேம்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமச் சாலைகளை மேம்படுத்த வட்டார வளர்ச்சி அலுவலகம் BDO-மூலம் இணையவழியில் பதிவு செய்யப்பட வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வருடக்கணக்கானாலும், பதிவு செய்ய முடியவில்லை. இதனை உடனடியாகப் பதிவு செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுப் பணித் துறையின்மூலம் கட்டப்படும் மருத்துவமனைகள், மேல்நிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் போன்றவற்றிற்கு பின்தங்கிய மாவட்டங்களான விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, தருமபுரி ஆகிய மாவட்டங்களுக்கு அதிக முன்னுரிமை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி, நன்றி, நன்றி.

திரு. ச. சிவகுமார்: தமிழகத்தில், 9 தேசிய நெடுஞ்சாலைகள்— சுமார் 384 கிலோ மீட்டர் நீளமுள்ள திட்டப் பணிகள் சுமார் 6,137 கோடி ரூபாய் மதிப்பில் தேசிய நெடுஞ்சாலைத் துறையில் கீழ்க்கண்ட பணிகள் தாமதமாகி வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், போதும். அதையெல்லாம் தாருங்கள், பதிவு செய்துகொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம் அவர்கள். (குறுக்கீடு)

திரு. ச. சிவகுமார்: நன்றி, சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி சொல்லுங்கள். நன்றி சொல்லுங்கள்.

திரு. ச. சிவகுமார்: கடந்த 2 ஆண்டுகளாக எனது தொகுதியில் பல சாலைகள் போட்டுக்கொடுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அனைத்து திட்டங்களுக்கும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு எனது மாவட்ட அமைச்சர் அவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

மயிலம் தொகுதியில் நெடுஞ்சாலைத் துறையின்கீழ் செய்யப்பட வேண்டிய சாலைப் பணிகளின் விவரம்:

மயிலம் ஒன்றியத்திற்குட்பட்ட கூட்டேரிப்பட்டிலிருந்து ஆலகிராமம் வழியாக தென்புத்தூர் வரை உள்ள ஒருவழிச் சாலையை இருவழிச் சாலையாக அகலப்படுத்த வேண்டும். மயிலம் ஒன்றியத்திற்குட்பட்ட கோபாலபுரம் முதல் தீவனூர் வரை உள்ள இருவழிச் சாலையை நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்த வேண்டும்.

மயிலம் ஒன்றியத்திற்குட்பட்ட பேரணி முதல் பெரியதச்சூர் வரையிலான ஒரு வழிச்சாலையை இருவழிச் சாலையாக அகலப்படுத்த வேண்டும். மயிலம் ஒன்றியத்திற்குட்பட்ட செண்டூர் முதல் மயிலம் வரை உள்ள இடைவழிச் சாலையை இரு வழிச்சாலையாக அகலப்படுத்த வேண்டும். மயிலம் தொகுதிக்குட்பட்ட பேரணி முதல் ஜெயங்கொண்டான் வரையிலான ஒருவழிச் சாலையை இருவழிச் சாலையாக அகலப்படுத்த வேண்டும்.

ஒலக்கூர் ஒன்றியத்திற்குட்பட்ட தாதாபுரம்–அம்மணம்பாக்கம் இடையே உள்ள தரைப் பாலத்தை உயர்மட்டப் பாலமாக மாற்றி அமைக்க வேண்டும். ஒலக்கூர் ஒன்றியத்திற்குட்பட்ட கொடியம்–அம்மணம்பாக்கம் இடையே உள்ள தரைப் பாலத்தை உயர்மட்டப் பாலமாக மாற்றி அமைக்க வேண்டும்.

2023 ஏப்ரல் 1] [திரு. ச. சிவகுமார்]

மயிலம் ஒன்றியத்திற்குட்பட்ட பேரணி–பெரியதச்சூர் இடையே உள்ள தரைப் பாலத்தை உயர்மட்டப் பாலமாக மாற்ற வேண்டும். வல்லம் ஒன்றியத்திற்குட்பட்ட ரெட்டணை–கீழ்மாம்பட்டு சாலையில் இடையே உள்ள ஈச்சூர் அருகே உள்ள தரைப் பாலத்தை உயர்மட்டப் பாலமாக மாற்றி அமைக்க வேண்டும்.

மயிலம் தொகுதியில் பொதுப் பணித் துறையின்கீழ் கட்டப்பட வேண்டிய கட்டடங்களின் விவரம்:

வல்லம் ஒன்றியம், கொங்கரப்பட்டு அரசு உயர்நிலைப் பள்ளிக்கு 14 வகுப்பறைகளுடன்கூடிய கட்டடம்; கீழ்மாம்பட்டு, இல்லோடு ஆகிய அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு 12 வகுப்பறைகளுடன்கூடிய கட்டடம்; தையூர், நெகனூர், மேல்ஒலக்கூர் ஆகிய அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு 14 வகுப்பறைகளுடன்கூடிய கட்டடம்.

மயிலம் ஒன்றியம், அவ்வையார்குப்பம், வீடூர் ஆகிய அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு 14 வகுப்பறைகளுடன்கூடிய கட்டடம்; பேரணி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு 10 வகுப்பறைகளுடன்கூடிய கட்டடம்; மயிலம், தழுதாளி, பெரியதச்சூர் ஆகிய அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்கு 8 வகுப்பறைகளுடன்கூடிய கட்டடம்.

மயிலம் தொகுதியில் கால்நடை பராமரிப்புத் துறையின்கீழ் செய்யப்பட வேண்டிய முக்கிய பணிகளின் விவரம்:

வல்லம் ஒன்றியம், கீழ்மாம்பட்டு மற்றும் வீரணாமூர் ஊராட்சிகளில் கால்நடை மருத்துவமனைகள் அமைக்க வேண்டும். ஒன்றியம், கூட்டேரிப்பட்டு மற்றும் நெடிமொழியனூர் ஊராட்சிகளில் கால்நடை மருத்துவமனைகள் அமைக்க வேண்டும்.

மயிலம் தொகுதியில் சுகாதாரத் துறையின்கீழ் செய்யப்பட வேண்டிய பணிகளின் விவரம்:

வல்லம் ஒன்றியம், நெகனூர் மற்றும் பென்னகர் ஊராட்சிகளில் உள்ள அரசு துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரமுயர்த்த வேண்டும். மயிலம் ஒன்றியம், வீடூர் மற்றும் ஆலகிராமம் ஊராட்சியில் உள்ள அரசு துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரமுயர்த்த வேண்டும்.

மயிலம் தொகுதியில் நீர்வளத் துறையின்கீழ் செய்யப்பட வேண்டிய முக்கிய பணிகளின் விவரம்:

மயிலம் ஒன்றியத்தில் சித்தணி, பெரமண்டூர், கொத்தமங்கலம், வி.பாஞ்சாலம், சின்னநெற்குணம் ஆகிய ஊராட்சிகளில் உள்ள ஏரிகளின் கரைகளைப் பலப்படுத்த வேண்டும். மதகுகள் புதுப்பித்தல், கலிங்கல்கள் சீரமைத்தல், வரத்து வாய்க்கால் தூர்வாருதல் போன்ற பணிகளைச் செய்ய வேண்டும்.

மயிலம் ஒன்றியத்தில் பேரணி, பாதிராப்புலியூர், செண்டூர் ஆகிய ஊராட்சிகளில் உள்ள ஏரிகளின் அணைக்கட்டு புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். நெடிமொழியனூர் ஊராட்சியில் உள்ள அணைக்கட்டு–11–ல் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம் அவர்கள்.*

திரு. இரா. மாணிக்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனது வாழ்நாளில் 80 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழுக்காகவும், தமிழ் மக்களுக்காகவும் ஓயாமல் உழைத்து இன்றைக்கு வங்கக் கடலோரம் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கின்ற முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் இருக்கும் திசை நோக்கி வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், 66 ஆண்டுகளுக்கு முன்பு குளித்தலை தொகுதி மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற உரையாற்றிய இந்த மாமன்றத்தில் அதே குளித்தலை தொகுதி மக்களுக்காகக் குரல் கொடுக்கின்ற நல்வாய்ப்பினை எளிய குடும்பத்தைச் சார்ந்த எனக்கு வழங்கியிருக்கின்ற ஏழை குடும்பப் பெண்களின் தலைமகன், திராவிடப் பேரரசின் திருமகன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில், தொகுதிக்கு ஒரு விளையாட்டு மைதானம் அமைப்பேன் என அறிவித்து, இளைஞர்களின் மனதில் இடம் பெற்றிருக்கின்ற எழுச்சி நாயகன், எங்களின் சின்னவர் வருங்கால மன்னவர், (மேசையைத் தட்டும் ஒலி) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் மாண்புமிகு

உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சரும், கரூர் மாவட்ட கழகத்தின் செயலாளருமாகிய மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அனைவருக்கும், மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர், மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர், அரசு தலைமைக் கொறடா மற்றும் சக சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும், இந்த மாமன்றத்திற்கு என்னை அனுப்பி வைத்திருக்கின்ற குளித்தலை தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாநிலத்தினுடைய வளர்ச்சியை அந்த மாநிலத்தின் சாலை கட்டமைப்பை வைத்தே கணக்கிட முடியும் என்று சொல்வார்கள். அதைக் கருத்தில்கொண்டுதான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நெடுஞ்சாலைத் துறைக்கு இந்த நிதி நெருக்கடியிலும் 19,465 கோடி ரூபாயை ஒதுக்கியிருப்பது உள்ளபடியே மகிழ்ச்சியளிக்கிறது. முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் ஆட்சியில்தான் தேசிய நெடுஞ்சாலை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் கிராமப்புற சாலைகள் என துறைவாரியாகப் பிரித்து உருவாக்கப்பட்டது.

ஊராட்சி ஒன்றியச் சாலைகளை, நெடுஞ்சாலைகள் மற்றும் கிராமப்புற சாலைகள், RR என்கிற Rural Roads என்ற பிரிவை உருவாக்கித் தரமுயர்த்த உத்தரவிட்டவர் முத்தமிழறிஞர் கலைஞர் ஆவார்கள். 1957-ல் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் குளித்தலை சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது குளித்தலைக்கும், முசிறிக்கும் இடையே காவிரியில் பாலம் வேண்டுமென்று அந்த நேரத்தில் சொன்ன கோரிக்கையை ஏற்று, 1969-ல் முதல்வராகப் பொறுப்பேற்றவுடன், 1971-ல் அதற்கான நிதியை ஒதுக்கி, அந்தப் பாலத்தைக் கட்டித் தந்தவர் தலைவர் கலைஞர் ஆவார்கள். இப்போது மட்டுமல்ல, அன்றைக்கே சொன்னதைச் செய்தவர் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்கின்றேன். அதே பாலத்திற்கு 2006-ல் 5-வது முறையாக முதல்வராக வந்தபோது சுமார் 2.5 கோடி ரூபாய் நிதியொதுக்கி பராமரிப்பு செய்ய ஆணையிட்டார்கள்.

தலைவர் கலைஞர் ஆட்சியில்தான் நெடுஞ்சாலைத் துறை மூலமாக இருவழிச் சாலைகளையெல்லாம் நான்கு வழிச் சாலைகளாக தரமுயர்த்துவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். 1996 ஆம் ஆண்டு சென்னை மேயராக மாண்புமிகு தளபதி அவர்கள் பொறுப்பேற்ற பிறகுதான் 10-க்கும் மேற்பட்ட மேம்பாலங்களை ஐந்தாண்டுகளில் உருவாக்கி, போக்குவரத்து நெரிசலைக் குறைத்து சென்னையை சிங்காரச் சென்னையாக உருவாக்கி, தொழில் வளர்ச்சிக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் வித்திட்டார் என்பதை நான் இந்த நேரத்தில் பெருமையோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

தமிழகத்தில் முக்கியமான நகராட்சி, மாநகராட்சிப் பகுதிகளில் புறவழிச்சாலைகள் அமைத்து போக்குவரத்தை எளிதாக்கி பொருளாதார வளர்ச்சிக்கு வித்திட்டவர் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1-05

மிக முக்கியமான ஊராட்சி ஒன்றியச் சாலைகளை மாவட்டப் பொறியாளர், ஒன்றிய, துறை சார்ந்த அதிகாரிகள் சேர்ந்து ஆய்வு செய்து, நெடுஞ்சாலைத் துறையின் கீழுள்ள கிராமப்புறச் சாலை அலகில் எடுத்து தரம் உயர்த்தப்பட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

பேருந்து செல்லக்கூடிய நெடுஞ்சாலைத் துறை சாலையில், ஊராட்சி ஒன்றியச் சாலையும் இடையிடையே வரும்போது, சரியான பராமரிப்பு இல்லாத நிலையில் இருப்பதால், அந்த வழித்தடங்களை முழுவதுமாக நெடுஞ்சாலைத் துறையின் கிராமப்புறச் சாலைகளாக மாற்றி, அதனை நெடுஞ்சாலைத் துறையே பராமரித்திட வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை சட்டமன்றத் தொகுதி முழுவதும் நெடுஞ்சாலைத் துறைமூலம் சுமார் 340 கி.மீ. நீளம் கொண்ட சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அந்தச் சாலைகளில் மாண்புமிகு தளபதி அவர்களின் ஆட்சி அமைந்த இரண்டாண்டுகளுக்குள் 75 கி.மீ. தூரமுள்ள சாலைகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, மீதமுள்ள சாலைகளுக்கு அதிகப்படியான நிதியினை ஒதுக்கி, அப்பணிகளை மேற்கொள்வதற்கு உத்தரவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலையிலிருந்து மணப்பாறை செல்லும் சாலையில் தினந்தோறும் ஆயிரக்கணக்கான வாகனங்கள் செல்கின்றன. அந்தச் சாலையின் குறுக்கே உள்ள railway gate ஒரு நாளைக்கு சராசரியாக 30 முறை மூடப்படுகின்றது. அவ்வாறு மூடப்படும்போது 20 நிமிடங்கள் வாகனங்கள் காத்திருக்க வேண்டிய சூழ்நிலையில், பொதுமக்களும் வாகன ஓட்டிகளும் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகின்றனர். ஆகவே, அந்த இரயில்வே பாதையில் மேம்பாலம் அமைத்து, அந்தப் பகுதி மக்களின் நீண்டகாலக் கோரிக்கையினை நிறைவேற்றித் தர வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மணப்பாறை–குளித்தலை இருவழிச் சாலையை நான்குவழிச் சாலையாக மாற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். திருச்சி–கரூர் புறவழிச்சாலையில் வரும் வாகனங்கள், குளித்தலை–முசிறி செல்வதற்கு இணைப்புச் சாலை இல்லை. எனவே, இணைப்புச் சாலை அமைத்துத் தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கின்றேன்.

குளித்தலை நகரத்தில் உள்ள நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான விருந்தினர் மாளிகை, சுமார் 90 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. மிகவும் பழமையான கட்டடமாக உள்ளது. ஆகவே, புதிய விருந்தினர் மாளிகை கட்டித் தர ஆவன செய்ய வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சி–கரூர் செல்லும் NH-67 தேசிய நெடுஞ்சாலையின் இருபுறமும் காவிரி ஆறும், இரயில்வே தடங்களும் இருப்பதால் விரிவாக்கம் செய்வதற்கு வழியில்லாமல் அடிக்கடி விபத்துகள் ஏற்படுகின்றன. எனவே, அதற்கான மாற்றுச் சாலையாக இராணி மங்கம்மாள் சாலையை மாயனூரிலிருந்து திருச்சி வரை அமைத்து, பொதுமக்களும், வாகன ஓட்டிகளும் விபத்தில்லா பயணம் மேற்கொள்ள ஆவன செய்ய வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சுமார் ஆயிரம் ஏக்கர் பரப்பளவுள்ள பஞ்சப்பட்டி ஏரிக்கு மாயனூர் பகுதி காவிரியிலிருந்து நீரேற்றம்மூலம் வெள்ள உபரி நீரை நிரப்பித்தர வேண்டுமென்பது அப்பகுதி விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கை. அவ்வாறு செய்வதால், சுமார் இரண்டாயிரம் ஏக்கர் நிலங்கள் விவசாயம் செய்வதற்கும், 25 ஆயிரம் விவசாயக் குடும்பங்களின் வாழ்வாதாரம் பெருகுவதற்கும் ஆவன செய்யப்படும். ஆகவே, பஞ்சப்பட்டி ஏரிக்கு நீரேற்றம் செய்ய வேண்டுமாய் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மற்றும் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

குளித்தலை தொகுதிக்குள் வரும் பழைய/புதிய கட்டளைமேட்டு வாய்க்கால்களில் உள்ள நூற்றாண்டுகள் பழமையான பழுதடைந்த குறுகிய பாலங்களை அகற்றி, புதிய பாலங்களாக அமைத்து, குளித்தலை தொகுதி விவசாயப் பெருங்குடி மக்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

2002 ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் பணிநீக்கம் செய்யப்பட்டு, 2006–ல் கழக ஆட்சி வந்த பிறகு மீண்டும் பணி நியமனம் செய்யப்பட்ட 10,000–க்கும் மேற்பட்ட சாலைப் பணியாளர்களுக்கு 41 மாத பணிநீக்கக் காலத்தின் ஓய்வூதியப் பலன்கள் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாடு முழுவதும் அனைத்துக் கோட்டங்களிலும் காலியாகவுள்ள சுமார் 8,000 சாலைப் பணியாளர்கள் பணியிடத்தை நிரப்பி கிராமப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திடும் வகையிலும், சாலை பராமரிப்புப் பணி சிறப்பாக நடைபெறவும் ஆவன செய்யுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) அவ்வளவுதான், முடித்துவிடுகிறேன்.

குளித்தலை தொகுதி, சூரியனூர் ஊராட்சியிலிருந்து நாள்தோறும் நூற்றுக்கணக்கானோர் உய்யகொண்டான் ஆற்றைக் கடந்து திருச்சி மாவட்டம், கொடியாலம் பகுதிக்கு விவசாய வேலைக்கும், விவசாயத் தொழிலுக்கும் சென்று கொண்டிருக்கிறார்கள். இதனால், வெள்ளப் பாதிப்பு காலங்களில் நிறைய உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. எனவே, உய்யகொண்டான் ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்க வேண்டுமென்பது அப்பகுதி மக்களின் நீண்டகால கோரிக்கை. எனவே, கரூர் மாவட்டத்தையும், திருச்சி மாவட்டத்தையும் இணைக்கின்ற வகையில், சூரியனூரிலிருந்து கொடியாலம் செல்லும் வழியில்

உய்யகொண்டான் ஆற்றின் குறுக்கே பாலம் அமைத்து, அந்தப் பகுதி விவசாயப் பெருமக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதி சார்ந்த மற்ற கோரிக்கைகளைப் பதிவு செய்வதற்காக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் கொடுத்துவிடுகிறேன். அவற்றை சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சர்களுக்கு அனுப்பி, விரைவில் நிறைவேற்றித் தர வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொண்டு, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் வென்ற முதல் தொகுதி என்ற அடிப்படையில், அதற்கு முக்கியத்துவம் கொடுத்து அனைத்து கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தர வேண்டுமாய் கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

தொகுதிக் கோரிக்கைகள்:

குளித்தலை தொகுதி, கிருஷ்ணராயபுரம், தோகைமலை, குளித்தலை ஆகிய ஒன்றியங்களிலுள்ள சிவாயம் ஏரி, பாப்பக்காப்பட்டி ஏரி, வயலூர் குளம், கழுகூர் ஏரி, கூடலூர் ஜி.உடையாப்பட்டி ஏரி, தோகைமலை, பெரியகுளம், நல்லூர் ஏரி, புத்தூர் ஏரி, பாதிரிப்பட்டி ஏரி, பொன்னம்பட்டி காரைக்குளம், கல்லடைகுளம், கீழவெளியூர் குளம், கார்ணாம்பட்டி குளம், பில்லூர் ஏரி, வடசேரி ஏரி, புழுதேரி பெரியகுளம், வெண்குளம், இராச்சண்டார் திருமலை கப்பேரி குளம் ஆகிய நீர்நிலைகளுக்கு காவிரியில் இருந்து வெள்ள உபரி நீரை உயரழுத்த மின் மோட்டார்மூலம் நிரப்ப வேண்டும்.

குளித்தலை நகராட்சியில் புதிய புறநகர் பேருந்து நிலையம் அமைக்க வேண்டும். குளித்தலை நகராட்சியில் உள்ள கழிவுநீர் கால்வாய்கள் அனைத்தையும் தூர்வாரி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதுடன் புதிய பாதாளச் சாக்கடை திட்டம் அமைக்க வேண்டும். தற்பொழுது திருச்சி முதல் கோவை வரை உள்ள NH 67 தேசிய நெடுஞ்சாலையில் திருச்சி முதல் மாயனூர் வரை செல்லும் இரு வழிச்சாலையில் அதிக போக்குவரத்தின் காரணமாகவும் ஆபத்தான வளைவுகள் அதிகம் உள்ளதாலும் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. இந்த நெடுஞ்சாலையின் இரு புறங்களிலும் காவிரி ஆறும் இரயில்வே வழித்தடமும் இருப்பதால் இச்சாலையினை விரிவாக்கம் செய்வதற்கு உள்ள சிரமத்தினைக் கருத்தில்கொண்டு போக்குவரத்தினை எளிமைப்படுத்தும் வகையிலும் NH 67 தேசிய நெடுஞ்சாலைக்கு மாற்றாக இராணி மங்கம்மாள் சாலையை நான்கு

வழிச்சாலையாக மாயனூர்-மணவாசி முடக்கு சாலையிலிருந்து எழுதியாம்பட்டி-மேட்டுமகாதானபுரம்-மகளிர்பட்டி-பிள்ளாபாளையம்-வீரவல்லி-சீகம்பட்டி-நால்ரோடு-எழுநூற்றுமங்களம்-குட்டப்பட்டி-குமாரமங்கலம்-பொய்யாமணி-நங்கவரம்-கவண்டம்பட்டி-சூரியனூர்-முதலைப்பட்டி-எட்டரை ஒத்தக்கடை-அதவத்தூர் வழியாக திருச்சி வரை அமைத்திட வேண்டும்.

குளித்தலை தொகுதி, புதிய மற்றும் பழைய கட்டளை மேட்டு வாய்க்கால்களின் குறுக்கே, கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், பிள்ளாபாளையம் பாலம், குளித்தலை ஒன்றியம், சீகம்பட்டி, மேல குட்டப்பட்டி, வைகைநல்லூர் கிராமம், தெற்கு மயிலாடி, கல்லுப்பட்டி, கருங்கலாப்பள்ளி இரத்தினம்பிள்ளைபுதூர், கணக்கப்பிள்ளையூர், மேலப்பட்டி, வலையபட்டி, பணிக்கம்பட்டி, மேலசுக்காம்பட்டி, நச்சலூர் ஆகிய இடங்களிலுள்ள பாலங்கள், தோகைமலை ஒன்றியம், கட்டாணி மேடு, சேப்ளாப்பட்டி பகுதியிலுள்ள பாலங்கள், குளித்தலை காட்டுவாரியின் குறுக்கே மேட்டுமருதூரில் உள்ள பாலம் ஆகியவற்றை புதிதாகக் கட்ட வேண்டும்.

மேலும், குளித்தலை தென்கரை வாய்க்காலின் குறுக்கே கே.பேட்டையில் உள்ள பாலம், நங்கவரம் பேரூராட்சி, நங்கம்காட்டுவாரியில் NNR உயர்நிலைப் பள்ளி அருகில் உள்ள பாலம், நங்கவரம் பேரூராட்சி, பனையூர் காட்டுவாரியில் கவண்டம்பட்டி முத்து வீடு அருகில் உள்ள பாலம் ஆகியவற்றை புதிதாகக் கட்ட வேண்டும்.

தோகைமலை ஒன்றியம், காவல்காரன்பட்டி-வடசேரி-தென்னகர்-வெள்ளிவாடி-திண்டுக்கல் நெடுஞ்சாலை வரை செல்லும் சாலை, தென்கடைக்குறிச்சி-கவண்டம்பட்டி-பாறைப்பட்டி-மேலப்பட்டி-கோப்பு வரை செல்லும் சாலை, R.T. மலை-புழுதேரி-சீத்தப்பட்டி வரை உள்ள சாலை, நெய்தலூர் காலனி-முதலைப்பட்டி-கள்ளுக்காடு-கோப்பு வரை செல்லும் சாலை ஆகியவற்றை தரமுயர்த்த வேண்டும். குளித்தலை, கிருஷ்ணராயபுரம் ஒன்றியங்களை இணைக்கும் வகையில் வீரவல்லி சறுக்குப் பாலத்திலிருந்து கள்ளபள்ளி தெற்கு வரை புதிய சாலை அமைக்க வேண்டும்.

தோகைமலை பகுதியில் புதிய அரசு தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க வேண்டும். குளித்தலை தொகுதி, சிப்காட்

தொழிற்பேட்டை அமைக்க வேண்டும். நங்கவரம் பேரூராட்சியில் புதிய காவல் நிலையம் அமைக்க வேண்டும். குளித்தலை தொகுதியின் மையப் பகுதியில் புதிய தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. மணி அவர்கள்.*

*__திரு. ரா. மணி:__ *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்க எம்.ஜி.ஆர். அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) எதிரிகளாக இருந்தாலும்கூட இல்லையென்று வந்து நின்றபோது, 'எங்கள் தங்கம்' என்ற திரைப்படத்தை நடித்துக் கொடுத்து, அவர்களையும் வாழவைத்தவர், (மேசையைத் தட்டும் ஒலி) ஏழைகளின் பசியாற்ற அம்மா உணவகம் தந்து சரித்திரப் புகழ்கொண்டவர் தங்கத் தாரகை எங்களது மகத்தான தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இந்த இருபெரும் தலைவர்கள் துயில்கொள்ளும் திசைநோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

குடிமராமத்து நாயகன், காவேரி காப்பாளன், ஏழைகளின் பங்காளன் புரட்சித் தலைமகன், இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு உயர் கல்வியில் 7.5 சதவிகித இட ஒதுக்கீட்டை வழங்கிய, (மேசையைத் தட்டும் ஒலி) முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், ஒன்றரைக் கோடி தொண்டர்களின் இதயங்களில் குடிகொண்டிருக்கும் கழகத்தின் பொதுச் செயலாளர் எங்கள் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்ற எதிர்க்கட்சிக் கொறடா அண்ணன் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களையும் வணங்குகிறேன்.

பிற்பகல் 1–10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஓமலூர் தொகுதியைச் சார்ந்த கோரிக்கைகளை முன்வைக்கிறேன். ஏழையெளிய மக்கள், கூலித் தொழிலாளிகள் அன்றாட வேலைக்குச் சென்று உழைத்தால்தான் உணவு என்று வாழ்ந்துகொண்டிருப்பவர்களுக்கு இலவச வீட்டு மனைப்பட்டா வழங்க அதிக கவனம் செலுத்துமாறு இந்த அரசுக்கு கோரிக்கையை முன்வைக்கிறேன். அப்படி இலவச வீட்டுமனைப் பட்டா

வழங்கினால் அதில் தோராயப் பட்டா என்று வழங்குகிறார்கள். அப்படி தோராயப் பட்டா என்று வழங்கினால் குடிசையோ, வீடோ கட்டும்போது அதற்குப் பட்டா வழங்க காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, இந்தத் தோராயப் பட்டா என்று இல்லாமல் இலவச வீட்டுமனைப் பட்டா என்று வழங்கினால் ஏதுவாக இருக்குமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முன்னாள் முதல்வர் அண்ணன் எடப்பாடியார் கொண்டு வந்த 100 ஏரிகளுக்கு உபரி நீர் நிரப்பும் திட்டத்தில், முதல் கட்டமாக 10 ஏரிகளுக்கு நீர் நிரப்பப்பட்டது. அந்த 10 ஏரிகளுக்கு அருகிலுள்ள விவசாய நிலங்களிலெல்லாம், பலவகையான பயிர்களை சாகுபடி செய்து விவசாயிகள் பயன்பெறும் வகையிலே அமைவதற்கு மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள்தான் முக்கியக் காரணமாக இருந்தார். அதேபோல, மீதமுள்ள 90 ஏரிகளுக்கு நீர் கொண்டு செல்லும் பணி ஆமை வேகத்தில் நடைபெறுகிறது. அந்தப் பணியை விரைந்து முடித்து, வருகின்ற பருவ மழைக்கு மேட்டூர் அணையில் கிடைக்கும் உபரிநீரை மீதமுள்ள ஏரிகளுக்கும் நிரப்பினால் சுமார் 20,000 ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெறுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை வலியுறுத்துகிறேன்.

எனது சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, காடையாம்பட்டி பகுதியில் உள்ள கொங்குப்பட்டி ஏரி, குண்டக்கல் ஏரி, தளவாய்ப்பட்டி ஏரி, தீவட்டிப்பட்டி ஏரி, அக்ரகாரம் ஏரி, மூக்கனூர் ஏரி, புங்கனேரி ஏரி ஆகிய 7 ஏரிகளுக்கு நீர்வழிப் பாதை இல்லாமல் இருப்பதால் இந்த 7 ஏரிகள் நீர் இல்லாமல் வறண்டு கிடக்கின்றன. காடையாம்பட்டி பகுதியிலுள்ள இந்த 7 ஏரிகளிலும் நீரேற்றும் முறையில் நீர் நிரப்பினால் சுமார் 1,000 ஏக்கர் விவசாயிகளின் நிலம் பயன்பெறும் வகையில் அமையுமென்பதை எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஓமலூர் தொகுதியிலுள்ள ஓமலூர்–சேலம் வழியாகச் செல்லுகின்ற நெடுஞ்சாலையில் இருபதுக்கும் மேற்பட்ட குக்கிராமங்களை உள்ளடக்கி, புளியம்பட்டி என்ற இடத்தில் தேசிய நெடுஞ்சாலையைக் கடக்கும்போது ஒரு நாளைக்கு ஒரு விபத்து நடப்பது என்பது வழக்கமாக உள்ளது. ஆகவே, அந்தப் பகுதியில் உயர்மட்டப் பாலம் அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஓமலூர் தொகுதியில் போக்குவரத்துத் துறையின் RTO அலுவலகத்திற்கு 2019–2020 ஆம் ஆண்டு அப்போதைய முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களால் ரூ.1 கோடியே 30 இலட்சம் நிதியொதுக்கப்பட்டு, இடமும் ஒதுக்கப்பட்டது. ஆனால், இன்றுவரை பணி துவங்கப்படவில்லை என்பது வேதனையளிக்கிறது. எங்கள் தொகுதியில் அமைந்துள்ள விமான நிலையத்தைத் தொடர்ந்து இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கடந்த மானியக் கோரிக்கை விவாதத்தின்போது மற்ற விமான நிலைய விரிவாக்கத்திற்கு, நிலம் வழங்கும் விவசாயிகளுக்கு சந்தை மதிப்பில் 3 மடங்கு சேர்த்துத் தருகிறேன் என்று கூறியிருந்தார். ஆனால், அவ்வாறு தர முடியவில்லையென்றாலும், இன்றைய சந்தை மதிப்புத் தொகையாவது வழங்கினால் விவசாயிகளுக்குப் பெரிதும் உதவியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாநிலம் வளர்ச்சி பெறுவதற்கு அதன் சாலை உட்கட்டமைப்பை மேம்படுத்துவது அவசியமாகிறது. மேலும், தரமான சாலை அமைத்து இதர போக்குவரத்து சேவையுடன் இணைப்பதால் பயணிகள் மற்றும் பொருட்களின் போக்குவரத்திற்குப் பெரிதும் உதவிகரமாக இருக்கும். அந்த மாநிலம் வளர்ச்சிப் பாதையை நோக்கிச் செல்கிறது. அவ்வகையில் அண்ணன் எடப்பாடியார் தலைமையில் 2011 முதல் 2021 வரை சாதனைகள் பல படைத்திட்ட துறை நெடுஞ்சாலைத் துறை. (மேசையைத் தட்டும் ஒலி) 10 ஆண்டுக் காலத்தில் 14,449 கிலோ மீட்டர் சாலைகள் அகலப்படுத்தப்பட்டன; 48,650 கிலோ மீட்டர் சாலைகள் மேம்படுத்தப்பட்டன; 37,817 கிலோ மீட்டர் சாலைகள் புதுப்பிக்கப்பட்டன; பெரிய மற்றும் சிறு பாலங்கள் என மொத்தம் 3,200 பாலங்கள் புதுப்பிக்கப்பட்டன. மேலும், தமிழ்நாட்டில் உள்ள சிறு துறைமுகங்கள் வளர்ச்சி அடைந்ததும், அதன்மூலம் அதிக நிதி வருவாய் ஏற்படுத்தியதும், இந்தக் காலக்கட்டத்தில்தான் என்பதைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

பொதுப் பணித் துறை கட்டடப் பிரிவுமூலம் தனியார் கட்டடத்திற்கு நிகரான சிறப்பான கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதும் அண்ணன் எடப்பாடியார் தலைமையிலான ஆட்சிக் காலத்தில்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடம், மருத்துவக் கல்லூரி, சட்டக் கல்லூரி, அரசு கலைக் கல்லூரி போன்றவை தனியார் கட்டடக் கலைக்கு நிகராகக்

கட்டடப்பட்டன. ஓமலூர் தொகுதியில், கருப்பூரில் அரசு பொறியியல் கல்லூரியில் பொதுப் பணித் துறை மூலமாக பெண்கள் தங்கும் விடுதி கட்டடப்பட்டு வருகிறது. அதனுடைய மதிப்பு சுமார் ரூ.7.50 கோடி; மற்றொரு விடுதிக் கட்டடம் ரூ.7 கோடியில் உயர் கல்வித் துறை மூலமாக நிதியைப்பெற்று இந்தப் பணி நடைபெறுகிறது. அங்கு கட்டடப்படும் கட்டடத்திற்குண்டான M–sand, கம்பி மற்றும் சிமெண்ட் போன்ற மூலப் பொருட்கள் ஆய்வுக்கு வழங்கப்பட்டவை ஒன்றாகவும், கட்டடப் பணிக்குப் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் வேறொன்றுமாகவும் உள்ளன. அந்தப் பொருட்கள் தரமற்ற பொருட்களாக உள்ளன. கட்டடப் பணிக்குப் பயன்படுத்துகின்ற M–sand என்று சொல்லப்படுகின்ற செயற்கை மணல், அதில் dust அதிகமாக இருப்பதால், அதன் பிடிப்புத் தன்மை இல்லாமல் போகிறது. அதோடு சிமெண்ட் அளவையும் குறைத்துக் கலக்குவதால் பிடிப்புத் தன்மையும், வலிமையும் குறைந்துவிடுகிறது.

பிற்பகல் 1–15

நெடுஞ்சாலைத் துறையில் சாலை அமைக்கும்போதும், சாலை அமைத்த பின்பும் தரக் கட்டுப்பாடு அலகுமூலம் தரத்தினை ஆய்வு செய்து, தரத்தினை உறுதி செய்த பின்பு, ஒப்பந்ததாரர்களுக்குப் பணத்தை வழங்குவதுபோல், அந்தக் கட்டடத்தை ஒரு பகுதியில் core cut செய்து, IIT, BIS, அண்ணா பல்கலைக்கழகம்மூலம் தரத்தை உறுதி செய்தால் மட்டுமே பெண்கள் அச்சம் இல்லாமல் தங்குவதற்கு ஏதுவாக இருக்கும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாண்டின் கொள்கை விளக்கக் குறிப்பு புத்தகத்தைப் படித்துப் பார்த்தேன். கடந்த 2021–2022 மற்றும் 2022–2023 ஆம் ஆண்டுகளில் சொல்லப்பட்டுள்ளதையே கொஞ்சம் மாற்றி சொல்லப்பட்டுள்ளது. மாநில வளர்ச்சிக்குண்டான வகையில் சென்ற ஆண்டு எடுத்துக்கொள்ளப்பட்ட பணிகள், அவற்றில் எவ்வளவு பணிகள் முடிக்கப்பட்டன மற்றும் மீதமுள்ள பணிகள் தாமதமாவதற்கு என்ன காரணம்; மேலும் எதிர்வரும் காலத்தில் என்னென்ன பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன என அதிகாரப்பூர்வமாக இருந்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். ஆனால் அவ்வாறு இங்கு ஏதும் காணப்படவில்லை.

2023 ஏப்ரல் 1] *[திரு. ரா. மணி]*

ஒரு மாநிலத்தின் வளர்ச்சிக்குப் புறவழிச் சாலைப் பணி மிக முக்கியம். எங்கள் அண்ணன் எடப்பாடியார் தலைமையிலான ஆட்சியில் புறவழிச் சாலைப் பணிகளில் நிலம் கையகப்படுத்திய நேர்வுகளில் இன்னும் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை. 2021–2022 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பு புத்தகம், பக்கம் 83–ல் இரயில்வே கடவுக்கு மாற்றாகப் பாலம் கட்டும் பணியில் நிலுவைப் பணிகள் 89 எனச் சொல்லப்பட்டுள்ளது. இதையே மீண்டும் 2022–2023 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பு புத்தகம் பக்கம் 116–ல் 89 பணிகள் எனச் சொல்லப்பட்டுள்ளது. ஆனால், 2023–2024 ஆம் ஆண்டின் கொள்கை விளக்கக் குறிப்பு புத்தகத்தில் 89 நிலுவைப் பணிகளின் நிலைமை என்னவென்று குறிப்பிடவில்லை.

கொள்கை விளக்கக் குறிப்பு 2021–2022, பக்கம் 11–ல் தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் சரக்கு கையாளும் திறனை 1.5 மில்லியன் மெட்ரிக் டன்னிலிருந்து 10 மில்லியன் மெட்ரிக் டன் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்ததை, சென்ற 2022–2023 ஆம் ஆண்டு மற்றும் இவ்வாண்டு 2023–2024–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே, எந்தப் பணியும் நடைபெறவில்லை.

இந்த அரசாங்கத்தை நான் கேட்டுக்கொள்வதெல்லாம், கோவை உக்கடம் பாலம், சேலம் முள்ளுவாடி பாலம், கரூர், மதுரை சிம்மக்கல் பாலம், தேவர் சிலை பாலம், பெரியார் பேருந்து நிலைய பாலம் போன்ற ஆரம்பிக்கப்பட்ட பல பாலப் பணிகள் தாமதமாகின்றன. இவற்றையெல்லாம் துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உரையாற்றியது போதும்.*

திரு. ரா. மணி: *கடலூர் துறைமுகத்தை ஆழ்கடல் துறைமுகமாகப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருவது பல ஆண்டுகளாக கனவில் இருந்த திட்டம். அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஆட்சிக் காலத்தில் 'Sagar Mala' என்ற திட்டம்மூலம் மத்திய அரசின் 50 சதவிகித நிதியுதவியுடன் கடலூர் துறைமுகம் விரிவுபடுத்தப்பட்டது. 2021 ஏப்ரலில் 90 சதவிகிதப் பணிகள் முடிந்தன. துறைமுகத்தைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவர ஏன் இந்த அரசாங்கம் காலம் தாழ்த்துகிறது?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உரையை முடித்துவிடுங்கள்.*

திரு. ரா. மணி: *மாண்புமிகு அம்மா அவர்களால், 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம் துவக்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டு அம்மா அவர்களின் அரசிடம், அரசு கேபிள் டி.வி. நிறுவனம் இலாபகரமாக இயங்கி, அந்த நிறுவனத்தால் ரூ.8 கோடி ஈவுத் தொகை வழங்கப்பட்டது. அப்படிப்பட்ட அற்புதமான நிறுவனம் கடந்த 2016–2021 ஆம் ஆண்டுகளில் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த எடப்பாடியார் அவர்கள், அன்றைய செய்தி ஒளிபரப்புத் துறை அமைச்சர், முன்னாள் இந்திய குடியரசுத் துணைத் தலைவர் மாண்புமிகு திரு. வெங்கைய நாயுடு அவர்களிடம் நேரடியாகப் பேசி இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்திற்கு* digital *உரிமம் பெற்றுக் கொடுத்தார். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த எங்களுடைய ஆட்சிக் காலத்தில் அந்த நிறுவனம் நல்ல நிலையில் செயல்பட்டு வந்தது. கடந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் ** ஆகவே, அந்நிறுவனத்தை மீண்டும் புத்துயிர் பெற வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உரையாற்றியது போதும். ** என்று கூறியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். நீங்கள் ** பேச்சு பேசுகிறீர்கள். நன்றி சொல்லி, உரையை முடியுங்கள். (குறுக்கீடு) 10 நிமிடங்கள் ஆகிவிட்டன.*

திரு. ரா. மணி: *இ-சேவை மையங்களில்* server *செயல்படாத காரணங்களால் பல நேரத்தில் மக்கள் காத்துக் கிடக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. எனவே,* server*–களைத் தரமுயர்த்தி மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தொகுதி சார்ந்த கோரிக்கைகளையெல்லாம் கொடுத்துவிடுங்கள். நீங்கள் அவற்றை அவையில் பேசியதாகக் கருதி, அவைக் குறிப்பில் பதிவு செய்துவிடுகிறேன்.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2023 ஏப்ரல் 1]

திரு. ரா. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகம், பக்கம் எண் 109-ல் 2021–2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்போது ஊராட்சி ஒன்றிய மற்றும் ஊராட்சி சாலைகளை, முதல்கட்டமாக சுமார் 2,000 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள், நடப்பாண்டில், அதாவது 2021–2022-ல் தரமுயர்த்தப்படும் என்று சொல்லப்பட்டது. அதில், 2021–2022-ல் எத்தனை வேலைகள் எடுக்கப்பட்டன? 2022–2023 வரை கடைசி நேரத்தில் மட்டும் எடுக்கப்பட்டன.

பிற்பகல் 1–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், போதும்.

திரு. ரா. மணி: ஊராட்சி சாலைகள் எடுக்கப்படவில்லை என்பதால், கிராமச் சாலைகள் மிக மோசமாக குண்டும், குழியுமாக இருக்கின்றன. ஆகவே, 2021–2022 ஆம் ஆண்டு எடுத்துக்கொள்ளப்பட்ட 2,000 கிலோ மீட்டர் சாலைப் பணிகளில் மீதமுள்ளதை வரும் நடப்பாண்டில் சேர்த்துக்கொண்டு, கிராமச் சாலைகளை மேம்படுத்த இந்த அரசு முன்வர வேண்டும் என்று கேட்டு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன் என்று சொல்லப்போகிறீர்கள், அப்படித்தானே! கடைசிப் பக்கத்தை எடுங்கள்.

திரு. ரா. மணி: இதோ ஒரு நிமிடம். சேலம் மாவட்டத்தில் இதுவரையிலும் B.Ed. அரசுக் கல்லூரி தொடங்கப்படவில்லை. எனவே, எங்கள் தொகுதியில் B.Ed. அரசுக் கல்லூரி தொடங்கப்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் தொகுதிக்கு என்ன தேவை என்பதை என்னிடம் கொடுத்துவிடுங்கள். அதை நீங்கள் அவையில் பேசியதாக நான் பதிவு செய்துகொள்கிறேன். (குறுக்கீடு) அதெல்லாம், இருக்கட்டும். கடைசிப் பக்கத்தில் நன்றி இருக்கும்; அதை எடுங்கள். நான் உங்களுக்கு 12 நிமிடங்கள் குறுக்கீடு இல்லாமல் பேச அனுமதியளித்திருக்கிறேன். (குறுக்கீடு) இல்லை, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேப்பரைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. ரா. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எடப்பாடியார் அவர்கள் மத்திய அரசிடம் தஞ்சாவூர்–மன்னார்குடி–திருத்துறைப்பூண்டி–வேதாரண்யம்–கோடியக்கரை வரை 110 கி.மீ. சாலையை NHAI சாலையாக மாற்றிட கேட்டுக்கொண்டார்கள். தேசிய நெடுஞ்சாலைத் துறை DPR தயாரிக்க நிதி ஒதுக்கீடு செய்தது. மைய அரசை வற்புறுத்தி இச்சாலைப் பணியை விரைந்து முடித்துத் தர வேண்டுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும், போதும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், போதும். நன்றி சொல்லி முடியுங்கள்.*

திரு. ரா. மணி: *வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி, நன்றி.*

திரு. ரா. மணி:

தொகுதிக் கோரிக்கைகள்:

ஓமலூர் தொகுதியிலுள்ள சுங்கச் சாவடி, தொப்பூர் சுங்கச் சாவடியிலிருந்து 34 கி.மீ. தூரத்தில்தான் உள்ளது. எனவே, ஓமலூரில் அமைந்திருக்கின்ற சுங்கச் சாவடியை அப்புறப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஓமலூர்–தாரமங்கலம் சாலையிலிருந்து பிரிந்து, அமரகுந்தி செல்லும் சாலையை அகலப்படுத்த வேண்டும். ஓமலூர்–சங்கரி சாலைப் பணியை விரைந்து முடிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடு) பொறுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, நீங்கள் உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடு) அதில், நீங்கள் ** என்கிற வார்த்தையை எடுக்கச் சொல்வீர்கள், அவ்வளவுதானே! (குறுக்கீடு) எடுத்துவிடுவோம். அதற்கான சரியான வார்த்தையைப் போட்டுவிடலாம்.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

5. அறிவிப்பு

பேரவை அலுவலில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 10–4–2023 (திங்கட்கிழமை) அன்று காலை விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப் பெறுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண்கள் 41–வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மற்றும் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர்தணிப்பு ஆகியன 12–4–2023 (புதன்கிழமை) அன்று காலை விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பெறும்.*

12–4–2023 (புதன்கிழமை) அன்று காலை விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப் பெறுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண்கள் 3–நீதி நிருவாகம், 24–சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மற்றும் 33–சட்டத் துறை ஆகியன 10–4–2023 (திங்கட்கிழமை) அன்று காலை விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பெறும்.

மேலும், 13–4–2023 (வியாழக்கிழமை) அன்று காலை விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப் பெறுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண்கள் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, 15–சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) மற்றும் 54–வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) ஆகியன அன்றையதினமே, அதாவது, 13–4–2023 (வியாழக்கிழமை) அன்று மாலை விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பெறும். மேலும், 13–4–2023 (வியாழக்கிழமை) அன்று மாலை விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பெறுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண்கள் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மற்றும் 18–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) ஆகியன அன்று காலை விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பெறும் என்பதை பேரவையின் ஒப்புதலுடன் அறிவித்துக்கொள்கிறேன்.

[*2023 ஏப்ரல் 1*

4. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 21 - நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை
(ஆ) கோரிக்கை எண் 39 - கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)
(இ) கோரிக்கை எண் 31 - தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை
—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பதிலுரை. மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியாரை வணங்குகின்றேன்; பேரறிஞர் அண்ணாவை வணங்குகின்றேன்; நம்முடைய நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய அன்புத் தலைவர் நம்மையெல்லாம் வழிநடத்துகின்ற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு மூத்த அமைச்சர் பெருமக்கள், எங்களுக்கெல்லாம் உறுதுணையாக, எங்களை அன்போடு நடத்துகின்ற ஆற்றல்மிக்க மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களைப் போற்றுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இங்கு அமர்ந்திருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள், எனக்கு வாக்களித்த பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதி மக்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

பிற்பகல் 1–25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்த அவையிலே இல்லை;

அவர்கள் கேரள மாநிலம், வைக்கத்தில், வைக்கம் போராட்டம் நடைபெற்று 100 ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும்விதத்தில் மாண்புமிகு கேரள மாநில முதல்வர் அவர்களோடு அந்த நிகழ்விலே கலந்துகொள்வதற்காக அங்கே சென்றிருக்கிறார்கள்.

தந்தை பெரியார் வைக்கத்திற்குச் சென்று, அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்கள் அங்கே தெருக்களில் நடக்கக்கூடாது; மகாதேவர் கோயில் தெருக்களில் நடக்கக்கூடாது என்றிருந்த அந்தக் கட்டுப்பாட்டை மீறி, அங்கு போராட்டத்தை நடத்தி, மக்களுக்கு உரிமையைப் பெற்றுத் தந்தார். சென்ற மாதம் கன்னியாகுமரி மாவட்டத்தில் தோள் சீலை போராட்டத்தினுடைய 200 ஆம் ஆண்டு நிறைவு விழா நிகழ்வு; பொதுக் கூட்டம் நடைபெற்றது. நம்முடைய மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களும், கேரளாவினுடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும் அங்கே வருகை தந்து சிறப்பித்தார்கள். நீங்கள் விரும்புகின்ற உணவை உண்ண முடியாது; நீங்கள் விரும்புகின்ற ஆடையை நீங்கள் அணிய முடியாது; நீங்கள் விரும்புகின்ற கல்வியை பெற முடியாது; நீங்கள் விரும்புகின்ற வேலையை, தொழிலை நீங்கள் செய்ய முடியாது என்றெல்லாம் அடக்குமுறைகள் நம்மீது அன்றைக்கு விதித்து, அடக்கி ஆளப்பட்ட நேரத்தில்தான், திராவிட இயக்கச் சிந்தனைகளும், அந்த விடுதலை உணர்வும் மக்களிடத்தில் கொழுந்துவிட்டுப் பரவியது. அதன் விளைவாகத்தான் இன்றைக்கு நாம் அனைத்து உரிமைகளையும் பெற்று வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இந்திய துணைக் கண்டத்தில் நடந்த முதல் உரிமைப் போராட்டம் என்பது கன்னியாகுமரி மாவட்டத்தில் 1822–ல் நடந்த தோள் சீலை போராட்டம். அந்தப் போராட்டம் கேரளாவில் மார் மறைக்கல் போராட்டம் என்றும், ஆங்கிலத்தில் Upper Cloth Riot-மேலாடை போராட்டம் என்றும் வரலாற்றில் பதிவு பெற்றிருக்கிறது.

உண்மையிலேயே தலைவர் அவர்கள் அங்கே வந்து, பேருரையாற்றினார்கள். அந்த உரை வரலாற்றில் இடம் பெற்றிருக்கிறது. இந்தப் போராட்டம் என்னவென்று தெரியாதிருந்த நாட்டிற்கு, தென் தமிழ்நாட்டின் கடைகோடியிலிருந்து, இந்திய துணைக் கண்டத்திற்கே, இப்படிப்பட்ட ஒரு சமூக இழுக்கு இருந்தது என்பதை நம்முடைய தலைவர் கன்னியாகுமரியில் வந்து முழங்கியதன் மூலமாக இன்றைக்கு அது உலகத்திற்கு எடுத்து செல்லப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று தான் இன்றைக்கு வைக்கம் போராட்டமும்; ஓராண்டுக் காலம் தலைவர் அவர்கள் கொண்டாட வேண்டுமென்று அறிவித்திருக்கின்றார். அது சமூக நீதி போராட்டத்திற்குக் கிடைத்திருக்கக்கூடிய ஒருமிகப்பெரிய வெற்றி.நம்முடைய அண்ணல் காந்தியடிகள் அவர்கள், வைக்கம் போராட்டம் நடைபெற்ற நேரத்தில் அங்கு வருகை புரிந்து அங்கிருக்கக்கூடிய ஒருவரோடு, கேசவன் தேவன் நீலகண்டன் என்பவரோடு பேச்சுவார்த்தை நடத்தியிருக்கின்றார். அதிலிருக்கக்கூடிய ஒரு சில வரிகளை மட்டும் நான் படித்து, இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன். ‘எங்கள் நம்பிக்கையின்படி எங்கள் ஆச்சாரிகளின் கருத்துபடி தாழ்த்தப்பட்ட சாதியினர், அவர்கள் முற்பிறப்பின் மோசமான கர்மாவின்படி அணுக முடியாத சாதியில் பிறந்திருக்கிறார்கள்; அவ்வகையில் நாங்கள் அவர்களைக் கொலைகாரர்களைவிடவும், திருடர்களைவிடவும் மோசமானவர்களாகக் கருதுகிறோம். சென்ற பிறவியில் செய்த கெட்ட செயல்களின் தண்டனையை அனுபவிக்கத்தான் இந்தச் சாதியில் பிறக்க வைக்கப்படுகிறார்கள் என்பது ஆண்டவன் கட்டளை என நாங்கள் நம்புகிறோம். அணுக முடியாத சாதியில் பிறப்பதே ஒரு தண்டனைதான்’ என்று அண்ணல் காந்தியடிகளிடம் அங்கிருக்கக்கூடியவர் கூறியிருக்கிறார். அன்புக்குரிய தோழர்களே, இங்குதான் சமூக நீதி சிந்தனை துவங்குகிறது. உலகில் பலர் பல கோணங்களில் ஒருவர்மீது ஒருவர் அதிகாரத்தைச் செலுத்தியிருக்கிறார்கள். ஆனால், இந்திய துணைக் கண்டத்தில் மட்டும், ஒரு மத நம்பிக்கையைக் கூறி, அதனை அடிப்படையாக வைத்து, சாதியத்தைக் கட்டமைத்து, மக்களை அடிமையாக்கிய அந்த சனாதனக் கும்பல் இன்றைக்கும் வீரம் பேசுகிறது. அவர்களுக்கு அடிவருடிகளாக இங்கேயும் சிலர் இருப்பது, அவர்களைப் பரிதாபத்தோடு என்னை பார்க்க வைக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 1–30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இரண்டு மாதங்களுக்கு முன்பு மும்பைக்கு சென்றிருந்தேன். அங்கு ஒரு மிகப் பெரிய நிகழ்வில் கலந்துகொண்டேன். பல அறிஞர்கள், கல்வியாளர்கள் அதிலே கலந்துகொண்டார்கள். அவர்கள், என்னிடத்தில் ஒரு கேள்வியை வைத்தார்கள். ‘திராவிட மாடல்’ என்று சொல்கிறீர்கள், உங்களுடைய முதல்வர் inclusive

development என்று சொல்கிறார், நீங்கள் புதிய கல்விக் கொள்கையை எதிர்க்கிறீர்கள்; இதெல்லாம் என்ன என்று கேட்டார்கள். நான், அதைப் பற்றி ஆழமாகப் பேசவில்லை, அதைத் தொட்டுச் செல்ல விரும்புகின்றேன். நான், அவர்களுக்கு, "அன்புக்குரிய நண்பர்களே inclusive development என்பது என்ன என்று உங்களுக்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நான் தமிழகத்தின் தென் கோடியிலிருந்து வருகிறேன். எங்களுடைய கேரள எல்லையான களியக்காவிளையிலிருந்து நீங்கள் சென்னை வரை பயணித்தீர்களென்று சொன்னால், பள்ளிக்கூடம் இல்லாத கிராமங்களே நீங்கள் பார்க்க முடியாது" என்று சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி) கல்லூரிகள் இல்லாத தாலுகாக்களைப் பார்க்க முடியாது; பல்கலைக்கழகங்கள் இல்லாத மாவட்டங்களைப் பார்க்க முடியாது. எங்களுடைய திராவிட இயக்கச் சிந்தனை, மக்களை அதிகாரப்படுத்தியிருக்கிறது. மகாராஷ்டிராவின் வளர்ச்சி என்பது மும்பை என்கின்ற ஒரு நகரத்தோடு முடிந்துவிடும். ஆனால், எங்களுடைய வளர்ச்சி என்பது diversified, பரவலாக்கப்பட்ட ஒன்று. கிராமத்தில் இருக்கக்கூடிய சாமானியனுக்கும் வருமானம் இருக்கும், இங்கிருக்கக்கூடியவர்களுக்கும் வருமானம் இருக்கும்.

எங்களுடைய பல்வேறு திட்டங்கள் இன்றைக்கு மக்களை அதிகாரப்படுத்தியிருக்கிறது. கல்விக்கூடங்களில் இலவசமான கல்வி, கல்விக்கான உபகரணங்கள் இலவசம், கல்விக்கான கட்டணம் இலவசம், கல்வி கற்கச் செல்கின்ற பேருந்தில் கட்டணம் இலவசம். இன்றைக்கு நம் தலைவருடைய புதுமைப் பெண் திட்டத்தின் மூலமாக உயர் கல்வி படிக்கக்கூடிய பெண் பிள்ளைகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் செலவுக்குக் கொடுக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) விளைவு, பெண்களுக்கான Gross Enrollment Ratio என்பது இந்தியத் துணைக் கண்டத்தில் 24 சதவிகிதத்தில் இருக்கிறது; எங்களுக்கு 72 சதவிகிதத்தைத் தொட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் திராவிட மாடல்.

எங்களுடைய அன்புத் தலைவர் அவர்கள், அன்றைக்கு உயர் கல்வி படிப்பதற்கு குடும்பத்தில் முதல் பட்டதாரிக்கு இலவசக் கல்வி என்று சொன்னார். எங்களுடைய பிள்ளைகள் பொறியாளரானார்கள், மருத்துவரானார்கள். அதனுடைய விளைவு, இன்றைக்கு நான் சார்ந்திருக்கக்கூடிய IT துறையில், நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்கக்கூடிய நேரத்தில் 7 இலட்சத்து 80 ஆயிரம் பேர் இந்தத் துறையில் பணியாற்றினார்கள். இன்றைக்கு அதில் 10 இலட்சத்து 2 ஆயிரம் பேர் பணியாற்றுகின்றார்கள்.

(மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் திராவிட மாடல் என்று நாங்கள் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமல்ல, இன்றைக்கு IT *துறையை எடுத்துக்கொண்டோம் என்று சொன்னால், தமிழகத்தில் அது 3.8 சதவிகிதம் முதல் 9 சதவிகிதம் வரையிலான வளர்ச்சியைக் கண்டிருக்கிறது.* CAGR *என்று சொல்வோம். சென்ற ஆண்டு நம்முடைய தலைவருடைய ஆட்சியில் எப்படிப்பட்ட வளர்ச்சி என்று தெரியுமா? 16.4 சதவிகித வளர்ச்சி. நம்முடைய தமிழ்நாட்டின்* software export *2021–2022 ஆம் ஆண்டில் ரூபாய் ஒரு இலட்சத்து 57 ஆயிரத்து 925 கோடி; சென்ற ஆண்டில் கணக்கெடுத்துப் பார்த்தால் அதாவது 2022–2023–ல் ரூபாய் இரண்டு இலட்சம் கோடியை அது தொட்டு, 26.6 சதவிகித வளர்ச்சியை* CAGR *எட்டியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் நம்முடைய தலைவர் அவர்களுடைய தொலைநோக்குப் பார்வையின் மூலமாக இங்கு கிடைத்திருக்கக்கூடிய மகத்தான வெற்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தலைவர் அவர்கள், நம்முடைய பிள்ளைகளுக்கு அனைத்து வாய்ப்புகளையும் கொடுக்க வேண்டுமென்று கட்டளையிட்டார். அதை ஏற்றுத்தான், நான் வெளிநாடுகளுக்குச் செல்கின்ற நேரத்தில், நம்முடைய பிள்ளைகள் வெளிநாடுகளுக்குச் சென்று பல்வேறு மாநாடுகளில் பங்கேற்க வேண்டுமென்று சொன்னால், இலட்சக்கணக்கான ரூபாய் செலவழித்துச் சென்று பங்கேற்க வேண்டும். அதை முறியடிக்க வேண்டுமென்பதற்காக சென்னையிலே உலகத்தரம் வாய்ந்த Umagine *என்கின்ற மிகப் பெரிய, 50,000 பேர் கலந்து கொண்ட, ஒரு தொழில்நுட்ப மாநாட்டை நம்முடைய தலைவர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்; மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வந்து வாழ்த்தினார்கள்; அன்புக்குரிய சகோதரர் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் வந்து நிறைவுரையாற்றி, அன்றையதினம்* award*–கள் வழங்கி சிறப்பித்தார்கள். உண்மையிலேயே அதை எண்ணுகின்ற நேரத்தில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. 130–க்கும் மேற்பட்ட கருத்தரங்குகள், உலகத்தரம் வாய்ந்த 300–க்கும் மேற்பட்ட பேச்சாளர்களைக் கொண்டு நடத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு மிகப் பெரிய பாராட்டை இளைஞர்கள் மத்தியிலிருந்து,* IT *துறையிடமிருந்து இந்த அரசு பெற்றிருக்கிறது*

என்று சொன்னால், இதுதான் நம்முடைய தலைவர் அவர்கள் அனைத்து வசதிகளையும் நம்முடைய மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று எண்ணுவதினுடைய ஓர் அடிப்படை நோக்கம் என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 1–35

நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்தான் இதற்கு வித்திட்டவர். 1977–ல் ELCOT–ஐ நிறுவினார். 1997–ல், தமிழ்நாட்டில்தான் முதன்முதலாக IT Policy–ஐ அவர்கள் கொண்டுவந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 1998–ல், ஐ.டி. துறையை அவர் தொடங்கி வைத்தார். அதனுடைய விளைவு அப்படிப்பட்ட வளர்ச்சி. இந்தத் துறையில் 10 இலட்சத்து 2 ஆயிரம் பேர் பணியாற்றுகின்றார்கள் என்று நான் கூறினேன். அதில், 35 சதவிகிதம் பேர் பெண்கள். இதனை நீங்கள் முக்கியமாகக் கவனிக்க வேண்டும். அதில், 35 சதவிகிதம் பேர் பெண்கள். எப்படி பெண்கள் இவ்வளவு பங்களிக்கிறார்கள் என்று சொன்னால் பெண்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டிருந்தது; பெண்களுக்கு உரிமைகள் மறுக்கப்பட்டிருந்தன; சொத்து மறுக்கப்பட்டிருந்தது. அத்தனையும் தந்த இயக்கம் இந்த இயக்கம். திராவிட இயக்கம்தான் இவை அத்தனையையும் பெண்களுக்குத் தந்திருக்கிறது. அதனுடைய விளைவு 35 சதவிகிதம்.

அதுமட்டுமல்ல, இன்றைக்குப் பார்த்தீர்களென்றால், இந்திய அளவில் பெண்கள் பணிபுரிவதற்குப் பாதுகாப்பான நகரங்கள் என்று 10 பெரிய நகரங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அதில், தமிழ்நாட்டில் 3 நகரங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அதில் முதலிடத்தில் இருக்கக்கூடியது சென்னை, (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டாவது கோயம்புத்தூர், மூன்றாவது மதுரை. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவில் 10 நகரங்களில், தமிழ்நாட்டில் 3 நகரங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அதற்கடுத்தபடியாக 10 இலட்சத்திற்கும் குறைவான மக்கள் வாழுகின்ற நகரங்களில், பாதுகாப்பாக பெண்கள் வாழுகின்ற நகரங்கள் என்று எடுத்ததில், திருச்சி, வேலூர், ஈரோடு, சேலம், திருப்பூர் ஆகிய நகரங்கள் இடம்பெற்றுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கு சரியில்லையென்று பேசுவோர்கள் இதை காதுகொடுத்துக் கேளுங்கள். இது நாங்கள் சொன்ன அறிக்கை அல்ல. இன்று இந்தியத் துணைக் கண்டமே பேசி, பாராட்டிக் கொண்டிருக்கக்கூடிய செய்தி.

இந்தத் துறையின் மூலமாக 1,288 ஏக்கர் நிலத்தில் 8 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் செயல்பட்டு வருகின்றன. 3 இலட்சத்து 72 ஆயிரத்து 132 சதுரடி பரப்பளவில் அங்கு அலுவலகங்கள் செயல்படுகின்றன. நம்முடைய தலைவர் அவர்களுடைய பொற்கரங்களால், இன்னும் ஓரிரு வாரங்களில் கூடுதலாக 6 இலட்சத்து 15 ஆயிரம் சதுரடி பரப்பளவு கொண்ட இடத்தில் கட்டடம் கட்டி, அவற்றை IT துறை நிறுவனங்களுக்கு ஒப்படைக்கவிருக்கிறோம். அதன் மூலமாக பல்லாயிரக்கணக்கான மக்கள் வேலைவாய்ப்பைப் பெற இருக்கின்றார்கள். ஆனாலும், தமிழகத்தினுடைய தேவை என்பது அதிகமாக இருக்கிறது. அதை நிவர்த்தி செய்வதற்குத்தான் இன்றைக்குத் தொழில் துறையின் மூலமாக பல இடங்களில் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இந்த அறிவிப்பிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நாங்கள் பணிவோடு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றோம். 3 TNTech City சென்னை, கோவை, ஓசூரில் அமைக்கப்படும் என அறிவித்தார்கள். எண்ணிப் பாருங்கள். நம்முடைய தலைவர் அவர்கள், அன்புத் தலைவர் கலைஞர் அவர்கள் சென்னையில் IT Corridor என்று கொண்டுவந்து, தமிழ்நாட்டின் பெருமையை உலகளவில் நிறுவச் செய்தார். அந்த இடத்திற்குச் சென்ற நேரத்தில் கட்டாந்தரையாக இருந்த இடங்கள் இன்றைக்கு மாட மாளிகையாக உயர்ந்து நிற்பதை பார்ப்பதற்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) பல்லாயிரக்கணக்கான மக்கள் வேலை செய்து இன்றைக்கு நம்முடைய பொருளாதாரத்தை உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய தலைவர் அவர்களுடைய தொலைநோக்குப் பார்வையில், 3 TNTech City. ஒன்று, சென்னையிலும், இன்னொன்று ஓசூரிலும், மற்றொன்று கோயம்புத்தூரிலும் வெகு விரைவில் வரவிருக்கிறது என்ற செய்தி நமக்கெல்லாம் ஓர் இனிப்பான செய்தியாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதை உலகத் தரத்தில் எல்லா வசதிகளோடும், அதாவது, வெறும் கட்டடங்கள் மட்டுமல்ல, அங்கு பணியாற்றுகின்றவர்களுக்குக் குடியிருப்புகள், Recreation Centres, health சம்பந்தமான அடிப்படை கட்டமைப்புகளை நாம் ஏற்படுத்தயிருக்கிறோம். எனவே, அந்த மிகப் பெரிய அறிவிப்பை நமக்குத் தந்திருக்கிறார்கள்.

Digitization. அதாவது, கணினிமயமாக்கல் ஒவ்வொரு துறைக்கும் அத்தியாவசியமாகிறது என்று இங்கு பேசிய நண்பர்களெல்லாம் குறிப்பிட்டார்கள். கணினிமயமாக்கலும்,

Automation-ம் நம்முடைய தலைவருடைய ஓர் இலக்காக இருக்கிறது. இதற்குத்தான் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில், கூடுதலாக 100 e-சேவைகளை நாங்கள் online-ல் கொடுப்போம் என்று சொன்னோம். 102 ஆக இந்த ஆண்டில் வழங்கியிருக்கின்றோம். வருகின்ற ஆண்டுக்கு அறிவிப்பு வரவிருக்கிறது. இன்றைக்கு மிகப் பெரிய அளவில் மக்கள் அதனால் பயன்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோன்று கொரோனா தாக்கம் ஏற்பட்ட நேரத்தில், தனியார் நிறுவனங்களெல்லாம் work from home என்று சொல்லி, அப்படியே shift ஆகிவிட்டார்கள். அவர்களுடைய எந்தப் பணியும் பாதிக்கப்படவில்லை. ஆனால் அரசு அலுவலகங்கள் முடங்கக்கூடிய ஒரு சூழல் ஏற்பட்டது. அந்த நிலை வரக் கூடாது என்பதற்காகத்தான் இப்போது e-office என்ற திட்டத்தை நாங்கள் கொண்டுவந்தோம். இன்றைக்கு மிகப் பெரிய அளவில் பல file-கள் காகிதத்திலிருந்து கணினிக்கு மாற்றப்பட்டிருக்கின்றன. e-office திட்டத்தில் பார்த்தீர்களென்றால், மாவட்ட அளவில் 2 இலட்சத்து 73 ஆயிரத்து 184 கோப்புகளும், தலைமைச் செயலகத்தில் 1 இலட்சத்து 45 ஆயிரத்து 264 கோப்புகளும், இதர துறை அலுவலகங்களில் 10 இலட்சத்து 19 ஆயிரத்து 619 கோப்புகளும், e-office, paper அல்லாத ஒரு file ஆக open செய்யப்பட்டுள்ளன. இது சுற்றுச்சூழலுக்கு பங்களிக்கக்கூடிய ஓர் அற்புதமான திட்டம்! (மேசையைத் தட்டும் ஒலி) எங்கிருந்தாலும் நம்முடைய அலுவலர்களும் work from home என்று சொல்லி, அவர்களும் வீட்டிலிருந்துகொண்டே file பார்க்கக்கூடிய சூழல் உருவாகியிருக்கிறது. அதுமட்டுமல்ல, பல பணியாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் இருக்கக்கூடிய ஒட்டுமொத்த அரசுத் துறை அலுவலர்களுக்கும் நாங்கள் on-line-ல் பயிற்சி வழங்குவதற்கான முன்னேற்பாடுகளையும் இன்றைக்கு செய்து கொண்டிருக்கின்றோம்.

பிற்பகல் 1-40

நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1 trillion dollar economy-பொருளாதாரத்தை 2030-ல் உருவாக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். அது உருவாக வேண்டுமென்று சொன்னால், நிச்சயமாக அதற்கான talent, அதற்கான திறனுடைய இளைஞர்களை நாம் உருவாக்க வேண்டும். ஒரு பக்கத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் என்று பேசுகின்றோம். மறுபக்கத்தில், தொழில் துறைக்கு, உலகத் தரத்தில்

பயிற்சி பெற்ற பல்வேறு இளைஞர்கள் தேவைப்படுகிறார்கள். அவர்களுக்கெல்லாம் பயிற்சி வழங்க வேண்டுமென்பதற்காக skill gap என்று சொல்வோம். அதாவது, திறன் இடைவெளி. அதைப் போக்குவதற்கு ICT Academy மூலமாக கடந்த ஆண்டு நாம் 73,297 மாணவர்களுக்குத் தொழில் பயிற்சி வழங்கியுள்ளோம். தனியார் நிறுவனங்களில் அந்தத் தொழில் பயிற்சியைப் பெற வேண்டுமென்று சொன்னால் 75 ஆயிரம் ரூபாய் வரை செலவழிக்க வேண்டியிருக்கும். அப்படிப்பட்ட பயிற்சி வழங்கியிருக்கின்றோம். தொழில்முனைவோர்களை உருவாக்க வேண்டுமென்பதற்காக 34,450 பேருக்குப் பயிற்சி வழங்கியிருக்கின்றோம். அதன் மூலமாகத்தான் இன்றைக்கு Tech Startups என்று சொல்கிறோம். Startups இருக்கின்றன. அதில் எல்லா துறைகளும் சேரும். ஆனால், தொழில்நுட்பம் சார்ந்த Tech Startups என்பது 4,000 என்ற அளவில் இன்று தமிழகத்தில் இருக்கின்றன என்று சொன்னால், சற்று எண்ணிப் பாருங்கள்.

ஆசிரியர்களுக்கு, கல்லூரிகளில் இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கு, இன்றைக்கு இருக்கக்கூடிய தேவைக்கு ஏற்ற அளவிற்கு திறன் வளர்ந்திருக்கிறதா என்ற கேள்வி எழாமல் இருப்பதற்காக அவர்களுக்கு industry–ready training, எப்படி தொழில் துறைக்குத் தேவையான மாணவர்களை உருவாக்க வேண்டுமோ அதற்கேற்றவாறு 6,197 ஆசிரியர்களுக்கும் பயிற்சி வழங்கப்பட்டிருக்கிறது.

இங்கே பேசிய உறுப்பினர் குறிப்பிட்டார். பல்வேறு ஆழ்நிலை தொழில்நுட்பங்கள், அது Internet of Things ஆக இருக்கட்டும், Artificial Intelligence, VR, AR போன்ற எக்கச்சக்கமான தொழில்நுட்பங்கள் வருகின்றன. இந்தத் தொழில்நுட்பங்கள் குறித்து நம்முடைய அரசின் நிலைபாட்டை இன்னும் தீவிரமாகக் கொண்டு செல்வதற்கு வசதியாக Tamil Nadu Technology Hub (iTNT Hub) என்ற ஒன்றை நாம் சென்னையில், அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் 30,000 சதுர அடியில் உலகத் தரம் வாய்ந்த Hitech Lab வசதியோடு ஆரம்பித்திருக்கின்றோம். பல நாடுகளிலிருந்து அதிலே நம்மோடு partnership செய்திருக்கிறார்கள். உலகத் தரம் வாய்ந்த பல்வேறு பல்கலைக்கழகங்களோடும், பல்வேறு நாடுகளோடும் நாம் தொடர்பை ஏற்படுத்தி, அவர்களோடு சில உடன்பாடுகளை ஏற்படுத்தி, நம்முடைய மாணவர்களை இங்கிருந்து அங்கேயும், அங்குள்ள மாணவர்களை இங்கேயும் கொண்டுவருவதற்கான ஒன்றிரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்கூட

செய்திருக்கிறோம். இன்னும் தொடர்ச்சியாக அந்தப் பணிகள் நடைபெறவிருக்கின்றன. Emerging technology வளர்ந்து வரக்கூடிய தொழில்நுட்பங்களுக்கும் புதிய கண்டுபிடிப்புகளுக்கும் ஆழ்நிலைத் தொழில்நுட்பத்திற்கும் மிகப்பெரிய ஓர் உந்துசக்தியாக அது அமையும்.

அதுமட்டுமல்ல; இன்றைக்கு இந்தியாவிலேயே research–ஆய்வுகளுக்கு அதிகமான கவனம் செலுத்தவில்லை என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. ஆனால், தமிழகத்தில் அந்தக் குற்றச்சாட்டு வராத அளவிற்கு, ஆராய்ச்சிகளுக்கு அதிகமான முக்கியத்துவம் இந்த iTNT Hub மூலமாக வழங்குவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் இன்றைக்கு செய்யப்பட்டிருக்கின்றன. இன்று முதலில் பேசிய உறுப்பினர் அன்புக்குரிய அண்ணன் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் ஒன்றைக் கேட்டார்கள். அதாவது, நம்முடைய TANFINET திட்டத்தில் ஏற்கெனவே சொல்லப்பட்ட கிலோ மீட்டர் சுமார் 48 ஆயிரம்; அது 57 ஆயிரமாக உயர்ந்திருக்கிறது, அது எப்படி சாத்தியம் என்று கேட்டார்கள். அன்றைக்கு ஒதுக்கப்பட்ட நிதியில், டெண்டர் விடப்பட்ட தொகை குறிப்பிட்ட சதவிகிதம் குறைவாக இருக்கிறது. அந்த நிதியை வைத்தே extended area-வை நாம் பூர்த்தி செய்ய முடியும். நிச்சயமாக நாம் அதை பூர்த்தி செய்துவிடுவோம். வெகுவிரைவில் 2000 ஊராட்சிகளில் அதை light up செய்யவிருக்கின்றோம். எஞ்சியவை அந்த குறிப்பிட்ட காலக்கட்டத்தில், நிச்சயமாக முடிந்துவிடும் என்ற செய்தியை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்ல, நம்முடைய தலைவர் அவர்கள், Last Mile Connectivity—ஏற்கெனவே உள்ள திட்டத்தின்படி ஊராட்சியளவில் அந்தச் சேவை சென்று சேரும். இப்போது அது வீடுகளில் தேவைப்படுகின்றவர்களுக்கு, தொழில் நிறுவனங்களில் தேவைப்படுகின்றவர்களுக்கு அல்லது கல்வி நிலையங்களில் தேவைப்படுகின்றவர்களுக்கு அந்தச் சேவையை வழங்குகின்றவிதத்தில் அதற்கான ஒரு திட்டம் புதியதாக 190 கோடி ரூபாயில் செயல்படுத்துவதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது.

அதுமட்டுமல்ல, கிராமங்களுக்கும் நகரங்களுக்குமான இடைவெளி–digital divide என்று சொல்வோம். அந்த digital divide வராமல் ஒருங்கிணைந்த digital கட்டமைப்பை உருவாக்குவதற்கு, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பட்ஜெட்டில் ரூ.400 கோடி நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது

என அறிவித்துள்ளார். எனவே அந்தப் பணியும் முடிவடைகின்ற நேரத்தில் நிச்சயமாக தமிழ்நாட்டில் இருக்கின்ற அனைத்துப் பகுதிகளிலும், மூலைமுடுக்குகளிலெல்லாம் மக்களுக்கு எந்தவிதமான இடையூறும் இல்லாமல் அதிவேக connectivity, இணைப்பு கிடைக்கும் என்பதை இந்த அவையிலே நான் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

பிற்பகல் 1–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு பேசிய ஒருசிலர் TAC TV-ல் ஏற்பட்டிருக்கக்கூடிய சில விஷயங்களைப் பற்றிப் பேசினார்கள். TAC TV analog என்ற ஒரு தொழில்நுட்பத்தில் முதலில் செயல்பட்டது. Analog-ல் செயல்படும்போது இதனுடைய எண்ணிக்கை பல இலட்சம் இருந்தது. சுமார் 75, 80 இலட்சம் இருந்திருக்கிறது. அந்த Analog-ல் இருந்து Set Top Boxes (STB)-க்குச் சென்ற நேரத்தில் அதனுடைய எண்ணிக்கை மிகவும் கீழே வந்து, கழகத் தலைவர் நம்முடைய தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்தில் 36 இலட்சமாக இருந்தது. இப்போது பார்த்தால் அது Analog-ல் இருந்து, STB-ல் இருந்து High Definition Set Top Boxes நோக்கி சென்று கொண்டிருக்கிறது. அப்படி போகக்கூடிய நேரத்தில் சந்தையில் மிகப்பெரிய போட்டி ஏற்படுகிறது. ஏற்கெனவே, STB தொழில்நுட்பம் என்பது பழைய தொழில்நுட்பம், அதிலேயும் சில குளறுபடிகள். இதனால் எண்ணிக்கை கொஞ்சம் குறைந்திருப்பது உண்மைதான். நம்முடைய அரசு உடனடியாக HD set top boxes வழங்கி அதை மேம்படுத்துவதற்கான ஆக்கப் பூர்வமான பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. அதற்கான பணிகளை நாங்கள் செய்து வருகின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு IT துறையில் இருக்கக்கூடிய Tamil Virtual Academy–தமிழ் இணையக் கல்வி கழகம். நம் அன்பு தலைவர் கலைஞர் அவர்கள், தமிழ் இணையப் பல்கலைக்கழகமாக ஆரம்பித்தார். ஆனால், சில சட்ட தேவைகளுக்காக அது தமிழ் இணையக் கல்விக் கழகமாக மாற்றப்பட்டு, இன்றைக்கு சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அதன்மூலமாக, இரண்டு காரியங்களை நாங்கள் முன்னெடுக்கிறோம். ஒன்று, உலகத்தில் எந்தப் பகுதியில் இருக்கக்கூடிய ஒருவரும் தமிழை தகவல் தொடர்புக்காக, Communication language ஆக படிக்க விரும்பினால் எளிய முறையில் கற்றுக்கொள்வதற்காக, நாம் அதை இணைய வழியில் கற்றுக்கொடுக்கின்றோம். இன்னொன்று,

2023 ஏப்ரல் 1] [திரு. த. மனோ தங்கராஜ்]

தமிழில் இருக்கக்கூடிய நம்முடைய பெருமைகள், நம்முடைய வளம், நம்முடைய பாரம்பரியம், நம்முடைய இலக்கியம், கலாச்சாரம் இவற்றையெல்லாம் வெளி உலகத்திற்குக் காட்ட வேண்டும். 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்' என்று அன்றைக்கு சொன்னார் வள்ளுவர். 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' போன்ற எவ்வளவு அற்புதமான தத்துவங்கள் தமிழ் இலக்கியங்களில் இருக்கின்றன! அந்தத் தத்துவங்களையெல்லாம் உலகத்திற்குக் கொண்டு செல்வதற்கு, அதை விரும்புகின்றவர்களின், வசதிக்காக Degree courses ஆக, Diploma courses ஆக, Master degree courses ஆகக் கொண்டு வந்திருக்கிறோம். இப்போது Master Degree-கூட அறிமுகப்படுத்தியிருக்கின்றோம். எனவே, அதில் முதுகலைப் பட்டப் படிப்பு வரை வந்திருக்கிறது. தமிழ்ப் பரப்புரைக் கழகம் என்னும் ஒன்றை ஆரம்பித்து, பட்டப் படிப்பு பாடத் திட்டங்கள் மிகத் தீவிரமாக நடத்தப்படுகின்றன. அயலகத் தமிழர்களுக்காகக் கற்றல் கற்பித்தலுக்கான தொடர்பு மையங்கள் பல நாடுகளில் உருவாக்கப்பட்டிருக்கின்றன. எஞ்சிய நாடுகளில் அந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதேபோல உலகத்தில் இருக்கக்கூடிய மிகப்பெரிய இணைய நூலகத்தை-(Digital Library) இன்றைக்கு Tamil Virtual Academy உருவாக்கி, கடந்த இரண்டு ஆண்டுகளில் இலட்சக்கணக்கான புத்தகங்கள் Digital Library-ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. நீங்கள் எல்லாம் பார்த்து படித்து மகிழ வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் font என்று பார்த்தால், Unicode-ஐ மாண்புமிகு தமிழக முதல்வர் தலைமையில் இருக்கக்கூடிய அரசு கொண்டு வந்திருக்கிறது. அதற்குப்பிறகுதான் file-கள் அனுப்புவதில் இருந்த நிறைய பிரச்சினைகள் தீர்வு ஆகியிருக்கின்றன. இல்லையென்றால், நீங்கள் ஒரு font-ல் அனுப்பி இன்னொரு font-ல் receive செய்தால், திருத்தம் செய்வதற்கு முடியாமல் இருக்கும். அந்தத் தொழில்நுட்பத்தைச் சரிசெய்ய Unicode கொண்டு வந்திருக்கிறோம். இப்போது அதிநவீன தொழில்நுட்பங்களைத் தமிழில் கொண்டுவருவதற்கான பல்வேறு முயற்சிகள், ஆய்வுகள் அங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. எனவே, இப்படிப்பட்ட பல்வேறு முன்னெடுப்புகளை நம்முடைய IT-துறை செய்து வருகிறது. இப்போது ஈரோடு, திருநெல்வேலி, செங்கல்பட்டு ஆகிய இடங்களில் தலா ஒரு இலட்சம் சதுரடி கட்டடப் பரப்பளவில் புதிய IT Parks அமைப்பதற்கான அறிவிப்பை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தந்திருக்கிறார்கள்.

[திரு. த. மனோ தங்கராஜ்] [2023 ஏப்ரல் 1

இங்கு Wi-Fi பற்றி கேட்டார்கள். மாண்புமிகு தலைவர் அவர்களுடைய அறிவிப்பில் சென்னை, தாம்பரம், ஆவடி, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம் ஆகிய மாநகராட்சிகளின் முக்கிய பொது இடங்களில் இலவச Wi-Fi தருவதற்காகவும், தலைவர் அவர்கள் நமக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த Wi-Fi வசதிகளும் வெகுவிரைவில் தரப்படும் என்பதை நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1–50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலநேரத்தைக் கருத்தில் கொண்டு என்னுடைய உரையை முடிக்கவிருக்கின்றேன். நேற்றைய தினம் பேசுகின்றபோது, நம்முடைய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் ஜனநாயகம், Socialism, Fascism, Nacism இவற்றை பற்றியெல்லாம் மிகத் தெளிவாக அற்புதமான, விளக்கங்களைத் தந்து பேசியிருக்கிறார். நம்முடைய இயக்கம், திராவிட இயக்கம் என்பது ஜனநாயகத்தை மையமாகக் கொண்டு, Socialism-ஐ தன்னுடைய கொள்கையாகக் கொண்டு, அனைவரும் நன்றாக வாழவேண்டும் என்ற உணர்வோடு இயங்குகின்ற இயக்கம். ஓர் அரசியல் தலைவர் என்பவர் தன்னுடைய மக்கள் நன்றாக வாழவேண்டும் என்ற இலக்கைக் கொண்டவர் என்று Aristotle அவர்கள் கூறியிருக்கின்றார். அந்த உயர்ந்த இலக்கைக்கொண்ட நம்முடைய தலைவர் அவர்கள், ஜனநாயகத்தையும் சோஷியலிசத்தையும் கட்டிக்காத்து வருகின்றார். ஆனால் நாட்டில் சிலர் Fascism உணர்வுகளை ஏற்படுத்தி, இந்த நாட்டை Nacism நோக்கி எடுத்துச்செல்ல முடியுமா என்று எண்ணுகின்றார்கள். அந்த பாசிச, நாசிச கனவுகளை திராவிட இயக்கம் இருக்கின்ற வரை, யாராலும் இங்கு கொண்டு வரமுடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) அவற்றை நாங்கள் காலூன்ற விடமாட்டோம். எங்களுடைய தலைவர் அவர்கள், தெற்கிலிருந்து அவர் முழங்குகின்ற ஒவ்வொரு முழக்கமும், பாசிச, நாசிசவாதிகளுக்கு ஒரு சவாலாக, ஒரு மரண அடியாக இருந்துகொண்டிருக்கிறது. எனவேதான், எங்களுடைய தலைவரை கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர் வரை இருக்கக்கூடியவர்களெல்லாம் ஓர் உயர்ந்த இலட்சியத்தோடு இருக்கக்கூடிய தலைவர் என்று உன்னிப்பாகப் பார்த்துக்கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையை நாங்கள் பார்க்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பெருமையோடு, அவரோடு பயணிப்பதில் நாங்கள் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம் என்று கூறி, அவையோர் அனைவருக்கும் நன்றி கூறி, விடைபெறுகின்றேன்.

2023 ஏப்ரல் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அறிவிப்புகள் இருக்கின்றனவா ?*

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்: *மாண்புமிகு உறுப்பினர்கள் 175 வெட்டுத் தீர்மானங்களைத் தந்திருக்கின்றார்கள். அவற்றில் பெரும்பாலானவற்றிற்கு என்னுடைய பதிலுரையில் நான் பதிலளித்திருக்கின்றேன். எஞ்சியுள்ளவற்றை நாங்கள் நிச்சயமாக ஆராய்ந்து, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, உரிய நடவடிக்கைகள் எடுப்போம். தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை இந்திய துணைக் கண்டத்திற்கே வழிகாட்டுகின்ற விதத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு செயல்படும் என்று கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தங்கள் துறையின் அறிவிப்புகளை அறிவித்துவிடுங்கள்.*

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு புதிய அறிவிப்புகளை இப்பேரவையில் வெளியிடுகிறேன். அறிவிப்புகளின் தலைப்புகளை மட்டும் நான் வாசிக்கிறேன். மற்றவற்றை நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி, அவைக்குறிப்பில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

அறிவிப்புகள்

தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை

1. சோழிங்கநல்லூர் எல்கோசெஸ்ஸில் உலகத் தரம்வாய்ந்த பசுமைப் பூங்கா அமைத்தல் (Setting up of a Green Park at International Standards at ELCOSEZ, Sholinganallur)

எல்கோசெஸ், சோழிங்கநல்லூரில் 377.08 ஏக்கர் நிலப்பரப்பு உள்ளது. அதில் காலியாக உள்ள 59.59 ஏக்கர் நீர் தேங்கும் பகுதியில், சோழிங்கநல்லூர் தொழில்நுட்பப் பூங்காவில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்குப் பயன்படும் வகையிலும், சுற்றுச்சூழலை மேம்படுத்தவும், பல்லுயிர்ப் பெருக்கத்திற்கு வழிவகுக்கும் வகையிலும் பூந்தோட்டம், மூங்கில் காடுகள்,

குறுங்காடுகள், சோலார் மின் விளக்குகள், நடைபாதை மற்றும் சைக்கிள் பாதை வசதிகளுடன்கூடிய பசுமைப் பூங்காவினை ரூ.20 கோடி செலவினத்தில் எல்காட் நிறுவனத்தின் சொந்த நிதியிலிருந்து அமைத்திட அரசு திட்டமிட்டுள்ளது.

2. எல்காட் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களை பசுமைத் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களாக சர்வதேசத் தரத்தில் மேம்படுத்தல். (Enhancement of ELCOT IT Parks as Green IT Parks at International Standards)

தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மாநிலம் முழுவதும் எட்டு எல்கோசெஸ்களை உருவாக்கியுள்ளது. பல்வேறு IT/ITeS நிறுவனங்கள் இப்பூங்காக்களில் செயல்படுகின்றன. இந்நிறுவனப் பணியாளர்கள் பயன்பெறும் வகையிலும், இந்தத் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களை சர்வதேசத் தரத்திற்கு உயர்த்தும் வகையிலும், பின்வரும் வசதிகளை ரூ.40 கோடி செலவினத்தில் எல்காட் நிறுவனத்தின் சொந்த நிதியிலிருந்து அங்கு ஏற்படுத்த தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது:

- வீட்டு வசதி ஏற்படுத்துதல்.
- நிர்வாக அலுவலகத்திற்கான கட்டடம் மற்றும் சுற்றுச் சுவர் கட்டுதல்.
- நுண்ணறி நீர்மானி (Smart Water Meter) மூலம் நிறுவனங்களுக்குத் தண்ணீர் வழங்குதல்.
- சூரியத் தகடுகள் (Solar Panels) மூலம் இயங்கும் தெரு விளக்குகள், உயர் கம்ப விளக்குகள் அமைத்தல்.
- உணவகத்துடன்கூடிய அடுக்குமாடி வணிக வளாகம் அமைத்தல்.
- மின்சார வாகனங்கள் மின்னேற்றும் நிலையம் அமைத்தல்.
- திறந்த வெளி நிலப்பகுதியில் (OSR) பசுமைப் பூங்கா அமைத்தல்.
- தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களில் உள்ள காலியிடங்கள் மற்றும் வாகன நிறுத்துமிடங்களில் சூரியத் தகடுகளை (Solar Panels) அமைத்தல்.

3. அசைவூட்டப்படம் (Animation), காட்சி வெளிப்பாடு (Visual Effects), வேடிக்கையான விளையாட்டு (Gaming & Comics) [AVGC] மற்றும் விரிவாக்கப்பட்ட மெய்நிகர் (Extended Reality–ER) கொள்கை

அசைவூட்டப்படம் (Animation), காட்சி வெளிப்பாடு (Visual Effects), வேடிக்கையான விளையாட்டு (Gaming & Comics) மற்றும் விரிவாக்கப்பட்ட மெய்நிகர் (ER) துறையானது, தேசிய அளவில் மிகவும் வேகமான வளர்ச்சியைக் கண்டுவருகிறது. தமிழகத்தில் இத்துறையில் முதலீடு செய்ய நிறுவனங்களை ஈர்க்கும் வகையில் அசைவூட்டப்படம் (Animation), காட்சி வெளிப்பாடு (Visual Effects), வேடிக்கையான விளையாட்டு (Gaming & Comics) மற்றும் விரிவாக்கப்பட்ட மெய்நிகர் (ER) துறைக்கான "AVGC & ER" கொள்கையை தமிழ்நாடு அரசு வெளியிடும்.

4. இடைமுகப் பயன்பாட்டு நிரலி நுழைவாயில் (API Gateway)

தமிழ்நாடு அரசு பல்வேறு அரசுத் துறைகளின் மென்பொருள் செயல்பாடுகளை ஒருங்கிணைக்க, ஓர் இடைமுகப் பயன்பாட்டு நிரலி நுழைவாயிலை (API Gateway) மாநில குடும்பத் தரவு தளத்தின் (SFDB) நிதியைப் பயன்படுத்தி உருவாக்க முடிவு செய்துள்ளது. இந்த நுழைவாயில், பயனர் துறைகள் இதர அரசுத் துறைகளின் சேவைத் தளங்களை அணுக உதவும் ஓர் ஒருங்கிணைந்த தளமாகச் செயல்படும். இத்தளமானது அனைத்துத் துறைகளின் தரவுகளை எளிதான, பாதுகாப்பான மற்றும் வெளிப்படையான முறையில் அணுகுவதை உறுதிசெய்து, பொதுமக்களுக்கு அரசின் சேவைகளை உயர்ந்த தரத்துடன் விரைவாக வழங்க வழிவகை செய்யும்.

5. தமிழ்நாடு நலத் திட்டப் பயனாளிகளுக்கான நேரடிப் பயன் பரிமாற்றத் தளம் (Tamil Nadu DBT Platform)

நேரடிப் பயன் பரிமாற்றத் தளமானது மக்களின் வங்கிக் கணக்கிற்கு மாநில மற்றும் ஒன்றிய அரசின் நலத் திட்டங்களுக்கான நேரடி ஊக்கத் தொகை/மானியத் தொகை/ பணப் பலன் பரிமாற்றங்களைச் செயல்படுத்தும் ஓர் ஒருங்கிணைந்த டிஜிட்டல் தளத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்தளம் ரூ.172 கோடி செலவினத்தில் (நான்கு ஆண்டுகளுக்கு) தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் வருவாய்ப் பங்கீட்டிலிருந்து

உருவாக்கப்படும். மக்கள், பல்வேறு நலத் திட்டங்களின்கீழ் தாங்கள் பெற்ற பயன்களை இணையதள/கைபேசி செயலிமூலம் அறிந்துகொள்ளலாம். இது திறம்படவும், வெளிப்படைத் தன்மையுடனும் அரசின் திட்டங்கள் செயல்படுவதை உறுதிசெய்யும்.

6. தமிழ்நாடு இணையவழி அரசு சேவைகளுக்கான ஒற்றை நுழைவுதளம் (Tamil Nadu Single Sign–On (TNSSO) Platform)

தமிழ்நாடு இணையவழி அரசு சேவைகளுக்கான ஒற்றை நுழைவுதளம் (TNSSO) என்பது, ஒவ்வொருதுறைப் பயன்பாட்டிற்கும் வெவ்வேறு இணைய முகவரிகளை (URL) நினைவில் வைத்திருக்கும் தேவையை நீக்கியும், தனித்தனி உள்நுழைவுப் பதிவு மற்றும் அங்கீகரிப்பு முறையை நீக்கியும், மாநில அரசின் அனைத்து வலைதளங்களையும் தடையின்றி அணுகுவதற்கும் உதவுகிறது. மேலும், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் அரசின் சேவைகளைப் பொதுவான, மையப்படுத்தப்பட்ட பாதுகாப்பான முறையில் எளிதாக அணுகுவதற்குத் தமிழ்நாடு இணையவழி அரசுச் சேவைகளுக்கான ஒற்றை நுழைவுத் திட்டத்தை ரூ.11 கோடி செலவினத்தில் தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் வருவாய்ப் பங்கீட்டிலிருந்து செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

7. தமிழ்நாடு செயற்கை நுண்ணறிவு அமைப்பு (Tamil Nadu AI Mission)

ஆளுகையை எளிதாக்குவதில் செயற்கை நுண்ணறிவு/ இயந்திரக் கற்றலின் ஆற்றலைப் பயன்படுத்துவதற்காக, தமிழ்நாடு மின் ஆளுமை முகமையானது (TNeGA), தமிழ்நாடு தொழில்நுட்ப மையத்துடன் (iTNT Hub) இணைந்து "தமிழ்நாடு செயற்கை நுண்ணறிவு அமைப்பு" (Tamil Nadu AI Mission) ஒன்றை தமிழ்நாடு புதுமை முயற்சிகள் நிதி (TANII) (செயற்கை நுண்ணறிவுக்காக ஏற்கெனவே ஒப்பளிக்கப்பட்டது) மற்றும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் சொந்த நிதியிலிருந்து உருவாக்கும். இந்த அமைப்பு தொழில் நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் தொடக்க நிலை நிறுவனங்களுடன் இணைந்து மின் ஆளுமைத் திறன்களை மேம்படுத்துதல், புதுமைகளை ஊக்குவித்தல் மற்றும் பொருத்தமான கொள்கைகளை உருவாக்குதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும்.

8. 100 புதிய சேவைகளை இ–சேவை மற்றும் மக்கள் சேவை தளத்தில் வழங்குதல் (100 New Services through e–Sevai and Citizen Portal)

காகிதமில்லாத, வெளிப்படையான மற்றும் நேரடித் தொடர்பில்லாத ஆளுகையை வழங்குவதற்காக, தமிழ்நாடு மின் ஆளுமை முகமையானது அரசின் பல்வேறு சேவைகளை இ–சேவை மற்றும் மக்கள் சேவை தளத்தின் வழியாக வழங்கி வருகிறது. 2023–2024 ஆம் ஆண்டில், கூடுதலாக 100 புதிய சேவைகள் ரூ.120 இலட்சம் செலவினத்தில் மின்–மாவட்டத் திட்டத்தின் நிதியைப் பயன்படுத்தி இ–சேவை மற்றும் மக்கள் சேவை தளத்தில் வழங்கப்படும்.

9. மாநிலம் முழுவதும் உள்ள அரசு அலுவலகங்களுக்கு அதிவேக இணைய இணைப்பை வழங்குதல் (Provision of High Speed Internet Services to Government Offices)

மாநிலம் முழுவதும் உள்ள சுமார் 20,000 அரசு அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு நம்பகமான, அதிவேக மற்றும் பாதுகாப்பான இணைய இணைப்பை வழங்க ரூ.184 கோடி முதலீடு செய்ய அரசு திட்டமிட்டுள்ளது. இம்முயற்சியானது, அரசின் செயல்பாடுகள் மற்றும் சேவைகளின் செயல்திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது திறன்மிகு ஆளுகைக்கான வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை அதிகரிக்கும்.

10. மாநிலத்தில் உள்ள குடும்பங்களுக்குக் குறைந்த விலையில், நம்பகமான அதிவேக இணைய சேவைகளை வழங்குதல் (Provision of Affordable, Reliable High Speed Internet Services to Households in the State)

உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்களின் சேவைகளைப் பயன்படுத்தி, மாநிலத்தில் உள்ள குடும்பங்களுக்குக் குறைந்த விலையில், நம்பகமான அதிவேக இணைய சேவைகளை ரூ.100 கோடி செலவினத்தில் அரசு/பொதுச்சந்தை/நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்று வழங்க அரசு திட்டமிட்டுள்ளது. இது டிஜிட்டல் இடைவெளியைக் குறைக்கவும், மாநிலத்தில் டிஜிட்டல் புரட்சியை ஏற்படுத்தவும், மக்களுக்கு அவர்களின் இருப்பிடத்திலேயே அரசின் சேவைகளை வழங்குவதிலும் ஓர் ஊக்கியாகச் செயல்படும்.

11. தமிழ்நாடு தொழில்நுட்ப மையம் பிற நகரங்களுக்கு விரிவாக்கம். (Expansion of iTNT–Hub to Tier–II and Tier–III Cities)

பொது மற்றும் தனியார் பங்களிப்பில் கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட தமிழ்நாடு தொழில்நுட்ப மையம் (iTNT–Hub) அமைப்பதற்கான பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன. சென்னையில் உள்ள அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் 30,000 சதுர அடி பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள இந்த மையம் விரைவில் திறக்கப்படும். தமிழகத்தை உலகளாவிய புத்தாக்க இலக்காக மாற்றும் மாண்புமிகு முதலமைச்சரின் தொலைநோக்குப் பார்வைக்கு இம்முயற்சி உறுதுணையாக இருக்கும். அனைத்து தொழில்நுட்பத் தீர்வுகளுக்கான மையப்படுத்தப்பட்ட (Hub and Spoke) அமைப்பில் தமிழ்நாடு தொழில்நுட்ப மையத்தை மாநிலத்தில் உள்ள இரண்டு மற்றும் மூன்றாம் நிலை நகரங்களுக்கு விரிவாக்கம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. திருநெல்வேலி, ஈரோடு மற்றும் செங்கல்பட்டு ஆகிய இடங்கள் இதற்காகக் கண்டறியப்பட்டு, ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இம்மையங்களுக்கான நிதியுதவி, பொது மற்றும் தனியார் கூட்டமைப்பில் தொழில் பங்குதாரர்களின் பங்களிப்புடன் தமிழ்நாடு தொழில்நுட்ப மையத்தால் வழங்கப்படும்.

12. ஆசிரியர்களுக்கான பயிற்சியளிக்கும் நோக்கில் ESDM, AVGC & IT துறைகளுக்கான சீர்மிகு மையம் (Centre of Excellence–CoE) நிறுவப்படும்

Electronics System Design and Manufacturing (ESDM), Animation, Visual Effects, Gaming and Comics (AVGC) & IT துறைகளில் உயர் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்கான சீர்மிகு மையத்தை (CoE) அமைக்க, தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. மேம்பட்ட தொழில்நுட்பங்களுக்கான திறன் தேவை மற்றும் தொழில் துறை 4.0–ன் தேவையை நிறைவு செய்வதற்கான திறன் பயிற்சி, சிறந்த நடைமுறைகள், மதிப்பீடுகள் வடிவமைப்பு, ஆராய்ச்சி மற்றும் பலதரப்பட்ட அணுகுமுறையுடன்கூடிய ஆதரவை இம்மையம் வழங்கும். அரசு நிறுவனங்கள், தொழில் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களுடன் இணைந்து ரூ.10 கோடி செலவினத்தில் தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் (ICT Academy) சொந்த நிதியிலிருந்து இந்த மையம் அமைக்கப்படும்.

2023 ஏப்ரல் 1] *[திரு. த. மனோ தங்கராஜ்]*

13. இணையப் பாதுகாப்பு 2.0 (Cyber Security 2.0)

*தமிழ்நாடு அரசு 2020 ஆம் ஆண்டில் இணையப் பாதுகாப்புக் கொள்கையை வெளியிட்டது. மாநிலத்தின் தகவல் தொழில்நுட்பச் சொத்துகள் தமிழ்நாடு இணையப் பாதுகாப்புக் கட்டமைப்பால் (*CSA–TN*) பாதுகாக்கப்படுகின்றன.*

மேகக்கணினிய அடிப்படையிலான கம்ப்யூட்டிங், மின்–அலுவலகம் போன்றவற்றின் தற்போதைய போக்கிற்கேற்ப கூடுதலான சொத்துகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட நடைமுறைகளை உள்ளடக்கிய வகையில் இக்கொள்கை புதுப்பிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறுதியாக, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொண்டு, என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பதிலுரை. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) இந்நாள், நன்னாள், பலரும் போற்றக்கூடிய நாள். ஏனென்று சொன்னால், இந்தியாவிலேயே முதன்முதலாக சமூக நீதியை நிலைநாட்டிட, வைக்கம் வீரர் என்று போற்றப்படும் தந்தை பெரியார் அவர்கள் போராடிய நாளின் (மேசையைத் தட்டும் ஒலி) நூற்றாண்டு விழாவின் தொடக்க நாள். இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இந்த நூற்றாண்டு விழாவினை பெருமையாகக் கொண்டாடுவதற்காகக் கேரள மாநிலத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்று அந்த விழாவைத் தொடங்கவிருக்கிற இந்த நாள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) நாமெல்லாம் பூரித்துப்போய் நிற்கின்ற நாள்.*

பிற்பகல் 1–55

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதா கோயிலில் மணியடித்தால், கிறித்துவப் பெருமக்களுக்கு மகிழ்ச்சி; கோரியிலே பாங்கு ஓதினால் இஸ்லாமியப் பெருமக்களுக்கு

பெருமகிழ்ச்சி; எழுச்சி. பெரும்பான்மையாக வாழ்கிற மக்கள், இந்து கோயில்களிலே ஆறு வேளை பூசை செய்கிறபொழுது, குறிப்பாக சைவத்தைத் தழுவுபவர்களாக இருப்பார்களென்று சொன்னால், ‘ஹர ஹர மகாதேவா’ என்று சொன்னாலும், வைணவத்தைத் தழுவுபவர்களுக்கு ‘கோவிந்த நாம சங்கீர்த்தனம்’ என்று சொன்னாலும், ஆனந்தக் கூத்தாடுவார்கள். ஆனால், திராவிடத்தை ஒட்டியிருக்கிற இங்கிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், இங்கிருக்கின்ற மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், அனைவரும் தினமும் காலை, மதியம், மாலை என்று 3 வேளைகளிலும்-‘தமிழர்களே, தமிழர்களே, என்னைக் கடலில் தூக்கியெறிந்தாலும், நான் கட்டுமரமாகத்தான் மிதப்பேன், அதில் ஏறி நீங்கள் பயணம் செய்யலாம், நான் கவிழ்ந்துவிட மாட்டேன்’ (மேசையைத் தட்டும் ஒலி) என்று ஒரு பொதுத் தத்துவத்தை, சமுதாயத்திற்கு என்றைக்கும் ஒலித்துக்கொண்டிருக்கிற சங்கநாதமிட்டு, சமுதாயப் புரட்சி செய்து, அதற்கு வித்திட்டு, இந்த மாமன்றத்தில் பல சட்டங்களை நிறைவேற்றி, நாட்டு மக்களுக்காகக் கையெழுத்திட்ட என் தலைவர், எங்களுக்கெல்லாம் பாடம் நடத்திய எங்கள் தலைவர் இன்றைக்கு படமாகக் காட்சியளிக்கிறார். அவரை முதலில் வணங்குவதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். அவருடைய தலைவர் அண்ணா, அண்ணா அவர்களுடைய தலைவர் பெரியார், அவர்களுக்கும் என்னுடைய வணக்கங்களை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவருக்குப் பிடித்தது குறள்.

“ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளும் குடி”.

ஆழ்ந்த அறிவும், விடாமுயற்சியும் கொண்டு ஒருவர் அயராது பாடுபட்டால், அவரைச் சேர்ந்துள்ள குடிமக்களுக்குப் பெருமை என்று சொல்லியிருக்கிறார். அவரைச் சேர்ந்த பெருமக்களுக்குக் குடியுயரும், பெருமை சேரும் என்று சொல்லியிருக்கிறார். அப்படியான திருக்குறள் வழியில் எங்கள் பாசமிகு அண்ணன், தமிழ்நாட்டினுடைய மாண்புமிகு முதலமைச்சர், அண்ணன் தளபதியார் அவர்கள் ஒவ்வொரு நொடியும், அனைத்து நேரங்களிலும், விடாமுயற்சியும், ஓய்வின்றி உழைப்பும் செலுத்துகின்ற காரணத்தினால், தமிழ்நாட்டு மக்களின் பெருமைகள் இந்தியத் தரணியில் நாளுக்கு நாள் உயர்கின்றன. ஊரும் உலகமும் பாராட்டும்வகையில், தமிழ்நாடுதான் முதலிடம், மாண்புமிகு

2023 ஏப்ரல் 1] [திரு. எ.வ. வேலு]

தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள்தான் No.1 முதலமைச்சர் என்று நாடு இன்றைக்குப் பறைசாற்றிக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கும் என் வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் எம் மண்ணின் மைந்தர், திரு. கு. பிச்சாண்டி அவர்களுக்கும், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கு உரிய நேரத்தில், காலத்தை அறிந்து அவர்களுக்கு வாய்ப்பு அளித்துக்கொண்டிருக்கின்ற அருமை தம்பி, சட்டமன்ற உறுப்பினர், கொறடா முனைவர் கோவி. செழியன் அவர்களுக்கும், நம்முடைய அன்பிற்குரிய அவை முன்னவர், எங்கள் மாவட்டத்தின், கழகத்தின் முன்னோடி, எங்கள் இயக்கத்தின் பொதுச் செயலாளர் அவர்களை நான் எப்போதும் எப்படி விளிப்பேன் என்றால், ஆன்மிகத்திற்கு ஒரு கிருபானந்தவாரியார் என்றால், எங்கள் அரசியலுக்கு ஒரு கிருபானந்தவாரியாராக காட்சியளித்துக்கொண்டிருக்கிற அருமை அண்ணன் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும், எங்கள் திருவண்ணாமலை நகராட்சியை வருங்காலத்தில் மாநகராட்சியாக்குகிறேன் என்று அறிவித்திருக்கிற மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அன்பிற்குரிய அண்ணன் திரு. நேரு அவர்களுக்கும், எங்கள் மூத்த அமைச்சர் அருமை அண்ணன் மாண்புமிகு திரு. இ. பெரியசாமி அவர்கள் உட்பட என்னுடைய சகாக்கள் அனைத்து மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் இந்த மாமன்றத்தின் வாயிலாக முதலில் எனது நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாநகரில் எனது விழிகளெல்லாம் விரிந்தன. ஈரோடு மாநகரில் எனது விழிகளெல்லாம் விரிந்தன. நான் கண்ட காட்சி ஒன்று உண்டு. கலிங்கை நோக்கிப் படை நடத்திய கருணாகர தொண்டைமான், பெரும் படையுடன் செல்கின்றபோது, அதற்குப் பெயர் கலிங்கத்துப் பரணி என்று வைத்திருக்கிறார்கள். அதில் பார் சிறுத்ததால், படை பெருத்ததோ, படை பெருத்ததால், பார் சிறுத்ததோ என்ற அடிப்படையில் ஒரு மொழி உண்டு. அதனை மெய்ப்பிக்கின்ற வகையில், தந்தை பெரியாருடைய புகழ் பாடும் ஈரோடு பெருநகரமே இடமின்றி சிறு நகரமானது. ஈரோடு நகரமே இடமின்றி சிறிதானது. அதற்குக் காரணம் வேறொன்றுமல்ல, மாண்புமிகு தம்பி, இளைய

நிதி திரு. உதயநிதி ஸ்டாலின் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் தேர்தல் பரப்புரைக்கு வந்தபொழுது, எழுந்த படையோடு அவர் வந்தார். எதிரிகள் அச்சமுற்றார்கள். மேலும் சொல்லப்போனால், எதிரிகள் அனைவரும் அல்லோகலப்பட்டார்கள், காரணம் என்ன தெரியுமா? ஒரே ஒரு ஒற்றைச் செங்கல்லை வைத்துக்கொண்டு, இந்த ஆட்சிப் பீடத்தில் அமருவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு உற்ற துணையாக இருந்தவர். (மேசையைத் தட்டும் ஒலி) அன்றைக்கு ஈரோட்டில் ஒரே ஒரு படத்தைக் காட்டி, எந்தப் படம் தெரியுமா? மாணவர்களுக்காக என் தலைவர் கலைஞருடைய புகழை மதுரையில் நிலைநாட்டியிருக்கிற கலைஞர் நூலகம் என்கிற அந்தப் படத்தை ஈரோட்டில் காட்டி, வெற்றிக் கொடி நாட்டி கழகத்திற்குப் பெருமை சேர்த்தவர். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் அனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *அதைவிட நான் மிகையாகச் சொல்ல வேண்டுமென்றால், 234 தொகுதிகளிலும், இளைஞரணி சார்பாக, திராவிட மாடல் ஆட்சியைப் பற்றி, தந்தை பெரியாரினுடைய கொள்கைகளை பற்றி, இளைஞர்களை ஈர்க்கின்ற வகையில், தமிழர்களின் உள்ளங்களையெல்லாம் கவர்கின்ற வகையில் அன்றைக்கு மாண்புமிகு உதயநிதி அவர்கள் ஒவ்வொரு கிராமப் பகுதிக்கும் பெரியாரினுடைய கொள்கைகளை அந்தச் செய்திகளையெல்லாம், எடுத்துச் சொல்கிறபொழுது, நான் பெரியார் மண்ணிலே அன்றைக்குத் தேர்தல் பொறுப்பை ஏற்று நடத்திய காரணத்தினால் என்னுடைய எண்ணம் ஒருகணம் எப்படி இருந்தது என்றால், பெரியார் மட்டும் இன்றைக்கு ஈரோட்டிலே இருந்திருந்தார் என்றால், என் கொள்கைகளை நாடு முழுவதும் பரப்புகின்ற என் கொள்ளுப் பேரன், உதயநிதியே என்று கட்டி அவர் உச்சிமுகர்ந்திருப்பார் (மேசையைத் தட்டும் ஒலி) என்றுதான் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.*

இந்த விவாதத்திலே கலந்துகொண்டு சிறப்பான உரைகளையும், கருத்துகளையும் எடுத்துச் சொல்லியிருக்கிற முன்னாள் அமைச்சர், இந்நாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர் சகோதரர் திரு. அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்

2023 ஏப்ரல் 1] [திரு. எ.வ. வேலு]

டாக்டர் இலட்சுமணன், சட்டமன்ற உறுப்பினர் நண்பர் திரு. பிரின்ஸ், சட்டமன்ற உறுப்பினர் சகோதரர் திரு. தளபதி, சட்டமன்ற உறுப்பினர் சகோதரர் திரு. சிவக்குமார், சட்டமன்ற உறுப்பினர் திரு. மாணிக்கம், சட்டமன்ற உறுப்பினர் திரு. மணி மற்றும் அனைத்து சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கும், இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள நான் விரும்புகிறேன்.

தமிழகத்திலே இருக்கிற கட்டமைப்பு வசதிகளைச் செய்யும் பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின் அமைச்சராகப் பொறுப்பேற்று, மூன்றாவது முறையாக, இந்த மானியக் கோரிக்கை விவாதத்தின்போது பதிலளிக்கின்ற வாய்ப்பினை எனக்குத் தந்த நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கின்ற என் அன்புத் தலைவர் தளபதி அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை என் நன்றியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நெடுஞ்சாலைத் துறை: குருதியோட்டம் சீராக அமைய உடலெங்கும் ஓடும் நாடி, நரம்புகள்போல், பொருளாதாரம் மேலும் உயர ஊரிலும், ஒன்றியத்திலும், நகரிலும், நாட்டிலும் சாலைகள் செம்மையாக அமைந்திருந்தால்தான் அந்த நாடு சிறக்கும். இதை நாடே நன்கறியும். அமெரிக்க அதிபர் John F. Kennedy ஒருமுறை சொன்னார். அமெரிக்க நாட்டினுடைய பொருளாதாரத்தால் சாலை உயரவில்லை; சாலை வளர்ந்ததால்தான் அமெரிக்க பொருளாதாரமே வளர்ந்தது என்று அதிபர் John F. Kennedy சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) ஔவை மூதாட்டி சொன்னார்,

'வரப்புயர நீருயரும்,
நீருயர நெல் உயரும்'

என்று சொன்னதற்கிணங்க, சாலைகள் பெருகினால்தான் நாட்டில் செல்வம் கொழிக்கும். மக்கள் வாழ்வு என்பது அது நன்மையாக, உண்மையாக இருக்கும்.

மூலதனச் செலவு: இந்த ஆண்டிலே தமிழக அரசின் சார்பாக, நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் 44,365.59 கோடி ரூபாய் capital expenditure-அதாவது மூலதனச் செலவிற்காகப் பணம் ஒதுக்கியிருக்கிறார். அதிலே நெடுஞ்சாலைத் துறைக்கு மட்டும் 17,421 கோடி ரூபாய் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு ஒதுக்கி, அதாவது 40 சதவிகிதம்

நெடுஞ்சாலைத் துறைக்கு மூலதனச் செலவிற்காக மட்டும் ஒதுக்கியதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கும் துறையின் சார்பாக முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தளவிற்கு 1946 ஆம் ஆண்டு முதன்முதலாக உருவாக்கப்பட்டது. அதற்குப் பின்னால் 50 ஆண்டுக்காலம் நிறைவடைகிறபோது, அப்போது கழக ஆட்சி. தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக இருந்த அருமை அண்ணன் கலைஞர் அவர்கள் அந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டார்கள். மாநில நெடுஞ்சாலைகள் என்றும், மாவட்ட சாலைகள் என்றும், மாவட்ட இதர சாலைகள் என்றும், 66,382 கிலோ மீட்டர் சாலைகள் தமிழ்நாட்டில் நெடுஞ்சாலைத் துறையின் மூலமாகப் பராமரிக்கப்படுகின்றன. ஒன்றிய அரசினுடைய சார்பாக, 5,128 கிலோ மீட்டர் நீள சாலைகள் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலமாக பராமரிக்கப்படுகின்றன. நெடுஞ்சாலைத் துறையினுடைய 50–வது ஆண்டு விழாவில் 5-8-1998 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கலந்துகொண்டு பாராட்டினார்கள். 1–5–2022 நமது கழக ஆட்சியர் 75–வது ஆண்டு பவள விழாவில் தமிழ்நாட்டு முதலமைச்சராக இருக்கிற அருமை அண்ணன் தளபதியார் அவர்கள் கலந்துகொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) இருக்கிற துறைகளிலெல்லாம் என் நெஞ்சத்திலே நெருக்கமாக இருக்கிற துறை நெடுஞ்சாலைத் துறை என்று பாராட்டியதோடு மட்டுமல்ல; ஓய்வு பெற்ற, பணி நிறைவு பெற்ற, பொறியாளர்களுக்கெல்லாம், பொற்கிழி வழங்கி, அவர்களுக்குப் பட்டயம் கொடுத்து, பாராட்டிய நிகழ்ச்சி என்பது–எங்கள் துறைக்கு மிகப் பெருமை சேர்த்திருக்கிறார் மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் என்பதுதான் எங்களுக்கெல்லாம் பெருமையாக இருக்கிறது.

புதிய பணிகள்: 2022–2023 ஆம் ஆண்டு, நேரடி நியமனம் மூலமாக 177 பணியிடங்களும் கருணை அடிப்படையிலே 76 பணியிடங்களும் இந்தத் துறையிலே நிரப்பப்பட்டிருக்கின்றன.

பிற்பகல் 2–05

சாலைகள் தரம் உயர்த்துதல். 2021–2022 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையின்போது, போக்குவரத்து செறிவு, மக்கள்தொகைப் பெருக்கம், புதிய தொழிற்பேட்டைகள்

அமைத்தல், முக்கிய சுற்றுலாத் தலங்களுக்கு இணைப்பு ஆகிய காரணிகளைக் கருத்திற்கொண்டு, மாவட்ட முக்கியச் சாலைகள் மறுவகைப்படுத்தப்பட்டு, மாநில நெடுஞ்சாலைகள் ஆகவும், மாவட்ட இதர சாலைகள் ஆகவும், மாவட்ட முக்கியச் சாலைகள் ஆகவும் தரம் உயர்த்தப்படும் என்று நாங்கள் குறிப்பிட்டிருந்தோம். அதன் தொடர்ச்சியாக, 1070 கிலோமீட்டர் நீளமுடைய மாவட்ட முக்கிய சாலைகள், மாவட்ட இதர சாலைகள், மாவட்ட நெடுஞ்சாலைகளாக 1,456 கிலோமீட்டர் நீளத்திற்கு இதர சாலைகளை நாங்கள் தரம் உயர்த்தியிருக்கிறோம்.

முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டம். மாண்புமிகு முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டம் என்பது இந்த அரசின் சார்பாக அறிவிக்கப்பட்ட ஒரு புதிய திட்டம். காரணம், எப்பொழுதும் மாநில நெடுஞ்சாலை என்பது இருவழிச்சாலை அளவில்தான் நாம் போடுவோம். நான்கு வழிச்சாலைகள் எல்லாம் தேசிய நெடுஞ்சாலை ஆணையம்தான் போடுகிறது. இந்தத் திட்டத்தைப் புகுத்த வேண்டுமென்ற அடிப்படையில், முதலமைச்சருடைய பெயரில் இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டு, 2021–2022 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை கூட்டத்தொடரில் முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டம் என்று அறிவிப்பு செய்யப்பட்டது. அந்தவகையில், அடுத்த 10 ஆண்டுகளிலே 2,200 கிலோமீட்டர் நீளமுள்ள இருவழிச் சாலைகளை, நான்கு வழிச் சாலைகளாகவும்,6,700 கிலோமீட்டர் நீளமுள்ள ஒரு வழிச் சாலைகள் இருவழிச்சாலைகளாகவும் தரம் உயர்த்திட வேண்டுமென்று திட்டமிடப்பட்டு, இலக்கு அமைத்துக்கொண்டு நாங்கள் பணியாற்றிக்கொண்டிருக்கிறோம். அந்தவகையிலே இந்த ஆண்டு, 403 கிலோமீட்டர் நீளமுள்ள முக்கிய மாநில நெடுஞ்சாலைகளை ரூ.3730 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நான்கு வழிச்சாலைகளாகத் தரமுயர்த்தியிருக்கிறோம். 1164 கிலோ மீட்டர் நீளமுள்ள இடைவழிச் சாலைகளை 1668 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரு வழிச்சாலைகளாக மேம்படுத்துகின்ற பணி இன்றைக்குச் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அதைத் தொடர்ந்து தலைநகராக இருக்கின்ற சென்னையிலே, கடந்த பெருமழையின்போது சென்னை பெருநகரமே மழையில் தத்தளித்துவிடுமோ, மிதந்துவிடுமோ என்ற அச்சப்பாடு இருந்தநேரத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆணையை ஏற்று, துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சென்னை மாநகராட்சியுடன் நெடுஞ்சாலைத் துறையும் இணைந்து

சிறப்பான பணிகளை நாங்கள் மேற்கொண்டோம். அந்த வகையிலே நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக வ.உ.சி. சாலை, அதாவது Wall Tax road—அந்தப் பகுதி, நம்முடைய இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு அவர்களுடைய தொகுதி. இது புகழ்பெற்ற சாலை. அந்த சாலையையும், அதே நேரத்தில் தந்தை பெரியாரின் பெயரில் இருக்கின்ற ஈ.வெ.ரா சாலை, கொளத்தூர் பகுதியிலே இருக்கின்ற Venus Nagar போன்ற பகுதிகளிலே பல பணிகளை எடுத்து, நீங்களெல்லாம் பாராட்டுகின்ற அளவிற்கு, மக்கள் பாராட்டுகின்ற அளவிற்கு இந்த முறை சென்னையிலே சொட்டுத் தண்ணீர்கூட பொதுமக்களைப் பாதிக்காத அளவுக்கு மிகச் சிறப்பாக அமைந்ததற்கு நெடுஞ்சாலைத் துறை, சென்னை மாநகராட்சிக்கு பெரிதும் உதவியது என்று இந்த நேரத்திலே நான் பெருமையாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சாலைகளைப் போடுகின்றபொழுது பாதுகாப்பு தேவை. நேற்றைய முன்தினம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இல்லத்திற்கு எனது துறையினுடைய முதன்மைச் செயலாளர் அவர்களுடன் நானும், அருமை அண்ணன் நேரு அவர்களும் பேசிக்கொண்டு செல்கின்றபொழுது அண்ணன் நேரு அவர்கள் சொன்னார்கள். "என் துறையைப் பற்றி உங்களுக்கே தெரியும். கழிப்பிட வசதி, சாலை வசதி, கட்டட வசதி, மாநகராட்சி, நகராட்சி என்று பல்வேறு பிரிவுகள் இருக்கின்றன. உரையாற்ற அதிக நேரம் எடுத்துக்கொண்டேன். இன்னும் சொல்லப்போனால், எனக்கு விட்ட நேரமே, உங்களுடைய பசி நேரத்திலே என்னைப் பேச விட்டார்கள்" என்று மனதிலே இருந்ததையெல்லாம் வெளிப்படையாகச் சொன்னார். சொல்லிவிட்டு, கடைசியாக ஒன்று சொன்னார். "உனக்கு என்னப்பா ஒரே வரியில் சாலை போடப்பட்டுவிட்டது" என்று சொல்லிவிட்டுப் போய்க்கொண்டே இருக்கலாம், என்று நகைச்சுவையாக சொன்னார்கள்.

சாலை வசதி எவ்வளவு முக்கியம் என்பது உங்களுக்கே தெரியும். தலைமைச் செயலகத்தை விட்டு வெளியே சென்றால், சாலையில்தான் போய் ஆக வேண்டும். வீடு வரை சாலையில்தான் சென்றாக வேண்டும். சாலைகளையும், மனித வாழ்க்கையையும் யாராலும் பிரித்துப் பார்க்கவே முடியாது. பொருளாதார வளர்ச்சிக்குச் சாலை வசதி மிக அவசியம் என்பது நாடறிந்த உண்மை. உங்களுக்கும் தெரியும். அந்த வகையிலே சாலையில் செல்கின்றபொழுது விபத்து இல்லாமல் செல்ல வேண்டும் என்ற ஒரு

சூழ்நிலை இன்றைக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒரு காலத்தில் இருவழிச்சாலைகள், ஊராட்சி சாலைகள், அப்பொழுதெல்லாம் பார்த்தால் Ambassador வண்டி எடுத்துக்கொண்டு போனால், மணிக்கு 75 கிலோ மீட்டர் அல்லது 80 கிலோ மீட்டர் வேகத்திற்கு மேல் யாருமே போக முடியாது. 80 கிலோ மீட்டருக்கு மேல் வேகத்தில் சென்றால், விட்டுவிடு, விட்டுவிடு என்று Ambassador வண்டியே சத்தம் போட ஆரம்பித்துவிடும். ஆனால், இன்றைக்கு அப்படி அல்ல. அயல்நாட்டினுடைய collaboration-னோடு பல்வேறு வாகனங்களை இன்றைக்குப் பார்க்கிறோம். அவை மிக வேகமாகச் செல்லக்கூடிய வாகனங்கள். ஓட்டுநருக்குச் சொல்ல வேண்டிய அவசியமேயில்லை. Speedometer-ல் கிலோ மீட்டர் என்ன இருக்கிறதோ அத்தனையும் அழுத்தி பார்க்க வேண்டுமென்று accelerator-ஐ அழுத்துகிற நிலைமை.

பிற்பகல் 2-10

திராவிட இயக்கம் ஆட்சிக்கு வந்தவுடனேயே, சாலைகளை மிகச் சிறப்பாகச் செப்பனிடுகிற காரணத்தினால், தொடர்ச்சியாக பல்வேறு சாலைகளைச் செப்பனிட்டு, விரிவாக சாலைகள் அமைத்ததன் விளைவாக, இன்றைக்கு வேகமாக வாகனங்கள் போவதை நாமே பார்க்கிறோம். சில நேரங்களில் ஓட்டுநரிடம், குறிப்பிட்ட நேரத்திற்குள் போக வேண்டும், கொஞ்சம் சீக்கிரமாகப் போ என்று நாமே சொல்கிற நிலை ஏற்படுகிறது. அவ்வாறு வேகமாக வாகனங்கள் போகும்போது விபத்துகள் ஏற்படுவது என்பது தவிர்க்க முடியாத ஒரு சூழ்நிலையாக இன்றைக்கு அமைகின்ற காரணத்தினால்தான், மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள், முதன்முதலாக நெடுஞ்சாலைத் துறை அமைச்சரான என்னை அழைத்து, இந்தச் சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அலுவலகத்திற்கும் சென்று நடத்திட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்.

நாமக்கல் மாவட்டத்தில்தான் அதிகமாக விபத்துகள் ஏற்படுகின்றன என்பதால், நாமக்கல் மாவட்டத்திற்குத்தான் முதன்முதலில் சென்றேன். அப்போது நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர், நம்முடைய தோழமைக் கட்சி சட்டமன்ற உறுப்பினரான என்னுடைய நண்பர் திரு. ஈஸ்வரன் போன்றோரெல்லாம் அங்கே வந்து, தங்களது கருத்துகளையெல்லாம் சொன்னார்கள். Rotary Club, Lions Club போன்ற பொதுவாக இருக்கிற அமைப்புகளையெல்லாம் அழைத்து நாங்கள் பேசினோம்.

பல்வேறு கருத்துகளையெல்லாம் சொன்னார்கள். அதைத் தொடர்ந்து அனைத்து மாவட்டங்களுக்கும் போக வேண்டுமென முடிவெடுத்து, நாமக்கல், செங்கல்பட்டு, நீலகிரி, தேனி, மதுரை, தூத்துக்குடி, சிவகங்கை, இராமநாதபுரம், ஈரோடு, கோயம்புத்தூர், விருதுநகர் ஆகிய 11 மாவட்டங்களுக்கு நாங்கள் சுற்றுப்பயணம் செய்து, பல்வேறு கருத்துகளைக் கேட்டதன் விளைவாக, அரசின் சார்பாக இந்த விபத்துகளை எப்படி குறைப்பது என்கிற முயற்சியில் நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம்.

அந்த வகையில்தான் சாலை பாதுகாப்பு குறித்து பள்ளிக்கூடத்தில் படிக்கிற குழந்தைககளிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில் கூடுவாஞ்சேரியில், நம்முடைய மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர், அருமைச் சகோதரர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்களை அழைத்து, நிகழ்ச்சி ஒன்றை ஏற்பாடு செய்து, மாதிரிக்காக சில பள்ளிக்கூடங்களைத் தேர்ந்தெடுத்து, ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் சாலை பாதுகாப்பு குறித்த புத்தகங்களை வழங்க வேண்டுமென்று முடிவு செய்தோம். சகோதரா என்று சொல்வதற்குப் பதிலாக—ஏனென்று சொன்னால், mummy என்றுகூட சில பேர் சொல்வதில்லை, mum என்று உச்சரிக்கிறார்கள். அதுபோன்று சகோதரா என்று சொல்வதற்குப் பதிலாக—எளிமையாக, குழந்தைகள் கொஞ்சம் இனிமையாக உச்சரிக்க வேண்டுமென்பதற்காக “சகோ” என்கிற அந்தத் தலைப்பில் சாலை பாதுகாப்பு, குறித்து வண்ணம் தீட்டுகிற புத்தகம், சாலை பாதுகாப்பு குறித்து “Go safe” என்கிற ஆங்கிலப் புத்தகம் உள்ளிட்ட நான்கு வகையான ஆங்கிலப் புத்தகங்களை பள்ளிக்கூடத்தில் படிக்கிற பிள்ளைகளுக்குக் கொடுத்தால்தான் அப்புத்தகத்தைப் படிக்கிற பிள்ளைகள், வீட்டிலேயுள்ள பெரியவர்களிடம் இதுகுறித்து சொல்வதற்கு வாய்ப்பிருக்கிறது என்கிற அடிப்படையில், தமிழக அரசின் சார்பில் இந்த முயற்சியை எடுத்து வருகிறோம்.

ஒரு நாள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களையெல்லாம் அழைத்து, சாலை பாதுகாப்பு மற்றும் விபத்துகளை எப்படி குறைப்பது என்பது குறித்தான ஓர் ஆய்வுக் கூட்டத்தை நடத்தினார்கள். அந்த ஆய்வுக் கூட்டத்தில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், எனது அன்புச் சகோதரர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்களோடு, நான் எங்கள் துறையினுடைய செயலாளர்களோடு கலந்து கொண்டேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய செயலாளர்கள்,

D.G.P. போன்றவர்களெல்லோரும் கலந்துகொண்டு பல்வேறு நிலைகளில் எங்களுடைய கருத்துகளையெல்லாம் நாங்கள் சொன்னோம். அந்தக் கருத்துகளை நாங்கள் சொன்னபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தார்கள். சாலை விபத்துகள் ஏற்படுகிறபோது உயிர் சேதம் ஏற்படுகிறது. அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாக இருந்தால் உடனே காப்பாற்ற முடிகிறது.தனியார் மருத்துவமனைக்குச் செல்கிறபோது அதற்கு அதிகமாக பணச் செலவு ஏற்படுகிறது. அதனால், காலதாமதம் ஏற்படுகிறது. ஆங்கிலத்தில் Golden Hour என்று சொல்வார்களே, அந்த நேரம் கடந்து போய்விட்டது என்று சொன்னால், விபத்தில் காயம்பட்டவர்களைக் காப்பாற்ற முடியாமல் போய்விடுகிற நிலை இருக்கிறது என்று நாங்கள் எடுத்துச் சொன்னவுடனேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எங்களிடத்தில் பேசவேயில்லை அமைதியாகி, உடனே காரில் ஏறி வீட்டிற்கு சென்று விட்டார்; அப்போது 7–00 மணி. மறுநாள் காலை 10–00 மணிக்கு வர வேண்டிய மாண்புமிகு முதலமைச்சர் 9–30 மணிக்கே தனது அலுவலகத்திற்கு வருகிறார். அவர் வந்தவுடனேயே அறிவித்த முதல் திட்டம், "இன்னுயிர் காப்போம், நம்மைக் காக்கும் 48" (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தினுடைய நிலைமை என்ன? மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்த திட்டத்தின் பயன்கள் குறித்து மக்கள் நல்வாழ்வுத் துறையின் மானியக் கோரிக்கையில் பேசுகிறபோது புள்ளிவிவரங்களைச் சொல்வார்கள். இந்தத் திட்டத்தின் மூலமாக இன்றைக்கு பல உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கின்றன.

நம்முடைய ஊரில் மட்டுமல்ல; நம்முடைய மாவட்டத்தில் மட்டுமல்ல; நம்முடைய மாநிலத்தில் மட்டுமல்ல; எல்லா மாநிலங்களிலும் மட்டுமல்ல, அல்ல, அல்ல, வெளிநாட்டுக்காரர் தமிழகத்திற்கு வந்தால்கூட, அவருக்கு தமிழ்நாட்டில் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால், அந்த வெளிநாட்டுக்காரரையும் காப்பாற்றக்கூடிய தாயுள்ளம் கொண்டவர்தான் மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் என்று சொன்னால் மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட திட்டத்தின் மூலமாக நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தளவிற்கு தமிழ்நாட்டில் 4,363 விபத்து பகுதிகளைக் கண்டறிந்து, மாநில நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக 2,093 விபத்து பகுதிகளுக்கு 90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாலையை மேம்படுத்துகிற பணிகளை இன்றைக்கு நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம்.

பொதுவாக ஒன்றிய அரசாங்கம் ஒரு கணக்கெடுத்து blackspot, கரும் புள்ளி—இங்குதான் அதிகமாக விபத்து ஏற்படுகிற பகுதி என்று ஒரு பட்டியலை எங்களுக்கு அனுப்பியிருக்கிறது. தமிழக அரசின் சார்பாக அந்தப் பட்டியலை நாங்கள் ஆய்வு செய்ததன் அடிப்படையில் இந்த ஆண்டில் 291 கரும் புள்ளிகள் கண்டறியப்பட்டு, அவை துறையின் சார்பாக இன்றைக்கு மேம்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 2–15

நம்முடைய தமிழ்நாட்டிற்கு என்ன பெருமை என்று சொன்னால், ஒன்றிய அரசாங்கம் ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதியான Justice Abhay Mohan Sapre அவர்களின் தலைமையில் குழு அமைத்து, ஒவ்வொரு மாநிலத்திற்கும் சென்று விபத்துகள் எவ்வாறு குறைக்கப்படுகின்றன என்று ஓர் ஆய்வு நடத்தியது. சென்னையில், 27–2–2022, 9–4–2022, 22–6–2022 ஆகிய 3 நாட்களில் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. மாநில நெடுஞ்சாலைத் துறையின் சார்பாக நானும் அக்கூட்டத்தில் கலந்துகொண்டு என்னென்ன பணிகளையெல்லாம் செய்கிறார்கள் என்று எடுத்துச் சொன்னதன் அடிப்படையில், எனக்குத் தெரிந்து எல்லா மாநிலங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது தமிழக அரசாங்கம் சிறப்பாக இந்தப் பணிகளைச் செய்துகொண்டிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்று ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

அதோடு மட்டுமல்ல; நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்திய மாண்புமிகு ஒன்றிய அமைச்சர் திரு. நிதின் கட்கரி அவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் சொல்கிறபோது, தமிழ்நாட்டை பொறுத்தவரையில், விபத்துகளைக் குறைப்பதிலே முன்னிலை மாநிலமாக இருக்கிறது; அதைப் பிற மாநிலங்களும் பின்பற்றலாம் (மேசையைத் தட்டும் ஒலி) என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அதேபோன்று, இந்தியாவில் இருக்கின்ற அனைத்து நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்களையும் வைத்து பெங்களூருவில் ஒரு மாநாடு நடந்தது. அந்த பெங்களூரு மாநாட்டில் நானும், இந்தத் துறைச் செயலாளர் மற்றும் சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளரையும் அழைத்துக்கொண்டு சென்று கலந்துகொண்டோம். பெங்களூருவில் 9–9–2022 அன்று

நடந்த அந்த மாநாட்டிற்கு Manthan மாநாடு என்று பெயர் வைத்திருந்தார்கள். அந்த மாநாட்டில் நான் ஆங்கிலத்தில் உரை நிகழ்த்தினேன். தமிழ்நாட்டிலுள்ள பிரச்சினைகளையெல்லாம் நான் எடுத்துச் சொன்னேன். அப்பொழுது, ஒன்றிய அரசின் மாண்புமிகு சாலைப் போக்குவரத்துத் துறை இணை அமைச்சர் டாக்டர் வி.கே. சிங் அவர்கள் பேசும்போது, அவருடைய பேச்சு முழுமையும் எப்படி இருந்தது என்று சொன்னால், விபத்துகளைக் குறைப்பதற்கு தமிழ்நாட்டை பின்பற்றி பிற மாநில நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்கள் முயற்சி செய்யுங்கள் என்று சொல்கிற வகையில் அவருடைய பேச்சை அமைத்துக்கொண்டிருந்தார். எனவே, அப்படிப்பட்ட சிறப்பான பணிகளை இன்று நாம் செய்துகொண்டிருக்கிறோம்.

அடுத்து, கிராம சாலைத் திட்டங்களைப் பொறுத்தவரையில், மாண்புமிகு முன்னாள் அமைச்சர், அருமை நண்பர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் ஒரு பிரச்சினையை இங்கே குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு விரிவாகப் பதில் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஊராட்சி சாலைகளைப் பொறுத்தவரையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், 5 ஆண்டுகளுக்கு என்று ஒரு கணக்கு எடுத்துக்கொண்டு, ஓராண்டிற்கு 2,000 கி.மீ. என்ற அடிப்படையில் 10,000 கி.மீ. சாலைகளைச் சீர்செய்ய வேண்டும், செப்பனிட வேண்டும், சாலையின் தரத்தை உயர்த்த வேண்டும் என்று ஓர் அறிவிப்பு செய்யப்பட்டது. அந்த அடிப்படையில், 2021–2022 ஆம் ஆண்டில் சாலைப் பணிகளைச் செய்வதில் எங்களுக்குக் காலதாமதமாகிவிட்டது. ஏனென்று சொன்னால், கொரோனா பிரச்சினை ஒருபக்கம்; அப்போதுதான் நாங்கள் ஆட்சிக்கு வந்தோம்; நிதி நிலைமை எந்த அளவிற்கு மோசமான நிலையில் இருந்தது என்பதெல்லாம் அனைவரும் அறிந்ததுதான். இந்த நிலையில், நாங்கள் ஒவ்வோர் ஒன்றியத்திலும், அங்கிருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக பரிந்துரை செய்யப்பட்டு, எங்களுக்கு வருகிறபோது காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. இந்த ஆண்டு 2,000 கி.மீ. கிராமச் சாலைகளை நெடுஞ்சாலைத் தரத்திற்கு இணையாக உயர்த்துவதற்காக எடுக்கப்பட்டதில், 873 ஊராட்சி ஒன்றியச் சாலைகளில் ரூ.2,178 கோடி மதிப்பீட்டிலான பணிகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

[திரு. எ.வ. வேலு] [2023 ஏப்ரல் 1

நபார்டு வங்கி உதவியுடன் 158 பாலப் பணிகள் ரூ.818 கோடியில், தற்போது கட்ட ஆணை பிறப்பிக்கப்பட்டு, அதற்கான பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன.

அதேபோன்று, தரைப் பாலங்கள். இதுபற்றி அனைவரும் அறிந்த ஒன்றுதான். தண்ணீர் அதிகரித்து தரைப் பாலத்தில் தண்ணீர் வந்துவிட்டால் யாருமே அதில் போக முடியாது என்பது கிராமப்புறங்களில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களும் நன்கு அறிந்ததுதான். 2021–2022–ல் 1,281 தரைப் பாலங்களை உயர்மட்டப் பாலங்களாக அமைக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டதன் அடிப்படையில், இப்பொழுது 863 பாலங்களுக்கான பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதற்கான மதிப்பீடு ரூ.1,548 கோடி. 2026–க்குள் எஞ்சியிருக்கின்ற பாலங்களெல்லாம் முழுமையாகக் கட்டப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அடுத்து, புறவழிச் சாலைகள். நகரப் பகுதிகளில்தான் புறவழிச் சாலைகள் வேண்டுமென்கிற கோரிக்கை தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றது. அந்த அடிப்படையில், புறவழிச் சாலைகளை எடுத்துக்கொண்டால், தற்பொழுது மாநில அரசால் 139 புறவழிச் சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவற்றுள் 50 பணிகள் தற்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. 40 பணிகள் நில எடுப்பு நிலையில் இருக்கின்றன. 45 பணிகளுக்கு நாங்கள் விரிவான திட்ட அறிக்கை, DPR கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஆக, வருங்காலத்தில் நிதிநிலைக்கேற்ப அரசின் சார்பில் இவற்றையெல்லாம் செய்து முடிப்போம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 2–20

அதேபோல, சாலை மேம்பாட்டுத் திட்டம்–II என்ற திட்டம். உலக வங்கி உதவியுடன் மேற்கொள்ளப்படும் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்–II–ன்கீழ் 6 பணிகள் நடைபெற்று வருகின்றன. இவற்றுள் 2 பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன. மீதியிருக்கும் 4 பணிகளும் 2023–2024 நிதியாண்டிற்குள் முடிக்கப்படும்.

சென்னை–கன்னியாகுமரி தொழிற்தடத் திட்டம் என்ற ஒரு திட்டம். அந்தத் திட்டத்தில் 72.43 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகளை இருவழித் தடத்திலிருந்து நான்கு வழித் தடமாகவும், 516.57 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகளை இருவழித் தடத்திலிருந்து கடினப் புருவங்களோடு, இருவழித் தடமாகவும் மேம்படுத்த 16 மாநில நெடுஞ்சாலைகளை எடுத்திருக்கிறோம். அந்தத் திட்டத்தின்கீழ் 2–வது கட்டமாக 376 கிலோமீட்டருக்கு 11 மாநில நெடுஞ்சாலைகளை மேம்படுத்துவது என்ற அடிப்படையில் திட்ட அறிக்கைகளையெல்லாம் இந்தத் துறையின் சார்பாக தயார் செய்துகொண்டிருக்கிறோம்.

அதேபோன்று, இரயில்வே மேம்பாலங்கள். இரயில்வே கடவுப் பகுதியில் அடிக்கடி கதவுகள் மூடப்படுவதால் ஏற்படும் போக்குவரத்து நெரிசல்கள், விபத்துகள் மற்றும் காலதாமதங்களைத் தடுக்க உரிய இடங்களில் இரயில்வே மேம்பாலம் அல்லது கீழ்ப்பாலம் அமைப்பது என்கின்ற அடிப்படையில், அரசு மேற்கொண்ட துரித நடவடிக்கையால் இந்த 2 ஆண்டுக்காலத்தில் 2021–2022–ல் 7 பாலங்களும், 2022–2023–ல் 3 பாலங்களும், ஆக மொத்தம் 10 இரயில்வே மேம்பாலங்களுக்கான பணிகள் நிறைவு செய்யப்பட்டு, இன்றைக்குப் பயன்பாட்டிற்கு வந்திருக்கின்றன.

அதேநேரத்தில் தொடர்ச்சியாக, 2023 ஏப்ரல் மாதத்திற்குள் 4 இரயில்வே மேம்பாலங்கள் கட்டி முடிக்கப்படும். 24–க்கும் மேற்பட்ட இத்தகைய பாலங்களெல்லாம், நிலம் எடுக்காதது போன்ற பல்வேறு காரணங்களால் நிலுவையில் இருந்தன. இந்த 24 பாலங்களையும் விரைந்து செய்ய வேண்டுமென்று, துறையின் அதிகாரிகளுடன் ஆய்வுக் கூட்டம் நடத்தி, அவ்வப்போது நானும், துறையின் செயலாளரும் ஊக்கப்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஆக, இந்த இரயில்வே பாலப் பணி எங்கெல்லாம் நின்றதோ, அங்கெல்லாம் விரைவில் அந்தப் பாலங்கள் கட்டித்தரப்படும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தேசிய நெடுஞ்சாலை அலகு.தொட்டியம் முதல் நாமக்கல் வரை, திண்டுக்கல் முதல் ஒட்டன்சத்திரம் வரை, கரூர் முதல் பல்லடம் வரை என தேசிய நெடுஞ்சாலைகளுக்கான சாலை மேம்பாட்டு பணிகளை இந்த நிதியாண்டிலேயே நிறைவேற்றுவதற்கான பணிகளை மேற்கொண்டிருக்கிறோம். மேலும், திருவையாறு, குடியாத்தம், பாகலூர், மதுரை, அச்சம்பத்து, விராட்டிப்பத்து ஆகிய புறவழிச் சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

இன்னும் சொல்லப்போனால், நம்முடைய மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள், நான் திருச்செந்தூருக்கு ஆய்வுக் கூட்டத்திற்குச் சென்றபோது, தமிழ்நாட்டில் இருக்கின்றவர்களெல்லாம் திருச்செந்தூருக்கு வருகிறார்கள். ஏனென்றால் தமிழ்க் கடவுள் முருகன் என்பது இந்து மக்களின் நம்பிக்கை. அந்த நம்பிக்கையின் அடிப்படையில், திருச்செந்தூருக்கு வரும் பக்தர்களின் வசதிக்காக புறவழிச் சாலை வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்து பேசியவுடனேயே, 'முதன்முதலில் அதைச் செய்யுங்கள்' என்று ஆணையிட்டதன் அடிப்படையில், இன்றைக்கு தூத்துக்குடி–திருச்செந்தூர்–கன்னியாகுமரி சாலை நில எடுப்புப் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது.

சென்னை துறைமுகம் முதல் மதுரவாயல் சாலை, ஏற்கெனவே இந்தச் சட்டமன்றத்தில் இதுகுறித்து நாங்கள் சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, திரு. மன்மோகன்சிங் அவர்கள் அன்றைக்குப் பிரதமராக இருந்தார். அப்போது, அந்தத் திட்டத்திற்கு முதன்முதலில் அடிக்கல் நாட்டப்பட்டது. அது பல்வேறு காரணங்களால் நடைபெறாமல், தடைகள் இருந்தன. மீண்டும் ஆட்சிக்கு வந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், டெல்லிக்குச் சென்று மாண்புமிகு பிரதமரைச் சந்தித்தார்கள். என்னை, ஒரு முறைக்கு 3 முறை, மத்திய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. நிதின் கட்கரி அவர்களைச் சந்திக்கச் சொன்னார்கள். அதனுடைய விளைவாக, அதனுடைய தொடர்ச்சியாக செய்யப்பட்ட முயற்சியின் காரணத்தினால், இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் அந்தப் பணிகளைச் செய்வது என்று முடிவு செய்யப்பட்டது. மத்திய நெடுஞ்சாலைத் துறையின் இணை அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. வி.கே. சிங் அவர்களின் முன்னிலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், துறைமுகம்–மதுரவாயல் 20 கி.மீ. சாலையை, இந்த ஆண்டே தொடங்க வேண்டுமென்று சொன்னதன் அடிப்படையில், தமிழக அரசும், ஒன்றிய அரசும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறையில் ஒப்பந்தங்கள் போட்டு, tender கோரப்பட்டு, அது 4 தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, இந்த ஆண்டே அந்தப் பணியைத் துவங்குவதற்குத் தமிழக அரசின் சார்பாக முழு ஒத்துழைப்பையும் நாங்கள் நல்கிக் கொண்டிருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

2023 ஏப்ரல் 1] [திரு. எ.வ. வேலு]

அதேபோன்று பசுமைச் சாலைகள். சாலை என்று சொன்னால், பசுமை தேவை. ஏனென்றால், அருமை அண்ணன் திரு. ஜி.கே. மணி அவர்களுக்குத் தெரியும். மரத்தை வெட்ட வேண்டுமென்று சொன்னால், எப்போதும் அவர்கள் ஒத்துக்கொள்வதேயில்லை. நானும் அந்த மாவட்டத்தில்தான் இருந்திருக்கிறேன். அதனால்தான் சொல்கிறேன். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஆட்சிக்கு வந்ததும் சொன்னார், சாலைகளை விரிவுபடுத்துவது என்பதை எந்தக் காலத்திலும் தவிர்க்க முடியாது. இனிமேல் சாலையை விரிவுபடுத்தித்தான் ஆக வேண்டும். சாலையை விரிவுபடுத்தாவிட்டால் எப்படி கார் ஓடமுடியும்? சாலையை விரிவுபடுத்தாவிட்டால், உற்பத்தி செய்கின்ற பொருள் எப்படி நகரத்திற்கு வரும்? சாலையை விரிவுபடுத்தவில்லையென்றால், உற்பத்தி செய்கின்ற பொருள்களை துறைமுகத்திற்கு எப்படி கொண்டு வர முடியும், எப்படி வெளிநாட்டிற்கு அனுப்ப முடியும்? அதனால், சாலைகளை விரிவுபடுத்தித்தான் ஆக வேண்டும். அப்படிச் சாலைகளை விரிவுபடுத்துகின்றபோது மரங்களை வெட்ட வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அப்படி மரத்தை வெட்டுகிறபோது, ஒரு மரத்தை வெட்டினால் இனிமேல் நீங்கள் 10 மரக்கன்றுகளை வைக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டதன் விளைவாகத்தான் இந்த ஆண்டு மட்டும் நாங்கள் 1,50,000 மரக்கன்றுகளை நட்டிருக்கிறோம்.

பிற்பகல் 2–25

ஒருமுறை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈஸ்வரன் அவர்கள்கூட ஒரு நிகழ்ச்சிக்கு என்னோடு வந்திருந்தார்கள். நீங்களெல்லாம் ஏற்கெனவே பார்த்திருப்பீர்கள். Nursery–யிலிருந்து வாங்கி 2 அடி உயரமுள்ள கன்றுகளை வைப்பார்கள். Tree guard, கம்பி வலைகள் எல்லாம் அமைப்பார்கள். அப்படியிருந்தாலும், கால்நடைகள் பாவம், அது பசியின் கொடுமையால் அவற்றைத் தின்றுவிட்டுச் சென்றுவிடும். செடிகளை வைத்த இடத்தைப் பார்த்தால், ஒன்றுமே இருக்காது, பட்டுப்போய் நிற்கும். அதனால், இனிமேல் நெடுஞ்சாலைத் துறை மூலமாக நீங்கள் மரங்கள் நட வேண்டுமென்றால், மரக்கன்றுகள் 6 அடி உயரத்திற்கும்மேல்தான் இருக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வாறு ஆணையிட்டதன் விளைவாக, ஆந்திர மாநிலத்திலுள்ள ராஜமுந்திரி பகுதிக்கு அனுப்பி, 6 அடி உயரத்திற்கு மேற்பட்ட

கன்றுகளைத்தான் வாங்கி நடுகிறோம். அதற்குக் காரணம், நம் கண்ணுக்குத் தெரிந்து அவை மரங்களாக வளர்ந்துவிட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருதுகிறார்கள். ஆகவே, அதனடிப்படையில் சாலையோரங்களில் மரக்கன்றுகளை வைப்பதன் மூலமாக பசுமையான ஒரு சூழலை உருவாக்க முடியும். அந்த வகையில் 'அடர் வனம்' திட்டத்தின்கீழ் மரக்கன்றுகள் நடப்பட்டு வருகின்றன என்பதையும் இந்த நேரத்திலே பெருமையாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, சென்னை பெருநகர அலகு. அதன் மூலமாக வேளச்சேரி விஜயநகர சந்திப்பில் இரண்டடுக்கு சாலை மேம்பாடு, மேடவாக்கம் சந்திப்பில், தாம்பரத்திலிருந்து வேளச்சேரிக்குச் செல்லும் இரண்டு வழிச் சாலை, 241 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், 9 சாலை சந்திப்புகளில் மேம்பாலங்கள் அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் 9 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், அவற்றில் 8 பணிகளுக்கு நில எடுப்புப் பணிகள் சுமார் 800 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் நடைபெற்று வருகின்றன. எனவே, சென்னையை மேம்படுத்த வேண்டுமென்பதில் இந்த அரசு மிக அக்கறையோடு இருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மழைக்காலங்களில் ஏற்படுவது மண் சரிவு. மண் சரிவு ஏற்படுவதன் காரணமாகத்தான் பல நேரங்களில் மலைப் பகுதிகளுக்குச் செல்ல முடிவதில்லை. அது ஊட்டியாக இருக்கலாம்; ஏற்காடாக இருக்கலாம்; கொடைக்கானலாக இருக்கலாம்; வால்பாறையாக இருக்கலாம். இத்தகைய பல இடங்களுக்குச் செல்ல முடிவதில்லை. அதற்காக new technology ஒன்றை Delhi I.I.T.–யில் கண்டுபிடித்திருக்கிறார்கள் என்ற செய்தியைக் கேள்விப்பட்டவுடனேயே, என்னுடைய துறையின் செயலாளர் அவர்களை ஆய்வு செய்ய டெல்லிக்கு அனுப்பினேன். பிறகு, அவர்களை அழைத்து வரச் சொல்லி, நானே நேரடியாக ஊட்டிக்கு சென்று, நவீன முறையில் நிலச் சரிவினை எவ்வாறு தடுப்பது என்று ஆய்வு செய்யப்பட்டது. அதன் விளைவாக, hydro seeding என்கிற முறையிலே மேற்பரப்பில் புல்வெளி மற்றும் செடிகள் வளர்க்க நடவடிக்கை எடுப்பது, மேற்பரப்பில் geomembrane–ஐப் பயன்படுத்தி, soil nailing மூலமாக அதை ஊடுருவி மண் சரிவதைத் தடுத்து நிறுத்துகின்ற முறையை பரிட்சார்த்த முறையில் ஊட்டியில் செய்தோம். அதன் பலனைப் பார்ப்பதற்காகச் சென்ற மாதம் நானே ஊட்டிக்கு சென்றேன். அவ்வளவு அதிகமான மழையிலும் அப்பகுதிகளில் சரிவு

ஏற்படவில்லை என்பதை அங்கே போகும்போது பார்க்க முடிந்தது. எனவே, அதுகுறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் ஆலோசனை செய்திருக்கிறோம். அந்த முறையை அனைத்து மலைச் சாலைகளிலும் செயல்படுத்தலாம் என்ற நிலையில் இந்த அரசாங்கம் இருந்துகொண்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே நான் சொன்னேன். பொதுவாக 18 ஆயிரம் கோடி ரூபாய், 19 ஆயிரம் கோடி ரூபாய் என்று நிதியை ஒதுக்குகிறபோது, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், தோழமைக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களான திரு. வேல்முருகன் போன்றவர்கள், எதிர்க்கட்சியில் இருக்கக்கூடிய நமது அன்பு சகோதரர்கள், ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம், 17,000 கோடி ரூபாய், 18,000 கோடி ரூபாய் பணத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தந்துவிட்டார்கள். எனவே, பாலம் கட்டுங்கள், சாலைகள் அமைத்துத் தாருங்கள் என்று கேட்கிறார்கள். அவர்களுக்குக் கொடுத்துத்தான் ஆக வேண்டும். நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது எத்தனை கோரிக்கைகள் அவ்வாறு வைத்திருப்பேன் என்பது எனக்கும் தெரியும். எனவே, கோரிக்கை வைப்பது ஒன்றும் தவறல்ல. அது நியாயமானதுதான். ஆனால், நிலைமை என்னவென்று சொன்னால், ஒவ்வோராண்டும் கணக்கெடுத்துப் பார்க்கிறபோது—கடந்த ஆண்டு, இந்த ஆண்டு என இரண்டு ஆண்டுகளுக்கும் சொல்கிறேன். நாங்கள் ஆட்சி நடத்திய இந்த இரண்டாண்டுகளில், ஏற்கெனவே இருந்த அரசாங்கம் நிர்வாக அனுமதி (administrative sanction) கொடுத்த பல பணிகள் 10%–20% மட்டுமே நடைபெற்றிருந்தன. சில பணிகள் அறிவிக்கப்பட்ட நிலையிலேயே இருந்தன. ஓர் அரசாங்கம் அறிவித்ததை எடுத்து செய்துதான் ஆக வேண்டும். அரசாங்கத்தில் உள்ளவர்கள் அவர்களுக்கு மட்டுமா அறிவித்துக் கொண்டார்கள். அரசாங்கம் என்பது பொதுவானது. அவரவர்கள் ஆட்சிக்கு வரும்போது அறிவிப்புகளைச் செய்கிறோம். அப்படி திட்டங்களைக் கொண்டு வருகிறபோது, அவை தொடர்ந்து நடைபெற்றால்தான் மக்களது பயன்பாட்டிற்கு வரும். அந்த அடிப்படையில் சென்ற அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட பணிகளின் மதிப்பீடு 42,844 கோடி ரூபாய். இந்த இரண்டாண்டுகளில் மட்டும் செலவிடப்பட்ட தொகை—பழைய பணிகளுக்கு நாங்கள் என்ன கொடுத்திருக்கிறோம் என்றால், இந்த இரண்டாண்டுகளில் மட்டும்—சென்ற அரசாங்கம்

கொடுத்த 12,677 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகளை இந்த அரசாங்கம் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது அரசாங்கத்தில் இந்தத் துறையைப் பொறுத்தவரையில், இந்த இரண்டாண்டுக் காலங்களில் 7,190 கோடி ரூபாய்க்குத்தான் பணிகளை எடுத்து செய்து கொண்டிருக்கிறோம். நாங்கள் ஏற்கெனவே செய்ததெல்லாம், நமது அருமை நண்பர்கள் ஆட்சி நடத்தியபோது ஆரம்பித்த திட்டங்களைத் தொடர்ந்து செய்வதற்குத்தான் அதிகமான நிதி செலவாகிறது. எனவே, இந்த அரசாங்கத்தால், நிர்வாகத்தின் சார்பாக ஒப்படைக்கும் பணிகளை விரைந்து செய்ய வேண்டுமென்ற எண்ணம்தான் எங்களுக்கு இருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 2–30

அதேநேரத்தில் இன்னொரு செய்தியையும் நாங்கள் சொல்ல விரும்புகிறோம். மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள் பகைவருக்கும் அருளுகிற பண்புள்ளவர்; வள்ளலார் போன்றவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர். இந்தத் தொகுதி, அந்தத் தொகுதி என்றெல்லாம் பார்க்கச் சொல்வதே இல்லை. ஒரே ஒரு எடுத்துக்காட்டு; இந்த இரண்டாண்டு காலத்தில் நாங்கள் முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டம் என்ற திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொன்னேன். நான் வருகிறபோது ஒரு கணக்கெடுத்தேன். முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற 4 வழிச் சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் 250 கிலோ மீட்டர் நீளச் சாலையில் 111 கிலோ மீட்டர், கிட்டத்தட்ட 44 சதவிகிதப் பணிகள் எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர் தொகுதியில் நடைபெறுகின்றன என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதனால் எங்களுக்கு ஒன்றும் பகை எல்லாம் கிடையாது. சாலைகளைப் பொறுத்தவரைக்கும் அனைவரும் பயன்படுத்துவதுதான். அதில் ஒன்றும் மாற்றமில்லை. எனவே, அந்த அடிப்படையிலே இன்றைக்கு எதிர்க்கட்சி என்றோ, ஆளுங்கட்சி என்றோ பார்க்காமல் இந்தத் துறை மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதற்கு ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதற்காக இந்த உதாரணத்தை, இந்தப் புள்ளிவிவரத்தை நான் தந்தேன். வேறு ஒன்றும் அல்ல.

2023 ஏப்ரல் 1] [திரு. எ.வ. வேலு]

இந்தத் துறையிலே முதன்முறையாக உள் தணிக்கை முறை அதாவது Internal audit *என்கிற முறையை இந்த ஆண்டு நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். பொதுவாக நெடுஞ்சாலைத் துறை என்று சொன்னால், அதன்மீது நம்மையும் அறியாமல் ஒரு* suspense *இருக்கும். அப்படியல்ல; இனிமேல் நெடுஞ்சாலை துறையைப் பொறுத்தவரைக்கும் எந்த அலுவலகத்திற்குப்போய் பார்த்தாலும்,* record *எல்லாம்* correct *ஆக இருக்கும். பல* records *இருக்கின்றன. உங்களுக்கு எல்லாம் தெரியும்;* M-Book *இருக்கிறது;* Agreement *இருக்கிறது. இப்படிப் பல கோப்புகளெல்லாம் உண்டு. அவற்றையெல்லாம் சீராக வைத்துக்கொள்ள வேண்டும். அதேநேரத்தில் சாலைகளெல்லாம் முறையாகப் போடப்பட்டிருக்கின்றனவா என்பதை—நான் ஏற்கெனவே சொன்னேன். ஏறத்தாழ 66,000 கிலோ மீட்டர் சாலைகளைத் தமிழக அரசு பராமரிக்கிறதென்று சொன்னால்,—அமைச்சராக இருக்கிற நானே 66,000 கிலோ மீட்டர் சாலைகளைப் போய் பார்த்தேன் என்று சொல்ல முடியுமா அல்லது எங்களுடைய அமைச்சரவையைச் சார்ந்த சக அமைச்சர்கள் அந்தந்த மாவட்டத்திலே பார்ப்பதற்கு வாய்ப்புண்டா? அதனால், இதற்கு* Internal audit *போட வேண்டுமென்ற ஒரு முறையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னிடத்திலே சொன்னதன் அடிப்படையிலே,* Internal audit *முறையைக் கொண்டு வந்திருக்கிறோம்.*

எப்படியென்று சொன்னால், மார்ச் மாதத்துடன் financial year *முடிந்துவிடுகிறது. ஏப்ரல் மாதத்தில் கணக்குப் பார்த்துவிட்டு, மே மாதம் ஒன்றாம் தேதியிலிருந்து, மே மாதம் 30 ஆம் தேதி வரைக்கும் ஒரு கண்காணிப்புப் பொறியாளருடைய தலைமையிலே 21 இடங்களிலே 21 குழுக்கள் அமைத்து ஒரு மாதக் காலம் ஆய்வு செய்கின்றார்கள்.* M-Book*-ல் அவருக்கு சந்தேகம் வந்துவிட்டதென்று சொன்னால், அந்த* Superintending Engineer *நேரடியாக அந்த இடத்திற்கே போய்* M-Book*-ம், சாலையும் சரியாக இருக்கிறதா என்று பார்க்கலாம். இதை ஏன் நான் சொல்கிறேன் என்று சொன்னால், அப்படி எங்காவது உங்களுக்கு சந்தேகம் இருக்குமென்று சொன்னால், அந்தப் பகுதியில் இருக்கிற அந்தக் கண்காணிப்புப் பொறியாளருக்கு சட்டமன்ற உறுப்பினர் ஒரு கடிதம் மட்டும் கொடுத்தால் போதும். அதை தரமான சாலையாக ஆக்க வேண்டுமென்பதுதான் மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களுடைய ஆணை.*

நான் செல்கிற இடங்களிலெல்லாம் உங்களுக்கெல்லாம் தெரியும். எந்த இடத்திற்கு நான் சென்றாலும் பத்திரிகை நண்பர்களெல்லாம் கேட்பார்கள்; இப்போது எங்கள் பகுதியில் வந்து துரப்பணம் (drill) போடப்போகிறீர்களா என்று கேட்பார்கள். ஏனென்றால், BC எவ்வளவு போட்டிருக்கிறார்கள்; WMA எவ்வளவு போட்டிருக்கிறார்கள், என்பதைக் கணக்கெடுப்பதற்காகத்தான் என்னுடைய காரிலே துரப்பணம் மெஷினை வைத்திருக்கிறேன்; testing machine எல்லாம் வைத்திருக்கிறேன். தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் சொன்ன அடிப்படையிலே உள் தணிக்கை முறை என்பதைப் புதியதாக நாங்கள் இந்தத் துறையிலே, அதுவும் சீரான நிர்வாகம், வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில்தான், நாங்கள் செய்திருக்கிறோம் என்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, தமிழ்நாடு கடல்சார் வாரியம் என்பது இத்துறையிலே இருக்கிறது. கடலூர் துறைமுகத்தில் இந்த நிதியாண்டிலே (2023–2024-ல்) தனியார் முன்னெடுப்பு, நடுத்தரக் கப்பல்மூலம் சரக்குகளைக் கையாள்வதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி சிறுதுறைமுகம் தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தினால் புதிதாக அமைக்கப்பட்டு வரும் அனல் மின் நிலையத்திற்குத் தேவையான நிலக்கரியை நடுத்தர மற்றும் பெரிய கப்பல்மூலமாகக் கையாளுவதற்காக அறிவிக்கப்பட்டது. கட்டுமானப் பணிகளில் 83 சதவிகிதப் பணிகள் முடிவு பெற்றிருக்கிறது. டிசம்பர் 2023-க்குள் அனைத்துப் பணிகளும் முடிவடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேநேரத்திலே, கன்னியாகுமரி சிறுதுறைமுகத்திலே விவேகானந்தர் நினைவுப் பாறையில் அமைந்துள்ள படகுத் துறையில் சுமார் 100 மீட்டர் நீளத்திற்கு படகணையும் மேடை அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், அய்யன் திருவள்ளுவர் சிலை பாறையையும், விவேகானந்தர் நினைவுப் பாறையையும் இணைக்கிற கடல்சார் பாதசாரிகள் பாதைப் பணிகளுக்கெல்லாம் ஒப்பந்தம் கோரப்பட்டு, ஒப்பந்ததாரர்கள் எடுக்கப்பட்டு, அதைச் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்து கொண்டிருக்கிறோம். எனவே, அந்த அடிப்படையிலே அந்தப் பணிகளும் இன்றைக்கு நடைபெறுகின்றன. அந்தப் பணிக்குத்தான் ஒன்றிய அரசாங்கம்

2023 ஏப்ரல் 1] [திரு. எ.வ. வேலு]

'Sagar Mala' திட்டத்தின் மூலமாக 100 சதவிகித நிதியினைத் தந்தது. அதைத்தான் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கூடச் சொன்னார்கள். 'Sagar Mala' திட்டம் என்னவாயிற்று என்று கேட்டார். அந்தப் பணிகளெல்லாம் தொடங்கி நடைபெறுகின்ற சூழ்நிலை இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது.

பிற்பகல் 2–35

அதைப்போன்று, பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்; இந்த பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் என்பது மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்டது. அண்ணாவின் பெயரிலே, காமராஜரின் பெயரிலே, பெரியாரின் பெயரிலே கப்பல்கள் விடப்பட்டன. அவையெல்லாம் பழுதடைந்த காரணத்தினால், சென்ற அரசாங்கம் அவற்றையெல்லாம் விற்றுவிட்டது. தற்போது, கப்பல்கள் இல்லை. இருந்தாலும், தொடர்ந்து அந்த Corporation-ஐ நடத்த வேண்டுமென்ற அடிப்படையில், தனியார் கப்பல்களை எடுத்து, அவற்றை மின் துறைக்கு நிலக்கரி அனுப்புகின்ற பணிகளில் இன்றைக்கு நாங்கள் ஈடுபடுத்தியிருக்கிறோம். எனவே, அந்த அடிப்படையில் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருந்த Poompuhar Shipping Corporation, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில் 2022–2023–ல் 2 கோடி ரூபாய் இலாபத்தை ஈட்டியிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்கிற மகிழ்ச்சியான செய்தியையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார், எல்லாம் செய்து தருவார்கள்; இன்னும் சாலைகள் குறித்தே உரையாற்றி முடிக்கவில்லை. இப்போது துறைமுகம் குறித்து உரையாற்றிக் கொண்டிருக்கிறார். இனிமேல், கட்டடங்கள் பற்றி உரையாற்ற வேண்டியிருக்கிறது. எல்லாமும் அதில் வரும். (குறுக்கீடு) நெடுஞ்சாலைகள் குறித்து உரையாற்றியே முடிக்கவில்லை. இன்னும் கட்டடங்கள் குறித்து உரையாற்றவிருக்கிறார். எல்லாம் உங்களுக்கு வரும். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர், சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பர், 'யாரோடும் பகை இல்லை என்ற பின், போர் ஒடுங்கும், புகழ் ஓங்கும்' என்று சொல்லியிருக்கிறார். கம்பர்,

'யாரொடும் பகை கொள்ளலன் என்ற பின்,
போர் ஒடுங்கும், புகழ் ஒடுங்காது'

என்று சொல்லியிருக்கிறார். சித்தாந்த ரீதியாக எதிர்கருத்து உள்ளவர்தான் எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். சித்தாந்த ரீதியாக எதிர்கருத்து உள்ளவர்தான் எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர். ஆனால், தனிப்பட்ட முறையில் யாரிடத்திலும் பகையில்லாத ஒரு முதலமைச்சர் தமிழ்நாட்டை ஆண்டு கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைத்தான் கம்பர் அப்படி விளக்குகிறார்.

திருமூலரின் திருமந்திரத்தில் ஒன்றை நான் படித்துப் பார்த்தேன். அதில்,

'உள்ளத் தொருவனை உள்ளுறு சோதியை
உள்ளம்விட் டோரடி நீங்கா ஒருவனை'

என்று குறிப்பிட்டிருக்கிறார். அதற்கு என்ன பொருள் என்று சொன்னால், உலகெங்கும் வாழும் தமிழர்களின் நெஞ்சில் தன்னுடைய செயல்பாட்டால் நீக்கமற நிறைந்திருப்பவர் நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் என்பதைத்தான் (மேசையைத் தட்டும் ஒலி) திருமூலர் அப்படிச் சொல்கிறார். குமரகுருபரர் நீதிநெறி விளக்கத்தில்,

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்-செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்."

என்று சொன்னார். இப்பாடல் கூற்று, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாம் எண்ணி, எண்ணி வடிக்கும் திட்டங்களெல்லாம் கடைக்கோடி மனிதர்களுக்கும் செம்மையாகச் சென்றடைய வேண்டும் என்பதிலே குறியாக இருப்பவர். உடல் சோர்வு, பசி துன்பம், உறக்கம் எதையும் கருதாமல் தமிழ், தமிழ்மொழி, தமிழர், தமிழ்நாடு என்று தினமும் 24 மணி நேரமும் தூங்காமல் உழைத்துக் கொண்டிருக்கிற முதலமைச்சரை (மேசையைத் தட்டும் ஒலி) நொடிக்கு நொடி நாங்கள் பார்த்து பூரித்துப் போயிருக்கிறோம். நாங்கள் மட்டுமல்ல அருமை நண்பர்களே, இப்படி நொடிக்கு நொடி முன்னேற கருதி உழைத்துத்தான்—ஆங்கிலத்தில், All roads lead to Rome என்ற ஒரு

பழமொழி உண்டு. அதாவது, 'எல்லா சாலைகளும் ரோம் நகரை நோக்கிச் செல்கின்றன' என்பார்கள்.—இன்றைக்கு, இந்தியாவில் இருக்கிற அனைத்து மாநிலங்களும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைப் பின்பற்றி தங்களுடைய திட்டங்களை உருவாக்கிக்கொள்ளலாம் (மேசையைத் தட்டும் ஒலி) என்று கருதுகின்றன. அப்படிப்பட்ட ஒரு முதலமைச்சர் அவர்களை நாம் பெற்றிருக்கிறோம். அதனால்தான், ஒன்றிய அரசின் NITI Aayog அமைப்பினுடைய பொருளாதார நிபுணர்கள் அடங்கிய குழு அளித்த அறிக்கையின் அடிப்படையில் ஆய்வை மேற்கொண்டு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பற்றி 26-12-2022-ல் India Today பத்திரிகை எழுதியிருக்கிறது; 'இப்படி ஒரு சிறப்பான முதலமைச்சரை நாம் கண்டதில்லை' என்று அந்தப் பத்திரிகை பாராட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

திராவிட கட்டடக் கலை தமிழகத்தினுடைய இணையற்ற பெருமை. இப்போது பொதுப் பணித் துறைக்கு வருகிறேன். ஏற்கெனவே நெடுஞ்சாலைகள் துறை பற்றி நான் உரை நிகழ்த்திவிட்டேன். கால நேரம் எனக்கு புரிகிறது. ஆனாலும், விரைந்து உரையை முடிக்க வேண்டுமென்ற எண்ணம்தான் எனக்கு இருக்கிறது. எனவே, அந்த அடிப்படையில் கட்டடக் கலையைப் பற்றி நான் சுருக்கமாக என்னுடைய உரையை நிகழ்த்தலாம் என்று கருதுகிறேன்.

பிற்பகல் 2-40

நைல் நதிக் கரையினுடைய நாகரிகத்தை 'நைல் நதிக் கரை நாகரிகம்' என்று சொல்கிறோம்; மெசபடோமியா நாகரிகம் என்கிறோம்; கிரேக்க நாகரிகம் என்கிறோம்; ரோமானிய நாகரிகம் என்கிறோம்; ஆரிய நாகரிகம் என்கிறோம்; நம்முடைய திராவிட நாகரிகம் என்று கட்டடக் கலை வடிவிலே இப்படி நாகரிகத்தைப் பிரிக்கிறார்கள். அப்படி பழமையான பல நாகரிகங்கள் உலகில் இருந்திருக்கின்றன. இந்த அனைத்து நாகரிகங்களிலும் கட்டடக் கலைகள் வளர்ந்திருக்கின்றன. ஆனால், இந்தப் பழமையான நாகரிகங்களால் வளர்க்கப்பட்ட கட்டடங்கள் ஏதாவது கண்ணுக்குத் தெரிகிறதா என்று சொன்னால்,—உலகம் சுற்றும் வாலிபன் என்று சொன்னால், எங்களுடைய மாண்புமிகு அவை முன்னவர் அவர்களைச் சொல்லலாம். அவர் போகாத நாடே கிடையாது. அவரே சொல்லியிருக்கிறார். எங்கும் போகிறோம்; எல்லாவற்றையும் பார்க்கிறோம், எல்லா நாகரிகங்களையும்

சொன்னோம். ஆனால், கட்டடங்கள்தான் அடையாளத்திற்குத் தெரியவில்லை. அப்படியும் பார்த்தால், 100 ஆண்டு கால, 200 ஆண்டு கால கட்டடங்கள்தான் இருக்கின்றன. ஏனெனில், அவர்தான் பல காலங்களாக பொதுப் பணித் துறைக்கு அமைச்சராக இருந்தவர். கட்டடத்தைப் பற்றி என்னைவிட அதிகமாகத் தெரிந்தவர் அவர். அதனால்தான் சொல்கிறேன். எனவே, வெளிநாடுகளுக்குச் சென்றால், நிலைமை இப்படித்தான் இருக்கின்றது. ஆனால், நமக்கே கண்ணுக்குத் தெரிந்து, இன்றைக்கு திராவிடக் கட்டடக் கலைக்கு அடிகோலாக, அடையாளமாகத் திகழ்வது தஞ்சை பெரிய கோயிலாகும். அந்தக் கட்டடம் ஆயிரம் ஆண்டுகளைக் கடந்திருக்கின்ற கட்டடமாகும். அதில், ஒரு சிறு குறைபாடுகூட இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை. அதிலிருந்து ஒரு சில்லைப் பெயர்க்க முடியவில்லை. அப்படியொரு சிறப்பு வாய்ந்த தஞ்சை பெரிய கோயில் திராவிடக் கட்டடக் கலைக்கு சான்றாக அமைந்துள்ளது. தஞ்சை பெரிய கோயிலின் ஆயிரம் ஆண்டுகள் முடிகின்றபோது, அந்த விழாவைக் கொண்டாடிய பெருமை யாரைச் சேர்ந்தது என்றால், என் தலைவர் கலைஞர் அவர்களுக்குத்தான் அந்தப் பெருமை சேர்ந்தது. அவர் தலைமையில்தான் அதன் ஆயிரமாவது ஆண்டு விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அப்படிப்பட்ட திராவிடக் கட்டடக் கலைக்கு ஒரு சிறப்பம்சமாக தஞ்சை பெரிய கோயில் விளங்கி, இன்று நமக்கு பெருமை தருகிறது. அதுதான் எங்களுக்கெல்லாம் பாடமாக அமைந்திருக்கிறது. நமக்கு பெருமையாக இருக்கிறது.

தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு அரசுத் துறைகள் சார்ந்த 1.56 கோடி சதுர அடி பரப்பளவு கொண்ட 48,500 கட்டடங்களைப் பராமரிக்கின்ற பணி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திராவிட மாடல் அரசினுடைய இந்தப் பொதுப் பணித் துறைக்குத்தான் உண்டு. மீண்டும் சொல்கிறேன். 1.56 கோடி சதுர அடி பரப்பளவு கொண்ட 48,500 கட்டடங்களைப் பராமரிக்கின்ற துறை இந்தப் பொதுப் பணித் துறை.

முன்னோர்களின் பெருமைகளைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்ற பாரம்பரியக் கட்டடங்களை பழமை மாறாமல் புதுப்பிக்கின்ற துறையும் இந்தத் துறைதான். இதில், இன்னொரு பெருமை என்னவென்றால், நாம் இங்கே உட்கார்ந்துகொண்டு ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம்; பேசிக் கொண்டிருக்கிறோம்; சட்டங்களையெல்லாம், திட்டங்களையெல்லாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்; இங்கே ஏ.சி. சரியாக வருகிறதா? பேசுகிற

மைக் சரியாக இயங்குகிறதா? உட்கார்ந்திருக்கிற நாற்காலிகள் சரியாக இருக்கின்றனவா, மேசைகள் சரியாக இருக்கின்றனவா, சாய்மனை சரியாக இருக்கிறதா, டி.வி. சரியாக இயங்குகிறதா, படங்கள் நன்றாகத் துடைக்கப்பட்டிருக்கின்றனவா, பாதைகள் சரியாக இருக்கின்றனவா, வழுக்காமல் இருக்கின்றதா, அழகாக இருக்கின்றதா என்று இந்தச் சட்டமன்றத்தையும் பராமரிக்கின்ற பணி பொதுப் பணித் துறைக்குத்தான் உண்டு என்பதை இந்த நேரத்தில் பெருமையாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுப் பணித் துறை மூலமாக பணிகளை மேற்கொள்ள, சென்ற ஆண்டு 24 துறைகள் சார்பாக பல்வேறு அறிவிப்புகளெல்லாம் வந்தன. ஏனெனில், நெடுஞ்சாலைத் துறை மூலமாக அதிகமான பணம் வராது. அதற்கு, பல்வேறு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தங்களுடைய துறையின் சார்பாக ஆணையிடுவதன் மூலமாக, அந்தப் பணம் பொதுப் பணித் துறைக்கு வருகிறது. ஆகவே, இந்தத் துறை வளர்ச்சி பெற வேண்டும். ஏனென்றால், இந்தத் துறை தனித் துறையாக இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் இதைத் தனித் துறையாக ஆக்கியிருக்கிறார்கள். இந்தத் துறை மேலும் மேலும் வளர்ச்சி பெற வேண்டுமென்றால், இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கு—அவர்களின் துறைகள் சார்பாக கட்டடங்களைக் கட்டுகின்ற பணிக்கு யார் யாரெல்லாம் இதுவரையிலும் பணம் ஒதுக்கினார்களோ, இன்னும் ஒதுக்கவிருக்கிறார்களோ, அந்த அமைச்சர் பெருமக்களுக்கு—பொதுப் பணித் துறையின் சார்பாக நான் என்னுடைய நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அப்படி அறிவிக்கப்பட்ட பணிகளில், இந்த ஆண்டு மட்டும் 3,814 பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன; 810 பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன; மேலும், 644 பணிகள் தொடங்குகின்ற நிலையில் இருக்கின்றன.

கடந்த ஓராண்டில் நிருவாகச் சீர்திருத்தம் என்ற அடிப்படையில், புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட செங்கல்பட்டு, ராணிப்பேட்டை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, திருப்பூர், தென்காசி, சிவகங்கை, திருவாரூர் ஆகிய 8 மாவட்டங்களுக்கு செயற்பொறியாளர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. ஏனெனில், புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட மாவட்டங்களில் செயற்பொறியாளர்கள் இல்லாமல் இருந்தார்கள். மாண்புமிகு முதலைமைச்சர் அவர்கள் அனுமதித்து, தற்போது செயற்பொறியாளர்கள் (E.E.) நியமனம்

செய்யப்பட்டுள்ளார்கள். மாவட்டத்திற்கு ஒரு கோட்ட செயற்பொறியாளர் என பணியிடங்கள் உருவாக்கப்பட்டு, தற்போது மேற்பார்வைப் பணிகள் செம்மையாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

தலைமைச் செயலகத்தைப் பொறுத்தவரையில், பொதுப் பணித் துறைக்காக, அரசு சிறப்புச் செயலாளர் பணியிடம் ஒன்றும், சென்னை மண்டலத்திற்கு ஒரு தலைமைப் பொறியாளர் பணியிடமும், சேப்பாக்கம் முதன்மை தலைமைப் பொறியாளர் அலுவலகத்திற்கு மின்னியல் பணிகளுக்காக துணைத் தலைமைப் பொறியாளர் பணியிடமும் உருவாக்கப்பட்டு, பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. 2022–2023 ஆம் ஆண்டு தரவிலை விவரப் பட்டியலில், schedule of rates கட்டுமானத் துறையில் பணிகளை விரைவுபடுத்தும்விதமாக, நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த வேண்டும் என்று நாங்கள் பல பயிலரங்குகளை நடத்திக் கொண்டிருக்கிறோம். அதாவது, seminars நடத்திக் கொண்டிருக்கிறோம். IIT Professors, architecture-ல் யார் யாரெல்லாம் திறமையானவர்களாக இருக்கிறார்களோ, ஓய்வு பெற்றவர்களாக இருந்தாலும் அவர்களையெல்லாம் அழைத்து, seminars நடத்தியிருக்கிறோம். 17–3–2023 அன்றுகூட நடத்தியிருக்கிறோம். புதுமைகளைப் புகுத்த வேண்டும் என்கின்ற அடிப்படையில் தயாரிக்கப்படும் முன்புனைந்த ஆயத்த கட்டமைப்புகள் (Pre-fabricated structures), முன்வார்க்கப்பட்ட கட்டட அமைப்புகள் (Precast structures), அதாவது, ஏற்கெனவே எல்லாவற்றையும் தயார் செய்து கொண்டு வந்து அமைப்பது; ஏனென்றால் தற்போது உறுதித் தன்மை நிறைய இருக்கிறது. ஆகையால் பணிகளை சீக்கிரம் செய்ய முடியும். அந்தப் பணிகளுக்காகவும், பொதுப் பணித் துறையின் மூலமாக கட்டடக் கலைஞர்கள் பயன்பெறும் விதமாகவும், தனியார் மற்றும் கல்வி நிபுணர்களை அழைத்து தற்போது seminars நடத்திக் கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட பணிகளை இன்றைக்கு சிறப்பாக இந்தத் துறை செய்து கொண்டிருக்கிறது.

பிற்பகல் 2–45

2022–2023 ஆம் ஆண்டின் அறிவிப்புகள்: கடந்த ஆண்டு மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்ட 23 பணிகளுக்கு அரசாணைகள் பெறப்பட்டு, பணிகள் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நான் 23 பணிகளையும் சொல்லவில்லை;

2023 ஏப்ரல் 1] [திரு. எ.வ. வேலு]

காலத்தையும் நேரத்தையும் கருத்தில்கொண்டு, இரண்டே இரண்டை மட்டும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சைதாப்பேட்டை, தாடண்டர் நகர் அரசு அலுவலர்களுக்குத் தேவையான 190 'C' வகை குடியிருப்புக் கட்டடம் கட்டப்பட்டுக்கொண்டிருக்கிறது. பொதுப் பணித் துறையில் காலியாகவுள்ள 308 உதவிப் பொறியாளர்கள் பணியிடங்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக நிரப்ப பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனது அருமை நண்பர்களே, உங்கள் அனைவருக்கும் தெரியும். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பதில் சொல்ல விடுங்கள். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர், பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 44-வது செஸ் ஒலிம்பியாட் போட்டி என்பது உலகளாவிய போட்டி. இது இந்தியாவில் தலைமையகத்தில் எங்கோ நடக்க வேண்டிய ஒரு chess competition. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முயற்சியால் அதனை சென்னை நகரத்திற்குக் கொண்டு வந்தார்கள். தலைமைச் செயலாளர் அவர்கள், துறைச் செயலாளர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய செயலாளர்கள் ஆகியோர் உட்கார்ந்து, இந்தப் போட்டி உலகத் தரம் வாய்ந்ததாக இருக்கிறது; இதனை எப்படி நடத்துவது; சாத்தியக்கூறு இருக்கிறதா, நடத்த முடியுமா, என்று ஆய்வுக் கூட்டமெல்லாம் மேற்கொண்டார்கள். அதிலே எனக்கு ஒன்று நினைவுக்கு வந்தது. அந்த ஆய்வுக் கூட்டத்திற்கு பின்னால் ஒன்றை யோசித்துப் பார்த்தேன்.

புறநானூற்றில் ஒரு பாடல் இருக்கிறது.

'நீர் மிகின், சிறையும் இல்லை; தீ மிகின்,
மன் உயிர் நிழற்றும் நிழலும் இல்லை;
வளி மிகின், வலியும் இல்லை; ஒளி மிக்கு
அவற்று ஓர் அன்ன; சினப் போர் வழுதி,
'தண் தமிழ் பொது' எனப் பொறாஅன்,'

என்று புறநானூற்றில் பாண்டியன் மாறனைப் பற்றி ஒரு பாடல் வருகிறது. அதனுடைய பொருள் என்னவென்று சொன்னால்,

வெள்ளம் பெருக்கெடுத்தாலும் அதனைத் தடுக்கும் ஆற்றல் யாருக்கும் இல்லை; வெள்ளம் பெருக்கெடுத்தாலும் அதனைத் தடுக்கும் ஆற்றல் யாருக்கும் இல்லை; தீ பரவினால் அதன் வேகத்தைத் தடுப்பதற்கு இயலாது; காற்று, புயல் வீசினால் அதன் ஆற்றலைக் குறைக்க யாராலும் முடியாது. வெள்ளம், தீ, காற்று ஆகிய ஆற்றல்களை எப்படி தடுக்க முடியாதோ, அதைப்போல பாண்டியன் மாறன் வழுதியினுடைய பேராற்றலையும், அவனுடைய உந்து சக்தியினையும் யாராலும் தடுக்க முடியாது என்பதுதான் இந்தப் பாடலினுடைய பொருள்.

அதற்கொப்ப ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. அதற்கொப்ப ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது அருமை நண்பர்களே, மாமல்லபுரத்தில் 44–வது சர்வதேச Chess Olympiad நிகழ்வு என்பது 28–7–2022 முதல் 9–8–2022 வரை நடைபெற்றது. உலகம் முழுவதுமுள்ள 186 நாடுகளைச் சேர்ந்த 1,000–க்கும் மேற்பட்ட வீரர்கள், வீராங்கனைகள் அதில் கலந்துகொண்டார்கள். இந்தச் சதுரங்க போட்டியில், பொதுப் பணித் துறைக்காக இட்ட பணிகள் என்னவென்று சொன்னால், திறந்தவெளி போட்டி அரங்கத்தை அமைப்பது, பார்வையாளர்கள் அரங்கத்தை அமைப்பது, வெளிநாட்டு போட்டியாளர்களை வரவேற்பது, பாதுகாப்பு சோதனை மையங்களை அமைப்பது, மின் வசதிகள்–மின்சாரம் இல்லாவிடில் generator வைப்பது, ஓய்வறைகள் அமைப்பது போன்ற பல்வேறு பணிகளை பொதுப் பணித் துறையிடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்படைத்தார்கள். ஒப்படைத்ததோடு மட்டுமல்ல, இந்த நிகழ்வு சிறப்பாக நடைபெற வேண்டும்; இந்தப் பணி சிறப்பாக நடைபெற வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு குழுவை அமைத்தார். அந்தக் குழுவிலே பொதுப் பணித் துறையின் அமைச்சராக இருக்கக்கூடிய அடியேனையும் நியமித்தார். Visa தொடர்பான விஷயங்களெல்லாம் வரும் என்பதற்காக, முன்னாள் அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர் தம்பி திரு. ராசா அவர்களையும் அதில் குழு உறுப்பினராக நியமித்தார். அன்றைக்கு விளையாட்டுத் துறை அமைச்சராக இருந்த என்னுடைய அருமைச் சகோதரர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்களையும், அதேபோன்று சுற்றுலாத் துறை அமைச்சராக இருந்த தம்பி டாக்டர் மா. மதிவேந்தன் அவர்களையும், அதோடுமட்டுமல்ல, அன்றைக்கு சட்டமன்ற

2023 ஏப்ரல் 1] [திரு. எ.வ. வேலு]

உறுப்பினராக, இன்றைக்கு மாண்புமிகு அமைச்சராக இருக்கிற தம்பி திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களையும் அதில் இடம் பெறச் செய்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–50

இந்த 5 பேர் கொண்ட குழு, எனக்குத் தெரிந்து, குறைந்தது 10, 15 முறை நாங்கள் கூடி பேசியிருப்போம். இதில் விளையாட்டுத் துறையின் செயலாளர் என்ற முறையில் செல்வி அபூர்வா, IAS அவர்களும் இடம் பெற்றிருந்தார்கள். அவ்வப்போது கூட்டம் நடத்திக் கொண்டேயிருப்போம். மூன்று மணி, மூன்றரை மணி நேரம் கூட்டம் நடைபெறும்; ஏனென்று சொன்னால், இது உலகளாவிய நிகழ்ச்சி; அதற்குரிய இலட்சினை, அடையாளம் எப்படி உருவாக்குவது? விளம்பரம் எப்படி செய்வது? இங்கே செஸ் போட்டி குறித்து எத்தனை பேருக்குத் தெரிந்திருக்கும்? பணக்காரர்கள் விளையாடிக் கொண்டிருக்கிற ஒரு விளையாட்டாக இருந்தது. பணக்காரர்கள் விளையாட்டு என்றே இதற்குப் பெயர். கிராமத்தில் இருப்பவர்கள், தமிழ்நாட்டின் கோடியிலிருப்பவர்களெல்லாம் எப்படி இங்கே வருவது? எப்படி மக்களை ஈர்ப்பது? மக்களை ஈர்ப்பதோடு மட்டுமல்ல, உலகத் தரம் வாய்ந்த இந்த நிகழ்ச்சியை எப்படி ஒருங்கிணைப்பது? எல்லா நாட்டு விளையாட்டு வீரர்களையும் எப்படி ஒருங்கிணைப்பது? அதுவும், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் கலந்துகொள்கின்ற நிகழ்ச்சியாயிற்றே! அந்தத் தொடக்க விழா நிகழ்ச்சியை எப்படி நடத்துவது? நிறைவு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்துகொள்கிறாரே, அதை எப்படி நடத்துவது? இப்படிப்பட்ட பல்வேறு கூறுகள் குறித்து இந்த ஐந்து நபர்கள் கொண்ட குழு தினமும் பேசிக் கொண்டேயிருப்போம். அவரவர்கள் ஒரு கருத்தைச் சொல்லிக் கொண்டேயிருப்போம். அனைவரும் குறிப்பெடுப்பார்கள். எல்லாம் முடிந்துவிடும். மாண்புமிகு தம்பி திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மட்டும்தான் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருப்பார். வாயே திறக்க மாட்டார். இப்போதுகூட சட்டசபைக்கு வந்தால், பேசுகின்ற நேரத்தைத் தவிர வேறு யாரிடமாவது பேசுகிறாரா? அப்படியே அமைதியாக இருப்பார். ஆனால், குறிப்பு மட்டும் எடுத்துக்கொண்டேயிருப்பார்.

கடைசிக் கூட்டம், அந்தக் கூட்டத்தில் முடிவெடுக்க வேண்டுமென்று முடிவு செய்கிறோம். அந்தக் கூட்டத்திற்கு அவர் வரும்போது, ஒரு படத்தைப் போட்டுக் கொண்டு வந்தார்கள்.

ஐந்து நபர்கள் கொண்ட குழுவில் இருக்கும் நான் ஒரு படத்தைப் போட்டு எடுத்துச் சென்றேன். மாண்புமிகு அமைச்சர் டாக்டர் மதிவேந்தன் அவர்களைப் பொறுத்தவரையில், பிரச்சினை இல்லை, “அண்ணா நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள், நீங்களெல்லாம் senior என்று நம்மை அப்படியே விட்டுவிடுவார். அன்றைய மாண்புமிகு விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டால், நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கள் அண்ணன்” என்று சொல்லிவிடுவார். வேறு வழி இல்லை. நானும், நம்முடைய மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களும், திருமதி அபூர்வா அவர்களும்தான் பேசிப் பேசி, முடிவெடுத்தோம். நான் ஒரு படத்தைப் போட்டுக் கொண்டு சென்று காண்பித்தேன். திருமதி அபூர்வா அவர்கள் ஒரு படத்தைப் போட்டு கொண்டு வந்தார்கள். இரண்டும் எடுபடவில்லை. திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் போட்டுக் கொண்டு வந்த படம் என்னவென்று சொன்னால், நாம் விரும்புகின்ற, வேகமாக ஓடுகின்ற குதிரைக்கு சட்டை போட்டு வேட்டி கட்டினால் எப்படி இருக்குமோ அந்தப் படத்தைத்தான் நீங்கள் எல்லோரும் பார்த்திருப்பீர்கள். அதை உருவாக்கியது யார் என்று சொன்னால், அவர்தான் உருவாக்கினார். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், foreign-லிருந்து வருகிறார்கள், தமிழ்நாட்டினுடைய கலாச்சாரங்கள் மாறவே கூடாது; பண்பாடு சிதையாமல் நிகழ்ச்சி இருக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு ஆணையிட்டார்கள். அந்த அடிப்படையிலே, திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு மிகவும் வேண்டிய திரையுலகத்தைச் சார்ந்தவர் நண்பர் திரு. விக்னேஷ் சிவன் என்பவர். அவர் வந்தாரென்றால், நாங்கள் பேசிக் கொண்டேயிருப்போம். அவர், ஒரு பென்சிலை மட்டும் கையில் வைத்துக்கொண்டு தட்டிக் கொண்டிருப்பாரேயொழிய எங்களிடம் பேச மாட்டார். அவர் ஏதாவது பேச வேண்டுமென்றால், திரு. உதயநிதி அவர்களிடம் மட்டும்தான் காதில் விழாத அளவிற்குப் பேசுவார்.

Member-ல் நான்தான் senior; உட்கார்ந்து கொண்டிருப்பேன். ஆனால், திரு. விக்னேஷ் சிவன் என்னிடம் எதுவும் சொல்ல மாட்டார். கடைசியாக என்ன முடிவு செய்தார்களென்றால், நிகழ்ச்சியைச் சிறப்பாக நடத்துவது என்று முடிவு செய்து, அதில் இரண்டாயிரம் நபர்கள் கலந்துகொள்ள வேண்டுமென்று list கொடுத்தார்கள். அதற்கு நான், இரண்டாயிரம் நபர்கள்

கலந்துகொள்ள வேண்டுமென்றால் அரங்கத்திற்கு எங்கே செல்வது? இதெல்லாம் சாத்தியமா என்று கேட்டவுடன், நாங்கள் பார்த்துக்கொள்கிறோம் என்று திரு. உதயநிதி அவர்கள் சொன்னார்கள். திரு. உதயநிதி அவர்கள் என்ன சொன்னார்? நாங்கள் பார்த்துக்கொள்கிறோம் என்று சொன்னார். சரி, நிகழ்ச்சி நடைபெற்றால் சரி. கிராமத்தில் ஒரு பழமொழி உண்டு. என்ன பழமொழி என்றால், 'பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறுவதுபோல' நிகழ்ச்சி success ஆனால் அது நமக்கும்தானே பெயர், நடக்கட்டும் என்று நானும் அதை விட்டுவிட்டேன். அதனுடைய விளைவு என்னவென்று சொன்னால், உங்களுக்கே தெரியும். இந்தியப் பிரதமர் அவர்கள் அன்றையதினம் நிகழ்ச்சி முடிந்தவுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கையைப் பிடித்துக்கொண்டு பரவசப்பட்டுப் பாராட்டினார்கள். இப்படி ஒரு நிகழ்ச்சியை நான் பார்த்ததே இல்லையென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கையைப் பிடித்து அவர் பாராட்டிக் கொண்டிருந்தார். (மேசையைத் தட்டும் ஒலி)

நிகழ்ச்சியின் கடைசியாக எங்களையெல்லாம் அழைத்து பரிசு கொடுத்தார். அந்தக் குழுவில் இருந்த எங்களையெல்லாம் அழைத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மெய் மறந்து, மெச்சி, நெகிழ்ந்து பரிசுகளை வழங்கினார். இதற்கெல்லாம் ஒரே ஒரு காரணம், வேறு ஒன்றும் அல்ல. எங்களுடைய குழுவிலேயிருந்த creator என்று சொல்லப்பட்டிக்கிற அருமைச் சகோதரர் மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்குத்தான் அந்தப் பெரும் பங்கும் சேரும் என்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் சொன்னேன், புறநானூற்றுப் பாடலிலே எப்படி பாண்டியன் மாறன் வழுதியைப்போல, அவருடைய பேராற்றல், உந்து சக்தி வெளிப்பட்ட தன்மை கண்டு நாங்கள் வியந்து போனோம். இதற்கும் மேலாக அந்த ஆய்வுக் கூட்டத்தில் அவருடைய நடைமுறைகளை நான் பார்க்கின்றபோது, உள்ளூர அவருக்கு தலைமைப் பண்பு மறைந்திருக்கிறது என்பதை நான் உணர்ந்து, இந்த நேரத்திலே அவரை நான் பாராட்ட, வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்களுக்கும் பெயர் வந்தது என்பதற்காக துறையின் சார்பாக மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு எங்களுடைய நன்றியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து பாரம்பரியக் கட்டடங்களான தமிழ்நாட்டிலுள்ள கட்டடங்கள் திருச்சி ராணி மங்கம்மாள் அரண்மனை, நாகப்பட்டினத்தில் பழைய நீதிமன்றங்கள், கோயம்புத்தூரில் ஆளுநர் மாளிகை, சென்னை அரசு அச்சகம் போன்ற பல கட்டடங்களை இன்றைக்கு சீர்திருத்திக் கொண்டிருக்கிறோம். முத்திரைப் பதித்த திட்டங்கள் என்ற அடிப்படையிலே தமிழர்களுடைய தனிப் பெரும் தலைவராகத் திகழ்ந்து கொண்டிருக்கின்ற தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களுடைய பெரும் நோக்கால் ‘கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே, வாளோடு முன் தோன்றிய மூத்தக் குடி தமிழ்குடி’ எனப் புகழ் பெற்ற தமிழர்களுடைய அடையாளமாக, 3,000 ஆண்டுகளுக்கும் முற்பட்ட, நாகரிகத்தின் அடையாளமாக இருக்கின்ற சிவகங்கை, கீழடியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய திருக்கரங்களால் கீழடி அருங்காட்சியகம், நம்முடைய அருமைச் சகோதரர் மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு அவர்களுடைய பெரும் முயற்சியால் அங்கே திறக்கப்பட்டது என்பது முத்தாய்ப்பான ஒரு நிகழ்ச்சி. (மேசையைத் தட்டும் ஒலி) அதைவிட தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின் மூலமாக 35 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டிலே, இந்திய திருநாட்டிலே அவருக்கு நிகர் எவரும் இல்லை என்கிற என் தலைவர் கலைஞர் அவர்களுடைய நினைவிடத்தைக் கட்டுகின்ற அந்த வாய்ப்பு இந்தத் துறைக்குக் கிடைத்து, அது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரை மாநகரிலே 114 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே உயர் தொழில்நுட்பத்துடன் கலைஞர் நினைவு நூலகக் கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–55

இன்றைக்கு, Guindy King Institute-ல் ஆயிரம் படுக்கைகள் கொண்ட பன்னோக்கு மருத்துவமனை ஒன்று, 230 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றது. தமிழ்நாடு முழுவதும் 257 கோடி ரூபாயில் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. சி.வி. கணேசன் அவர்களுடைய துறையில், 69 இடங்களில் ஐ.டி.ஐ கட்டடங்கள் கட்டப்பட்டு, புது வகையான நுட்பங்களைப் பயன்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டு, அதற்கான பணிகள் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

தென்னக மக்கள் பெரிதும் விரும்புகிற, பாராட்டுகிற, தமிழர்களுடைய அடையாளமாக இருக்கிற மதுரை அலங்காநல்லூர் அருகே கீழக்கரையில் தமிழர்களுடைய பாரம்பரிய விளையாட்டுக்கு புகழ் சேர்க்கின்ற வகையில், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் சகோதரர் திரு. பி. மூர்த்தி அவர்கள் உறுதுணையாக, என்னோடு இணைந்து, அங்கு ஜல்லிக்கட்டு அரங்கம் 44 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கும் பணி இன்றைக்குத் தொடங்கப்பட்டிருக்கிறது.

திராவிட இயக்கத்தில் முதன்முதலாக ஒரு தலித் அமைச்சரான வரலாறு என்று சொன்னால், M.C. ராஜா அவர்கள்தான் நீதிக் கட்சிக் காலத்தில் தமிழ்நாட்டின் முதல் தலித் அமைச்சராவார். அவருடைய திருப்பெயரில்தான் இன்றைக்கு சைதாப்பேட்டையில் வளாகம் இருக்கிறது. அந்த வளாகத்தில் புதிதாக 45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டடப் பணிகள் தொடங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டோம். (மேசையைத் தட்டும் ஒலி)

நெல்லை மாவட்டம், பாளையங்கோட்டை, மேலப்பாளையத்தில் 33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பொருநை அருங்காட்சியகம் அமைப்பதற்கான பணிகள் இன்றைக்குத் தொடங்கப்படவிருக்கின்றன.

நமக்கெல்லாம் நீதி வழங்கிக் கொண்டிருக்கின்ற நீதிமன்றங்கள். மாண்பமை உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் திரு. சஞ்சய் கிருஷ்ணா கவுல், செல்வி இந்திரா பானர்ஜி ஆகியோர் தலைமையில், 4–9–2022 அன்று 315 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய முன்னிலையில், மாண்பமை உச்ச நீதிமன்ற நீதியரசர் திரு. டி.ஒய். சந்திர சூட் அவர்களுடைய தலைமையில், 25–3–2023 அன்று மதுரை மாவட்ட நீதிமன்ற வளாகத்திலே பன்னடுக்கு கொண்ட கூடுதல் நீதிமன்றக் கட்டடம் 166 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டுகிறபோதுதான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் காணொளிக் காட்சி மூலமாக மயிலாடுதுறை மாவட்ட நீதிமன்றக் கட்டடம், அவர்களுடைய திருக்கரத்தாலே திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அண்ணாவினுடைய பெயரிலே அண்ணா நூற்றாண்டு நூலகம். உங்களுக்கெல்லாம் தெரியும். பத்தாண்டுக் காலம் அந்த நூலகம் பாழ்பட்டுக் கிடந்தது. அதைச் சீர்செய்ய வேண்டுமென்பதற்காக, அண்ணாவின் பெயரில் இருக்கின்ற கட்டடமாயிற்றே என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய எண்ணத்தில் உதித்ததன் விளைவாக, கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தை இன்றைக்கு 38 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

நபார்டு நிதி திட்டத்தின்கீழ், அரசு உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளில் 106 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 2,694 குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள் ஏற்படுத்தப்படுவதுடன், 260 பணிகள் முடிவுற்று, இன்னும் சில பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த மாதத்திலே கூடுமானவரைக்கும் அந்தப் பணிகளும் நடந்து முடிந்துவிடும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நமக்காக, நம்முடைய நாட்டுக்காக உழைத்திருக்கின்ற பல்வேறு பெருமக்கள், அவர்களையெல்லாம் அடையாளப்படுத்துகின்ற வகையில், இன்றைக்கு என்னுடைய தலைவர், கலைஞர் அவர்களுடைய 16 அடி உயர திருவுருவச் சிலையை அண்ணா சாலையில் அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடிவு செய்து, 1 கோடியே 70 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில், 28–5–2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில், இந்திய குடியரசுத் துணைத் தலைவர் மாண்புமிகு திரு. வெங்கையா நாயுடு அவர்கள் திறந்து வைத்தார்கள் என்பது வரலாற்றிலே எழுதப்பட வேண்டிய ஒன்று. அந்தப் புனிதப் பணியை பொதுப் பணித் துறைதான் செய்தது.

வாரணாசியில் பாரதியார் இல்லம் 11–12–2022 அன்று 18 இலட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. கோவில்பட்டியில் கி.ரா. என்று சொல்லப்படுகின்ற திரு. கி. ராஜநாராயணன் அவர்களுடைய சிலை, நினைவு மண்டபம் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய திருக்கரத்தால் திறக்கப்பட்டிருக்கிறது.

கிண்டி, காந்தி மண்டபத்தில் வ.உ.சி. அவர்கள் இழுத்த செக்கு இருக்கிறது. அந்தச் செக்கையும் புதுமைப்படுத்தி, அங்கே மருது பாண்டியர்களுக்கும், 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிலை அமைக்கப்பட்டு, 14–2–2023 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

நம்முடைய திராவிட இயக்கத்தினுடைய உச்சம் அயோத்திதாச பண்டிதர், அவர்களுடைய சிலையும், மணிமண்டபமும் வடசென்னையில் அமைக்கப்படும் என்று விதி 110-ன்கீழ் இதே சட்டமன்றத்தில் அறிவிப்பு செய்யப்பட்டுவிட்டது. மறுநாள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு விமானத்தில் சென்னைக்கு செல்லக்கூடிய ஒரு வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. விமானத்தில் செல்கிறபோது சொன்னார். நேற்று, அயோத்திதாச பண்டிதருக்கு எங்கே நாம் சிலை வைக்க வேண்டுமென்று முடிவு செய்தோம் என்று என்னைக் கேட்டார். விதி 110-ன்கீழ், வட சென்னையில் அமைக்கப்படுமென்று நீங்கள்தான் அறிவித்தீர்கள் என்று நான் சொன்னேன். அதற்கு அவர் உடனே சொன்னார். இல்லை, இல்லை. அவர் வாழ்ந்த பகுதி தென்சென்னைதான். அதோடுமட்டுமல்ல, தமிழ்நாட்டினுடைய தலைவர் பெருமக்களின் மணிமண்டபங்களெல்லாம் கிண்டி பகுதியில்தான் இருக்கின்றன. எனவே, திராவிட இயக்கத்தின் உச்சமாக இருந்தவர் நம்முடைய பண்டிதர் அயோத்திதாசர் அவர்கள். எனவே, அவருடைய மணிமண்டபத்தை காமராஜருக்கு பக்கத்திலே வையுங்கள் என்று ஆணை பிறப்பித்து, இன்றைக்கு அதற்கான பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3-00

சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் சுப்பராயன் அவர்களின் திருவுருவச் சிலை, மகளிர் முன்னேற்றத்திற்காக பாடுபட்ட மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களுக்கு மயிலாடுதுறையில் சிலை, புதுக்கோட்டையில் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அவர்களுக்கு திருவுருவச் சிலை, இப்படியாக சென்னை நுங்கம்பாக்கம் டி.பி.ஐ. வளாகத்திற்கு—எங்களுக்கெல்லாம், சட்டமன்றத்தில் எதிர்க்கட்சியாக இருந்தபோதும் சரி, ஆளும் கட்சியில் நிதியமைச்சராக, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்தபோதும் சரி, இன்னும் சொல்லப்போனால், தொடர்ந்து கல்வித் துறை அமைச்சராக, இன்னும் சொல்லப்போனால், பேராசிரியர் என்று சொன்னாலே அது அவருக்குத்தான் பொருந்தும். எனவே, அந்தப் பேராசிரியரின் திருப்பெயரை, தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள்—கல்வி வளாகத்திற்கு 'பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம்' என்று பெயர் சூட்டி 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பேராசிரியர் அன்பழகன்

நூற்றாண்டு வளைவு அமைக்கின்ற அந்தப் பணி 19–12–2022 அன்று தொடங்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சரின் திருக்கரத்தால் அந்தப் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கின்றன. தொடர்ந்து அவரின் திருவுருவச் சிலை செய்வதற்கு ஆணையிட்டிருக்கிறார்கள். சிலை தயார் செய்யப்பட்டு வந்திருக்கிறது. விரைவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருக்கரத்தால் அது திறக்கப்படும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள நான் விரும்புகிறேன்.

அதேநேரத்தில், மாநிலத்தின் மூலதனச் சொத்து மதிப்பு என்பது வெகுவாக உயர்ந்து வருகிறது. பொதுப் பணித் துறையில் தேவையான சீர்த்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு உரிய ஆய்வக உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, கட்டுமானப் பொருட்கள் பரிசோதிக்கப்பட்டு, நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உரிய தரத்துடன் உறுதியான கட்டடங்கள் கட்டப்பட வேண்டுமென்ற அந்த நிலையிலே, இதன்மூலமாக மாநிலத்தின் மூலதனச் சொத்து மதிப்பு வெகுவாக உயரும் என்ற நம்பிக்கை இந்தத் துறைக்கு இருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நமக்கு நாமே' ஒற்றைச் சொல் மந்திரத்தால் தமிழகம் முழுவதும் சென்று மக்களைச் சந்தித்து, மக்களின் ஆதரவு திரட்டியது ஒரு புதுமை. பூங்கொத்து வேண்டாம், பொன்னாடைகள் வேண்டாம், புத்தகம் வழங்கிடுவீர் என்று சொன்னது ஒரு புதுமை. புத்தகங்களை நூலகங்களுக்கு வாரிக் கொடுத்தது ஒரு புதுமை. ஏனென்றால், சில பேர் புத்தகங்களைக் கொடுக்கமாட்டார்கள். இல்லை, நான் கொடுக்கவே மாட்டேன் என்று சொல்கின்ற ஒரு கெட்டப் பழக்கம் என்னுடைய அண்ணனுக்கு உண்டு. அவரிடம் புத்தகத்தை மட்டும் யாராலும் வாங்கவே முடியாது. ஒவ்வொரு லைப்ரரிக்கும் போவார், ஒவ்வொரு exhibition–க்கும் போவார். அவரோடு சேர்ந்து எனக்கும் புத்தகம் படிக்கும் பழக்கம் உண்டு. ஒரு புத்தகம் கூட கொடுக்கமாட்டார். ஆனால், தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் புத்தகத்தை வாரி வழங்கியது ஒரு புதுமை. ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல் காற்று இயங்குவதுபோல, கடிகார முள் சுற்றுவதுபோல, ஓய்வு சிறிதுமின்றி, சுற்றிச் சுற்றி மக்களைக் கண்டு வருவது புதுமை, காத்து வருவதும் புதுமை. ஆட்சிக் கலைக்கு ஓர் அற்புத மகுடமாக, திராவிட மாடல் ஆட்சி எனும் பெயர் தந்தது

ஒரு புதுமை. சமூக நீதி, சமத்துவம், சுய மரியாதை, மொழியுரிமை, இன உரிமை, மாநில சுயாட்சிக் காற்று, எல்லோருக்கும் எல்லாமும் என்பது புதுமையிலும், புதுமை என்று சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த இரண்டு துறைகளும் செம்மைப்படுவதற்கு, இரண்டு துறைகளும் உங்கள் அனைவராலும் பாராட்டப்படுவதற்கு, மக்கள் பாராட்டுவதற்கு இந்தத் துறைக்கு எங்களுக்கு மிகவும் உறுதுணையாக, குறிப்பாக, நெடுஞ்சாலைத் துறைக்கும், பொதுப் பணித் துறைக்கும் உறுதுணையாக இருந்து எனக்கு அவ்வப்போது ஆலோசனைகள், நிருவாகத்தின் சார்பாக ஆணைகளை விரைந்து எங்களுக்கு வழங்குவது, இதுபோன்ற பணிகளிலே எனக்கு உறுதுணையாக இருக்கின்ற தமிழ்நாட்டு அரசினுடைய தலைமைச் செயலாளர், 'சொல்ஏர் உழவர்' முனைவர் இறையன்பு, I.A.S., அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர்கள் அன்பிற்குரிய சிந்தனையாளர் திரு. உதயச்சந்திரன், I.A.S., அவர்களுக்கும், டாக்டர் உமாநாத் I.A.S., அவர்களுக்கும், திரு. சண்முகம் I.A.S., அவர்களுக்கும், அதேபோன்று மாண்புமிகு முதலமைச்சரின் தனிச் செயலாளர் தம்பி திரு. தினேஷ் அவர்களுக்கும், நான் கேட்கின்றபோது நிதியை கூடுதலாகக் கொடுத்துக்கொண்டிருக்கின்ற நிதித் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. முருகானந்தம் I.A.S., அவர்களுக்கும், என் துறையைச் சார்ந்த கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. பிரதீப் யாதவ் I.A.S., அவர்களுக்கும், பொதுப் பணித் துறையின் முதன்மைச் செயலாளர் டாக்டர் மணிவாசன் I.A.S., அவர்களுக்கும், நெடுஞ்சாலைத் துறை திட்ட இயக்குநர் முனைவர் திரு. செல்வராஜ் I.A.S., அவர்களுக்கும், கடல்சார் வாரிய நிருவாக இயக்குநர் திரு. நடராஜன் I.A.S., அவர்களுக்கும்—நெடுஞ்சாலைத் துறைக்கு 10 அலகுகள் இருக்கின்றன. கூப்பிட்டபோதெல்லாம் ஓடோடி பணியாற்றிக் கொண்டிருக்கின்ற பல்வேறு அலகுகளைச் சார்ந்த தலைமைப் பொறியாளர்கள், பொதுப் பணித் துறையைச் சார்ந்த தலைமைப் பொறியாளர்கள், ஏனைய அரசு அலுவலர்கள், பொறியாளர்கள் இத்தனைப் பேரையும் தாண்டி, சாலைகளைச் செப்பனிட வேண்டுமென்று சொன்னால், 24 மணி நேரமும் உழைத்துக்கொண்டிருக்கும் சாலைப் பணியாளர்கள் அத்துணை பேருக்கும் என் துறையின் சார்பாக இந்த நேரத்தில் நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தற்போது துறையின் சார்பாக அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

[திரு. எ.வ. வேலு] [2023 ஏப்ரல் 1

பிற்பகல் 3–05

1. மாண்புமிகு முதலமைச்சரின் பொன்னான திட்டங்களில் ஒன்றான "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" திட்டத்தில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களிடம் பெறப்பட்ட கோரிக்கைகளைச் செயல்படுத்த முதற்கட்டமாக ரூ.1,093 கோடி மதிப்பில் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்

மாண்புமிகு முதலமைச்சரின் பொன்னான திட்டங்களில் ஒன்றான "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" திட்டத்தின்கீழ் ஒரு புறவழிச் சாலை அமைத்தல், 23 சாலைகளை அகலப்படுத்தி மேம்பாடு செய்தல், 5 ஆற்றுப் பாலங்கள், 14 சிறு பாலங்கள் கட்டுதல் மற்றும் 9 இடங்களில் மழைநீர் வடிகால்கள் கட்டுதல் ஆகிய பணிகள் ரூ.1,093 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இடைமறித்துப் பேசுகிறேன் என்று யாரும் தவறாக நினைத்துவிட வேண்டாம். எப்போதும் ஆளுங்கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் என்று சொன்னால், தன்னுடைய தொகுதிக்கு என்னென்ன பணிகள் வேண்டுமென்று குறிப்பிட்டுக் கேட்பதும், தோழமைக் கட்சி நண்பர்களிடத்தில் குறிப்புக் கேட்பது என்பதும்தான் இதுவரைக்கும் வாடிக்கையாக இருந்தது. என்னுடைய பேச்சில் யாருக்கும் பகை இல்லை என்பதற்கு ஒரே ஒரு சான்று, 234 தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களிடத்திலும், உங்கள் தொகுதிக்கு வேண்டிய 10 கோரிக்கைகளைக் கொடுங்கள் என்று சொல்லி, அதை அவர்களிடமிருந்து வாங்கி, அதற்கு முன்னுரிமை அளிக்கின்ற திட்டத்தைத்தான் நான் முதன் முதலாக அறிவித்திருக்கிறேன். அப்படிப்பட்ட ஒரு சிறப்பான மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பெற்றிருக்கின்ற காரணத்தினால்தான், சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுத்த கோரிக்கைகளை எடுத்து ரூ.1,093 கோடி மதிப்பீட்டில் முதலில் பணிகள் துவங்கப்படும்.

2. தொலைதூர சாலைப் பயனாளர்கள் மற்றும் ஓட்டுநர்களுக்கு சுகமான பயண அனுபவத்தை ஏற்படுத்தித் தரும் வகையில் முக்கிய மாநில நெடுஞ்சாலைகளில் 3 இடங்களில், "சாலையோர வசதி மையங்கள்" பொது மற்றும் தனியார் பங்களிப்புமூலம் (PPP) அமைக்கப்படும்

தொலைதூரப் பயணம் மேற்கொள்ளும் பயனாளர்கள் மற்றும் ஓட்டுநர்கள் புத்துணர்வுடன் பயணத்தைத் தொடர்வதற்கு வசதியாக அதிக வாகனப் போக்குவரத்து உள்ள மாநில நெடுஞ்சாலைகளில் "சாலையோர வசதி மையங்கள்" 3 இடங்களில் பொது மற்றும் தனியார் பங்களிப்பு முறையில் அமைக்கப்படும்.

சாலையோர வசதி மையங்களில், பேருந்துகள், கனரக வாகனங்கள் மற்றும் சீருந்துகளுக்கான தனித்தனியே வாகன நிறுத்தும் இடங்கள், ஓட்டுநர்கள் ஓய்வெடுக்கும் அறைகள், முதலுதவி மையம், உணவகம், எரிபொருள் நிலையம், தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் (ATM), கழிப்பிடம் மற்றும் குளியலறை வசதி, சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு பூங்கா, குழந்தைகள் பொழுதுபோக்கு மற்றும் விளையாட்டு அரங்கம், வாகனம் பழுது பார்க்கும் வசதி போன்ற வசதிகள் ஏற்படுத்தி தரப்படும். இத்தகைய "சாலையோர வசதி மையங்கள்" தனியார் பங்களிப்புமூலம் (PPP Model) உருவாக்கப்படும்.

வேகமாகச் செல்கிறார்கள்; ஓய்வில்லை என்ற நிலை இருக்கின்றவர்களுக்கு நெடுஞ்சாலை ஓரமாக 3 இடங்களில் பரீட்சார்த்தமாக அவர்களுக்கு சாலையோர வசதி மையங்கள் அமைப்பது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

3. ஆறுவழிச் சாலைகள்/அதி விரைவுச் சாலைகள் (Express Way) உள்ளிட்ட பல்வேறு சாலை மேம்பாட்டுப் பணிகளை விரைந்து செயல்படுத்தவும், பொது மற்றும் தனியார் பங்களிப்பு (PPP) போன்ற பல்வேறு முறைகளில் பணிகளைச் செயல்படுத்தவும், "தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலை ஆணையம்" (TANSHA) புத்துயிர் ஊட்டப்பட்டு செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்

சாலை உட்கட்டமைப்பு போன்ற பெரிய பணிகளைச் செயல்படுத்துவதில் கால தாமதங்களைத் தவிர்த்து, பணிகளைத் தரமாகவும், விரைவாகவும் செயல்படுத்த, துரிதமாக முடிவுகள் உடனுக்குடன் எடுக்கும் அதிகாரம் படைத்த ஓர் அமைப்பு தேவைப்படுகிறது. இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) போன்று முடிவுகளை காலதாமதமின்றி எடுக்கும் அதிகாரம் படைத்த ஓர் அமைப்பாக "தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலை ஆணையம்" (TANSHA) புத்துயிர் ஊட்டப்பட்டு செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்படும். இந்த அமைப்பானது, பொது மற்றும் தனியார் பங்களிப்பு (PPP) போன்ற பல்வேறு முறைகளில் பணிகளைச் செயல்படுத்தும்.

இதற்கு தேவைப்படும் சட்ட முன்வரைவுகள் தயாரிக்கப்படும். இதை முதல் முதலாக உருவாக்கவிருக்கின்றோம்.

4. விபத்தில்லா மாநிலம் என்ற மாண்புமிகு முதலமைச்சரின் கனவைச் செயல்படுத்த "பள்ளங்களற்ற சாலை" என்ற இலக்கை அடைய வேண்டியுள்ளது. இந்த இலக்கை அடைவதற்கு ஏதுவாக, பொது மக்களின் துணையோடு கண்டறியப்பட்ட சாலை பள்ளங்கள் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் சரி செய்யப்படும். இத்திட்டத்தைத் திறம்பட செயல்படுத்த கைப்பேசி செயலி (Mobile App) உருவாக்கப்படும்

சாலை பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் தடையற்ற போக்குவரத்திற்குப் பள்ளங்களற்ற சாலைகளை மக்களுக்கு வழங்க அரசு உறுதிபூண்டுள்ளது. சாலைகளில் உள்ள பள்ளங்களை உடனுக்குடன் கண்டறிவதில் பொது மக்களின் பங்களிப்பு இன்றியமையாதது. பள்ளங்கள் உள்ள சாலை பகுதிகளைத் தங்கள் கைப்பேசிமூலம் புகைப்படம் எடுத்து செயலியில் (Mobile App) பதிவேற்றம் செய்யும் வகையில் கைப்பேசி செயலி (Mobile App) உருவாக்கப்படும்.

சாலைகளில் உள்ள பள்ளங்கள் மாநில நெடுஞ்சாலைகளில் 24 மணி நேரத்திலும், மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகளில் 72 மணி நேரத்திலும் சரி செய்யப்படும். மேலும், சரி செய்யப்பட்ட புகைப்படம் உடனுக்குடன் கைப்பேசி செயலியில் பதிவேற்றம் செய்யப்படும்.

இவ்வாறாக "பள்ளங்களற்ற சாலைகள்" என்ற இலக்கை நோக்கி நெடுஞ்சாலைத் துறை முன்னேறி செல்லும்.

இந்தத் திட்டத்தைத் திறம்பட செயல்படுத்துவதற்காகக் கைபேசி செயலியை (Mobile App) முதன்முதலாக இந்தத் துறையின் சார்பாக உருவாக்கயிருக்கிறோம். உங்களுக்குத் தெரியும் நெடுஞ்சாலை என்றால், MDR, ODR என்ற வகை இருக்கிறது. அதற்கெல்லாம் time கொடுத்திருக்கிறோம். இனிமேல் நீங்கள் அந்த செயலியில் phone செய்தால் அந்த repair எல்லாம் செய்வதற்கு புதுமையான திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்க சொன்னார். இந்தத் துறையைப் பொறுத்த அளவிற்கு இது ஒரு புதுமையான திட்டம்.

2023 ஏப்ரல் 1] [திரு. எ.வ. வேலு]

5. நெடுஞ்சாலைத் துறை பொறியாளர்களுக்கு நெருக்கமான பயனர் குழு (CUG) முறையில் நிரந்தர அலைபேசி எண் வழங்கப்பட்டு அந்த எண் வாயிலாக எந்தவொரு அலுவலரையும் எளிதில் தொடர்புகொள்ள வழிவகை செய்யப்படும்

நெடுஞ்சாலைத் துறையில் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகில் உள்ள 9 கண்காணிப்புப் பொறியாளர்கள், 55 கோட்டப் பொறியாளர்கள் அவர்களின் கட்டுப்பாட்டில் 197 உதவிக் கோட்டப் பொறியாளர்கள் மற்றும் 296 எண்ணிக்கையிலான உதவிப் பொறியாளர்களால் 66,382 கி.மீ. நீளமுள்ள பல்வேறு வகையான அரசு சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இச்சாலைகள் தொடர்பான அனைத்து விதமான பராமரிப்பு நடவடிக்கைகள், சாலை பாதுகாப்பு மற்றும் சாலைகளில் ஏற்படும் பழுதுகள் தொடர்பாக பொதுமக்கள் மற்றும் பயனாளர்கள் தொடர்புகொள்ளுதல் மற்றும் பேரிடர் காலங்களில் தகவல் பரிமாற்றங்களுக்கு நெடுஞ்சாலைத் துறை பொறியாளர்களைத் தொடர்புகொள்வதற்கு நிரந்தரமான தொலைபேசி எண் தேவைப்படுகிறது. எனவே, நிரந்தரமான தொலைபேசி எண் நெடுஞ்சாலைத் துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகு பொறியாளர்களுக்கு வழங்கப்படும்.

இதன்மூலம், நிரந்தர அலைபேசி எண் வாயிலாக எந்தவொரு அலுவலரையும் எளிதில் தொடர்புகொள்ள வழிவகை செய்யப்படும்.

6. நெடுஞ்சாலைத் துறையின் திட்டப் பணிகளின் முன்னேற்றம் மற்றும் ஆய்வு விவரங்களைக் கணினிமயமாக்குதல்மூலம் எளிதாக கண்காணிக்கப்படும்

*நெடுஞ்சாலைத் துறையில் பல்வேறு அலகுகளின்மூலம் புதிய புறவழிச் சாலைகள் அமைத்தல், பாலங்கள் கட்டுதல், போக்குவரத்திற்கு ஏற்ப சாலைகளை அகலப்படுத்துதல், சாலைகளைப் புதுப்பித்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்கண்ட பணிகளின் வெவ்வேறு நிலைகளைக் கண்காணிக்கவும், முன்னேற்றத்தை உறுதி மற்றும் ஆய்வு செய்யவும் "திட்டப் பணிகள் கண்காணிப்பு மற்றும் தகவல் அமைப்பு" (*Project Monitoring Information System (PMIS)*) என்ற மென்பொருள் (*Software*) மற்றும் கைப்பேசி செயலி (*Mobile

App) உருவாக்கப்படும். இதனால் திட்டங்களின் செயல்பாடு எளிதாகவும் வெளிப்படைத்தன்மையோடும் கண்காணிக்கப்படும்.

7. தரமான சாலைகள் அமைக்கப்படுவதை உறுதிசெய்யும் பொருட்டு சாலையின் மேடு பள்ளங்கள் இணைய ஆய்வு வாகனம் (Net Survey Vehicle) கொண்டு கண்டறியப்படும். இவ்வாறான தரப் பரிசோதனைகள் செய்யப்பட்ட பின்னரே, பணி நிறைவுச் சான்றிதழ் அளிக்கப்படும்

புதிதாக அமைக்கப்பட்ட சாலையின் மேடு பள்ளங்கள் தற்பொழுது கேம்பர் போர்டு போன்ற சாதனங்களைக் கொண்டு ஆய்வு செய்யப்படுகிறது. இணைய ஆய்வு வாகனம் (Net Survey Vehicle) கொண்டு ஒருங்கிணைப்பு சோதனை (Bump Integrator Test) மூலம் சாலையின் சீரற்ற தன்மை (Roughness index indicating Uneveness) கண்டறியப்படும்.

மேலும், பாலங்களுக்கு எந்தவித சேதாரமும் ஏற்படா வண்ணம் (Non Destructive Testing) ஆய்வுகள் செய்து, சிமென்ட் கலவையின்மூலம் தரம் மற்றும் வலிமை உறுதி செய்யப்படும். முடிக்கப்பட்ட பாலம் மற்றும் சாலைப் பணிகளின் தரத்தை மேற்கண்ட ஆய்வுகள்மூலம் உறுதி செய்த பின்னரே பணி நிறைவுச் சான்றிதழ் (Completion Certificate) வழங்கப்படும். இதனால் தரமான சாலைகள் மற்றும் பாலங்கள் அமைக்கப்படுவது உறுதி செய்யப்படும்.

Road சரிசெய்யப்படுவதென்றால் அதை ஆய்வு செய்வதற்காக, அதற்கென்று தனி வாகனம் இருக்கிறது. Road போட்டிருக்கின்றோம் என்று சொன்னால், அந்த road-ல் இந்த வாகனத்தை செலுத்தி, ஏனென்றால் அது computerize செய்யப்பட்ட வாகனம். எங்கேயாவது தவறு என்று சொன்னால், அது ஏற்றுக்கொள்ளாது. அந்த வாகனத்தை ஓட்டினால்தான், completion certificate கொடுத்தால்தான் இனிமேல் ஒப்பந்ததாரருக்கு பணம் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் முதன்முதலாக நாங்கள் இங்கே introduce செய்கிறோம்.

8. மாநில நெடுஞ்சாலைகளின் நில எல்லை அளவு மற்றும் மரங்கள், சாலை உபகரணங்கள் உள்ளிட்ட சொத்துகளின் (Assets) விவரங்கள் கணினிமயமாக்கப்படும் (Digitalization)

நெடுஞ்சாலைத் துறையின் சாலைப் பணிகளை விரைந்து முடிக்கவும் இனிவரும் காலங்களில் தாமதத்தைத் தவிர்க்கவும் நில எடுப்பு மற்றும் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் போன்ற பணிகள் உரிய காலக்கெடுவுக்குள் முடிக்கப்பட வேண்டும். இதனைக் கருத்தில் கொண்டு முதற்கட்டமாக, நெடுஞ்சாலைத் துறையின் 12,291 கி.மீ. மாநில நெடுஞ்சாலைகளில் நில எல்லை அளவு (Right of Way Details) மற்றும் மரங்கள், சாலை உபகரணங்கள் உள்ளிட்ட சொத்துகளின் (Assets) விவரங்கள் கணினிமயமாக்கப்படும் (Digitalization).

ஏனென்றால் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொத்து எங்கே இருக்கிறது என்பதே தெரியாமல் இருக்கிறது. அவரவர்கள் அந்த இடத்தையொட்டி பயிர் செய்கிறார்கள்; Building கட்டியிருக்கிறார்கள்; பலபேர் நெடுஞ்சாலைத் துறையின் இடத்தில் petrol bunk அமைத்திருக்கிறார்கள். இவையெல்லாம் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமானது என்று கண்டறியும் பணிகளில் இறங்கியிருக்கிறோம்.

9. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை ஒட்டி மாநில நெடுஞ்சாலை ஓரங்களில் 5 இலட்சம் மரக்கன்றுகள் நடப்படும்

“பசுமையான சாலைகள் மற்றும் பாதுகாப்பான பயணத்தை” வழங்குவது இத்துறையின் குறிக்கோளாகும். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை ஒட்டி, இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இந்த ஆண்டு அனைத்து மாநில நெடுஞ்சாலைகளிலும் 5 இலட்சம் மரக்கன்றுகள் நடப்படும். இதனால் மாநில நெடுஞ்சாலைகளில் இடைவெளி இல்லாமல் மரங்கள் வளர்க்கப்படும் என்ற இலக்கு எட்டப்படும். மேலும், சாலை ஓரங்களில் உள்ள உயரமான பகுதிகளில் மண் அரிப்பைத் தவிர்க்கும் பொருட்டு பனை விதைகள் ஊன்றப்படும். இந்தத் துறையின் சார்பாக நடுவதென்று முடிவு செய்திருக்கிறோம்.

10. முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (CMRDP) நடப்பாண்டில், 13.30 கி.மீ. நீள ஈரோடு வெளிவட்டச் சுற்றுச் சாலை உள்ளிட்ட 200 கி.மீ. சாலைகள் நான்கு வழித்தடமாகவும், 600 கி.மீ. சாலைகள் இரு வழித்தடமாகவும் அகலப்படுத்தி மேம்படுத்தப்படும்

2021–2022 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மாவட்டத் தலைமையிடங்கள்

மற்றும் தாலுகா தலைமையிடங்களை இணைக்கும் மாநில நெடுஞ்சாலைகள், அடுத்த 10 ஆண்டுகளில் 2200 கி.மீ. சாலைகள் நான்கு வழித்தடச் சாலைகளாகவும் மற்றும் 6700 கி.மீ. சாலைகள் இரண்டு வழித்தடச் சாலைகளாகவும் அகலப்படுத்தப்படும்.

இத்திட்டத்தில் நடப்பாண்டில் ஈரோடு மாவட்டத்தில், 13.30 கி.மீ. நீள ஈரோடு வெளிவட்டச் சுற்றுச் சாலை உள்ளிட்ட 200 கி.மீ. சாலைகளை நான்கு வழித்தடச் சாலைகளாகவும், 600 கி.மீ. சாலைகளை இருவழித்தடச் சாலைகளாகவும் அகலப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதனால், போக்குவரத்து நெரிசல் குறைவதோடு தங்குதடையற்ற பாதுகாப்பான போக்குவரத்து உறுதிப்படுத்தப்படும்.

11. ஆற்றுப் பாலங்கள்: 9 மாவட்டங்களில் 13 ஆற்றுப் பாலங்கள் ரூ.215.80 கோடி மதிப்பில் கட்டப்படும். 3 மாவட்டங்களில் 3 ஆற்றுப் பாலங்கள் அமைக்க ரூ.29.65 கோடி மதிப்பில் நில எடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். காஞ்சிபுரம் மாவட்டத்தில் 2 ஆற்றுப் பாலங்கள் கட்ட ரூ.50 இலட்சம் மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்

செங்கல்பட்டு மாவட்டத்தில் நெரும்பூர் அருகில் பாலாற்றின் குறுக்கே, ராணிபேட்டை மாவட்டத்தில் நெமிலி அருகில் கல்லாற்றின் குறுக்கே, கடலூர் மாவட்டத்தில் ஸ்ரீமுஷ்ணம் அருகில் வெள்ளாற்றின் குறுக்கே, திருவண்ணாமலை மாவட்டத்தில் ஆரணி அருகில் கமண்டல நாகநதி குறுக்கே மற்றும் வடஇலுப்பை அருகில் பாலாற்றின் குறுக்கே, கோயம்புத்தூர் மாவட்டத்தில், பூரண்டம்பாளையம் ஓடை குறுக்கே மற்றும் செஞ்சேரிமலை அருகில் ஆழியாற்றின் குறுக்கே, பெரம்பலூர் மாவட்டத்தில் கீழப்பெரம்பலூர் அருகில் சின்னாற்றின் குறுக்கே, தஞ்சாவூர் மாவட்டத்தில் பூக்கொல்லை அருகில் பூனைக்குத்தி ஆற்றின் குறுக்கே மற்றும் பெரியகோட்டை அருகில் கண்ணனாற்றின் குறுக்கே, இராமநாதபுரம் மாவட்டத்தில் வன்னிவயல் அருகே வைகை ஆற்றின் குறுக்கே, நாமக்கல் மாவட்டத்தில் இலுப்பை அருகே திருமணிமுத்தாற்றின் குறுக்கே ஆகிய 9 மாவட்டங்களில் 13 இடங்களில் ரூ.215.80 கோடி மதிப்பில் ஆற்றுப் பாலங்கள் அமைக்கப்படும்.

நாமக்கல் மாவட்டம், பிலிக்கல்பாளையம் அருகில் காவேரி ஆற்றின் குறுக்கே, திருச்சி மாவட்டம், இடையாத்துமங்கலம் அருகில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே மற்றும் திருவள்ளூர்

மாவட்டம், திருநின்றவூர் அருகில் கூவம் ஆற்றின் குறுக்கே ஆகிய 3 இடங்களில் ஆற்றுப் பாலங்கள் அமைக்க ரூ.29.65 கோடி மதிப்பில் நில எடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் நெய்யாடிவாக்கம்–இளையனார்வேலூர் சாலையில் செய்யாறு ஆற்றின் குறுக்கே மற்றும் வாலாஜாபாத்–அவலூர் சாலையில் பாலாற்றின் குறுக்கே ஆகிய 2 ஆற்றுப் பாலங்கள் கட்ட முதற்கட்டமாக ரூ.50 இலட்சம் மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

12. புறவழிச்சாலைகள்: துறையூர், திருப்பத்தூர் மற்றும் நாமக்கல் ஆகிய 3 நகரங்களுக்குப் புறவழிச் சாலைகள் ரூ.286 கோடி மதிப்பில் அமைக்கப்படும். 2 நகரங்களுக்கு புறவழிச் சாலைகளும் மற்றும் 2 ஊர்களுக்குத் திருத்திய நேர்ப்பாட்டில் சாலைகளும் அமைக்க ரூ.36 கோடி மதிப்பில் நில எடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். 8 நகரங்களுக்குப் புறவழிச் சாலைகள் அமைக்க முதற்கட்டமாக ரூ.1.50 கோடி மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்

திருச்சி மாவட்டத்தில் துறையூர் நகருக்கும் (பகுதி–3), திருப்பத்தூர் மாவட்டத்தில் திருப்பத்தூர் நகருக்கும் (கட்டம்–I) மற்றும் நாமக்கல் மாவட்டத்தில் நாமக்கல் நகருக்கும் புறவழிச் சாலைகளும் மற்றும் நாமக்கலில் புதிதாக அமையவுள்ள பேருந்து நிலையத்திற்கு 200 மீ. நீளத்திற்கு இணைப்புச் சாலையும் ரூ.286 கோடி மதிப்பில் அமைக்கப்படும்.

தருமபுரி மாவட்டத்தில் தருமபுரி (கட்டம்–I) மற்றும் அரியலூர் மாவட்டத்தில் செந்துறை ஆகிய 2 நகரங்களுக்கு புறவழிச் சாலைகளும், சிவகங்கை மாவட்டத்தில் புதுவயல் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் மேல்கச்சிராப்பட்டு ஆகிய 2 ஊர்களுக்குத் திருத்திய நேர்ப்பாட்டில் சாலைகளும் அமைக்க ரூ.36 கோடி மதிப்பில் நில எடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

ஈரோடு மாவட்டத்தில் சென்னிமலை, புதுக்கோட்டை மாவட்டத்தில் கறம்பக்குடி, இராமநாதபுரம் மாவட்டத்தில் அபிராமம், திருவண்ணாமலை மாவட்டத்தில் போளூர், அரியலூர் மாவட்டத்தில் ஜெயங்கொண்டம், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உளுந்தூர்பேட்டை மற்றும் விருதுநகர் மாவட்டத்தில் வத்திராயிருப்பு, மல்லாங்கிணறு ஆகிய 8 நகரங்களுக்குப் புறவழிச் சாலைகள் அமைக்க முதற்கட்டமாக ரூ.1.50 கோடி மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

பிற்பகல் 3–10

13. அனைத்து மாநில நெடுஞ்சாலைகளிலும் சாலைப் பாதுகாப்புத் தணிக்கை (Road Safety Audit) செய்யப்பட்டு, சாலை விபத்துகளைத் தடுக்க மிக முக்கிய உடனடித் தேவைகள் கண்டறியப்பட்டு (Important and Immediate Measures) ரூ.150 கோடி மதிப்பில் சாலைப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்

மலைப் பகுதிகளில் உள்ள கொண்டை ஊசி வளைவுகள் மற்றும் ஆபத்தான வளைவுப் பகுதிகளில் வெளிநாட்டுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உருளை விபத்துத் தடுப்பான்கள் (Roller Crash Barriers) ரூ.100 கோடி மதிப்பில் அமைக்கப்படும்.

சாலை விபத்துகள் இல்லாத மாநிலம் என்ற இலக்கினை நோக்கி, சாலைப் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்கு நெடுஞ்சாலைத் துறையில் கண்காணிப்புப் பொறியாளர் தலைமையில் 8 கோட்டப் பொறியாளர்களைக் கொண்ட சாலைப் பாதுகாப்பு அலகு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இதுவரை சுமார் 400 பொறியாளர்களுக்கு ஒரு வார கால விரிவான சாலைப் பாதுகாப்பு தொடர்பாக பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

*மேற்கண்ட சாலைப் பாதுகாப்பு அலகு மற்றும் பயிற்சிபெற்ற பொறியாளர்களைக் கொண்டு அனைத்து மாநில நெடுஞ்சாலைகளிலும், சாலைப் பாதுகாப்புத் தணிக்கை (*Road Safety Audit*) செய்யப்படும்.*

*இதன் அடிப்படையில், சாலை விபத்துகளைத் தடுக்க மிக முக்கிய உடனடித் தேவைகள் கண்டறியப்பட்டு (*Important and Immediate Measures*) ரூ.150 கோடி மதிப்பில் அனைத்து மாநில நெடுஞ்சாலைகளிலும் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.*

*மலைப் பகுதிகளில் உள்ள கொண்டை ஊசி வளைவுகள் மற்றும் மிகவும் ஆபத்தான வளைவுகள் போன்ற பகுதிகளில் வெளிநாட்டுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ரூ.100 கோடி மதிப்பில் உருளை விபத்துத் தடுப்பான்கள் (*Roller Crash Barriers*) அமைத்து சாலைப் பாதுகாப்பு மேம்படுத்தப்படும்.*

14. "அனைத்து காலநிலைகளிலும் தங்கு தடையற்ற போக்குவரத்து" என்ற முதலமைச்சரின் முத்தாய்ப்பான திட்டத்தின்கீழ் 273 தரைப் பாலங்கள் உயர்மட்டப் பாலங்களாக ரூ.787 கோடி மதிப்பில் கட்டப்படும்

காலநிலை மாற்றங்களால் ஏற்படும் வெள்ளப் பெருக்கினைக் கையாளும் விதமாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் “அனைத்து காலநிலைகளிலும் தங்கு தடையற்ற போக்குவரத்துத் திட்டம்” (Chief Minister All Season Uninterrupted Connectivity Scheme) என்ற முத்தாய்ப்பான திட்டத்தின்கீழ் நெடுஞ்சாலைத் துறை சாலைகளில் உள்ள அனைத்து தரைப் பாலங்களும் உயர் மட்டப் பாலங்களாக 2026 ஆம் ஆண்டிற்குள் கட்டப்படும் என 2021–2022 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது.

நடப்பாண்டில் ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் 29 மாவட்டங்களில் 200 தரைப் பாலங்கள் ரூ.300 கோடி மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலங்களாகக் கட்டப்படும். நபார்டு வங்கி கடனுதவியுடன் 20 மாவட்டங்களில் 73 தரைப் பாலங்கள் ரூ.487 கோடி மதிப்பில் உயர்மட்டப் பாலங்களாகக் கட்டப்படும்.

15. சுற்றுலாப் பகுதிகளில் உட்கட்டமைப்பு மேம்பாடு

மதுரை மாவட்டத்தில் புகழ்பெற்ற அலங்காநல்லூரில் கட்டப்பட்டுவரும் ஜல்லிக்கட்டு அரங்கிற்கு செல்லும் சாலை ரூ.22.80 கோடி மதிப்பில் அகலப்படுத்தி மேம்படுத்தப்படும்

இராமேஸ்வரம் மற்றும் திருச்செந்தூர் சுற்றுலாப் பகுதிகளுக்குச் செல்ல புறவழிச் சாலைகள் அமைக்க ரூ.88 இலட்சம் மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்

மதுரை மாவட்டத்தில் புகழ்பெற்ற அலங்காநல்லூரில் பொது மக்கள் பாதுகாப்பான முறையில் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியைப் பார்க்க ஒரு புதிய ஜல்லிக்கட்டு அரங்கம் கட்டப்பட்டு வருகிறது. இவ்வரங்கிற்குச் செல்ல 3.50 கி.மீ. நீளச் சாலையை அகலப்படுத்தி, மேம்படுத்தும் பணி ரூ.22.80 கோடியில் மேற்கொள்ளப்படும்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமநாதபுரம்–இராமேஸ்வரம் சாலையில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் இராமேஸ்வரம் அப்துல் கலாம் நினைவிடம் முதல் அக்னி தீர்த்தம் வரை புறவழிச் சாலை அமைக்க ரூ.38 இலட்சம் மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

தூத்துக்குடி மாவட்டத்தில் தூத்துக்குடி–திருச்செந்தூர்–கன்னியாகுமரி சாலையிலிருந்து வள்ளிகுகைக்குச் செல்ல புறவழிச் சாலை அமைக்க ரூ.50 இலட்சம் மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

16. பெருநகர சென்னை மாநகரப் பகுதி மேம்பாடுகள்

பல்லாவரம் மேம்பாலம் மற்றும் சென்னை புறவழிச் சாலையை இணைக்கும் வகையில் உயர்மட்டச் சாலை அமைக்க ரூபாய் ஒரு கோடி மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்

*பெரிய தெற்கத்திய சாலையில் (*GST*) உள்ள பல்லாவரம் மேம்பாலத்தில் (பான்ஸ் மேம்பாலம்) இருந்து சென்னை புறவழிச் சாலையை (*Chennai Bypass Road*) (தாம்பரம்–மதுரவாயல் புறவழிச் சாலை) இணைக்கும் வகையில் உயர்மட்டச் சாலை மேம்பாலம் அமைக்க ரூபாய் ஒரு கோடி மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.*

17. சென்னை மாநகரில் பெருகிவரும் தகவல் தொழில்நுட்ப (IT) வளர்ச்சிக்கு ஏற்ப இராஜீவ் காந்தி சாலை (IT Expressway) போன்று பல்லாவரம்–துரைப்பாக்கம் ஆரச் சாலையை அடுத்த தொழில்நுட்ப விரைவுச் சாலையாக (IT Expressway) மேம்பாடு செய்ய விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்

*சென்னை மாநகரில் பெருகிவரும் தகவல் தொழில்நுட்பத் தேவைகளுக்கேற்ப உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு செய்யப்பட்டு வருகின்றன. இராஜீவ் காந்தி சாலை (*IT Expressway*) போன்று சேவைச் சாலைகள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளுடன் பல்லாவரம்–துரைப்பாக்கம் ஆரச் சாலையை அடுத்த தொழில்நுட்ப விரைவுச் சாலையாக (*IT Expressway*) மேம்பாடு செய்யப்படும். இதற்கான விரிவான திட்ட அறிக்கை நடப்பாண்டில் தயாரிக்கப்படும்.*

18. சென்னை பெருநகரப் பகுதியில் நிரந்தர வெள்ளத் தடுப்பு கட்டமைப்புப் பணிகளை மேற்கொண்டு கடந்த ஆண்டு வடகிழக்குப் பருவ மழையின்போது, மழைநீர் எங்கும் தேங்காதவண்ணம் சாதனை படைக்கப்பட்டது. தேவைப்படும் இடங்களில் சிறு பாலங்கள் மற்றும் கால்வாய் ஆகியவை ரூ.116 கோடி மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்

கடந்த பருவ மழையின்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின், துரித நடவடிக்கைகளால் சென்னை பெருநகரப் பகுதியில் எங்கும் மழைநீர் தேங்காதவண்ணம் நிரந்தர வெள்ளத் தடுப்பு கட்டமைப்புப் பணிகளை மேற்கொண்டு, சாதனை படைக்கப்பட்டது. தேவைப்படும் இடங்களில் சிறு பாலங்கள் மற்றும் கால்வாய் ஆகியவை ரூ.116 கோடி மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, பருவ மழைக்கு முன்பாக பணிகள் முடிக்கப்படும். இவ்வாறாக மழைநீர் தேங்காதவண்ணம் பருவ மழையை எதிர்கொண்டு, சாதனை படைக்க நெடுஞ்சாலைத் துறை திட்டமிட்டுள்ளது.

19. கரூர் பழைய மற்றும் புதிய பேருந்து நிலையங்களிடையே போக்குவரத்துக்கு ஏற்ப புதிய இணைப்பு உருவாக்க ரூ.25 இலட்சம் மதிப்பில் விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்படும்

நாகப்பட்டினம் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் பாப்பாகோவில் கருங்கண்ணி சாலையை இணைக்கும் வகையில் ரூ.26 கோடி மதிப்பில் சாலை அமைக்கப்படும்

கரூர் மாவட்டம், கரூர் பழைய மற்றும் புதிய பேருந்து நிலையங்களிடையே போக்குவரத்துக்கேற்ப புதிய இணைப்பு உருவாக்க ரூ.25 இலட்சம் மதிப்பில் விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்படும்.

நாகப்பட்டினம் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் பாப்பாகோவில் கருங்கண்ணி சாலையை இணைக்கும் வகையில் ரூ.26 கோடி மதிப்பில் சாலை அமைக்கப்படும். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, இப்பணி எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

20. இரயில்வே மேம்பாலங்கள்

ஆறு மாவட்டங்களில் ரூ.238 கோடி மதிப்பில் இரயில்வே மேம்பாலங்கள் அமைக்கப்படும்

புதுக்கோட்டை மாவட்டத்தில் திருவப்பூரில் இரயில்வே மேம்பாலம் அமைக்க ரூ.32 கோடி மதிப்பில் நில எடுப்புப் பணி மேற்கொள்ளப்படும்

தருமபுரி மாவட்டத்தில் டீச்சர்ஸ் காலனி, சேலம் மாவட்டத்தில் குஞ்சாண்டியூர், திருப்பத்தூர் மாவட்டத்தில் பச்சூர், விருதுநகர் மாவட்டத்தில் சிவகாசி, வேலூர் மாவட்டத்தில் சேவூர் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் திருவாலங்காடு ஆகிய 6 இடங்களில் ரூ.238 கோடி மதிப்பில் இரயில்வே மேம்பாலங்கள் அமைக்கப்படும்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் திருவப்பூரில் இரயில்வே மேம்பாலம் அமைக்க ரூ.32 கோடி மதிப்பில் நில எடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

21. தமிழ்நாடு கடல்சார் வாரியம்

இந்தியா—இலங்கை நாடுகளுக்கிடையே குறைந்த தூரப் பயணிகள் கப்பல் போக்குவரத்தினை

1. இராமேஸ்வரம்—தலைமன்னார் (50 கி.மீ.)

2. இராமேஸ்வரம்—காங்கேசந்துறை (100 கி.மீ.) ஆகிய வழித்தடங்களில் துவக்க அரசின் மூலமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

இந்தியா-இலங்கை நாடுகளுக்கிடையே குறைந்த தூரப் பயணிகள் கப்பல் போக்குவரத்தினைத் துவக்கும் நோக்கில்

1. இராமேஸ்வரம்-தலைமன்னார் (50 கி.மீ.)

*2. இராமேஸ்வரம்-காங்கேசந்துறை (100 கி.மீ.) ஆகிய வழித்தடங்களில் இயக்க இராமேஸ்வரம் சிறுதுறைமுகப் பகுதியில் கப்பலணையும் மேடை, பயணிகள் தங்குமிடம், சுங்க மற்றும் குடிமைப் பிரிவு சோதனை மையங்கள் ஆகிய கட்டுமானங்களை ஏற்படுத்துவதற்கு ஒரு விரிவான திட்ட அறிக்கை மற்றும் மதிப்பீடுகள் (*Detailed Project Report and Estimates*) தயாரிக்கப்பட்டு ஒன்றிய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.*

அடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பொதுப் பணித் துறையின் சார்பில் 17 புதிய அறிவிப்புகளை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சிகொள்கிறேன்.

2023 ஏப்ரல் 1] [திரு. எ.வ. வேலு]

பொதுப் பணித் துறை

பொதுப் பணித் துறையின் நிர்வாகக் கட்டமைப்பு மேம்படுத்தப்படும்

1. மதுரையில் ஒரு புதிய பாரம்பரிய 'கட்டட மையம் மற்றும் பாதுகாப்புக் கோட்டம்' மற்றும் சென்னை, வேலூர், திருநெல்வேலியில் புதியதாக மூன்று உபகோட்டங்கள் உருவாக்கப்படும்.

2. பொதுப் பணித் துறை கட்டடக் கலை அலகில் ஓர் இணை தலைமைக் கட்டடக் கலைஞர், ஓர் உதவி கட்டடக் கலைஞர், 5 இளநிலை கட்டடக் கலைஞர்கள் உள்ளிட்ட 8 பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும்.

3. பொதுப் பணித் துறையில் உள்ள மின் பிரிவினை மேம்படுத்துவதற்கு 5 புதிய மின் கோட்டங்கள், 15 புதிய மின் உபகோட்டங்கள், 10 மின் பிரிவுகள், 3 புதிய வானொலி உபகோட்டங்கள், திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டத்தில் ஒரு புதிய மின் அலகு ஆகியவை தோற்றுவிக்கப்படும்.

4. தரக் கட்டுப்பாடு அலகினைப் பலப்படுத்தும் விதமாகத் திருச்சிராப்பள்ளியில் ஒரு புதிய தரக் கட்டுப்பாடு கோட்டம் மற்றும் தஞ்சாவூர், திருவாரூரில் புதிய தரக் கட்டுப்பாடு உபகோட்டங்கள் உருவாக்கப்படும்.

*மேற்கூறிய அனைத்து நிர்வாக மேம்பாட்டுப் பணிகளும் பணியிடங்கள் ஒப்புவிப்பு மற்றும் பணிப் பெயர்ச்சி (*Surrender and redeployment*) அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.*

5. சைதாப்பேட்டை, தாடண்டர் நகரில் 190 'சி' வகை அரசு அலுவலர்களுக்கான புதிய அடுக்குமாடிக் குடியிருப்பு ரூ.103 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்

சென்னை, தாடண்டர் நகரில் அரசு அலுவலர்களுக்கு இதுவரை 900 புதிய குடியிருப்புகள் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. தற்போது, 190 'பி' வகை குடியிருப்புகளும் 190 'சி' வகை குடியிருப்புகளும் கட்டப்பட்டு வருகின்றன. 2023–2024 ஆம் ஆண்டில் 190 'சி' வகை அரசு அலுவலர்களுக்கான புதிய அடுக்குமாடிக் குடியிருப்பு ரூ.103 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

எட்டு பாரம்பரிய கட்டடங்கள் ரூ.50 கோடி மதிப்பீட்டில் மறுசீரமைத்துப் புனரமைக்கப்படும்

6. சென்னை, கீழ்ப்பாக்கம் மனநலக் காப்பக மருத்துவமனை வளாகத்தில் உள்ள பொழுதுபோக்கு அரங்க பாரம்பரியக் கட்டடம் ரூ.4.65 கோடி மதிப்பீட்டிலும்,

7. சென்னை சேப்பாக்கத்தில் உள்ள பழைய ஆவண அறை கோபுர பாரம்பரியக் கட்டடம் ரூ.3.10 கோடி மதிப்பீட்டிலும்,

8. சென்னை கிண்டி கிங் நோய் தடுப்பு மருந்து மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் உள்ள இணைப்பு பாரம்பரியக் கட்டடம் (மீடியா அறை) ரூ.5.25 கோடி மதிப்பீட்டிலும்,

9. தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறில் உள்ள பழைய மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தின் பாரம்பரியக் கட்டடம் ரூ.2.11 கோடி மதிப்பீட்டிலும்,

10. புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டையில் உள்ள பொது அலுவலக பாரம்பரியக் கட்டடம் ரூ.15 கோடி மதிப்பீட்டிலும்,

11. கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி நிறுவன (கட்டடம் II தெற்குப் பகுதி) பாரம்பரியக் கட்டடம் ரூ.6.80 கோடி மதிப்பீட்டிலும்,

12. மதுரையில் உள்ள மதுரை மாவட்டப் பதிவாளர் அலுவலக (தெற்கு) பாரம்பரியக் கட்டடம் ரூ.4 கோடி மதிப்பீட்டிலும்,

13. சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டத்தில் உள்ள சங்கரபதி பாரம்பரியக் கோட்டையை ரூ.9.09 கோடி மதிப்பீட்டிலும் மறுசீரமைத்துப் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

14. திருச்சிராப்பள்ளி சுற்றுலா மாளிகை வளாகத்தில் திருச்சிராப்பள்ளி சுற்றுலா மாளிகை ரூ.3.35 கோடி மதிப்பீட்டில் புனரமைத்து மேம்படுத்தப்படும்.

i) *'ஏ' ப்ளாக்கில் உள்ள மூன்று முக்கிய பிரமுகர்கள் தங்கும் அறைகள்*

ii) *'பி' ப்ளாக்கில் உள்ள பத்து முக்கிய பிரமுகர்கள் தங்கும் அறைகள்*

iii) *'சி' ப்ளாக்கில் உள்ள ஐந்து தங்கும் அறைகள்*

அனைத்தும் ரூ.3.35 கோடி மதிப்பீட்டில் புனரமைத்து மேம்படுத்தப்படும்.

15. திருச்சி பொதுப் பணி பணியாளர் பயிற்சி நிலையக் கட்டடத்தில் நுண்திறன் வகுப்பறை (Smart Class Room), கூடுதல் தங்கும் அறைகள், அறைகலன்கள் (Furniture) மற்றும் இதர மேம்பாட்டுப் பணிகள் ரூ.1 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

திருச்சி பொதுப் பணி பணியாளர் பயிற்சி நிலையத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.1 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

16. பொதுப் பணித் துறையினால் நவீன காலத்திற்கு ஏற்ப பல்வேறு துறைகளுக்கு அடுக்குமாடிக் கட்டடங்கள், முக்கியமான நினைவகக் கட்டடங்கள், நூலகங்கள் மற்றும் மருத்துவமனைக் கட்டடங்கள் போன்றவை கட்டப்பட்டு வருகின்றன. மேலும், பாரம்பரியக் கட்டடங்களைப் புனரமைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இத்தகைய பணிகளில் மாநில அளவில் பல்வேறு துறைகளில் தலைசிறந்த தனியார் கட்டடக் கலைஞர்களின் நிபுணத்துவத்தினைப் பயன்படுத்தும் விதமாக தேர்ந்த நிபுணர்களின் பெயர்ப் பட்டியல் (Panel of eminent Architects) தயாரிக்கப்படும்.

மாநில அளவில் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் தனியார் கட்டடக் கலைஞர்களின் தேர்ந்த பெயர் பட்டியல் (Panel of eminent Architects) தயாரிக்கப்படும்.

17. பொது இடங்களில் கட்டப்படும் அரசுக் கட்டடங்களைத் திட்டமிட்டு வடிவமைப்பதிலும், முகப்புத் தோற்றப் பொலிவை மின் விளக்கு அலங்காரங்களுடன் மெருகூட்டவும், பாரம்பரியக் கட்டடங்களைப் புனரமைத்துப் புதுப்பிப்பதிலும், மரபு சார்ந்த மற்றும் நவீன கட்டடக் கலை உத்திகளைப் பயன்படுத்தும் நோக்குடன் புதிய வடிவமைப்புக் கொள்கை வெளியிடப்படும். எனவே, இப்படிப்பட்ட பல்வேறு நிலைகளில் துறை சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

அரசுப் பொதுக் கட்டடங்களைத் திட்டமிட்டு நிர்மாணிப்பதில் புதிய வடிவமைப்புக் கொள்கை (Design Policy) வெளியிடப்படும்.

பிற்பகல் 3–15

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. அன்பழகன் அவர்கள், கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் 76–77 ஆம் பக்கத்தில் “2022–2023 ஆம் ஆண்டில் ரூ.2178.01 கோடி மதிப்பிலான 2000.31 கி.மீ. நீளமுள்ள சாலைகள் தரம் உயர்த்த எடுத்துக்கொள்ளப்பட்டன” என்றும் அதன் தொடர்ச்சியாக ‘ரூ.55.85 கோடி மதிப்பிலான 361.76 கி.மீ. நீளமுள்ள 138 நிலுவையிலுள்ள சாலைப் பணிகளை முடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன’ என்று குறிப்பிடப்பட்டிருப்பதில் குழப்பம் இருக்கிறதென்று சொல்லியிருக்கிறார்கள். இந்த அரசு 2023 ஆம் ஆண்டில் எடுத்திருப்பதைச் சொல்லியிருக்கிறோம். ஏற்கெனவே சென்ற அரசாங்கம் 2020–2021 ஆம் ஆண்டில் NABARD மூலமாக எடுக்கப்பட்ட சாலைகளில், அந்தச் சாலைகள்தான் தொடர்ந்து 361.76 கி.மீ. சாலைகளை இந்த அரசாங்கம் எடுத்து அதற்காக ஒதுக்கப்பட்ட நிதியைத்தான் நாங்கள் தொடர்ந்து குறிப்பிட்டிருக்கிறோமேயொழிய, அவை ஒன்றும் தவறான செய்திகள் அல்ல.

மேலும், வாணியம்பாடியின் பொதுப் பணித் துறை ஆய்வு மாளிகை குறித்து கேட்டார்கள். வாணியம்பாடி பகுதியில் ஆய்வு மாளிகை கட்டுவதற்கு இடம் இல்லை. மேலும், அது NHAI இடம் அல்ல, நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான இடம்தான். எனவே, அந்த இடத்தில் கட்டினால், மாண்புமிகு உறுப்பினர்கள் தருமபுரிக்கு செல்லும் வழியில் ஓய்வெடுத்துச் செல்ல வேண்டுமானாலும், main road-ல் இடம் இருந்தால் ஓய்வெடுத்து பிறகு செல்லலாமே என்ற நல்ல நோக்கத்தில்தான் அவ்விடத்தில் கட்டுவதற்கு முடிவெடுக்கப்பட்டது. அந்த இடத்தை நான் நேரில் சென்று ஆய்வு செய்தேன். அந்த இடம்தான் பொருத்தமானதாக இருக்கும் என்பதற்காகத்தான் அவ்விடத்தைத் தேர்வு செய்தோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய இடம், வாணியம்பாடிக்கு உள்ளே சென்றுவர வேண்டும். ஆனால் main road–லேயே கட்டப்பட்டால் சௌகரியமாக இருக்கும் என்கின்ற காரணத்தினால்தான் அதனைக் கட்டுவதற்குரிய ஏற்பாடுகளை நாங்கள் செய்திருக்கிறோம். அதில் தவறில்லை.

அதேபோன்று தருமபுரியை பொறுத்தளவில், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சென்ற கொள்கை விளக்கக் குறிப்பில் பக்கம் 111–ல் 2486 கி.மீ. நிலுவைப் பணிகள் என்று அரசு குறிப்பிட்டிருக்கிறது என்று கேட்டீர்கள். அதற்கு என்ன

2023 ஏப்ரல் 1] [திரு. எ.வ. வேலு]

காரணமென்றால், வனத் துறை அனுமதி பெற்ற சாலைகள் அப்போது இல்லாதிருந்தன. ஆனால், தற்போது வனத் துறை அனுமதி பெற்ற சாலைகள் வந்ததால்தான் 16.56 என்று கிலோ மீட்டர் கூடியிருக்கிறதேயொழிய அதற்கு வேறொன்றும் உள்நோக்கம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுப் பணித் துறையின் சார்பாக, மாண்புமிகு உறுப்பினர் ஒரு கேள்வியை வைத்தீர்கள். JICA மூலமாகக் கட்டப்பட்ட கட்டடங்களுக்கு முன்னர் இருந்த மதிப்பீட்டிற்கும், தற்போதைய மதிப்பீட்டிற்கும் வித்தியாசம் இருக்கிறதென்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். உங்கள் ஆட்சி இருந்தபோதே JICA திட்டத்தின் மூலமாக போடப்பட்ட ஒப்பந்தத்திற்குப் பின்னால், அந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டதன் விளைவாக— ஏனென்றால், Private Consultancy மூலமாகத்தான் அந்தக் கட்டடங்கள் கட்டப்படுகின்றன. உலக வங்கியினுடைய JICA fund மூலமாகக் கட்டப்படுவதன் காரணமாக அவர்கள் என்ன சொல்கிறார்களென்றால், Private Consultant-ஐ வைத்துத்தான் நீங்கள் அந்தக் கட்டடத்தைக் கட்ட வேண்டும் என்ற agreement இருக்கின்ற காரணத்தினால், Private Architect 'இப்படி ஓடு அமைக்கக் கூடாது, மாற்றி அமைக்க வேண்டும்' என்றும் 'ஜன்னல் இப்படி அமைக்கப்படக் கூடாது மாற்றி அமைக்கப்பட வேண்டும்' என்றும் அவ்வப்போது ஆலோசனைகளை வழங்கிவரும் காரணங்களினாலும், கூடுதல் மதிப்பீடு வந்துவிட்டது. அந்த அரசாங்கத்தினாலேயே RAS வழங்கப்பட்டுவிட்டது. நீங்கள் குறிப்பிடும் அந்த மதிப்பீட்டுடன், தற்போது ஏற்பட்டுள்ள மாற்றத்திற்கு கூடுதல் மதிப்பீட்டையும் சேர்த்தால் ரூ.477 கோடியாக இருந்த மதிப்பீடு தற்போது ரூ.635 கோடியாக உயர்ந்துவிட்டதே தவிர இதில் வேறு எந்த உள்நோக்கமும் இல்லை என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, தருமபுரி–திருப்பத்தூர் சாலையைப் பொறுத்தவரையில், (குறுக்கீடு) அதுதான் சொன்னேன், எங்களுக்கு வேறு எந்த உள்நோக்கமும் இல்லையென்று சொன்னேன். எங்களுக்கும் உள்நோக்கம் இல்லை, உங்களுக்கும் உள்நோக்கம் இல்லை. போதுமா ? என்ன காரணம் என்றால் JICA Fund மூலமாக கொடுக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டிற்கும் தற்போதைய மதிப்பீடு உயர்ந்ததற்கான காரணம் என்னவென்றால், schedule of rates வேறு உயர்த்தப்பட்டுவிட்டது. அதற்கடுத்ததாக, Private Architects

என்று சொல்பவர்கள், கட்டடம் கட்டிய பிறகு இடிக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். Open ஆக கேட்டால், World Bank, JICA-வில் Special Architect, Private Architect-ஐ வைத்துத்தான் கட்டப்பட வேண்டும் என்று சொல்கிறார்கள். வேறு வழியில்லை. நான் சொல்வது, இனி எவ்வளவு கடன் வாங்கினாலும் சரி, பொதுப் பணித் துறை என்பது பாரம்பரியம் மிக்க துறையாகும். இந்தத் துறையில் இல்லாத Engineers-ஆ, இந்தத் துறையில் இல்லாத Architects-ஆ? இனி இவ்வாறு ஒப்பந்தங்கள் செய்யக் கூடாதென்று என் துறைச் செயலாளர் அவர்களிடம்கூட நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். எனவே, வருங்காலத்தில் இது பின்பற்றப்படும்.

தருமபுரி-திருப்பத்தூர் சாலை, 4 வழிச்சாலையாக அமைப்பது குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினீர்கள். சுமார் 15 கி.மீ. நீள 4 வழிச் சாலை அமைப்பதற்கு, மீதமுள்ள போக்குவரத்துச் செறிவின் அடிப்படையில் அப்பணி மீண்டும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் முயற்சிகளை அரசு எடுத்துவருகிறது. எனவே கட்டாயமாக அந்தப் பணி நிறைவேற்றப்படும்.

நெரலூர்-ராயக்கோட்டை-தருமபுரி சாலை குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அந்தச் சாலை கிட்டத்தட்ட 94 கி.மீ. நீளம் உள்ளது. அதிலும் குறிப்பாக, பாலக்கோடு சட்டமன்றத் தொகுதியில் 24 கி.மீ. தான். இதனை 3 வகைகளாகப் பிரித்திருக்கிறார்கள். ஏனெனில் அந்தப் பணிகள் நம்மைப் பொறுத்தளவில், நம் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படவில்லை. NHAI ஆணையத்தின் மூலம்தான் மேற்கொள்ளப்படுகின்றன. நமது அரசாங்கம் அதனைப் பார்வையிடுகிறது. இதில் வருகின்ற பிரச்சினைகளை அவ்வப்போது எடுத்துச் சொல்கிறோம். அதனடிப்படையில் அப்பணி விரைந்து நடைபெறுவதற்கான முயற்சிகள் எடுக்கப்படும் என்பதையும் இந்த நேரத்தில் துறையின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3-20

தொப்பூர்-மேட்டூர் பவானி சாலையைப் பொறுத்தளவிற்கு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 85 கிலோ மீட்டர் என்று சொன்னார்கள். இதை நான்குவழிச் சாலையாக அகலப்படுத்துவதற்கு நில எடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். போக்குவரத்துச் செறிவினைக் கருத்தில்கொண்டுதான்

2023 ஏப்ரல் 1] [*திரு. எ.வ. வேலு*]

இந்தச் சாலையை கடின தள புருவத்துடன்கூடிய இருவழிச் சாலையாக அகலப்படுத்த ஒன்றிய அரசின் மூலமாக 178 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலமாகத்தான் இந்தச் சாலையை எடுப்பது என்று முடிவு செய்துவிட்ட காரணத்தினால், அதையும் விரைந்து செய்வதற்கு இந்த அரசின் சார்பாக நாங்கள் முயற்சி செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூடுமானவரையில் மாண்புமிகு உறுப்பினர்களின் கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்றிவிட்டோம் என்று நினைக்கிறேன். மேலும், ஏதாவது இருக்குமென்றால், நான் குறிப்பெடுத்து வைத்துள்ளேன். அந்தக் குறிப்பின் மூலமாக அந்தப் பணிகளையெல்லாம் செய்வேன் என்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) ஏனென்றால் time *ஆகிவிட்டது.*

(திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் எழுந்து நின்று பேசுவதற்கு வாய்ப்புக் கேட்டார்)

இருங்கள், திரு. அன்பழகன், கொஞ்சம் இருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் எல்லாவற்றையும் பேசி முடியுங்கள். உட்கார்ந்துகொண்டு யாரும் பேசாதீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும். 1½ மணி நேரம் பேசியிருக்கிறார்கள். இன்னும் உங்களுக்கு சந்தேகம் தீரவில்லையா? அமைச்சர் இங்குதான் இருப்பார்கள், எழுதிக் கொடுங்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் அவர்கள் பல்வேறு சாலைகளைக் குறித்துச் சொன்னார்கள்.* Tender *விட்டால், அங்கிருக்கின்ற ஒப்பந்ததாரர்கள் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு, நீதிமன்றத்திற்குச் செல்கின்றார்கள். இதுபோன்ற நிகழ்வுகளினால்தான் காலதாமதம் ஆகிறது என்று நான் ஏற்கெனவே, நேரடியாகவே தோழமைக் கட்சி தோழர்களிடமெல்லாம் சொல்லியிருக்கிறேன். மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் முடிந்தவுடன் நானே நேரடியாகக் கன்னியாகுமரிக்கு வந்து, என்னென்ன பணிகள் நிலுவையில் இருக்கின்றனவோ அந்தப் பணிகளையெல்லாம் ஆய்வு செய்து, இந்த ஆண்டே அந்தப் பணிகளையெல்லாம் முடிப்பதற்கு*

வேண்டிய நடவடிக்கைகளை நான் விரைந்து எடுப்பேன் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சிவக்குமார், திரு. மணி மற்றும் திரு. அண்ணாதுரை ஆகியோர் கூறிய கோரிக்கைகளையெல்லாம் நான் குறிப்பெடுத்திருக்கிறேன். நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தளவிற்கு கிராமச் சாலைகள், ஒன்றியச் சாலைகளை எடுத்துக்கொள்கிறீர்கள், ஆனால் பேரூராட்சியில் இருக்கின்ற சாலைகளையும் செம்மைப்படுத்தினால் நன்றாக இருக்கும் என்ற நல்ல ஒரு கோரிக்கையை தோழமைக் கட்சி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் வைத்திருக்கின்றார். இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, உங்களுடைய எண்ணத்தை நிறைவேற்றுவதற்கு நானும் உடனிருப்பேன் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை மானியக் கோரிக்கை எண் 21-ல் மாண்புமிகு உறுப்பினர்கள் 117 சாலைப் பணிகள், 24 பாலங்கள், 23 புறவழிச் சாலைகள், 8 சிறு துறைமுகங்கள், 30 கொள்கை குறித்து என ஆக மொத்தம் 229 தீர்மானங்களை என்னிடத்திலே கொடுத்திருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறீர்கள். அனைத்திற்கும் பதில் எனது உரையிலேயே அடங்கியுள்ளது என்று நான் நினைக்கிறேன். நிறைவாக இல்லையென்றாலும், நான் குறிப்பெடுத்திருக்கிறேன். அவற்றையெல்லாம் வருங்காலங்களிலே செய்து முடிப்பேன் என்று சொல்லி, பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையின்கீழ், 39 மாண்புமிகு உறுப்பினர்கள் 187 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறீர்கள். பொதுப் பணித் துறை தொடர்புடையவை–92, ஏனையவை–95. மாண்புமிகு உறுப்பினர்களுடைய வெட்டுத் தீர்மானங்களில் உள்ள கோரிக்கைகள் அனைத்திற்கும் பதில் என்னுடைய உரையிலேயே அடங்கியுள்ளதாக நான் கருதுகிறேன். எனவே, அந்தவகையில், வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் நீங்கள் திரும்பப்பெற்று, இந்த இரண்டு மானியக் கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தாருங்கள் என்று அன்போடு கேட்டு எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

2023 ஏப்ரல் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.*

(அ) கோரிக்கை எண் 21-நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 21-நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.2,028,87,58,000/–, மூலதனக் கணக்கில் ரூ.17,435,47,30,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.40,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

(ஆ) கோரிக்கை எண் 39-கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 39–கட்டடங்கள் (பொதுப் பணித் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.427,31,76,000/–, மூலதனக் கணக்கில் ரூ.1,065,67,35,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.80,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

பிற்பகல் 3–25

(இ) கோரிக்கை எண் 31-தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 31–தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.113,43,28,000/–, மூலதனக் கணக்கில் ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ரு.40,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 5–4–2023 (புதன் கிழமை), காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3–26 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

—ஏதுமில்லை—

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

127. மானியக் கோரிக்கை எண் 21–நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

128. நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பற்றிய நிதிநிலை செயலாக்கம், 2022–2023. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

129. நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பற்றிய மக்கள் சாசனம், 2023. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

130. மானியக் கோரிக்கை எண் 39–கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

131. கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய திட்டச் சாதனை, 2022–2023. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

132. கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய மக்கள் சாசனம், 2023. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

133. மானியக் கோரிக்கை எண் 31-தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

134. பள்ளிக் கல்வித் துறையின் 'சிறப்புத் திட்டங்கள் (2021–2023)' என்கிற சிறுநூல். (தமிழ்)

135. உயர் கல்வித் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)

136. பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு I

(*120 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.*)

மானியக் கோரிக்கை எண் 21-நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

1. முகவுரை

பாதுகாப்பான, நம்பகத்தன்மை வாய்ந்த, திறமையான சாலை உட்கட்டமைப்பானது நாட்டின் ஒரு பகுதியின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய தேவையாயிருப்பது மட்டுமின்றி, அப்பகுதி மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்படவும் உதவுகின்றது. சாலை கட்டமைப்பானது விவசாயம், தொழில், சுரங்கம், எரிசக்தி மற்றும் சுற்றுலா போன்ற துறைகளின் வளர்ச்சியை ஊக்குவிக்கிறது.

சமூக இலக்குகளான, அத்தியாவசிய சேவைகளை எளிதில் அணுகுவது, குடிமக்கள் அனைத்து வசதிகளையும் பெறுவது, சரிநிகர் சமூக பொருளாதார நிலை ஆகியவற்றை அடைய பாதுகாப்பான நம்பகத்தன்மை கொண்ட சாலை உட்கட்டமைப்புகள் மிக அவசியமாகிறது.

எனவே, தமிழ்நாடு அரசு சாலை கட்டமைப்பு திட்டங்களுக்கு தலையாய முன்னுரிமை வழங்குகிறது.

இந்தியாவின் இரண்டாவது மிக நீளமான (1076 கி.மீ.) கடற்கரையை தமிழ்நாடு கொண்டுள்ளது. மாநிலத்தின் ஏற்றுமதி மற்றும் துறைமுகம் சார்ந்த தொழில்களை மேம்படுத்துவதற்கு, உள்நாட்டு மற்றும் சர்வதேச வர்த்தகத்தை மேம்படுத்தும் திறன்கொண்ட 17 சிறு துறைமுகங்கள் உள்ளன

1.1 நெடுஞ்சாலைகள்

மாநிலத்தில் சாலை உட்கட்டமைப்பை உருவாக்கி, மேம்படுத்தி மற்றும் பராமரித்து வரும் பணிகளை நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை மேற்கொண்டு வருகிறது. சாலை கட்டுமானம், மேம்படுத்துதல், புறவழிச்சாலைகள் அமைத்தல், ஆற்றுப் பாலங்கள், சாலை மேம்பாலங்கள், இரயில்வே மேல்/ கீழ் பாலங்கள், சாலை பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு போன்ற

பணிகள் நெடுஞ்சாலைத் துறையின் முதன்மை பணியாகும். சாலை கட்டமைப்பை பராமரிப்பதன்மூலம் சாலைப் பயனாளர்களுக்கு தரமான சாலையை வழங்குவது இத்துறையின் முன்னுரிமையாகும். விபத்தில்லா பயணத்தினை உறுதி செய்ய, சமீப காலமாக, சாலை பாதுகாப்புப் பணிகள் மிகப் பெரிய அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

66,382 கி.மீ. நீளமுள்ள மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகள் நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டிலும் மற்றும் 6,805 கி.மீ. நீளமுள்ள தேசிய நெடுஞ்சாலைகள், ஒன்றிய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகத்தின் கட்டுப்பாட்டிலும் உள்ளன.

தமிழ்நாட்டில் சாலைகளின் மொத்த நீளம் 2.71 இலட்சம் கி.மீ. ஆகும். தமிழ்நாட்டில் சாலைகளின் அடர்த்தி 1000 சதுர கி.மீ.-க்கு 2084.71 கி.மீ. ஆகும். இது 1,000 சதுர கி.மீ.-க்கு 1926.02. கி.மீ. எனும் தேசிய சராசரி அளவை விட அதிகமாகும். இது, மாநிலத்தின் சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளை எடுத்துக்காட்டுவதாகும்.

சாலைகளின் நீளம் (கி.மீ.-ல்)

சாலைகளின் வகைபாடு		**நீளம்**
தேசிய நெடுஞ்சாலைகள்	மாநில தேசிய நெடுஞ்சாலைகள்	1677
	இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம்	5128
	மொத்தம்	6805
மாநில நெடுஞ்சாலைகள்		12291
மாவட்ட முக்கிய சாலைகள்		12034
மாவட்ட இதர சாலைகள்		42057
சாலைகளின் மொத்த நீளம் (தே.நெ தவிர)		66382
மொத்தம்		**73187**

2023 ஏப்ரல் 1]

பொதுவாக சாலைகள் போக்குவரத்து செறிவு மற்றும் முக்கிய குடியிருப்புகள், நிறுவனங்கள் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கான இணைப்புகளின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன. தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் மாநில நெடுஞ்சாலைகள், மாநில மற்றும் மாவட்ட தலைமையிடங்கள், சுற்றுலாத் தலங்கள் தொழில் துறை மையங்கள் போன்றவற்றை இணைக்கின்றன. மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகள், வர்த்தக மையங்கள், உற்பத்தி மையங்கள் மற்றும் வட்ட அல்லது வட்டார வளர்ச்சி தலைமையிடங்களை இணைக்கும் இணைப்பு சாலைகளாகும்.

சாலைகளின் வழித்தட விவரங்கள் (நீளம் கி.மீ.-ல்)

வகைபாடு	ஒரு வழித்தடம்	இடை வழித்தடம்	இரு வழித்தடம்	கடின புருவங்களுடன் கூடிய இரு வழித்தடம்	நான்கு வழித்தடம்	ஆறு வழித்தடம்	எட்டு வழித்தடம்	மொத்தம்
தேசிய நெடுஞ் சாலைகள்	—	—	1602	2212	2649	333	9	6805
மாநில நெடுஞ் சாலைகள்	39	366	7519	2651	1466	250	—	12291
மாவட்ட முக்கிய சாலைகள்	745	5416	5412	405	53	3	—	12034
மாவட்ட இதர சாலைகள்	33505	7029	1433	78	12	—	—	42057
மொத்தம்	**34289**	**12811**	**15966**	**5346**	**4180**	**586**	**9**	**73187**

பாலங்களின் விவரங்கள்

வ. எண்	பாலங்களின் வகைகள்	எண்ணிக்கைகள்
1	மிகச் சிறு பாலங்கள்	129810
2	பெரிய பாலங்கள் மற்றும் சிறு பாலங்கள்*	9183
3	சாலை மேம்பாலங்கள்	75
4	இருப்புப்பாதை கடவுகளில் உள்ள இரயில்வே மேம்பாலங்கள்	145
5	இருப்புப்பாதை கடவுகளில் உள்ள இரயில்வே கீழ்பாலங்கள்	59
6	பாதசாரிகள் சுரங்கப்பாதைகள் / வரையறுக்கப்பட்ட சுரங்கப்பாதைகள்	15
	மொத்தம்	**139287**

*இதில் 6 மீட்டர் முதல் 60 மீட்டர் வரை நீர் வழிப்பாதை உள்ள சிறிய பாலங்கள் மற்றும் 60 மீட்டருக்கு மேல் நீர் வழிப்பாதை உள்ள பெரிய பாலங்கள் அடங்கும்.

1.2 சிறு துறைமுகங்கள்

1076 கி.மீ. நீளமுள்ள கடற்கரையைக் கொண்டுள்ள தமிழ்நாட்டில் சென்னை, எண்ணூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய மூன்று பெரிய துறைமுகங்களும் பதினேழு சிறு துறைமுகங்களும் உள்ளன. பெரிய துறைமுகங்கள் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டிலும் மற்றும் சிறு துறைமுகங்கள் தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டிலும் உள்ளன.

1.3 பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்

பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழகம் 11-4-1974 அன்று நிறுவனங்கள் சட்டம் 1956-ன்படி நிறுவப்பட்டது. மின்சார

2023 ஏப்ரல் 1]

உற்பத்திக்காக நிலக்கரியை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு எடுத்துச் செல்வது முக்கிய பணியாகும். மேலும், சுற்றுலா வளர்ச்சியை ஊக்குவிக்க, கன்னியாகுமரி கடற்கரையிலிருந்து விவேகானந்தர் நினைவுப் பாறை மற்றும் அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு படகுப் போக்குவரத்தும் இயக்கப்படுகிறது.

1.4 நீடித்த வளர்ச்சி இலக்குகள் (SDG)

2030 ஆம் ஆண்டிற்குள் பொருளாதாரம், சுற்றுச்சூழல் மற்றும் சமூக அம்சங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக உலகளாவிய அளவில் 2015 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபை 17 நிலையான நீடித்த வளர்ச்சி இலக்குகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய 169 இலக்குகளை நிர்ணயித்துள்ளது.

நீடித்த வளர்ச்சி இலக்குகளுடன் தொடர்புடைய வெவ்வேறு துறைகளின் செயல்திறனைக் கண்காணிக்க தமிழ்நாடு அரசு மாநில அளவிலான இலக்குகள் மற்றும் குறியீடுகளை வகுத்துள்ளது. கீழ்க்கண்ட இலக்குகளுடன் தொடர்புடைய சிறப்புக் குறியீடுகள் நெடுஞ்சாலைத் துறைக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

இலக்கு 3 - அனைவருக்கும் அனைத்து வயதிலும் ஆரோக்கியமான வாழ்வு மற்றும் நல்வாழ்வை உறுதிசெய்தல்.

குறிக்கோள் 3.6: *2020 ஆம் ஆண்டிற்குள் உலக அளவில் சாலை போக்குவரத்தால் நிகழும் சாலை விபத்துகள் மற்றும் உயிரிழப்புகளை பாதியாகக் குறைத்தல்.*

மேற்கண்ட குறியீடானது 2020 ஆம் ஆண்டிற்குள் சாலை விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகளை பாதியாகக் குறைப்பதற்கானதாகும். சாலை சந்திப்புகளை மேம்படுத்துதல், விபத்து நடக்கும் இடங்களைச் சீராக்குதல் மற்றும் பிற பாதுகாப்பு நடவடிக்கை போன்ற சாலை பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. விபத்துகளைக் குறைப்பதற்காக சாலைப் பாதுகாப்புத் திட்டங்கள் குறித்து பங்களிப்பு துறைகளுடன் விழிப்புணர்வு ஏற்படுத்த சிறப்பு இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த சாலைப் பொறியியல், சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு, சுகாதாரம் மற்றும் போக்குவரத்து

விதிகளின் அமலாக்கம் ஆகியவற்றை ஒருங்கிணைப்பதன்மூலம் சாலை விபத்துகளைக் குறைக்க முடியும். பொதுமக்களுக்கு பாதுகாப்பான சாலைகளை வழங்குவதில் இத்துறை முனைப்புடன் செயல்பட்டுவருகிறது. மேலும், மேற்கண்ட இலக்கை அடைய போக்குவரத்து, சுகாதாரம், காவல் மற்றும் கல்வித் துறைகள் போன்ற பங்களிப்பு துறைகளுடன் ஒருங்கிணைத்து செயல்பட்டு வருகிறது.

இலக்கு 9 - தொழில்மயமாக்கல், புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் உட்கட்டமைப்பை உருவாக்குதல்-நெகிழ்திறன்மிக்க உட்கட்டமைப்பை உருவாக்குதல், அனைத்தையும் உள்ளடக்கிய நிலையான தொழில்மயமாதலை மேம்படுத்தும் வகையில் புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவித்தல்.

<u>குறிக்கோள் 9.1:</u> அனைவரும் பெறத்தக்க வகையிலான தகுந்த பொருளாதார வளர்ச்சி மற்றும் நல்வாழ்வினை மக்களுக்கு அளிப்பதற்கான மண்டலம் மற்றும் எல்லை மண்டலங்களுக்கிடையேயான தரமான, நம்பகமான, நிலையான மற்றும் நெகிழ்திறன்மிக்க உட்கட்டமைப்பை மேம்படுத்துதல்.

பொருளாதார வளர்ச்சிக்கு வலுவான மற்றும் நம்பகமான உள்கட்டமைப்பை வழங்குவதே இந்த இலக்கின் நோக்கமாகும்.

மேலே உள்ள குறிகாட்டியின் செயல்திறன் பின்வருமாறு:

மாநில குறிக்காட்டியின் கட்டமைப்பு –9.1.1 அ சாலையின் நீளம்

வ. எண்	குறியீடுகள்	2015 (அடிப்படை ஆண்டு)	2021	2022
1	9.1.1ஆ-மொத்த மாநில நெடுஞ்சாலைகளின் நீளம் (கி.மீ.)	12093	11279	12291
2	9.1.1ஆ.1-மாநில நெடுஞ்சாலைகளில் நான்கு வழித்தட சாலைகளின் நீள விகிதம் (%)	-	9.02	13.96

2023 ஏப்ரல் 1]

வ. எண்	குறியீடுகள்	2015 (அடிப்படை ஆண்டு)	2021	2022
3	9.1.1இ-மாவட்ட முக்கிய சாலைகளின் நீளம் (கி.மீ.)	11617	11625	12034
4	9.1.1இ.1-மாவட்ட முக்கிய சாலைகளில் இருவழித்தட சாலைகளின் நீள விகிதம் (%)	27.23	40.16	48.80
5	9.1.1ஈ-மாவட்ட இதர சாலைகளின் நீளம் (கி.மீ.)	33756	41052	42057
6	9.1.1ஈ.1-மாவட்ட இதரச் சாலைகளில் உள்ள இருவழித்தட சாலைகளின் நீள விகிதம் (%)	2.51	3.24	3.62
7	9.1.1ஈ.2-மாவட்ட இதரச் சாலைகளில் உள்ள ஒருவழித்தட சாலைகளின் நீள விகிதம் (%)	88.01	80.54	79.67

நிலையான மற்றும் தரமான சாலை கட்டமைப்பை வழங்குவதற்காக மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகளின் திறனை மேம்படுத்துவதில் இத்துறை பெரும் பங்காற்றுகிறது.

2. நிர்வாக அமைப்பு

தமிழ்நாடு அரசானது மாநிலத்தின் சாலை மற்றும் பாலப் பணிகளை பிரத்தியேகமாக மேற்கொள்ள 1946 ஆம் ஆண்டிலேயே புதிதாக நெடுஞ்சாலைத் துறையினை உருவாக்கி தனித்துவ அடையாளத்தினைக் கொண்டது. பொதுப் பணித் துறையின் ஒரு பகுதியாக இருந்துவந்த நிலையில் தற்போது தனித் துறையாக உள்ளது. 1996-ம் ஆண்டு அரசுச் செயலாளர் பதவி உருவாக்கப்பட்டது. சிறு துறைமுகங்கள் இத்துறையின்கீழ் கொண்டு வரப்பட்ட பின்னர் நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

[2023 ஏப்ரல் 1

நெடுஞ்சாலைத் துறை தொடங்கப்பட்டு 01.04.2022 அன்றுடன் 75 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. இத்துறையானது 75 ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு, தனது பவள விழாவை 01.05.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் கொண்டாடியது.

முதன்மை இயக்குநரின் ஒருங்கிணைந்த செயல்பாடுகளுடன் இத்துறை செயல்பட்டு வருகிறது. நடைபெற்று வரும் பணிகளின் தரத்தை கண்காணிக்க தரக்கட்டுப்பாடு என பிரத்யேக பிரிவும் உள்ளது.

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின் நிர்வாக அமைப்பு மற்றும் செயல்பாடுகள் கீழ்க்கண்டவாறு:

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை

நெடுஞ்சாலைத் துறை அலகுகள்	**நிறுவனங்கள்/கழகங்கள்/வாரியம்**
• முதன்மை இயக்குநர் அலுவலகம் • கட்டுமானம் மற்றும் பராமரிப்பு • தேசிய நெடுஞ்சாலை • நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் • திட்டங்கள் • பெருநகரம் • நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் • திட்டம், வடிவமைப்பு மற்றும் ஆய்வு • தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்—II • சென்னை கன்னியாகுமரி தொழிற்தட திட்டம்/ சென்னை எல்லைச் சாலை திட்டம்	• தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் • தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் • தமிழ்நாடு கடல்சார் வாரியம் • பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்

2023 ஏப்ரல் 1]

2.1 செயல்பாடுகள்

2.1.1 முதன்மை இயக்குநர் அலுவலகம்

சீரான மற்றும் திறன்மிகு செயல்பாட்டிற்காகவும், ஏனைய அலகுகளின் பணிகளை ஒருங்கிணைக்கவும் முதன்மை இயக்குநர் பதவி உருவாக்கப்பட்டுள்ளது. அனைத்து தொழில்நுட்பக் குழுக்களுக்கும் முதன்மை இயக்குநர் தலைவராவார்.

- மனித வளம் மற்றும் பணியாளர் நிர்வாகம்
- சுமுகமான மற்றும் பயனுள்ள செயல்பாட்டிற்காக இத்துறையின் அலகுகள் மற்றும் பிற துறைகளுடன் ஒருங்கிணைப்பு
- பணி தொடர்பான மேல்முறையீடுகள், புகார்கள் மற்றும் நீதிமன்ற வழக்குகள்
- தகவல் தொழில்நுட்ப முன்முயற்சிகள் மற்றும் வலைத்தளங்களின் பராமரிப்பு,
- அரசால் அவ்வப்போது ஒதுக்கப்படும் பணிகள்
- பின்வரும் தொழில்நுட்பக் குழுக்களில் நிரந்தர உறுப்பினராகப் பங்கேற்பது;
- பொறியாளர்கள் குழுமம் (BoE) முதன்மை இயக்குநர், அனைத்து தலைமைப் பொறியாளர்கள் மற்றும் இயக்குநர், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் ஆகியோரைக் கொண்டுள்ள குழுவாகும். இக்குழு முக்கிய தொழில்நுட்பம் சார்ந்த பிரச்சினைகளுக்கு கொள்கை அளவில் முடிவுகள் எடுக்க அதிகாரம் கொண்டதாகும்.

ஒப்பந்தப்புள்ளி ஆணையம் (CoT) ஒப்பந்தப்புள்ளி ஏற்கும் வழிமுறையினை பரிந்துரைக்கவும் மற்றும் முறைப்படுத்தவும் அரசு நிதித் துறைச் செயலாளர் / பிரதிநிதி, முதன்மை இயக்குநர், தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு), தலைமைப் பொறியாளர் (நபார்டு மற்றும் கிராமச் சாலைகள்) மற்றும் சம்பந்தப்பட்ட பணியின் தலைமைப் பொறியாளர்களைக் கொண்டுள்ள குழுவாகும்.

திருத்திய நிர்வாக ஒப்புதலுக்கான குழு (RASC) இக்குழு, முதன்மை இயக்குநர், சம்பந்தப்பட்ட பணியின் தலைமைப்

[2023 ஏப்ரல் 1

பொறியாளர், தலைமைப் பொறியாளர் (திட்டம், வடிவமைப்பு மற்றும் ஆய்வு), அரசு கூடுதல் / துணைச் செயலாளர் (நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை) மற்றும் அரசு துணைச் செயலாளர் (நிதித் துறை) ஆகியோரைக் கொண்ட குழுவாகும் மற்றும் திருத்திய நிர்வாக ஒப்புதலுக்காக பணிகளில் ஏற்படும் தொழிநுட்ப மாறுதல்களை அரசுக்குப் பரிந்துரை செய்யும் அதிகாரம் கொண்ட குழுவாகும்.

தொழில்நுட்ப தணிக்கை குழு (TAC) திட்டப் பணிகளுக்கான தொழில்நுட்ப ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களை வழங்குவதற்காக முதன்மை இயக்குநர், இயக்குநர், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் மற்றும் அனைத்து தலைமைப் பொறியாளர்களை உள்ளடக்கிய குழுவாகும்.

நியமனங்கள்

2022-2023 ஆம் ஆண்டில், 178 இளநிலை வரைத்தொழில் அலுவலர் பதவி மற்றும் ஒரு இளநிலை உதவியாளர் பதவியும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுமத்தின் (TNPSC) தேர்வின்மூலம் நிரப்பப்பட்டுள்ளது. மேலும், 40 இளநிலை உதவியாளர், 5 தட்டச்சர், ஒரு உதவி வரைவாளர், 15 பதிவுரு எழுத்தர், 15 அலுவலக உதவியாளர் பதவிகள் கருணை அடிப்படையிலான பணி நியமனங்கள்மூலம் நிரப்பப்பட்டுள்ளன.

இவ்வலகு, முதன்மை இயக்குநர் தலைமையில் 3 இணை இயக்குநர்களைக் கொண்டுள்ளது.

2.1.2 கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகு

- தற்போதுள்ள சாலைகள் மற்றும் பாலங்களைப் பராமரித்தல்.
- சாலைகளை அகலப்படுத்துதல், பலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்.
- சிறப்பு / அவசர வெள்ளச் சீரமைப்பு பணிகள்.
- சாலைப் பாதுகாப்பு தொடர்பான பணிகள்.
- பிரதான கட்டமைப்புகளை உருவாக்குதல்.

2023 ஏப்ரல் 1]

இவ்வலகு, தலைமைப் பொறியாளர் தலைமையில் 9 கண்காணிப்புப் பொறியாளர்கள் மற்றும் 44 கோட்டப் பொறியாளர்களைக் கொண்டுள்ளது.

2.1.3 தேசிய நெடுஞ்சாலைகள் அலகு

- தேசிய நெடுஞ்சாலைகளை அகலப்படுத்துதல், உறுதிப்படுத்துதல் மற்றும் சாலைப் பாதுகாப்பு பணிகள் போன்ற மேம்பாடு மற்றும் பராமரிப்புப் பணிகள்.
- பாலங்கள்/ மேம்பாலங்கள், இரயில்வே மேம்பாலங்கள் கட்டுதல்.
- வெள்ளச் சேதங்களைச் சீரமைக்கும் பணிகள்.

இவ்வலகு, தலைமைப் பொறியாளர் தலைமையில், 5 கண்காணிப்புப் பொறியாளர்கள் மற்றும் 17 கோட்டப் பொறியாளர்களைக் கொண்டுள்ளது.

2.1.4 நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் அலகு

- நபார்டு வங்கி கடனுதவி மற்றும் மாநில நிதியின்கீழ் ஆற்றுப் பாலங்கள் அமைத்தல்.
- ஊராட்சி ஒன்றிய / ஊராட்சி சாலைகளை மாநில நிதியின்கீழ் இதர மாவட்ட சாலைகளாகத் தரம் உயர்த்துதல்.
- புறவழிச் சாலைகள் அமைத்தல்.
- இரயில்வே திட்டப் பணியின்கீழ் இரயில்வே மேம்பாலம் / இரயில்வே கீழ்பாலங்கள் அமைத்தல்.

இவ்வலகு, தலைமைப் பொறியாளர் தலைமையில், 4 கண்காணிப்புப் பொறியாளர்கள் மற்றும் 14 கோட்டப் பொறியாளர்களை கொண்டுள்ளது.

2.1.5 திட்டங்கள் அலகு

- இரயில்வே திட்டப் பணிகள் மற்றும் மாநில நிதியின்கீழ் இரயில்வே மேம்பாலங்கள் / கீழ்பாலங்கள் அமைத்தல்.
- முக்கிய ஆற்றுப் பாலங்கள் அமைத்தல்.

[2023 ஏப்ரல் 1

- *குறுகலான மற்றும் பாழடைந்த பாலங்களுக்குப் பதிலாக உயர்மட்ட பாலங்கள் அமைத்தல்.*
- *சாலை மேம்பாலங்கள் அமைத்தல்.*
- *உயர்மட்ட சாலைகள் அமைத்தல்.*
- *புறவழிச் சாலைகள் மற்றும் வட்டச் சாலைகள் அமைத்தல்.*

இவ்வலகு, தலைமைப் பொறியாளர் தலைமையில், 4 கண்காணிப்புப் பொறியாளர்கள் மற்றும் 11 கோட்டப் பொறியாளர்களைக் கொண்டுள்ளது.

2.1.6 பெருநகரம் அலகு

- *சென்னை பெருநகரப் பகுதியில் (*CMA*), பொதுமக்களின் பாதுகாப்பான தடையற்ற போக்குவரத்திற்காக, பல்வேறு போக்குவரத்து முறைகளை ஒருங்கிணைத்து, வாகனங்கள், பாதசாரிகள் மற்றும் மிதிவண்டியில் பயணிப்போருக்கான மேம்பட்ட வசதிகளுடன், நகர்ப்புற நெடுஞ்சாலை உட்கட்டமைப்பை விரிவாக மேம்படுத்தும் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.*
- *சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் (*CMDP*)கீழ், சாலை மேம்பாலங்கள், உயர்மட்டப் பாலங்கள், சாலை/ பாலங்களை அகலப்படுத்துதல், இணைப்புச் சாலைகள் அமைத்தல், புறவழிச்சாலைகள் அமைத்தல், நகரும் படிக்கட்டுகளுடன்கூடிய நடைமேம்பாலங்கள் போன்ற பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.*
- *இரயில்வே திட்டப் பணிகளின் (*Railway Works Programme*)கீழ், இரயில்வே மேம்பாலங்கள் / கீழ்ப்பாலங்கள் / வரையறுக்கப்பட்ட சுரங்கப்பாதை கட்டமைப்புகளில் அமைத்தல் / அகலப்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

இவ்வலகு, தலைமைப் பொறியாளர் தலைமையில், ஒரு கண்காணிப்புப் பொறியாளர் மற்றும் 5 கோட்டப் பொறியாளர்களைக் கொண்டுள்ளது.

2023 ஏப்ரல் 1]

2.1.7 நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்

- *புதுமையான தொழில்நுட்பங்கள் மற்றும் பொருட்கள் குறித்த ஆராய்ச்சி*
- *கட்டுமானப் பொருட்களைப் பரிசோதனை செய்தல்*
- *தொழில்நுட்ப ஆலோசனைகள்*
- *தரக் கட்டுப்பாடு*
- *திறன் மேம்பாட்டிற்கான பயிற்சி*
- *சாலைப் பாதுகாப்பு*

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் இயக்குநரின் தலைமையில்.

- *நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் இணை இயக்குநர், ஆராய்ச்சி (ம) பரிசோதனைகளுக்கு 4 துணை இயக்குநர்கள் மற்றும் தரக் கட்டுப்பாட்டிற்கு 9 கோட்டப் பொறியாளர்கள்.*
- *இணை இயக்குநர், பயிற்சி மையம் மற்றும் 2 துணை இயக்குநர்கள்*
- *கண்காணிப்புப் பொறியாளர், சாலைப் பாதுகாப்பு அலகு மற்றும் 8 கோட்டப் பொறியாளர்கள் ஆகியோருடன் இயங்குகிறது.*

2.1.8 திட்டம் வடிவமைப்பு மற்றும் ஆய்வு

- *ஆற்றுப் பாலம், இரயில்வே மேம்பாலம், இரயில்வே கீழ்ப்பாலம், சாலை மேம்பாலம், நடைமேம்பாலம் மற்றும் நெடுஞ்சாலையின் இதர கட்டமைப்புகளுக்கான வடிவமைப்புகள், வரைபடங்கள் மற்றும் மதிப்பீடுகள் ஆகியவற்றைத் தயாரித்தல்.*
- *துறையின் பல்வேறு அலகுகளிலிருந்தும் மற்றும் பிற அரசுத் துறைகளிடமிருந்தும் ஆலோசகர்கள்மூலம் தயாரிக்கப்படும் வடிவமைப்புகள் மற்றும் வரைபடங்களை சரிபார்த்து ஒப்புதல் வழங்குதல்.*
- *மிகப் பெரிய கனரக சுமையுந்துகள் பாலங்களில் செல்ல அனுமதி வழங்குவதற்கான தொழில்நுட்பப் பரிந்துரைகள் வழங்குதல்.*

இவ்வலகு, தலைமைப் பொறியாளர் தலைமையில், ஓர் இணை தலைமைப் பொறியாளர் மற்றும் 4 கோட்டப் பொறியாளர்களைக் கொண்டுள்ளது.

2.1.9 தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் II (TNRSP II)

- தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை மற்றும் முக்கிய மாவட்ட சாலைகளை இணைக்கும் அதிக போக்குவரத்து நெரிசல் மிகுந்த சாலைகளை மேம்படுத்துதல்.
- வாகனங்களின் பயண நேரம் மற்றும் இயக்கச் செலவை குறைக்கும் வகையில் சாலையின் தரத்தை உயர்த்துதல்.
- பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமானம் (EPC), பொது தனியார் பங்களிப்பு (PPP) மற்றும் வெளித்திறன் மற்றும் செயல்பாட்டு அடிப்படையிலான சாலை பராமரிப்பு ஒப்பந்தம் (OPRC) போன்ற சிறந்த ஒப்பந்த முறைகளை பயன்படுத்துதல்.
- திட்டச் சாலைகளில் சாலை விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகளைக் குறைக்க, பல துறைகள் ஒருங்கிணைப்பின்மூலம் சாலை பாதுகாப்பை மாநில மற்றும் மாவட்ட அளவில் மேம்படுத்துதல்.

இந்த அலகானது திட்ட இயக்குநர் தலைமையில் தலைமைப் பொறியாளர், 2 கண்காணிப்புப் பொறியாளர்கள் மற்றும் 8 கோட்டப் பொறியாளர்கள் ஆகியோருடன் 3 தனி மாவட்ட வருவாய் அலுவலர்களை உள்ளடக்கிய நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு பிரிவுகளை உள்ளடக்கியதாகும்.

2.1.10 சென்னை கன்னியாகுமரி தொழிற்தடத் திட்டம் (CKICP)

சென்னை கன்னியாகுமரி தொழில்தட பயன்விளைப் பகுதிகளை இணைக்கும் சாலைகளை மேம்படுத்துதல் இவ்வலகின் செயல்பாடாகும். தற்போது, 589 கி.மீ. 16 மாநில நெடுஞ்சாலைகள் ஆசிய வளர்ச்சி வங்கியின் கடனுதவியுடன் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

இவ்வலகு, திட்ட இயக்குநர் தலைமையில், தலைமைப் பொறியாளர், 2 கண்காணிப்புப் பொறியாளர்கள், 6 கோட்டப் பொறியாளர்கள் மற்றும் நிலம் கையகப்படுத்தும் பிரிவில் 4 சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர்கள் ஆகியோரைக் கொண்டுள்ளது.

2023 ஏப்ரல் 1]

2.1.11 தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் (TNRDC)

- *அக்கரை முதல் மாமல்லபுரம் வரையிலான கிழக்கு கடற்கரை சாலையினை சுங்கச் சாலையாகப் பராமரித்தல்.*
- *சென்னை வெளிவட்ட சாலை திட்ட மேலாண்மை முகவராக செயல்படுதல்.*
- *சென்னை எல்லை சாலை திட்டம் பிரிவு-1 மற்றும் பிரிவு-5 திட்ட மேலாண்மை முகவராக செயல்படுதல்.*
- *பழைய மாமல்லபுரம் சாலை கட்டம்-2-ல் கேளம்பாக்கம் மற்றும் திருப்போரூர் புறவழிச்சாலைப் பணிகளுக்கு திட்ட மேலாண்மை முகவராக செயல்படுதல்.*
- *இராஜீவ் காந்தி சாலையில் "U" வடிவ மேம்பாலங்கள் கட்டுமானப் பணிக்கு திட்ட மேலாண்மை முகவராக செயல்படுதல்.*

தகவல் தொழில்நுட்ப விரைவுச் சாலை நிறுவனத்தின் (ITEL) செயல்பாடுகள் - தமிழ்நாடு சாலை மேம்பாட்டின் துணை நிறுவனம்

இராஜீவ் காந்தி தகவல் தொழில்நுட்ப விரைவுச் சாலையை (மத்திய கைலாஷ் முதல் சிறுசேரி வரை) சுங்கச் சாலையாகப் பராமரித்தல்

தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் மற்றும் தகவல் தொழில்நுட்ப விரைவுச் சாலை நிறுவனங்கள் TIDCO *மற்றும்* TIDEL *உறுப்பினர்களுடன், அரசாங்கத்தால் பரிந்துரைக்கப்பட்டவர்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தலைமையில் தன்னிச்சை இயக்குநர்கள் ஆகியோர்களால் நிர்வகிக்கப்படுகிறது.*

இந்நிறுவனம், நிர்வாக இயக்குநர் அவர்களால் தலைமைப் பொது மேலாளர், பொது மேலாளர், முதுநிலை மேலாளர்கள், மேலாளர்கள், பொறியாளர்கள் மற்றும் பணியாளர்களைக் கொண்டு நிர்வகிக்கப்படுகிறது.

[2023 ஏப்ரல் 1

2.1.12 தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் (TNRIDC)

தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம், மேலாண்மை முகவராக மாநில மற்றும் பன்னாட்டு நிதியுடன் திட்டங்களைச் செயல்படுத்தும் ஒரு இலாப நோக்கற்ற நிறுவனமாகும். செயல்படுத்தப்படும் திட்டங்கள் பின்வருமாறு:

- சென்னை எல்லைச் சாலை திட்டம் பிரிவு II, III மற்றும் IV கட்டுமானப் பணிகள்
- மதுரை வட்டச்சாலை
- சிங்க பெருமாள் கோயில் அருகே இரயில்வே கடவு எண் 47-க்குப் பதிலாக இரயில்வே மேம்பாலம் கட்டுதல்
- படப்பை சந்திப்பில் சாலை மேம்பாலத்துடன்கூடிய ஒரகடம் தொழில் வழித்தடத்தில் உள்ள பணிகள்

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின் செயலாளர், நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் ஆவார். இந்நிறுவனத்தின் இயக்குநர்கள் குழுவில் பல்வேறு அரசுத் துறைகளின் அதிகாரிகள் உள்ளனர். நிறுவனத்தின் செயல்பாடுகளைக் கவனிப்பதற்கு தலைமைப் பொறியாளர் நிலையில் நிர்வாக இயக்குநர் உள்ளார். நிர்வாக இயக்குநருக்கு உதவியாக, ஒரு கண்காணிப்புப் பொறியாளர் மற்றும் 3 கோட்டப் பொறியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

2.1.13 தமிழ்நாடு கடல்சார் வாரியம் (TNMB)

- ஏற்றுமதி மற்றும் துறைமுகம் சார்ந்த தொழில்களை ஊக்குவிப்பதற்கான துறைமுக வசதிகளை வழங்குதல்.
- உள்நாட்டு மற்றும் சர்வதேச வர்த்தகத்தை ஊக்குவிப்பதற்கான வசதிகள் மற்றும் சேவைகளை வழங்குவதன்மூலம் தென் மாநிலங்களின் அதிகரித்து வரும் போக்குவரத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்தல்.
- போதுமான துறைமுகம் தொடர்பான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்.
- பல்வேறு வகையான எரிபொருளை இறக்குமதி செய்வதற்கான பிரத்தியேக துறைமுக வசதிகளை

வழங்குவதன்மூலம் துறைமுகத்தை அடிப்படையாகக் கொண்ட அனல் மின் நிலையங்களை ஊக்குவித்தல்.

- மாநிலத்தில் உருவாக்கப்பட்ட துறைமுக உள்கட்டமைப்பை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு வசதி செய்தல்.

தமிழ்நாடு கடல்சார் வாரியமானது, மாண்புமிகு அமைச்சர், பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அவர்களின் தலைமையில் செயல்படுகிறது.

2.1.14 பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்

- இந்தியாவின் கிழக்குக் கடற்கரை வழியாக நிலக்கரி எடுத்து வருதல்.
- கன்னியாகுமரியில் படகுத் துறையிலிருந்து விவேகானந்தர் நினைவுப் பாறை மற்றும் அய்யன் திருவள்ளுவர் சிலைக்குப் பயணிகளுக்கான படகுப் போக்குவரத்து மேற்கொள்ளுதல்.

இந்நிறுவனம், தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் மற்றும் 9 இயக்குநர்களுடன் செயல்படுகிறது. தற்போது, வாரியமானது அரசு துறைகள் மற்றும் TANGEDCO நிறுவனத்திலிருந்து 8 இயக்குநர்கள் மற்றும் ஒரு தன்னிச்சை இயக்குநர் ஆகியோரைக் கொண்டுள்ளது.

3. பெரும் திட்டங்கள்/பணிகள்

மாநிலத்தின் சமூக-பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும், சாலைகளின் திறனை அதிகரிக்கவும், அனைத்து இடங்களை இணைக்கும் வகையிலும், திறனான மற்றும் பாதுகாப்பான சாலை கட்டமைப்பை அமைப்பதே நெடுஞ்சாலைத் துறையின் கொள்கை ஆகும். மாநில அரசு, ஒன்றிய அரசு மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் நிதியைப் பயன்படுத்தி தேவையான சாலைப் பணிகளையும் பாலப் பணிகளையும் செயல்படுத்தி சாலைப் பயனாளர்களின் தேவைகளை நிறைவு அடையச் செய்வதே இத்துறையின் நோக்கமாகும். சாலைகளை அகலப்படுத்துதல், உறுதிப்படுத்துதல் மற்றும் மேம்படுத்தக்கூடிய சாலைகளை அடையாளம் காண ஒருங்கிணைந்த விரிவான போக்குவரத்து ஆய்வு தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

3.1 மாநில நிதித் திட்டங்கள்/ பணிகள்

3.1.1 ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (CRIDP)

மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் இதர மாவட்டச் சாலைகளின் திறனை மேம்படுத்துதல் மற்றும் அதிகரித்து வரும் வாகனப் போக்குவரத்திற்கு ஏற்ப சீரான மற்றும் பாதுகாப்பான சாலைகளை உறுதி செய்வதற்காக சாலைகளை வலுப்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கமாகும். மேம்படுத்தப்பட்ட சேவை நிலைகளை அளிக்கும் பணிகள், சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் போன்ற பணிகள் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ் கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ.7723.41 கோடி மதிப்பில் 4503 கி.மீ. நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்தும் / மேம்படுத்தும் பணிகள் மற்றும் 1343 எண்ணிக்கையிலான சிறுபாலங்கள் / பாலப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், ரூ.1233.94 கோடி மதிப்பில் 4016 கி.மீ. நீளமுள்ள சாலைகளில் ஓடுதள தரத்தினை மேம்படுத்தும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

3.1.1.1 முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டம் (CMRDP)

இத்திட்டமானது 2021-22 பட்ஜெட் கூட்டத்தொடரில் அறிவிக்கப்பட்டது, அடுத்த 10 ஆண்டுகளில் 2200 கி.மீ. இருவழித்தட சாலைகளை நான்கு வழிதடச் சாலைகளாகவும், 6700 கி.மீ. நீளமுள்ள ஒரு வழித்தட மற்றும் இடைவழித்தட சாலைகளை இருவழிச் சாலைகளாகவும் அகலப்படுத்தும் பணியை மேற்கொள்கிறது. போக்குவரத்து செறிவு மற்றும் மேம்பாடுகளின் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் சாலைகளைத் தேர்வு செய்து முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

255.02 கி.மீ. நீளமுள்ள முக்கியமான மாநில நெடுஞ்சாலைகளை நான்கு வழித்தட சாலைகளாக அகலப்படுத்தும் பணிகள் ரூ.2123.64 கோடி மதிப்பில் 2021-22-ல் மேற்கொள்ளப்பட்டுள்ளன மற்றும் 639.10 கி.மீ. நீளமுள்ள இடைவழித்தட சாலையை இருவழித்தட சாலையாக அகலப்படுத்தும் பணிகள் ரூ.865.35 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2022-23 ஆம் ஆண்டில், 147.90 கி.மீ. நீளமுள்ள முக்கியமான மாநில நெடுஞ்சாலைகள் ரூ.1406.71 கோடி

2023 ஏப்ரல் 1]

மதிப்பில் 4 வழித்தட சாலையாகவும், 524.45 கி.மீ. நீளமுள்ள சாலைகள் ரூ.802.94 கோடி மதிப்பில் இருவழித்தடச் சாலையாகவும் இத்திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு செயலாக்கத்தில் உள்ளது. 30 கி.மீ. நீளமுள்ள சாலைகள் நான்கு வழித்தட சாலைகளாகவும் 550 கி.மீ. நீளமுள்ள சாலைகளை இருவழித்தட சாலைகளாகவும் அகலப்படுத்தும் பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

நான்கு வழித்தடமாக அகலப்படுத்தும் சில முக்கிய பணிகளின் விவரம் பின்வருமாறு:

1. *திருவண்ணாமலை மாவட்டத்தில் ரூ.133.00 கோடி மதிப்பில் ஆரணி - எட்டிவாடி சாலையில் கி.மீ.2/2 - 17/7-ல் இருவழித்தட சாலையிலிருந்து நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தும் பணி.*
2. *திருவள்ளூர் மாவட்டத்தில் ரூ.111.00 கோடி மதிப்பில் கொரட்டூர் - திண்ணனூர் - பெரியபாளையம் சாலையில் கி.மீ. 7/0 - 18/4-ல் இருவழித்தட சாலையிலிருந்து நான்கு வழித்தட சாலையாக அகலப்படுத்தும் பணி.*
3. *கடலூர் மாவட்டத்தில் ரூ.108.00 கோடி மதிப்பில், விருத்தாசலம்-தொழுதூர் சாலையில் கி.மீ.6/8 பிரிந்து மதனத்தூர் (வழி) ஜெயங்கொண்டம் வரை உள்ள சாலையை கி.மீ. 0/0 - 6/8-ல் இருவழித்தட சாலையிலிருந்து நான்கு வழித்தட சாலையாக அகலப்படுத்துதல் மற்றும் பலப்படுத்துதல்.*
4. *கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ரூ.80.00 கோடி மதிப்பில் ராயக்கோட்டை அத்திபள்ளி சாலை (SH-85) கி.மீ. 17/0 - 20/2-ல் இருவழித்தட சாலையிலிருந்து நான்கு வழித்தட சாலையாகவும், கி.மீ. 21/6-26/0, 33/4-36/0, 38/2, 37/10, 38/4, 39/320-39/8-ல் பல்வழிதடத்திலிருந்து நான்கு வழித்தட சாலையாகவும் அகலப்படுத்துதல் மற்றும் பலப்படுத்துதல்.*
5. *அரியலூர் மாவட்டத்தில் ரூ.65.00 கோடி மதிப்பில், விருத்தாசலம் - ஜெயங்கொண்டம் - மாதனத்தூர் சாலையை கி.மீ. 6/8 - 14/8 (மாநில நெடுஞ்சாலை 140)-ல் இருவழித்தட சாலையில் இருந்து நான்கு வழித்தட சாலையாக அகலப்படுத்துதல்.*

[2023 ஏப்ரல் 1

இரு வழித்தடமாக அகலப்படுத்தும் சில முக்கிய பணிகளின் விவரம் பின்வருமாறு:

1. *திண்டுக்கல் மாவட்டத்தில் ரூ.6.95 கோடி மதிப்பில், சித்தரேவு - சின்னாளம்பட்டி சாலையில் கி.மீ. 6/4 - 7/0, 7/4 - 9/0 ஆகிய இடங்களில் இடைவழித் தடத்திலிருந்து இருவழித்தடமாக மாற்றுதல்.*
2. *திருச்சி மாவட்டத்தில் ரூ.7.00 கோடி மதிப்பில், முசிறி - புலிவலம் சாலையில் (மா.மு.சா-276) கி.மீ. 0/0 - 4/0-ல் இடைவழித்தட சாலையிலிருந்து இருவழித்தட சாலையாக அகலப்படுத்துதல் மற்றும் பலப்படுத்துதல்.*
3. *இராமநாதபுரம் மாவட்டத்தில் ரூ.7.00 கோடி மதிப்பில் அஞ்சுகோட்டை - நீர்குன்றம் சாலையின் கி.மீ. 0/0 - 5/0-ல் வடிகால் அமைத்தல் மற்றும் இடைவழித் தட சாலையிலிருந்து இருவழித்தட சாலையாக அகலப்படுத்துதல்.*
4. *விழுப்புரம் மாவட்டத்தில் ரூ.7.00 கோடி மதிப்பில் ஆலங்குப்பம்-கோனேரிக்குப்பம் (வழி) அவனிப்பூர் சாலை (மா.மு.சா-748) கி.மீ. 0/0 - 4/0-ல் இருவழித்தட சாலையாக அகலப்படுத்துதல் மற்றும் பலப்படுத்துதல்.*
5. *செங்கல்பட்டு மாவட்டத்தில், ரூ.7.00 கோடி மதிப்பில், ஜி.எஸ்.டி சாலையிலிருந்து செய்யூர் சாலை (வழி) படலம் கி.மீ. 15/6-19/6-ல் இடைவழித்தட சாலையிலிருந்து இருவழித்தட சாலையாக அகலப்படுத்துதல் மற்றும் பலப்படுத்துதல்.*

3.1.1.2 மாநில நெடுஞ்சாலைகள்

மாநில நெடுஞ்சாலைகள் பொதுவாக மாவட்டத் தலைமையகங்களை பிற நெடுஞ்சாலைகள் மற்றும் முக்கிய உற்பத்தி/விற்பனை மையங்களுடன் இணைக்கின்றன. 2022-2203 ஆம் ஆண்டில் ரூ.2462.06 கோடி மதிப்பீட்டில் 428.82 கி.மீ. நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல், பலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் 32 பாலங்கள்/ சிறுபாலங்கள் கட்டுவதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 1]

மாநில நெடுஞ்சாலைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் முக்கிய பணிகள் பின்வருமாறு:

1. *கோயம்புத்தூர் மாவட்டத்தில், கோயம்புத்தூர் மாநகரில் ரூ.250.00 கோடி மதிப்பீட்டில் முதற்கட்டமாக மேற்கு வட்டச் சாலை கி.மீ. 0/0 - 11/8-ல் அமைத்தல்.*

2. *திருவண்ணாமலை மாவட்டத்தில் ரூ.80.00 கோடி மதிப்பீட்டில் திருவண்ணாமலை - அரூர் சாலை (வழி) தானிப்பாடியில் கி.மீ. 19/0 - 20/6, 22/0 - 24/4, 29/0 - 31/0 மற்றும் 37/0 - 40/0 ஆகிய இடங்களில் இருவழித்தட சாலையிலிருந்து நான்கு வழித்தட சாலையாக அகலப்படுத்துதல் மற்றும் பலப்படுத்துதல்.*

3. *திருப்பூர் மாவட்டத்தில், ரூ.58.00 கோடி மதிப்பீட்டில் பல்லடம் - தாராபுரம் சாலையில் கி.மீ. 0/0 முதல் 6/0 வரை இருவழித்தட சாலையை நான்கு வழித்தட சாலையாக அகலப்படுத்துதல்.*

4. *திருநெல்வேலி மாவட்டத்தில் ரூ.51.00 கோடி மதிப்பீட்டில் திருநெல்வேலி புறவழிச்சாலையில் கி.மீ. 1/4 - 3/369, 4/071 - 4/6, 5/5 - 7/4 ஆகிய இடங்களில் கடின புருவங்களுடன் கூடிய இருவழித்தடத்திலிருந்து நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்துதல்.*

5. *வேலூர் மாவட்டத்தில் ரூ.15.50 கோடி மதிப்பீட்டில் திருவலம் - காட்பாடி - வெங்கடகிரிக்கோட்டை சாலையில் கி.மீ.7/8 - 10/0-ல் கடின புருவங்களுடன்கூடிய இருவழித்தடத்திலிருந்து நான்கு வழித்தட சாலையாக அகலப்படுத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

கூடுதலாக, ரூ.3892.98 கோடி மதிப்பில் 767.84 கி.மீ. நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல் / மேம்படுத்துதல் மற்றும் 102 பாலங்கள் மற்றும் சிறுபாலங்கள் கட்டும் நிலுவைப் பணிகள் செயலாக்கத்திற்காக தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ரூ.1946.71 கோடி மதிப்பில் புதிய பணிகள் உள்பட 476.03 கி.மீ. நீளமுள்ள சாலைகள் மற்றும் 73 பாலங்கள் / சிறுபாலங்களை அகலப்படுத்துதல் / மேம்படுத்துதல் ஆகிய பணிகள் நிறைவுபெற்றுள்ளன.

[2023 ஏப்ரல் 1

3.1.1.3 மாவட்ட முக்கிய சாலைகள்

ஒரு மாவட்டத்தில் உற்பத்தி மற்றும் சந்தைகளுக்கு சேவை செய்யும் முக்கியமான சாலைகள் மாவட்ட முக்கிய சாலைகளாகும். இந்த சாலைகள் தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் மாநில நெடுஞ்சாலைகளுடன் உற்பத்தி மற்றும் விற்பனை மையங்களை இணைக்கின்றன. 2022-23 ஆம் நிதி ஆண்டில், 551.39 கி.மீ. நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல், பலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் பணிகள். 45 பாலங்கள்/சிறுபாலங்கள் ஆகியவை ரூ.1084.38 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளன.

மாவட்ட முக்கிய சாலைகளில் எடுத்துக்கொள்ளப்பட்ட முக்கிய பணிகள் பின்வருமாறு;

1. கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ரூ.6.40 கோடி மதிப்பில் பரிக்கல் பெரியசெவலை சாலையில் கி.மீ.3/3 - 6/0-ல் இடைவழித்தட சாலையிலிருந்து இருவழித்தட சாலையாக அகலப்படுத்துதல் மற்றும் பலப்படுத்துதல் மற்றும் கி.மீ. 3/0-3/3-ல் பலப்படுத்துதல்.

2. திண்டுக்கல் மாவட்டத்தில் ரூ.6.50 கோடி மதிப்பில் நகர்ப்புற மேம்பாடு திட்டத்தின்கீழ் சித்தரேவு-சின்னாளம்பட்டி சாலையில் கி.மீ. 18/8-19/960-ல் இடைவழித்தட சாலையிலிருந்து எல்லை வரை அகலப்படுத்துதல் மற்றும் பலப்படுத்துதல்.

3. புதுக்கோட்டை மாவட்டத்தில் ரூ.6.76 கோடி மதிப்பில் பட்டுக்கோட்டை - பேராவூரணி - அறந்தாங்கி சாலையில் கி.மீ.24/2 - 29/2-ல் இடைவழித்தட சாலையாக அகலப்படுத்துதல் மற்றும் பலப்படுத்துதல்.

4. நாகப்பட்டினம் மாவட்டத்தில், ரூ.6.88 கோடி மதிப்பில் கீவளூர் - கச்சனம் சாலையில் கி.மீ. 0/6 - 2/8 மற்றும் 14/0 - 15/0 ஆகிய இடங்களில் இடைவழித்தட சாலையிலிருந்து இருவழிச் சாலையாக அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்.

5. தருமபுரி மாவட்டத்தில், ரூ.6.80 கோடி மதிப்பில் பென்னாகரம் - நாகமரை சாலையில் கி.மீ.25/0 - 29/6-ல் இடைவழிச் சாலையிலிருந்து இருவழிப் பாதையாக அகலப்படுத்துதல் மற்றும் பலப்படுத்துதல்.

2023 ஏப்ரல் 1]

மேலும், ரூ.1574.28 கோடி மதிப்பில் 992.84 கி.மீ. நீளமுள்ள சாலைகளில் அகலப்படுத்துதல்/ மேம்படுத்துதல் மற்றும் 160 பாலங்கள்/ சிறுபாலங்கள் கட்டும் நிலுவைப் பணிகள் முடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ரூ.1150.05 கோடி மதிப்பில் புதிய பணிகள் உள்பட 838.79 கி.மீ. நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல் / மேம்படுத்துதல் மற்றும் 132 பாலங்கள் / சிறுபாலங்களை அமைத்தல் ஆகிய பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

3.1.1.4 மாவட்ட இதர சாலைகள்

மாவட்ட இதர சாலைகள் கிராமங்கள், சந்தை மையங்கள், வட்ட தலைமையகம் மற்றும் அருகிலுள்ள பிற முக்கிய சாலைகளுடன் இணைக்கின்றன. இந்தச் சாலைகள் கிராமப்புற பொருளாதாரத்தின் முதுகெலும்பாக உள்ளன. சாலைகளின் போக்குவரத்து செறிவின் அடிப்படையில் மாவட்ட இதர சாலைகள் ஒரு வழிப்பாதை அல்லது இடைவழித்தட சாலையாக பராமரிக்கப்படுகிறது. 2022-23 ஆம் நிதியாண்டில் ரூ.1430.01 கோடி மதிப்பிற்கு 896.47 கி.மீ. நீளமுள்ள சாலைகளை மேம்படுத்துதல், 168 பாலங்கள் / சிறுபாலங்கள் ஆகியவை எடுக்கப்பட்டுள்ளன.

எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள சில பணிகள் பின்வருமாறு;

1. தஞ்சாவூர் மாவட்டத்தில் ரூ.8.15 கோடி மதிப்பில் வல்லம் - கள்ளப்பெரம்பூர் சாலை கி.மீ.3/10 முதல் சிங்கப்பெருமாள்குளம் நகராட்சி எல்லை வரை உள்ள சாலையில் கி.மீ. 6/4-11/235 வரை அகலப்படுத்துதல்.
2. தூத்துக்குடி மாவட்டத்தில் மெய்ஞானபுரம்-காயாமொழி-தேரிக்குடியிருப்பு சாலையில் கி.மீ. 0/0 - 1/4, 2/8 - 8/635 ஆகிய இடங்களில் ரூ.6.90 கோடி மதிப்பில் ஒருவழிச் சாலையிலிருந்து இடைவழித்தட சாலையாக அகலப்படுத்துதல் மற்றும் பலப்படுத்துதல்.
3. ஈரோடு மாவட்டத்தில் ரூ.6.60 கோடி மதிப்பில் ஈரோடு வெளிவட்டச் சாலையின் கி.மீ. 2/6 - 3/4-ல் இருவழிச் சாலையிலிருந்து நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்துதல் மற்றும் பலப்படுத்துதல்.
4. நாமக்கல் மாவட்டத்தில், ரூ.6.50 கோடி மதிப்பில் சூலக்காடு - குழிவளவு சாலையில் கி.மீ. 0/0 - 4/040, 4/290 - 4/8, 5/0 - 7/0 ஆகிய இடங்களில் ஒருவழித்தட சாலையிலிருந்து இடைவழித்தட சாலையாக அகலப்படுத்துதல் மற்றும் பலப்படுத்துதல்.

[2023 ஏப்ரல் 1

5. சேலம் மாவட்டத்தில், ரூ.6.80 கோடி மதிப்பில் கொளத்தூர் குருவரெட்டியூர் சாலையில் கி.மீ.0/0 - 4/6-ல் இடைவழித்தட சாலையிலிருந்து இருவழித்தட சாலையாக அகலப்படுத்துதல் மற்றும் பலப்படுத்துதல்.

மேலும், ரூ.2213.73 கோடி மதிப்பில் 1406.45 கி.மீ. நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல்/ மேம்படுத்துதல் மற்றும் 697 பாலங்கள் / சிறுபாலங்கள் கட்டுதல் ஆகிய பணிகளை முடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ரூ.1662.87 கோடி மதிப்பில் புதிய பணிகள் உள்பட 1211.07 கி.மீ. நீளமுள்ள சாலைகள் மற்றும் 567 பாலங்கள் / சிறுபாலங்களை அகலப்படுத்துதல் / மேம்பாடுகள் ஆகிய பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

3.1.1.5 மாவட்ட இதர சாலைகள் - சிறப்புக் கூறு திட்டம்

இத்திட்டத்தின்கீழ் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள்தொகையில் 40 விழுக்காட்டிற்கும் அதிகமான குடியிருப்புகளை இணைக்கும் சாலைகளில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2022-23 ஆம் ஆண்டில் ரூ.169.33 கோடி மதிப்பில் 139.63 கி.மீ. நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல், பலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதில் எடுக்கப்பட்ட சில முக்கிய பணிகள் பின்வருமாறு:

1. திருவாரூர் மாவட்டத்தில் ரூ.6.33 கோடி மதிப்பில் மாங்குடி - நாகலூர் - பெரியதம்பூர் சாலை கி.மீ. 0/0 - 4/2-ல் ஒருவழித்தட சாலையிலிருந்து இடைவழித்தட சாலையாக அகலப்படுத்துதல் மற்றும் பலப்படுத்துதல்.

2. திருப்பத்தூர் மாவட்டத்தில், ரூ.6.26 கோடி மதிப்பில் மட்றப்பள்ளி-புதூர்நாடு சாலையில் கி.மீ. 0/0-2/20 இல் ஒருவழித்தட சாலையிலிருந்து இடைவழித்தட சாலையாக அகலப்படுத்துதல் மற்றும் பலப்படுத்துதல் மற்றும் கி.மீ. 2/20-4/60-ல் பலப்படுத்துதல்.

3. நீலகிரி மாவட்டத்தில், ரூ.4.90 கோடி மதிப்பீட்டில் கைகாட்டி கொளக்கோம்பை சாலை கி.மீ.3/2 - 9/0-ல் பலப்படுத்துதல்.

2023 ஏப்ரல் 1]

4. கள்ளக்குறிச்சி மாவட்டத்தில், ரூ.5.10 கோடி மதிப்பீட்டில் சின்னசேலம் பாண்டியன்குப்பம் சாலையில் கி.மீ.0/0 முதல் 2/0 வரை ஒருவழித்தட சாலையிலிருந்து இடைவழித்தட சாலையாக அகலப்படுத்துதல் மற்றும் பலப்படுத்துதல்.

5. புதுக்கோட்டை மாவட்டத்தில், ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் ஆவுடையார்கோவில் - கோட்டைப்பட்டினம் சாலையை கி.மீ. 4/0 - 5/4, 7/0 - 8/0 ஆகிய இடங்களில் அகலப்படுத்துதல் மற்றும் பலப்படுத்துதல்.

மேலும், ரூ.183.55 கோடி மதிப்பில் 166.31 கி.மீ. நீளமுள்ள சாலைகளில் அகலப்படுத்துதல்/ மேம்படுத்துதல் போன்ற நிலுவைப் பணிகள் முடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ரூ.156.37 கோடி மதிப்பில் புதிய பணிகள் உள்பட 152.08 கி.மீ. நீளமுள்ள சாலைகள் / சிறுபாலங்களை அகலப்படுத்துதல் / மேம்படுத்துதல் ஆகிய பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

3.1.1.6 சாலை ஓடுதளப்பாதை மேம்பாட்டுத் திட்டம் (IRQP)

சாலைகளின் ஓடுதளப்பாதை ஐந்து ஆண்டுகளுக்கு பயனுறும் வகையில் வடிவமைக்கப்படுகிறது. புதுப்பித்தல் சுழற்சியைக் கருத்தில் கொண்டு சாலையின் சீரற்ற தன்மை குறியீடு அடிப்படையில் சாலைகளை வலுப்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் எடுக்கப்படுகிறது. 2022-23 ஆம் நிதியாண்டில் புதிய பணிகளாக, 1069.85 கி.மீ. நீளமுள்ள சாலை ஓடுதளப்பாதை மேம்பாட்டுப் பணிகள் ரூ.387.77 கோடி மதிப்பீட்டிற்கு மேற்கொள்ளப்பட்டு செயலாக்கத்தில் உள்ளன.

கடந்த ஆண்டில், ரூ. 880.10 கோடி மதிப்பில் 2058.64 கி.மீ. நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன. ரூ.780.26 கோடி மதிப்பில் புதிய பணிகள் உள்பட 2453.85 கி.மீ. நீளமுள்ள சாலை பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

3.1.1.7 நகர்ப்புற மேம்பாட்டுப் பணி

நகர்ப்புறப் பகுதிகளில் பன்முகத்தன்மை கொண்ட போக்குவரத்து காணப்படுவதால் போக்குவரத்து நெரிசல் காணப்படுகிறது. சீரான மற்றும் பாதுகாப்பான போக்குவரத்தை

[2023 ஏப்ரல் 1

நகர்ப்புறச் சாலைகளில் உறுதிசெய்ய சாலையின் எல்லை வரை கூடுமான வரை தளமிட்டு உறுதிப்படுத்த கவனம் செலுத்தப்பட வேண்டியதாகிறது. நகர்ப்புறப் பகுதிகள் மேம்பாட்டினை கருத்தில் கொண்டு மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள மாநில நெடுஞ்சாலை மற்றும் மாவட்ட முக்கிய சாலைகளில் தேவையான இடமிருப்பின் கடினபுருவங்களுடன் கூடிய நான்குவழித்தடமாக அகலப்படுத்தப்படும். சாலை பயனாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக இந்த மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2022-23 ஆம் ஆண்டில், 88 பணிகள் 42.54 கி.மீ. நீளத்தில் ரூ.281.81 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ரூ.244.41 கோடி மதிப்பில் 99.16 கி.மீ. நீளமுள்ள 98 நிலுவைப் பணிகள் வெவ்வேறு நிலைகளில் உள்ளன. புதிய பணிகள் உள்பட 58.02 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

3.1.1.8 வெள்ளச் சீரமைப்பு பணிகள்

2022-23 ஆம் ஆண்டில், டாக்டர். வி. திருப்புகழ் குழுவின் பரிந்துரையின் பேரில் சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வெள்ளப்பெருக்கைத் தடுக்க சிறிய / பெரிய வடிகால்கள் மற்றும் குறு பாலங்கள் என 14 பணிகளை ரூ.91.73 கோடி மதிப்பில் மேற்கொள்ள அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதில் 3148 மீட்டர் நீளமுள்ள வடிகால், 781 மீட்டர் நீளமுள்ள பெரிய வடிகால் மற்றும் 4 சிறுபாலங்கள் ரூ.80.39 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன.

3.1.1.9 சுற்றுலா மேம்பாடு

சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த சாலை இணைப்புகள் பாதுகாப்புடனும் எளிதில் அடையக்கூடிய வகையிலும் இருத்தல் முக்கியமானதாகும். சாலை உட்கட்டமைப்பானது சுற்றுலா வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த நிதியாண்டில் சுற்றுலாத் தலங்களை இணைக்கும் 20 பணிகள் ரூ.100.35 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சுற்றுலா மேம்பாட்டில் உள்ள முக்கியமான பணிகள் பின்வருமாறு:

2023 ஏப்ரல் 1]

1. சாத்தூர் - நென்மேனி - நாகலாபுரம் சாலையில் கி.மீ. 1/0 - 6/0 இல் இருக்கன்குடி மாரியம்மன் கோயில் பக்தர்களுக்கு ரூ.30.00 கோடி மதிப்பில் நடைபாதை அமைத்தல் மற்றும் அடிப்படை வசதிகள் செய்தல்.
2. ஸ்ரீநிவாசப் பெருமாள் கோயிலைச் சுற்றியுள்ள கிரிவலம் சாலை ரூ.5.00 கோடி மதிப்பில் அகலப்படுத்துதல்/ மேம்படுத்துதல்.

3.1.11.10 கரையோர கடல் அரிப்பை தடுக்கும் பணிகள்

2022-23 ஆம் நிதியாண்டில், கன்னியாகுமரி மாவட்டத்தில் நீரோடி - இரயுமன்துறை சாலை மற்றும் பொட்டல்-புத்தன்துறை-பள்ளம்துறை சாலையில் ரூ.41.00 கோடி மதிப்பில் கடல் அரிப்பு தடுப்புச் சுவர் அமைக்க அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. தொழில்நுட்ப விவரங்களை சேகரிப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. கடற்கரை ஒழுங்குமுறை மண்டலத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மீனவர்களின் நீண்ட நாள் கோரிக்கையான ஆரோக்கியபுரம் முதல் நீரோடி வரையிலான 47 கிராமங்களை இணைக்கும் வகையில் 79 கி.மீ. நீளத்திற்கு சின்னமுட்டம் துறைமுகம், குளச்சல் துறைமுகம் மற்றும் தேங்காய்ப்பட்டினம் துறைமுகத்தை இணைக்கும் வகையில் புதிய இணைப்புச் சாலை அமைக்க ரூ.75 இலட்சம் மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

3.1.1.11 தரைப்பாலங்களுக்குப் பதிலாக உயர்மட்ட பாலங்கள் கட்டுதல்

அனைத்து பருவங்களிலும் அருகிலுள்ள கிராமங்களுக்கு தடையற்ற இணைப்பை உறுதி செய்வது உயர்மட்ட பாலங்களின் நோக்கமாகும். இது, பள்ளிக் கூடம் செல்லும் குழந்தைகள் வெள்ள காலங்களில் கூடுதல் தூரம் பயணிக்காமல் பள்ளிக் கூடங்களுக்கு செல்ல உதவுகிறது. அனைத்து பருவ காலங்களிலும், விவசாயிகள் தங்கள் வேளாண் விளைபொருட்களை தாமதமின்றியும், கூடுதல் செலவு இல்லாமலும் சந்தை மையங்களுக்குக் கொண்டுச் செல்ல முடிகிறது. மேலும், பயண தூரம் மற்றும் வாகன இயக்கச் செலவும் கணிசமாகக் குறைக்கப்படுகிறது.

2021-2022 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்போது, அறிவிக்கப்பட்ட "அனைத்து பருவங்களிலும் தடையில்லா சாலைத்

தொடர்பு" திட்டத்தின்கீழ் "தற்போதுள்ள தரைப்பாலங்களுக்குப் பதிலாக, உயர்மட்ட பாலங்கள் 2026 ஆம் ஆண்டிற்குள் கட்டப்படும்" என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 2022-2023 ஆம் ஆண்டில் 215 தரைப்பாலங்களை உயர்மட்ட பாலங்களாக மாற்றும் பணிகள் பல்வேறு திட்டங்களின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. சென்ற வருடம் எடுத்துக்கொள்ளப்பட்ட 648 பணிகளில் 558 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன, மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

3.1.2 சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம் (CMDP-Chennai Metropolitan Development Plan)

சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் (CMDP - Chennai Metropolitan Development Plan)கீழ், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் (CMDA) ஒருங்கிணைந்த வாகனப்போக்கு மற்றும் போக்குவரத்து ஆய்வு (CTTS - Comprehensive Traffic and Transportation Study) மற்றும் இரண்டாவது முழுமைத் திட்டத்தின் அடிப்படையில் சென்னை பெருநகரப் பகுதியில் (CMA), பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன.

சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் (CMDP - Chennai Metropolitan Development Plan) கீழ், கடந்த இரண்டு வருடங்களில், கீழ்க்காணும் பணிகள் முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

1. 17.09.2022 அன்று ரூ.145.49 கோடி மதிப்பில் வேளச்சேரி விஜயநகரம் சந்திப்பில் இரண்டு அடுக்கு சாலை மேம்பாலம்.

2. 01.11.2021 அன்று ரூ.93.50 கோடி மதிப்பில் கோயம்பேட்டில் நான்கு வழித்தட சாலை மேம்பாலம்.

3. 13.05.2022 அன்று ரூ.95.21 கோடி மதிப்பில் மேடவாக்கம் சந்திப்பில், தாம்பரத்திலிருந்து வேளச்சேரி செல்லும் இரண்டு வழித்தட சாலை மேம்பாலம்.

சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் (CMDP)கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு திட்டப் பணிகளின் விவரம் பின்வருமாறு:

2023 ஏப்ரல் 1]

3.1.2.1 சாலை மேம்பாலம் (Grade Separator) / வாகன சுரங்கப்பாதை (Vehicular Under Pass)

சர்தார் பட்டேல் சாலையிலிருந்து இராஜீவ் காந்தி சாலை (ஓ.எம்.ஆர்) செல்லும் வகையில் மத்திய கைலாஷ் சந்திப்பில் இரண்டு வழித்தட சாலை மேம்பாலம் அமைக்கும் பணி ரூ.49.59 கோடி மதிப்பில் வரையறுக்கப்பட்ட கால அட்டவணைப்படி நடைபெற்று வருகிறது. மவுண்ட் - பூந்தமல்லி – ஆவடி சாலையில் மியாட் மருத்துவமனை முதல் முகலிவாக்கம் வரை நான்கு வழித்தட சாலை மேம்பாலம் அமைக்கும் பணி ரூ.314.48 கோடி மதிப்பிலும் மற்றும் மடிப்பாக்கம் அருகே வாகன சுரங்கப்பாதை அமைக்கும் பணி ரூ.45.50 கோடி மதிப்பிலும் மெட்ரோ இரயில் பணியுடன் ஒருங்கிணைந்த பணியாக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் (CMRL) மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. காட்டுப்பாக்கம் சந்திப்பில் நான்கு வழித்தட சாலை மேம்பாலம் அமைக்கும் பணி செயல்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது, இப்பணியில் ஒரு பகுதி மெட்ரோ இரயில் பணியுடன் ஒருங்கிணைந்த பணியாக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் (CMRL) மூலம் மேற்கொள்ளப்படவுள்ளது.

i) *உள்வட்டச் சாலையில், பி.டி. ராஜன் சாலை சந்திப்பு, ii) அக்கரை சந்திப்பு, iii) ஆவடி சந்திப்பு, iv) சேலையூர் மற்றும் முகாம் சாலை சந்திப்பு, v) குன்றத்தூர் சந்திப்பு, vi) வேளச்சேரி தாம்பரம் சாலையில் கைவேலி சந்திப்பு, vii) கொரட்டூர் சந்திப்பு viii) வானகரம் சந்திப்பு மற்றும் ix) அம்பத்தூர் தொழிற்பேட்டை பேருந்து நிலையம் சந்திப்பு (விரிவான திட்ட அறிக்கை மட்டும்) ஆகிய 9 சாலை சந்திப்புகளில் சாலை மேம்பாலங்கள் அமைப்பதற்காக, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் ரூ.9.08 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன, இவற்றில் 8 பணிகளுக்கு நில எடுப்புப் பணிகள் ரூ.796.41 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.*

3.1.2.2 ஆற்றுப்பாலங்கள்

2022-2023 ஆம் ஆண்டில், 2 உயர்மட்ட பாலப்பணிகள், திருவொற்றியூரில் மணலி எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம் அருகே பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே ரூ.58.64 கோடி மதிப்பிலும் கூவம் ஆற்றின் குறுக்கே பருத்திப்பட்டில் ரூ.18.37 கோடி மதிப்பிலும்

நடைபெற்று வருகின்றன, இவ்விரு பணிகளும் இந்த வருடத்திற்குள் முடிக்கப்படும். மேலும், பாடிக்குப்பம் மற்றும் நொளம்பூரில் கூவம் ஆற்றின் குறுக்கே ஆற்றுப்பாலங்கள் அமைக்கும் பணிகளுக்கு நில எடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

3.1.2.3 சாலைப் பணிகள்

2022-23 ஆம் ஆண்டில், கிழக்குக் கடற்கரைச் சாலையை நடைபாதை மற்றும் மிதிவண்டி பாதையுடன் (Cycle track) கூடிய ஆறுவழித்தடச் சாலையாக அகலப்படுத்தி உறுதிபடுத்தும் பணிகள், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம், சோழிங்கநல்லூர் பகுதிகளில் 6.60 கி.மீ. நீளத்திற்கு ரூ.134.58 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு செயல்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன மற்றும் பாலவாக்கம் பகுதியில் 1.15 கி.மீ. நீளத்திற்கு ரூ.17.43 கோடி மதிப்பிலும், கொட்டிவாக்கம் பகுதியில் 0.94 கி.மீ. நீளத்திற்கு ரூ.18.86 கோடி மதிப்பிலும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கிழக்குக் கடற்கரைச் சாலை மற்றும் ராஜீவ் காந்தி சாலை (ஓ.எம்.ஆர்.) ஆகிய சாலைகளை நீலாங்கரையில் இணைக்கும், இணைப்புச் சாலை பணியில்,ஓ.எம்.ஆர்.முதல் பக்கிங்காம் கால்வாய் வரை ரூ.18.25 கோடி மதிப்பில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. பக்கிங்காம் கால்வாயைக் கடந்து கிழக்குக் கடற்கரைச் சாலையில் இணைப்பதற்கு, ஆலோசகர்கள் (consultants) மூலம் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. மேலும், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் (CMDA) மூலமாக பக்கிங்காம் கால்வாய் கரையில் இறங்கும் வண்ணமும், உட்புறச்சாலைகளை இணைக்கும் வண்ணமும் பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே சுற்றமைப்புடன் (Rotary) கூடிய மேம்பாலம் அமைப்பதற்கான, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

பெருங்களத்தூரில் ஜி.எஸ்.டி. சாலையிலிருந்து மாடம்பாக்கம் அருகே வேளச்சேரி – தாம்பரம் சாலைக்கு இணைப்பு ஏற்படுத்தும் பொருட்டு, 9.30 கி.மீ. நீளத்திற்கு ஆறுவழித்தட தாம்பரம் கிழக்கு புறவழிச்சாலை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகளில், மப்பேடு பகுதியில் 3.05 கி.மீ. நீளத்திற்கு ரூ.25.00 கோடி மதிப்பில் பணிகள் ஏற்கெனவே முடிக்கப்பட்டுள்ளன. நெடுங்குன்றம் பகுதியில் 2.63 கி.மீ. நீளத்திற்கு

2023 ஏப்ரல் 1]

ரூ.36.69 கோடி மதிப்பில் பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் புத்தூர் பகுதியில் 1.55 கி.மீ. நீளத்திற்கு ரூ.55.77 கோடி மதிப்பில் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. மேலும், எஞ்சியுள்ள பகுதிகளில், பணிகள் மேற்கொள்ள நில எடுப்பு பணிகளும் வனத் துறை நிலத்தை நிலமாற்றம் செய்யும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

3.1.2.4 பாதசாரிகளின் உள்கட்டமைப்பு வசதிகள் - நகரும் படிக்கட்டுகளுடன்கூடிய நடைமேம்பாலங்கள்

பாதசாரிகளின் பாதுகாப்பை உறுதிபடுத்தவும், பாதசாரிகளின் போக்குவரத்தினை மேம்படுத்தவும், நகரும் படிக்கட்டுகளுடன்கூடிய நடைமேம்பாலங்கள் அமைக்கப்படுகின்றன. தாம்பரம் இரயில் நிலையம் அருகில் ஜி.எஸ்.டி. சாலையைக் கடந்து இரயில் நிலையத்தினுள் உள்ள நடைமேம்பாலத்துடன் இணைக்கும் வகையில், புதிய பயணச்சீட்டு வழங்குமிடம் (Ticket Counter) மற்றும் நகரும் படிக்கட்டுகளுடன்கூடிய நடைமேம்பாலம் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

2022-23 ஆம் ஆண்டில், பெரிய மேற்கத்திய சாலையில் (GWT) நெல்சன் மாணிக்கம் சாலை சந்திப்பு மற்றும் உள்வட்டச் சாலையில் (IRR) செந்தில் நகர் சந்திப்பு ஆகிய 2 இடங்களில் நடைமேம்பாலங்கள் அமைக்கும் பணிக்கு ரூ.30.67 கோடி மதிப்பீட்டில் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, ஆய்வு மற்றும் வடிவமைப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. i) முகப்பேரில் DAV & வேலம்மாள் பள்ளி அருகேயும் மற்றும் ii) கிழக்கு மற்றும் மேற்கு தாம்பரம் பகுதிகளை இணைக்கும் வகையிலும் நடைமேம்பாலங்கள் அமைக்கும் பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

3.1.2.5 உயர்மட்ட சாலை - கலங்கரை விளக்கம் முதல் கிண்டி வரை

2022-23 ஆம் ஆண்டில், கலங்கரை விளக்கம் முதல் கிண்டி வரை உயர்மட்ட சாலை அமைக்கும் பணிக்கு விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிப்பதற்காக ரூ.45.00 இலட்சத்திற்கு நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, ஆலோசகர்களை நியமிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

3.1.2.6 இரயில்வே மேம்பாலம்

2022-2023 ஆம் ஆண்டில், சென்னை உள்வட்டச் சாலையில், பாடி மேம்பாலம் அருகே உள்ள இரயில்வே மேம்பாலத்தை அகலப்படுத்தும் பணிக்கு ரூ.139.17 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இரயில்வே துறையின் பணிகள் முடிவடைந்தபின் நெடுஞ்சாலைப் பகுதி பணிகள் மேற்கொள்ளப்படும்.

3.1.2.7 சென்னை பெருநகர வளர்ச்சி திட்டத்தின் செலவினம்

2022-2023 ஆம் ஆண்டில் 20.03.2023 வரை ரூ.498.83 கோடி செலவினம் செய்யப்பட்டுள்ளது.

3.2 ஊராட்சி ஒன்றிய / ஊராட்சி சாலைகளை மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்துதல்

கிராமப்புற மக்களுக்கு உயிர்நாடியான சுகாதாரம், கல்வி மற்றும் விவசாயப் பொருட்களை சந்தைப்படுத்துதல் ஆகிய சமூக-பொருளாதார சேவைகளை பெறுவதற்கு கிராமச் சாலைகளின் கட்டமைப்பு பெரிதும் உதவுகிறது. எனவே, கிராமப்புறச் சாலைகளை இதர மாவட்ட சாலைகளின் (ODR) தரத்திற்கு உயர்த்துவதற்கு அரசு மிக அதிக முன்னுரிமை செலுத்தி வருகிறது, முக்கியமான சுற்றுலாத் தலங்கள், வழிபாட்டுத் தலங்கள், கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள் போன்றவற்றை இணைக்கும் ஊராட்சி ஒன்றிய / ஊராட்சி சாலைகள் முன்னுரிமை அடிப்படையில் எடுக்கப்பட்டு வருகின்றன.

2022-2023 ஆம் ஆண்டில், ரூ.2178.01 கோடி மதிப்பிலான 2000.31 கி.மீ. நீளமுள்ள சாலைகள் தரம் உயர்த்த எடுத்துக்கொள்ளப்பட்டன. ரூ.555.85 கோடி மதிப்பிலான 361.76 கி.மீ. நீளமுள்ள 138 நிலுவையிலுள்ள சாலைப் பணிகளை முடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றில் 232.77 கி.மீ. நீளமுள்ள 91 சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன மற்றும் மீதமுள்ள பணிகள் முன்னேற்ற நிலையில் உள்ளன.

2022-2023 ஆம் ஆண்டில் 20.03.2023 வரை, ரூ.228.33 கோடி செலவிடப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 1]

3.3 புறவழிச்சாலைகள் அமைத்தல்

குறிப்பிட்ட நகரம் அல்லது ஊர்களில் சாலைவழிப் போக்குவரத்து அதிகமாகும் நிலையில் அடிக்கடி போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு பொதுப்பயன்பாட்டுக்கு இடையூறாகி விடுகிறது. இந்நிலையைத் தவிர்க்க ஊரின் குடியிருப்புப் பகுதிக்கு வெளியே ஊருக்குள் உள்ள சாலையைப் பயன்படுத்தாமல் செல்வதற்காகத் தனியே புறவழிச்சாலை அமைக்கப்படுகிறது. புறவழிச்சாலைகள் அமைப்பதில் நிலம் கையகப்படுத்தும் நிலை (முதல் கட்டம்) மற்றும் உருவாக்க நிலை (இரண்டாம் கட்டம்) என இரண்டு முக்கிய கட்டங்கள் உள்ளன.

2022-2023 ஆம் ஆண்டில் உத்திரமேரூர், திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் மேற்கு வட்டச்சாலை ஆகிய 3 புறவழிச்சாலைகள் ரூ.435.39 கோடி மதிப்பில் எடுக்கப்பட்டுள்ளன. நடப்பாண்டின் தொடக்கத்தில், நிலுவைப் பணிகளாக 17 புறவழிச்சாலைகள் முன்னேற்றத்தில் இருந்தன. அவற்றுள் இலுப்பூர் புறவழிச்சாலை ரூ.23 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளது மற்றும் திருத்தணி, திருத்துறைப்பூண்டி-பகுதி-2, ராசிபுரம் (பிரிவு-1, பகுதி-2), குன்னூர், பார்த்திபனூர், பொள்ளாச்சி, அருப்புக்கோட்டை, பவானி, அம்பாசமுத்திரம், முதுகுளத்தூர், கமுதி, திருப்போரூர், தாம்பரம் கிழக்கு புறவழிச்சாலை, கேளம்பாக்கம், சிவகங்கை மற்றும் ஜலகண்டபுரம் ஆகிய 16 புறவழிச்சாலைகள் முன்னேற்றத்தில் உள்ளன.

மேலும், 58 புறவழிச்சாலைகளில் நிலம் கையகப்படுத்துதல், திட்டமிடல் மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் போன்ற முதன்மை பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன.

3.4 இணைப்புச் சாலை அமைத்தல்

2022-23 ஆம் ஆண்டில், திருப்பரங்குன்றம் அருகே பசுமலையில் ரூ.41.89 கோடி மதிப்பீட்டில் இணைப்புச் சாலை அமைக்க அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. இப்பணி ஒப்பந்தம் கோரப்படும் நிலையில் உள்ளது. நிலுவைப்பணியாக மற்றொரு இணைப்புச் சாலை பணி ரூ.20.85 கோடி மதிப்பில், "ஈரோடு – பெருந்துறை - காங்கேயம் சாலை முதல் ஊட்டி-கோத்தகிரி-மேட்டுப்பாளையம்-சத்தி – கோபி - ஈரோடு சாலை வரை (கனிராவுதர் குளம்) வில்லரசம்பட்டி சாலையை அகலப்படுத்தி மேம்பாடு செய்யும்" பணி நடைபெற்று வருகிறது.

3.5 உயர்மட்ட பாலங்கள் அமைத்தல்

சாலைகளின் குறுக்கே செல்லும் நீர் நிலைகளைக் கடப்பதற்கு உயர் மட்ட பாலங்கள் அமைக்கப்படுகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளில் 147 பணிகள் முடிக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டன.

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் (நபார்டு) கிராமப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் (RIDF) கீழ் தரைப்பாலங்கள் / வலுவிழந்த பாலங்கள் / குறுகலான பாலங்களுக்குப் பதிலாக உயர்மட்ட ஆற்றுப் பாலங்கள் கட்டப்படுகின்றன. இந்நிதியில் நபார்டு கடன் உதவி 80 சதவிகிதமும், 20 சதவிகிதம் மாநில நிதியில் இருந்தும் பெறப்படுகிறது. 2022-2023 ஆம் ஆண்டில், ரூ.818.66 கோடி மதிப்பில் 158 உயர்மட்ட பாலப்பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. கடந்த இரண்டு ஆண்டுகளில், நபார்டு கடனுதவி திட்டத்தின்கீழ், மொத்தம் 139 உயர்மட்ட பாலங்கள் ரூ.382.49 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டன. நிலுவைப்பணிகளான 136 உயர்மட்ட பாலப் பணிகள் ரூ.888.07 கோடி மதிப்பில் நடைபெற்று வருகின்றன.

2022-23 ஆம் ஆண்டில் மாநில நிதியுதவியில் 14 உயர்மட்ட பாலப் பணிகள் ரூ.148.9 கோடி மதிப்பில் எடுக்கப்பட்டு பணிகள் செயலாக்கத்திற்காக வெவ்வேறு நிலைகளில் உள்ளன. ஒப்பளிக்கப்பட்ட சில பணிகள் பின்வருமாறு:

1. திருச்சிராப்பள்ளி மாவட்டம் உன்னியூருக்கும், கரூர் மாவட்டம் நெரூருக்கும் இடையே காவேரி ஆற்றின் குறுக்கே ரூ.92.38 கோடி மதிப்பில் உயர்மட்ட பாலம் கட்டும் பணி.

2. பட்டுக்கோட்டை பேராவூரணி அறந்தாங்கி சாலை (மா. மு.சா. 653) கி.மீ. 21/8-ல் அம்புலி ஆற்றின் குறுக்கே ரூ.7.42 கோடி மதிப்பில் உயர்மட்ட பாலம் திரும்ப கட்டும் பணி.

3. பட்டுக்கோட்டை பேராவூரணி அறந்தாங்கி சாலை (மா. மு.சா. 653) கி.மீ. 16/10-ல் பூனைக்குத்தி ஆற்றின் குறுக்கே ரூ.6.37 கோடி மதிப்பில் உயர்மட்ட பாலம் திரும்ப கட்டும் பணி.

2023 ஏப்ரல் 1]

கூடுதலாக, மாநில நிதியின்கீழ், ரூ.333.82 கோடி மதிப்பில் 25 உயர்மட்ட பாலப்பணிகள் நிலுவைப்பணிகளாக எடுக்கப்பட்டுள்ளன. கடந்த இரண்டு ஆண்டுகளில், ரூ.180.18 கோடி மதிப்பில் 8 உயர்மட்ட பாலப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

முடிக்கப்பட்ட சில பணிகள் பின்வருமாறு:

1. *விழுப்புரம் மாவட்டம் மேட்டுப்பாளையம் கிராமத்தையும், கடலூர் மாவட்டம் மேல்குமாரமங்கலம் கிராமத்தையும் இணைக்கும் வகையில் பெண்ணை ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைக்கும் பணி ரூ.27.92 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளது.*
2. *கடலூர்-சித்தூர் சாலையில் கி.மீ.59/10-ல் பிரிந்து செல்லும் அருங்குறுக்கை சாலையில் கி.மீ.5/0-ல் கெடிலம் ஆற்றில் உயர்மட்ட பாலம் கட்டும் பணி ரூ.10.05 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளது.*
3. *குடியாத்தம் - கடாம்பூர் - கைலாசகிரி -வாணியம்பாடி சாலை கி.மீ.21/2-ல் மலட்டாற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் கட்டும் பணி ரூ.16.93 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளது.*

மேலும், 41 பணிகள் நிலம் கையகப்படுத்துதல் மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் போன்ற பல்வேறு நிலைகளில் உள்ளன.

3.6 இரயில்வே மேம்பாலங்கள் / கீழ்பாலங்கள் / வரைறுக்கப்பட்ட சுரங்கபாதைகள் அமைத்தல்

இரயில்வே திட்ட பணிகள் (RWP)

இரயில்வே கடவுகளில் தங்கு தடையற்ற போக்குவரத்திற்காகவும் விபத்துகளைத் தவிர்ப்பதற்காகவும் இரயில்வே மேம்பாலம் / கீழ்ப்பாலம் கட்டப்படுகின்றது. இரயில்வே கடவுகளில் ஒரு நாளைக்கு வாகன அளவுகளின் எண்ணிக்கை (TVU) ஒரு இலட்சத்திற்கு மேல் அதிகரிக்கும்போது முன்னுரிமைப்படி இரயில்வே மேம்பாலம் / கீழ்ப்பாலம் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நடப்பாண்டில் 10 இரயில்வே மேம்பாலப்பணிகளுக்கு கட்டுமான பணிகள் மேற்கொள்ள ரூ.393.50 கோடி மதிப்பில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன.

[2023 ஏப்ரல் 1

புதிதாக ஒப்பளிக்கப்பட்ட சில பணிகள் பின்வருமாறு:

1. *நாகப்பட்டினம் - அக்கரைபேட்டை- வேளாங்கன்னி சாலையில் கி.மீ 0/2-ல் நாகூர் மற்றும் நாகப்பட்டினம் இரயில் நிலையங்களுக்கிடையில் இரயில்வே கி.மீ. 77/700 - 800-ல் கடவு எண் 48-ல் மாற்றாக ரூ.101.60 கோடி மதிப்பில் இரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணி.*

2. *பொன்னேரி மற்றும் கவரப்பேட்டை இரயில் நிலையங்களுக்கிடையே கடவு எண். 26 -க்கு மாற்றாக இரயில்வே கி.மீ. 35/05-07-ல் ரூ.63.83 கோடி மதிப்பில் இரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணி.*

3. *இராசிபாளையம் சாலை கி.மீ. 0/2-ல் இரயில்வே கி.மீ. 466/21 – 23-ல் உள்ள இரயில்வே கடவு எண் 142-க்கு மாற்றாக சூலூர் மற்றும் சோமனூர் இரயில் நிலையங்களுக்கு இடையே ரூ.40.21 கோடி மதிப்பில் இரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணி.*

4. *கூடாநகரம்-அனங்காநல்லூர் சாலையில் கி.மீ 3/0-ல் இரயில்வே கி.மீ. 160/2-4ல் உள்ள கடவு எண். 67-க்கு மாற்றாக மேலாளத்தூர் மற்றும் வளத்தூர் இரயில் நிலையங்களுக்கிடையே ரூ.35.98 கோடி மதிப்பில் இரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணி.*

கூடுதலாக, 44 பணிகள் ரூ.1844.81 கோடி மதிப்பில் நிலுவைப்பணிகளாக எடுக்கப்பட்டுள்ளன. கடந்த இரண்டு வருடங்களில் 14 இரயில்வே மேம்பாலங்கள் / கீழ்பாலங்கள் ரூ. 464.31 கோடி மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டு கடவுப்பாதைகள் மூடப்பட்டன.

மாநில நிதியுதவி

இரயில்வே துறையுடன் பணப்பகிர்வின் அடிப்படையில் மேற்கொள்ள இயலாத சில தேவைப்படும் இடங்களில், பெருகி வரும் போக்குவரத்தினால், இரயில்வே கடவுகளில் வாகன தேக்கம் ஏற்படுவதைத் தவிர்க்க, இரயில்வே மேம்பாலம் / இரயில்வே கீழ்பாலங்கள் தேவைப்படுகின்றன. அகலம் குறைவாக உள்ள இரயில்வே மேம்பாலம் / இரயில்வே கீழ்பாலங்களுக்கு மாநில நிதியைப் பயன்படுத்தி மட்டுமே கூடுதலாக மேம்பாலம் அமைக்க

2023 ஏப்ரல் 1]

இயலும். ரூ.19.78 கோடி மதிப்பில் ஒரு பணி நடைபெற்று வருகிறது. மற்றும் 16 பணிகள் நில எடுப்பு, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் நிலையில் உள்ளன.

3.7 சாலை மேம்பாலங்கள்

*நகர்ப்புற சாலை சந்திப்புகளில் போக்குவரத்தை ஒழுங்குபடுத்த அவற்றை மேம்படுத்துவது அத்தியாவசியமாகிறது. சந்திப்புகளில் போக்குவரத்தானது குறிப்பிட்ட அளவைத் தாண்டி அதிகரித்தால், வட்டப்பாதைகள் (*Rotary*) மற்றும் ஒழுங்குப்படுத்தப்பட்ட போக்குவரத்து (*Traffic Signal*) நடைமுறைப்படுத்தப்படுகிறது. இருப்பினும், தொடர்ந்து அதிகரித்து வரும் போக்குவரத்தினால், இந்த முறைகளும் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கான நோக்கத்தை நிறைவேற்றாத வகையில், முக்கியமான சந்திப்புகளில் உயர்மட்டச் சாலைகள் அமைக்கப்படுகின்றன.*

துறையால் எடுக்கப்பட்ட முக்கிய சாலை மேம்பாலங்கள் பின்வருமாறு:

1. *மதுரை மாவட்டத்தில், மதுரை - தொண்டி சாலை மற்றும் மதுரை சுற்றுச் சாலை சந்திப்பு ரூ.53.12 கோடி மதிப்பில் சாலை மேம்பாலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.*

2. *கோயம்புத்தூரில் உக்கடம் - ஆத்துப்பாலத்தில் ரூ.140.49 கோடி மதிப்பில் சாலை மேம்பாலப் பணி நடைபெற்று வருகிறது.*

3. *மதுரை மாநகரில் கோரிப்பாளையம் சந்திப்பில் வாரணாசி - கன்னியாகுமரி சாலை (*SHU *73) கி.மீ. 440/100-441/0 முதல் மதுரை - அழகர்கோவில் - மேலூர் சாலை கி.மீ. 0/0-1/4 (மாநில நெடுஞ்சாலை 72ஏ)-ல் ரூ.199.12 கோடி மதிப்பீட்டில் மேம்பாலம் கட்டும் பணி ஒப்பந்தப்புள்ளி கோரும் நிலையில் உள்ளது.*

4. *மதுரை-தொண்டி சாலையில் (அப்போலோ மருத்துவமனை சந்திப்பு) கி.மீ.0/0-1/8-ல் சாலை மேம்பாலம் மற்றும் திருநெல்வேலி புறவழிச்சாலை கி.மீ. 6/6-ல் மாநில நெடுஞ்சாலை உள்ள வீரமாணிக்கப்புரம் சாலை மேம்பாலமும் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யும் நிலையில் உள்ளன.*

3.8 உயர்மட்ட சாலைகள்

நகர்ப்புறங்களில் உள்ள போக்குவரத்தை கட்டுப்படுத்தவும் சீரான தங்கு தடையற்ற போக்குவரத்தை அளிப்பதற்கும் உயர்மட்ட சாலைகள் அமைக்கப்படுகின்றன. கடந்த ஆண்டு நிதி நிலை அறிக்கை கூட்டத் தொடரில் தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை உயர் மட்ட சாலை கட்ட அறிவிக்கப்பட்டது. சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் வழித்தடத்திலுள்ள சுரங்கத்தை கருத்தில் கொண்டு ரூ.621 கோடி மதிப்பில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. விரைவில் பணிகள் தொடங்கப்படவுள்ளன. கோயம்புத்தூர் நகரத்தில் அவினாசி சாலையில் கோல்டுவின்ஸ் முதல் உப்பிலிபாளையம் வரை 10.10 கி.மீ. நீளத்தில் ரூ.1621.30 கோடி மதிப்பீட்டில் உயர் மட்ட சாலைப்பணி நடைபெற்று வருகிறது. அப்பணி ஆகஸ்ட்-2024 அன்று முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. அண்ணா சாலை முதல் திருச்சி இரயில் சந்திப்பு வரை, மதுரை – நத்தம் வரை கி.மீ. 0/0-1/8, மதுரை மாநகரில் பெரியார் பேருந்து நிலையம் முதல் மீனாட்சி பஜார் வழியாக யானைக்கல் வரை, காந்தி சிலை மற்றும் முத்துராயர் சிலை முதல் திருச்சி கோர்ட் ரவுண்டானா வரை, மதுரை மாநகரில் நெல்பேட்டை சந்திப்பு முதல் அவனியாபுரம் வரை மற்றும் திருச்சி மாநகரில் அண்ணா சிலை வழியாக ஓடத்துறை காவேரி பாலம் மற்றும் கலைஞர் அறிவாலயம் முதல் மல்லாட்சிபுரம் வரை ஆகிய உயர்மட்ட சாலைப் பணிகள் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைப்பெற்று வருகிறது.

3.9 பராமரிப்பு பணிகள்

கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகுமூலம் வழக்கமான சாலை பராமரிப்புப் பணிகள் / காலமுறை பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பராமரிப்பு நடவடிக்கைகள் பின்வருமாறு:

- சாலைகள் / பாலங்களைப் புதுப்பித்தல் மற்றும் சிறப்பு பழுதுபார்த்தல்.
- பள்ளங்கள் மற்றும் திட்டுகளை சரிசெய்தல்.
- புருவங்களில் உள்ள புதர்கள் மற்றும் செடிகளை அகற்றும் பணிகள்.
- வாய்க்கால்கள் மற்றும் சிறுபாலங்களில் உள்ள செடிகளை சுத்தம் செய்தல் மற்றும் வடிகால்களைத் தூர்வாருதல்.

2023 ஏப்ரல் 1]

- பழுதடைந்த கிலோமீட்டர் / ஹெக்டோமீட்டர் கல், கெர்ப்ஸ், தடுப்புச்சுவர் மற்றும் விபத்து தடுப்பான்களை சரிசெய்தல்.
- ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் மற்றும் தடுத்தல்.
- மரங்களை மற்றும் செடிகளை நட்டு தண்ணீர் ஊற்றுதல்.

சுமுகமான பயணம் மற்றும் பாலத்தின் ஆயுட் காலத்தை நீடிக்க 2022-23 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சில முக்கிய பணிகளான திருச்சியில் காவிரி ஆற்றின் குறுக்கே உள்ள பாலத்தில் ரூ.6.51 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் திண்டிவனம் நகரில் இரயில்வே மேம்பாலத்தில் ரூ.8.17 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்பட்டன. 2021-22 ஆம் ஆண்டில் சாலைகள் பராமரிப்பிற்காக ரூ.694.63 கோடி செலவிடப்பட்டு 2434 கி.மீ. சாலைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

2022-2203 ஆம் ஆண்டில் சாலைகள் பராமரிப்பிற்காக ரூ.456.14 கோடி செலவிடப்பட்டு 2030.29 கி.மீ. சாலைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

3.10 ஒன்றிய அரசு நிதியின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

3.10.1 ஆண்டுத் திட்டம் (தேசிய நெடுஞ்சாலை)

தேசிய நெடுஞ்சாலைகளின் பராமரிப்பு மற்றும் மேம்பாடு செய்வதற்கு சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் ஆண்டுதோறும் ஆண்டுத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்கிறது. 2021-22 ஆம் ஆண்டில், ரூ.2791.26 கோடி மதிப்பில் 464.11 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் மற்றும் 13 பாலப் பணிகளுக்கு ஆண்டுத் திட்டத்தின்கீழ் ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. 2022-23 ஆம் ஆண்டில், 227.00 கி.மீ. நீளத்திற்கு சாலைப் பணிகள் மற்றும் 3 சாலை மேம்பாலப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

2022-2023-ல் முடிக்கப்பட்ட முக்கிய பணிகள் பின்வருமாறு;

1. மதுரை – கொச்சின் சாலையில் (தே.நெ.49 நீட்சி) கி.மீ. 15/2-ல் (வடபழஞ்சி) ரூ.52.04 கோடி மதிப்பில் சாலை மேம்பாலம் அமைத்தல் பணி

2. மங்களூர் – விழுப்புரம் சாலையில் (தே.நெ.234) கி.மீ. 138/2-ல் (தீபம் நகர் - திருவண்ணாமலை) ரூ.19.31 கோடி மதிப்பில் சாலை மேம்பாலம் அமைத்தல் பணி

3. மங்களூர் – விழுப்புரம் சாலையில் (தே.நெ.234) கி.மீ. 144/2-ல் (கீழ்நாச்சிப்பட்டு - திருவண்ணாமலை) ரூ.21.47 கோடி மதிப்பில் சாலை மேம்பாலம் அமைத்தல் பணி.

4. திண்டுக்கல் – நத்தம் – கொட்டாம்பட்டி சாலையில் (தே.நெ.383) திண்டுக்கல் முதல் அப்பாஸ்புரம் பிரிவு – நத்தம் வரை 38 கி.மீ. நீளத்திற்கு ரூ.240.38 கோடி மதிப்பில் கடின புருவங்களுடன் கூடிய இருவழிச்சாலையாக அகலப்படுத்துதல் பணி

5. சார்ஜாபூர் – பாகலூர் - ஒசூர் சாலையில் (தே.நெ.207) சார்ஜாபூர் முதல் சமத்துவபுரம்-ஒசூர் வரை 15 கி.மீ. நீளத்திற்கு ரூ.68.07 கோடி மதிப்பில் கடின புருவங்களுடன் கூடிய இருவழிச் சாலையாக அகலப்படுத்துதல் பணி

2022-2023 ஆம் ஆண்டில், ரூ.2559.00 கோடி மதிப்பிலான பணிகள் ஆண்டுத் திட்டத்தின்கீழ் ஒப்புதலுக்காக முன்மொழியப்பட்டுள்ளன.

- **சேது பாரதம் திட்டம்**

“சேது பாரதம்” திட்டமானது தேசிய நெடுஞ்சாலையில் உள்ள அனைத்து இரயில்வே கடவுகளுக்கும் மாற்றாக இரயில்வே மேம்பாலங்கள் / இரயில்வே கீழ்பாலங்கள் அமைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், 6 இரயில்வே மேம்பாலங்கள் அமைக்க (கடவு எண். 17 – செக்கானூரணி (மதுரை), கடவு எண். 68 – தேனி (தேனி), கடவு எண். 85 – போடிநாயக்கனூர் (தேனி), கடவு எண். 109A – கண்ணமங்கலம் (வேலூர்), கடவு எண். 86 – எட்டிவாடி (திருவண்ணாமலை), கடவு எண். 503 – தென்காசி (தென்காசி)) ரூ.412.11 கோடி மதிப்பிற்கு ஆண்டுத் திட்டத்தின்கீழ் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இவற்றில், 5 இரயில்வே மேம்பாலப் பணிகள் நடைபெற்று வருகின்றன, மீதமுள்ள ஒரு இரயில்வே மேம்பாலப்பணி விரைவில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

2023 ஏப்ரல் 1]

3.10.2 ஒன்றிய அரசின் நிதியுதவித் திட்டங்கள் (Centrally Sponsored Schemes)

- **மத்திய சாலை மற்றும் உள்கட்டமைப்பு நிதி திட்டம் (CRIF) (மாநில சாலைகளுக்காக)**

ஒன்றிய அரசின் மத்திய சாலை நிதியின்கீழ் மாநில நெடுஞ்சாலை, மாவட்ட முக்கிய சாலை, இதர மாவட்ட சாலைகளில் அகலப்படுத்துதல், சாலைகளை உறுதிப்படுத்துதல், பாலங்கள் மற்றும் சிறுபாலங்களைப் புனரமைத்தல்/கட்டுமானம்/திரும்ப கட்டுதல் ஆகிய பணிகள் மத்திய சாலை மற்றும் உள்கட்டமைப்பு நிதியின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2022-2023 ஆம் ஆண்டில், நிலுவைப் பணிகளாக 19.15 கி.மீ. நீளத்திற்கு 5 சாலைப் பணிகள் மற்றும் ஒரு பாலப் பணி ஆகியவை ரூ.75.18 கோடி மதிப்பில் செயலாக்கத்தில் உள்ளன.

- **சேது பந்தன்**

மாநில சாலைகளில், சாலைப் பாதுகாப்பின் ஒரு பகுதியாக மத்திய சாலை மற்றும் உள்கட்டமைப்பு நிதி திட்டத்தில் கூடுதல் நிதியின்மூலம் இரயில்வே கடவுகளுக்கு மாற்றாக இரயில்வே மேம்பாலம் / இரயில்வே கீழ்பாலம் அமைக்க ஒன்றிய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகத்தால் “சேது பந்தன்” எனும் திட்டம் புதிதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சேது பந்தன் திட்டம் 2022-2023-ன்கீழ் இரயில்வே கடவுகளுக்கு மாற்றாக இரயில்வே மேம்பாலம் / இரயில்வே கீழ்பாலம் அமைப்பதற்கு கருத்துரு ஒன்றிய அமைச்சகத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

- **பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம்**

பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டமானது, கிராம சாலைகளை மேம்படுத்தி, சாலை வசதி இல்லாத வாழ்விடங்களுக்கு சாலை இணைப்பை ஏற்படுத்தும் நோக்கத்துடன் ஒன்றிய அரசால் தொடங்கப்பட்டது. ஒன்றிய அரசினால் வழங்கப்படும் நிதியின்மூலம் இத்திட்டத்தின்கீழ் “இதர மாவட்ட சாலைகள்” மேம்படுத்தப்படுகின்றன. 2022-2023 ஆம் ஆண்டில் 4 சாலைப் பணிகள் 31.98 கி.மீ. நீளத்திற்கு ரூ.34.16 கோடி மதிப்பீட்டில் ஒன்றிய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால் ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் அனைத்தும் நடைபெற்று வருகின்றன.

3.10.3 வைப்பு நிதி பணிகள்

இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையத்தின் கட்டுப்பாட்டில் உள்ள சாலைகளை மாநில தேசிய நெடுஞ்சாலை அலகின் வாயிலாக வைப்பு நிதியின்கீழ் மேம்படுத்தும் பணிகள் பின்வருமாறு:

- தே.நெ.45-ல் கூடுவாஞ்சேரி முதல் செட்டிப்புண்ணியம் (மஹிந்திரா சிட்டி) வரை உள்ள 13.30 கி.மீ. நீளமுள்ள சாலையினை 4 வழித்தடத்திலிருந்து 8 வழித்தட சாலையாக அகலப்படுத்தும் பணியானது ரூ.230.69 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- தே.நெ.4-ல் மதுரவாயல் புறவழிச்சாலை முதல் ஸ்ரீபெரும்புதூர் சுங்கச் சாவடி வரை உள்ள 23.20 கி.மீ. நீளமுள்ள சாலையினை 4 வழித்தடத்திலிருந்து 6 வழித்தட சாலையாக அகலப்படுத்தும் பணியானது ரூ.428.95 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- தே.நெ. 544 H தொப்பூர் – மேட்டூர் 85.00 கி.மீ. நீளமுள்ள சாலையை கடின புருவங்களுடன் கூடிய 2 வழித்தட சாலையாக அகலப்படுத்தும் பணி ரூ.186.50 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

3.11 கணினிமயமாக்கல்

நெடுஞ்சாலைத் துறையில் மேற்கொள்ளப்படும் பணிகள் திறன் மற்றும் செயல்திறனை மேம்படுத்துவதற்காக கணினிமயமாக்குவதை சிறப்பு திட்டமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்துறையின் செயல்பாடுகளை வலுப்படுத்துவதற்குத் தேவையான வன்பொருட்கள் மற்றும் மென்பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

இத்துறையானது அனைத்து பால கட்டமைப்பு, நெகிழ் மற்றும் திடமான சாலைகள் ஆகியவற்றை பகுப்பாய்வு செய்ய மற்றும், அவைகளின் வடிவமைப்பு, வரைபடங்கள், மதிப்பீடுகள் தயார் செய்ய மேம்பட்ட மென்பொருள் மற்றும் துறையினால் உருவாக்கப்பட்ட உப மென்பொருட்களை தற்போது பயன்படுத்தி வருகிறது. தேசிய தகவல் மையத்தால் (NIC) பராமரிக்கப்படும்

2023 ஏப்ரல் 1]

www.tntenders.gov.in *இணையதளத்தின்மூலம் மின்னணு முறையில் (*e-tenders*) அனைத்து பணிகளுக்கும் இத்துறையைச் சார்ந்த பல்வேறு அலகுகளால், கொள்முதல் செய்து வருகிறது.*

*நெடுஞ்சாலைத் துறையானது தமிழ்நாடு முழுமைக்கான ஒட்டுமொத்த சாலை கட்டமைப்பினை மிக விவேகமாகவும், திறம்பட நிர்வகிக்கவும் சாலை பராமரிப்பு மற்றும் மேலாண்மை அமைப்பை (*RMMS*) செயல்படுத்தியுள்ளது. இவ்வமைப்பானது சாலைகளை பொருளாதார பகுப்பாய்வு செய்யவும் மற்றும் சாலைகளை மேம்படுத்துவதற்காகவும், அவற்றை முன்னுரிமைப்படுத்தி, திறன்மிகு திட்டமிடுதலுக்காக உருவாக்கப்பட்டுள்ள வலைத்தள அமைப்பாகும். தரவுகள் சேகரிக்கும் உபகரணத்தின் (*ADCE*) மூலம் சேகரிக்கப்பட்ட சாலையின் நிலை மற்றும் இருப்புத் தரவுகள் இவ்வமைப்பில் பதிவேற்றம் செய்யப்படுகின்றன. தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் திட்ட கண்காணிப்பு அமைப்பு (*TNHPMS*) என்பது இத்துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்களின் நிலையைக் கண்காணிக்க இணைய அடிப்படையிலான திட்ட கண்காணிப்பு கருவியாகும். இத்துறையானது சாலை பராமரிப்பு மற்றும் மேலாண்மை அமைப்பு (*RMMS*) மற்றும் தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் திட்ட கண்காணிப்பு அமைப்பு (*TNHPMS*) ஆகிய அமைப்புகளை திறம்பட பயன்படுத்துவதற்காக அவற்றின் தரத்தை உயர்த்தும் செயலில் ஈடுபட்டுள்ளது.*

நெடுஞ்சாலைத் துறையில் கீழ்க்கண்ட இணையதளங்கள் பராமரிக்கப்படுகின்றன

- https://www.tnhighways.tn.gov.in
- https://www.tnrsp.tn.gov.in
- https://www.ckicp.tn.gov.in

*நெடுஞ்சாலைத் துறையின் தற்போதைய வளங்களைப் பெருக்குவதற்காக தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்-*II *(*TNRSP-II*) மூலம் 2022-23 ஆம் ஆண்டில் 1484 மேஜைக் கணினி மற்றும் 1213 மடிக்கணினி ஆகியவை கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.*

[2023 ஏப்ரல் 1

4. பன்னாட்டு நிதியுதவி திட்டங்கள்

4.1 தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்டம் II

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்-II, ஆனது தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் (TNIDB) நிதியின்மூலம் தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட தேசிய நெடுஞ்சாலைகள், முக்கிய மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்ட முக்கிய சாலைகளை இணைக்கும், வாகன போக்குவரத்து அதிகமுள்ள சாலைகளை மேம்படுத்த உருவாக்கப்பட்டது. இத்திட்டம் பன்னாட்டு நிதி நிறுவனமான உலக வங்கியின் கடன் தொகை ரூ.2122.90 கோடி (300.00 மில்லியன் அமெரிக்க டாலர்) உடன், ரூ.5171 கோடி மொத்த மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம், தமிழ்நாட்டில் பல மாவட்டங்களில் உள்ள 1187.04 கி.மீ. நீளமுள்ள சாலைகளை மேம்படுத்துதல், பராமரித்தல், மற்றும் நிறுவன செயல்திறன் மேம்பாடு மற்றும் சாலை பாதுகாப்பு பணிகளை உள்ளடக்கியதாகும். மேம்படுத்தப்பட்ட சாலை பாதுகாப்புடன் சாலை திறனை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்-II-ன்கீழ், 535.35 கி.மீ. நீளமுள்ள சாலையானது பொறியியல் கொள்முதல் மற்றும் கட்டுமானம் (இ.பி.சி) முறையிலும், 70.20 கி.மீ. சாலை பொது மற்றும் தனியார் பங்களிப்பு முறையிலும், மற்றும் 581.49 கி.மீ. சாலைகள் செயல்பாடு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்த முறையிலும், செயல்படுத்தப்பட்டு வருகிறது.

4.1.1 முடிக்கப்பட்ட பணிகள்

- **பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமான முறை ஒப்பந்தம் (EPC)**

பொறியியல் கொள்முதல் மற்றும் கட்டுமானம் முறை ஒப்பந்தம்மூலம் நிர்ணயிக்கப்பட்ட மொத்தத் தொகைக்கு, ஒப்பந்ததாரருக்கு வடிவமைப்பு, கட்டுமானம் மற்றும் பராமரிப்பு ஆகிய பொறுப்புகள் ஒப்படைக்கப்படுகிறது. இத்திட்டம் செயல்படுத்தும் போது மண்ணின் தன்மை, வானிலை. தொழில்நுட்பம் மற்றும் கட்டுமான வடிவமைப்புகளில் ஏற்படும் பாதிப்புகள் ஒப்பந்ததாரரையே சாரும், அதே வேளையில்,

செலவுகள் மற்றும் காலம் ஆகியவற்றை நியாயமாக உறுதி செய்வதுடன் திட்டமானது நிர்ணயிக்கப்பட்ட தரத்தின்படி செயல்படுத்தப்படுவதை உறுதி செய்வதாகும்.

இம்முறையில் ஒப்பந்ததாரரே, மனிதவளம், உபகரணங்கள் மற்றும் இதர வளங்களை திறமையுடன் கட்டுமானத்திற்குப் பயன்படுத்தி பணிகளைச் செயலாக்கம் செய்து விழுக்காட்டின் அடிப்படையில் பணம் பெறுவது உறுதி செய்யப்படுகிறது.

பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமான முறை ஒப்பந்தம்மூலம் தமிழ்நாடு முழுவதுமுள்ள 427.97 கி.மீ. நீளமுள்ள சாலைகள் கடின புருவங்களுடன் கூடிய இருவழிச் சாலைகளாக அகலப்படுத்தப்பட்டன. 39.59 கி.மீ. நீளமுள்ள இரு தொகுப்புகள், 5 வருட பராமரிப்புப் பணிகள் முடிக்கப்பட்டு கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகிற்கு ஒப்படைக்கப்பட்டுவிட்டன. மீதமுள்ள 388.38 கி.மீ. நீளமுள்ள சாலைகள் 5 ஆண்டு கால பராமரிப்பில் உள்ளன.

- **பொது மற்றும் தனியார் பங்களிப்பு (PPP) முறை ஒப்பந்தம்**

பொது மற்றும் தனியார் பங்களிப்பு முறையில், வடிவமைப்பு, கட்டுமானம், நிதி பங்களிப்பு, பராமரிப்பு மற்றும் திரும்ப ஒப்படைத்தல் முறையில் ஒப்பந்ததாரர் புதிய உள்கட்டமைப்பு பணிகளை வடிவமைத்து அவற்றிற்குத் தேவையான நிதி பங்களிப்புடன், கட்டுமானம் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டு சில குறிப்பிட்ட வருடங்களுக்குப் பிறகு ஒப்படைக்கப்படும். இதற்குரிய பணப்பட்டுவாடா ஆண்டு ஈவு முறையில் பராமரிப்பு காலங்களில் வழங்கப்படும்.

70.20 கி.மீ. நீளமுள்ள ஒட்டன்சத்திரம் – தாராபுரம் - அவினாசிபாளையம் சாலை (மா.நெ.37) பொது தனியார் பங்களிப்பு முறையில் (பிபிபி) (Public Private Partnership) நான்கு வழிச் சாலையாக ஆகஸ்ட் 2020-ல் முடிக்கப்பட்டு, தற்சமயம் 3 ஆம் ஆண்டு பராமரிப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மொத்த பராமரிப்பு காலம் 8 ஆண்டுகள் ஆகும்.

- **வெளித்திறன் மற்றும் செயல்பாட்டு அடிப்படையிலான சாலை பராமரிப்பு ஒப்பந்தம் (OPRC)**

இந்த ஒப்பந்த முறையில் சாலைகளுக்கான குறைந்தபட்ச தேவையான தொழில்நுட்ப தரம் மற்றும் சேவை அளவுகள்

பரிந்துரைக்கப்படுகின்றன. அந்த தரநிலைகளை திருப்திகரமாக பூர்த்தி செய்தல் மற்றும் வெளித்திறனை பொறுத்தே ஒப்பந்தம் மதிப்பிடப்பட்டு பணப்பட்டுவாடா செய்யப்படுகிறது.

வெளித்திறன் மற்றும் செயல்பாட்டு அடிப்படையிலான சாலை பராமரிப்பு ஒப்பந்தமானது ஒப்பந்த காலம் முழுவதும் சாலையினை திறமையாக மேலாண்மை செய்வதையும் மற்றும் சாலையின் நிலையை நல்ல முறையில் பராமரிப்பதையும் உறுதிப்படுத்துகிறது.

சாலைகளை வரையறுக்கப்பட்ட தர நிலையில் ஒப்பந்த காலம் முழுவதும் பராமரிப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. ஒப்பந்தத்திற்கான பணப்பயன் தரநிலைகளைப் பொறுத்தே வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்-I இன்மூலம் மேம்பாடு செய்யப்பட்ட ஆற்காடு முதல் திருவாரூர் சாலை மற்றும் நாகப்பட்டினம் முதல் தூத்துக்குடி வரையிலான 581.49 கி.மீ நீளமுள்ள சாலைகள், வெளித்திறன் மற்றும் செயல்பாட்டு அடிப்படையிலான ஒப்பந்தம்மூலம் ரூ.220.07 கோடியில் 5 ஆண்டு பராமரிப்புப் பணிகள் முடிக்கப்பட்டன.

சாலைகள் 5 வருட பராமரிப்புப் பணிகள் முடிந்த பிறகு கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகிற்கு ஒப்படைக்கப்பட்டன.

4.1.2 நடைபெற்று வரும் பணிகள்

தற்போது, கீழ்க்கண்ட 107.38 கி.மீ. நீளம் கொண்ட 6 பணிகள் பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமான முறையில் நடைபெற்று வருகின்றன.

தொகுப்பு எண்	சாலையின் பெயர்	நீளம் கி.மீ.—ல்	ஒப்பந்த தொகை கோடியில்
EPC-11	நான்கு வழிச் சாலை- ஓமலூர் - மேச்சேரி - மா.நெ. 222 (கி.மீ. 1.15 - கி.மீ. 14.30)	13.17	144.64
EPC-12	உறுதிப்படுத்துதல் மற்றும் அகலப்படுத்துதல்– மல்லியக்கரை- ஆத்தூர் சாலை -மா.நெ 30 (கி.மீ. 81.12-கி.மீ. 91.20)	9.88	95.14

2023 ஏப்ரல் 1]

தொகுப்பு எண்	சாலையின் பெயர்	நீளம் கி.மீ.—ல்	ஒப்பந்த தொகை கோடியில்
EPC-13	நான்கு வழிச் சாலை -சித்தோடு - ஈரோடு மா.நெ.15 (கி.மீ. 153.50 - கி.மீ. 161.62)	8.13	104.70
EPC-14	திருநெல்வேலி-செங்கோட்டை-கொல்லம் சாலையில் கி.மீ. 5.0 முதல் கி.மீ. 27.70 வரை நான்கு வழிச் சாலையாக உறுதிப்படுத்துதல் மற்றும் அகலப்படுத்துதல் (தொகுப்பு எண் I)	22.70	176.58
EPC-15	திருநெல்வேலி-செங்கோட்டை-கொல்லம் சாலையில் கி.மீ. 27.70 முதல் கி.மீ. 50.60 வரை நான்கு வழிச் சாலையாக உறுதிப்படுத்துதல் மற்றும் அகலப்படுத்துதல் (தொகுப்பு எண் II)	22.90	254.13
EPC-16	நான்கு வழிச் சாலை- கோபி - ஈரோடு மா.நெ-15 (கி.மீ. 123.0- 153.60)	30.60	272.53
ஆக மொத்தம்		**107.38**	**1047.72**

மேற்கண்ட 6 பணிகளில் 2 பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. மீதமுள்ள 4 பணிகள் 2023-2024 நிதியாண்டில் முடிக்கப்படும்.

4.1.3 தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் (TNIDB – Tamil Nadu Infrastructure Development Board) நிதி உதவியுடன் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி

3319 கி.மீ. நீளமுள்ள சாலைகளுக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகளுக்காக தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின்மூலம் ரூ.132.76 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் முதற்கட்டமாக, 718.71 கி.மீ. நீளமுள்ள சாலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு ஆலோசகர்கள் மூலம்

விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

4.1.4 தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்டம்—III-க்கான கருத்துரு

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் – III-ன்கீழ், 400.43 கி.மீ. நீளமுள்ள 11 இரு வழிச்சாலைகளை நான்கு வழிச்சாலைகளாக அகலப்படுத்த, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்திற்கு, பன்னாட்டு நிதி உதவி கோருவது அரசின் பரிசீலனையில் உள்ளது.

4.1.5 சென்னை மாநகர சாலைகளை சீர்மிகு மாநகர சாலைகளாக மாற்றுவதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி

சென்னை நகர கூட்டாண்மை-2 (CCP), நகர்ப்புற நகர்வு மற்றும் இடஞ்சார்ந்த வளர்ச்சி (UMSD) திட்டத்தின்கீழ், உலக வங்கியின் கடன் உதவியுடன், சென்னை மாநகரில் உள்ள முக்கிய சாலைகளை சீர்மிகு சாலைகளாக மேம்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கை ரூ.15.94 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது. 134.20 கி.மீ. நீளமுள்ள 8 சாலைகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி, தொகுப்பு 01 (54.50 கி.மீ. நீளம்) மற்றும் தொகுப்பு 02 (79.70 கி.மீ. நீளம்) என இரு தொகுப்புகளாக M/s. L & T Infrastructure Engg Ltd., என்ற சென்னை ஆலோசகருக்கு வழங்கப்பட்டு உள்ளது.

வ. எண்	சாலையின் பெயர்	நீளம் (கி.மீ.—ல்)
தொகுப்பு 01		
1	பெரிய தெற்கத்திய சாலை (Grand Southern Trunk சாலை) கி.மீ. 0/0 முதல் கி.மீ. 28/0 வரை (மா.நெ. U-88)	28.00
2	பெரிய மேற்கத்திய சாலை (Grand Western Trunk சாலை) கி.மீ. 0/0 முதல் கி.மீ. 9/0 வரை (மா.நெ. U-86)	9.00
3	உள்வட்டசாலை (Inner Ring Road) கி.மீ. 0/0 முதல் கி.மீ. 17/500 வரை (மா.நெ. -2)	17.50

2023 ஏப்ரல் 1]

வ. எண்	சாலையின் பெயர்	நீளம் (கி.மீ.—ல்)
	தொகுப்பு 01 மொத்தம் நீளம்	54.50
தொகுப்பு 02		
1	பெரிய வடக்கத்திய சாலை கி.மீ. 0/8 முதல் கி.மீ. 11/5 வரை (மா.நெ. U-87)	10.70
2	வேளச்சேரி புறவழிச்சாலை கி.மீ. 0/0 முதல் கி.மீ. 1/9 வரை (மா.நெ.-48 C)	1.90
3	மறைமலைஅடிகள் பாலம்– இரும்புலியூர்சாலை கி.மீ. 5/0 முதல் கி.மீ. 21/2 வரை (மா.நெ.-48)	16.20
4	மவுண்ட்–பூந்தமல்லி - ஆவடி (MPA) சாலை கி.மீ. 0/0 முதல் கி.மீ. 20/8 வரை (மா.நெ. -55)	20.20
5	கிழக்கு கடற்கரை சாலை கி.மீ. 22/3 அக்கரை முதல் மாமல்லபுரம் கி.மீ. 53/0 வரை	30.70
	தொகுப்பு 02 மொத்தம் நீளம்	79.70
	மொத்தம்	**134.20**

4.1.6 நிறுவன திறன் மேம்பாடு மற்றும் சாலை பாதுகாப்பு குழுமம்

நிறுவன திறன் மேம்பாடு

நிறுவன திறன் மேம்பாடு பணிகள் ரூ.66.00 கோடி செலவில் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் முக்கிய கூறுகள் பின்வருமாறு:

- நெடுஞ்சாலைத் துறை கையேடுகள் (I, II, III மற்றும் IV) ஆகியவற்றை மேம்படுத்தும் பணிகள்
- இத்துறைக்குத் தேவையான கணினிகள், மடிக்கணினிகள் தமிழ்நாடு மின்னணுவியல் கழகம் [Electronics Corporation of Tamil Nadu (ELCOT)] மூலம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.
- நிலம் கையகப்படுத்த "கணினி மயமாக்கப்பட்ட மேலாண்மை தகவல் அமைப்பு (CMIS)" தேசிய தகவல் மையம் (NIC) மூலம் உருவாக்குதல்

- *துறையின் முக்கிய பணிகளை தொடரும் வகையில் "பணிகள் மேலாண்மை அமைப்பை" செயலாக்குவதற்கு பரிந்துரைத்தல்.*

- *மின்னணு நூலகம் அமைத்தல்.*

மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து கூறுகளின் பணிகளும் நடைப்பெற்று வருகின்றன.

சாலைப் பாதுகாப்பு

சாலைப் பாதுகாப்பின்கீழ் காஞ்சிபுரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள 95.6 கி.மீ. நீளமுள்ள சாலைகளை பாதுகாப்பான மாதிரி வழித்தடங்களாக மாற்ற நுண்ணறிவு போக்குவரத்து அமைப்பு உள்ளிட்ட சாலை பாதுகாப்பு மேம்பாட்டு பணிகள் ரூ.120.00 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படுகின்றன. இம்மாதிரி வழித்தடம் ஏனைய பங்களிப்பு துறைகளான போக்குவரத்துத் துறை, காவல் துறை, மருத்துவத் துறை மற்றும் கல்வித் துறை ஆகியவற்றுக்கான சாலைப் பாதுகாப்பு செயல்களையும் உள்ளடக்கியது. இதில் ஒரு பகுதியாக, சாலைப் பாதுகாப்பு மாதிரி வழித்தட மாவட்டங்களில், 20 எண்ணிக்கையிலான 108 அவசர ஊர்திகள் கொள்முதல் செய்யப்பட்டு, இந்த அவசர கால ஊர்தி சேவை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு, மருத்துவத் துறையிடம் பயன்பாட்டிற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள பள்ளி மாணவர்களுக்கு சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

4.1.7 2022-23 ஆம் ஆண்டிற்கான செலவினம்

2022-23 ஆம் ஆண்டில் 20-03-2023 வரை ரூ.752.94 கோடி செலவிடப்பட்டுள்ளது.

4.2 சென்னை கன்னியாகுமரி தொழிற்தடத் திட்டம்

சென்னை கன்னியாகுமரி தொழிற்தடத் திட்ட அலகின்மூலம் ஆசிய வளர்ச்சி வங்கியின் கடனுதவியுடன் 589 கி.மீ. நீளமுள்ள 16 மாநில நெடுஞ்சாலைகள், தமிழ்நாடு தொழிற்சாலைகள் பகுதி இணைப்புத் திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. இப்பணிகள் பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமானம் (EPC) ஒப்பந்த முறையில் செயல்படுத்தப்படுகின்றன.

2023 ஏப்ரல் 1]

இச்சாலைகளில் 72.43 கி.மீ. சாலைகள் இருவழித் தடத்திலிருந்து நான்குவழித் தடமாகவும், 516.57 கி.மீ. சாலைகள் இருவழித் தடத்திலிருந்து கடின புருவங்களுடன் கூடிய இருவழித் தடமாகவும் மேம்படுத்தப்படுகின்றன.

மேம்படுத்தப்படும் சாலைகள் பின்வருமாறு:

வ. எண்	EPC எண்	சாலைப் பகுதி	மொத்த நீளம் (கி.மீ.)
1	EPC-*01*	*செய்யூர் - போளூர் சாலை (மா. நெ. 115) கிழக்கு கடற்கரை இணைப்பு சாலையுடன்*	*109.27*
2	EPC-*02*	*காஞ்சிபுரம் - அரக்கோணம் - திருத்தணி சாலை (மா.நெ. 58-2)*	*41.78*
3	EPC-*03*	*செங்கல்பட்டு-காஞ்சிபுரம் சாலை (மா. நெ. 58-1) மிலிட்டரி சாலை உள்பட (கடின புருவங்களுடன் கூடிய நான்குவழித் தடம்: 26 கி.மீ.; கடின புருவங்களுடன் கூடிய இருவழித் தடம்: 13.78 கி.மீ.)*	*39.79*
4	EPC-*04*	*திருச்செந்தூர் - பாளையங்கோட்டை சாலை (மா. நெ. 40-1)*	*50.59*
5	EPC-*05*	*மேலூர் - திருப்பத்தூர் சாலை (மா. நெ. 191)*	*30.49*
6	EPC-*06*	*தஞ்சாவூர் - மன்னார்குடி சாலை (மா. நெ. 63)*	*29.44*
7	EPC-*07*	*கும்பகோணம் - மன்னார்குடி சாலை (மா. நெ. 66)*	*14.90*
8	EPC-*08*	*கும்பகோணம் - சீர்காழி சாலை (மா. நெ. 64)*	*36.78*
9	EPC-*09*	*மயிலாடுதுறை - திருவாரூர் சாலை (மா. நெ. 23)*	*29.88*

வ. எண்	EPC எண்	சாலைப் பகுதி	மொத்த நீளம் (கி.மீ.)
10	EPC-10	துறையூர் – பெரம்பலூர் சாலை (மா. நெ. 142)	30.06
11	EPC-11	விருத்தாசலம் – உளுந்தூர்பேட்டை சாலை (மா. நெ. 69)	22.86
12	EPC-12	கடலூர் - மடப்பட்டு சந்திப்பு வரையிலான சாலை (மா. நெ. 9)	37.36
13	EPC-13	மோகனூர்- நாமக்கல்-சேந்தமங்கலம் - ராசிபுரம் சாலை (மா. நெ. 95)	31.50
14	EPC-14	திருச்செங்கோடு - ஈரோடு சாலை (மா. நெ. 79) (கடின புருவங்களுடன் கூடிய நான்குவழித் தடம்: 7 கி.மீ.; கடின புருவங்களுடன் கூடிய இருவழித் தடம்: 4.15 கி.மீ.)	11.15
15	EPC-15	ஓமலூர் - திருச்செங்கோடு வழி சங்ககிரி சாலை திருச்செங்கோடு புறவழிச் சாலையுடன் (மா. நெ. 86) (கடின புருவங்களுடன் கூடிய நான்குவழித் தடம்: 39.43 கி.மீ.; கடின புருவங்களுடன் கூடிய இருவழித் தடம்: 12.28 கி.மீ.)	51.72
16	EPC-16	பாளையங்கோட்டை – அம்பாசமுத்திரம் சாலை (மா.நெ. 40-2)	21.40
மொத்தம்			**588.97**

4.2.1 திட்ட மதிப்பு

இத்திட்டத்தின், மொத்த மதிப்பு நில எடுப்பு தொகை உள்பட ரூ.6448 கோடி ஆகும். இதில் நில எடுப்பு செலவான ரூ.1574 கோடி மாநில அரசின் பங்களிப்பாகும். மொத்த கட்டுமான மதிப்பில் 80 சதவிகிதத்தை ஆசிய வளர்ச்சி வங்கி கடனுதவியாக அளிக்கின்றது, மீதமுள்ள 20 சதவிகிதம் கட்டுமான செலவு மற்றும் பிற துறை

2023 ஏப்ரல் 1]

சார்ந்த உபகரணங்களை மாற்றியமைக்கும் பணி உள்ளிட்ட பிற பணிகள் மாநில அரசின் நிதி மூலமாக மேற்கொள்ளப்படுகின்றன.

4.2.2 திட்ட அம்சங்கள்

இம்மேம்பாட்டுப் பணிகளின் ஒரு பகுதியாக 22 புறவழிச் சாலைகள், 13 உயர்மட்ட பாலங்கள், 9 இரயில்வே மேம்பாலங்கள், ஒரு இரயில்வே கீழ்பாலம், 2 சாலை மேம்பாலங்கள், ஒரு வரையறுக்கப்பட்ட பயன்பாட்டு சுரங்கப்பாதை, ஒரு பாதசாரிகள் சுரங்கப்பாதை, 2 வாகன சுரங்கப் பாதைகள், 120 சிறு பாலங்கள், 1285 குறு பாலங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டன.

மேலும், சாலை பாதுகாப்பிற்காக முன்னெச்சரிக்கை பதாகைகள், விளக்குகள் மற்றும் இதர சாலை உபகரணங்கள் அமைக்கப்படுகின்றன. முக்கிய சந்திப்புகள், விபத்து பகுதிகள், பள்ளிகள் மற்றும் மருத்துவமனைகள் அருகில் கண்காணிப்பு கேமராக்கள் நிறுவப்படுகின்றன. பயணிகளின் வசதிக்காக, பேருந்து நிறுத்தங்களில் குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள் அமைக்கப்படுகின்றன.

4.2.3 நில எடுப்புப் பணிகள்

இத்திட்டத்திற்காக 348 கிராமங்களில் மொத்தம் 440 ஹெக்டேர் தனியார் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு வருகின்றன. இதுவரை, 431 ஹெக்டேர் தனியார் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. மீதம் கையகப்படுத்த வேண்டிய பரப்பு, தீர்வம் விசாரணை மற்றும் இறுதி தீர்வம் நிலையில் உள்ளன.

ஆசிய வளர்ச்சி வங்கியின் சமூக பாதுகாப்பு கொள்கையின்படி, இராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் இரயில் நிலையம் அருகில் மேல்பாக்கம் கிராமத்தில் நில எடுப்பில் பாதிக்கப்பட்ட 41 பழங்குடியினர் (இருளர்) குடும்பங்களை மறுகுடியமர்வு செய்ய குடியிருப்புகள், சமுதாயக்கூடம், மேல்நிலை நீர்த் தொட்டி, குழாய் அறை, அங்கன்வாடி கட்டடம், சாலை வசதிகள், வழிபாட்டுத்தலம் உள்பட அனைத்து வசதிகளும் இத்திட்டத்தில் அமைக்கப்பட்டு வருகின்றன.

4.2.4 கட்டுமானப் பணிகளின் முன்னேற்றம்

மொத்தமுள்ள 16 சாலை மேம்பாட்டுப் பணிகளில் 30.06 கி.மீ. நீளமுள்ள துறையூர்-பெரம்பலூர் சாலைப் பணி முடிவுற்று,

சட்டமன்ற TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மீதமுள்ள 558.91 கி.மீ. நீள 15 சாலைகளில் பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள 15 பணிகளில், 6 பணிகளை 2023-லும், 9 பணிகளை 2024-லும் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

ஆசிய வளர்ச்சி வங்கி விதிமுறைகளின்படி, கட்டுமானப் பணி மேற்பார்வை ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டு திட்டப் பணிகள் திறம்பட செயல்படுத்தப்படுகின்றன.

4.2.5 2022-23 ஆம் ஆண்டிற்கான செலவினம்

2022-23 ஆம் ஆண்டில் 20-03-2023 வரை ரூ.1500.97 கோடி செலவிடப்பட்டுள்ளது.

4.3 சென்னை எல்லைச் சாலை திட்டம்

சென்னை மாநகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும், மாநிலத்தின் தெற்கு பகுதியிலிருந்து வரும் வாகனங்களை எண்ணூர் மற்றும் காட்டுப்பள்ளி துறைமுகங்களுடனும் அண்டை மாநிலங்களுடனும் இணைத்து அதன்மூலம் வணிகம் மற்றும் தொழில் வளர்ச்சியை மேம்படுத்தவும் சென்னை எல்லைச் சாலை திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

சென்னை எல்லைச் சாலையானது 132.87 கி.மீ. நீளத்திற்கு ஆறுவழி இரட்டைப் பாதையாக இருபுறமும் இருவழிச் சேவைச் சாலைகளுடன் நுண்ணறிவுப் போக்குவரத்து அமைப்புடன் (ITS) ரூ.15,626 கோடி மதிப்பில் உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இச்சாலைத் திட்டத்தினால், பொதுத் துறை மற்றும் தனியார் வாகனங்களைப் பயன்படுத்தும் பொதுமக்கள் பெரிதும் பயன்பெறுவார்கள். மேலும் பலதரப்பட்ட தொழில்களும், அதன் வர்த்தக சரக்குப் போக்குவரத்தும் இத்திட்ட சாலையினால் பயன்பெறும். இந்தப் பயன்கள் தரமான, பாதுகாப்பான, சாலைகளால் பெறப்படும். மறைமுகப் பயன்களாக, மக்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்தி சமூக மற்றும் பொருளாதார சேவைகளை எளிதில் பெற வழிவகை செய்யும். இத்திட்டம் சென்னை நகருக்குள் வாகன நெரிசலைக் குறைப்பதன்மூலம் பசுமை இல்ல வாயு (GHG) வெளியேற்றத்தைக் குறைக்கும்.

சென்னை எல்லைச் சாலையானது நிர்வாகம் மற்றும் செயல்படுத்துவதற்கு வசதியாக 5 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு பலதரப்பு மற்றும் இருதரப்பு நிதியுதவி நிறுவனங்களின் வெளிப்புற உதவியுடன் செயல்படுத்தப்பட உள்ளது.

2023 ஏப்ரல் 1]

4.3.1 சென்னை எல்லைச் சாலை திட்டத்தின் பிரிவு -I

சென்னை எல்லைச் சாலை திட்டத்தின் பிரிவு - I எண்ணூர் துறைமுகத்தில் தொடங்கி தச்சூர் வரை 25.40 கி.மீ. நீளத்திற்கு, சென்னை வெளிவட்ட சாலைக்கு இணைப்பு சாலையுடன் அமையப் பெறவுள்ளது. இதற்காக ரூ.951 கோடி மதிப்பில் 245.25 ஹெக்டேர் நிலத்தினைக் கையகப்படுத்துவதற்காக அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பிரிவுக்கான நிலம் கையகப்படுத்துதல், நிதியுதவி வழங்கும் நிறுவனங்களின் வழிகாட்டுதல்படி மேற்கொள்ளப்பட்டு நிறைவு பெறும் நிலையில் உள்ளது.

மேலும் இப்பிரிவு–I-னை தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தின்மூலம் செயல்படுத்த அரசு ரூ.2673.42 கோடிக்கு நிர்வாக அனுமதி அளித்துள்ளது. இதற்காக ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிதி நிறுவனத்தின் (JICA) நிதி உதவிக்கான ஒப்பந்தம் ரூ.2473.70 கோடி அளவில் மேற்கொள்ளப்பட்டு, நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு திட்டங்களைச் செயல்படுத்தும் ஆலோசகர்களும், கட்டுமான மேற்பார்வை ஆலோசகர்களும் நியமிக்கப்பட்டு, ரூ.2122.10 கோடி ஒப்பந்த மதிப்பிற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் 2025–ல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

4.3.2 சென்னை எல்லைச் சாலை திட்டத்தின் பிரிவு II & III

சென்னை எல்லைச் சாலை திட்டத்தின் பிரிவு-II தச்சூர் முதல் திருவள்ளூர் புறவழிச்சாலை வரையும் பிரிவு-III திருவள்ளூர் புறவழிச்சாலை முதல் திருபெரும்புதூர் வரையும் அமைக்கப்படவுள்ளது. இதன் மொத்த நீளம் 56.20 கி.மீ. ஆகும்.

இதற்காக 313.93 ஹெக்டேர் நிலத்தினைக் கையகப்படுத்த ரூ.1855.40 கோடிக்கு அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது 238.05 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டு மீதம் உள்ள 75.88 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகின்றது.

இத்திட்டத்தின் பிரிவு–II மற்றும் பிரிவு–III தமிழ்நாடு சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் செயல்படுத்த ரூ.4899 கோடிக்கு அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 478.07 மில்லியன் அமெரிக்க டாலருக்கான நிதி ஒப்பந்தம் ஆசிய

உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB) மற்றும் பெட்ரோலிய ஏற்றுமதி நாடுகளின் சர்வதேச மேம்பாட்டு நிதி அமைப்புடன் (OFID) விரைவில் கையொப்பமிடப்படவுள்ளது.

பணிகளை திறம்பட செயல்படுத்த நிலம் கையகப்படுத்துதல் மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்றம் (LAR&R) ஆலோசகர்கள், நில எடுப்பு மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு செயல்முறையை மேற்பார்வையிடும் ஆலோசகர்கள் (LARR–MC), திட்ட மேலாண்மை ஆலோசகர்கள் (PMC) மற்றும் கட்டுமான மேற்பார்வை ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பிரிவு II-ற்கான கட்டுமானப் பணிகள் 2 இபிசி தொகுப்புகளாகப் (EPC-01&EPC-02) பிரிக்கப்பட்டுள்ளது.

- EPC-01: ரூ.820.59 கோடி ஒப்பந்த மதிப்பிற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் 2025–ல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.
- EPC-02: ரூ.719.10 கோடி ஒப்பந்த மதிப்பிற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் 2025–ல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

பிரிவு III-ற்கான கட்டுமானப் பணிகள் 3 இபிசி தொகுப்புகளாக பிரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படவுள்ளன.

4.3.3 சென்னை எல்லைச் சாலை திட்டத்தின் பிரிவு IV

சென்னை எல்லைச் சாலை திட்டத்தின் பிரிவு IV திருபெரும்புதூர் முதல் தொடங்கி சிங்கப்பெருமாள் கோவில் வரை முடிவடைகிறது. மேலும், இத்திட்டத்தின் பிரிவு IV-ன் கட்டுமானப் பணிகள் மாநில அரசின் நிதியில் ஏற்கெனவே முடிக்கப்பட்ட நிலையில் சென்னை எல்லைச் சாலை திட்டத்தின் தரத்திற்கு மேம்படுத்தப்பட வேண்டியுள்ளது. இப்பிரிவின் நீளம் 23.80 கி.மீ. ஆகும்.

4.3.4 சென்னை எல்லைச் சாலை திட்டத்தின் பிரிவு V

சென்னை எல்லைச் சாலை திட்டத்தின் பிரிவு V சிங்கப்பெருமாள் கோவில் முதல் தொடங்கி பூஞ்சேரி வரை மொத்த 27.47 கி.மீ. நீளமாகும். இதற்காக 126.84 ஹெக்டேர் தனியார் நிலத்தினைக் கையகப்படுத்த ரூ.747.92 கோடிக்கு அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, நில எடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2023 ஏப்ரல் 1]

இப்பிரிவிற்கு வெளி நிதி உதவி பெறுவதற்காக முதல்நிலை திட்ட அறிக்கை இந்திய அரசின் பொருளாதார விவகாரத் துறை (DEA)-க்கு அனுப்பப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

4.3.5 2022-23 ஆம் ஆண்டிற்கான செலவினம்

2022-23 ஆம் ஆண்டில் 20-03-2023 வரை ரூ.550.00 கோடி செலவிடப்பட்டுள்ளது.

5. சாலை பாதுகாப்பு

விபத்தில்லாப் பயணம் என்பது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வைகளில் ஒன்றாகும். சாலை விபத்துகளைக் குறைக்கவும், சாலைப் பாதுகாப்பை மேம்படுத்தவும் மாநில அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அதிவேகம், கவனச் சிதறல், மது போதையில் வாகனம் ஓட்டுதல், குறுகலான வளைவுகளில் முந்திச் செல்லுதல், சாலையில் விலங்கினங்கள் குறுக்கிடுதல் மற்றும் சாலையின் வடிவியல் குறைபாடுகள் போன்ற பல்வேறு காரணங்களால் சாலை விபத்துகள் ஏற்படுகின்றன. சாலை விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகளையும் காயமடைதலையும் குறைப்பதற்கு, போக்குவரத்து, காவல், நெடுஞ்சாலைகள், சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற பல்வேறு துறைகளின் ஒருங்கிணைப்பு அவசியமாகின்றது. சர்வதேச சாலைக் கூட்டமைப்பின் வழிகாட்டுதலின்படி, 5E என்று கூறப்படும் பொறியியல் (Engineering), கல்வி (Education), அமலாக்கம் (Enforcement), அவசர சிகிச்சை (Emergency) மற்றும் பரிவு (Empathy) ஆகியவற்றினைச் செயல்படுத்த அனைத்துப் பங்குதாரர்களின் ஒத்துழைப்பும் அவசியமாகிறது.

வாகனங்களின் அதிவேக வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு தரமான மற்றும் பாதுகாப்பான சாலை உள்கட்டமைப்பை வழங்குவதை நெடுஞ்சாலைத் துறை நோக்கமாகக் கொண்டுள்ளது. சாலைப் பாதுகாப்புத் தணிக்கைப் பயிற்சிமூலம் திறன் மேம்பாடு மற்றும் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது சாலை விபத்துகளைத் தடுக்க உதவும்.

[2023 ஏப்ரல் 1

5.1 சாலைப் பாதுகாப்பு அலகு

நெடுஞ்சாலைத் துறையில் குறுகிய கால, இடைக்கால மற்றும் நீண்ட கால நடவடிக்கைகளைப் பரிந்துரைத்து சாலைப் பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கத்துடன் சாலைப் பாதுகாப்பு அலகு உருவாக்கப்பட்டுள்ளது. நெடுஞ்சாலை வடிவமைப்பு மேம்பாடுகள் மற்றும் கீழ்க்கண்ட தொடர்புடைய பிற நடவடிக்கைகளைப் பரிந்துரைப்பதன்மூலம் விபத்துகளைக் குறைக்க உதவுகிறது.

- i-RAD தளத்திற்கு, அறிவியல் முறையில் தரவுகளைச் சேகரித்துப் பகுப்பாய்வு செய்தல்.
- சாலைப் பாதுகாப்பு தொடர்புடைய பல்வேறு பங்குதாரர்களின் துறை மற்றும் அரசு சாரா நிறுவனங்களை ஒருங்கிணைத்தல்.
- விபத்துக் கரும் புள்ளிகளைக் (Black spots) கண்டறிதல் மற்றும் சரி செய்தல்.
- Hot Spots என்னும் விபத்துப் பகுதிகளைக் கண்டறிதல் மற்றும் சரி செய்தல்.
- சாலைச் சந்திப்புகளை மேம்பாடு செய்ய பரிந்துரைத்தல்.

மேலும், மாணவர்களிடையே சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக நெடுஞ்சாலைத் துறையின் சாலைப் பாதுகாப்பு பொறியாளர்களால் பள்ளி மற்றும் கல்லூரிகளில் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், நெடுஞ்சாலைத் துறையின் சாலைப் பாதுகாப்புப் பொறியாளர்கள், சிக்னல் நேரத்தை மேம்படுத்துவதில் போக்குவரத்துக் காவல் துறையினருடன் தீவிரமாக ஒருங்கிணைந்து, போக்குவரத்து நெரிசலைக் குறைத்து நேரத்தை மிச்சப்படுத்தவும், விபத்துகளைத் தடுக்கவும் உதவுகிறார்கள்.

5.2 விபத்து கரும்புள்ளி (Black Spot)

சுமார் 500 மீ. நீளமுள்ள நெடுஞ்சாலையில், கடந்த மூன்று வருடங்களிலும் சேர்த்து, 5 சாலை விபத்துகள் (மூன்று வருடங்களில் ஏற்பட்ட உயிரிழப்புகள் / கடுமையான காயங்கள் உள்பட) அல்லது 10 உயிரிழப்புகள் (மூன்று வருடங்களிலும் சேர்த்து) ஏற்பட்டால்

2023 ஏப்ரல் 1]

அப்பகுதி சாலை விபத்து கரும்புள்ளி எனப்படுகிறது. ஒன்றிய அரசின் மத்திய சாலைப் போக்குவரத்து அமைச்சகத்தால், 1208 கரும்புள்ளிகள் தமிழ்நாட்டில் கண்டறியப்பட்டுள்ளன. அவ்வாறு அடையாளம் காணப்பட்ட கரும்புள்ளிகளில் பல்வேறு சீரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

5.3 சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு

5.3.1 மாவட்ட அளவிலான சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வுக் கூட்டம்

சாலைப் பாதுகாப்பினை வலியுறுத்தி, மாண்புமிகு பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களால் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வுக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. இதுவரை, நாமக்கல், செங்கல்பட்டு, ஊட்டி, தேனி, மதுரை, தூத்துக்குடி, சிவகங்கை, ராமநாதபுரம், ஈரோடு, கோவை மற்றும் விருதுநகர் ஆகிய 11 மாவட்டங்களில் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்தக் கூட்டங்களில், வாகன உரிமையாளர் சங்கங்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் உள்பட அனைத்துப் பங்குதாரர்களும் தீவிரமாகப் பங்கேற்க வலியுறுத்தப்பட்டது. சாலையைப் பயன்படுத்துவோர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த இந்தக் கூட்டங்கள் மிகவும் பயனுள்ளதாக உள்ளன.

5.3.2 சாலைப் பாதுகாப்புப் பயிற்சி

“விபத்தில்லாத் தமிழ்நாடு” என்ற குறிக்கோளை முன்னெடுத்துச் செல்வதன் ஒரு அங்கமாக, 'சாலைப் பாதுகாப்புப் பொறியியல்' குறித்த பயிற்சி மாண்புமிகு பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களால் 15.12.2021 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இதுவரை 13 கட்டங்களாக, 475 பொறியாளர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். ஒருங்கிணைந்த சாலை விபத்து தரவு (i-RAD) மேலாண்மை, போக்குவரத்தை ஆற்றுப்படுத்தும் நடவடிக்கைகள் (Traffic Calming Measures), சாலைப் பாதுகாப்பில் நுண்ணறிவுப் போக்குவரத்து அமைப்பின் (ITS) பயன்பாடு, பணியிடத்தில் பாதுகாப்பு (Work Zone Safety), சாலைப் பாதுகாப்புத் தணிக்கை போன்றவை குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. சாலைப் பாதுகாப்பில் துறைகளுக்கிடையேயான

திறனை வளர்ப்பதற்காக, அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி மற்றும் காவல் துறையில் நெடுஞ்சாலைப் பொறியாளர்களால் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

5.3.3 சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி

சாலைப் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு, 22.08.2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வுக் கையேடு வெளியிடப்பட்டது. மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாநிலத்தில் சாலைப் பாதுகாப்பின்மூலம் விபத்துகளையும் உயிரிழப்புகளையும் குறைத்திடும் பொருட்டு அனைத்துப் பங்குதாரர் துறைகளுடன் 03.01.2023 அன்று ஆய்வு செய்தார்கள்.

5.4 இன்னுயிர் காப்போம் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 18.11.2021 அன்று நடைபெற்ற சாலைப் பாதுகாப்பு குறித்த கூட்டத்தில் இன்னுயிர் காப்போம் திட்டத்தின் (IKT) மூலம் சீரான சாலைகள் (இறப்பு விபத்து நிகழ்வு குறைப்பு) கருத்துருவினை அறிவித்தார். சீரான சாலைகள் கருத்துருவினைச் செயல்படுத்தும் பொருட்டு, சிறப்புப் பணிக் குழு - சாலைப் பாதுகாப்பு (Special Task Force - Road Safety) 15.03.2022 அன்று மாநில குற்றப் பதிவுப் பணியகத்தின் கூடுதல் தலைமை இயக்குநர் அவர்களின் தலைமையின்கீழ் தோற்றுவிக்கப்பட்டது. இதில், தலைமைப் பொறியாளர் (நெ), கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகு அவர்களும் ஒரு உறுப்பினராக உள்ளார். இக்குழு, விபத்துகள் மற்றும் உயிரிழப்புகளைக் குறைக்க குறுகிய மற்றும் நீண்ட காலத் தீர்வுகளைக் கண்டறிதல், மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் சாலை-நிர்வகிக்கும் நிறுவனங்களால் (Road owning Agencies) செயல்படுத்தப்படும் குறுகிய காலத் தீர்வுகளைக் கண்காணித்தல் மற்றும் சட்டப்பூர்வ அமைப்பான தமிழ்நாடு சாலைப் பாதுகாப்பு ஆணையம் (TNRSA) அமைப்பதற்கான ஆயத்தப் பணிகளை முன்னெடுத்தல் ஆகிய பணிகளையும் மேற்கொள்ளும். சிறப்புப் பணிக் குழுவால் 2095 விபத்துப் பகுதிகள் (Hot Spots) கண்டறியப்பட்டு, ரூ.43.48 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, குறுகிய காலப் பணிகள் நடைபெறவுள்ளன.

2023 ஏப்ரல் 1]

5.5 சாலைப் பாதுகாப்பு முன்முயற்சிக்கான பாராட்டுகள்

சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறையின் ஒன்றிய அமைச்சர், மாண்புமிகு திரு. நிதின் கட்கரி அவர்கள், தமிழ்நாட்டின் சாலைப் பாதுகாப்பு முன்முயற்சிகளுக்கு தமது பாராட்டுகளை, பாராளுமன்றத்தில் பதிவு செய்தார். மேலும், தமிழ்நாட்டின் சாலைப் பாதுகாப்பு குறித்த சிறந்த முன்னெடுப்புகளை பிற மாநிலங்களும் பின்பற்ற வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். இதே கருத்தினை, ஒன்றிய சாலைப் போக்குவரத்து, நெடுஞ்சாலை மற்றும் விமானப் போக்குவரத்து இணை அமைச்சர் மாண்புமிகு திரு. விஜய் குமார் சிங் அவர்கள் கடந்த 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் 9 ஆம் தேதி அன்று பெங்களூரில் நடைபெற்ற மந்தன் கருத்தரங்கில் வலியுறுத்தியுள்ளார். மாண்புமிகு உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதியும் சாலைப் பாதுகாப்பிற்கான உச்ச மன்றத்தின் குழுவின் தலைவருமான திரு. அபய் மனோகர் சாப்ரே அவர்கள் தமிழ்நாட்டின் சாலைப் பாதுகாப்பு முயற்சிகளுக்கு பாராட்டுகளைத் தெரிவித்துள்ளார்.

5.6 நிதி ஒதுக்கீடு

சாலை சந்திப்பு மேம்பாடுகள் மற்றும் சாலைப் பாதுகாப்பு அம்சங்களில் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளுக்காக, 2021 - 2022 & 2022 - 2023 ஆம் ஆண்டுகளில் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது:

வ. எண்	பணி விபரம்	2021 - 22		2022 - 23	
		வேலைகளின் எண்ணிக்கை	தொகை- ரூ. கோடிகளில்	வேலைகளின் எண்ணிக்கை	தொகை ரூ. கோடிகளில்
1.	ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுத் திட்டப் பணிகள்	*403*	*200.00*	*532*	*191.37*
2.	சாலைப் பாதுகாப்புக் கூறுகளின்கீழ் வரும் பணிகள்	*99*	*100.00*	—	—

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அவற்றில், 439 பணிகள் ரூ. 188.14 கோடி மதிப்பில் நிறைவடைந்துள்ளது.

இந்தப் பணிகள் நெடுஞ்சாலைத் துறையின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், மாநில அரசின் பராமரிப்பிலுள்ள தேசிய நெடுஞ்சாலை அலகில் 2019 - 2020 முதல் 2021 - 2022 முடிய 121 சாலைப் பாதுகாப்புப் பணிகளுக்கு ரூ.476.81 கோடி ஒன்றிய சாலைப் போக்குவரத்து அமைச்சகம் ஒதுக்கீடு செய்துள்ளது. இவற்றில், பெரும்பாலான பணிகள் நிறைவடைந்துள்ளன; மீதமுள்ள நிறைவடையும் நிலையில் உள்ளன.

6. தரக்கட்டுப்பாடு, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

6.1 தரக் கட்டுப்பாடு

இந்திய சாலைகள் குழுமம் (IRC) மற்றும் சாலைப் போக்குவரத்து (ம) நெடுஞ்சாலைகள் அமைச்சகம் (MORT&H) ஆகியவற்றின் தொழில்நுட்பக் குறிப்புகளின்படி தேவையான சோதனைகளை நடத்துவதன்மூலம் சாலைகள் மற்றும் பாலங்களின் கட்டுமானத்தில் தரக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பணியின் ஒவ்வொரு கட்டத்திலும் உரிய சோதனைகளை நடத்துவதன் மூலமும், அவ்வப்போது குறைகளை சரிசெய்வதன் மூலமும் தரக் கட்டுப்பாடு செயல்படுத்தப்படுகிறது. இதனால் கணிசமான நேரம், ஆற்றல் மற்றும் நிதி சேமிக்கப்படுகிறது. மேலும், கட்டுமானத்தின் ஆயுட்காலம் மற்றும் செயல்திறன் மேம்படுகிறது. எனவே சாலைப் பயனாளர்களுக்கு பாதுகாப்பான மற்றும் வசதியான பயணம் வழங்கப்படுகிறது.

கட்டுமானத்தின் துவக்க நிலையில், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் (HRS) மற்றும் அதன் மண்டல ஆய்வகங்களில் அடித்தள மண்ணின் தாங்குதிறன், நிலக்கீல்/ நிலக்கீல் அல்லாத அடுக்குகளுக்கான சூத்திரக் கலவை, கற்கலவை கட்டமைப்புகளுக்கான கலவை வடிவமைப்பு, இரும்பின் வலிமை குறித்த சோதனை மற்றும் ஆழ்துளை தூண்களின் தாங்கு திறனை உறுதி செய்வதற்காக பால கட்டுமானத்தின் துவக்க நிலையிலும் (Initial) மற்றும் தாங்குதூண்கள் அமைக்கும் நிலையிலும் (Routine) ஆழ்துளை தூண் சோதனைகள் போன்றவை மேற்கொள்வதன்மூலம் தரக் கட்டுப்பாடு உறுதி செய்யப்படுகிறது.

2023 ஏப்ரல் 1]

*பணிகள் நடைபெறும்போது, தரக்கட்டுப்பாட்டுப் பொறியாளர்கள், நிலக்கீல்/ நிலக்கீல் அல்லாத அடுக்குகள் மற்றும் கற்கலவை பணிகளுக்கான தரத்தினை உறுதி செய்ய கற்கள் (*Aggregates*) / நிலக்கீல் / சிமெண்ட் போன்ற கட்டுமானப் பொருட்கள் மீதான சோதனை மற்றும் சாலை தள அடுக்குகளின் அடர்த்தி, தடிமன், கலவை வெப்பநிலை, நிலக்கீலின் அளவு, கற்கலவைக்கான சரிவு மற்றும் கனவடிவ சோதனை போன்ற கள மற்றும் ஆய்வக சோதனைகளை மேற்கொள்கின்றனர்.*

கட்டுமானம் (ம) பராமரிப்பு, நபார்டு (ம) கிராமச் சாலைகள் மற்றும் மெட்ரோ ஆகிய அலகுகளில் சாலை மற்றும் பாலப் பணிகளின் தரத்தை உறுதி செய்வதற்காக நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தின் 9 தரக்கட்டுப்பாடு கோட்டங்கள் மற்றும் 42 உட்கோட்டங்கள் செயல்படுகின்றன. மேலும், தேசிய நெடுஞ்சாலை அலகின்கீழ் 4 தரக்கட்டுப்பாடு கோட்டங்கள், 13 உட்கோட்டங்கள் மற்றும் திட்ட அலகின்கீழ் 5 உட்கோட்டங்கள் தரத்தினை உறுதி செய்ய செயல்பட்டு வருகின்றன. வெளியிலிருந்து நிதி உதவி பெறும் திட்டங்களில், செயல்படுத்தப்படும் பணிகளுக்கு, தரக்கட்டுப்பாடு ஆலோசகர்களும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

6.2 ஆராய்ச்சி

*நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் சாலைகளின் ஆயுட்காலத்தை மேம்படுத்த, புதுமையான மற்றும் செலவு குறைந்த தொழில்நுட்பங்களை ஊக்குவிப்பதற்கான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முன்னதாக, பகுதி-*II *திட்டத்தின்கீழ் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது, தமிழ்நாடு புத்தாக்க முன் முயற்சிகள் (*TANII*) திட்டத்தின்கீழ் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு, இதுவரை 9 ஆய்வுகள் முடிவுற்றுள்ளன. அவற்றில் சில ஆய்வுகள் பின்வருமாறு:*

- *நெடுஞ்சாலைத் துறையில் பாலத்தின் செயல்திறனை கருவிகள்மூலம் கண்காணித்தல்.*
- *சணல் இழை வலுவூட்டப்பட்ட குளிர் நிலக்கீல் கலவைகளின் செயல்திறன் குறித்த ஆய்வு.*

6.2.1 புதிய பொருட்கள் மீதான ஆராய்ச்சி

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு துறையின் செயலாக்கப் பிரிவுகளுக்கு

பரிந்துரைக்கப்பட்ட சில புத்தாக்க தொழில்நுட்பங்கள் பின்வருமாறு:

- கற்கலவையில், மறுசுழற்சி செய்யப்பட்ட கற்களை (RCA) இயற்கையான கற்களுக்கு பகுதியளவு மாற்றாகப் பயன்படுத்துவதன்மூலம் சுற்றுச் சூழல் பாதிப்பு, ஆற்றல் நுகர்வு மற்றும் கரியமிலவாயு வெளியீடு ஆகியவற்றைக் குறைக்க இயலும். இதன் மூலம், கற்களுக்காக இயற்கை வளங்களை பயன்படுத்துவதைக் குறைக்கலாம்.
- நிலக்கீலுடன், உகந்த அளவிலான நுண்ணிய களிமண்ணைச் சேர்ப்பதன்மூலம், அதன் தன்மைகள் மேம்படுத்தப்படுகின்றன. இதில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வக ஆராய்ச்சியின்மூலம் இந்தக் கலவை சாலை மேற்பரப்புகளில் ஏற்படும் குறைபாடுகளைத் தவிர்த்து, குறைந்த பராமரிப்பு மதிப்பில் சாலையின் ஆயுளை அதிகரிக்கலாம் என கண்டறியப்பட்டுள்ளது.
- சாலை அடுக்குகளை உறுதிப்படுத்த மற்றும் வலுவூட்ட, வழக்கமான முறைகளைவிட RBI-கிரேடு 81 மற்றும் ஜியோடெக்ஸ்டைல் போன்ற புதுமையான பொருட்களைப் பயன்படுத்துவதால் செயல்திறன் அதிகரிப்பது கண்டறியப்பட்டுள்ளது. இவை சாலையின் கட்டுமான செலவைக் குறைத்து, அதன் செயல்திறனை மேம்படுத்தி, ஆயுளை அதிகரிக்கின்றன. பராமரிப்பு செலவைக் குறைக்கின்றன. மேலும், இந்தத் தொழில்நுட்பங்களைப் பின்பற்றுவதன்மூலம் கரியமில வாயு வெளிப்பாடு குறைந்து, சாலை கட்டுமானம் சுற்றுச்சூழலுக்கு உகந்ததாக அமைகிறது.

இந்தப் புத்தாக்க முயற்சிகளை கள அளவில் செயல்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

6.2.2 களத்தில் புதுமையான தொழில்நுட்பங்கள்

- நீலகிரி மாவட்டத்தில் சாலையின் செங்குத்தான சரிவுகளில் மண் அரிப்பு மற்றும் நிலச்சரிவைத் தடுக்க, புதிய தொழில்நுட்பங்களான மண்ணிற்கு வலுவூட்டல், நீரக விதைப்பு முறை மற்றும் ஜியோகிரிட் மூலம் மலைச்சரிவின் உறுதித்தன்மையை அதிகரித்தல்

2023 ஏப்ரல் 1]

போன்ற தொழில்நுட்பங்கள் ஊட்டி – கோத்தகிரி - மேட்டுப்பாளையம் சாலையில் மேற்கொள்ளப்பட்டன.

- தேசிய நெடுஞ்சாலை 226 Extn (புதிய NH எண்:136) அரியலூர் புறவழிச் சாலையில் மண் அரிப்பைக் கட்டுப்படுத்தவும், சாலையின் உயரமான கரையின் சரிவைப் பாதுகாக்கவும், தென்னைநார் புல்விரிப்பை இரும்பு 'U பின்'களைப் பயன்படுத்தி கற்கலவை பிளாக்குகள்மூலம் பொருத்தும் பணியானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

6.2.3 இந்திய சாலைகள் குழுமம்

- இயக்குநர், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் அவர்கள் இந்திய சாலைகள் குழுமத்தினுடைய "புதிய பொருட்கள் (ம) தொழில்நுட்பங்களை அங்கீகரிக்கும் குழு" மற்றும் "மனிதவள மேம்பாட்டுக் குழு" ஆகியவற்றில் உறுப்பினராக உள்ளார்.
- ஒவ்வொரு IRC வருடாந்திர அமர்விலும், நெடுஞ்சாலைத் துறையின் பொறியாளர்களால் தொழில்நுட்ப விளக்க உரைகள் வழங்கப்பட்டு வருகின்றன. அக்டோபர் - 2022 இல் லக்னோவில் நடைபெற்ற இந்திய சாலைகள் குழுமத்தினுடைய 81-வது ஆண்டு அமர்வில், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையப் பொறியாளர்கள் மூன்று தொழில்நுட்ப ஆய்வுக் கட்டுரைகளை அளித்தனர்.

6.3 பரிசோதனை வசதிகள்

கட்டுமானப் பொருட்களைப் பரிசோதனை செய்ய சென்னை, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் நிலக்கீல், மண், கற்கலவை மற்றும் போக்குவரத்து ஆகிய நான்கு ஆய்வகங்களும் செயல்பட்டு வருகின்றன. மேலும், விழுப்புரம், திருச்சி, தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, சேலம், திருப்பூர் மற்றும் கோவை ஆகிய எட்டு இடங்களில் மண்டல ஆய்வகங்கள்மூலம் பொருட்களின் மீதான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றில் மண் பரிசோதனை, இரும்பின் வலிமை குறித்த பரிசோதனை, கற்கலவைக்கான கலவை வடிவமைப்பு, ஆழ்துளைத் தூண் சோதனை, நிலக்கீல் சூத்திரக் கலவை, வாகன அச்சு எடை அறியும்

சோதனை மற்றும் சாலை மேற்பரப்பு சொரசொரப்புத்தன்மை சோதனை ஆகியவை அடங்கும். 2022-23 ஆம் நிதியாண்டில் 20.03.2023 வரை 23,400 பரிசோதனைகள் செய்யப்பட்டு ரூ.19.28 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தை சர்வதேசத் தரத்திற்கு உயர்த்தும் திட்டத்தின் ஒரு பகுதியாக சென்னை கன்னியாகுமரி தொழிற்தடத் திட்ட அலகின்மூலம் ரூ.3.95 கோடிக்கு நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் கொள்முதல் செய்யப்படுகின்றன.

6.4 தொழில்நுட்ப ஆலோசனைகள்

- பள்ளிப்பாளையத்தில் காவிரி ஆற்றில் கட்டப்பட்ட, பாலத்தை புனரமைக்க 12.05.2022 அன்று பரிந்துரைகள் வழங்கப்பட்டன.
- சென்னை விமான நிலையத்தின் ஓடுதளப் பாதையில் உள்ள மண்ணின் தாங்கு திறனை (CBR) அதிகரிப்பதற்கான வழிமுறைகள் குறித்த தொழில்நுட்ப ஆலோசனைகள் பரிந்துரைக்கப்பட்டன.

·இந்திய விண்வெளி ஆய்வு மையமான, சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில், ஸ்ரீஹரிகோட்டா — சூலூர்பேட்டை சாலை நீரில் மூழ்குவதையும், சாலை அரிக்கப்படுவதையும் தடுக்க பரிந்துரைகள் வழங்கப்பட்டன.

6.5 பயிற்சி

6.5.1 பயிற்சி மையம்

துறையின் பொறியாளர்கள் மற்றும் இதர அதிகாரிகளின் செயல்திறனை மேம்படுத்தும் வகையில் பயிற்சி மையம் பல்வேறு பயிற்சிகளை நடத்தி வருகிறது. பயிற்சி மையத்தில் உள்ள வசதிகள் பின்வருமாறு:

- 250 இருக்கைகள் கொண்ட அதிநவீன கூட்ட அரங்கம்
- 40 இருக்கைகள் கொண்ட நான்கு வகுப்பறைகள்
- சிறு கருத்தரங்கக் கூடம்
- கணினி ஆய்வகம்

2023 ஏப்ரல் 1]

- நூலகம்
- இரண்டு படுக்கைகள் கொண்ட 32 அறைகள் மற்றும் மூன்று படுக்கைகள் கொண்ட 8 அறைகளை உள்ளடக்கிய விடுதி
- உடற்பயிற்சிக்கூடம், உள் மற்றும் வெளி விளையாட்டு வசதிகள்

6.5.2 விரிவான பயிற்சித் திட்டம் (CTP)

துறையின் அனைத்துப் பொறியாளர்களுக்கும் பிற அலுவலர்களுக்கும் 5 ஆண்டுகளில் பயிற்சி வழங்கும் வகையில், விரிவான பயிற்சித் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது, மாண்புமிகு அமைச்சர் பொதுப் பணிகள், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அவர்களால் 25.04.2022 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. 2022-23 ஆம் ஆண்டில், 577 பொறியாளர்களுக்கும் 27 தொழில்நுட்பம் சாராத அலுவலர்களுக்கும் பல்வேறு தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. ஆகஸ்ட் 2022-ல் நியமிக்கப்பட்ட 150 இளநிலை வரை தொழில் அலுவலர்களுக்கு அறிமுக மற்றும் அடித்தளப் பயிற்சி வழங்கப்பட்டது. அனைத்து பயிற்சிகளின்போதும், அதிகாலையில் யோகா மற்றும் தியான வகுப்புகள், சிறந்த யோகா ஆசிரியர்களால் நடத்தப்படுகின்றன.

6.5.3 பிற பயிற்சி நடவடிக்கைகள்

23 துணை ஆட்சியர்களுக்கும், தலைமைச் செயலகத்தின் 110 பிரிவு அலுவலர்களுக்கும் துறை சார்ந்த பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. பல்வேறு பொறியியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்களுக்கு இந்நிறுவனத்தின் ஆய்வகங்களில் தொழில்நுட்பப் பயிற்சி (In-Plant training) வழங்கப்பட்டுள்ளது. மேலும் மாணவர்கள், அவர்களது திட்டப்பணிகளை மேற்கொள்ளத் தேவையான உதவிகள் வழங்கப்படுகின்றன.

இந்திய நெடுஞ்சாலை பொறியாளர்கள் கல்விக் கழகம் (IAHE), புதுடெல்லி, அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி (AASC), சென்னை ஆகிய நிறுவனங்கள் நடத்தும் பயிற்சிகளில் கலந்துகொள்ள நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள் பரிந்துரைக்கப்படுகின்றனர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

நெடுஞ்சாலைத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் குழு ஒன்று, சென்னை கன்னியாகுமரி தொழிற்தடத் திட்ட அலகின் (CKICP) நிதியுதவியின்கீழ் அறிவுத்திறன் மேம்படுத்தவும், ஆராய்ச்சி நிலையத்தை உலகத் தரத்திற்கு உயர்த்தவும் ஆஸ்திரேலியாவுக்கு பயணம் மேற்கொள்ளப்பட உள்ளது. இது துறையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும்.

7. தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம்

தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் (TNRDC), ஒரு கூட்டு நிறுவனமாக 1998 ஆம் ஆண்டில் நிறுவனச் சட்ட விதிகளின்கீழ் பதிவு செய்யப்பட்டு, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (TIDCO) மற்றும் TIDEL ஆகியவற்றின் 50:50 சம பங்கு விகிதத்தில் இயங்கி வருகிறது.

7.1. செயல்பாடுகள்

சலுகை ஒப்பந்ததாரர், திட்ட மேலாண்மை முகவர் மற்றும் சுங்க வசூல் நிர்வாகம் ஆகியவை இந்நிறுவனத்தின் முதன்மை செயல்பாடுகள் ஆகும்.

7.1.1 தகவல் தொழில்நுட்ப விரைவுச்சாலை நிறுவனம் (IT Express Way Ltd) (ITEL)

தகவல் தொழில்நுட்ப விரைவுச் சாலை நிறுவனம் தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தின் துணை நிறுவனமாகும். இந்நிறுவனத்தின்மூலம் இராஜீவ் காந்தி சாலையில், மத்திய கைலாஷ் முதல் சிறுசேரி வரை மேம்பாடு செய்யப்பட்டு 5 இடங்களில் சுங்கக் கட்டணம் வசூலிக்கப்பட்டது. தற்போது 4 இடங்களில் சுங்கக் கட்டணம் வசூலிக்கப்படவில்லை. சிறுசேரியில் மட்டும் தற்போது சுங்கக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. சென்னை நகரின் தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள் பெருமளவில் அமைந்துள்ள பகுதியில் செல்லும் இப்பிரதான சாலை, இரு புறமும் சேவைச் சாலைகள் அடங்கிய ஆறுவழிச் சாலையாகும். மேலும் பாதசாரிகள் வசதிக்காக 15 நடை மேம்பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

7.1.2 பயன்பாட்டில் உள்ள திட்டங்கள்

(i) அக்கரை முதல் புதுச்சேரி வரையிலான கிழக்கு கடற்கரை சாலையினை தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம்

சுங்கச் சாலையாகப் பராமரித்து வந்த நிலையில், அக்கரை முதல் மாமல்லபுரம் வரையிலான பகுதி மட்டும் தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தினால் சுங்கச் சாலையாக நிர்வகிக்கப்பட்டு வருகிறது. மாமல்லபுரத்தில் இருந்து புதுச்சேரி வரையிலான கிழக்கு கடற்கரைச் சாலைப் பகுதி இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டது,

(ii) சென்னை வெளிவட்டச் சாலைத் திட்டம் தேசிய நெடுஞ்சாலை – 32–ல் வண்டலூர் முதல் திருவொற்றியூர் பொன்னேரி பஞ்செட்டி சாலையில் உள்ள மீஞ்சூர் வரையில் பசுமை வழிச்சாலையாக வடிவமைத்து, கட்டுமானம், நிதியளித்தல், இயக்குதல், பராமரித்தல் அடிப்படையில் பொது தனியார் பங்கேற்புடன் (PPP mode) பணிகள் முடிக்கப்பட்டு உள்ளன. முதல் கட்டமாக வண்டலூர் (தே.நெ. 32) மற்றும் நெமிலிச்சேரி (தே.நெ. 716) வரையான 29.65 கி.மீ. நீளமுள்ள சாலை அமைக்கும் பணிகள் ரூ.1081.40 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டன. இரண்டாம் கட்டமாக நெமிலிச்சேரி (தே.நெ.716) முதல் திருவெற்றியூர் - பொன்னேரி - பஞ்செட்டி சாலையில் உள்ள மீஞ்சூர் வரையான 30.50 கி.மீ. நீளமுள்ள சாலை ரூ.1075.00 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டது. இச்சாலையில் 19.01.2022 முதல் உபயோகிப்பாளர் கட்டண வசூல் தொடங்கப்பட்டது. மேலும் இச்சாலையின் சுங்க வசூல் வருவாயினை முன் நிதியம் பெறும் வகையில் ஒரு முன் மொழிவு நடப்பாண்டில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

7.2 செயல்படுத்தப்பட்டு வரும் பெருந்திட்டங்கள்

7.2.1 மாநில அரசு நிதி உதவியின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

i. இராஜீவ் காந்தி சாலையில் இந்திரா நகர் சந்திப்பு மற்றும் டைடல் பார்க் சந்திப்புகளில் “U” வடிவ மேம்பால கட்டுமானப் பணிகள்

ஒருங்கிணைந்த, இராஜீவ் காந்தி சாலையில் இந்திரா நகர் மற்றும் டைடல் பார்க் ஆகிய இரண்டு முக்கிய சாலை சந்திப்புகளில் ரூபாய் 108.13 கோடி திட்ட மதிப்பீட்டில் “U” வடிவ மேம்பாலங்களின் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு

வருகின்றன. தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் இத்திட்டத்தின் மேலாண்மை முகவராகச் செயலாற்றி வருகிறது.

ii. கேளம்பாக்கம் மற்றும் திருப்போரூர் புறவழிச்சாலை அமைத்தல்

TNRDC மூலம் செயல்படுத்தப்படும் பணிகள், ஆறு வழி இரட்டைப் பாதையாக, பழைய மகாபலிபுரம் சாலையில் திருப்போரூர் புறவழிச்சாலை (7.45 கி.மீ.) மற்றும் கேளம்பாக்கத்தில் புறவழிச்சாலை (4.675 கி.மீ.) பணிகள் நடைபெற்று வருகின்றன.

iii. சென்னை எல்லைச் சாலை திட்டம் (CPRR)

இத்திட்டத்தின் பிரிவு-1 மற்றும் பிரிவு-5-க்கு தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம், திட்ட மேலாண்மை முகவராக நியமிக்கப்பட்டுள்ளது. சென்னை எல்லைச் சாலை திட்டத்தின், பிரிவு-1, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. இப்பிரிவு எண்ணூர் துறைமுகத்திலிருந்து தொடங்கி தேசிய நெடுஞ்சாலை-16-ல் பொன்னேரி அருகே தச்சூரில் இணைகிறது. மேலும் இத்திட்டச் சாலையுடன் சென்னை வெளிவட்ட சாலையை இணைக்கும் வகையில் இணைப்புச் சாலையும் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இப்பிரிவின் மொத்த நீளம் 25.38 கி.மீ. ஆகும். 27.01.2022-ல் தொடங்கிய பணிகள் மூன்று ஆண்டுகளில் முடிக்கும் வகையில் நடைபெற்று வருகின்றன.

சென்னை எல்லைச் சாலை திட்டத்தின், பிரிவு-5, சிங்கப்பெருமாள் கோயிலில் தொடங்கி மாமல்லபுரம் அருகே பூஞ்சேரியில் முடிகிறது. இச்சாலை தேசிய நெடுஞ்சாலை-32-ஐ தேசிய நெடுஞ்சாலை-332A (கிழக்கு கடற்கரை சாலை) உடன் இணைக்கிறது. இப்பிரிவின் மொத்த நீளம் 26.3 கி.மீ. ஆகும். நிலம் கையகப்படுத்துவதற்கான ரூ.747.92 கோடி நிர்வாக அனுமதி தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு, நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

7.3 2022-23 ஆம் ஆண்டிற்கான செலவினம்

2022-23 ஆம் ஆண்டில் 20-03-2023 வரை ரூ.1155.64 கோடி செலவிடப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 1]

8. தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம்

தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் 2005 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்நிறுவனம் முற்றிலும் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான ஒரு லாப நோக்கமற்ற நிறுவனமாகும். இந்நிறுவனம் பல்வேறு சாலை உட்கட்டமைப்பு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

8.1 தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தினால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள்

8.1.1 ஒரகடம் தொழிற்பூங்கா சாலை கட்டமைப்புத் திட்டம்

வண்டலூர் - வாலாஜாபாத் சாலை கி.மீ. 47/0 - 63/8 வரை நான்குவழிச் சாலையை ஆறுவழிச் சாலையாக மேம்படுத்தும் பணி ரூ.180.09 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளன. மேலும் இதில் ஒரு பகுதியாக “வண்டலூர் - வாலாஜாபாத் சாலையில் கி.மீ. 37/6 - 38/4-ல் படப்பை சந்திப்பில் மேம்பாலம் கட்டும்” பணி ரூ.26.65 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

8.1.2 மதுரை சுற்றுச் சாலையை நான்குவழிச் சாலையாக மேம்படுத்தும் பணி

மதுரை சுற்றுச் சாலை கி.மீ. 0/0 - 27/2 வரை இருவழிச் சாலையை நான்குவழிச் சாலையாக அகலப்படுத்தும் பணி கட்டுதல், இயக்குதல், திரும்ப ஒப்படைத்தல் (BOT) திட்டத்தின்மூலம் முடிக்கப்பட்டு சுங்கச்சாலையாக பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது. மதுரை விமான நிலைய விரிவாக்கத்தின் பொருட்டு, மதுரை சுற்றுச் சாலையில் 8 கி.மீ. நீளத்திற்கு மாற்றுப்பாதை அமைக்க வேண்டியுள்ளது. மாற்றுப்பாதைக்குத் தேவையான நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு ரூ.40.50 கோடிக்கு அனுமதி வழங்கப்பட்டு நில எடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

8.1.3 சென்னை எல்லைச் சாலை திட்டம்

தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் சென்னை எல்லைச் சாலைத் திட்டம் பிரிவு II, III மற்றும் IV செயல்படுத்தப்படுகிறது.

பிரிவு - II

- *நீளம் 26.10 கி.மீ.*
- *தேசிய நெடுஞ்சாலை – 16-ல் தச்சூர் முதல் திருவள்ளூர் புறவழிச்சாலை ஆரம்பம் வரை.*
- *பணிகள் நடைபெற்று வருகின்றன.*

பிரிவு - III

- *நீளம் 30.10 கி.மீ.*
- *திருவள்ளூர் புறவழிச்சாலை ஆரம்பம் முதல் தேசிய நெடுஞ்சாலை – 48-ல் திருப்பெரும்புதூர் வரை.*
- *நில எடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.*

பிரிவு - IV

- *நீளம் 23.80 கி.மீ.*
- *தேசிய நெடுஞ்சாலை -48–ல் திருப்பெரும்புதூர் முதல் தேசிய நெடுஞ்சாலை – 32-ல் சிங்கப்பெருமாள் கோயில் வரை.*
- *சென்னை எல்லைச் சாலையின் மற்ற பிரிவுகளுக்கு ஏற்றவாறு நுழைவுக் கட்டுப்பாட்டுச் சாலையாக மேம்படுத்தப்படவுள்ளது.*

8.1.4 கூடுவாஞ்சேரி மற்றும் சிங்கப்பெருமாள் கோயில் இரயில் நிலையங்களுக்கு இடையில் இரயில்வே கடவுப்பாதை (LC) எண் 47-க்குப் பதிலாக இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி

இந்த இரயில்வே மேம்பாலம் சென்னை எல்லைச் சாலைத் திட்டம் பிரிவு IV மற்றும் பிரிவு V-ஐ இணைக்கும் வகையில் அமைக்கப்பட்டு இப்பணி நடைபெற்று வருகிறது.

2023 ஏப்ரல் 1]

9. தமிழ்நாடு கடல்சார் வாரியம்

தமிழ்நாடு கடல்சார் வாரியமானது தமிழ்நாடு கடல்சார் வாரிய சட்டம், 1995 (தமிழ்நாடு சட்டம் 4/1996)-ன்படி, 18.03.1997 முதல் தமிழ்நாட்டிலுள்ள சிறுதுறைமுகங்களை நிர்வகித்து, கட்டுப்படுத்தி மற்றும் முறைப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் முக்கிய நோக்கங்கள் மற்றும் செயல்பாடுகள் பின்வருமாறு:

- *தமிழ்நாட்டிலுள்ள கடலோர மாவட்டங்களில், ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட தொழிற்சாலைகளையும் துறைமுகத்தை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலைகளையும் ஏற்படுத்துவதற்குத் தேவையான துறைமுக வசதிகளுக்கு வகை செய்தல்.*
- *சீரிய வசதிகள், பணிகள் அளிப்பதன்மூலம் தென்மாநிலங்களின் அதிகரித்து வரும் போக்குவரத்துத் தேவையை நிறைவு செய்தலும், உள்நாட்டு, பன்னாட்டு வணிகத்திற்கு ஆதரவு அளித்தலும்.*
- *போதுமான துறைமுகம் சார்ந்த கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்.*
- *வெவ்வேறு வகை எரிபொருட்களை இறக்குமதி செய்வதற்கென்றே தனித் துறைமுக வசதிகளை அளிப்பதன்மூலம் துறைமுகங்களை அடிப்படையாகக் கொண்ட மின் நிலையங்களை ஏற்படுத்துதல்.*
- *மாநிலத்தில் மேம்படுத்தப்படும் துறைமுக அடிப்படை கட்டமைப்பு வசதிகளை முழுமையாகப் பயன்படுத்தும் அளவிற்கு வசதிகள் செய்தல்.*
- *ஏற்றுமதி மற்றும் இறக்குமதி துறையில் தமிழ்நாட்டின் பங்கை அதிகரித்தல்.*

9.1 கடற்கரை மற்றும் துறைமுகங்கள்

தமிழ்நாடு மாநிலம், இந்தியாவின் இரண்டாவது மிக நீண்ட கடற்கரைப் பகுதியான 1076 கிலோ மீட்டர் நீளம் கொண்டது. இந்தக் கடற்கரையில், கீழ்க்கண்ட மூன்று பெருந்துறைமுகங்கள் உள்ளன.

TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 1

1) சென்னை துறைமுகம்

2) காமராஜர் துறைமுகம் (எண்ணூர்)

3) வ.உ. சிதம்பரனார் துறைமுகம் (தூத்துக்குடி).

தமிழ்நாட்டில் அறிவிக்கப்பட்ட சிறு துறைமுகங்கள் கீழ்க்கண்டவாறு உள்ளன:

அரசுத் துறைமுகங்கள்	தனியார் முதலீட்டுத் துறைமுகங்கள்
1. கடலூர்	1. காட்டுப்பள்ளி
2. நாகப்பட்டினம்	2. எண்ணூர் சிறுதுறைமுகம்
3. பாம்பன்	3. பனையூர்
4. இராமேஸ்வரம்	4. திருச்சோபுரம்
5. கன்னியாகுமரி	5. சிலம்பிமங்கலம்
6. குளச்சல்	6. பரங்கிப்பேட்டை
	7. பி.ஒய் 03 எண்ணெய் வளப் பகுதி
	8. திருக்கடையூர்
	9. திருக்குவளை
	10. உடன்குடி
	11. கூடங்குளம்.

பெருந்துறைமுகங்கள் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டிலும், சிறு துறைமுகங்கள் மாநில அரசின் கட்டுப்பாட்டிலும் இயங்கி வருகின்றன.

9.2 சிறுதுறைமுகங்களின் மேம்பாட்டிற்கான கொள்கை

தமிழ்நாட்டின் கடலோரத்தில் அமைந்துள்ள சிறுதுறை முகங்கள் அனைத்தும் தமிழ்நாடு அரசின் சிறுதுறைமுக மேம்பாட்டுக் கொள்கையின் அடிப்படையில் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. இக்கொள்கையானது தனியார் பங்கேற்பு, நெகிழ்வான அணுகு முறை, நிறுவன ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவனப் பின்னணி ஆகியவற்றை ஊக்குவிக்கிறது. தமிழ்நாடு கடல்சார் வாரியம் ஒரு தன்னாட்சி அமைப்பாக போதிய முழு சுதந்திரத்துடன் செயல்படுவதுடன், இம்மாநிலத்திலுள்ள சிறு துறைமுகங்களின் துரிதமான வளர்ச்சிக்காக நெகிழ்வான அணுகுமுறையுடன் செயல்படுகிறது.

2023 ஏப்ரல் 1]

தனியார் பங்களிப்பை ஊக்குவித்தல் மற்றும் திட்டங்களை விரைவாகச் செயல்படுத்துதல் இக்கொள்கையின் முக்கிய நோக்கமாகும்.

9.3 செயல்பாட்டிலுள்ள சிறு துறைமுகங்களின் இயக்கம்

9.3.1 அரசுத் துறைமுகங்கள்

கடலூர் துறைமுகம்: *நங்கூரத் துறைமுகமான இத்துறைமுகம், தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் சொந்த நிதி மற்றும் ஒன்றிய அரசின் நிதியுதவியுடன் (சாகர்மாலா திட்டம்) சிறு மற்றும் நடுத்தரக் கப்பல்களை நேரடியாகக் கையாளக்கூடிய ஆழ்கடல் துறைமுகமாக மேம்படுத்தப்பட்டு வருகிறது. இத்துறைமுகத்தை சந்தைப்படுத்தி, வணிகச் சரக்குகளைக் கையாளக்கூடிய தனியார் துறைமுக இயக்குபவர்மூலம் இயக்கத்திற்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.*

நாகப்பட்டினம் துறைமுகம்: *நங்கூரத் துறைமுகமான இத்துறைமுகத்தில், மிதவைகள்மூலம் சமையல் எண்ணெய் இறக்குமதி செய்யப்படுகிறது.*

பாம்பன் துறைமுகம்: *சிறுகப்பல்கள் / கலங்களுக்கு கிழக்கு – மேற்கு கடலிணைப்பாக விளங்கக்கூடிய பாம்பன் கால்வாயில், வழிகாட்டும் பணிகள் செய்யப்படுகிறது.*

இராமேசுவரம் துறைமுகம்: *அக்னி தீர்த்தம் பகுதியில் குறுகிய தூரத்திற்கான பயணிகள் படகுப் போக்குவரத்து நடத்தப்பட்டு வருகிறது. கூடுதல் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி, இராமேஸ்வரம் (இந்தியா) மற்றும் தலைமன்னார் (ஸ்ரீலங்கா) இடையே பயணிகள் படகுப் போக்குவரத்தை மீளத் துவக்குவதற்கான வழிகள் ஆராயப்படுகிறது.*

கன்னியாகுமரி துறைமுகம்: *பயணிகள் படகுப் போக்குவரத்துத் துறைமுகமான இத்துறைமுகத்தில், விவேகானந்தர் நினைவுப் பாறைக்கும், அய்யன் திருவள்ளுவர் சிலைக்கும், இடையே பயணிகள் படகுப் போக்குவரத்து பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தினரால் நடத்தப்பட்டு வருகிறது. விவேகானந்தர் நினைவுப் பாறையில் பயணிகள் தோணித்துறை மற்றும் விவேகானந்தர் பாறை மற்றும் அய்யன் திருவள்ளுவர் சிலை இடையே பாதசாரிகள் நடைமேம்பாலம் ஆகிய பணிகள் நடைபெற்று வருகின்றன.*

[2023 ஏப்ரல் 1

9.3.2 தனியார் முதலீட்டுத் துறைமுகங்கள் / முனையங்கள்

காட்டுப்பள்ளி துறைமுகம்: *கப்பல் கட்டுதல், கப்பல் பழுதுபார்ப்பு மற்றும் பாகம் புனையும் பணிகள் லார்சன் அன்ட் டூப்ரோ லிமிடெட் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகிறது. மரைன் இன்ப்ராஸ்ட்ரக்சர் டெவலப்பர் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தால் சரக்கு ஏற்றுமதி / இறக்குமதி செய்யப்படுகிறது.*

எண்ணூர் சிறுதுறைமுகம்: *பன்முனை நங்கூர மிதவை அமைப்புகள்மூலம் திரவ அமோனியா இறக்குமதி செய்யப்படுகிறது.*

கடலூர் துறைமுகத்திற்குள் அமைந்துள்ள கெம்ப்ளாஸ்ட் கடல் முனையம்: *தீவுத் தோணித்துறைமூலம் வினைல் குளோரைடு மோனோமர் இறக்குமதி செய்யப்படுகிறது.*

திருக்கடையூர் துறைமுகம்: *தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்தின் தேவைக்கேற்ப, 330 மெகாவாட் மின்நிலையத்திற்காக ஒருமுனை நங்கூர மிதவையின்மூலம் நாப்தா இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது.*

கூடங்குளம் துறைமுகம்: *கூடங்குளம் அணுமின் உலைகள் 3,4,5 மற்றும் 6-க்கான இயந்திரங்கள் / பிரம்மாண்டமான தளவாடங்கள் உருட்டி ஏற்றுதல் – இறக்குதல் தோணித்துறையின்மூலம் கையாளப்படுகிறது.*

இதர அறிவிக்கப்பட்ட சிறுதுறைமுகங்கள் சட்டபூர்வ அனுமதிகள் பெறுதல் மற்றும் மேம்பாட்டு பணிகள் போன்ற பல்வேறு நிலைகளில் உள்ளன.

9.4 சிறு துறைமுகங்களில் கையாளப்படும் சரக்குகளின் விவரம்

வ. எண்	துறைமுகம்	ஏற்றப்பட்ட சரக்குகள்	இறக்கப்பட்ட சரக்குகள்
1.	கடலூர்	—	வினைல் குளோரைடு, மோனோமர்.
2.	நாகப்பட்டினம்	—	சமையல் எண்ணெய்

2023 ஏப்ரல் 1]

வ. எண்	துறைமுகம்	ஏற்றப்பட்ட சரக்குகள்	இறக்கப்பட்ட சரக்குகள்
3.	காட்டுப்பள்ளி துறைமுகம்	சரக்குப் பெட்டகங்கள், பொதுச் சரக்குகள் மற்றும் இயந்திரங்கள்	சரக்குப் பெட்டகங்கள் மற்றும் பொதுச் சரக்குகள்.
4.	எண்ணூர் சிறு துறைமுகம்	—	திரவ அமோனியா
5.	திருக்கடையூர்	—	இயற்கை வாயு

9.5 வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ள வளர்ச்சிக்கான முன்னெடுப்புகள்

9.5.1 கடலூர் துறைமுக மேம்பாடு

கடலூர் சிறு துறைமுகம் ஒரு இடைநிலை, நங்கூரத் துறைமுகமாகும். இத்துறைமுகம், சிறுகலன்கள் மற்றும் உள்நாட்டுக் கலன்களை கையாளக்கூடிய ஆழ்கடல், கப்பலணையும், அனைத்து பருவகால துறைமுகமாக தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் சொந்த நிதி மற்றும் ஒன்றிய அரசின் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறையின் நிதி உதவியுடன் சாகர்மாலா திட்டத்தின்கீழ், மேம்படுத்தப்பட்டு வருகிறது.

கடலூர் துறைமுகத்தை முப்பது ஆண்டுகால இடைவெளிக்குப் பின்னர் செயல்பாட்டிற்குக் கொண்டு வருவதற்காக போட்டி ஒப்பந்தப்புள்ளிகள்மூலம் சந்தைப்படுத்துதல், இயக்குதல் மற்றும் பராமரித்தல் ஆகிய பணிகளுக்கான துறைமுக இயக்கு நிறுவனம் ஈடுபடுத்தப்பட உள்ளது. ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, துறைமுக இயக்குபவரைத் தேர்ந்தெடுக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

9.5.2 கன்னியாகுமரி துறைமுகம்

திருவாளர்கள் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தினர் கன்னியாகுமரியில் கடலில் அமைந்துள்ள விவேகானந்தர் நினைவுப் பாறைக்கும், அய்யன் திருவள்ளுவர் சிலைக்கும், கரையிலிருந்து நடத்தப்பட்டு வரும் பயணிகள் படகுப் போக்குவரத்தினை, நடத்தி வருகின்றனர். இப்படகுப் போக்குவரத்து தமிழ்நாடு கடல்சார் வாரியத்தால் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

[2023 ஏப்ரல் 1

(i) விவேகானந்தர் பாறையில் அமைந்துள்ள படகுத்துறை நீட்டிப்பு செய்தல்

கன்னியாகுமரி துறைமுகத்தில் விவேகானந்தர் பாறையில் அமைந்துள்ள படகுத் துறையானது, ஒன்றிய அரசின் சாகர்மாலா திட்டத்தின் கீழான 50 சதவீத நிதியுதவியுடன், ரூ.20 கோடி செலவில், அதிக சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்காக, ஒரே நேரத்தில் மூன்று படகுகளை நிறுத்தக்கூடிய வகையில் நீட்டிப்பு செய்யப்பட உள்ளது. பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டுவரும் இக்கட்டுமானப் பணிகள் ஜனவரி 2024-ல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது

(ii) விவேகானந்தர் நினைவுப் பாறையையும் அய்யன் திருவள்ளுவர் சிலை பாறையையும் இணைக்கும் கடல்சார் பாதசாரிகள் பாலம்

தமிழ்நாடு கடல்சார் வாரியம், விவேகானந்தர் நினைவுப் பாறையையும் அய்யன் திருவள்ளுவர் சிலை பாறையையும் இணைக்கும் சிறப்புமிக்க நவீன கடல்சார் பாதசாரிகள் பாலத்தை, ரூ.37 கோடி திட்ட மதிப்பில் அமைக்க, ஒன்றிய அரசின் 50 சதவீத நிதியுதவியுடன், சாகர்மாலா திட்டத்தின்கீழ் முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது. நெடுஞ்சாலைத் துறையிடம் கட்டுமானப் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. முதனிலைப் பணிகள் துவக்கப்பட்டுள்ளன. இப்பணிகள் ஜனவரி – 2024-ல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

9.5.3 உடன்குடி துறைமுகம்

உடன்குடியில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் 1320 மெகாவாட் மின் உற்பத்தி திறனுள்ள அனல் மின் நிலையத்திற்குத் தேவையான நிலக்கரியைக் கையாளுவதற்காக அணுகு தோணித்துறை (நீளம் 8 கிலோமீட்டர்) கட்டுவதற்காக இத்துறைமுகம் 2010 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டது. இத்துறைமுகக் கட்டுமானப் (அணுகு தோணித்துறை) பணிகள் ஜுன் -2018-ல் துவக்கப்பட்டு, சுமார் 83 சதவீத பணிகள் முடிவுற்றுள்ளன. அனைத்துப் பணிகளும் டிசம்பர் – 2023-க்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2023 ஏப்ரல் 1]

9.5.4 பல்வேறு இடங்களில் அமைக்கப்படவுள்ள மிதக்கும் தோணித்துறைகள்

தமிழ்நாடு கடல்சார் வாரியம், கடலோர பயணிகள் படகுப் போக்குவரத்து துவக்குவதற்காக இராமேஸ்வரம், கன்னியாகுமரி மற்றும் கடலூரில் இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தின் உதவியுடன் மிதக்கும் தோணித்துறைகள் நிறுவுவதற்காக சாத்தியமான இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. விரிவான திட்ட அறிக்கைகளின் அடிப்படையில், சாகர்மாலா திட்டத்தின்கீழ் ஒன்றிய அரசால் கருத்துருக்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு ரூ.26.34 கோடி வழங்க 100% நிதியுதவி உறுதி செய்யப்பட்டுள்ளது.

9.5.5 பயணிகள் படகுப் போக்குவரத்து மற்றும் கடல்நீர் விளையாட்டுகள் மேம்பாடு

1076 கி.மீ. நீள கடலோரத்தில், குறுகிய தூர பயணிகள் படகுப் போக்குவரத்து மற்றும் கடல்நீர் விளையாட்டுக்கள் துவக்குவதற்கான வழிமுறைகளை ஆராயவும், சாதகமான இடங்களை கண்டறிவதற்காகவும் தொழில்நுட்ப சாத்தியக்கூறு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

9.6 தமிழ்நாடு கடல்சார் பயிற்சி நிறுவனம்

தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின்கீழ் தமிழ்நாடு கடல்சார் பயிற்சி நிறுவனம் தூத்துக்குடியில் இயங்கி வருகிறது. இந்நிறுவனத்தால், 40 நபர்கள் கொண்ட 6 மாத கால மாலுமி பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதுவரை 1520 மாணவர்கள் இங்கு பயிற்சி பெற்றுள்ளனர். ஜனவரி - 2023 முதல் 39-வது தொகுதி பயிற்சி வகுப்புகள் துவக்கப்பட்டுள்ளன.

மேலும் இப்பயிற்சி நிறுவனத்தில் STCW-*2010-ன்படி கீழ்க்கண்ட பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்கி வருகிறது:*

(i.) *தன்னிலை பாதுகாப்பு உத்தி* (Personal Survival Techniques)

(ii.) *கடலில் முதலுதவி செய்தல்* (Elementary First Aid)

(iii.) தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் சமூகப் பொறுப்புணர்வு (personal Safety and Social Responsibility)

(iv.) எண்ணெய் மற்றும் இரசாயனக் கப்பல் சரக்கு கையாளுதல் (Oil & Chemical Tanker Cargo Operations)

(v.) தீயணைப்பு அடிப்படை பாதுகாப்புப் பயிற்சி (Fire prevention and Fire Fighting)

(vi.) கடல் மாலுமிகளுக்கான பாதுகாப்பு பயிற்சி (Security training for seafarers)

மேற்கண்ட பயிற்சி வகுப்புகள் ஒன்றிய அரசின் கப்பல் துறை பேரியக்குநர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டவையாகும். இப்பயிற்சி முடித்த மாணவர்களுக்கு இந்திய மற்றும் வெளிநாட்டு கப்பல்களில் வேலைவாய்ப்புகள் அளிக்கப்படுகின்றன. தமிழ்நாடு கடல்சார் பயிற்சி நிறுவனத்தின் கட்டமைப்பு வசதிகளை நவீன வசதிகளுடன் மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

9.7 2022 – 2023 ஆம் ஆண்டில் வாரியத்தினால் கையாளப்பட்ட சரக்குகள் மற்றும் வாரியத்தின் வருமானம்

2022 – 2023 (பிப்ரவரி – 2023 முடிய) ஆம் ஆண்டில் சிறுதுறைமுகங்கள் வாயிலாக 90,45,296 மெட்ரிக் டன் சரக்குகள் கையாளப்பட்டு, தமிழ்நாடு கடல்சார் வாரியம், சுமார் ரூ.55.95 கோடி மொத்த வருவாய் ஈட்டியுள்ளது.

10. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் மாநில அரசுக்கு சொந்தமான ஒரு கப்பல் நிறுவனமாகும். இது நிறுவனங்கள் சட்டம் 1956-ன்படி 11-4-1974 அன்று நிறுவப்பட்டது. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் மின் உற்பத்திக்குத் தேவைப்படும் உள்நாட்டு நிலக்கரியை எடுத்து வருவது இதன் முக்கிய நோக்கமாகும். மேலும், கன்னியாகுமரியில் பயணிகள்/ சுற்றுலா பயணிகளுக்காக படகு போக்குவரத்தையும் இயக்குகிறது.

இந்நிறுவனம், தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநரின் தலைமையின்கீழ் இயங்கி வருகிறது. இந்நிறுவனத்தின் செயல்பாடுகள், தற்பொழுது ஒரே ஒரு சுயாதீன இயக்குநர் மட்டும் உள்ளார். தற்போதைய ஊழியர்களின் எண்ணிக்கை 48 ஆகும்.

2023 ஏப்ரல் 1]

10.1 முக்கிய செயல்பாடுகள்

கழகத்தின் முக்கிய செயல்பாடுகள்

1. *இந்தியாவின் கிழக்குக் கடற்கரை வழியாக நிலக்கரி எடுத்து வருதல்*
2. *கன்னியாகுமரியில் படகுத் துறையிலிருந்து விவேகானந்தர் நினைவுப் பாறை மற்றும் அய்யன் திருவள்ளுவர் சிலைக்குப் பயணிகளுக்கான படகுப் போக்குவரத்து மேற்கொள்ளுதல்*

10.2 என்.டி.பி.சி, தமிழ்நாடு எரிசக்தி நிறுவனத்திற்கு (NTECL) நிலக்கரி எடுத்து வருதல்

இந்நிறுவனம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தேசிய அனல்மின் கழகம் ஆகியவற்றின் கூட்டு நிறுவனமான என்.டி.பி.சி தமிழ்நாடு எரிசக்தி நிறுவனத்தின், வல்லூரில், அமைந்துள்ள 500 மெகாவாட் திறன்படைத்த 3 அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரி முழுவதையும் பாரதீப் மற்றும் தாம்ரா ஆகிய துறைமுகங்களிலிருந்து எண்ணூரில் உள்ள காமராஜர் துறைமுகத்திற்கு அந்நிறுவனத்துடன் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி நிலக்கரி எடுத்துவரும் பணியினை மேற்கொண்டு வருகிறது.

10.3 நிலக்கரி எடுத்து வரும் செயல்திறன்

இந்திய நிலக்கரி நிறுவனத்தால், என்.டி.பி.சி. தமிழ்நாடு எரி சக்தி நிறுவனத்திற்கு (NTECL) ஒதுக்கீடு செய்யப்படும் நிலக்கரி மற்றும் மின்சார உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் நிலக்கரியின் அளவைப் பொறுத்து எடுத்து வரும் நிலக்கரியின் அளவு மாறுபடும். 2022-2023 ஆம் ஆண்டில் இந்நிறுவனம், நிலக்கரியின் தேவை மற்றும் பயன்பாட்டைப் பொறுத்து கப்பல்களை வாடகைக்கு அமர்த்தியுள்ளது.

கடந்த இரண்டு நிதி ஆண்டுகளில் எடுத்து வரப்பட்ட நிலக்கரியின் அளவு (இலட்சம் மெட்ரிக் டன்)

வருடம்	துறைமுகங்களில் பெறப்பட்ட நிலக்கரியின் அளவு	எடுத்து வரப்பட்ட நிலக்கரியின் அளவு
2021-2022	62.86	58.74
2022-2023	77.43	72.17

10.4 சேவை கட்டணம்

என்.டி.பி.சி தமிழ்நாடு எரிசக்தி நிறுவனத்திற்கு நிலக்கரி எடுத்து வரும் பணிக்கான சேவைக் கட்டணமாக, வாடகைக்கு அமர்த்தப்படும் கப்பல்களின் வாடகைக் கட்டணத்தில் 5 விழுக்காடு பெறப்படுகின்றது.

10.5 கன்னியாகுமரியில் பயணிகள் படகு போக்குவரத்து சேவை

இக்கழகத்தினால், படகுத்துறையிலிருந்து விவேகானந்தர் நினைவுப்பாறை மற்றும் அய்யன் திருவள்ளுவர் சிலைக்குப் பயணிகளை ஏற்றி செல்வதற்காக தலா 150 இருக்கைகள் கொண்ட எம்.எல். குகன், எம்.எல். பொதிகை மற்றும் எம்.எல். விவேகானந்தா ஆகிய மூன்று படகுகள் 11.08.1984 முதல் இயக்கப்பட்டு வருகின்றன.

கன்னியாகுமரி படகுத்துறையின் கடந்த மூன்று ஆண்டுகள் செயல்திறன் மற்றும் நிதிநிலை விவரங்கள் பின்வருமாறு

வருடம்	(இலட்சத்தில்)	(ரூபாய் இலட்சத்தில்)	
	பயணிகளின் எண்ணிக்கை	கட்டண வசூல்	இலாபம்
2020-2021	3.01	158.01	(-) 360.67
2021-2022	5.47	265.64	(-) 144.80
2022-2023	21.24	1247.00	200.00

2023 ஏப்ரல் 1]

10.6 நிதி நிலை விவரங்கள்

கோவிட்-19 முழு ஊரடங்கு காலத்தில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மற்றும் என்.டி.பி.சி. தமிழ்நாடு எரிசக்தி நிறுவனங்கள் நிலக்கரி கையாளும் தொழில் மிகவும் பாதிக்கப்பட்டது. பூம்புகார் கன்னியாகுமரி படகு போக்குவரத்து சேவையின்மூலம் கிடைக்கப் பெறும் வருமானமும் பாதிக்கப்பட்டது. மேலும் கோவிட்-19 முழு ஊரடங்கு காலங்களில் அரசு உத்தரவின்படி படகுப் போக்குவரத்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் மூன்றுஆண்டு கால நிதி நிலை விவரங்கள்

வருடம்	(இலட்சத்தில்)	(ரூபாய் இலட்சத்தில்)	
	மொத்த வருவாய்	நிகர இயக்க இலாபம்	பங்கு ஈவுத் தொகை
2020-2021	26362.96	(-) 178.86	—
2021-2022	29226.38	68.47	20.54
2022-2023*	37000.00	300.00	—

* *தற்காலிகமான*

10.7 2023 – 2024 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்

வரும் 2023-2024 ஆம் ஆண்டு இந்நிறுவனம், என்.டி.பி.சி. தமிழ்நாடு எரிசக்தி நிறுவனத்திற்கு (NTECL) 73 இலட்சம் மெட்ரிக் டன் நிலக்கரியினை எடுத்து வருவதற்கு உத்தேசிக்கப்படுள்ளது.

11. இதர முன்னெடுப்புகள்

பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக, சாலை உள்கட்டமைப்பின் திறனை அதிகரிக்க துறையானது பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. திட்டங்களை விரைந்து செயல்படுத்தும் பொருட்டு இத்துறையில் முக்கிய முன்னெடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

11.1 எடுத்துக்கொள்ளப்படவுள்ள பெரும் பணிகள்

i. தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை உயர் மட்ட சாலை

தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை உயர்மட்ட சாலை அமைக்கும் பணி ரூ.621 கோடி மதிப்பில் எடுக்கப்படவுள்ளது. சென்னை மெட்ரோ ரயில் வழித்தடத்திலுள்ள சுரங்கப் பாதைகளுடன், அதே வழித்தடத்தில் சாலையில் உயர்மட்ட சாலை அமைப்பது இத்துறைக்கு சவாலான பணியாக உள்ளது. உயர்மட்ட சாலைப் பணியை செயல்படுத்தும்போது மெட்ரோ இரயில் சுரங்கப்பாதையின் பாதுகாப்பை உறுதி செய்து அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ii. சென்னை துறைமுகம் முதல் மதுரவாயல் வரை உயர் மட்ட சாலை

புரிந்துணர்வு ஒப்பந்தம் பங்குதாரர்களால் கையெழுத்திடப்பட்டுள்ளது. இப்பணிக்கு 4 தொகுப்புகளின்கீழ் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது. இத்திட்டத்தை விரைந்து முடிக்க மாநில அரசு அனைத்து ஒத்துழைப்பினை வழங்கியுள்ளது.

iii. சென்னை முதல் கன்னியாகுமரி வரையிலான கிழக்கு கடற்கரைச் சாலையை நான்கு வழித்தடமாக மேம்படுத்துதல்

- *சென்னை முதல் மாமல்லபுரம் மற்றும் நாகப்பட்டினம் முதல் தூத்துக்குடி வரை விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன – இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (இ.தே.நெ.ஆ)*
- *மாமல்லபுரம் முதல் முகையூர் மற்றும் புதுச்சேரி முதல் நாகப்பட்டினம் வரை 4 வழிச்சாலை பணிகள் நடைபெற்று வருகின்றன - (இ.தே.நெ.ஆ)*
- *முகையூர் முதல் புதுச்சேரி வரை 4 வழிச்சாலை பணிகள் துவங்கப்பட உள்ளன - (இ.தே.நெ.ஆ)*

2023 ஏப்ரல் 1]

- *தூத்துக்குடி முதல் கன்னியாகுமரி வரை – தே.நெ. 32 - விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் நில எடுப்பிற்கான மதிப்பீடு ஒன்றிய அமைச்சகத்திற்கு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது – மாநில தேசிய நெடுஞ்சாலை அலகு.*

iv. சென்னை முதல் திருச்சி, மதுரை வழியாக கன்னியாகுமரி வரையிலான சாலையை நான்கு வழித்தடத்திலிருந்து ஆறு வழித் தடச்சாலையாக மேம்படுத்துதல்

செங்கல்பட்டு முதல் திண்டிவனம் வரை ஆறு/எட்டு வழிச்சாலையாக அகலப்படுத்தும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிக்கான நேர்பாட்டிற்கு தமிழ்நாடு அரசு கொள்கை அளவில் ஒப்புதல் வழங்கியுள்ளது.

v. சென்னை துறைமுகம் முதல் மணலி - திருவொற்றியூர் சந்திப்பு வரை போக்குவரத்து நெரிசலைக் குறைக்க கடல் பாலம் அமைத்தல்

விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

vi. பழைய தே.நெ.209-ல் கோயம்புத்தூர் முதல் சத்தியமங்கலம் வரை நான்கு வழிச்சாலை மற்றும் சத்தியமங்கலம் முதல் தமிழ் நாடு / கர்நாடக மாநில எல்லை வரை இரு வழிச்சாலை / கடின புருவங்களுடன் கூடிய இரு வழிச்சாலை அமைத்தல்

விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. நில எடுப்பிற்கான மதிப்பீடு ஒன்றிய அமைச்சகத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

vii. தே.நெ.49-ல் இராமநாதபுரம் முதல் இராமேஸ்வரம் வழியாக தனுஷ்கோடி வரை நான்கு வழிச்சாலை அமைத்தல்

விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் பாம்பன் பாலம் அமைத்தல் உள்பட நடைபெற்று வருகின்றன. இராமநாதபுரம் முதல் மண்டபம் வரை நில எடுப்பிற்கான மதிப்பீடு ஒன்றிய அமைச்சகத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

[2023 ஏப்ரல் 1

11.2 திட்டங்களை விரைவுபடுத்தவதற்கான முன்னெடுப்புகள்

தமிழ்நாடு அரசு கடந்த இரண்டு ஆண்டுகளில் திட்டங்களை விரைந்து முடிப்பதற்கு முக்கிய முன்னெடுப்புகளை எடுத்துள்ளது. குறிப்பிடத்தக்க சில முன்னெடுப்புகள் பின்வருமாறு:

- **சிறப்பு நில எடுப்பு மற்றும் மேலாண்மை அலகு**

திட்டங்களைச் செயல்படுத்தும்போது, தேவைப்படும் நிலங்களைக் கையகப்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டதால் பல பணிகள் செயல்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டது. நிலம் கையகப்படுத்தும் செயல்முறையை விரைவுபடுத்த, ஐந்து சிறப்பு நிலம் கையகப்படுத்தும் பிரிவு மற்றும் மேலாண்மை பிரிவு உருவாக்கப்பட்டதால் தற்சமயம் பல பணிகள் முடிக்கப்பட்டும் விரைந்தும் நடைபெற்று வருகின்றன.

- **நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்திற்கான ஆட்சிக் குழு (Governing Committee)**

மாண்புமிகு பொது பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் தலைமையில் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நடவடிக்கைகளில், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தின் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்த 28.03.2022 அன்று ஆட்சிக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

- **உள்தணிக்கைக் குழு**

இத்துறையில் முதன்முறையாக நடைபெற்று வரும் பணிகள் மற்றும் அது தொடர்பான ஆவணங்களை, ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் ஆய்வு செய்ய, உள் தணிக்கை ஆய்வு அமைப்பு, அரசாணை (டி) எண் 69, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்.கே.2) துறை, நாள்: 29.04.2022-ன்படி உருவாக்கப்பட்டுள்ளது.

- **சுழல் நிதி உருவாக்குதல்**

விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிக்கு ரூ.20 கோடி மதிப்பில் சுழல் நிதி உருவாக்கப்பட்டுள்ளது. விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்காக, சுழல் நிதியில் ஒப்புதல் வழங்குவதற்கான குழுவானது அரசாணை (நிலை) எண் 174, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்.என்.2) துறை, நாள். 27.08.2022-ன்படி அமைக்கப்பட்டுள்ளது. இது திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளைத் தயாரிக்க உதவுகிறது.

2023 ஏப்ரல் 1]

- **உயர்மட்ட சர்ச்சை தீர்வு குழு**

பணிகளைச் செயல்படுத்தும்போது ஒப்பந்தத்தில் எழும் சர்ச்சைகளை விரைவில் தீர்வு காண்பதற்காக, வழிகாட்டுதல்களுடன் கூடிய உயர்மட்ட சர்ச்சை தீர்வு குழு அரசாணை (நிலை) எண் 17, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்.என்.2) துறை, நாள் 06.03.2023 அரசால் உருவாக்கப்பட்டுள்ளது. இது நிலுவையிலுள்ள / புதிய சர்ச்சைகளில் சுமூகமாக தீர்வு காண வழிவகை செய்கிறது.

- **உயர்மட்டக் குழு**

தலைமைச் செயலாளர் தலைமையில் அரசாணை (நிலை) எண் 232, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் (எச்.என்.2) துறை, நாள். 19.12.2022-ன்படி, அதிகாரத்துடன் கூடிய குழுவானது விரைவில் திட்டப் பணிகளைச் செயல்படுத்துவதற்கான நிலம் கையகப்படுத்துதல், நிலம் மாறுதல் செய்தல், சேவை உபகரணங்கள் மற்றும் கட்டமைப்புகளை மாற்றியமைத்தல், திட்டத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வு, துறைகளுக்கிடையேயான பிரச்சினைகள், சட்டரீதியான அனுமதி தொடர்புடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

12. வரவு-செலவு திட்ட மதிப்பீடு

நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, சாலைக் கட்டமைப்பின் திறன், இணைப்பு மற்றும் செயல்திறனை அதிகரிக்க செயல்படுகிறது. சீரான மற்றும் பாதுகாப்பான ஓடுதளத்தை சாலை பயனாளிகளுக்கு வழங்குவதே இத்துறையின் நோக்கமாகும்.

2022-23 ஆம் ஆண்டில் ரூ.15,960.42 கோடி நிதி திட்டப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டது. இதில் 20-03-2023 வரை ரூ.12,371.51 கோடி செலவிடப்பட்டுள்ளது.

2023-24 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் பின்வருமாறு:

[2023 ஏப்ரல் 1

வ. எண்	திட்டங்கள்/பணிகள்	வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2023-2024 (ரூ. கோடியில்)
(A)	மூலதன தலைப்பு	
1	தேசிய நெடுஞ்சாலைகள்	
	புதுப்பிக்கப்பட்ட மத்திய சாலை நிதி	250.00
2	கட்டுமானம் மற்றும் பராமரிப்பு	
	ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம்	7355.97
	சாலைப் பாதுகாப்பு	50.00
	நிரந்தர வெள்ள சீரமைப்பு	45.00
	புறவழிச் சாலைகள் மற்றும் நில எடுப்பு	229.03
	இதர பணிகள்	250.51
	தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகம்	63.14
	தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம்	441.03
	சென்னை எல்லைச் சாலை திட்டம்	1847.27
	சென்னை கன்னியாகுமரி தொழிற்தட திட்டம்	1500.00
3	திட்டங்கள்	
	உயர்மட்ட மேம்பாலங்கள் / ஆற்றுப்பாலங்கள்/புறவழிச்சாலை பணிகள்	185.62
	இரயில்வே மேம்பாலங்கள்/உயர்மட்ட சாலைகள்	1265.49
	இதரப் பணிகள்	0.81

வ. எண்	திட்டங்கள்/பணிகள்	வரவு செலவுத் திட்ட மதிப்பீடு *2023-2024* (ரூ. கோடியில்)
4	தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்டம் -II	*645.00*
5	நபார்டு மற்றும் கிராமச் சாலைகள்	
	மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்துதல்	*1707.79*
	நபார்டு நிதியின்கீழ் உயர்மட்ட பாலங்கள் / ஆற்றுப்பாலங்கள்	*600.56*
	மாநில நிதியின்கீழ் உயர்மட்ட பாலங்கள் / ஆற்றுப்பாலங்கள் / புறவழிச் சாலைகள்	*52.31*
6	சென்னை பெருநகர வளர்ச்சி திட்டப் பணிகள்	*501.41*
	மற்றவை	
	சாலைகள் மற்றும் பாலங்கள் திட்டப் பணிகளுக்கான ஆய்வு/மதிப்பீடு	*37.59*
	விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான சுழல் நிதி	*20.00*
	கணக்குகளிடையே மாற்றம்	*386.95*
	மூலதன தலைப்பு மொத்தம்	*17435.47*
(B)	வருவாய் தலைப்பு	*2028.88*
மொத்தம்		**19464.35**

பாதுகாப்பான மற்றும் வலுவான சாலை உள்கட்டமைப்பு, சீரான சமூக-பொருளாதார வளர்ச்சிக்கும், பயணிகள் மற்றும் சரக்குகளை மாநிலத்திற்குள் விரைவாகக் கொண்டு செல்வதற்கும் வழிவகுக்கும். எனவே, தமிழ்நாடு அரசு சாலை உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது.

இணைப்பு II

(120 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 39 – கட்டடங்கள் (பொதுப் பணி துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

முன்னுரை

"மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாவுள முன்நிற் பவை".

(அதிகாரம் 64, குறள் 636)

"நூலறிவுடன் இயற்கையான மதிநுட்பமும் உள்ளவர்களுக்கு முன்னால் எந்த சூழ்ச்சியும் எதிர்த்து நிற்க முடியாது".

மாநிலத்தின் பல்வேறு அரசுத் துறைகளின் கட்டட உள்கட்டமைப்பை மேம்படுத்துவதில் பொதுப் பணித் துறை மிக முக்கியப் பங்காற்றுகிறது. கட்டடங்கள் கட்டுதல், சிறப்புக் கட்டமைப்புகள், அவற்றின் பராமரிப்பு மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவத்தை அளிப்பதில் முதன்மையான சேவையை இத்துறை அனைத்து அரசுத் துறைகளுக்கும் வழங்குகிறது.

1858 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட பொதுப் பணித் துறையானது அனைத்து பொறியியல் துறைகளுக்கும் தாய் துறையாக விளங்குகிறது. பொறியியல் கட்டுமான நிபுணத்துவத்துடன் மாநில உள்கட்டமைப்பை மேம்படுத்துவதன்மூலம் மக்களுக்குச் சேவைகளைத் தொடர்ந்து வழங்கி வருகிறது.

பொதுப் பணித் துறை பல்வேறு அரசுத் துறைகளின் தேவைக்கேற்ப பொதுக் கட்டடங்களின் வடிவமைப்பைத் திட்டமிட்டு, அவற்றின் நிலைத் தன்மையை உறுதி செய்து, அரசின் நிதியினைக் கட்டுப்பாட்டுடன் செலவிட்டு, கட்டுமானப் பணிகளை விரைந்து முடித்துப் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அளிக்கின்றது.

பாரம்பரிய வரலாற்று மற்றும் பண்பாட்டுச் சிறப்புகளை பாதுகாக்கும் பொருட்டு, நினைவகங்கள், நினைவுச் சின்னங்கள்

2023 ஏப்ரல் 1]

மற்றும் பாரம்பரியக் கட்டடங்கள் ஆகியவற்றைப் புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் பொதுப் பணித் துறையின் முக்கிய பணிகளில் ஒன்றாகும்.

சிறந்த மூலதனச் சொத்துக்களை உருவாக்குவதற்கும், மாநிலத்தின் நிலையான வளர்ச்சிக்கு வழி வகுக்கும் கட்டுமானப் பொருட்கள், தொழில்நுட்பம் மற்றும் கட்டுமான நடவடிக்கைகளில் புதிய முறைகளைக் கையாள்வதற்கும் தொடர்ந்து முயற்சி செய்து வரும் பொதுப் பணித் துறையானது, மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியின் ஒரு அங்கமாக விளங்குகிறது.

மருத்துவத் துறையின் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள பொதுப் பணித் துறையில் தனியாக வட்டங்கள் மற்றும் கோட்டங்கள் இயங்கி வந்த நிலையில், புதியதாகத் தோற்றுவிக்கப்பட்ட, செங்கல்பட்டு, இராணிப்பேட்டை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, திருப்பூர், தென்காசி, சிவகங்கை மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களுக்கு செயற்பொறியாளர் பணியிடங்கள் இல்லாமல், பணிகளை மேற்பார்வையிடுவதில் தொய்வு ஏற்பட்டு வந்தது. இதனைச் சீர் செய்யும் விதமாக மருத்துவப் பணி வட்டங்கள் மற்றும் இதர வட்டங்களையும் ஒன்றிணைத்து, மாவட்டத்திற்கு ஒரு செயற்பொறியாளர் / கோட்டம் இருக்கும் வகையில், பணியிடங்களை மறுசீரமைத்து தற்போது பணிகள் செயலாக்க மேற்பார்வை சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாரம்பரிய கட்டடப் பிரிவு, கட்டடக் கலைப் பிரிவு மற்றும் தரக்கட்டுப்பாடுக் கோட்டம் ஆகியவற்றை பலப்படுத்துவதற்கான கருத்துருக்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

தலைமைச் செயலகத்தில் பொதுப் பணித் துறையில் தலைமைப் பொறியாளர் நிலையில் ஒரு புதிய அரசு சிறப்புச் செயலாளர் பணியிடம் மற்றும் பொதுப் பணித் துறை சென்னை மண்டலத்திற்கென ஒரு புதிய தலைமைப் பொறியாளர் பணியிடம் உருவாக்கப்பட்டுள்ளன. பொதுப் பணித் துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் ஒரு புதிய துணைத் தலைமைப் பொறியாளர் (மின்னியல்) பணியிடம் உருவாக்கப்பட்டுள்ளது.

1.0 நோக்கங்கள் (Objectives)

கட்டடக் கலை, திட்டம் மற்றும் வடிவமைப்பு, கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, மின், தரக்கட்டுப்பாடு, பொதுப் பணிப்

பணியாளர் பயிற்சி நிலையம் மற்றும் கொதிகலன்கள் இயக்குநரகம் போன்ற பிரிவுகளின் ஒருங்கிணைந்த முயற்சியினால் புதிய கட்டுமான முறைகளை மேற்கொள்வதன்மூலம் அரசுத் துறைகளுக்கான நீடித்த மூலதனச் சொத்துக்களை உருவாக்குவதுடன், பாதுகாப்பு மற்றும் பொருளாதார வளங்களின் உகந்த பயன்பாட்டினைப் பொதுப் பணித் துறை உறுதி செய்கிறது.

“தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு”.

(அதிகாரம் 64, குறள் 634)

"ஒரு செயலைத் தேர்ந்தெடுத்தலும், அதனை நிறைவேற்றிட வழிவகைகளை ஆராய்ந்து ஈடுபடுதலும், முடிவு எதுவாயினும் அதனை உறுதிபடச் சொல்லும் ஆற்றல் படைத்திருத்தலும் அமைச்சருக்குரிய சிறப்பாகும்"

அதற்கிணங்க, குறிப்பிட்ட காலத்திற்குள் உறுதியளித்தவாறு, அரசால் மேற்கொள்ளப்படும் பணிகளை உரிய தரத்துடன் விரைந்து செயல்படுத்துவதன்மூலம், அரசுக்குப் பெருமை சேர்ப்பதே இத்துறையின் நோக்கமாகும்.

2.0 பணிகள் (Mission)

கட்டடங்களின் வடிவில் மூலதனச் சொத்துகளை உருவாக்குவதும் அதன் பராமரிப்பும் துறையின் முதன்மையான பணி.

சிறந்த நிர்வாகம் மற்றும் வெளிப்படைத் தன்மைக்காக மாநிலம் முழுமைக்கும் கணினிமயமாக்கல் போன்ற மின் ஆளுமை முயற்சிகளை நோக்கிச் செயல்படுதல்.

கட்டுமான மற்றும் அதன் உபகரணங்கள் தொடர்பான தொழில்நுட்ப முறைகளில் ஆராய்ச்சி செய்வதன்மூலம் வளங்களின் உகந்த பயன்பாடு, பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் சீர்கேட்டினை கட்டுப்படுத்த வழிவகை செய்தல்.

பாரம்பரிய கட்டடங்கள் மற்றும் நினைவுச் சின்னங்களை மறுசீரமைப்பு, புதுப்பித்தல் மற்றும் பாதுகாப்பதன்மூலம் வரலாற்று மற்றும் பண்பாட்டின் முக்கியத்துவத்தைப் பாதுகாத்தல்.

2023 ஏப்ரல் 1]

அரசின் முக்கிய நிகழ்ச்சிகள் மற்றும் மிக முக்கிய பிரமுகர்கள் வருகை தொடர்பான நிகழ்வுகளின்போது கட்டுமான மற்றும் மின் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்.

3.0 தொலைநோக்குப் பார்வை (Vision)

மக்களின் தேவைகளை நிறைவு செய்ய மாநிலத்தின் கட்டட உள்கட்டமைப்பை மேம்படுத்துவதன்மூலம், தமிழ்நாட்டினை தன்னிறைவு பெறச் செய்தல்.

தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் உதவியுடன் தொடக்கம் முதல் முடிவடையும் வரை ஒப்படைக்கப்பட்ட பணிக்கான செயல்பாடுகள் கணினிமயமாக்கப்பட்டு வருகின்றன. மேலும், கட்டுமானப் பணித்தளத்தில் இருந்து பணியின் முன்னேற்றம் பதிவு செய்யப்பட்டு புதுப்பிக்கப்பட்டு, நிர்வாகத் திறனை மேம்படுத்த தகுதியான அலுவலரால் சரிபார்க்கப்படும்.

இத்துறையின் செயல்பாடுகளை முழுமையான கணினிமயமாக்கலின்மூலம் வெளிப்படைத் தன்மை மற்றும் சிறந்த நிர்வாகத்தை உறுதி செய்தல் மற்றும் மக்களுக்கு அரசின் நடவடிக்கைகள் குறித்த தகவல் வழங்குதல்.

4.0 நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் (Sustainable Development Goals)

ஐக்கிய நாடுகள் பொது சபை உச்சி மாநாட்டில் 193 உறுப்பு நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் – 2030 செயல் திட்டத்தின் பகுதியாக, 17 நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் மற்றும் 169 குறிக்கோள்கள் உள்ளன. இத்துறை அரசுக் கட்டடங்கள் கட்டுமானம் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்கிறது.

பொதுப் பணித் துறைக்கான இரண்டு இலக்குகள் 9.1 மற்றும் 11.4

இலக்கு 9.1: *அனைவருக்கும் சமநிலையோடு வாய்ப்பளிப்பதை நோக்கமாகக் கொண்டு, பொருளாதார மேம்பாடு மற்றும் மனித*

நல்வாழ்விற்கு ஆதரவாக மண்டல மற்றும் எல்லை கடந்த உள்கட்டமைப்பு உட்பட, தரம், நம்பகமான மற்றும் நிலையான உள்கட்டமைப்பை உருவாக்குதல்.

(i) பேரிடர் அபாயக் குறைப்புக்கான சென்டாய் கட்டமைப்பின் 2015-2030-க்கு இணங்க பொதுப் பணித் துறையால் கட்டப்படும் கட்டடங்கள், வளத்திறன், தணிப்பு நடவடிக்கைகள் மற்றும் காலநிலை மாற்றம், பேரழிவுகளைத் தாங்கும் தன்மை ஆகியவற்றை உறுதி செய்கிறது.

(ii) அரசுக் கட்டடங்களின் உள்கட்டமைப்புத் திட்டங்களில் ஆற்று மணலுக்குப் பதிலாக நொறுக்கப்பட்ட கல் மணலைப் பயன்படுத்துதல், நிலக்கரி சாம்பல் வகை செங்கற்களைப் பயன்படுத்துதல் மற்றும் தரத்தை வலுப்படுத்துதல் போன்ற புதிய வழிமுறைகளை தமிழக அரசு கட்டட ஆராய்ச்சி நிலையம், பொதுப் பணித் துறை ஊக்குவிக்கிறது.

இலக்கு 11.4 : உலகின் கலாச்சார மற்றும் இயற்கை பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் முயற்சிகளை வலுப்படுத்துதல்.

பாரம்பரியக் கட்டமைப்புகளைப் பாதுகாக்க 2017 ஆம் ஆண்டு பொதுப் பணித் துறையில் தனிப்பிரிவாக கட்டட மையம் மற்றும் பாதுகாத்தல் கோட்டம், சென்னை உருவாக்கப்பட்டது.

நிலையான வளர்ச்சி இலக்குகளை நிறைவேற்ற பொதுப் பணித் துறை தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

5.0 பொதுப் பணித் துறையின் பிரிவுகள்

5.1 கட்டடக் கலைப் பிரிவு (Architect Wing)

1984 ஆம் ஆண்டிலிருந்து பொதுப் பணித் துறை கட்டடக் கலை பிரிவு (தலைமைக் கட்டடக் கலைஞரின் அலுவலகமாக

2023 ஏப்ரல் 1]

நிலை உயர்த்தப்பட்டு) தலைமைக் கட்டடக் கலைஞரின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகிறது.


*அலுவலகம், கல்வி, மருத்துவம் மற்றும் குடியிருப்பு போன்ற பயன்பாட்டு அம்சங்களைக் கருத்தில் கொண்டு, நிலையான விதிமுறைகளின்படி, கட்டடங்களை நிர்மாணிப்பதற்கான முதனிலை வரைபடங்கள் (*Preliminary drawings*), விரிவான திட்டங்கள் (*Detailed Plans*), முகப்பு மற்றும் குறுக்குவெட்டுகளின் வரைபடங்கள் போன்றவற்றை (*Elevation and Cross sections drawings*) கட்டடக் கலை பிரிவு உருவாக்குகிறது. இரு பரிமாணங்கள் மற்றும் முப்பரிமாண (2*D *மற்றும் 3D) தள வரைபடம், மனை வரைபடம், உயரம் மற்றும் சமநீளக் காட்சிகளை (*Elevation and Isometric views*) வழங்குவதும் இதில் அடங்கும்.*

*இந்த புதிய வடிவிலான வரைபடங்கள் மற்றும் டிஜிட்டல் முப்பரிமாண மாதிரி (*Digital 3D Modelling*), கட்டுமானத்தின் இறுதி தோற்றம் மற்றும் பயன்பாடு பற்றிய தெளிவான விளக்கத்தினை பயன்பாட்டுத் துறைக்கு வழங்குகிறது.*

*டிஜிட்டல் ஊடகங்களின் இந்த நவீன புதுமையான சேவையை வழங்குவதற்காக, கட்டட வரைகலைப் பிரிவு ஆட்டோகேட் (*Auto CAD*), ரெவிட் (*Revit*), 3டிஎஸ் மேக்ஸ் (3*dsMax*) மற்றும் ஸ்கெட்ச்அப் (*Sketchup*) போன்ற அதிவேக மென்பொருள் நிரல்களைப் பயன்படுத்துகிறது.*

TRUTH ALONE TRIUMPHS

பொதுப்பணித் துறை – அமைப்பு விளக்கப்படம்



2023 ஏப்ரல் 1]


முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும்
தலைமைப் பொறியாளர் (பொது)
பொதுப்பணித்துறை
சென்னை மண்டலம்
1. சென்னை
2. வேலூர்
3. திருவண்ணாமலை
4. ராணிப்பேட்டை
5. திருப்பத்தூர்
6. விழுப்புரம்
7. காஞ்சிபுரம்
8. திருவள்ளூர்
9. கள்ளக்குறிச்சி
10. செங்கல்பட்டு
திருச்சி மண்டலம்
1. திருச்சிராப்பள்ளி
2. புதுக்கோட்டை
3. அரியலூர்
4. பெரம்பலூர்
5. திருவாரூர்
6. தஞ்சாவூர்
7. நாகப்பட்டிணம்
8. கடலூர்
9. மயிலாடுதுறை
கோயம்புத்தூர் மண்டலம்
1. கோயம்புத்தூர்
2. நீலகிரி
3. ஈரோடு
4. நாமக்கல்
5. சேலம்
6. திருப்பூர்
7. கரூர்
8. கிருஷ்ணகிரி
9. தருமபுரி
மதுரை மண்டலம்
1. மதுரை
2. திருநெல்வேலி
3. விருதுநகர்
4. தூத்துக்குடி
5. இராமநாதபுரம்
6. கன்னியாகுமரி
7. திண்டுக்கல்
8. தேனி
9. சிவகங்கை
10. தென்காசி

தொழில்நுட்ப மாற்றங்களுக்கேற்ப, கட்டட வரைகலைப் பிரிவு, டிஜிட்டல் 3D வடிவமைப்பு தொடர்பான அனைத்து அண்மைக்கால மென்பொருட்களையும் தொடர்ந்து பயன்படுத்தி அனைத்து அரசு துறைகளுக்கும் சிறந்த சேவைகளை வழங்குவதில் கட்டடக் கலைப் பிரிவு முன்னணியில் உள்ளது.

5.2 திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டம் (Planning and Designs Circle)

நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அனைத்து வகையான சுமைகளையும் தாங்கும் வகையில் இந்திய தரநிர்ணய அமைவன (Bureau of Indian Standards) விதிமுறைகளுக்கு இணங்க, அரசு கட்டடங்களின் தேவைகளுக்கு ஏற்ப கட்டமைப்பு வடிவம் மற்றும் வரைபடங்களை உருவாக்குவதில் திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டம் முதன்மைப் பங்கு வகிக்கிறது.

மேலும், மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக் கட்டடங்கள், ஆட்சியர் அலுவலகக் கட்டடங்கள், நினைவுச் சின்னங்கள், நீதிமன்றக் கட்டடங்கள், அரசு விருந்தினர் இல்லங்கள், நினைவகங்கள், அடுக்குமாடி குடியிருப்புக் கட்டடங்கள் போன்ற அனைத்து அரசு கட்டடங்களின் வடிவமைப்புப் பணிகளை மேற்கொள்கிறது.

தொழில்நுட்பம் சார்ந்த சுற்றறிக்கைகள் வெளியிடுவதன்மூலம் திறமையான மற்றும் தரமான கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள, பொதுப் பணித் துறை பொறியாளர்களுக்கு வழிகாட்டுகிறது.

புதிய மற்றும் 50 ஆண்டுகளுக்கு மேல் பழமையான திரையரங்குகளின் கட்டமைப்புகளுக்கு உறுதித் தன்மை சான்றிதழ் வழங்குதல் மற்றும் பள்ளிகள், கலாச்சார மையங்கள், திரையரங்குகள், கல்லூரிகள் போன்ற பொதுக் கட்டடங்களுக்குக் கட்டமைப்பு நிலைத்தன்மை சான்றிதழ் வழங்குதல் ஆகிய பணிகளை மேற்கொள்கிறது.

5.3 தமிழக அரசு கட்டட ஆராய்ச்சி நிலையம் (Tamizhaga Arasu Buildings Research Station)

தமிழக அரசு கட்டட ஆராய்ச்சி நிலையம், பல்வேறு கட்டுமான பொருள்களான (சிவில் மற்றும் எலக்ட்ரிக்கல்) கம்பி, சிமெண்ட், பெயிண்ட், பிவிசி பைப்புகள், டைல்ஸ், கதவு,

2023 ஏப்ரல் 1]

ஜன்னல், மின் கம்பிகள், சுவிட்சுகள், விளக்குகள், கன்ட்யூட் பைப்புகள் (conduit Pipes) மற்றும் சந்தையில் அவ்வப்போது அறிமுகப்படுத்தப்படும் நவீன தொழில்நுட்பங்களைக் கொண்ட கட்டுமானப் பொருட்களின் தரத்தினை இந்திய தொழில் நுட்ப கழகம் (IIT), இந்திய தர நிர்ணய அமைவனம் (BIS), அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் பல துறைகளைச் சார்ந்த வல்லுநர்களைக் கொண்ட பொதுப் பணித் துறையின் மதிப்பீட்டுக் குழுவின் மூலம் மதிப்பீடு செய்து ஒப்புதல் வழங்கி, தமிழ்நாட்டில் நடைபெறும் தனியார் மற்றும் அரசு கட்டுமானப் பணிகளில் பயன்படுத்துவதற்கு வழிவகை செய்கிறது.

பல்வேறு அமைப்புகள் / நிறுவனங்களின் வல்லுநர்கள் மற்றும் துறைப் பொறியாளர்களை ஈடுபடுத்தி கட்டுமானத் துறையில் இன்றைய தேவைகளைப் பூர்த்தி செய்ய தொழில்நுட்பத் திறன்களை மேம்படுத்துவதற்கும் உதவிப் பொறியாளர்கள், இளநிலைப் பொறியாளர்கள் மற்றும் உதவி செயற்பொறியாளர்களுக்கு ஆண்டுதோறும் தொழில்நுட்பப் பயிற்சித் திட்டங்களை நடத்துகிறது.

பல்வேறு தனியார் நிறுவனங்கள், அரசுத் துறைகள் போன்றவற்றிற்கு தொழில்நுட்ப ஆலோசனை சேவைகளை வழங்குகிறது.

சென்னை, தரமணியில் நிறுவப்பட்டுள்ள ஆய்வகத்தில் சிமென்ட், இரும்பு, கான்கிரீட் போன்ற கட்டுமானப் பொருட்களின் தரத்திற்கான ஆய்வகச் சோதனை நடத்தப்படுகிறது.

5.4 கட்டட மையம் மற்றும் பாதுகாத்தல் கோட்டம் (Building Centre and Conservation Division)

பொதுப் பணித் துறையின் சிறப்புப் பிரிவான கட்டட மையம் மற்றும் பாதுகாத்தல் கோட்டம், தமிழ்நாட்டில் அமைந்துள்ள பாரம்பரியக் கட்டடங்களை மறுசீரமைக்கவும், மீட்டுருவாக்கவும் மற்றும் பாதுகாக்கவும் செயல்பட்டு வருகிறது. சென்னை சேப்பாக்கத்தில் உள்ள கலச மஹால், எழும்பூர் நீதிமன்றக் கட்டடம், எழும்பூர் அருங்காட்சியகம், சென்னை உயர் நீதிமன்றம், சேப்பாக்கத்தில் உள்ள பொதுப் பணித் துறை தலைமைப் பொறியாளர் அலுவலகம் போன்ற பல மதிப்புமிக்க பாரம்பரியக் கட்டடங்களைப் பொதுப் பணித் துறை ஏற்கெனவே மீட்டுருவாக்கியுள்ளது. சென்னை, சேப்பாக்கத்தில் உள்ள

கட்டடக்கலை மதிப்பிற்குப் பெயர் பெற்ற ஹுமாயூன் மஹால் தற்போது இத்துறையால் சீரமைக்கப்பட்டு வருகிறது. சென்னை, ராஜாஜி சாலையில் உள்ள பதிவுத் துறை துணைத் தலைவர் அலுவலகம், கோயம்புத்தூரில் உள்ள குதிரைவண்டி நீதிமன்றக் கட்டடம், சேலத்தில் உள்ள பழைய தொழிலாளர் நீதிமன்றக் கட்டடம், திருச்சியில் உள்ள பழைய ஆட்சியர் கட்டடம் (இராணி மங்கம்மாள் அரண்மனை), கோயம்புத்தூரில் உள்ள ஆளுநர் மாளிகை (பழைய வனத் துறை அலுவலகம்), கொடைக்கானல் கோஹினூர் ஷேக் அப்துல்லா மாளிகை மற்றும் சென்னை பல்கலைக்கழகக் கட்டடம் போன்ற பழமையான பாரம்பரிய கட்டடங்களை மீட்டுருவாக்கும் பணிகள் இக்கோட்டத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

5.5 கட்டுமான மற்றும் பராமரிப்புப் பிரிவு (Construction and Maintenance Wing)

கட்டுமானம் மற்றும் பராமரிப்புப் பிரிவானது மாநிலம் முழுவதும் 43 கோட்டங்களுடன் செயற்பட்டுவரும் இத்துறையின் முக்கிய செயற்பாட்டுப் பிரிவாகும். தலைமைக் கட்டடக் கலைஞரால் தயாரிக்கப்படும் வரைபடம் மற்றும் திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டத்தால் தயாரிக்கப்படும் கட்டமைப்பு வரைபடத்தின்படி திட்டத்தைச் செயல்படுத்துவது கட்டுமானம் மற்றும் பராமரிப்புப் பிரிவின் முதன்மைப் பணியாகும். ஒப்பந்தகாரர்களால் மேற்கொள்ளப்படும் கட்டுமானப் பணிகளை மேற்பார்வையிடுதல் மற்றும் ஆய்வு செய்தல், ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டத்தில் இருந்து மாறுபடுதலைத் தடுக்கும் நோக்கத்தில் குறிப்பிட்ட கால இடைவெளியில் அளவிடுதல் மற்றும் அளவு குறிப்பேட்டில் முறையாகப் பதிவு செய்தல் மற்றும் செலவினங்களைப் பதிவு செய்வதற்கான பதிவேட்டைப் பராமரிப்பது போன்ற பணிகளை இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது.

5.6 மின் பிரிவு (Electrical Wing)

பொதுப் பணித் துறையால் கட்டப்படும் கட்டடங்கள்/ கட்டமைப்புகளை நவீன தொழில்நுட்ப உதவியுடன் செயல்பாட்டிற்குக் கொண்டு வருதல் மற்றும் பொலிவுடன் திகழச்செய்வது மின் பிரிவின் பணியாகும். மாநிலம் முழுவதும் 8 மின் கோட்டங்கள் செயல்பட்டு வருகின்றன.

2023 ஏப்ரல் 1]

54 ஆண்டுகளுக்கும் மேலாக மின்பிரிவின் மூலமாக கட்டடங்களின் உட்புற மற்றும் வெளிப்புற மின் பணிகள் உட்பட, சிறப்பு மின் பணிகளான குளிர்சாதன வசதிகள் (HVAC), மின்தூக்கி, மின்னாக்கி, மின்மாற்றி, ஒலி-ஒளி அமைப்பு, காணொலிக் காட்சிகள், தொலைபேசி வசதிகள், கண்காணிக்கும் நிழற்படக் கருவிகள் மற்றும் தீயணைப்பு எச்சரிக்கை கருவிகள் நிறுவுதல் மற்றும் நினைவகங்கள் மற்றும் நினைவுச் சின்னங்களில் சிறப்பு ஒலி, ஒளி அமைப்பு ஆகிய பணிகள் செவ்வனே நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

அனைத்து அரசுக் கட்டடங்களில் மின் பணிகள் மற்றும் மின் பராமரிப்புப் பணிகளும் தொய்வின்றி மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழ்நாடு மின்சார சட்டம் மற்றும் மத்திய மின்சார ஆணைய ஒழுங்குமுறைகளைப் பின்பற்றி அனைத்து மின் பணிகளும் பாதுகாப்பான முறையில் மேற்கொள்ளப்படுகின்றன.

மாற்றுத் திறனாளிகள் உரிமைகள் சட்டம், 2016 இன்படி தடையற்ற சூழலை உருவாக்குவதற்கு தனிக் கவனத்துடன் மின் அமைப்புப் பணிகள் சீரிய முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

5.7 தரக்கட்டுப்பாடு கோட்டம் (Quality Control Division)

கட்டடங்களின் தரம் சீராக இருப்பதை உறுதி செய்வதற்கு, ஒருங்கிணைந்த தரக் கட்டுப்பாடு முறையினை ஏற்படுத்துதல் தரக் கட்டுப்பாடு கோட்டத்தின் பணியாகும்.

ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுமான பணிகளின் தரத்தினை உறுதி செய்வதற்கு பணி தளத்தில் முறையாக ஆய்வு செய்தல் தரக் கட்டுப்பாடு கோட்டங்களின் பொறுப்பாகும்.

சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் 3 தரக்கட்டுப்பாடு கோட்டங்கள், செயற்பொறியாளர்களின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகின்றன.

5.8 பொதுப் பணி பணியாளர் பயிற்சி நிலையம் (Public Works Staff Training Institute)

திருச்சிராப்பள்ளியில் செயல்படும் பொதுப் பணி பணியாளர் பயிற்சி நிலையம், பொதுப் பணித் துறையின் பொறியாளர்கள்,

தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களுக்கு புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் அரசின் கொள்கைகளுக்கு ஏற்றவாறு அவ்வப்போது பயிற்சி அளித்து வருகிறது.

2022-2023 ஆம் ஆண்டில் பொதுப் பணி பணியாளர்கள் பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட பயிற்சிகளால் 160 அமைச்சுப் பணியாளர்களும் மற்றும் 234 தொழில்நுட்பப் பணியாளர்களும் பயனடைந்துள்ளனர்.

சென்னையில் 17.3.2023 அன்று நடைபெற்ற பொதுப் பணித் துறையின் பொறியாளர்கள் மற்றும் கட்டடக் கலைஞர்களுக்கான "நவீன கட்டுமான தொழில்நுட்பங்கள் மற்றும் செய்நுட்ப அறிவு" பற்றிய ஒரு நாள் பயிற்சி மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

5.9 கொதிகலன்கள் இயக்குநரகம் (Directorate of Boilers)

கொதிகலன்கள் சட்டம், 1923 மற்றும் கொதிகலன்கள் ஒழுங்குமுறைகள், 1950 ஆகியவற்றின்படி கொதிகலன்கள் மற்றும் கொதிகலன் பாகங்களின் பாதுகாப்பான வடிவமைப்பை கொதிகலன்கள் இயக்குநர் உறுதி செய்கிறார்.

கொதிகலன்கள் மற்றும் கொதிகலன் பாகங்கள், அடைப்பான்கள், பொருத்து பாகங்கள், வார்ப்புகள், தாக்கு வார்ப்புகள், மின்முனைகள் உற்பத்தி செய்யும் தயாரிப்பு நிறுவனங்களுக்கும், சிதைவுறா சோதனை (Non-Destructive Testing) மேற்கொள்ளும் நிறுவனங்களுக்கும் மற்றும் கொதிகலன்கள் பழுதுபார்க்கும் / நிறுவும் நிறுவனங்களுக்கும் கொதிகலன்கள் இயக்குநரிடம் ஒப்புதல் பெற வேண்டும்.

கொதிகலன்கள் இயக்குநர் ஒரு ஆய்வு அதிகாரியாக, கொதிகலன்கள் மற்றும் கொதிகலன் பாகங்கள் உற்பத்தியின்போது சான்றளிப்பதற்கு பொறுப்பு ஆவார் மற்றும் தமிழ்நாட்டில் புதிய கொதிகலன்களைப் பதிவு செய்வதற்கு பதிவு அதிகாரியாக இவர் செயல்படுகிறார்.

கொதிகலன்கள் இயக்குநர் தமிழ்நாடு அரசின் சார்பாக மத்திய கொதிகலன்கள் வாரியத்தின் உறுப்பினராக செயல்படுகிறார். மத்திய கொதிகலன் வாரியத்தால் உருவாக்கப்பட்ட கொதிகலன் இயக்க பொறியாளர்கள் விதிகள், 2011-ன்படி கொதிகலன் இயக்க

2023 ஏப்ரல் 1]
பொறியாளர்கள் தேர்வுகள் மற்றும் கொதிகலன் உதவியாளர்கள் விதிகள், 2011-ன்படி கொதிகலன் உதவியாளர்கள் தேர்வுகளையும், தேர்வு வாரியத்தின் தலைவராக கொதிகலன்கள் இயக்குநர் நடத்துகிறார். பல்வேறு வகையான வெல்டிங் செயல்முறைகளில் வெல்டர் தகுதித் தேர்வை நடத்தி, வெல்டர்களுக்குச் சான்றளிக்கும் அதிகாரியாகவும் இவர் செயல்படுகிறார்.

கொதிகலன்கள் துணை இயக்குநர்கள் 465 சதுர மீட்டருக்கு மேற்பட்ட வெப்பமூட்டும் மேற்பரப்புப் பகுதி கொண்ட கொதிகலன்களையும் மற்றும் கொதிகலன்கள் முதுநிலை உதவி இயக்குநர்கள் 465 சதுர மீட்டர் வரையிலான வெப்பமூட்டும் மேற்பரப்புப் பகுதி கொண்ட கொதிகலன்களையும் முறையே ஆய்வு செய்வார்கள்.

6.0 சேவைகள்

6.1 செந்தர விலைப் பட்டியல் (Standard Schedule of Rates)

*செந்தர விலைப் பட்டியல் குழுவினரால் ஆண்டுதோறும் உள்ளூர் சந்தை விலையின் அடிப்படையில் செந்தர விலைப் பட்டியல் (*Standard Schedule of Rates*) தயாரிக்கப்படுகிறது, அரசு கட்டடங்கள் கட்டுவதற்கான மதிப்பீடுகள் (அடிப்படை விலையில்) தயாரிக்க செந்தர விலைப் பட்டியல் பயன்படுகிறது. நீர்வளத் துறை, நெடுஞ்சாலைத் துறை, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம், பெருநகர சென்னை மாநகராட்சி போன்ற பொறியியல் துறைகள் மற்றும் பிற அரசு நிறுவனங்களால் இச்செந்தர விலைப் பட்டியல் பயன்படுத்தப்படுகிறது.*

*2022-2023 ஆம் ஆண்டு செந்தர விலைப் பட்டியலில், கட்டுமானத் துறைகளில் பணிகளை விரைவுபடுத்தும்விதமாக நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தயாரிக்கப்படும் முன் தயாரிக்கப்பட்ட கட்டமைப்புகள் (*Pre-fabricated Structures*)/ முன் வார்ப்பெடுத்த கட்டமைப்புகள் (*Precast Structures*) விலை விவரங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.*

6.2 தளப்பரப்பு விலைப் பட்டியல் (Plinth Area Rate)

தளப்பரப்பு விலைப் பட்டியல் கட்டுமானப் பரப்பளவின் சதுரமீட்டர் அடிப்படையிலான தோராய செலவினமாகும்.

செந்தர விலைப் பட்டியல் அடிப்படையில் தளப்பரப்பு விலைப் பட்டியல் தயாரிக்கப்படுகிறது. கட்டுமானப் பணிகளில் சதுரமீட்டர் அடிப்படையிலான தோராய மதிப்பீடு தயாரிக்கப் பயன்படுகிறது. தளப்பரப்பு விலைப் பட்டியல் பொதுப் பணித் துறையால் வெளியிடப்பட்டு அனைத்து அரசு பொறியியல் துறைகளால் பயன்படுத்தப்படுகிறது.

இத்தளப்பரப்பு விலைப் பட்டியல் நியாய வாடகை நிர்ணயம் செய்வதற்கும் மற்றும் பதிவுத் துறையில் கட்டடங்களின் பத்திரப் பதிவுக்கான முத்திரைத் தீர்வை நிர்ணயம் செய்வதற்கும் பயன்படுகிறது.

6.3 கட்டமைப்பு உறுதித்தன்மை சான்றிதழ் (Structural Stability Certificate)

பள்ளிகள், கல்லூரி கட்டடங்கள் மற்றும் திரையரங்கங்கள் போன்ற பல்வேறு பொதுக் கட்டடங்களுக்குக் கட்டமைப்பு உறுதித் தன்மைச் சான்றிதழ் பொதுப் பணித் துறையால் வழங்கப்படுகிறது.

6.4 நியாய வாடகைச் சான்றிதழ் (Rent Reasonableness Certificate)

அரசு அலுவலகங்கள் இயங்கிவரும் தனியார் கட்டடங்களுக்கு நியாய வாடகைச் சான்றிதழ் பொதுப் பணித் துறையினால் வழங்கப்படுகிறது.

6.5 தொழில்நுட்ப வழிகாட்டல் (Technical Guidance)

தொழில்நுட்ப அறிவுத் திறன் மற்றும் வாழ்க்கை தொழில் வளர்ச்சியினை மேம்படுத்தும் வகையில் பல்வேறு பொறியியல் கல்லூரிகளிலிருந்து வரும் மாணவர்களுக்கு தொழில்நுட்ப வழிகாட்டல் மற்றும் பயிற்சியினை (Internship) பொதுப் பணித் துறை வழங்குகிறது.

6.6 மாவட்ட அளவில் பதிவு செய்ய தனியார் பொறியாளர்களின் தேர்ந்த பெயர்ப் பட்டியல் பரிந்துரை

தனியார் பொறியாளர்கள் தொழில்நுட்பச் சேவைகள் வழங்கிட, மாவட்ட அளவில் தனியார் பொறியாளர்களின் தேர்ந்த பெயர்ப் பட்டியல் பதிவு செய்ய பொதுப் பணித் துறை பொறியாளர் குழுமத்தின் (Board of Engineers) ஒப்புதல்

2023 ஏப்ரல் 1]

அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு பரிந்துரை செய்யப்படுகிறது.

6.7 சுற்றுலா மாளிகைகள் மற்றும் ஆய்வு மாளிகைகள் (Circuit Houses and Inspection Bungalows)

மாநிலம் முழுவதும் மிக முக்கிய பிரமுகர்கள்/முக்கிய பிரமுகர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கள ஆய்வின்போது தங்குவதற்கும், சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கும் 65 ஆய்வு மாளிகைகள், 61 சுற்றுலா மாளிகைகள் மற்றும் விருந்தினர் மாளிகைகள் பொதுப் பணித் துறையினால் கட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

6.8 தொழில்நுட்ப ஆலோசனை சேவைகள் (Technical Consultancy Services)

இந்து சமய அறநிலையத் துறை, சுற்றுலாத் துறை, அருங்காட்சியகத் துறை போன்ற பல்வேறு துறைகளுக்கு கட்டட வடிவமைப்பு, வரைபடங்களைத் தயாரித்தல் மற்றும் கட்டடப் பணிகளுக்கு மதிப்பீடு தயாரித்தல் போன்ற தொழில்நுட்பச் சேவைகளை வழங்கி வருகிறது.

6.9 அரசுப் பணியாளர் குடியிருப்புகள் (Government Staff Quarters)

சென்னை, சைதாப்பேட்டை, தாடண்டர் நகரில் ரூ.88.49 கோடி மதிப்பீட்டில், 190 'B' வகை குடியிருப்புகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. சைதாப்பேட்டை, தாடண்டர் நகரில் ரூ.99.98 கோடி மதிப்பீட்டில் 190 'சி வகை' குடியிருப்புகள் கொண்ட பன்மாடிக் கட்டடம் கட்டும் பணி செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

6.10 புதுதில்லி தமிழ்நாடு இல்லம் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு

தமிழ்நாடு அரசின் மதிப்புமிக்க விருந்தினர்கள் மாளிகையான தமிழ்நாடு இல்லம் புதுதில்லியில் அமைந்துள்ளது. இங்கு மாநில அரசு விருந்தினர்கள், மாண்புமிகு அமைச்சர்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோருக்கு உணவு மற்றும் தங்கும் வசதிகள், போக்குவரத்து வசதிகள் அளிக்கப்படுகின்றன.

புதுதில்லியில் உள்ள சாணக்கியபுரி பகுதியில் தமிழ்நாடு இல்லம் இரண்டு இடங்களில் அமைந்துள்ளது. முதல் விருந்தினர்

மாளிகை "வைகை தமிழ்நாடு இல்லம்" 1962 ஆம் ஆண்டு 1.76 ஏக்கர் நிலப்பரப்பில், எண் 6 கௌடில்யா மார்க் என்கின்ற முகவரியில் கட்டப்பட்டது. இவ்வில்லம் 'மெட்ராஸ் ஹவுஸ்' என்று முதன்முதலில் அழைக்கப்பட்டது. அதிக விருந்தினர்கள் வருகையினைத் தொடர்ந்து 1976 ஆம் ஆண்டு இந்த வளாகத்தில் மேலும் ஒரு கூடுதல் கட்டடம் கட்டப்பட்டது.

அதன் பின்னர், 1.97 ஏக்கர் நிலப்பரப்பில் கூடுதல் விருந்தினர் மாளிகை எண்.9 திக்கேந்தர்ஜித் மார்க், சாணக்கியபுரி என்ற முகவரியில் கட்டப்பட்டு 16.9.2004 அன்று திறக்கப்பட்டது. இக்கூடுதல் விருந்தினர் மாளிகை தற்பொழுது, "பொதிகை தமிழ்நாடு இல்லம்" என்று அழைக்கப்படுகிறது.

தமிழ்நாடு வைகை இல்லத்தினை மேம்படுத்தும் பொருட்டு புதிய கட்டடங்கள் கட்டுவதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. விரைவில் இப்பணிகள் துவக்கப்படும்.

6.11 கீழடி அருங்காட்சியகம் (Keezhadi Museum)

தமிழர்களின் பண்பாட்டின் முக்கியத்துவம் மற்றும் தொன்மையை நிரூபிக்கும் வகையில், நாகரீகத்தின் நகரிய குடியிருப்பு மற்றும் தொழிற்கூடப் பகுதி இருந்தது சிவகங்கை கீழடி மற்றும் கொந்தகை அகழாய்வில் கண்டறியப்பட்டு, ஆயிரக்கணக்கான தொன்மையான பொருட்கள் தமிழ்நாடு தொல்லியல் துறையால் வெளிக் கொணரப்பட்டுள்ளன.

கீழடி மற்றும் கொந்தகை ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் கண்டெடுக்கப்பட்ட தொன்மையான பொருட்களைக் காட்சியகப்படுத்திட 31,000 சதுரடி பரப்பளவில் ரூ.18.43 கோடி செலவில் உலகத்தரம் வாய்ந்த நவீன வசதிகளுடன் கூடிய அருங்காட்சியகம் (Museum) கட்டும் பணி பொதுப் பணித் துறையால் முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 05.03.2023 அன்று திறந்து வைக்கப்பட்டது.

அருங்காட்சியகக் கட்டடங்களின் வடிவமைப்பு, அப்பகுதியில் உள்ள வீடுகளின் கலைநயத்தைப் பறைசாற்றும் விதமாக முற்றம், தாழ்வாரம் மற்றும் மண்டபங்களுடன் அமைக்கப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 1]

6.12 மழை நீர் சேகரிப்பு (Rain Water Harvesting)

'விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண்பு அரிது'.

(அதிகாரம் 2, குறள் 16)

மழைநீர் சேகரிப்பின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, அனைத்து அரசுக் கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்பை உருவாக்கி, மழைநீர் சேகரிப்பை ஊக்குவிக்க பொதுப் பணித் துறைமூலம் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு பணித்தளம் மற்றும் மண் தன்மைக்கு ஏற்றவாறு பல்வேறு வகையான அமைப்புகள் செயற்படுத்தப்படுகின்றன.

இத்துறையின்மூலம் தற்போது பயன்பாட்டிலுள்ள அனைத்து அரசுக் கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் கட்டப்பட்டுள்ளன. மேலும், மழை நீர் சேகரிப்புக் கட்டமைப்பினை புதிய கட்டுமானங்களுக்கான திட்ட மதிப்பீட்டில் சேர்ப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

மழை நீர் சேகரிப்பை திறம்பட மேற்கொள்ளும் பொருட்டு மழைக்காலத்திற்கு முன், தற்போதுள்ள மழை நீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் காலமுறையான ஆய்வு செய்யப்பட்டு, அக்கட்டமைப்புகளின் தரம் உறுதி செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

6.13 பேரிடர் மேலாண்மை (Disaster Management)

இயற்கைப் பேரிடர்களைத் தாங்கக் கூடிய வகையில் வலுவான கட்டடங்கள் மற்றும் கட்டமைப்புகளை உருவாக்குவது என்பது பொறியியலின் பங்கை உள்ளடக்கியது ஆகும். இதனால் சமுதாயத்திற்கு ஏற்படக் கூடிய பாதிப்பினைத் தவிர்க்க அல்லது குறைப்பதற்கு இயலும்.

பருவமழை, சூறாவளி காலங்களில் பேரிடர் அபாயக் குறைப்பு என்பது ஒரு பெரிய சவாலாகும். பேரிடர் மற்றும் பேரழிவைத் தடுப்பதற்கு பேரிடருக்கு முன், பேரிடர் காலத்தில் மற்றும் பேரிடருக்குப் பின் என்ற மூன்று நிலைகளில் துல்லியமான திட்டமிடல் மற்றும் விரிவான தயார் நிலை தேவைப்படுகிறது.

சூறாவளியின்போது கட்டடத்திற்குள் பெருவெள்ளம், பேரழிவுகளைத் தடுப்பதற்கும் மற்றும் மக்களை வெளியேற்றுவதற்கும் ஏற்றவாறு பேரிடர் தயார் நிலை கட்டமைப்பை பொதுப் பணித் துறை ஏற்படுத்துகிறது.

பொதுப் பணித் துறையால் பராமரிக்கப்படும் அரசு வளாகம் மற்றும் அரசுக் கட்டடங்களில் முனைப்பான கண்காணிப்பு மற்றும் ஆய்வு மேற்கொள்வது தயார்நிலை பணிகளில் அடங்கும். அரசு மருத்துவமனைகளில் உள்ள தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் மின்சாரம் தடைபடாமல் இருப்பதற்கான ஏற்பாடு உறுதி செய்தல், அரசுக் கட்டடங்களில் நீர்க்கசிவினைத் தடுத்தல், கூரை மற்றும் கட்டடத்தின் உறுதித் தன்மை, பலவீனமாக மற்றும் வலுவற்ற நிலையில் உள்ள கட்டமைப்புகளைக் கண்டறிந்து உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுத்து மேம்படுத்தலுக்கான பணிகள் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

6.14 இயற்கைப் பேரழிவுகளைத் தணிக்கும் நடவடிக்கைகள் (Natural Disasters Mitigation Measures)

ஒவ்வொரு கட்டடமும் குடியிருப்பவருக்கு வசதியை ஏற்படுத்துவது மட்டுமின்றி, தீ விபத்து, நிலநடுக்கம், சுனாமிப் பேரலை, புயல், வெள்ளம் மற்றும் பிற ஆபத்துகளிலிருந்து குடியிருப்போரைப் பாதுகாக்க மிகவும் கவனமாகத் திட்டமிடப்பட்டு, வடிவமைக்கப்பட்டு, கட்டப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகிறது.

தேசிய கட்டட விதித் தொகுப்பு, 2016 (National Building Code, 2016) மற்றும் இந்தியத் தரக்கட்டுப்பாடு அமைவனத்தால் வெளியிடப்படும் விதிகளைப் பின்பற்றி அரசுக் கட்டடங்கள் கட்டப்படுகின்றன. தீ விபத்து, நிலநடுக்கம், சுனாமிப் பேரலை, புயல், வெள்ளம் மற்றும் பிற இயற்கை இடையூறுகளைத் தாங்கும் வகையில் கட்டடங்கள் மற்றும் கட்டமைப்புகளின் நிலைத்தன்மை பொதுப் பணித் துறையினால் உறுதி செய்யப்படுகிறது.

6.15 மாற்றுத் திறனாளிகளுக்குத் தடைகளற்ற சூழலை உருவாக்குதல்

மாற்றுத் திறனாளிகள் உரிமைகள் சட்டம், 2016-ன்படி மாற்றுத் திறனாளிகளுக்கான தடைகளற்ற சூழலை ஏற்படுத்தும் வகையில் கட்டுமானம் மற்றும் பராமரிப்புப் பணிகள் அனைத்து

2023 ஏப்ரல் 1]

வகையான கட்டடங்களிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், தடைகளற்ற சூழலை உருவாக்குதல் குறித்த பொது வழிகாட்டுதல்கள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட இடவசதி அடிப்படையிலும் மாற்றுத் திறனாளிகளுக்கான வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாற்றுத் திறனாளிகளின் தடைகளற்ற சூழலில், எந்த ஒரு மாற்றுத் திறனாளியும், தனியாக பிறருடைய உதவியின்றி ஒவ்வொரு நாளும் செயல்படுவதற்கு ஏற்ற வகையில் அனைத்துக் கட்டடங்களை வடிவமைப்பதே இலக்காகும்.

கட்டடத்தின் அனைத்து பாதைகளின் சந்திப்புகள், கட்டடத்தின் முக்கியப் பகுதிகளான சாய்வுதளங்கள், கதவுகள், கழிவறைகள், குடிநீர் வசதி போன்ற இடங்களில், குறியீட்டுப் பலகைகள் (Signage) அமைத்தல். கதவுகள் இருக்கும் இடங்களைக் கண்டறியக் கூடிய வகையில் வித்தியாசமான தரை ஓடுகள் (Tactile Tiles) பொருத்துதல், சாய்வுதள அமைப்பு, கழிவறைகளில் வழுக்காத தரை ஓடுகள் (Anti-Skid Tiles) பொருத்துதல் மற்றும் கழிவறைகளின் உட்புறங்களில் கைப்பிடிகள் அமைத்தல்.

மின்தூக்கியின் உட்புறத்தில் கைப்பிடிகள் அமைத்தல், கட்டடத் தளங்களை அறியவும் மற்றும் மின்தூக்கியின் கதவுகள் திறந்து மூடுவதைத் தெரிவிக்கவும், கேட்பொலிக் கருவி நிறுவுதல். மின்தூக்கிகளில் பிரெய்லி வடிவில் உயர்த்தப்பட்ட எழுத்துருக்களைக் (Braille / Raised Letters for Visually Challenged Persons) கொண்ட பொத்தான்களைப் பொருத்துதல்.

தேர்தலின்போது மாற்றுத் திறனாளிகள் எளிதில் வாக்களிப்பதற்கு தடையற்ற சூழலை உருவாக்கும் பொருட்டு அனைத்து வாக்குச் சாவடிகளிலும் சாய்வு தளம் அமைத்தல் போன்றவை மேற்கொள்ளப்படுகின்றன.

6.16 கோவிட்-19 தொற்றுநோயை எதிர்த்துப் போராட உதவ மருத்துவ உள்கட்டமைப்பை மேம்படுத்தும் பணிகள்

கோவிட்-19 பெருந்தொற்று காலத்தில் பொதுப் பணித் துறையினால், தேவையான உள்கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டதன்மூலம் கொரோனாவால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதில் இத்துறை மிக முக்கிய பங்காற்றியது.

கொரோனா வார்டுகளில் உள்ள படுக்கைகளுக்கான ஆக்சிஜன் பைப்லைன் பொருத்துதல் மற்றும் அதனைச் சார்ந்த பணிகள் பொதுப் பணித் துறையால் மிகக் குறுகிய காலத்தில் முடிக்கப்பட்டன.

தனிமைப்படுத்தப்பட்ட வார்டுகளை உருவாக்கி அதற்குரிய அத்தியாவசிய வசதிகள், மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களுக்கு வசதிகள், வழிகாட்டி பலகைகள் மற்றும் தடுப்பு வேலிகள் அமைக்கப்பட்டன.

மாநிலத்திலுள்ள அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார மையங்களில் 44,098 கொரோனா படுக்கை வசதிகளில் 37,589 எண்ணிக்கையிலான படுக்கைகளுக்கு ஆக்சிஜன் இணைப்புகள் மிகக் குறுகிய காலத்தில் பொதுப் பணித் துறையினால் ஏற்படுத்தப்பட்டது.

தமிழ்நாடு கோவிட் அவசர சிகிச்சை தொகுப்பு-2 திட்டத்தின்கீழ் 2096 தீவிர சிகிச்சை பிரிவு ஆக்சிஜன் வசதியுடன் கூடிய படுக்கைகள் ரூ.60.78 கோடி மதிப்பீட்டில் 50 அரசு மருத்துவமனைகள், 37 மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் 116 மாவட்ட துணை மருத்துவமனைகளில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

சென்னை கொளத்தூர் தொகுதியில் உள்ள பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனையை 300 படுக்கைகள் கொண்ட கோவிட் மருத்துவமனையாகப் புதுப்பொலிவுடன் தரம் உயர்த்தும் பணிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 23.05.2021 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, ரூ.19.42 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 13.8.2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

7.0 பாரம்பரிய கட்டடங்கள் பாதுகாத்தல், புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைத்தல் பணிகள் (Conservation, Renovation and Restoration of Heritage Buildings)

பாரம்பரிய கட்டடங்களின் வரலாறு, கட்டடக் கலை, கலாச்சாரம் மற்றும் தோற்றப் பொலிவினை பாதுகாப்பது மாநிலத்தின் குறிப்பிடத்தக்க பணியாகும்.

2023 ஏப்ரல் 1]

பாரம்பரியக் கட்டடங்களை அதன் தொன்மை மாறாமல் சிறந்த வகையில் பாதுகாத்தல், புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைத்தல் பணிகளை பொதுப் பணித் துறையின் கட்டட மையம் மற்றும் பாதுகாப்புக் கோட்டம் மேற்கொண்டு வருகிறது.

பாரம்பரியமிக்க கட்டடங்களான சென்னை சேப்பாக்கத்தில் உள்ள கலச மஹால், எழும்பூர் நீதிமன்றம் மற்றும் அருங்காட்சியகம், சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் பொதுப் பணித் துறை தலைமை அலுவலகம் ஆகிய கட்டடங்கள் ஏற்கெனவே பொதுப் பணித் துறையால் புனரமைத்து புதுப்பிக்கப்பட்டுள்ளன.

சென்னை சேப்பாக்கத்தில் உள்ள ஹுமாயூன் மஹால், சென்னை பல்கலைக்கழகம், இராஜாஜி சாலையில் அமைந்துள்ள துணைப் பதிவுத் துறைத் தலைவர் அலுவலகம் மற்றும் தங்க சாலையில் உள்ள அரசு மைய அச்சகம், கோயம்புத்தூரில் உள்ள ஆளுநர் மாளிகை மற்றும் குதிரைவண்டி நீதிமன்றம், சேலம் பழைய தொழிலாளர் நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி பழைய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் (இராணி மங்கம்மாள் அரண்மனை) மற்றும் கொடைக்கானல் கோஹினூர் சேக் அப்துல்லா மாளிகை ஆகிய தொன்மையான கட்டடங்களைப் புதுப்பித்து பாதுகாக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பல்வேறு மாவட்டங்களில் ரூ.103.74 கோடி மதிப்பீட்டில் 17 பாரம்பரிய கட்டடங்களில் பாதுகாப்பு, புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைத்தல் பணிகள் பொதுப் பணித் துறையால் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

8.0 நொறுக்கப்பட்ட கல் மணல் (பொதுவாக எம்-சாண்ட் என அழைக்கப்படுகிறது)

கட்டுமானப் பணிகளில் ஆற்று மணலுக்கு மாற்றாக நொறுக்கப்பட்ட கல் மணல் பயன்படுத்தப்படுகிறது.

நொறுக்கப்பட்ட கல் மணல் தயாரிக்கும் நிறுவனங்களுக்குத் தேவையான இயந்திரங்கள் மற்றும் மாதிரிகளின் சோதனை முடிவுகளின் அடிப்படையிலும் விதிமுறைகளின்படியும் ஆய்வு செய்து, தொழில்நுட்ப மதிப்பீடு குழுமூலம் அதன் தரத்திற்கு மட்டும் ஒப்புதல் சான்றிதழ் அளிக்கப்படுகிறது. தற்போது 412 எம்-சாண்ட் தயாரிக்கும் நிறுவனங்கள் தலைவர், தொழில்நுட்ப மதிப்பீடு குழு மற்றும் முதன்மைத் தலைமைப் பொறியாளர்

மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப் பணித் துறை, சென்னை அவர்களிடமிருந்து எம்-சாண்ட் தர ஒப்புதலுக்கான சான்றிதழ் பெற்றுள்ளன.

எம்-சாண்ட்/ நொறுக்கப்பட்ட மணல் கொள்கை-2023

எம்-சாண்ட் / நொறுக்கப்பட்ட கல் மணல் தயாரிப்பினை முறைப்படுத்துவதற்காக தமிழ்நாடு எம்-சாண்ட் கொள்கை-2023 (Tamil Nadu M-Sand Policy 2023) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 9.3.2023 அன்று வெளியிடப்பட்டது.

ஆற்று மணலுக்கு மாற்றாக பயன்படுத்தப்பட்டு வரும் எம்-சாண்டின் தரம், அவற்றைத் தயாரிக்கும் முறைகள் மற்றும் எம்-சாண்ட் தயாரிக்கும் நிறுவனங்களை ஒழுங்குபடுத்தும் வழிமுறைகள் போன்ற அம்சங்கள் இக்கொள்கையில் இடம்பெற்றுள்ளன.

இக்கொள்கையில் பொதுப் பணித் துறைக்கான அம்சங்கள் பின்வருமாறு :-

- அனைத்து எம்-சாண்ட் நிறுவனங்களும், அவற்றால் தயாரிக்கப்படும் பொருட்களுக்கு இந்திய தர நிர்ணய அமைவனத்திடமிருந்து (BIS) சான்றிதழ் பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
- இந்திய தர நிர்ணய அமைவனத்தின் விதித் தொகுப்பின்படி சான்றிதழ் பெறுவதற்கு பொதுப் பணித் துறையால் வழங்கப்படும் எம்-சாண்ட் தர ஒப்புதலுக்கான சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.
- தற்போதுள்ள அனைத்து எம்-சாண்ட்/ நொறுக்கப்பட்ட கல் மணல் உற்பத்தி நிறுவனங்கள், புவியியல் மற்றும் சுரங்கத் துறை / பொதுப் பணித் துறையால் பரிந்துரைக்கப்படும் காலத்திற்குள், VSI (Vertical Shaft Impactor) அல்லது அதற்கு சமமான பிற மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள்மூலம் எம்-சாண்டின் தரத்தை உயர்த்திக் கொள்ளவும் மற்றும் தமிழ்நாடு சட்டத்திற்குப் புறம்பான சுரங்கத் தொழில், கனிமங்கள் போக்குவரத்து மற்றும் சேமிப்பு தடுப்பு மற்றும் கனிம விற்பனையாளர்கள் விதிகள், 2011-ன்கீழ் பதிவு செய்துகொள்ள ஒரு முறை சலுகை வழங்கப்படும்.

2023 ஏப்ரல் 1]

- *எம்-சாண்ட் தயாரிக்கும் நிறுவனங்கள் கண்டிப்பாக தங்களது நிறுவனங்களில் தர பரிசோதனை ஆய்வகம் அமைத்து ஒவ்வொரு நாளும் தயாரிக்கப்படும் எம்-சாண்டின் தர பரிசோதனை செய்து, உரிய பதிவேடுகளில் பதிவு செய்திடல் வேண்டும். அப்பதிவேடுகள் புவியியல் மற்றும் சுரங்கத் துறை / பொதுப் பணித் துறையால் சரி பார்க்கப்படும்.*
- *எம்-சாண்ட் தயாரிக்கும் நிறுவனங்கள் தாங்கள் தயாரிக்கும் எம்-சாண்ட் பொருட்கள் மற்றும் தூய்மை செய்ய பயன்படுத்தப்படும் நீரின் தன்மையையும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை* National Accreditation Board for Testing and Calibration Laboratories (NABL) / *பொதுப் பணித் துறை / புவியியல் மற்றும் சுரங்கத் துறை / பல்கலைக் கழக ஆய்வகங்களில் கட்டாயமாக தர சோதனை செய்து அதன் அறிக்கையை பொதுப் பணித் துறை / புவியியல் மற்றும் சுரங்கத் துறை/ மாசுக் கட்டுபாடு வாரியத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.*
- *எம்-சாண்ட் பொருட்களின் தரத்தினை சரிபார்க்க குறிப்பிட்ட இடைவெளியில் சோதனைகள் மேற்கொள்ள பொதுப் பணித் துறை / புவியியல் மற்றும் சுரங்கத் துறை அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.*

9.0 மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் / சிறப்புத் திட்டங்கள் (Iconic Projects)

9.1 முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நூலகம்

3.6.2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் நினைவாக மதுரையில் சிறந்த சர்வதேச நூலகங்களுக்கு இணையாக பொது நூலகம் கட்டப்படும் என்று அறிவித்தார்.

மதுரையில் "கலைஞர் நினைவு நூலகம்" கட்டுவதற்கு பொது நூலக இயக்குனரகத்தின் தேவைகளின்படி ரூ.114 கோடிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, 2,00,250 சதுரடி பரப்பளவு கொண்ட தரைத் தளம் மற்றும் ஆறு தளங்களுடன் பிரம்மாண்டமான நூலகக் கட்டடம் கட்டுமானப் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன.

சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய நல்ல கற்றல் சூழலை உருவாக்கும் விதமாக, இந்த நூலகத்தில் பார்வையற்றோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான அரிய புத்தகங்கள் பிரிவு, போட்டித் தேர்வு புத்தகங்கள் பிரிவு, குழந்தைகள் புத்தகங்கள் பிரிவு, டிஜிட்டல் நூலகப் பிரிவுகள் என பல்வேறு பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. மின்தூக்கி, நகரும் படிக்கட்டுகள் மற்றும் சாய்தளம் போன்ற வசதிகள், வயதானவர்கள், குழந்தைகள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் நூலகக் கட்டடத்தின் அனைத்து தளங்களையும் அணுகுவதை எளிதாக்குகிறது.

9.2 அண்ணா நூற்றாண்டு நூலகம்

அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் 16.8.2008 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு சென்னை கோட்டூர்புரத்தில் பொதுப் பணித் துறை மூலம் கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இது உலகளவில் பாராட்டப்படும் தெற்காசியாவின் மிகப் பெரிய நூலகமாகும். இந்த நூலகம் சாதாரண மற்றும் ஏழை மாணவர்கள் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் நவீன வசதிகளுடன் கூடிய சர்வதேச தரத்தில் அமைந்துள்ளது. இந்த நூலகத்தில் பார்வையற்றோருக்கான பிரெய்லி புத்தகப் பிரிவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இந்த நூலகக் கட்டடத்தைப் புனரமைத்தல், புதுப்பித்தல் பணிகள் ரூ.32.48 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு நிறைவடைந்துள்ளன.

9.3 முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு நினைவிடம் அமைத்தல்

மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களுக்கு நினைவிடம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 24.8.2021 அன்று அறிவித்தார்கள். அதன்படி சென்னை காமராஜர் சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா நினைவக வளாகத்தில் 2.21 ஏக்கர் பரப்பில் நினைவிடம் ரூ.39 கோடி மதிப்பீட்டில் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2023 ஏப்ரல் 1]

9.4 சென்னை வள்ளுவர் கோட்டம் புனரமைப்பு பணிகள்

வள்ளுவர் கோட்டம் முழுவதும் திராவிட கட்டடக்கலை பிரதிபலிக்கும் வகையில் 1974-1976 ஆம் ஆண்டு அப்போதைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்டது.

பார்வையாளர்களுக்கு திருக்குறளின் பெருமையை வெளிப்படுத்தும் நோக்கத்துடன் வள்ளுவர் கோட்டத்தினை அதன் அசல் கட்டமைப்பு மாறாமல் நவீன வசதிகளுடன், புனரமைக்கும் பணி மேற்கொள்ளப்படும். புதிய நூலகம், கலந்துரையாடல் வசதிகள், ஒலி-ஒளி காட்சி, உணவகம் மற்றும் பொதுமக்களுக்கான பிற வசதிகளுடன் கலையரங்கம் நவீன முறையில் பொதுப் பணித் துறையால் புதுப்பிக்கப்படவுள்ளது.

9.5 எழுத்தாளர் திரு. கி. இராஜநாராயணன் அவர்களுக்கு நினைவகம்

புகழ்பெற்ற தமிழ் எழுத்தாளர் மற்றும் நாட்டுப் புறவியலாளரான திரு. கி. இராஜநாராயணன் அவர்களுக்கு நூலகத்துடன் கூடிய மணிமண்டபம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 3.6.2021 அன்று அறிவித்தார்கள். தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் உள்ள வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் 2,981 சதுரடி பரப்பளவில் நூலகத்துடன் கூடிய நினைவகம் ரூ.1.50 கோடி செலவில் கட்டும் பணி முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 2.12.2022 அன்று திறந்து வைக்கப்பட்டது.

9.6 சென்னை நந்தனத்தில் எம்.சி. ராஜா விடுதி வளாகத்தில் புதிய மாணவர் விடுதி கட்டும் பணி

சென்னை நந்தனத்தில் உள்ள எம்.சி. ராஜா கல்லூரி மாணவர் விடுதி வளாகத்தில் தற்போது காலியாக உள்ள இடத்தில் நவீன வசதிகளுடன் ரூ.44.50 கோடி செலவில் தரை தளம் மற்றும் 10 தளங்களில் 121 அறைகளுடன் 484 மாணவர்கள் தங்கும் வகையில் புதிய மாணவர் விடுதி கட்டடம் கட்டும் பணி செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

[*2023 ஏப்ரல் 1*

9.7 சென்னையில் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை

சென்னை, கிண்டி, கிங் நோய்த் தடுப்பு மருந்து மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை அமைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 3.6.2021 அன்று அறிவித்தார்கள்.

சென்னை, கிண்டியில், கிங் நோய் தடுப்பு மருந்து மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் ரூ.230 கோடி மதிப்பீட்டில் 1000 படுக்கைகள் வசதியுடன் கூடிய பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை அமைப்பதற்கு 4.89 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு தரைத்தளம் மற்றும் ஆறு தளங்களுடன் கூடிய 5,53,376 சதுரடி பரப்பளவில் அனைத்து வகையான வசதிகளுடன் அமைய உள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 21.3.2022 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு கட்டுமானப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

9.8 பேராசிரியர் க. அன்பழகன் அவர்களின் நினைவாக நூற்றாண்டு நுழைவாயில் வளைவு

பேராசிரியர் அன்பழகன் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி சென்னை, நுங்கம்பாக்கத்தில் உள்ள பள்ளிக் கல்வித் துறையின் டி.பி.ஐ. வளாகத்தினை “பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம்” எனப் பெயரிட்டு, அவ்வளாகத்தில் ரூ.85 இலட்சம் செலவில் பொதுப் பணித் துறையால் கட்டப்பட்டுள்ள பேராசிரியர் அன்பழகன் நூற்றாண்டு வளைவினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 19.12.2022 அன்று திறந்து வைத்தார்.

9.9 ஜல்லிக்கட்டு அரங்கம்

மதுரை மாவட்டம், கீழக்கரை கிராமத்தில் ஜல்லிக்கட்டு அரங்கம் கட்டப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 21.1.2022 அன்று அறிவித்தார்கள். அதன்படி, மதுரை மாவட்டம், கீழக்கரை கிராமத்தில் ரூ.44 கோடி மதிப்பீட்டில் 16 ஏக்கர் நிலப்பரப்பில் ஜல்லிக்கட்டு அரங்கம் கட்டும் பணி நடைபெறுகிறது.

ஜல்லிகட்டு அரங்கம், மூன்று அடுக்குகளுடன் 3700 பேர் அமரும் வகையிலும் மற்றும் முக்கிய பிரமுகர்கள் இருக்கைகள்,

2023 ஏப்ரல் 1]

நுழைவு வாயில், அருங்காட்சியகம், காளை கொட்டகை (Bull Shed), வாடிவாசல் அருகே காளைகள் நிற்கும் இடம் (Bull Burn), கால்நடை மருந்தகம், விரைவான முதலுதவி மற்றும் தொடர்ச்சியான மருத்துவ உதவி அளிக்கும் வகையில் துணை சுகாதார மையம் மற்றும் வீரர்கள், ஊடகவியலாளர்கள், பார்வையாளர்கள் போன்ற அனைவருக்கும் தேவையான அடிப்படை மற்றும் அத்தியாவசிய வசதிகளுடன் அமைக்கப்பட உள்ளது.

10.0 நினைவகங்கள் மற்றும் மணிமண்டபங்கள்

விடுதலை போராட்ட வீரர்கள், அறிஞர் பெருமக்கள் மற்றும் மாபெரும் தலைவர்கள் போன்றோரை நினைவு கொள்ளும் வகையில் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் நினைவிடங்கள்/ நினைவகங்கள் பொதுப் பணித் துறையால் அமைக்கப்பட்டு மற்றும் பராமரிக்கப்பட்டு வருகிறது.

புதிய அரசு பொறுப்பேற்ற பின்னர், நினைவகங்கள், சிலைகள், மணிமண்டபங்கள் கட்டுமானப் பணிகள் மற்றும் நினைவகங்கள் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் தொடர்புடைய ரூ.62.76 கோடி மதிப்பீட்டிலான 20 பணிகள் பொதுப் பணித் துறையால் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

தஞ்சாவூரிலுள்ள மாமன்னர் இராசராச சோழன் மணிமண்டபத்தில் ரூ.3.66 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்துதல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

11.0 அரசு கட்டடங்கள் பராமரிப்பு

11.1 பொதுப் பணித் துறைக்குச் சொந்தமானக் கட்டடங்கள் பராமரிப்பு

பொதுப் பணித் துறை கட்டடங்கள் மானிய கோரிக்கை எண் 39-ன்கீழ் 2023-2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில், மாண்புமிகு அமைச்சர்களின் அரசு மாளிகைகள், ஆய்வு மாளிகைகள், சுற்றுலா மாளிகைகள், பொதுப் பணித் துறை அலுவலகங்கள் மற்றும் அரசு அலுவலர் குடியிருப்புகள் ஆகியவற்றின் பராமரிப்பு மற்றும் பழுது பார்க்கும் பணிகளை மேற்கொள்ள ரூ.137 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

11.2 இதர துறைகளின் கட்டடங்கள்

ஆளுநர் மாளிகை, தலைமைச் செயலகம், உயர் நீதிமன்றம், மாவட்ட மற்றும் சார்பு நீதிமன்றக் கட்டடங்கள், உயர் நீதிமன்ற நீதியரசர்களின் அரசு மாளிகைகள், சட்டமன்ற உறுப்பினர் அலுவலகக் கட்டடங்கள், மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரிகள், ஆரம்ப மற்றும் துணை சுகாதார நிலையங்கள், பள்ளிகள், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை மற்றும் பதிவுத் துறை அலுவலகக் கட்டடங்கள் மற்றும் பிற அரசு கட்டடங்களின் பராமரிப்பு, பழுதுபார்க்கும் பணிகளுக்காக 2023-2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.482.20 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

12.0 துறை வாரியான கட்டடப் பணிகள்

12.1 வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் உள்ள தமிழ்நாடு பட்டு வளர்ச்சி பயிற்சி நிறுவனம் (TNSTI) குளிர்பதன சேமிப்புக் கட்டடம் கட்டும் பணி ரூ.2.40 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது.

12.2 கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை

நபார்டு வங்கி நிதி உதவியுடன் கால்நடை பராமரிப்புத் துறையின்கீழ் கால்நடை மருத்துவமனைகள், கால்நடை மருந்தகங்கள், கால்நடை சிகிச்சை மையம் மற்றும் கால்நடை நோய்ப் புலனாய்வு பிரிவு கட்டடங்கள் பொதுப் பணித் துறையினால் கட்டப்பட்டு வருகின்றன.

சேலம் மாவட்டம், தலைவாசல் கூட்டு ரோட்டில் ஒருங்கிணைந்த கால்நடை ஆராய்ச்சி மற்றும் விலங்கியல் அறிவியலுக்கான நவீன நிறுவனம் அமைப்பதற்காக மொத்தம் ரூ.196.86 கோடி மதிப்பீட்டிலான 10 பணிகளில், பிரதான பணிகள் முடிக்கப்பட்டு இதர உப பணிகள் நடைபெற்று வருகின்றன.

இவ்வளாகத்தில் ரூ.1.61 கோடி மதிப்பீட்டில் எல்லை சுற்றுச்சுவர் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

2023 ஏப்ரல் 1]

கால்நடை பராமரிப்பு, பால் வளம், மீன் வளம் மற்றும் மீனவர் நலத் துறையில் ரூ.154.26 கோடி மதிப்பீட்டில் 460 பணிகளில் கால்நடை மருந்தகங்கள், கால்நடை மருத்துவமனை, கால்நடை சிகிச்சை மையம் மற்றும் கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவு கட்டடங்கள் போன்ற கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ.47 கோடி மொத்த மதிப்பீட்டிலான 144 கட்டுமானப் பணிகளில், ரூ.29.95 கோடி மதிப்பிலான 111 பணிகள் நடைபெற்று வருகின்றன. ரூ.17 கோடி மதிப்பீட்டிலான 33 கட்டுமானப் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

சென்னை வேப்பேரியில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரியின் பாரம்பரிய நிர்வாகக் கட்டடத்தினை பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் ரூ.4.64 கோடி மதிப்பீட்டில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

12.3 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

நபார்டு திட்டத்தின்கீழ் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் மாணவர்களுக்கான கள்ளர் தொடக்க நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு சூரிய ஆற்றல் அமைப்புடன் கூடிய விடுதிக் கட்டடங்கள், கூடுதல் வகுப்பறைகள், கூடுதல் கழிப்பறைகள், சுற்றுச்சுவர் மற்றும் ஆழ்துளைக் கிணறு கட்டுமானப் பணிகள் மற்றும் 4 இடங்களில் வக்ஃபு வாரியம் மண்டல அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணிகள் ரூ.233.64 கோடி மதிப்பிலான 621 கட்டுமான பணிகளில், 483 பணிகள் ரூ.134 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன. 117 பணிகள் ரூ.76.42 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. ரூ.23.17 கோடி மதிப்பீட்டில் எஞ்சிய 21 பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

12.4 கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

கூட்டுறவு வங்கி, ஒருங்கிணைந்த கூட்டுறவு பெருந்திட்ட வளாகம் மற்றும் கூட்டுறவு பயிற்சி நிறுவனத்தின் கட்டுமானப் பணிகள் பயன்பாட்டுத் துறையின் கோரிக்கையின் பேரில் பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்படுகின்றன.

சென்னை சாலிகிராமத்தில் ரூ.7.30 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு கூட்டுறவு கூட்டமைப்பிற்கான வளாகத்தில் அலுவலகம்

மற்றும் கிடங்கு கட்டும் பணி மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள ஆத்தூர் வட்டத்தில் ரூ.75.75 கோடி மதிப்பீட்டில் புதிய கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டும் பணி ஆகிய இரண்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டத்தில் உள்ள மன்னவனூர் கிராமத்தில் தேசிய அளவிலான கூட்டுறவு ஆய்வுகள், ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கு ரூ.126 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டும் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

12.5 வணிக வரி மற்றும் பதிவுத் துறை

வணிகவரி அலுவலகங்கள், ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகங்கள், ஒருங்கிணைந்த பதிவுத் துறை அலுவலகங்கள் மற்றும் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் கட்டுமானம் மற்றும் அவற்றின் பராமரிப்புப் பணிகள், பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடம், பதிவுத் துறையின் பாரம்பரியக் கட்டடத்தினைப் புதுப்பிக்கும் பணி, ஒருங்கிணைந்த சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி, ஒருங்கிணைந்த பதிவுத் துறை அலுவலக வளாகம் மற்றும் துணைப் பதிவுத் துறைத் தலைவர் முகாம் அலுவலகக் கட்டடம், மாவட்ட பதிவாளர் அலுவலகம் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த பதிவுத் துறை அலுவலகம் கட்டுதல் போன்ற ரூ.114.88 கோடி மதிப்பீட்டிலான 30 கட்டட பணிகளில், ரூ.28.61 கோடி மதிப்பீட்டிலான 11 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன, ரூ.83.55 கோடி மதிப்பீட்டிலான 17 பணிகள் நடைபெற்று வருகின்றன. ரூ.2.72 கோடி மதிப்பீட்டிலான 2 பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

12.6 சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும், வனத் துறை சார்ந்த கட்டடங்களான, வனத் துறை தலைமை அலுவலகம், வன விலங்குகள் ஆய்வகம் மற்றும் சர்வதேச தரநிலை விடுதி (ஆராய்ச்சி மற்றும் கல்வி) போன்ற கட்டுமானப் பணிகள் பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சுற்றுச் சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறையின் சார்பாக ரூ.38.35 கோடி மதிப்பீட்டில் 2 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும் சேலம் மாவட்டம்,

2023 ஏப்ரல் 1]

தளவாய்ப்பட்டியில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம் மற்றும் ஆய்வகக் கூடம் கட்டும் பணி ரூ.6.42 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது.

12.7 மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் துறை

கள்ளக்குறிச்சி, திருவள்ளூர், கிருஷ்ணகிரி மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் உள்ள புதிய மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக் கட்டடங்கள் ரூ.662.98 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

அரியலூர், நாமக்கல் மற்றும் திண்டுக்கல், ஆகிய மருத்துவமனைக் கட்டடங்கள் ரூ.410.87 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டது.

திருப்பூர், நாகப்பட்டினம் மற்றும் இராமநாதபுரம் புதிய மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக் கட்டடங்கள் ரூ.408.76 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் உதகமண்டலம் புதிய அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.461.18 கோடி மதிப்பீட்டில் மருத்துவமனை, கல்லூரி மற்றும் குடியிருப்புக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

ஜப்பான் நாட்டு நிதி உதவியுடன் சர்வதேசத் தரத்தில் 3 புதிய மூன்றாம் நிலை சிகிச்சை மருத்துவமனை மற்றும் 4 புதிய இரண்டாம் நிலை சிகிச்சை மருத்துவமனைக் கட்டடங்கள் முறையே சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருவள்ளூர், சேலம், திருப்பூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் ரூ.615 கோடி மதிப்பீட்டில் கட்டுமானப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன.

பிற மருத்துவப் பணிகள்

திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் கன்னியாகுமரி மருத்துவக் கல்லூரிகளில் சில கட்டடங்கள் கட்டும் பணி, மதுரை மருத்துவக் கல்லூரியில் பயிலகக் கட்டடம் மற்றும் செவிலியர் குடியிருப்புக் கட்டடம், சென்னை எழும்பூரில் உள்ள மண்டல கண் மருத்துவ நிலையம் மற்றும் அரசு கண் மருத்துவமனைக்கான இருநூற்றாண்டு கட்டடம் போன்ற கட்டுமானப் பணிகள், செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் உலகத்தரம்

வாய்ந்த சர்வதேச யோகா மற்றும் இயற்கை மருத்துவ அறிவியல் மையக் கட்டடம் கட்டுதல் ஆகிய பணிகள் ரூ.341.46 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளன.

ஈரோட்டில் அரசு தலைமை மருத்துவமனையில் உயர் சிறப்பு மருத்துவமனைக் கட்டடம், புதுக்கோட்டையில் புதிய அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக் கட்டடம் மற்றும் சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள அரசு கஸ்தூரிபா காந்தி மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் ஏற்கெனவே உள்ள (G+3) தளத்தின் மேல் கூடுதல் தளங்கள் அமைக்கும் பணிகள் ரூ.137.35 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

12.7.1 தேசிய நலவாழ்வு குழுமம் (National Health Mission)

தமிழ்நாட்டில், தேசிய நலவாழ்வு குழுமத்தின் நிதியின்கீழ் ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப் பிரிவு கட்டடங்கள், ஒருங்கிணைந்த அவசர பேறுகாலக் குழந்தைகள் நலப் பிரிவு, பச்சிளங் குழந்தைகள் நல மையம், செவிலியர் குடியிருப்பு, புறநோயாளிகள் பிரிவு மற்றும் அவசரகால சிகிச்சைப் பிரிவு கட்டடங்கள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

19 அரசு மருத்துவமனைகளை ரூ.856.85 கோடி மதிப்பீட்டில் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்துவதற்கு கூடுதல் கட்டடம் கட்டுதல், 6 மருத்துவமனைகளின் கட்டமைப்புகளை மாவட்ட மருத்துவமனைகளுக்கு இணையாக ரூ.162 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்துதல், 12 மாவட்ட அரசு மருத்துவமனைகளில் ஒருங்கிணைந்த பொது சுகாதார ஆய்வகம் ரூ.15 கோடி மதிப்பீட்டில் அமைத்தல், 21 மருத்துவமனைகளில் புதிய தாய் சேய் நலக் கட்டடம் ரூ.251.34 கோடி மதிப்பீட்டில் அமைத்தல் மற்றும் 10 அரசு மருத்துவமனைகளில் அவசரகால சிகிச்சை பிரிவு கட்டடங்கள் ரூ.253.80 கோடி மதிப்பீட்டில் அமைத்தல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

சென்னை கீழ்ப்பாக்கத்தில் உள்ள மனநல மருத்துவ நிலையத்தில் ரூ.35 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு மனநல மற்றும் நரம்பியல் நிலையத்தின் (TNIMHANS) ஒப்புயர்வு மையக் கட்டடம் கட்டும் பணி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 22.12.2022 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் செயலாக்கத்தில் உள்ளன.

2023 ஏப்ரல் 1]

25 அரசு மருத்துவமனைகளில் பச்சிளங் குழந்தைகளின் செவித்திறன் கண்டறிவதற்காக, ஒலி புகா அறை அமைக்கும் பணி ரூ.3 கோடி மதிப்பீட்டிலும் மதுரை, அரசு இராஜாஜி மருத்துவமனையில் புதிய குழந்தைகள் பிரிவு கட்டடம் கட்டும் பணி ரூ.20 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்பட உள்ளன.

12.7.2. தமிழ்நாடு சுகாதார அமைப்பு சீர்திருத்தத் திட்டம் (Tamil Nadu Health System Reform Program)

காஞ்சிபுரம் மாவட்டம், காரப்பேட்டை அரசு அறிஞர் அண்ணா புற்றுநோய் மருத்துவமனையில் ரூ.118.46 கோடி மதிப்பீட்டில் புற்றுநோய் ஒப்புயர்வு மையத்திற்கு (தரை மற்றும் இரண்டு தளங்களுடன்) கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது. மேலும், மூன்றாம், நான்காம் மற்றும் ஐந்தாம் தளங்கள் கட்டும் பணிகள் ரூ.100 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

சென்ன –கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புதிய கட்டடம் கட்டும் பணி ரூ.125 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

சென்னை பெரியார் நகர் அரசு வட்டார மருத்துவமனையினை பலப்படுத்தும் பணிகள் மற்றும் புதிய கட்டடம் கட்டும் பணிகள் ரூ.55 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

சென்னை-ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில், நரம்பியல் பிரிவு கட்டடம் கட்டும் பணிகள் ரூ.60 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

உத்திரமேரூர், திருப்பத்தூர், சாத்தூர், விருதுநகர், வந்தவாசி, செங்கம், பாலக்கோடு, விருத்தாச்சலம், ஏற்காடு, களக்காடு, இராஜதானி, உத்தமபாளையம், பெரியகுளம் மற்றும் திருமயம் ஆகிய இடங்களில் மருத்துவமனைக் கட்டடங்கள் கட்டும் பணிகள் ரூ.45.32 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

12.7.3 பிரதான் மந்திரி ஜன் விகாஸ் காரியக்ரம் யோஜனா (PMJVK)

வேலூர், வாணியம்பாடி, ஆம்பூர், திருச்செந்தூர், காயல்பட்டினம், தூத்துக்குடி, தென்காசி, மேலப்பாளையம் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் மருத்துவமனைகள் கட்டும் பணிகள் ரூ.583.42 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

12.8 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

மாவட்ட நகர ஊரமைப்பு இயக்ககத்திற்காக திருவள்ளூர், காஞ்சிபுரம், அரியலூர், தஞ்சாவூர், விழுப்புரம், கரூர், நாகப்பட்டினம், நாமக்கல், பெரம்பலூர், திண்டுக்கல், புதுக்கோட்டை, திருவாரூர், இராமநாதபுரம், தென்காசி, தேனி, திருவண்ணாமலை, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் ரூ.60 கோடி மதிப்பீட்டிலான மாவட்ட நகர மற்றும் கிராம திட்டமிடல் அலுவலகக் கட்டடங்களின் கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

12.9 மனிதவள மேலாண்மைத் துறை

மனிதவள மேலாண்மைத் துறையில் ஈரோடு மாவட்டம், பவானிசாகர் குடிமைப் பணி பயிற்சி மைய வளாகத்தில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணி ரூ.10 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன. சென்னை, அண்ணா நிர்வாக பணியாளர் கல்லூரி வளாகத்தில் கூடுதல் பணியாளர் குடியிருப்பு கட்டுதல் பணி ரூ.3.48 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

12.10 தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை

புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் மொத்தம் ரூ.33 கோடி மதிப்பீட்டிலான 4 கட்டடக் கட்டுமானப் பணிகளில், ரூ.2 கோடி மதிப்பீட்டில் 1 பணி நடைபெற்று வருகின்றது மற்றும் ரூ.31 கோடி மதிப்பீட்டில் 3 பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

12.11 நீதித் துறை

*நீதித் துறை சார்ந்த அனைத்து வகையான கட்டடப் பணிகளான நீதிமன்றக் கட்டடங்கள் / ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள், குடியிருப்புக் கட்டடங்கள், பாதிக்கப்படக்கூடிய சாட்சிகள் மற்றும் சிறார் சாட்சிகள் (*Vulnerable Witness and Child Deposition Centre Buildings*) விசாரிக்கும் கட்டடம், சிறார்களுக்கு எதிரான குற்றங்களை விசாரிக்கும் கட்டடம் (*POCSO Building*) மற்றும் மகளிர் நீதிமன்றக் கட்டடங்கள் (*Mahila Court Buildings*) ஆகியவை பொதுப் பணித் துறையினால் கட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.*

2023 ஏப்ரல் 1]

ரூ.972.23 கோடி மதிப்பீட்டிலான ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகக் கட்டடங்கள் மற்றும் நீதியரசர்கள் குடியிருப்புக் கட்டடங்கள் கட்டுவதற்கான 50 கட்டுமானப் பணிகளில், 14 இடங்களில் ரூ.139.24 கோடி மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ.236.40 கோடி மதிப்பீட்டில் 26 பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் 10 இடங்களில் ரூ.596.59 கோடி மதிப்பீட்டில் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

மதுரையில் மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் ரூ.166 கோடி மதிப்பீட்டிலான கூடுதல் நீதிமன்றக் கட்டடங்கள் கட்டும் பணிக்கு மாண்புமிகு இந்திய தலைமை நீதியரசர் அவர்களால் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் 25.3.2023 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. மயிலாடுதுறையில் உள்ள மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களாலும் மற்றும் மயிலாடுதுறையிலுள்ள தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் ஒன்றிய அரசின் மாண்புமிகு அமைச்சர் சட்டம் மற்றும் நீதி அவர்களாலும் அதே நாளன்று திறந்து வைக்கப்பட்டது.

12.12 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறைக்குட்பட்ட ஒருங்கிணைந்த தொழிலாளர் அலுவலகங்கள், தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் விடுதிகள் கட்டுதல் மற்றும் அதன் பராமரிப்புப் பணிகள் பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை – 4.0 தொழிற்சாலை தரத்திற்கு நவீனமயமாக்கும் கட்டடப் பணிகளில், 69 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களின் பணிகள் பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையில் ரூ.438.09 கோடி மதிப்பீட்டிலான 115 கட்டுமானப் பணிகளில், 18 பணிகள் ரூ.70.41 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன. ரூ.311.48 கோடி மதிப்பீட்டிலான 80 பணிகள் நடைபெற்று வருகின்றன. ரூ.56.20 கோடி மதிப்பீட்டிலான 17 கட்டுமானப் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

12.13 சட்டத் துறை

ரூ.462.68 கோடி மதிப்பீட்டில் 11 சட்டக் கல்லூரிகள் மற்றும் விடுதிகள் கட்டும் பணிகளில், ரூ.93.71 கோடி மதிப்பீட்டில் 2 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ.310.55 கோடி மதிப்பீட்டில் 4 பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் 5 இடங்களில் ரூ.58.42 கோடி மதிப்பீட்டில் பணிகள் விரைவில் செயலாக்கத்திற்குக் கொண்டு வரப்படும்.

12.14 பொதுப் பணித் துறை

பொதுப் பணித் துறையில் 75 கட்டுமானப் பணிகளின் மதிப்பீடு ரூ.562.75 கோடி, அதில் ரூ.24.77 கோடி மதிப்பீட்டில் 17 பணிகள் முடிக்கப்பட்டன. 36 பணிகள் ரூ.318.42 கோடியில் நடைபெற்று வருகின்றன. 22 பணிகள் ரூ.219.56 கோடியில் மேற்கொள்ளப்படவுள்ளன.

முடிக்கப்பட்ட பணிகளின் விவரங்கள் :

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
1.	*மதுரை தல்லாகுளம் பொதுப் பணித் துறை வளாகத்தில் உபகோட்ட அலுவலகக் கட்டடம் கட்டும் பணி*	*0.75*
2.	*திண்டுக்கல்லில் உபகோட்ட அலுவலகக் கட்டடம் கட்டும் பணி*	*0.45*
பாரம்பரியக் கட்டடங்கள் – பாதுகாத்தல், புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைத்தல் பணிகள்		
3.	*தஞ்சாவூர் கல்லணை கால்வாய் கோட்ட செயற்பொறியாளர் குடியிருப்பு*	*1.23*
4.	*மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்*	*2.47*
5.	*விருதுநகர் மாவட்டம், பாளையம்பட்டியில் உள்ள மாவட்ட கல்வி நிலையம் மற்றும் பயிற்சி மையம்*	*2.20*

2023 ஏப்ரல் 1]

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
6.	கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், திருவட்டாறில் உள்ள பாரம்பரிய பயணியர் மாளிகை	0.51
7.	திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசியில் உள்ள உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றக் கட்டடம்	0.82
8.	திருச்சிராப்பள்ளி, முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்ற கட்டடம்	1.34
9.	இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் உள்ள பழைய உரிமையியல் நீதிமன்ற கட்டடம் மற்றும் சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் உள்ள உரிமையியல் நீதிமன்ற கட்டடம்	3.05
10.	தேனி மாவட்டம், பெரியகுளத்தில் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தின் அருகில் உள்ள சார்பு குற்றவியல் நடுவர் நீதிமன்ற கட்டடம்	0.80
11.	தஞ்சாவூர் அரண்மனையின் மூத்த இளவரசர் குடியிருப்பு	2.45
12.	கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், புலியூர்குறிச்சி, உதயகிரி கோட்டை அருகில் உள்ள பயணியர் மாளிகை	0.85
13.	நாகர்கோயிலில் உள்ள சேதுலட்சுமிபாய் ஆங்கிலப் பள்ளி	4.43
14.	புதுக்கோட்டை மாவட்டம், கீரனூரில் வட்டாட்சியர் அலுவலகம்	0.52
15.	புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடியில் வட்டாட்சியர் அலுவலகம்	0.97

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
16.	புதுக்கோட்டையில் மாவட்ட ஆட்சியர் குடியிருப்பு	0.58
17.	கொடைக்கானலில் உள்ள கோஹினூர் ஷேக் அப்துல்லா மாளிகை	1.35

நடைபெற்று வரும் பணிகளின் விவரம் :-

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
1.	சென்னை, சேப்பாக்கம் பொதுப் பணித் துறை வளாகத்தில் தலைமைப் பொறியாளர், சென்னை மண்டலம் அலுவலகம் கட்டும் பணி	23.05
2.	நீலகிரி மாவட்டம், கோத்தகிரியில் அரசு அலுவலர்களுக்கான 16 குடியிருப்புகள் கட்டும் பணி	5.21
3.	சென்னை, சைதாப்பேட்டை தாடண்டர் நகரில் அரசு பணியாளர்கள் குடியிருப்பு வளாகத்தில் சாலை மற்றும் பிற கூடுதல் வசதிகள் ஏற்படுத்துதல்	23.49
4.	சென்னை சைதாப்பேட்டை தாடண்டர் நகரில் 190 ‘பி வகை’ குடியிருப்புகள் கட்டும் பணி	88.49
5.	திருப்பத்தூரில் புதிய சுற்றுலா மாளிகை கட்டும் பணி	6.98
6.	இராணிப்பேட்டையில் புதிய சுற்றுலா மாளிகை கட்டும் பணி	6.91

2023 ஏப்ரல் 1]

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
7.	செங்கல்பட்டில் புதிய சுற்றுலா மாளிகை கட்டும் பணி	6.79
8.	நாகப்பட்டினத்தில் புதிய சுற்றுலா மாளிகை கட்டும் பணி	3.68
9.	திருச்சிராப்பள்ளியில் தலைமைப் பொறியாளர், உதவி செயற் பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர்களுக்கான குடியிருப்புகள் கட்டும் பணி	2.84
10.	திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறில் புதிய கூடுதல் சுற்றுலா மாளிகை கட்டும் பணி	3.26
11.	திருவண்ணாமலை மாவட்டம், ஜமுனாமரத்தூரில் புதிய கூடுதல் சுற்றுலா மாளிகை கட்டும் பணி	2.99
12.	விருதுநகர் மாவட்டம், சாத்தூரில் புதிய சுற்றுலா மாளிகை கட்டும் பணி	2.43
13.	கடலூர் மாவட்டம், கடலூரில் 3 உபகோட்ட அலுவலகங்கள் மற்றும் 5 பிரிவு அலுவலகங்கள் உள்ளிட்ட கோட்ட அலுவலகம் கட்டும் பணிகள்	4.43
14.	சென்னை மாவட்டம், தண்டையார்பேட்டை பொதுப் பணி பணிமனை பணியாளர் குடியிருப்புகள் 9 பிளாக்குகளில் 54 வீடுகளை புனரமைக்கும் பணிகள்	1.33
15.	தூத்துக்குடியில் பொதுப் பணித் துறை வளாகத்தில் உபகோட்ட அலுவலகம் கட்டும் பணி	0.40

[2023 ஏப்ரல் 1

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
16.	திருவாரூர் மாவட்டம், திருவாரூரில் பொதுப் பணித் துறை பொறியாளர்களுக்கான புதிய குடியிருப்புகள் கட்டும் பணி	0.99
17.	சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் உபகோட்ட அலுவலகம் கட்டும் பணி	0.93
18.	சென்னை தரமணியில் பொதுப் பணித் துறை வளாகத்தில் மழைநீர் வடிகால் மேம்படுத்தும் பணிகள், உட்புற சாலைகள் மற்றும் சுற்றுச் சுவர் பழுதுபார்த்தல் மற்றும் பிற மேம்படுத்தும் பணிகள்	4.68
19.	சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் உள்ள பொதுப் பணித் துறை அலுவலகப் பிரிவுகளுக்கான இருக்கை வசதிகள் மேம்படுத்துதல் மற்றும் பிற நவீனப்படுத்தும் பணிகள்	0.82
20.	மதுரையில் சுற்றுலா மாளிகை பிரதானக் கட்டடம் மற்றும் கூடுதல் சுற்றுலா மாளிகை மேம்படுத்தும் பணி	4.45
21.	திருவண்ணாமலையில் புதிய கூடுதல் சுற்றுலா மாளிகை கட்டும் பணி	8.32
22.	கள்ளக்குறிச்சியில் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உபகோட்ட அலுவலகக் கட்டடம் கட்டும் பணி	2.73
23.	வேலூரில் புதிய சுற்றுலா மாளிகை கட்டடம் கட்டும் பணி	7.63

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
24.	மண்டல அலுவலகங்களுக்குத் தேவையான பொறியியல் உபகரணங்கள் (Scientific Instruments) மற்றும் தரக்கட்டுப்பாடு கோட்டங்களின் ஆய்வக உபகரணங்கள் கொள்முதல் செய்தல்	10.00
பாரம்பரியக் கட்டடங்கள் — பாதுகாத்தல், புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்பு பணிகள்		
25.	சென்னை, சேப்பாக்கம் ஹுமாயூன் மஹால்	41.12
26.	சென்னை, பழைய தங்க சாலையில் உள்ள அரசு அச்சகம்	13.99
27.	திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள பழைய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் (இராணி மங்கம்மாள் அரண்மனை)	9.40
28.	திருவண்ணாமலை மாவட்டம், செய்யாரில் உள்ள உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் (பழைய நீதிமன்றக் கட்டடம்)	1.38
29.	கன்னியாகுமரி மாவட்டம், பாலாமோர் ஆய்வு மாளிகை	0.29
30.	கோயம்புத்தூரில் உள்ள ஆளுநர் மாளிகை (பழைய வனத் துறை அலுவலகம்)	10.25
31.	புதுக்கோட்டையில் தற்போதைய மாவட்ட ஆட்சியர் அலுவலகம்	1.46
32.	புதுக்கோட்டை மாவட்டம், திருமயத்தில் தற்போதைய வட்டாட்சியர் அலுவலகம்	3.43

[2023 ஏப்ரல் 1

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
33.	மதுரை மாவட்டம், பெரியார் வைகை வடிநில வட்டம், நீர்வளத் துறை கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம் (இராணி மங்கம்மாள் அரண்மனை)	1.98
34.	கடலூரில் உள்ள ஆட்சியர் முகாம் அலுவலகக் கட்டடம் (கிளைவ் ஹவுஸ்)	3.13
35.	நாகப்பட்டினத்தில் உள்ள மாவட்ட நீதிமன்றம் மற்றும் உரிமையியல் நீதிமன்றம்	7.91
36.	நாகர்கோவிலில் உள்ள பழமை வாய்ந்த கூட்டுறவு வங்கி	1.25

தொடங்கப்பட உள்ள பணிகளின் விவரம் :-

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ. கோடியில்)
1.	மயிலாடுதுறையில் புதிய சுற்றுலா மாளிகை கட்டும் பணி	6.48
2.	சென்னை, சேப்பாக்கம் பொதுப் பணித் துறை வளாகத்தில் பணிபுரியும் மகளிருக்கான உணவருந்தும் கூடம் கட்டும் பணி	0.67
3.	கள்ளக்குறிச்சியில் புதிய சுற்றுலா மாளிகை கட்டும் பணி	6.99
4.	சென்னை, சைதாப்பேட்டையில் உள்ள தாடண்டர் நகரில் அரசு பணியாளர்களுக்கான 190 ”சி” வகை அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டும் பணி	99.98

2023 ஏப்ரல் 1]

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ. கோடியில்)
5.	திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடியில் புதிய பொதுப் பணித் துறை ஆய்வு மாளிகை கட்டும் பணி	*1.70*
பாரம்பரியக் கட்டடங்கள் — பாதுகாத்தல், புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்புப் பணிகள்		
6.	*மதுரை மாவட்டம், சோழவந்தான் அரசன் சண்முகனார் அரசினர் மேல்நிலைப் பள்ளி*	*5.50*
7.	*இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் முகாம், கலோனியல் மாளிகை*	*2.20*
8.	தேனி மாவட்டம், பெரியகுளத்தில் உள்ள பழைய மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்	*1.80*
9.	*கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் கைரேகை பதிவு மற்றும் பொருளாதார குற்றப் பிரிவு அலுவலகம்*	*1.21*
10.	கோயம்புத்தூரில் உள்ள CCMA அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளி	*7.60*
11.	*ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் உள்ள பழைய குற்றவியல் நடுவர் நீதிமன்றம்*	*1.59*
12.	சென்னை, சேப்பாக்கம் வளாகத்தில் உள்ள பழைய சம்பளம் மற்றும் கணக்கு அலுவலகம் (கிழக்கு) மற்றும் பழைய வேளாண்மைத் துறை பதிவுரு அலுவலகம்	*23.08*
13.	சென்னை, கிண்டியில் உள்ள கிங் நோய் தடுப்பு மருந்து மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் உள்ள பிரதான நிர்வாக அலுவலகக் கட்டடம்	*8.30*

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ. கோடியில்)
14.	திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி ஜாகீர் பூசிமலை குப்பம் அரண்மனை	11.54
15.	புதுக்கோட்டை மாவட்டம், திருமயத்தில் தற்போது ஸ்ரீ சத்தியமூர்த்தி மேல்நிலைப் பள்ளி	2.32
16.	தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் அரண்மனை சம்பாஜி ராஜா போஸ்லே குடியிருப்பு பகுதி	3.86
17.	தஞ்சாவூர் அரண்மனை மங்கல ராஜே மேடிக் குடியிருப்பு பகுதி	3.50
18.	தஞ்சாவூர் அரண்மனை மூத்த இளவரசர் குடியிருப்பு (அருங்காட்சியக பகுதி) பகுதி	2.50
19.	திருச்சிராப்பள்ளி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் உள்ள துணை நீதிமன்றத்திற்கான பழைய ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடம்	3.85
20.	திருச்சிராப்பள்ளி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் உள்ள பழைய முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்ற கட்டடம்	4.70
21.	சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், இராஜாஜி ஹால்	17.00
22.	கடலூரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் உள்ள பழைய மாவட்ட நீதிமன்றக் கட்டடம்	3.19

12.15 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

வருவாய்த் துறைக்குட்பட்ட கட்டடங்களான மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், வருவாய் கோட்டாட்சியர்

2023 ஏப்ரல் 1]

அலுவலகங்கள் மற்றும் குடியிருப்புகள், வட்டாட்சியர் அலுவலகங்கள், வருவாய் ஆய்வாளர் அலுவலகங்கள், கிராம நிர்வாக அலுவலகம் மற்றும் குடியிருப்புகளின் கட்டுமானம் மற்றும் அதன் பராமரிப்புப் பணிகள் பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் ரூ.1023.34 கோடி மதிப்பீட்டிலான 332 கட்டுமானப் பணிகளில் 224 பணிகள் ரூ.476.53 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன. 64 பணிகள் ரூ.408.75 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. ரூ.138.06 கோடி மதிப்பீட்டில் 44 பணிகள் தொடங்கப்பட உள்ளன.

12.16 பள்ளிக் கல்வித் துறை

“கல்வி சிறந்த தமிழ்நாடு” என்ற மகாகவி சுப்ரமணிய பாரதியாரின் செந்தமிழ் வரிகளுக்கேற்ப தமிழ்நாடு கல்வியில் சிறந்து விளங்குகின்றது. அனைத்து சமூதாயத்தினருக்கும் உலகத்தரம் வாய்ந்த கல்வியை இலவசமாக வழங்குவதில் தமிழ்நாடு அரசு தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது.

நன்கு காற்றோட்டமான வகுப்பறைகள், அவசரகால வெளியேறும் வழி, நவீன அறிவியல் ஆய்வகங்கள், பொது அறிவு மற்றும் கலாச்சாரத்தை வளர்க்கும் நூலகங்கள், அதிநவீன கணினி அறைகள், கலை மற்றும் கைவினைப் பொருட்கள் அறைகள் மற்றும் பள்ளி வளாகத்தின் பாதுகாப்புச் சுவர்கள் போன்ற பணிகள் தமிழ்நாட்டில் உள்ள அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி வளாகங்களில் பொதுப் பணித் துறையால் கட்டப்பட்டு வருகின்றன.

பள்ளிக் கல்வித் துறையில் மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் மொத்தம் ரூ.1294.36 கோடி மதிப்பீட்டிலான 3600 கட்டுமானப் பணிகளில், ரூ.258 கோடி மதிப்பீட்டிலான 2994 பணிகள் முடிவடைந்துள்ளன. 186 பணிகள் ரூ.214.64 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. ரூ.821.72 கோடி மதிப்பீட்டில் 420 பணிகள் விரைவில் மேற்கொள்ளப்பட உள்ளன.

12.17 சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை

பணிக்குச் செல்லும் மகளிர் தங்கும் விடுதிகள், சமூக நலத் துறையின் அலுவலகக் கட்டடங்கள், சிறார்களுக்கான கூர்நோக்கு

இல்லங்கள், சீர்திருத்த இல்லங்கள் ஆகிய கட்டடங்களின் கட்டுமானம் மற்றும் பராமரிப்புப் பணிகள் பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறையில் ரூ.68.25 கோடி மதிப்பீட்டிலான 7 கட்டுமானப் பணிகளில், ரூ.16.50 கோடி மதிப்பீட்டிலான 3 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ.51.75 கோடி மதிப்பீட்டிலான 4 பணிகள் நடைபெற்று வருகின்றன.

12.18 எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் ரூ.39.99 கோடி மதிப்பீட்டிலான 8 பணிகளில் திருச்சி, மதுரை, சேலம் மற்றும் விருத்தாசலத்தில் உள்ள அரசு அச்சகத்தின் தொழில்நுட்பப் பிரிவுக் கட்டடத்தில் கசிந்த கூரையை சரி செய்யும் சிறப்புப் பணிகள் ரூ.3.31 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன. சென்னை அரசு மத்திய அச்சகத்தில் அமைந்துள்ள கோமாரி கட்டடத்தில் புதுப்பித்தல் மற்றும் சிறப்பு பழுதுபார்ப்புப் பணிகள் ரூ.0.94 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. சென்னையில் அரசு எழுதுபொருள் அலுவலகக் கட்டடத்தில் ரூ.1.25 கோடி மதிப்பீட்டில் புதுப்பித்தல் மற்றும் சிறப்பு பழுதுபார்க்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. ரூ.34.49 கோடி மதிப்பீட்டில் சென்னை, தண்டையார்பேட்டையில் 96 பணியாளர் குடியிருப்புகள் கட்டும் பணி துவங்கப்படவுள்ளது.

12.19 தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைக்குட்பட்ட நினைவகங்கள், நினைவுச் சின்னங்கள், சிலைகள் ஆகியவை பொதுப் பணித் துறையால் கட்டப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

2021-2022 மற்றும் 2022-2023 ஆகிய ஆண்டுகளில் 6 நினைவகங்கள், 16 சிலைகள் மற்றும் 5 மணிமண்டபங்கள் கட்டுமானப் பணிகள், 2 நினைவு இல்லங்கள் பழுதுபார்த்தல் பணிகள் மற்றும் 3 மணிமண்டபங்கள் மற்றும் 2 நினைவகங்கள் புனரமைத்தல் பணிகள் ரூ.74.63 கோடி மதிப்பீட்டில் பொதுப் பணித் துறையால் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 1]

12.20 சுற்றுலா, பண்பாடு மற்றும் சமய அறநிலையத் துறை

அரசு இசைப் பள்ளிகள், அருங்காட்சியகங்கள், முக்கிய திருக்கோயில்களில் பக்தர்கள் தங்கும் விடுதிகள், திருமண மண்டபங்கள் மற்றும் அரங்கங்கள் ஆகியவை பொதுப் பணித் துறையால் கட்டப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

சுற்றுலா, பண்பாடு மற்றும் சமய அறநிலையத் துறையில் ரூ.228.43 கோடி மதிப்பீட்டிலான 30 கட்டுமானப் பணிகளில், ரூ.26.89 கோடி மதிப்பீட்டிலான 6 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ.70.33 கோடி மதிப்பீட்டிலான 12 பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் ரூ.131.21 கோடி மதிப்பீட்டிலான 12 பணிகள் விரைவில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

12.21 போக்குவரத்துத் துறை

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களுக்கும் போக்குவரத்துத் துறைக்குத் தேவையான மண்டல அலுவலகம், ஓட்டுநர் சோதனைத் தடம், மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் போன்ற அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணி பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

போக்குவரத்துத் துறையில் மொத்தம் ரூ.10.58 கோடி மதிப்பீட்டில் 3 கட்டடங்கள் கட்டும் பணிகளில், ரூ.8.16 கோடி மதிப்பீட்டில் 2 பணிகள் நடைபெற்று வருகின்றன. திருவள்ளூர் மாவட்டத்தில் ரூ.2.42 கோடி மதிப்பீட்டில் வட்டாரப் போக்குவரத்து அலுவலக அலகு கட்டடம் கட்டும் பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

12.22 கருவூலம் மற்றும் கணக்குத் துறை

கருவூலம் மற்றும் கணக்குத் துறைக்கு உட்பட்ட ஒருங்கிணைந்த நிதி அலுவலகங்கள், சார் கருவூலங்கள் ஆகிய அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணி மற்றும் அதன் பராமரிப்புப் பணிகள் பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கருவூலம் மற்றும் கணக்குத் துறையில் ரூ.8.11 கோடி மதிப்பீட்டிலான 9 கட்டுமானப் பணிகளில் ரூ.2.43 கோடி மதிப்பீட்டிலான 3 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ.5.68 கோடி மதிப்பீட்டிலான 6 பணிகள் நடைபெற்று வருகின்றன.

12.23 மாற்றுத் திறனாளிகள் நலத் துறை

மாற்றுத் திறனாளிகள் நலத் துறையில் சேலம் மாவட்டம், ஆத்தூர் தேவியக்குறிச்சியில் உள்ள அரசு மறுமலர்ச்சி இல்லத்தில் குளியலறையுடன் கூடிய கழிப்பறை கட்டடம் கட்டும் பணி ரூ.23 இலட்சத்தில் முடிக்கப்பட்டது மற்றும் சேலம் மாவட்டம் கொண்டப்ப நாயக்கன்பட்டியில் செவித்திறன் குறை உடையோருக்கான அரசு உயர்நிலைப் பள்ளிக்கு விடுதியுடன் கூடிய கட்டடம் கட்டும் பணி ரூ.6.70 கோடிக்கு பணிகள் நடைபெற்று வருகின்றன.

12.24 இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்குத் தேவையான விளையாட்டு அரங்கம், உள் விளையாட்டு அரங்கம், விளையாட்டு வீரர், வீராங்கனைகள் தங்கும் விடுதிகள் மற்றும் நீச்சல் குளம் அமைத்தல் போன்ற கட்டுமானப் பணிகள் பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையில் ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் கரூர் மாவட்ட விளையாட்டு வளாகம் மற்றும் கோயம்புத்தூர் நேரு விளையாட்டரங்கம் சிறப்பு பழுதுபார்க்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

12.25 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்புக் கிடங்குகள்

தமிழ்நாட்டில், 30 மாவட்டங்களில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்ளைப் பாதுகாத்து வைப்பதற்குத் தேவையான பாதுகாப்புக் கிடங்குகள் கட்டும் பணிகள் பொதுப் பணித் துறையால் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. கன்னியாகுமரி மாவட்டத்தில் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன.

மேலும் புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டங்களில், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களைப் பாதுகாத்து வைப்பதற்குத் தேவையான கிடங்குகள் கட்டுவதற்கான பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளன.

2023 ஏப்ரல் 1]

13.0 2023-2024 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு

2023-2024 ஆம் நிதியாண்டில் பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கை எண் 39-ன்கீழ் ரூ.1493.79 கோடி நிதி ஒதுக்கீட்டில் பின்வரும் கணக்குத் தலைப்புகளின்கீழ் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன:-

வ. எண்	பொருள்	தொகை (ரூ.கோடியில்)
1.	மூலதனக் கணக்கு	
	(அ) மூலதனப் பணிகள்	907.10
	(ஆ) கணக்குகளிடையே மாற்றம்	158.57
2	வருவாய் கணக்கு	
	(அ) பராமரிப்பு	137.03
	(ஆ) பணியமைப்பு (பொதுப் பணித் துறை தலைமைச் செயலகம் உட்பட)	290.29
3	கடன் கணக்கு	0.80
	மொத்தம்	1493.79

13.1 துறை வாரியான ஒதுக்கீடு-2023-2024

13.1.1 மூலதனப் பணிகள்

வ. எண்	துறையின் பெயர்	2023-2024 வரவு செலவு திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்)
1	பொதுப் பணித் துறை	132.27
2	மருத்துவம்—மக்கள் நல்வாழ்வுத் துறை	160.60
3	உள் துறை (நீதி மற்றும் சட்டம்)	196.75
4	வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை	192.50

வ. எண்	துறையின் பெயர்	2023-2024 வரவு செலவு திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்)
5	வணிகவரித் துறை	18.73
6	பதிவுத் துறை	7.39
7	பாரம்பரிய கட்டடங்களைப் பாதுகாத்தல்	107.74
8	பிற துறைகள்	91.12
	மொத்தம்	907.10

முடிவுரை

பொதுப் பணித் துறையானது, தலைமைச் செயலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் உட்பட வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நீதித் துறை, மருத்துவம்-மக்கள் நல்வாழ்வுத் துறை, பள்ளிக் கல்வித் துறை, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை முதலிய பல்வேறு துறைகளுக்கும் உரிய கட்டடங்களைத் திராவிடக் கட்டடக்கலை நுட்பங்கள் மிளிர கலையெழிலுடன் மேற்கொண்டு தமிழ்நாடு அரசுக்கு பெருமைகள் சேர்த்து வருகிறது.

2023-2024 ஆம் நிதியாண்டில் கட்டுவதற்குத் திட்டமிட்டுள்ள கட்டடப் பணிகள் குறித்த விவரங்கள் மேலே விவரிக்கப்பட்டுள்ளன. இத்துறையானது பணிகளை உரிய காலத்தில் தரத்துடன் செயல்படுத்தி, "மாண்புமிகு முதலமைச்சரின் ஆற்றல்மிக்க தலைமையின்கீழ் வளமான தமிழ்நாடு" என்ற தொலைநோக்குப் பார்வையை நிறைவேற்றுவதை உறுதி செய்யும்.

2023 ஏப்ரல் 1]

இணைப்பு III

(120 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 31-தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024

அத்தியாயம்-I

முன்னுரை

அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற் கியல்பு.

(குறள் 382)

அஞ்சாமை, ஈகை, அறிவுடைமை, ஊக்கமுடைமை இந்த நான்கு பண்புகளும் குறைவுபடாமல் இருத்தலே தலைவனுடைய இயல்பாகும்.

*தமிழ்நாடு இந்தியாவின் மிகவும் முன்னணி மாநிலங்களில் ஒன்றாகவும் பொருளாதார மற்றும் சமூகக் குறியீடுகளின்படி நாட்டின் முதல் மூன்று மாநிலங்களில் ஒன்றாகவும் திகழ்கிறது. அனைத்து துறைகளிலும் தமிழகம் வேகமான வளர்ச்சியைக் கண்டுள்ளது. குறிப்பாகத் தகவல் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சி அபரிமிதமானது. தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு மற்றும் மனிதவளம் தமிழகத்திற்கு நாட்டின் அறிவுசார் சக்தி மையம் (*Intellectual Power House*) என்ற பெயரினைப் பெற்றுத் தந்துள்ளது.*

கோவிட் 19 நெருக்கடி மற்றும் செயல்முடக்கத்தினால் (Lock down) *ஏற்பட்ட தாக்கம் தகவல் தொழில்நுட்பத் துறைக்கு சாதகமாக அமைந்துள்ளது. சமூக ஊடகங்கள், காணொலி கருத்தரங்க பயன்பாடுகள் மற்றும் மேகக் கணினிய சேவைகளின் பயன்பாடு விரைவான வளர்ச்சியைக் கண்டது. ஏனெனில் மக்களும், வணிக நிறுவனங்களும் டிஜிட்டல் கருவிகள் மற்றும் தொழில்நுட்பங்களை அதிக அளவில் பயன்படுத்தத் தொடங்கியதால் இணையம் மற்றும் அதிவேக அலைக்கற்றை பயன்பாட்டிற்கான தேவை வியத்தகு முறையில் விரிவடைந்தது. இதனால் தகவல் தொழில்நுட்ப*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

நிறுவனங்கள் வழக்கமான முறைகளை விடுத்து வீட்டிலிருந்து வேலை செய்யும் கலாச்சாரத்தைத் கொண்டு வருவதற்கான தேவை ஏற்பட்டு ஏராளமான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டன.

எட்-டெக் (Ed-Tech) தளத்தில் செயற்கை நுண்ணறிவு (AI), இயந்திர கற்றல் (ML), மேம்படுத்தப்பட்ட உண்மை (AR) மற்றும் மெய்நிகர் உண்மை (VR) போன்ற புதிய தொழில்நுட்பங்களின் பயன்பாடு மாணவர் சமூகத்திற்கு புதியதொரு கற்றல் சூழ்நிலையினை உருவாக்கியது. மின்-வணிகம் மற்றும் பிற ஆன்லைன் வணிகங்கள் இதுவரை கண்டிராத அற்புதமான வளர்ச்சியைக் கண்டன.

IT மற்றும் ITeS துறையில் முதலீட்டை ஊக்குவிப்பதில் அரசு காட்டும் முனைப்பு தனியார் முதலீடுகளை ஈர்த்து மாநிலத்தின் பொருளாதாரத்திற்கு ஒரு முக்கிய பங்களிப்பாளராக தனியார் துறையினை மாற்றும் முக்கிய கருவியாக உள்ளது. மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துவதில் தகவல் தொழில்நுட்பத் துறையின் திறனை உணர்ந்து, விரைவான தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு உகந்த வணிகச் சூழலை உருவாக்க தமிழக அரசு தனது முயற்சிகளை பல மடங்கு அதிகரித்துள்ளது. இதன்மூலம், பன்னாட்டு IT மற்றும் ITeS நிறுவனங்கள் முதலீடு செய்வதற்கு தமிழ்நாடு விருப்பத் தேர்வாக உருவாகியுள்ளது. உலகப் புகழ்பெற்ற நிறுவனங்கள் தமிழகத்தில் தங்கள் செயல்பாடுகளை ஏற்படுத்தியுள்ளன.

மாநிலத்தில் அமைந்துள்ள அதிநவீன தமிழ்நாடு மாநில தரவு மையம் (TNSDC), பேரிடர் மீட்பு மையம் (TNDRC), மேகக் கணிணியத் தளம் மற்றும் சேவைகணினி பண்ணை ஆகியவை அரசுத் துறைகளின் மின்னாளுகை முயற்சிகளுக்கான தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பின் முதுகெலும்பாக செயல்படுகின்றன. மாநிலத்தில் தரவு மையங்களை நிறுவுவதற்கு தனியார் நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில் தரவு மையக் கொள்கை வெளியிடப்பட்டுள்ளது.

மாநிலத்தில் தொடக்க நிலை நிறுவனங்களுக்கான சுற்றுச் சூழல் அமைப்பை மேம்படுத்திடவும், வணிக வளர்ச்சிக்குத் தேவையான ஆழமான மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுக்கிடையே உள்ள இடைவெளியை நீக்கவும் தமிழ்நாடு தொழில்நுட்ப மையம் (iTNT Hub) அமைக்கப்பட்டுள்ளது. சமூக நிர்வாகம்

மற்றும் சுற்றுச் சூழல் இலக்குகளை தொழில் துறையுடன் இணைந்து சமன் செய்யவும், பொருளாதார வளர்ச்சியினை எட்ட பல்வேறு தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்வதை உறுதி செய்யும் வகையிலும் சுற்றுச்சூழல் அமைப்பில் உள்ள அனைத்து பங்குதாரர்களையும் ஒன்றிணைத்து "யூமாஜின் சென்னை – 2023" நிகழ்வு நடத்தப்பட்டது. இதன்மூலம் மக்களின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதார மேம்பாட்டிற்காக தொழில்நுட்பத்தை எளிதாக அணுகும் வகையில் அரசு துறைகளில் தொழில்நுட்பத்தின் பயன்பாடு உறுதி செய்யப்படும். இந்நிகழ்வு வெற்றிகரமாக நடந்தேறியது.

அதன் விவரங்கள் பின்வருமாறு:-

i. அமர்வுகளின் எண்ணிக்கை – 119

ii. பேச்சாளர்கள் எண்ணிக்கை – 324

iii. கூட்டு நாடுகளின் எண்ணிக்கை – 15

iv. பதிவு செய்து பங்கேற்றவர்களின் எண்ணிக்கை – 19,239

தேவையான வன்பொருள், மென்பொருள் மற்றும் சோதனைக் கருவிகளுடன் TNSDC-ல் சேவைகளின் பண்ணை உருவாக்கப்பட்டுள்ளது. இது அனைத்து அரசுத் துறைகளும் தங்கள் மென்பொருளை தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் தரவேற்றம் செய்வதற்குமுன், பாதிப்பு மதிப்பீடு மற்றும் ஊடுருவல் சோதனைகளுக்கு உட்படுத்திக்கொள்ள அனுமதிக்கிறது. அரசு இணையதளங்கள், சேவைதளங்கள் மற்றும் செயலிகள் ஆகியவற்றில் ஏற்படும் இணைய பாதிப்புகளை விரைவாகத் தீர்க்கும் வகையில் TNSDC-ல் இணைய பாதுகாப்பு கட்டமைப்பு செயல்படுகிறது.

சென்னை மற்றும் பிற இரண்டாம் நிலை நகரங்களில் தகவல் தொழில்நுட்ப சிறப்பு பொருளாதார மையங்களில் (IT Special Economic Zones-ELCOSEZ) உள்ள பல முன்னணி IT & ITeS நிறுவனங்கள்மூலம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டு மாநிலத்தின் மென்பொருள் ஏற்றுமதியில் முக்கிய பங்கு வகிக்கிறது. இது 2022-2023 இல் 16.4% கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதத்துடன் ரூ.2 இலட்சம் கோடியாக ஆக உள்ளது. இதன்மூலம், 3,50,000 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

மின்-மாவட்டம், அரசு இ-சேவை மையங்கள் போன்ற மின் ஆளுமை முன்முயற்சிகள் மக்களுக்கான சேவைகளை விரைவாகவும் எளிதாகவும், வெளிப்படையான முறையிலும் வழங்க அரசுக்கு உதவுகிறது. அரசு துறைகளின் பல்வேறு முன்முயற்சிகளைச் செயல்படுத்துவதற்கான தொழில்நுட்ப நிபுணத்துவத்தை வழங்கும் வகையில் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுக்கான சிறப்பு மையம் (CEET) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

நிர்வாக முடிவுகளை எடுப்பதில் தரவு முக்கிய பங்கு வகிக்கிறது. நலத்திட்டங்களைச் செயல்படுத்துவதில் பயனாளிகளை அடையாளம் காண தரவு தூய்மை மிக அவசியம். தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையானது மாநிலத்திற்கான தனியான தரவுக் கொள்கை மற்றும் தரவுத் தூய்மை முயற்சிகள் வாயிலாக தரவு சார்ந்த ஆளுகை நுட்பங்களைச் செயல்படுத்துவதில் முக்கியப் பங்காற்றியுள்ளது. இதன்மூலம் நலத்திட்டங்களுக்காக ஒதுக்கப்படும் நிதியில் பல கோடி நிதி சேமிக்கப்பட்டுள்ளது. மாநில குடும்ப தரவுத்தளம் (SFDB) மற்றும் பிளாக்செயின் கட்டமைப்பு ஆகியவை காகிதமற்ற, தொடர்பு இல்லாத மற்றும் வெளிப்படையான சேவைகளை மக்களுக்கு முன்கூட்டியே வழங்கும் வகையில் உருவாக்கப்பட்டு வருகின்றன. நிர்வாகத்தை மேம்படுத்தவும் கோப்புகளில் விரைவாக தீர்வு காணவும் தலைமைச் செயலகத்தில் காகிதமற்ற மின் அலுவலக பயன்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சிறந்த தொலைத்தொடர்பு இணைப்பு மற்றும் 5ஜி அலைக்கற்றை பயன்பாட்டினை உறுதி செய்யவும் வழித்தட உரிமை (Right of Way) செயல்முறைகளை எளிதாக்கவும் தொலைத் தொடர்பு உட்கட்டமைப்பு கொள்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

மின் ஆளுமையில் இணைய இணைப்பு ஒரு முக்கிய அங்கமாகும். தமிழ்நாடு மாநில பெரும் பரப்பு வலையமைப்பு (TNSWAN) 1 GBPS தேசிய அறிவுத்திறன் வலையமைப்புடன் (NKN) ஒருங்கிணைக்கப்பட்டு மாநிலத்தில் உள்ள 3000-க்கும் மேற்பட்ட அரசு அலுவலகங்களுக்கு குரல், தரவு, இணையம் மற்றும் ஒலி-ஒளி காட்சி இணைப்புகளை வழங்கி வருகிறது. மாநிலத்தில் உள்ள அனைத்து 12,525 கிராமப் பஞ்சாயத்துகளிலும் கண்ணாடி இழை வடம் (Optical Fibre Cable) மூலம் அதிவேக இணைய இணைப்புகளை உறுதி செய்வதனை பாரத்நெட் திட்டம்

2023 ஏப்ரல் 1]

நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டத்தின் ஒரு பகுதியான தமிழ்நெட் மாநிலத்தில் உள்ள அனைத்து நகர்ப்புறங்களையும் இணைக்கும் வகையில் செயல்படுத்தப்பட உள்ளது. TNSWAN, BHARATNET மற்றும் TAMILNET ஆகியவற்றை உள்ளடக்கி ஒருங்கிணைந்த டிஜிட்டல் உட்கட்டமைப்பு (UDI) ஒன்று உருவாக்கப்பட்டு மாநிலம் முழுவதும் டிஜிட்டல்மயமாக்கப்படும்.

மின் ஆளுகை மற்றும் சிறந்த சேவை வழங்கலில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில், தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையானது மற்ற பொறுப்புதாரர்கள் மற்றும் பங்குதாரர்களின் ஆதரவுடன் அனைத்து அரசு துறைகள் மற்றும் நிறுவனங்களுக்குத் தேவையான உதவிகளை வழங்க முயற்சிக்கிறது.

அத்தியாயம்-II

தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT)

1. முன்னுரை

தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்) இந்திய நிறுவனங்கள் சட்டம் 1956-ன்கீழ் பதிவு செய்யப்பட்ட தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான பொதுத் துறை நிறுவனமாகும். எல்காட் 21-3-1977 இல் மாநிலத்தில் மின்னணுவியலை மேம்படுத்தும் நோக்கத்துடன் நிறுவப்பட்டது.

எல்காட் தமிழக அரசுக்கான மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்புகள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த (IT/ITeS) தயாரிப்புகள் / சேவைகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு மற்றும் ஊக்குவிப்புகளை மேம்படுத்துவதற்கான முகமை நிறுவனம் ஆகும்.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதன்மையான தகவல் தொழில்நுட்ப மையமாக மாற்றும் ஒரு பெரிய தொலைநோக்குப் பார்வையுடன், எல்காட் நான்கு முக்கிய பிரிவுகளான தகவல் தொழில்நுட்ப ஊக்குவிப்பு, தமிழக அரசிற்கான தகவல் தொழில்நுட்ப கொள்முதல், மின்னணுத் துறையின் மேம்பாடு மற்றும் அரசாங்கத் துறைகளுக்கான தரவு மையம் தொடர்பான சேவைகளை வழங்குதல் ஆகியவற்றில் சிறந்து விளங்குகிறது.

[*2023 ஏப்ரல் 1*

2. தகவல் தொழில்நுட்ப ஊக்குவிப்பு மற்றும் வளர்ச்சி

தகவல் தொழில்நுட்பம் (IT) மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகளை (ITeS) வழங்கும் நிறுவனங்களுக்கு விருப்பத் தேர்வு இடமாக தமிழகத்தை மாற்றுவதில் எல்காட் முக்கிய பங்கு வகிக்கிறது. எல்காட்டின் வளர்ச்சித் திட்டமானது உலகத்தரம் வாய்ந்த உட்கட்டமைப்புடன்கூடிய தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களை உருவாக்குதல், கூடுதல் பொருளாதாரச் செயல்பாடுகளை உருவாக்குதல், தகவல் தொழில்நுட்ப முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றின்மூலம் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் ஆகிய முக்கிய நோக்கங்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

எல்காட் 8 தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலங்களை (SEZ) சென்னை மற்றும் இரண்டாம் நிலை நகரங்களான கோயம்புத்தூர், மதுரை (2 இடங்கள்), திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி மற்றும் ஓசூர் ஆகிய நகரங்களில் 1288.2 ஏக்கர் நிலப்பரப்பில் (SEZ இல் 1231.65 ஏக்கர் மற்றும் SEZ அல்லாத இடத்தில் 56.55 ஏக்கர்) ரூ.844.57 கோடி முதலீட்டில் உருவாக்கி ஒரு முன்னோடியாக பங்காற்றி வருகிறது.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகளுக்கான (IT/ITeS) முதன்மை முதலீட்டு இடமாக தமிழகத்தை மாற்ற எல்காட் பின்வரும் நிகழ்வுகளில் பங்கேற்றது:

- *5 மே 2022 முதல் 7 மே 2022 வரை இங்கிலாந்தில் நடைபெற்ற "தி ரைஸ் எமர்ஜ் லண்டன் உச்சிமாநாடு"*
- *ஜூன் 7, 2022 அன்று சென்னையில் நடைபெற்ற "NASSCOM The NEXT உச்சிமாநாடு"*
- *5 செப்டம்பர் 2022 முதல் 7 செப்டம்பர் 2022 வரை மும்பையில் நடைபெற்ற இன்ஃபோகாம் இந்தியா 2022 நிகழ்வு*
- *1 அக்டோபர் 2022 முதல் 4 அக்டோபர் 2022 வரை புதுடில்லியில் நடைபெற்ற இந்தியா மொபைல் காங்கிரஸ் நிகழ்வு*
- *துபாயில், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் துபாய் உலக வர்த்தக மையத்தில் 10 அக்டோபர் 2022 முதல் 14 அக்டோபர் 2022 வரை நடைபெற்ற "GITEX GLOBAL 2022 நிகழ்வு"*

2023 ஏப்ரல் 1]

- *நவம்பர் 16 முதல் 18 வரை கர்நாடகாவின் பெங்களூரில் உள்ள பெங்களூரு பேலஸில் நடைபெற்ற "பெங்களூர் டெக் உச்சிமாநாடு 2022"*
- *17 நவம்பர் 2022 முதல் 18 நவம்பர் 2022 வரை பின்லாந்தின் ஹெல்சின்கியில் நடைபெற்ற* "SLUSH *2022".*
- *25 நவம்பர் 2022 அன்று சென்னையில் நடைபெற்ற* "TN Web*3* – Build Ahead *நிகழ்வு".*
- CII-*உடன் இணைந்து 2023 மார்ச் மாதம் 23—25 தேதிகளில் சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற* "UMAGINE *2023" (ஒரு உலகளாவிய தொழில்நுட்பம் மற்றும் புதுமை உச்சி மாநாடு)*

*தகவல் தொலைத்தொடர்பு மற்றும் தொழில்நுட்பக் கொள்கை (*ICT Policy*) 2018-ன்படி, தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களுக்கு* FSI *பலன்களை பெறுவதற்கான சான்றளிக்கும் நிறுவனமாகவும், தமிழ்நாடு தரவுமையக் கொள்கைக்கான முகமையாகவும் எல்காட் செயல்பட்டு வருகிறது.*

2.1 எல்காட் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (ELCOSEZ)

2.1.1 எல்கோசெஸ் (ELCOSEZ) சோழிங்கநல்லூர், சென்னை

எல்காட் நிறுவனம் சென்னை சோழிங்கநல்லூரில் 377.08 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.258.56 கோடி முதலீட்டில் எல்கோசெஸ்ஸை உருவாக்கியுள்ளது. எல்காட் இதில் அனைத்து பொது உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி நிர்வாகக் கட்டடத்தைக் கட்டியுள்ளது.

இந்த எல்கோசெஸ்சில் பின்வரும் நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

வ. எண்	நிறுவனத்தின் பெயர்	நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்)
1	*விப்ரோ லிமிடெட்*	*80*
2	*எச்.சி.எல் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட்*	*50*
3	*டெக் மஹிந்திரா பிரைவேட் லிமிடெட்*	*50*

[2023 ஏப்ரல் 1

வ. எண்	நிறுவனத்தின் பெயர்	நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்)
4	ஃபோர்டு மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட்	28
5	காக்னிசன்ட் டெக்னாலஜிஸ் சொலுஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்	20
6	சதர்லேண்ட் குளோபல் சர்வீசஸ் லிமிடெட்	15
7	தமிழ்நாடு மின்சார வாரியம்	16

இந்த நிறுவனங்கள் 109.31 இலட்சம் சதுர அடி பரப்பளவில் தங்களுடைய கட்டடப் பணிகளை முடித்து தற்போது 68,516 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன. இந்த தனியார் நிறுவனங்கள், மென்பொருள் உருவாக்கம் (Software Development), பராமரிப்பு மற்றும் சோதனை (Maintenance and Testing), ஆலோசனை (Consulting) மற்றும் வணிக வெளிப்பணி சேவைகள் (Business Process Outsourcing) போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

வரவிருக்கும் புதிய தகவல் தொழில்நுட்பக் கோபுரம் (Upcoming IT Tower)

ஏற்றுமதி சார்ந்த குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (MSME) மற்றும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவை நிறுவனங்களின் இட தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு 2.33 இலட்சம் சதுர அடி பரப்பளவில், தகவல் தொழில்நுட்பக் கோபுரத்தின் கட்டுமானப் பணிகள், ரூ.88.21 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இந்தத் தகவல் தொழில்நுட்பக் கட்டடமானது மே, 2023-ல் திறக்கப்பட உள்ளது.

2.1.2 எல்கோசெஸ் (ELCOSEZ) – விளாங்குறிச்சி, கோயம்புத்தூர்

எல்காட் நிறுவனம் கோயம்புத்தூர், விளாங்குறிச்சியில் 61.59 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.217.46 கோடி முதலீட்டில் எல்காட் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை உருவாக்கியுள்ளது. எல்காட் இதில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி, நிர்வாகக் கட்டடத்தைக் கட்டி முடித்துள்ளது.

2023 ஏப்ரல் 1]

இந்த எல்கோசெஸ்சில் பின்வரும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வ. எண்.	நிறுவனத்தின் பெயர்	நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்)
1	விப்ரோ லிமிடெட்	9.5
2	டைடல் பார்க் கோயம்புத்தூர் லிமிடெட்	9.5

இந்த நிறுவனங்கள் 23 இலட்சம் சதுர அடி பரப்பளவில், தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தைக் கட்டி 16,809 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன.

வரவிருக்கும் புதிய தகவல் தொழில்நுட்பக் கோபுரம் (Upcoming IT Tower)

எல்கோசெஸ்—விளாங்குறிச்சி, கோயம்புத்தூர் எல்காட் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவை நிறுவனங்களின் இட தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு மேலும் 2.66 இலட்சம் சதுர அடி பரப்பளவில், தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தின் கட்டுமானப் பணிகள் ரூ.114.16 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இந்தத் தகவல் தொழில்நுட்பக் கட்டடமானது மே, 2023—ல் திறக்கப்பட உள்ளது.

2.1.3 எல்கோசெஸ் (ELCOSEZ) – இலந்தைக்குளம், மதுரை

எல்காட் நிறுவனம், மதுரை மாவட்டம், இலந்தைக்குளத்தில், 28.91 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ.34 கோடி முதலீட்டில் எல்காட் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை உருவாக்கியுள்ளது.

இதில் எல்காட் நிறுவனம் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் உருவாக்கி, 60,652 சதுர அடி கொண்ட நிர்வாக மற்றும் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தையும் கட்டி முடித்துள்ளது.

இந்த எல்கோசெஸ்சில் பின்வரும் நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

வ. எண்	நிறுவனத்தின் பெயர்	நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்)
1	ஹனிவெல் டெக்னாலஜிஸ் லிமிடெட்	11.25
2	எச்.சி.எல் டெக்னாலஜிஸ் லிமிடெட்	6.75
3	செல்லா சாஃப்ட்வேர் பிரைவேட் லிமிடெட்	2.25
4	தமிழ்நாடு மின்சார வாரியம்	0.58

இது தவிர, 6650 சதுர அடி நிலப்பரப்பில், ரீபார் டிசைன் & டீடெயில் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்கு குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த தனியார் நிறுவனங்கள் 7.22 இலட்சம் சதுர அடி பரப்பளவில், தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தைக் கட்டி இயங்கி வருகின்றன.

மேலும், நிர்வாக மற்றும் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தில் கீழ்காணும் நிறுவனங்களுக்கு இட வசதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

வ. எண்	நிறுவனத்தின் பெயர்	ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தின் அளவு (சதுர அடியில்)
1	கேலக்சி இன்ஃபோடெக்	2,508
2	ரீபார் டிசைன் & டீடெயில் பிரைவேட் லிமிடெட்	3,724.12
3	எஸ்.பி.எல் நாலெட்ஜ் சர்வீசஸ் லிமிடெட்	15,181
4	நியாமோ என்டர்பிரைசஸ் சொலுயுசன்ஸ் பிரைவேட் லிமிடெட்	30,103
5	ப்ரொஃபிசியோ ஐ.டி சொல்யூசன்ஸ் பிரைவேட் லிமிடெட்	9,136

2023 ஏப்ரல் 1]

இந்த நிறுவனங்கள் ஆலோசனை, செயலி மேம்பாடு, வணிக வெளிப்பணி சேவைகள் (BPO) மற்றும் தரவு மின் உருவாக்கம் போன்ற பணிகளை மேற்கொண்டு தோராயமாக *8,040* பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன.

2.1.4 எல்கோசெஸ் (ELCOSEZ) – வடபழஞ்சி, மதுரை

மதுரையிலுள்ள வடபழஞ்சி கிராமத்தில் எல்காட் நிறுவனம் *245.17* ஏக்கர் நிலப்பரப்பில் (SEZ இல் *213* ஏக்கர் மற்றும் SEZ அல்லாத இடத்தில் *32.17* ஏக்கர்) ரூ.*70* கோடி முதலீட்டில் எல்கோசெஸ்ஸை உருவாக்கியுள்ளது. இதில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் எல்கோசெஸ்க்குத் தேவைப்படுகின்ற மேம்பாலத்தையும் உருவாக்கி, *70,139* சதுர அடி பரப்பளவு கொண்ட நிர்வாக மற்றும் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தைக் கட்டி முடித்துள்ளது.

இந்த எல்கோசெஸ்சில் பின்வரும் நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

வ. எண்	நிறுவனத்தின் பெயர்	நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்)
1	எச்.சி.எல் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட்	*60*
2	செயின்-சிஸ் சாஃப்ட்வேர் எக்ஸ்போர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்	*20*
3	பினாக்கிள் இன்போ டெக் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்	*34.09*
4	ஜாபின் அண்டு ஜிஸ்மி ஐ.டி சர்வீசஸ் எல்.எல்.பி	*4*
5	சாஷ்மா க்லொபல் ப்ரைவேட் லிமிடெட்	*1.5*
6	ஆப்டிசோல் பிசினெஸ் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்	*8.25*
7	குளோபல் அசோசியேட்ஸ்	*4*
8	ஆசிஸ் டெக்னாலஜீஸ் பிரைவேட் லிமிடெட்	*3.53*

வ. எண்	நிறுவனத்தின் பெயர்	நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்)
9	அக்செஸ் ஹெல்த்கேர் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்	4.01
10	க்ளவுட் வான்டேஜ் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்	3.16
11	டியூ இன்ஃபொ-சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடெட்	10.19

இந்த தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தில் பின்வரும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு 64,980 சதுர அடி பரப்பளவில் இட வசதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

வ. எண்	நிறுவனத்தின் பெயர்	ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தின் அளவு (சதுர அடியில்)
1	நீயாமோ எண்டர்பிரைஸ் சொல்யூசன்ஸ் பிரைவேட் லிமிடெட்	46,968
2	நீயாமோ ஒர்க்ஸ் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட்	11,543
3	செயின்—சிஸ் சாப்ட்வேர் எக்ஸ்போர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்	6,469

இந்த நிறுவனங்கள் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகள் பிரிவுகளான ஆலோசனை, சம்பளப்பட்டியல் செயலாக்க மென்பொருள் மற்றும் தகவல்கள் மின் உருவாக்கம் போன்ற பணிகளை மேற்கொண்டு 1077 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன.

2.1.5 எல்கோசெஸ் (ELCOSEZ) – நவல்பட்டு, திருச்சிராப்பள்ளி

திருச்சிராப்பள்ளியிலுள்ள நவல்பட்டு கிராமத்தில் எல்காட் நிறுவனம் 147.61 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.80.55 கோடி முதலீட்டில் எல்கோசெஸ்ஸை உருவாக்கியுள்ளது. இதில் 123.23 ஏக்கர் நிலப் பரப்பளவு, சிறப்புப் பொருளாதார மண்டலமாக உள்ளது. இதில்

2023 ஏப்ரல் 1]

அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்தி, 59,960 சதுர அடி பரப்பளவு கொண்ட நிர்வாக மற்றும் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தையும் கட்டி முடித்துள்ளது.

இந்த எல்கோசெஸ்சில் பின்வரும் நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

வ. எண்	**நிறுவனத்தின் பெயர்**	**நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்)**
1	*ஐ லிங்க் மல்டிடெக் சொல்யூசன்ஸ் பிரைவேட் லிமிடெட்*	*2*
2	*எஸ்கே டிசைன் அன்ட் ஸ்ட்ரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட்*	*3*
3	*தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது*	*0.6*

இந்த நிர்வாக மற்றும் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தில் பின்வரும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு 59,960 சதுர அடி இட வசதி முழுமையாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

வ. எண்	**நிறுவனத்தின் பெயர்**	**ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தின் அளவு (சதுர அடியில்)**
1	*ஐ லிங்க் மல்டிடெக் சொல்யூசன்ஸ் பிரைவேட் லிமிடெட்*	*6,668*
2	*சயின்டிஃபிக் பப்ளிஷிங் சர்வீஸஸ்*	*30,250*
3	*வுரம் டெக்னாலஜி சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்*	*5,976*
4	*வி டார்ட் டெக்னாலஜிஸ்*	*3,643*
5	*பேரிடர் மீட்பு மையம்.*	*5,963*
6	*ஜிஇ டெக் கேமிங் கம்பெனி இந்தியா பிரைவேட் லிமிடெட்*	*4,919*
7	*விஆர் டெல்லா ஐடி சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்*	*2,541*

[2023 ஏப்ரல் 1

இந்த நிறுவனங்கள் மின் வெளியீடு, (e-Publishing), மென்பொருள் உருவாக்கம் (Software Development), வணிக செயல்முறை மேலாண்மை சேவைகள் மற்றும் தீர்வுகள் (Business Process Management Services & Solutions), விளையாட்டு மென்பொருள் உருவாக்கம் (Gaming Software Development) போன்ற பணிகளை மேற்கொண்டு 1,482 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன.

வரவிருக்கும் புதிய தகவல் தொழில்நுட்பக் கோபுரம் (Upcoming IT Tower)

இச்சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவை நிறுவனங்களின் இட தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, மேலும், 1.16 இலட்சம் சதுர அடி பரப்பளவில், தகவல் தொழில்நுட்பக் கோபுரக் கட்டுமானப் பணிகள் ரூ.48.10 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு விரைவில் திறக்கப்பட உள்ளது.

2.1.6 எல்கோசெஸ் (ELCOSEZ)–கங்கைகொண்டான், திருநெல்வேலி

திருநெல்வேலியிலுள்ள கங்கைகொண்டான் கிராமத்தில் எல்காட் நிறுவனம் 200 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் ரூ.55 கோடி முதலீட்டில் எல்கோசெஸ்ஸை உருவாக்கி அதில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் 57,107 சதுர அடி பரப்பளவு கொண்ட நிர்வாக மற்றும் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தைக் கட்டி முடித்துள்ளது. கீழ்க்கண்ட நிறுவனங்களுக்கு மொத்தம் 9464 சதுர அடி இடம் ஒதுக்கப்பட்டு 110 பணியாளர்களுடன் செயல்பட்டு வருகின்றது:

வ. எண்	நிறுவனத்தின் பெயர்	ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தின் அளவு (சதுர அடியில்)
1	கேலிபெர் இன்டெர்கனெக்ட் சொலுஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்	5994
2	நோவிகோ பார்ட்னர்ஸ் பிரைவேட் லிமிடெட்	3470

2023 ஏப்ரல் 1]

இந்த எல்கோசெஸ்சில் பின்வரும் நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

வ. எண்	நிறுவனத்தின் பெயர்	நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்)
1	*சின்டெல் இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட்*	*100*
2	*ஃபிஷின் இந்தியா பிரைவேட் லிமிடெட்*	*33.57*
3	*ரேஞ்சர் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட்*	*1*

இந்த எல்கோசெஸ்ஸில் சின்டெல் இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட் (M/s Syntel International Pvt. Ltd) *நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்ட 100 ஏக்கர் நிலப்பரப்பில், அந்நிறுவனம் 2.60 இலட்சம் சதுர அடி பரப்பிலான தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தைக் கட்டி முடித்து, 152 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றது.*

2.1.7 எல்கோசெஸ் (ELCOSEZ) ஜாகீர்அம்மாபாளையம், சேலம்

எல்காட் நிறுவனம், சேலம், ஜாகீர் அம்மாபாளையம் கிராமத்தில், 53.33 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ.44 கோடி முதலீட்டில் எல்கோசெஸ்ஸை உருவாக்கி அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன், 62,174 சதுர அடி பரப்பளவு கொண்ட நிர்வாக மற்றும் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தைக் கட்டி முடித்துள்ளது.

இந்த எல்கோசெஸ்சில் பின்வரும் நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

வ. எண்	நிறுவனத்தின் பெயர்	நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்)
1	*மகிமா டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட்*	*5.501*
2	*வீ. டெக்னாலஜிஸ்*	*9.49*
3	*டான் டிரான்ஸ்கோ லிமிடெட்*	*7.88*
4	*இ-முத்ரா லிமிடெட்*	*2.5*

வ. எண்	நிறுவனத்தின் பெயர்	நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்)
5	அன்மால் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட்	1
6	ஃபோகஸ் ஆர் கன்சல்டன்சி அண்டு டெக்னாலஜீஸ் பிரைவேட் லிமிடெட்	1
7	நியூராடெக் கன்சல்டன்சி சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்	6.877

இந்தத் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தில் பின்வரும் நிறுவனங்களுக்கு 55,060 சதுர அடி பரப்பளவில், இட வசதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

வ. எண்	நிறுவனத்தின் பெயர்	ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தின் அளவு (சதுர அடியில்)
1	இமுத்ரா லிமிடெட்	2,989
2	ரீவெய்ல் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட்	3,704
3	நியூராடெக் கன்சல்டன்சி சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்	3,704
4	டைலாஜி சொல்யூஷன்ஸ் எல்எல்பி	1,000
5	நாலெட்ஜ் லென்ஸ் பிரைவேட் லிமிடெட்	1,000
6	ஸ்டின் சாஃப்ட் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட்	989
7	வீ டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட்	21,124
8	வீ இமேஜிங் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்	10,562
9	மஹிமா டெக்னாலஜி பிரைவேட் லிமிடெட்	3,448
10	ஸீலஸ் சர்வீஸஸ்	6,540

2023 ஏப்ரல் 1]

இந்த நிறுவனங்கள் 787 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன.

2.1.8 எல்கோசெஸ் (ELCOSEZ)-விஸ்வநாதபுரம், ஓசூர்

எல்காட் நிறுவனம், விஸ்வநாதபுரம் கிராமம், ஓசூரில் 174.47 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ.85 கோடி முதலீட்டில் எல்கோசெஸ்ஸை உருவாக்கி அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன், 62,100 சதுர அடி பரப்பளவில் நிர்வாக மற்றும் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தைக் கட்டி முடித்துள்ளது.

இந்த எல்கோசெஸ்சில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பயன்பாட்டுக்கு 12 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிர்வாக மற்றும் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தில் பின்வரும் நிறுவனங்களுக்கு 34,639 சதுர அடி பரப்பளவில், இட வசதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

வ. எண்	**நிறுவனத்தின் பெயர்**	**ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தின் அளவு (சதுர அடியில்)**
1	*யு.எஸ். டெக்னாலஜி இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட்*	*21,100*
2	*சந்து சாஃப்ட் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட்*	*10,550*
3	*தென்றல் இன்ஃபோடெக்*	*2,989*

இந்த நிறுவனங்கள் தோராயமாக 100 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன.

மேலும், இந்த எல்கோசெஸ்சில் பின்வரும் நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வ. எண்	**நிறுவனத்தின் பெயர்**	**நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்)**
1	*ஐ.ஏ.எம்.பி.எல்*	*12.04*
2	*டைலாஜி சொல்யூஷன்ஸ் எல்.எல்.பி*	*8.93*

[*2023 ஏப்ரல் 1*

2.2 பல்துறை சிறப்பு பொருளாதார மண்டலங்கள் (Multi Sector Special Economic Zones)

அரசு ஆணை (நிலை) எண் 787, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நில முடிவு (நி.மு.5(1)) பிரிவு, 22.11.2021 தேதியிட்ட உத்தரவுப்படி, எல்காட் மூலம் செயல்படும் அனைத்து தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களையும் பல்துறை சிறப்புப் பொருளாதார மண்டலங்களாகப் பயன்படுத்தலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இப்போது, அனைத்துத் துறைகளிலிருந்தும் நிறுவனங்களைக் கொண்டுவர எல்காட் செயல்பட்டு வருகிறது.

3. தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு

மக்களுக்கு மின்னாளுகை சேவைகளை வழங்குவதற்கும் அரசுத் துறைகளுக்கு இணைப்பு வழங்குவதற்கும் தேவையான தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பை 2007 முதல் எல்காட் நிறுவனம் உருவாக்கி பராமரித்து வருகிறது.

3.1 வலையமைப்பு சேவைகள்

3.1.1 தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN)

தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பானது தேசிய மின் ஆளுமைத் திட்டத்தின் (NeGAP) கீழ் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் பங்களிப்புடன் 2007—ல் தொடங்கப்பட்ட ஒரு திட்டமாகும்.

தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பு 708 இருப்பு முனைகளுடன் (PoPs) தொடங்கப்பட்டு, தற்போது 829 இருப்பு முனைகளுடன் இயங்கி வருகிறது. பல்வேறு அரசுத் துறைகளின் சுமார் 3000+ அலுவலகங்களுக்கு TNSWAN இணைப்பு வழங்குவதன்மூலம், அரசுத் துறைகள் தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள தமது பயன்பாடுகள், சேவைகள் மற்றும் சேவையகங்களைப் பாதுகாப்பான முறையில் அணுக உதவுகிறது.

பொதுமக்களுக்குத் தரமான சேவைகளை வழங்கும் பொருட்டு அனைத்து அரசுத் துறைகளுக்கும் குரல், தரவு மற்றும் காணொளி இணைப்பு வசதியைத் தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பு வழங்கி வருகிறது.

2023 ஏப்ரல் 1]

*2015 ஆம் வருடம் முதல் ஒன்றிய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறையின் (*MeitY, GoI*), வழிகாட்டுதலின்படி தேசிய அறிவுத்திறன் வலையமைப்பானது (*National Knowledge Network-NKN*) தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பின் மாவட்ட இருப்பு முனைகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.*

3.1.2 தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பின் இரண்டாம் கட்ட விரிவாக்கம்

தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பின் இரண்டாம் கட்ட செயல்பாட்டினை 13 பிப்ரவரி 2023 வரை நீட்டிக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்தக் கால அளவினை மேலும் நீட்டிக்க எல்காட் அளித்த பரிந்துரை அரசின் பரிசீலனையில் உள்ளது.

3.2 பிற இணைப்புச் சேவைகள்

i) MPLS VPN (1:1) இணைப்பு

Multi – Protocol Label Switching Virtual Private Network (MPLS VPN) *இணைப்பானது* TNSWAN *இணைப்புக்கு பதிலி இணைப்பாக வழங்கப்படுகின்றது. எல்காட் நிறுவனம், ஏறத்தாழ 88 அரசு அலுவலகங்களுக்கு* MPLS VPN *இணைப்பை வழங்கி வருகிறது.*

ii) இணையக் குத்தகை இணைப்பு (ILL)

இணையக் குத்தகை இணைப்பு, சுமார் 281 அரசு அலுவலகங்களுக்கு தனிப்பட்ட இணைப்பாக வழங்கப்பட்டு வருகிறது.

iii) VPNoBB இணைப்பு

Virtual Private Network Over Broadband (VPNoBB) *இணைப்பானது குறைந்த செலவில் குறைந்த அலைவரிசை அகஇணைய இணைப்பிற்கு மாற்றாக விளங்குகிறது. எல்காட் நிறுவனம் ஏறத்தாழ 290 அரசு அலுவலகங்களுக்கு* VPNoBB *இணைப்புச் சேவைகளை வழங்கி வருகிறது.*

[2023 ஏப்ரல் 1

3.3 தமிழ்நாடு மாநிலத் தரவு மையம்

3.3.1 தமிழ்நாடு மாநிலத் தரவு மையம்–I (TNSDC–I)

தமிழ்நாடு மாநிலத் தரவு மையம், நாட்டிலேயே முதன்முறையாக ISO சான்றிதழ் பெற்ற மாநிலத் தரவு மையமாகும். இம்மையத்தின் செயல்பாடுகள் 2011-ல் தொடங்கப்பட்டு 12 வருடத்திற்கான திட்ட மதிப்பீடான ரூ.138 கோடி செலவினத்தில், சுமார் 62 அடுக்குகளுடன் இயங்கி வருகிறது. தற்போது வரை, 318-க்கும் மேற்பட்ட பயன்பாடுகள்/ சேவைகள் TNSDC-I, TNSDC-II மற்றும் மேகக்கணினி அமைப்பில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

3.3.2 தமிழ்நாடு மாநிலத் தரவு மையம்-II (TNSDC II)

தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்தின் இரண்டாம் கட்டம் ரூ.74.7 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ளது. முதன்முதலில் 7.9.2020 அன்று 35 அடுக்குகளுடன் செயல்படத் தொடங்கிய இந்தத் தரவு மையமானது 138 அடுக்குகளுக்கு இடமளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தற்போது வரை 56 அடுக்குகள் நிறுவப்பட்டு கிட்டத்தட்ட 100% பயன்பாட்டை எட்டியுள்ளது. இந்தத் தரவு மையம் 56 கூடுதல் அடுக்குகளுடன் மேலும் விரிவுபடுத்தப்படுகிறது. தமிழக அரசுத் துறைகளின் சுமார் 50 பயன்பாடுகள், TNSDC II-ல் பதிவேற்றம் செய்யப்பட்டுப் பயன்பாட்டில் உள்ளன.

3.4 தமிழ்நாடு பேரிடர் மீட்பு மையம் (TNDRC)

எல்காட் நிறுவனம், தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்தை நிறுவியுள்ளது. இதன்மூலம் அரசுத் துறைகள் தங்கள் பயன்பாடுகள் / சேவைகளைப் பொதுவான, பாதுகாப்பான மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட சூழலில் வழங்க உதவுகிறது. இருப்பினும், இயற்கைப் பேரழிவுகள் தொடர்பான அபாயங்கள் ஒரு கடுமையான சவாலை ஏற்படுத்துகின்றன. எனவே, மாநிலத் தரவு மையத்தில் வழங்கப்படும் பல்வேறு மின் ஆளுமைப் பயன்பாடுகளின் முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு வணிகத் தொடர்ச்சியை உறுதிப்படுத்த பேரிடர் மீட்பு மையத்தை **(DRC)** *நிறுவுவது கட்டாயமாகிறது.*

தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள அரசுத் துறைகளின் முக்கிய மின் ஆளுகைப்

2023 ஏப்ரல் 1]

பயன்பாடுகளைப் பேரிடர்களின்போதும் தடையின்றித் தொடர்ச்சியாகச் செயல்படுத்திட ஏதுவாக, திருச்சிராப்பள்ளியில் உள்ள எல்கோசெஸ்-ல் பேரிடர் மீட்பு மையம், 2018 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது.

3.5 தமிழ் மேகம் – தமிழ்நாடு மேகக் கணினியச் சேவைகள்

*எளிய மேலாண்மையுடன் கணினி வளங்களைப் பகிர்ந்தளிக்கக்கூடிய மேகக் கணினியச் சேவை, தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்தில் 2016 ஆம் ஆண்டு, ரூ.14.40 கோடி மதிப்பில் தொடங்கப்பட்டு, தற்போது 7-வது ஆண்டிற்கான செயல்பாடுகள் மற்றும் பராமரிப்புப் பணிகளுடன் தொடர்ந்து சேவை அளிக்கப்பட்டு வருகிறது. மேகக் கணினியச் சேவையில் உட்கட்டமைப்பு (*Infrastructure*) மற்றும் இயங்குதளம் (*Platform*) ஆகிய சேவைகள் வழங்கப்படுகின்றன. தற்போது வரை சுமார் 180 மென்பொருள் பயன்பாடுகள் மற்றும் சேவைகள் பதிவேற்றம் செய்யப்பட்டு, இயங்கி வருகின்றன.*

ரூ.9.98 கோடி மதிப்பீட்டில் மேகக்கணினிய உட்கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டதுடன் பேரிடர் மீட்பு வசதியும் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

3.6 மின்னணுப் பாதுகாப்பு (e-Security)

TNSDC-*க்கான பாதுகாப்புக் கட்டமைப்பு அரசுத் துறைகளின் பயன்பாடுகள்/சேவைகள் ஆகியவற்றின் தரவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, உயர்நிலை ரூட்டர், அடுத்த தலைமுறை ஃபயர்வால், சேவை விநியோக மறுப்பு* (DDOS), *வலைப் பயன்பாட்டு ஃபயர்வால்* (WAF), *ஊடுருவல் தடுப்பு அமைப்பு* (IPS), *ஊடுருவல் கண்டறிதல் அமைப்பு (*IDS*), மெய்நிகர் தனியார் வலையமைப்பு* (VPN), *ஒருங்கிணைப்பி (*Concentrator*) மாடுலர் கோர் ஸ்விட்ச் மற்றும் பாதுகாப்பு தகவல் மற்றும் நிகழ்வு மேலாண்மை* (SIEM) *ஆகியவற்றுடன் உயர்நிலைப் பாதுகாப்புக் கட்டமைப்பு செயல்படுத்தப்பட்டுள்ளது. பாதிப்பு மதிப்பீடு மற்றும் ஊடுருவல் சோதனை* (VAPT) *ஆனது பயன்பாடுகள்/சேவைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக* CERT-IN *நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட முகமைகள்மூலம்* TNSDC *தரவேற்றம் செய்யப்பட்ட பயன்பாடுகள்/சேவைகள் மீது அவ்வப்போது நடத்தப்படுகிறது.*

[2023 ஏப்ரல் 1

3.7 தமிழகத்திற்கான இணையப் பாதுகாப்புக் கட்டமைப்பு (CSA-TN)

இணையப் பாதுகாப்பு அச்சுறுத்தல் மற்றும் தாக்குதலை எதிர்கொள்ள ஏதுவாக, தமிழகத்திற்கான இணையப் பாதுகாப்புக் கட்டமைப்புக்காக (CSA-TN), தமிழ்நாடு மின்னணு நிறுவனம் சென்னையிலுள்ள C-DAC நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்திற்குத் தமிழ்நாடு அரசு ரூ.21.39 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. தகவல் பாதுகாப்பு மேலாண்மை அமைப்பின் (ISMS) மூன்று தூண்களாக விளங்கும் மக்கள், செயல்பாடு மற்றும் தொழில்நுட்பம் ஆகியவை கீழ்க்கண்டவாறு வலுப்படுத்தப்பட்டுள்ளன:—

மக்கள்

அ. இணையம் தொடர்பான ஏதேனும் சிக்கல்கள்/அச்சுறுத்தல்கள் ஏற்பட்டால், துறை ஊழியர்களைத் தொடர்பு கொள்வதற்காக, துறைகளில், தலைமைத் தகவல் பாதுகாப்பு அலுவலர் (CISO)/தகவல் பாதுகாப்பு அலுவலர் (ISO) நியமிக்கப்பட்டு, அவர்களுக்கு இணைய பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்த பயிற்சி அளிக்கப்படுகிறது.

ஆ. அரசுத் துறை அதிகாரிகளுக்கு அவரவர் துறைகளின் தகவல் தொழில்நுட்ப உடைமைகளை எவ்வாறு பாதுகாப்பது மற்றும் இணையப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் நேர்ந்தால் எவ்வாறு புகார் அளிப்பது என்பது குறித்து வகுப்பறை மற்றும் மெய்நிகர் அடிப்படையிலான பயிற்சி தமிழகம் முழுவதும் வழங்கப்படுகிறது.

இ. சைபர் செக்யூரிட்டி இன்சிடென்ட் ரெஸ்பான்ஸ் டீம் – இணையச் சம்பவம் நடந்தால், உடனடியாகப் பதிலளிப்பதற்கும் மீட்டெடுப்பதற்கும் இணைய பாதுகாப்பு குறித்த பயிற்சிபெற்ற நிபுணர்கள் குழு ஒன்று செயல்பட்டு வருகிறது.

செயல்பாடு

அ. தேசிய தரம் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் (NIST) – NIST இணையப் பாதுகாப்புக் கட்டமைப்பானது,

2023 ஏப்ரல் 1]

இணையப் பாதுகாப்புத் திட்டத்தை ஒழுங்கமைக்கவும், மேம்படுத்தவும், ஒரு சக்திவாய்ந்த கருவியாகும். இது அடையாளம் காணுதல், பாதுகாத்தல், கண்டறிதல், பதிலளித்தல் மற்றும் மீளப்பெறுதல் ஆகிய 5 முக்கியச் செயல்பாடுகளின்மூலம் நிறுவனங்கள் தங்கள் இணையப் பாதுகாப்பு நிலையை உருவாக்குவதற்கும் மேம்படுத்துவதற்கும் உதவும் வழிகாட்டுதல்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளின் தொகுப்பாகும். மாநில அளவிலான இணையப் பாதுகாப்புத் திட்டத்திற்காக NIST – வழிகாட்டுதல்களைச் செயல்படுத்துவதில் CSA-TN முன்னோடியாக உள்ளது.

ஆ. அச்சுறுத்தல்களை அடையாளம் கண்டு பாதுகாப்பதற்கு வலுவான இணைய பாதுகாப்புக் கொள்கை வெளியீடு.

இ. CSA-TN-ன் உதவி மையம், அரசுத் துறைகளின் மீட்பு நடவடிக்கைகளுக்காக நிறுவப்பட்டுள்ளது. சீர்குலைத்தல்/ ஊடுருவல் /மீறல் போன்றவற்றை விரைவாக மற்றும் நம்பகத்தன்மையுடன் கண்டறிதல், பதிலளித்தல் மற்றும் இணையச் சம்பவங்களில் இருந்து மீளப்பெறுதல் ஆகியவற்றிற்கு இம்மையம் துணை நிற்கிறது.

ஈ. இணைய மீள் திறனுக்கான இணைய நெருக்கடி மேலாண்மைத் திட்டம். (Cyber Crisis Management Plan – CCMP) இணையத்தில் சிக்கலான ஒரு நேர்வு ஏற்பட்டால், ஒரு நிறுவனம் அதற்கு எவ்வாறு பதிலளிப்பது என்பது குறித்துத் தயாராக வரையறை தீட்டி வைத்திருப்பது, அதன் இணையப் பாதுகாப்புத் திட்டத்தின் வெற்றி மற்றும் தோல்விக்கு இடையேயான வித்தியாசத்தை உருவாக்குகிறது. நெருக்கடி மேலாண்மைக் குழு (Crisis Management Group – CMG) மற்றும் நெருக்கடி மேலாண்மைப் பிரிவு (Crisis Management Cell – CMC) ஆகியவை சம்பவங்களைக் கண்டறிந்து குறைக்கும் வேகம், அவற்றின் அபாயங்கள், செலவு மற்றும் வெளிப்பாட்டைக் கட்டுப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்துகிறது. ஒரு விரிவான இணைய நெருக்கடி மேலாண்மைத் திட்ட ஆவணம் உருவாக்கப்பட்டு வருகிறது.

உ. குறிப்பிட்ட இடைவெளியில் மாநிலம் முழுவதும் உள்ள அமைப்புகள்/பணி நிலையங்களைத் தணிக்கை செய்யத் திட்டமிடப்பட்டு ஏற்கெனவே செயல்பாடுகள் தொடங்கப்பட்டுவிட்டன.

தொழில்நுட்பம்

அ. முக்கியமான இணையச் சொத்துக்களைக் கண்காணிக்க முழுமையான பாதுகாப்புச் செயல்பாட்டு மையம் (SOC) மற்றும் வலையமைப்புச் செயல்பாட்டு மையம் (NOC) ஆகியவை CSA—TN-ன் ஒரு பகுதியாக நிறுவப்பட்டுள்ளன.

ஆ. பாதுகாப்புத் தகவல் மற்றும் நிகழ்வு மேலாண்மை (SIEM) தீர்வு, பாதுகாப்பு செயல்பாட்டு மையத்தின் (SOC—TN) ஒரு பகுதியாக முக்கியமான தகவல் தொழில்நுட்ப உடமைகள் மீதான தாக்குதல்களைத் தடுக்க நிறுவப்பட்டுள்ளது. நாளது வரையில், சுமார் 5,000 ப்ருட் ஃபோர்ஸ் பயனர் அணுகல் நிகழ்வுகள் கண்டறியப்பட்டன. சுமார் 60 சேவை நடவடிக்கைகளின் மறுப்பு கண்டறியப்பட்டன. சுமார் 4500 பக்கவாட்டு நகர்தல் நிகழ்வுகள் கண்டறியப்பட்டன.

இ. வைரஸ் தடுப்பு நிறுவல் – தலைமைச் செயலகத்தில் இணையத் தாக்குதலைத் தடுக்க, சுமார் 2,533 கணினிகள் அடையாளம் காணப்பட்டு முழுமையாக ஸ்கேன் செய்யப்பட்டன. சுமார் 813 கணினிகளில் வைரஸ் தடுப்பு (AV) மென்பொருள் நிறுவப்பட்டுள்ளது.

4. மின்ஆளுமை

4.1 ஆதார் நிரந்தரப் பதிவு மையங்கள் (PECs)

இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தினால் (UIDAI) அங்கீகரிக்கப்பட்ட முகமைகளுள் ஒன்றான எல்காட் நிறுவனம், ஆதார் பதிவு நடவடிக்கைகளைச் செயல்படுத்தி வருகிறது. இதன் பொருட்டு, எல்காட் நிறுவனம் 237 நிரந்தரப் பதிவு மையங்களை 33 மாவட்ட ஆட்சியரகங்கள், 18 மாநகராட்சித் தலைமை அலுவலகங்கள், 42 மாநகராட்சி மண்டல அலுவலகங்கள், 114 நகராட்சி அலுவலகங்கள், 8 பேரூராட்சி அலுவலகங்கள், 2 வருவாய்க் கோட்ட அலுவலகங்கள், 15 வட்டார வளர்ச்சி

2023 ஏப்ரல் 1]

அலுவலகங்கள், 4 கிராமப் பஞ்சாயத்து அலுவலகங்கள் மற்றும் 1 பொது வைப்புநிதி அலுவலகம் ஆகியவற்றில் ஏற்படுத்தியுள்ளது.

31-1-2023 வரை இந்த மையங்களின் வாயிலாக 87,89,309 ஆதார் பரிவர்த்தனைகள் நடந்துள்ளன.

வ. எண்.	நிதி ஆண்டு	ஆதார் புதிய சேர்க்கை எண்ணிக்கை	ஆதார் குடிவிவரவியல் புதுப்பித்தல் எண்ணிக்கை	மொத்த பரிவர்த்தனை எண்ணிக்கை
1	அக்டோபர் 2016 – மார்ச் 2017	5,40,741	17,764	5,58,505
2	ஏப்ரல் 2017 – மார்ச் 2018	6,71,052	9,43,269	16,14,321
3	ஏப்ரல் 2018 – மார்ச் 2019	3,63,500	13,22,042	16,85,542
4	ஏப்ரல் 2019 – மார்ச் 2020	2,64,333	10,92,930	13,57,263
5	ஏப்ரல் 2020 – மார்ச் 2021	1,30,963	9,36,257	10,67,220
6	ஏப்ரல் 2021 – மார்ச் 2022	2,56,765	10,97,249	13,54,014
7	ஏப்ரல் 2022 – ஜனவரி 2023	2,27,129	9,25,315	11,52,444
மொத்தம்		**24,54,483**	**63,34,826**	**87,89,309**

4.2 சமக்ரஷிக்க்ஷா—வின்கீழ் கல்வித் தொகுதிகளில் ஆதார் சேவை மையங்கள் நிறுவப்பட்ட விவரங்கள்

பள்ளி மாணவர்களுக்கு ஆதார் தொடர்பான சேவைகளை வழங்குவதற்காக, அனைத்து 385 கல்வித் தொகுதிகளிலும், 505 இடங்களில் ஆதார் சேவை மையத்தை நிறுவ, பள்ளிக் கல்வித்

துறை சமக்ரஷிக்ஷா, எல்காட் நிறுவனத்தை ஒரு பதிவு முகவராகத் தேர்வு செய்துள்ளது. இத்திட்டத்தின் முதல் கட்டமாக 3-1-2022 முதல் 120 வட்டார வள மையங்களில் 120 ஆதார் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த மையங்களின் வாயிலாக 31.01.2023 வரை 4,39,780 ஆதார் பரிவர்த்தனைகள் நடந்துள்ளன.

வ. எண்.	நிதி ஆண்டு	ஆதார் புதிய சேர்க்கை எண்ணிக்கை	ஆதார் குடி விவரவியல் புதுப்பித்தல் எண்ணிக்கை	மொத்த பரிவர்த்தனை எண்ணிக்கை
1	ஜனவரி 2022 – மார்ச் 2022	16,604	57,048	73,652
2	ஏப்ரல் 2022 – ஜனவரி 2023	68,242	2,97,886	3,66,128
மொத்தம்		**84,846**	**3,54,934**	**4,39,780**

5. கொள்முதல் பிரிவு

அரசுத் துறைகள்/பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் தன்னாட்சி அமைப்புகளுக்கு தகவல் தொழில்நுட்ப வன்பொருட்களுக்கான விருப்பக் கொள்முதல் முகமையாக 16.02.1999 தேதியிட்ட அரசாணை (நிலை) எண்.58-ன்படி எல்காட் செயல்பட்டு வருகிறது.

தகவல் தொழில்நுட்ப வன்பொருட்களான மேஜைக் கணினி, மடிக்கணினி, கணினி சேவையகம் (Server), அச்சுப் பொறி (Printer), நகல் பொறி (Copier), வருடு பொறி (Scanner), தடையில்லா மின்சாதனம் (UPS) மற்றும் இதர தகவல் தொழில்நுட்பச் சாதனங்களை அரசுத் துறை / அரசுத் துறை சார்ந்த நிறுவனங்களுக்குக் கொள்முதல் செய்து எல்காட் வழங்கி வருகிறது. மேஜைக் கணினி, மடிக்கணினி, அச்சுப் பொறி (Printer) மற்றும் இதர தகவல் தொழில்நுட்ப சாதனங்களை அதிக அளவில் கொள்முதல் செய்வதால், தயாரிப்பாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள், எல்காட்டின் ஒப்பந்தப்புள்ளிகளில் விருப்பமுடன் பங்கேற்பதால் நியாயமான விலையில் தரமான பொருட்களைக் கொள்முதல் செய்து வழங்குகிறது.

2023 ஏப்ரல் 1]

அரசுத் துறைகளுக்குத் தேவையான வன்பொருட்களை, இரண்டு விதமான ஒப்பந்தப்புள்ளிச் செயல்முறைகள்மூலம் எல்காட் கொள்முதல் செய்கிறது.

1. ஒப்பந்த விலைக் கொள்முதல் – முதன்மையான விற்பனையாளர்களிடம் விகித ஒப்பந்தப்புள்ளிமூலம் அரசுத் துறைகளுக்குத் தேவையான வன்பொருட்களை ஆண்டு முழுவதும் ஒரே விலையில் கொள்முதல் செய்து வழங்குவது

2. துறையின் தனித்துவமான தேவைகளுக்கான ஒப்பந்தப்புள்ளி – அரசுத் துறைகளுக்குத் தேவையான தனித்துவமான தகவல் தொழில்நுட்ப வன்பொருளைத் தனி ஒப்பந்தப்புள்ளிமூலம் கொள்முதல் செய்து வழங்குவது

எல்காட் பல்வேறு வகையான வன்பொருட்களை வகைப்படுத்தி விகித ஒப்பந்தப்புள்ளி வாயிலாகக் கொள்முதல் செய்வதால் சிறந்த விலையில் பெற்றுத்தர முடிகிறது. எல்காட்டின் மின்கொள்முதல் இணைய முகப்பு மூலம் வன்பொருளின் விலைப்பட்டியல் பெறுதல், பணம் செலுத்திய விவரத்தை உள்ளீடு செய்தல் மற்றும் கொள்முதல் ஆணை வழங்கக் கோருதல் ஆகியவற்றை அரசுத் துறைகள் மேற்கொள்ள முடியும். இந்தக் கொள்முதல் இணைய முகப்பு மூலம் அரசுத் துறையின் கொள்முதல் நடவடிக்கைகள் நெறிப்படுத்தப்பட்டு, வெளிப்படைத்தன்மையுடன் செயல்பட ஏதுவாக உள்ளது. எல்காட் 2022–2023 ஆம் நிதியாண்டில் ரூ.300 கோடி மதிப்பிலான தகவல் தொழில்நுட்ப வன்பொருள் சாதனங்களையும் வரும் 2023–2024 ஆம் நிதியாண்டில் ரூ.400 கோடி மதிப்பிலான தகவல் தொழில்நுட்ப வன்பொருள் சாதனங்களையும் கொள்முதல் செய்து வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரசுத் துறைகளின் தேவைக்கேற்ப பழைய பதிவுகள் / புத்தகங்கள் / ஆவணங்கள்/ கையெழுத்துப் பிரதிகள்/பனை ஓலைச் சுவடிகள் போன்றவற்றை மின்னுருவாக்கப் படங்களாக மாற்றும் பணியை எல்காட் செய்து வருகிறது.

காணொலிக் காட்சிமூலம் பல்வேறு அரசுத் துறைகளின் நலத்திட்டப் பணிகளைத் துவங்குதல் மற்றும் கூட்டங்களை நடத்துதல் போன்றவற்றை எல்காட் மேற்கொண்டு வருகிறது. அரசுத் துறைகள் மற்றும் முகமைகள், தமிழ்நாடு அரசுப்

[2023 ஏப்ரல் 1

பணியாளர் தேர்வாணையம் போன்றவை நடத்தும் தேர்வுகளைக் கண்காணிப்பதற்குத் தேவையான கருவிகள் மற்றும் சேவைகளையும் எல்காட் வழங்கி வருகிறது.

தலைமைச் செயலகத்தின் வலையமைப்பு வசதி மற்றும் அங்குள்ள முதன்மைக் கட்டடம் மற்றும் நாமக்கல் கவிஞர் மாளிகையின் கண்காணிப்புக் கருவிகளை முழு நேரமும் (24X7) கண்காணிக்கும் அமைப்புகளை எல்காட் பராமரிக்கிறது. இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களுக்கான மடிக்கணினி, கையடக்கக் கணினி (Tablet) வழங்கும் பணிகளையும் எல்காட் மேற்கொள்கிறது.

அத்தியாயம்-III
மின்-ஆளுமை இயக்குநரகம்
மற்றும்
தமிழ்நாடு மின்-ஆளுமை முகமை

1. முன்னுரை

தகவல் தொழில்நுட்பம் என்பது ஆளுமையை எளிமையாகவும், வெளிப்படையாகவும், பொது மக்களை மையப்படுத்தியதாகவும் உருமாற்றிடும் ஒரு கருவியாகும். இக்குறிக்கோளை எய்திட 2006 ஆம் ஆண்டில் மின் ஆளுமை இயக்குநரகம் உருவாக்கப்பட்டது. திறமையான மற்றும் துரிதமான அணுகுமுறை இத்துறைக்குத் தேவைப்பட்டது. எனவே, மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, தகவல் தொழில்நுட்பக் கருவிகள்மூலம் அரசின் சேவைகளை குறைந்த செலவில் திறமையாக வழங்குவதற்காக, 2007 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975-ன்கீழ் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNeGA) பதிவுசெய்யப்பட்ட ஒரு சங்கமாக உருவாக்கப்பட்டது. மின் ஆளுமை துறையின் இயக்குநர் அலுவலால் தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் முதன்மை செயல் அலுவலராகச் செயல்படுகிறார்.

2. நிருவாக அமைப்பு

2.1 மின்ஆளுமை இயக்குநரகம் மற்றும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை

அரசாணை (நிலை) எண். 10, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் (பி.1) துறை, நாள் 10.3.2023 மூலமாக

2023 ஏப்ரல் 1]

மின்னாளுமை இயக்குநரகம் மற்றும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மறுகட்டமைப்பு செய்யப்பட்டுள்ளது.

மின் ஆளுமை இயக்குநரகம் மற்றும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை ஆகியவை அயற்பணியிலான அரசு அலுவலர்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையின் மூத்த தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்ட குழுவால் வழிநடத்தப்படுகின்றது.

மின் ஆளுமை இயக்குநரகத்திற்கு 61 தொழில்நுட்பப் பணியிடங்களும், 16 தொழில்நுட்பம் சாரா பணியிடங்களும், மேலும், தமிழ்நாடு மின்ஆளுமை முகமைக்கு 188 தொழில்நுட்பப் பணியிடங்களும், 13 தொழில்நுட்பம் சாரா பணியிடங்களும் மறுகட்டமைப்பிற்குப்பின் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இந்தப் பணியிடங்கள் அனைத்திற்கும் 31.12.2026 வரை ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

2.2 மாவட்ட மின் ஆளுமை சங்கங்கள்

மின்–மாவட்டத் (e–District) திட்டம், தேசிய மின் ஆளுமை திட்டத்தின் (NeGP)கீழ் செயல்படுத்தப்படும் மாநிலத்தின் ஒரு குறிக்கோள் திட்டமாகும். மாவட்ட அளவில் பொது மக்களுக்கு அதிக அளவில் வழங்கப்படும் சேவைகளை மின்னணு முறையில் வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். எனவே இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட மின் ஆளுமை சங்கங்கள் உருவாக்கிட அரசு ஆணையிட்டுள்ளது. இச்சங்கங்கள் சென்னை தவிர்த்த பிற மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் செயல்படுகிறது. சென்னை மாவட்டத்தில், பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையர் அதன் தலைவராகச் செயல்படுகிறார். மாவட்ட இ–சேவை மையச் செயல்பாடுகளிலிருந்து கிடைக்கும் வருவாயில் 5 சதவிகிதம் இச்சங்கங்களுக்கு வழங்கப்பட்டு வந்தது. 01.03.2023 முதல் இந்த வருவாய் பகிர்வானது 10 சதவிகிதமாக உயர்த்தி வழங்கப்படுகிறது.

3. டிஜிட்டல் தமிழ்நாடு (DiTN)

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசுத் துறைகளும் தங்கள் சேவைகள் மற்றும் செயல்பாடுகளை டிஜிட்டல் முறையில் மாற்றியமைக்கச் செய்வதே டிஜிட்டல் தமிழ்நாடு (DiTN)

திட்டத்தின் நோக்கமாகும். இது மக்களுக்கு வெளிப்படையான மற்றும் அவர்களை மையப்படுத்திய ஆளுமைக்கான பாதையை உருவாக்கும்.

3.1 பொதுமக்களுக்கான அரசு சேவைகள்

அ) பொது சேவை (இ-சேவை) மையங்கள்

பொதுமக்களுக்கான அரசின் சேவைகள், மின்னணு முறையில் அரசு இ-சேவை மையங்கள் வாயிலாக பொதுமக்களின் இருப்பிடத்திற்கு அருகிலேயே வழங்கப்பட்டு வருகிறது. இந்த இ-சேவை மையங்கள், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற தனியார் மையங்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், மீன் வளம் மற்றும் மீனவர் நலத் துறை, கிராமப்புற தொழில் முனைவோர், சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் மற்றும் படையினர் நகரம் (கண்டோன்மெண்ட் போர்டு) வாயிலாக அமைக்கப்பட்டு, பொதுமக்களுக்கு அரசின் சேவைகள் அவர்களின் இருப்பிடத்தின் அருகாமையிலேயே வழங்கப்பட்டு வருகின்றன.

17.03.2023 அன்று வரை, தமிழ்நாடு முழுவதும் மொத்தம் 9,455 இ-சேவை மையங்கள் பல்வேறு சேவை முகவர்கள் வாயிலாக அமைக்கப்பட்டு, தமிழ்நாடு மின் ஆளுமை முகமையால் 9,720 இ-சேவை பயனர் குறியீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

அட்டவணை 1: அரசு இ—சேவை மையங்களை நடத்தும் முகமைகளின் பட்டியல் (20.03.2023 அன்றுள்ளவாறு)

வ. எண்.	சேவை முகவர்கள்	மையங்களின் எண்ணிக்கை	இ-சேவை முகப்புகளின் எண்ணிக்கை
1.	மகளிர் திட்டம் – தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்	1,987	2,004
2.	தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள்	3,406	3,412
3.	தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்	506	748

2023 ஏப்ரல் 1]

வ. எண்.	சேவை முகவர்கள்	மையங்களின் எண்ணிக்கை	இ-சேவை முகப்புகளின் எண்ணிக்கை
4.	தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற தனியார் மையங்கள்	1,578	1,578
5.	மீன் வளம் மற்றும் மீனவர் நலத் துறை	67	67
6.	கிராமப்புற தொழில் முனைவோர்	1,674	1,674
7.	படையினர் நகரம் (கண்டோன்மெண்ட் போர்டு)	3	3
8.	சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம்	234	234
	மொத்தம்	9,455	9,720

ஆ) மக்கள் வலைதளம்

கடந்த 2018 ஆம் ஆண்டில், மக்கள் வீட்டில் இருந்தும் அல்லது எங்கிருந்து வேண்டுமானாலும், அவர்களது கைபேசி மற்றும் மடிக்கணினி வாயிலாக மின்னணு சேவைகளை அணுகி, விண்ணப்பிக்க வகைசெய்திடும் மக்கள் வலைதளம் துவக்கப்பட்டது.

அதன் பிறகு, இவ்வலைதளத்தின்மூலம் செய்யப்படும் பரிவர்த்தனைகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. மக்கள் வலைத் தளத்தில் கடந்த 2018–ஆம் ஆண்டில் 2 சதவீதம் மட்டுமே இ–சேவை பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில், 2022–ஆம் ஆண்டில் அது 31 சதவீதமாக உயர்ந்துள்ளது. 50 சதவீதத்திற்கும் மேற்பட்ட மின்னணு சேவை பரிவர்த்தனைகள், மக்கள் வலைதளம் வாயிலாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே தற்போதைய இலக்காகும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

அட்டவணை 2: ஆண்டு வாரியாக பரிவர்த்தனைகளின் எண்ணிக்கை

ஆண்டு வாரியாக பரிவர்த்தனை எண்ணிக்கை ஜனவரி 2016–டிசம்பர் 2022			
ஆண்டு (ஜனவரி – டிசம்பர்)	இ – சேவை (CSC)	இ–சேவை மக்கள் வலைதளம்	மொத்தம்
2016	1,02,91,198	—	1,02,91,198
2017	1,12,62,238	—	1,12,62,238
2018	1,04,11,812	1,83,304	1,05,95,116
2019	97,63,563	9,49,460	1,07,13,023
2020	75,86,335	14,00,513	89,86,848
2021	1,55,64,179	24,82,207	1,80,46,386
2022	92,30,915	28,64,841	1,20,95,756
மொத்தம்	7,41,10,240	78,80,325	8,19,90,565

இ) அனைவருக்கும் இ-சேவை

இ–சேவை மையங்களை எளிதாக அமைத்திட ஏதுவாக, "அனைவருக்கும் இ–சேவை" என்ற திட்டம் 15–3–2023 அன்று துவக்கப்பட்டது. இத்திட்டம் தொழில்முனைவோர்கள் ஒவ்வொரு கிராமங்கள், வார்டுகள் மற்றும் குடியிருப்புப் பகுதிகளில் இ–சேவை மையங்களை அமைத்திட வழிவகுக்கும். தகுதி வாய்ந்த அனைத்து மக்களும் சில அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்தபின், இணையவழிமூலம் விண்ணப்பித்து இ–சேவை மையங்களைத் துவங்கலாம்.

18004256000 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணின்மூலம் இ–சேவை மையங்கள் மற்றும் சேவைகள் குறித்து, ஆப்பரேட்டர்கள் மற்றும் பொதுமக்களிடம் இருந்து கருத்துகள் மற்றும் புகார்களைச் சேகரிக்க, ஒப்புகை மற்றும் கருத்து பெறும் அமைப்பு ஒன்று செயல்படுத்தப்பட்டுள்ளது. இது ஒரு மைய அமைப்பின்மூலம் கருத்துகளைப் பெற்று குறைகளைத் தீர்க்க உதவும்.

2023 ஏப்ரல் 1]

4. டிஜிட்டல்மயமாக்கப்பட்ட அலுவலகம் — தமிழ்நாடு — மின் அலுவலகம்

மின் அலுவலகப் பயன்பாட்டுத் தொகுப்பு என்பது அரசு அலுவலகங்களில் உள்ள வழக்கமான பணிகளைத் தானியங்கிமயமாக்கும் பயன்பாட்டு தொகுப்பாகும். அரசின் கோப்புகளைக் கையாளும் ஒவ்வொரு பணியாளருக்கும் ஒரு தனித்துவமான பெயர் அடிப்படையிலான பயனர் குறியீடு வழங்கப்பட்டு, அதன்மூலம் அவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பொருண்மைகள் தொடர்பான கோப்புகளைக் கையாள வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், ஒவ்வொரு துறையும் ஒற்றை அலகாகக் கட்டமைக்கப்பட்டுள்ளதால், அதன்கீழ் உள்ள அலுவலகங்களின் கோப்புகளின் நிலுவையைத் துறைத் தலைவரால் எளிதில் கண்காணிக்க முடியும்.

தமிழ்நாடு அரசின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள அனைத்து அலுவலகங்களையும் மின்மயமாக்கும் திட்டத்தை தமிழ்நாடு மின் ஆளுமை முகமை முன்னெடுத்துச் செல்கிறது. முதல் கட்டமாக, 07.03.2022 அன்று தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகளிலும், 3,645 பயனர்களை உள்ளடக்கி மின்அ-லுவலகத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இரண்டாம் கட்டமாக 30-6-2022 அன்று அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் மற்றும் அதன்கீழ் உள்ள அலுவலகங்களில் 23,303 பயனர்களை உள்ளடக்கி மின்அலுவலகத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. மூன்றாம் கட்டமாக, இதுவரை 44 துறைத் தலைமையகங்களில், 15,104 பயனர்களுடன் கூடிய மின் அலுவலகப் பயன்பாட்டுத் தொகுப்பு செயல்படுத்தப்பட்டுள்ளது. நாளதுவரை, மின் அலுவலகத் திட்டம் செயல்படுத்தப்பட்ட அலுவலகங்களில், 14,38,067 மின்கோப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன, இது ஆளுமையை மேம்படுத்துவதில் மின்அலுவலகப் பயன்பாட்டின் செயல்திறனை நிரூபிக்கிறது.

மின்னணுக்கோப்பு மேலாண்மை அமைப்பு, காகிதமில்லா அலுவலகத்தை உருவாக்கவும், கோப்புகளின்மீது விரைவாக நடவடிக்கை எடுக்கவும், நிருவாகத்தை மேம்படுத்தவும் உதவுகிறது. அலுவலகத்திற்குள்ளும் மற்றும் அதன் சார்பு அலுவலகங்களுக்கிடையேயும் நடைபெறும் தகவல் பரிமாற்றங்கள் நிகழ்நேர வேகத்தில் நடைபெறுவதால் கோப்புகள் மீதான முடிவுகள் மேற்கொள்ளும் திறனை மேம்படுத்தி உள்ளது. மின் அலுவலகத் திட்டம் வெளிப்படைத்தன்மையை

மேம்படுத்துவதன்மூலம் கோப்புகளைக் கண்காணித்திடவும், அவற்றின் நிலையினை எல்லோரும் எல்லா நேரங்களிலும் தெரிந்துகொள்வதற்கும் வழிவகுக்கிறது. மேலும், கோப்புகள் மீதான முடிவெடுக்கும் தரம் மற்றும் வேகத்தைக் கண்காணிப்பது எளிதாக்கப்படுவதால், பொறுப்புணர்வு அதிகரிக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, இத்திட்டம், தரவுப் பாதுகாப்பு மற்றும் சீரான தரவு ஒருங்கிணைப்பினை உறுதி செய்கிறது. இத்திட்டம் ஆற்றல் மிக்க நிர்வாகத்தை நோக்கி நம் மாநிலத்தைப் பயணிக்கச் செய்வதுடன், மக்களுக்கு சேவைகளை சிறப்பாக வழங்குவதை முக்கிய இலக்காகக் கொண்டுள்ளது.

5. தமிழக அரசின் கொள்கை முடிவுகளுக்கான ஆதரவு அமைப்பு (TN Decision Support System – (DeTN))

5.1 தரவுத்தூய்மை

தரவு சார்ந்த முடிவுகளுக்கான ஆதரவு கட்டமைப்பானது, அரசின் திட்டங்கள் மற்றும் நிகழ்வுகளை வடிவமைத்தல், மேம்பாடு மற்றும் செயல்படுத்துதல் ஆகியவற்றில் உதவுவதற்காகவும் நிருவாகத்தை மேம்படுத்தவும் தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்பவியல் (இ1) துறையின் 23–9–2021 நாளிட்ட அரசாணை எண்.17–ன்மூலம், தரவுத்தூய்மைத் திட்டத்தை மேற்கொள்வதற்கான முதன்மை நிறுவனமாக தமிழ்நாடு மின்ஆளுமை முகமை (TNeGA) நியமிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின் ஆளுமை முகமையானது அரசுத் துறைகளின் மின்னணுத் தரவுகளை ஒருமுறை சேகரிக்கிறது, அதன்பிறகு, அத்தரவுகளில் அவ்வப்போது ஏற்படும் மாற்றங்கள், இடைமுகச் செயல் நிரலி (Application Program Interface) மூலம் தமிழ்நாடு மின்ஆளுமை முகமையால் துறைகளிடமிருந்து பெறப்படுகின்றது. தரவுத் தூய்மைத் திட்டம், சரியான பயனாளிகளைக் கண்டறியவும், தகுதியற்றவர்களைக் களையெடுக்கவும், இறந்தவர்களின் தரவுகளைப் பயனாளிகளின் பட்டியலில் இருந்து நீக்கவும், தகுதியுள்ளப் பயனாளிகளைக் கொண்டதொரு தரவுத்தளத்தை உருவாக்கவும், அரசாங்கத்திற்கு முடிவெடுக்கும் ஆதரவு அமைப்பாகச் செயல்படுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், தனித்த தரவுகள் எனும் நிலையை மாற்றி, துறைகளுக்கிடையே தரவு பகிர்தலை ஏற்படுத்துகிறது.

2023 ஏப்ரல் 1]

தகுதியில்லாத பயனாளிகளைக் களையெடுத்ததன்மூலம் நகைக்கடன் தள்ளுபடி திட்டம் மற்றும் சுய உதவிக்குழு கடன் தள்ளுபடி திட்டம் ஆகியவற்றில் ஆயிரக்கணக்கான கோடி அளவிற்கு அரசின் நிதியானது சேமிக்கப்பட்டது. அமைப்பு சாரா தொழிலாளர்கள் மற்றும் குடும்ப அட்டை இல்லாத மாற்றுத் திறனாளிகள் கண்டறியப்பட்டு, புதிய குடும்ப அட்டைகள் வழங்குவதற்கான முடிவுகள் பகிரப்படுகின்றன. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட அட்டைகள் இல்லாத வறுமை கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்கள் ஆய்வுசெய்யப்பட்டு, புதிய CMCHIS அட்டைகளை வழங்க சுகாதாரத் துறையால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

5.2 முதலமைச்சரின் தகவல் பலகை

முதலமைச்சரின் தகவல் பலகை 23.12.2021 அன்று தொடங்கப்பட்ட ஒரு உள் ஆளுகைக்கான கருவியாகும். மேலும், இது தமிழ்நாடு மின் ஆளுமை முகமையில் உள்ள வணிக நுண்ணறிவு உருவாக்குபவர், பணி ஆய்வாளர் மற்றும் ஒருங்கிணைப்பு தரவு ஆய்வாளர் ஆகியோரைக் கொண்ட குழுவால் வடிவமைக்கப்பட்டது. நிகழ்நேர தகவல் அல்லது கள மட்டத்திலிருந்து அவ்வப்போது சேகரிக்கப்படும் தரவுகளைக் கொண்டு தினசரி, மாதாந்திரம் மற்றும் ஆண்டு அடிப்படையில் புதுப்பிக்கப்பட்ட தகவலை வழங்குவதே இத்தகவல் பலகையின் நோக்கமாகும்.

இத்தகவல் பலகைகள் தொடங்கப்பட்டதிலிருந்து, பல்வேறு துறைகள், திட்டங்கள், காவல் துறை முயற்சிகள் மற்றும் ஒட்டுமொத்த நிருவாகத்தின் செயல்திறனைக் கண்காணிப்பதில் இன்றியமையாத அங்கமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தகவல் தளமாக முதலில் வடிவமைக்கப்பட்ட இத்தகவல் பலகைகள், தற்போது ஆதாரம் சார்ந்த முடிவெடுப்பதில் பயனுள்ள ஒரு தளமாகப் பரிணமித்துள்ளது.

தகவல் பலகைகள் 32 துறைகள் மற்றும் 100-க்கும் மேற்பட்ட இயக்குனரகங்களின் தரவுகளை உள்ளடக்கியுள்ளது. 135-க்கும் மேற்பட்ட தகவல் பலகைகள் உருவாக்கப்பட்டு, இத்தளம் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருகிறது. தகவல் பலகைக் குழுவானது தரவுகளின் நிலைத்தன்மையை கவனமாக அணுகி, தரவின் நேர்மையை உறுதி செய்கிறது.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

ஒவ்வொரு தகவல் பலகையும் ஒவ்வொரு துறையின் குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் தனித்துவமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள் ஒவ்வொரு இயக்குநரகத்திலும் இறுதி செய்யப்பட்டு, ஒரு வணிகத் தேவை குறித்த ஆவணம் தொகுக்கப்பட்டுள்ளது. துறைகளில் இருந்து அனுமதி பெற்றபின், தகவல் பலகைகள் உருவாக்கப்பட்டு, தொலைபேசி எண்ணுடன் இணைந்த ஒரு முறை மட்டுமே பெறக்கூடிய கடவுச் சொல்லுடன் கூடிய பாதுகாப்புடன் கட்டுப்படுத்தப்பட்ட அணுகல் வழங்கப்படுகிறது. தகவல் பலகைகளில் இருந்து எடுக்கப்பட்ட கால மற்றும் மாதாந்திர அளவிலான அனுமானங்கள், பகுப்பாய்வுக் குறிப்புகள் வடிவில் அந்தந்தத் துறைகளுடன் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன.

தகவல் பலகைகளைச் செயல்படுத்தும்போது, பல இயக்குநரகங்கள் மற்றும் துறைகளில் இணையவழியல்லாத செயல்முறைகள் மற்றும் சிரமமான, தேவையற்ற நடைமுறைகள் ஆகியவற்றால் ஏற்படும் திறமையின்மை கண்டறியப்பட்டது. இதை நிவர்த்தி செய்திடும் வகையில், ஒவ்வொரு செயல்முறையையும் மதிப்பீட்டுப் பகுப்பாய்வு செய்து, அவற்றைக் கண்காணிக்கவும், செயல்முறையை எளிதாக்கவும், பயனுள்ள மற்றும் தேவைப்படும் மாற்றங்களை முன்மொழியவும் ஒரு குழு உருவாக்கப்பட்டது. மேலும் அச்செயல்முறைகளின் பின்னணி குறித்த வரலாறு, செயலோட்ட வரைபடங்கள் (Flow Chart) வழியாக அவற்றின் தற்போதைய பொருத்தத்திற்காக ஆராயப்படுகிறது.

ஒட்டுமொத்தமாக, முதலமைச்சரின் தகவல் பலகையானது தமிழ்நாட்டின் நிருவாகத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் தரவு சார்ந்த முடிவெடுப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. தகவல் பலகைகளின் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு காலமுறை ஆய்வுக் கூட்டங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டு, அவரது வழிகாட்டுதல்கள் அவ்வப்போது பெறப்படுகின்றன. அரசுத் துறைச் செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்கள் திட்டங்களைச் செயல்படுத்துவதில் ஏதேனும் குறைபாடுகள் இருந்தால் அவற்றின் தேக்கநிலையை சரிசெய்திட, தகவல் பலகைகளை அதிக அளவில் பயன்படுத்துகின்றனர். இடைமுக நிரலியை (API) பயன்படுத்தி துறைகளின் இணையதளத் தரவுகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதால் இத்தகவல் பலகைகளின் செயல்திறன் மற்றும் ஆற்றல் மேம்படுத்தப்பட்டு, நல்ல நிருவாகத்தை வழங்க வழிவகை செய்கிறது.

2023 ஏப்ரல் 1]

6. தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் முக்கிய திட்டங்கள்

6.1 மாநில குடும்ப தரவுதளம் (SFDB)

மாநில குடும்ப தரவுதளமானது (SFDB) *அரசின் திட்டங்களைத் திட்டமிடுதல், செயல்படுத்துதல் மற்றும் நிறைவேற்றுதல் ஆகியவற்றிற்கு உதவுவதன்மூலம், நிருவாகத்தை மேம்படுத்துவதற்கான தரவு சார்ந்த முடிவுகளுக்கான ஆதரவு உட்கட்டமைப்பாக விளங்கும். மக்களுக்கு வெளிப்படையான மற்றும் தடையற்ற சேவை வழங்கலை உறுதி செய்வதற்காக பல்வேறு துறைகளுக்கு இடையே தரவு ஒத்திசைவை செயல்படுத்துவதன்மூலம் தற்போதுள்ள துறையின் உட்கட்டமைப்பை இது வலுவாக்குகிறது. தமிழ்நாடு அரசின் ஒவ்வொரு துறைக்கும் அவற்றின் தனித்த செயலிகள் மற்றும் தொடர்புடைய தரவுதளங்கள் உள்ளன. அத்தரவுதளங்கள் அனைத்தும்* SFDB*-ன் மைய தரவுதளத்தை உருவாக்கப் பயன்படுத்தப்படும். மேலும், இது மாநிலம் முழுவதும் உள்ள பயனாளிகளைத் தனித்துவமாக அடையாளம் காணப் பயன்படுகிறது. இது அரசின் சலுகைகள் மற்றும் சேவைகளை மக்களுக்கு விரைவாகவும் முனைப்புடனும் வழங்கிட வழிவகை செய்யும்.*

*மக்கள் வலைதளம் மற்றும் பின் அலுவலக வலைதளம் (*Backoffice*) ஆகியவை படிப்படியாக வெளியிடப்படும்.*

6.2 தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு (TNGIS)

புவிசார் தகவல் அமைப்பு (GIS) *என்பது இடம்சார்ந்த மற்றும் இடம்சாரா தரவுகளை இணைப்பதன்மூலம் மேலாண்மை, பகுப்பாய்வு மற்றும் முடிவெடுப்பதற்கான ஒரு கருவியாகத் திகழ்கிறது. தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு* (TNGIS) *மாநிலத்திற்கான பொதுவான புவிசார் தகவல் அமைப்பு தளத்தை உருவாக்கும் நோக்கத்துடன் நிறுவப்பட்டது, இதில் அனைத்துத் துறை சார்ந்த சொத்துக்கள், பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படும் வசதிகள், திட்டங்கள் (நிலத்தடி தரவு உட்பட செயற்கைக்கோள்கள், ஆளில்லா விமானங்கள், வான்வழி மற்றும் நிலப்பரப்பு தளங்களிலிருந்து தொலைதூர உணர்தல் தரவு) ஆகிய புவிசார் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி இடம்சார்ந்த தரவுத்தொகுப்பாக காட்சிப்படுத்தப்படுகிறது. அனைத்து துறைகளின் தடையற்ற இடம்சார்ந்த தரவுத்தொகுப்புகள் மற்றும்*

தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்புமூலம் அவற்றின் ஒருங்கிணைந்த மேலாண்மை தகவல் அமைப்பு தரவுகள் துறைகளுக்கிடையே பகிரப்பட்டு, மாநிலத்தில் ஒருங்கிணைந்த திட்டமிடல் மற்றும் முடிவெடுக்கும் செயல்முறைக்குப் பயன்படுத்தப்படும்.

தற்போது, தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு பல்வேறு துறைகளில் இருந்து தொகுக்கப்பட்ட 300 இடம்சார்ந்த தரவு அடுக்குகளை நிர்வகித்து வருகிறது. அவை தேவைப்படும் துறைகளுடன் பகிர்ந்துக் கொள்ளப்பட்டன. கடந்த ஆண்டில் சுமார் 70 அடுக்கு தரவுகள் சுமார் 20 துறைகளுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளன. கிடைக்கப்பெற்ற தரவுகள் தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு இணையதளம் https://tngis.tn.gov.in-ல் உள்ளீடு செய்யப்படுகிறது. இதன் அடிப்படையில் துறை சார்ந்த செயலிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

2022–ல் முடிக்கப்பட்ட செயல்பாடுகளின் முக்கிய சிறப்பம்சங்கள்:

அ) உயர் மதிப்புடைய உள்கட்டமைப்பு திட்டங்களின் உண்மைநிலை மற்றும் நிதி முன்னேற்றத்தைக் கண்காணிக்க இ-முன்னேற்றம் செயலி பயன்படுகிறது.

ஆ) ஊரக வளர்ச்சி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைகளின் உதவியுடன் நிருவாக எல்லைகளை உருவாக்குதல்.

இ) தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு, 10 துறைகளுடன் ஒருங்கிணைந்த 29 இடம்சார்ந்த அடுக்குகளை பிரதம மந்திரி கதிசக்தி இணைய தளத்துடன் பகிர்ந்துள்ளது.

ஈ) ஊரக வளர்ச்சி, கலால் துறை, மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம், நெடுஞ்சாலைகள் துறை போன்றவற்றுக்கான செயலிகளை உருவாக்குதல்.

2023 ஆம் ஆண்டில், தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பின்கீழ் பின்வரும் நடவடிக்கைகளை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளன:

அ) கூடுதல் வசதிகளுடன் ஏற்கெனவே உள்ள இணையதளத்தை மறுசீரமைத்து. அனைத்து வகையான இடம்சார்ந்த பகுப்பாய்வைச் செய்வதற்கும், இடைமுக நிரலிகள்மூலம் தரவை பகிர்வதற்கும் மற்றும் குறிப்பிட்ட ஆய்வுப்பொருள் கொண்ட தகவல் பலகைகளை உருவாக்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 1]

ஆ) ஒவ்வொரு பருவத்திலும் விளையும் அனைத்து பயிர் குறித்த தகவல்களையும் புவிசார் சரிபார்ப்புடன் பதிவு செய்ய கைபேசி /இணைய செயலியை உருவாக்குதல். இத்தரவு, அடங்கல் தரவுத்தளத்தைப் புதுப்பிப்பதற்கும், திட்டமிடல் மற்றும் கொள்கை வகுப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய புள்ளிவிவரங்களைத் தயாரிப்பதற்கும் பயன்படுத்தப்படும்.

இ) சொத்துக்களின் நிலஅளவை எண், தற்போதைய இடம், அருகிலுள்ள வசதிகள் / அரசாங்கத்தால் வழங்கப்பட்டு வரும் சேவைகள் ஆகியவற்றின் அடிப்படையில் சொத்து விவரங்களைப் பெறுவதற்கான செயலியை உருவாக்குதல்.

ஈ) திட்டமிடல் மற்றும் முடிவெடுக்கும் செயல்முறைக்கான அனைத்து அரசாங்க சொத்துக்கள் மற்றும் வசதிகளை வரைபடமாக்குவதற்கான கைபேசி செயலியை உருவாக்குதல்.

உ) அனைத்து உட்கட்டமைப்பு தொடர்பான திட்டப் பணிகளின் உண்மை நிலை மற்றும் நிதி முன்னேற்றத்தைக் கண்காணிக்க புவிசார் தகவல் அமைப்பு அடிப்படையிலான திட்ட மேலாண்மைப் பயன்பாட்டை உருவாக்குதல்,

அனைத்து பயனர் துறைகளுடனும் கலந்தாலோசித்து, அனைத்து இடம்சார்ந்த தரவு அடுக்குகளுக்கான தரநிலைகளை தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு தயாரித்து வெளியிடும். அனைத்து இடம்சார்ந்த தரவு உள்ளடக்கங்களுக்கான தரவு பகிர்வு/பரிமாற்றக் கொள்கையின் அடிப்படையில், தமிழ்நாட்டின் புவியியல் கொள்கை தயாரிக்கப்படும். தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்புக் குழு பல்வேறு துறைகளின் புவிசார் தகவல் குறித்த தேவைகளைப் பூர்த்தி செய்திடும் வகையில் வலுப்படுத்தப்படும்.

6.3 உங்கள் அரசை அறிந்து கொள்ளுங்கள் இணையதளம் (KYG Website)

டிஜிட்டல் உலகின் சகாப்தத்தில், ஒரு அரசைப் பற்றியும் அதன் செயல்பாடுகளைப் பற்றியும் தெரிந்துகொள்ளும் முதன்மை தளமாக இணையதளம் உள்ளது. அதன் முதற்படியாக, தமிழ்நாடு

அரசின் இணையதளமான tn.gov.in மறுவடிவமைப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன் முதல் கட்டமாக, தற்போதுள்ள மாநில இணையதளத்தை உலகத்தரம் வாய்ந்த வடிவமைப்புடனும், பயனர்கள் எளிய முறையில் அணுகும் வகையிலும், மாற்றுத் திறனாளிகளும் பயன்படுத்தும் வகையிலும் மறுவடிவமைப்பதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. அரசின் திட்டங்கள் மற்றும் சேவைகள் குறித்த தகவல்களை பரப்பும் ஊடகமாக இந்த இணையதளம் செயல்படும். இதன் முதற்கட்டமாக, செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான திறன்மிகு உரையாடல் (CHATBOT) வசதியை இத்தளம் கொண்டிருக்கும். இந்த திறன்மிகு உரையாடல்மூலம், அரசின் திட்டங்கள் மற்றும் சேவைகளின் விவரங்களை பொதுமக்கள் கண்டறியலாம். வாக்கெடுப்புகள், போட்டிகள், பிரச்சாரம் மற்றும் பொதுக் கூட்டங்கள் ஆகியவற்றின்மூலம் பொதுமக்களுடன் திறம்பட இணைந்து ஈடுபடுவதற்கான அம்சங்களை இந்த இணையதளம் கொண்டிருக்கும். பல்வேறு அரசுத் துறைகளால் உருவாக்கப்பட்ட மக்களுக்கான சேவைகள் வழங்கும் செயலிகளுக்கான தரவிறக்கம் செய்யக்கூடிய இணைப்பை இயக்குவதற்கான ஒரு ஒற்றைத் தளமாகவும் இந்த இணையதளம் விளங்கும்.

இரண்டாம் கட்டமாக, தலைமைச் செயலகத் துறைகள், துறைத் தலைமையகங்கள் மற்றும் முகமைகள் மறுசீரமைப்புக்கு எடுத்துக்கொள்ளப்படும். தற்போது அரசுத் துறைகள், துறைத் தலைமை அலுவலகங்கள் மற்றும் அரசு முகமைகளின் இணையதளங்கள் பல்வேறு மென்பொருள் உருவாக்குனர்களைக் கொண்டு நிருவகிக்கப்படுகின்றன. எதிர்காலத்தில் இத்தளங்கள் அரசின் KYG இணையதளக் குழுவால் நிருவகிக்கப்படும்.

இத்திட்டம், தமிழ்நாடு மின் ஆளுமை முகமையில் உள்ள குழுவால் வடிவமைக்கப்பட்டு, தலைமைச் செயலகத்தில் உள்ள தேசிய தகவலியல் மையம்மூலம் செயல்படுத்தப்படும்.

6.4 செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திரக் கற்றல் (AI/ML)

பிரச்சினைகளை புதிய முறையில் அணுகிடவும்,பொதுமக்களின் வாழ்வை அர்த்தமுள்ள முறையில் மேம்படுத்திடவும், செயற்கை நுண்ணறிவு / இயந்திரக் கற்றல் உதவும். அனைத்து துறைகளிலும் ஒருங்கிணைந்த கூட்டு முயற்சி ஏற்படுத்தும் வகையில் சுகாதாரம், விவசாயம், எரிசக்தி மற்றும் கல்வி போன்ற துறைகளில் செயற்கை

2023 ஏப்ரல் 1]

நுண்ணறிவை (AI) பயன்படுத்துவதில் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை கவனம் செலுத்தி வருகிறது.

தற்போது முக்கியத்துவம் அளிக்கப்படுபவை :

1. நம்பகமான மற்றும் அணுகக்கூடிய தரவு

2. கணினிப் பார்வை

3. குரல் அடிப்படையிலான செயற்கை நுண்ணறிவு மற்றும் திறன் உரையாடல்

4. பயன்பாட்டுத் தரவு அறிவியல்

5. புவியிடம் சார்ந்த பகுப்பாய்வு

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை, அனைத்து அரசுத் துறைகளுடன் ஒன்றிணைந்து மேற்கூறிய பகுதிகளில் கவனம் செலுத்தி வருகிறது. தமிழ்நாடு மின் ஆளுமை முகமையால் நிறைவு செய்யப்பட்டு, மக்கள் மற்றும் துறைகளின் பயன்பாட்டிற்காக அறிமுகப்படுத்தப்பட்ட சில செயற்கை நுண்ணறிவு திட்டங்கள் பின்வருமாறு:

அ) இ-பார்வை

செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான கண்புரை கண்டறிதல் கைபேசி செயலி மாநிலம் முழுவதும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை 20,000 கண்புரை நோயாளிகள் கண்டறியப்பட்டு, மேல் ஆலோசனை மற்றும் அறுவை சிகிச்சைக்காக மாவட்ட மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

ஆ) முக அங்கீகார அடிப்படையிலான வருகை அமைப்பு 2.0 (FRAS 2.0)

முக அங்கீகார அடிப்படையிலான வருகைப்பதிவு அமைப்பு 2.0 ஆன்ட்ராய்டு செயலியாக உருவாக்கப்பட்டு மாநிலம் முழுவதும் செயலாக்கும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் செயலியின்மூலம் களப் பணியாளர்கள் தத்தம் பணியிடங்களிலிருந்து தங்களது வருகையைப் பதிவு வருகையை பதிவு செய்வதன்மூலம் அவர்களின் வருகை அவர்களின் புவிஇருப்பிட தகவலுடன் குறிக்கப்படுகிறது. தற்போது, பொது

[2023 ஏப்ரல் 1

சுகாதார இயக்குநரகத்திலுள்ள 1000 முன்கள சுகாதாரப் பணியாளர்களைக் கொண்டு, சோதனை அடிப்படையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதன் நிறைவில், 35,000 முன்கள சுகாதாரப் பணியாளர்களுக்கு இச்செயலி விரிவுபடுத்தப்படும். விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் துறை மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகியவை தங்கள் ஊழியர்களுக்கு இச்செயலியைப் பயன்படுத்த ஆர்வம் காட்டியுள்ளன.

இ) செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான பூச்சி மற்றும் நோய் கண்டறிதல்

செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான பூச்சி மற்றும் நோய் கண்டறிவதற்கான உழவன் கைபேசி செயலி உருவாக்கப்பட்டு, அதை தமிழ்நாட்டின் விவசாயிகள் ஏற்கெனவே பயன்படுத்தி வருகிறார்கள். இச்செயலிமூலம் வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறையின் நிபுணர் ஆலோசனையை விவசாயிகள் பெற்று வருகின்றனர்.

ஈ). நிதிப் பகுப்பாய்வுக் கருவி

நிதித் துறைக்காக உருவாக்கப்பட்ட நிதிப் பகுப்பாய்வுக் கருவிக்கான கருத்து ஆதாரம், கடன் மேலாண்மையைக் கவனத்தில் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

6.5 தமிழ்நாடு நம்பிக்கை இணையக் கட்டமைப்பு – நம்பிக்கை இணையம்

நம்பிக்கை இணையக் கட்டமைப்புத் திட்டமானது தமிழ்நாடு அரசுத் துறைகளுக்கு அரசாங்க தரவு மற்றும் ஆவணங்களைப் பாதுகாக்கவும், டிஜிட்டல் மயமாக்கப்பட்ட சொத்துக்களின் ஆதாரங்களைக் கண்காணிக்கவும் ஒரு ஒருங்கிணைந்த உட்கட்டமைப்பை பயன்படுத்த உதவும். இத்தளம் பல்வேறு மின்ஆளுமைச் செயலிகளை உருவாக்க பயன்படுத்தப்படும். தற்போது இந்த இணையம், நிலப் பதிவுகளைப் பாதுகாத்தல், கல்வி மற்றும் மதிப்பெண் சான்றிதழ்கள் மற்றும் இ-சேவை சான்றிதழ்களைப் பாதுகாத்தல் ஆகியவற்றிற்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம் செயல்பாட்டிற்கு வந்தவுடன், நிறுவனங்கள், அலுவலர்கள், உயர்கல்வி நிறுவனங்கள் ஆகியோர் அரசால்

2023 ஏப்ரல் 1]

வழங்கப்பட்ட சான்றிதழ்கள், மதிப்பெண் சான்றிதழ்கள், ரசீதுகள் மற்றும் உரிமங்களைப் பாதுகாப்பாக சரிபார்க்க இயலும். கூடுதலாக, தமிழ்நாட்டின் தற்போதைய மற்றும் முந்தைய காலகட்ட நிலப் பதிவுகள் அனைத்தும் இத்தளத்தில் பாதுகாக்கப்படும்.

7. தமிழ்நாடு அரசுத் துறைகளுக்கான திட்டங்கள்

தமிழ்நாடு அரசுத்துறைகளுக்கான மென்பொருள் தொடர்பான பணிகளுக்கான விருப்பக் கொள்முதல் நிறுவனமாக தமிழ்நாடு மின் ஆளுமை முகமை நியமிக்கப்பட்டுள்ளது. இம்முகமை, தமிழ்நாடு அரசின் நிறுவனங்களுக்கு ஆலோசனை சேவைகள் மற்றும் திட்ட மேலாண்மை சேவைகளை வழங்கி வருகிறது. இம்முகமை, அரசுத் துறைகளுக்கு தேவை அடிப்படையில் இணையதளம், இணைய செயலிகள், கைபேசி செயலிகள், செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திரக் கற்றல் செயலிகள், தரவுப் பொறியியல் போன்றவற்றை வடிவமைத்தல், உருவாக்குதல், பராமரித்தல் மற்றும் இயக்குதல் ஆகியவற்றை உறுதி செய்கிறது.

இம்முகமை திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்திடவும், தமிழ்நாட்டு மக்களுக்கான பொது சேவைகளை வழங்கிடவும் தகவல் தொழில்நுட்பத்தின் ஆற்றலைப் பயன்படுத்துவற்கான கருவியாக உள்ளது. இம்முகமை முதல்வரின் முகவரி, புதுமைப் பெண், சட்டமன்றச் செயலகப் பதிவுகளை டிஜிட்டல் மயமாக்கல், “ஊட்டச்சத்தை உறுதிசெய்தல்” மற்றும் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் போன்ற அரசின் முதன்மைத் திட்டங்களைச் செயல்படுத்தவும், கண்காணிக்கவும், தொடர்புடைய அரசுத் துறைகளுக்கு உதவிகரமாக உள்ளது.

இந்த அமைப்பு, நிதி, சுகாதாரம் மற்றும் குடும்ப நலம், வணிக வரிகள், பெருநகர சென்னை மாநகர காவல் துறை, வனத் துறை, மாற்றுத் திறனாளிகள் நலன், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு, திட்டம் மற்றும் வளர்ச்சி உள்ளிட்ட அனைத்து துறைகளுக்கும் தொழில்நுட்ப ஆலோசனை சேவைகளை வழங்கி வருகிறது.

2022–2023 ஆம் ஆண்டில், தமிழ்நாடு மின் ஆளுமை முகமை, பிற துறைகள் தங்கள் பழைய கோப்புகளை டிஜிட்டல் மயமாக்கல், டிஜிட்டல் முறையில் சேவைகளை வழங்குவதற்கான செயலிகளை உருவாக்குதல், வலைதளங்கள் உருவாக்குதல், தரவு சேகரிப்பு செயலிகள், திட்ட கண்காணிப்பு செயலிகள், சொத்து மேலாண்மை செயலிகள், திட்ட மேலாண்மை மற்றும்

கண்காணிப்பு செயலிகள், முழு அளவிலான நிறுவன வள திட்டமிடல் செயலிகள், ஆட்சேர்ப்பு தீர்வைகள், நிதி ஆதாரத் தளங்கள், மின்—கற்றல் தளங்கள், மின்னணு வணிக செயலிகள் ஆகியவற்றின் உருவாக்கத்திற்கு உறுதுணையாக உள்ளது.

7.1 மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டம் – புதுமைப்பெண் திட்டம்

தமிழ்நாடு அரசு, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டம் (MRAHEAS) – புதுமைப்பெண் திட்டத்தினைத் தொடங்கி செயல்படுத்தி வருகிறது, இத்திட்டம் அரசுப் பள்ளிகளில் இருந்து உயர்கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் பெண்களின் சேர்க்கை விகிதத்தை மேம்படுத்தும் தனித்துவமான திட்டமாக விளங்குகிறது. இத்திட்டத்தின்மூலம், தகுதியுள்ள அனைத்து மாணவிகளுக்கும் இளங்கலைப் பட்டம்/பட்டயம்/தொழிற்கல்விப் பயிற்சி/ வேறு ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட படிப்பை முடிக்கும் வரை ஒவ்வொரு மாதமும் ரூ.1000/– நிதியுதவியாக வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஊக்கத் தொகை, நேரடியாக மாணவிகளின் வங்கிக் கணக்கில் நேரடிப் பயன் பரிமாற்றம் (DBT) வாயிலாக செலுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் உள்ள முக்கிய அம்சமானது, பயனாளிகளைப் பதிவு செய்தல், தகுதியான மாணவிகளுக்கு ஒப்புதல் அளித்தல், பணம் செலுத்துதல் ஆகியவை இணையதளம் வாயிலாக மேற்கொள்ளப்பட்டு தடையின்றி செயல்படுத்தப்பட்டு வருவதாகும். இருமுறை பதிவு மற்றும் தவறான பதிவுகளைத் தவிர்ப்பதற்காக உயர்கல்வி நிறுவனங்களால் மட்டுமே விண்ணப்பப் பதிவு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திட்டத்தின் புதுமைகள்

- ❖ மாணவிகளின் அடிப்படை சுய விவரங்கள் கல்வி மேலாண்மை தகவல் அமைப்பிலிருந்து (EMIS) பெறப்படுகின்றன. இது கைமுறை மற்றும் தவறான தரவு உள்ளீட்டைத் தவிர்க்கிறது.
- ❖ மாணவிகளின் முன்னரே சரிபார்க்கப்பட்ட தரவுகள்/ பள்ளிக் கல்வித் துறையிலிருந்து தரவுத்தளமாகப் பெறப்பட்டு, விண்ணப்பத்தின் ஒரு பகுதியாக

இணைக்கப்பட்டுள்ளது. இது மாணவிகள் வங்கிக் கணக்கினை செயலில் வைத்திருக்கும் பட்சத்தில், விண்ணப்பத்தை தானாக அங்கீகரிக்கும் வாய்ப்பை வழங்குகிறது.

❖ இத்திட்டம் ஆதார் அடிப்படையிலான e—KYC பயன்பாட்டின் மூலமாக மாணவிகளின் பெயர், பிறந்த தேதி, பாலினம், முகவரி மற்றும் ஆதார் அட்டையிலிருந்து புகைப்படம் போன்ற அடிப்படை விவரங்களைச் சரிபார்க்க உயர்கல்வி நிறுவனங்களுக்கு உதவுகிறது.

❖ இந்திய தேசிய பணம் செலுத்துகை நிறுவனத்தின் (NPCI) வரைபடமாக்கியுடன் கூடிய பயன்பாட்டு நிரலாக்க இடைமுக நிரலி (Application Programming Interface (API)) ஒருங்கிணைப்புமூலம் மாணவிகளுக்கான செயலில் உள்ள வங்கியின் இருப்பு உறுதி செய்யப்படுகிறது. இது மாணவிகளுக்கு உதவித்தொகையினை ஆதார் எண்ணை அடிப்படையாகக் கொண்ட நேரடி பயன் பரிமாற்றம் (DBT) மூலம் நேரடியாக வங்கிக் கணக்கில் பெறுவதை உறுதிசெய்ய உதவுகிறது.

திட்டத்தின் தாக்கம்

❖ பெரும்பாலான தரவுகள் பல்வேறு தரவுதளங்களிலிருந்து பெறப்படுவதால், இந்தப் பயன்பாடு விண்ணப்பத்தை நிரப்பும் நேரத்தை வெகுவாகக் குறைத்துள்ளது.

❖ தானியங்கி ஒப்புதல் வழங்குவது, விண்ணப்பச் செயல்முறையை உடனடியாக முடிக்க உதவுகிறது.

❖ இத்திட்டத்தின் அறிவிப்புக்குப் பிறகு மாநிலம் முழுவதும் மாணவிகளின் சேர்க்கை எண்ணிக்கை தீவிரமாக அதிகரித்துள்ளது.

❖ நாளது தேதியின்படி, பள்ளிக் கல்வியை முடித்து 2 முதல் 8 ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு சுமார் 14,758 மாணவிகள் பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களில் சேர்ந்துள்ளனர்.

❖ உயர் கல்வியைத் தொடராத மாணவிகளை (பள்ளிக் கல்விக்குப் பிறகு இடைநிற்றல்) கண்டறிந்து, அவர்களை உயர் கல்வியின்கீழ் கொண்டு வர, பள்ளிக்கல்வி

மற்றும் உயர்கல்வித் துறைகளுக்கு இந்த இணையதளம் உதவுகிறது.

❖ *28 பிப்ரவரி 2023 வரை, இத்திட்டத்தின் மூலம் சுமார் 2,02,824 மாணவிகள் பயனடைந்துள்ளனர்.*

7.2 தமிழ்நாடு சட்டமன்றப் பதிவுகளை மின்னணுமயமாக்கல் மற்றும் மேலாண்மை செய்தல் (D.M.E.R.L.)

1921-ல் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு சட்டமன்றச் செயலகம் இந்தியாவின் மிகப் பழமையான சட்டமன்றங்களில் ஒன்றாகும். தொடக்கத்திலிருந்தே, இப்பேரவை பல சுதந்திரப் போராளிகள், திறமை மிக்கவர்கள், சிறந்த மற்றும் குறிப்பிடத்தக்க தலைவர்களை கடந்த 100 ஆண்டுகளில் கொண்டிருந்தது. இந்தச் சட்டமன்றச் செயலகம், சில முக்கிய சட்டங்களை இயற்றியதற்காக பெருமை பெற்றது. முக்கிய விவாதங்கள் மற்றும் அறிவிப்புகள் பதிவு செய்யப்பட்டு, சட்டமன்றத்தால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்பட்ட விவாதப் புத்தகங்கள், பல்வேறு குழுக்களின் அறிக்கைகள், பேரவை முன்வைக்கப்பட்ட ஏடுகள் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த செய்தித்தாள் துணுக்குகள், படங்கள், ஒலிப்பதிவுகள், காணொளிகள் போன்ற சுமார் பத்து இலட்சம் பக்கப்பதிவுகளை, மேம்பட்ட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, மின்னணுமயமாக்கி நிருவகிப்பதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன்மூலம், சட்டமன்றத்தின் பாரம்பரியமிக்க மின்னணுமயமாக்கப்பட்ட தகவல்களை இணையதளம்மூலம் மக்கள் உடனடியாக அணுக முடியும். இத்திட்டத்திற்கான ஒப்பந்தப்புள்ளி நடைமுறை முடிவடைந்து, முதற்கட்டமாக 1921-ஆம் ஆண்டு முதல் நாளது தேதி வரையிலான விவாதப் புத்தகங்களை மின்னணுமயமாக்கும் பணியானது 16-11-2023-க்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

7.3 முதலமைச்சரின் காலை உணவு திட்ட கைபேசி செயலி

முதலமைச்சரின் காலை உணவு திட்ட கைபேசி செயலியானது, அரசுப் பள்ளிகளில் அதிக வருகை மற்றும் கற்றலை உறுதி செய்வதற்கான முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை நிருவகிப்பதற்கும், கண்காணிப்பதற்கும் உருவாக்கப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 1]

மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள பள்ளிகளுக்கு சமையல், விநியோகம் மற்றும் காலை உணவு வழங்கப்படுவதைக் கண்காணிக்க ஒரு மையப்படுத்தப்பட்ட சமையலறை அடிப்படையிலான கண்காணிப்புப் பகுதி உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதியின்கீழ், சரியான நேரத்தில் எடுத்துச் செல்வதையும் மற்றும் விநியோகத்தையும் உறுதி செய்ய ஒரு கண்காணிப்பு அமைப்பு செயல்படுத்தப்பட்டுள்ளது. இரண்டாவதாக, பரவலாக்கப்பட்ட பகுதி ஒன்று கிராமப்புறங்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளது, அதில் தொலைதூர மற்றும் மலைப்பாங்கான பகுதிகளுக்காக நேரடி தரவு சேகரிப்பு போன்ற கூடுதல் அம்சங்கள் இணைக்கப்பட்டுள்ளன. திட்டம் தொடங்கப்பட்ட நாள் முதல், பள்ளி மேலாண்மைக் குழு, கிராமம், தொகுதி/மண்டலம், நகராட்சி/மாநகராட்சி மற்றும் மாவட்ட அளவில் உள்ள முக்கிய முடிவெடுப்பவர்கள் கண்காணிக்கும் வகையில் அனைத்து பங்குதாரர்களுக்கும் ஒரு நிகழ்நேர தகவல் பலகை கிடைக்கப்பெறும். விதிவிலக்கு கையாளுதலின் ஒரு பகுதியாக, முடிவெடுக்கும் அலுவலர்களுக்கு தினமும் காலை 11 மணிக்கு குறுஞ்செய்தி அனுப்பப்படும்.

7.4 நம்ம கிராம சபைக்கான அறிக்கையிடல் செயலி

நம்ம கிராம சபைக்கான செயலியானது கிராம சபை நிகழ்ச்சி நிரல்கள், தீர்மானங்கள் ஆகியவற்றின் ஆன்லைன் அறிக்கையுடன், குறைந்தபட்ச பங்கேற்பாளர்களின் எண்ணிக்கையுடன் நடைபெறுகிறதா என்பதைக் கண்காணிக்க ஊரக வளர்ச்சித் துறைக்கு உதவும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. செயலியில் இருந்து சேகரிக்கப்பட்ட தரவுகள் புவி/நேர முத்திரையிடப்பட்டு, ஒவ்வொரு பஞ்சாயத்திலும் பங்கேற்பு முறை, தாக்கல் செய்யப்பட்ட மற்றும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் ஆகியவற்றை உடனடியாக பகுப்பாய்வு செய்ய ஊரக வளர்ச்சித் துறைக்கு உதவுகிறது. ஒவ்வொரு கிராம சபைக் கூட்டத்தின் முக்கிய அம்சமாக தற்போது இந்தச் செயலியை ஊரக வளர்ச்சித் துறை பயன்படுத்துகிறது. வீடியோ பதிவு செய்தல், இணையத்திற்கு வெளியில் தரவுகளைச் சேகரித்தல் போன்ற அம்சங்கள் அடுத்தடுத்த பதிப்புகளில் கூடுதலாக சேர்க்கப்பட்டுள்ளன. 12,525 கிராமப் பஞ்சாயத்துகள் மற்றும் 388 ஊராட்சிகளிலிருந்து வரிசைப்படுத்தப்பட்ட நிரல்கள்மூலம் தரவுகளைச் சேகரித்தல், ஒத்திசைவு செய்தல் மற்றும் திருத்துதல் ஆகியவற்றின் சிரமத்தை சமாளிக்க இச்செயலி உதவுகிறது.

7.5 மற்ற துறைகளுக்கான முக்கிய திட்டங்கள்

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை, டிஜிட்டல் சேவைகள் வழங்கும் அமைப்பை வடிவமைத்து மேம்படுத்துவதற்கு, தொழில்நுட்ப ஆலோசனை சேவைகளை வழங்குவதில் முக்கியப் பங்காற்றி வருகிறது. பத்திரப்பதிவுத் துறையின் STAR *2.0 திட்டச் செயலாக்கம், பெருநகர சென்னை காவல் துறையின் மெகா சிட்டி திட்ட செயலாக்கம், நிதிப் பகுப்பாய்வுச் செயலி, நிதித் துறைக்கான பொது நிதி கண்காணிப்பு அமைப்பு, சுகாதாரத் துறைக்கான சுகாதார மேலாண்மை தகவல் அமைப்பு* (HMIS), *தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கான தமிழ்நாடு ஒருங்கிணைந்த வீட்டுவசதித் தகவல் அமைப்பு, தமிழ் இணைய கல்விக் கழகத்திற்கு, தமிழ் உள்ளீடு மற்றும் மென்பொருள் மேம்பாட்டிற்கான கருவிகளை அடையாளம் காண்பதில் உதவுதல் ஆகியவை சில எடுத்துக்காட்டுகளாகும்.*

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை, தமிழ்நாடு நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம், வனத் துறை, சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் ஆகிய துறைகளுக்கு அவர்களின் வணிகச் செயல்முறை பணியினை முழுமையாக கணினிமயமாக்கி செயல்படுத்துவதற்கு உதவி செய்து வருகிறது. கணினிமயமாக்கல்மூலம், அரசு துறையால் வழங்கப்படும் சேவைகள் டிஜிட்டல் முறையில் இருக்கும். இது விரைவான சேவை வழங்கல் முறையை நடைமுறைபடுத்துதல் மற்றும் துறைகள் வழங்கும் சேவையை திறம்பட கண்காணித்தல் ஆகியவற்றைச் செயல்படுத்த உதவுகிறது.

8. மற்ற துறைகளுக்கு வழங்கப்படும் தகவல் தொழில்நுட்ப சேவைகள்

8.1 ஆதார் ஒரு சேவையாக

தமிழ்நாட்டில் ஆதார் நிரந்தரப் பதிவு மையங்களை அமைத்து ஆதார் பதிவினை மேற்கொள்ளும் பதிவாளராக மின்ஆளுமை இயக்குநரகம்/தமிழ்நாடு மின்ஆளுமை முகமையினை இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (UIDAI) *நியமித்துள்ளது.*

பதிவாளராக உள்ள தமிழ்நாடு மின் ஆளுமை முகமையானது, அங்கீகரிப்பு பயனர் முகமை (AUA)/e-KYC *பயனர் முகமை* (KUA) *சேவைகளை 12 துறைகளுக்கு "துணை அங்கீகரிப்பு பயனர்*

2023 ஏப்ரல் 1]

சேவைகளாக (SUB AUA/KUA)" வழங்குகிறது. மேலும், 8 துறைகளின் துவக்கநிலை அங்கீகரிப்பு செயல்பாட்டில் உள்ளது.

பயோமெட்ரிக் முறையில் உள்ள சிக்கல்களைத் தவிர்க்க, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையில் "கருவிழி அங்கீகாரத்தை" தமிழ்நாடு மின் ஆளுமை முகமை வெற்றிகரமாக செயல்படுத்தியுள்ளது. அரசுப் பள்ளிகளில் இருந்து உயர்கல்வி நிறுவனங்களில் பெண் குழந்தைகளின் சேர்க்கை விகிதத்தை அதிகரிக்க, தமிழக அரசு மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித்திட்டத்தை (புதுமைப் பெண் திட்டம்) தொடங்கியுள்ளது. இத்திட்டத்தில் விண்ணப்பங்களின் ஒப்புதல் செயல்முறையை விரைவுபடுத்துவதற்காக ஆதார் எண் அடிப்படையிலான e—KYC அமைப்பை அறிமுகப்படுத்தியது. இதைச் செயல்படுத்தியதன்மூலம் புகைப்படத்துடன் கூடிய மாணவியின் விவரங்களைச் சரிபார்த்து உறுதிசெய்துகொள்ளலாம்.

தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT) மற்றும் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் (TACTV) ஆகியவை தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின்கீழ் ஆதார் பதிவு முகமைகளாக நியமனம் செய்யப்பட்டுள்ளன. இந்தச் சேவை பொதுமக்களுக்கு கட்டணமின்றி வழங்கப்படுகிறது.

2022-2023-க்கான ஆதார் சேர்க்கை பரிவர்த்தனைக்கான விவரங்கள் பின்வருமாறு:

அட்டவணை 4: 2022-2023 ஆம் நிதியாண்டிற்கான ஆதார் பதிவு மற்றும் ஆதார் உருவாக்கப்பட்ட விவரங்கள்

பதிவு முகமைகள்	மையங்களின் எண்ணிக்கை	மொத்தப் பதிவுகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்)	UIDAI இணையதளம் மூலம் உருவாக்கப்பட்ட ஆதார் எண்ணிக்கை (இலட்சத்தில்)
தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்	318	18.07	2.08

[2023 ஏப்ரல் 1

தமிழ்நாடு மின்னணு நிறுவனம்	237	2.43	2.11
மொத்தம்	555	20.50	4.19

8.2 மின்னஞ்சல் ஒரு சேவையாக

மின்-ஆளுமை முயற்சியின் ஒரு பகுதியாக, தமிழ்நாடு அரசு, பல்வேறு அரசுத் துறைகள்/ முகமைகள்/ வாரியங்கள் கீழ்பணிபுரியும் அனைத்து அலுவலர்களுக்கும் 'tn.gov.in' என்ற களப்பெயரின் அடிப்படையிலான அலுவலர் சார்ந்த மற்றும் தனிப்பட்ட மின்னஞ்சல் குறியீடுகளை (e-Mail ID) அலுவல் சார்ந்த தொடர்புக்காக உருவாக்க முடிவு செய்யப்பட்டது. மேலும், அரசின் சில பிரிவுகளுக்கு அவற்றின் தேவைக்கேற்ப துறைசார்ந்த மின்னஞ்சல் குறியீடுகளும் உருவாக்கப்படுகின்றன.

ஒவ்வொரு பணியாளருக்கும் 'பதவி' சார்ந்த மின்னஞ்சல் குறியீடுகளும் மற்றும் 'பெயர்' சார்ந்த மின்னஞ்சல் குறியீடுகளும் உருவாக்கப்படுகிறது. தற்போது, 2022-2023 ஆம் ஆண்டில் தேசிய தகவலியல் மையத்தின் (NIC) உதவியுடன் 65,516 மின்னஞ்சல் குறியீடுகள் அரசு ஊழியர்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளன.

8.3 குறுஞ்செய்தி ஒரு சேவையாக

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNeGA) அனைத்து அரசுத் துறைகளுக்கும் குறைந்த விலையிலும் மற்றும் பயனுள்ள வகையிலும் குறுஞ்செய்தி நுழைவாயில் சேவைகளை வழங்குகிறது. இக்குறுஞ்செய்தித் தளமானது பயன்பாட்டுத் துறைகள், தங்கள் மென்பொருள் சேவைதளத்தில் இருந்து மக்களுக்குச் செய்திகளை அனுப்ப வழி செய்யும். இது தரவுகளின் முழுமையான பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிப்பதுடன், வேகம் மற்றும் நம்பகத்தன்மையை உறுதி செய்கிறது. தமிழ்நாடு மின் ஆளுமை முகமை தற்போது தமிழ்நாட்டிலுள்ள சுமார் 24 துறைகள்/ வாரியங்கள்/ பொதுத் துறை நிறுவனங்கள்/ முகமைகளுக்கு சேவை செய்து வருவதுடன், 2022-2023 ஆம் ஆண்டில் சுமார் 27.80 கோடி குறுஞ்செய்திகளை அனுப்பியுள்ளது.

2023 ஏப்ரல் 1]

8.4 மின்-கையொப்ப சேவை (e-Sign as a Service)

இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தின் இணைய அங்கீகாரம் மற்றும் ஆதார் e-KYC சேவையைப் பயன்படுத்தி, இணையதளம் வாயிலாக ஆவணங்களில் உடனடி கையொப்பமிடுவதற்கு மின்-கையொப்ப சேவை உதவுகிறது. மின்-கையொப்ப சேவை, எங்கும், எப்பொழுதும் ஆவணங்களில் டிஜிட்டல் முறையில் கையொப்பமிட எளிதான மற்றும் பாதுகாப்பான வழியை வழங்குகிறது, மின்-கையொப்ப முறையை பயன்படுத்துவதன் மூலமாக தவறான பயன்பாடு தவிர்க்கப்படுகிறது மற்றும் இம்முறை பாதுகாப்பாகக் கருதப்படுகிறது. தமிழ்நாட்டின் அனைத்து அரசுத் துறைகளில் மின்-கையொப்ப சேவையை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு மின் ஆளுமை முகமையானது C-DAC உடன் இணைந்து மின்-கையொப்ப சேவையை வழங்குகிறது.

மின்-கையொப்ப சேவையானது, இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தின் e-KYC சேவையைமேம்படுத்துவதற்காக ஒரு முறை கடவுச்சொல் (OTP) மற்றும் பயோமெட்ரிக் அடிப்படையிலான முறைகளுக்கு துணை செய்கிறது. மின்-கையொப்ப சேவையை பயன்படுத்துவது தேவையற்ற காகிதப் பணிகளை மாற்றுவதற்கான முழுமையான டிஜிட்டல் தீர்வாகிறது.

தற்போது, மின்-கையொப்ப சேவையானது, சுகாதாரத் துறை, பதிவுத் துறை, நில நிர்வாகத் துறை, புவியியல் மற்றும் சுரங்கத் துறை ஆணையரகம், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம், நகர் ஊரமைப்பு இயக்குநரகம், கல்வி, சமூகப் பாதுகாப்பு போன்ற 8 துறைகளால் பயன்படுத்தப்படுகிறது. 2022-2023 ஆம் ஆண்டில் 35,71,517 மின்-கையொப்பங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

8.5 கணினி அடிப்படையிலான தேர்வுகள் சேவை

தமிழ்நாடு மின்-ஆளுமை முகமையானது, ‘கணினி அடிப்படையிலான இணையவழி தேர்வை ஒரு சேவையாக’ வழங்குகிறது. இச்சேவை பல்வேறு அரசுத் துறைகளில் உள்ள காலிப் பணியிடங்களை விரைவான மற்றும் வெளிப்படையான, இடையூறில்லாத பாதுகாப்பான முறையில் குறித்த கால அளவில் நிரப்பப் பயன்படுகிறது. மேலும், தமிழ்நாடு மின்-ஆளுமை முகமையானது, M/s. NSEIT என்ற நிறுவனத்தை, அனைத்து அரசுத் துறைகளும் இணைய வழியில் தேர்வு நடத்துவதற்கு, வரையறுக்கப்பட்ட விலை மதிப்பு ஒப்பந்த அடிப்படையில்

செயல்படுத்தும் பங்குதாரராகத் தெரிவு செய்துள்ளது. இணையவழித் தேர்வு சேவையானது, தேர்வுக்கு முந்தைய செயல்முறை, தேர்வு செயல்முறை மற்றும் தேர்வுக்குப் பிந்தைய செயல்முறை ஆகிய மூன்று செயல்முறைகளை உள்ளடக்கியுள்ளது.

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை வழங்கும் இச்சேவையைப் பயன்படுத்தி, 2022–2023 ஆம் நிதி ஆண்டில், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் (CMDA), தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் (TANUVAS), ஆசிரியர் தேர்வு வாரியம் (TRB), மருத்துவப் பணிகள் தேர்வு வாரியம் (MRB), தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் (SDAT) மற்றும் சென்னை உயர் நீதிமன்றம் (MHC) ஆகிய ஆறு துறைகளுக்கான, 492 காலிப் பணியிடங்கள் பாதுகாப்பான மற்றும் எளிய முறையில் வெற்றிகரமாக நிரப்பப்பட்டுள்ளன. 2022-2023 ஆம் ஆண்டில், சுமார் 11.4 இலட்சம் விண்ணப்பதாரர்கள் இந்த இணையவழித் தேர்வுச் சேவையின்மூலம் தேர்வு எழுதியுள்ளனர்.

8.6 தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்புத் தணிக்கை

தமிழ்நாடு மின்-ஆளுமை முகமை (TNeGA) அனைத்து அரசு வலைதளங்கள்/மென்பொருள் செயலிகள்/தொலைபேசி செயலிகள் ஆகியவற்றிற்கு, CERT—IN என்ற அமைப்பினால் பட்டியலிடப்பட்ட தணிக்கையாளர்களைக் கொண்டு CERT/ STQC-ல் குறிப்பிடப்பட்டுள்ள, வழிகாட்டுதல்கள் மற்றும் தரநிலைகளின்படி பாதுகாப்புத் தணிக்கையை மேற்கொள்கிறது.

தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் (TNSDC) ஏதேனும் துறை சார்ந்த வலைதள மென்பொருள் செயலியை, இணையதளத்தில் செயல்படுத்துவதற்கு முன்பும் (Host), தணிக்கைச் சான்றிதழ் காலாவதியாகும் முன்பும்/மென்பொருள் செயலியில் மாற்றம் செய்யப்பட்ட பின்பும், பாதுகாப்புத் தணிக்கை கட்டாயமாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

வலைத்தளம் நிலையானதாகவோ அல்லது இயக்க நிலையில் (Dynamic) இருந்தாலும், ஒவ்வொரு ஆண்டும் அல்லது தணிக்கைச் சான்றிதழ் வழங்கப்பட்ட ஒரு வருட காலத்திற்குள் வலைதளத்தில் பெரிய மேம்பாடு அல்லது மாற்றம் மேற்கொள்ளும்போதும், பாதுகாப்பு தணிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

2023 ஏப்ரல் 1]

மேலும், தமிழ்நாடு மின்-ஆளுமை முகமையானது அனைத்து அரசு இணையதளங்கள்/ இணைய செயலிகள்/கைப்பேசி செயலிகள் ஆகியவற்றின் பாதுகாப்பு தணிக்கையை வருடத்திற்கு ஒருமுறை இலவசமாக மேற்கொள்வதுடன், அடுத்துவரும் ஆண்டுகளிலும் மேற்கொண்டு வருகிறது.

இதுவரை, 2022-2023 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ் பல்வேறு அரசுத் துறைகளில், சுமார் 72 இணையதளங்கள் / இணைய செயலிகள்/ கைப்பேசி செயலிகள் தணிக்கை செய்யப்பட்டுள்ளன.

9. கொள்கைகள் மற்றும் தரநிர்ணயங்கள்

9.1 குறிப்பு தரநிலைகள்

தரவு மற்றும் இணையப் பாதுகாப்பு பதிப்பு 1.0-க்கான 'குறிப்புத் தரநிலைகள்' என்பது மின் ஆளுமைத் திட்டங்களுக்குத் தொடர்புடைய தரநிலைகளின் பட்டியலின் தொகுப்பாகும். தரநிலைகள் 'கட்டாயம்' மற்றும் 'பரிந்துரைக்கப்பட்டவை' என வகைப்படுத்தப்பட்டுள்ளன. துறைகளின் அனைத்து மின் - ஆளுமை பயன்பாடுகள் / மென்பொருள் / வன்பொருள் விவரக்குறிப்புகள் கட்டாயத் தரநிலைகளுக்கு உட்பட்டிருக்க வேண்டும். மேலும் அனைத்து ஒப்பந்தப் புள்ளிகளும் திட்டத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் ஆய்வு செய்யப்பட்டு, தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் (TNeGA) முதன்மை நிர்வாக அதிகாரி தலைமையிலுள்ள தரநிலை இணக்க தொழில்நுட்பக் குழுவால் (SCTC) ஆராய்ந்து ஒப்புதல் அளிக்கப்படும். தற்போது இது அனைத்து புதிய மின் ஆளுமைப் பயன்பாடுகளுக்கு (Applications) செயல்படுத்தப்பட்டு வருகிறது.

9.2 தமிழ்நாடு தரவுக் கொள்கை

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNeGA) தகவல் தொழில்நுட்பவியல் துறையால் அரசாணை (நிலை) எண்.16, தகவல் தொழில்நுட்பவியல் (இ1) துறை, நாள் 10-3-2022 வாயிலாக வெளியிடப்பட்ட தமிழ்நாடு தரவுக் கொள்கையின் அடிப்படையில், அரசு தரவுகளுக்கான அதிகாரமளிக்கப்பட்ட முகமையாகும். தமிழ்நாடு மின் ஆளுமை முகமையால் சேகரிக்கப்பட்ட தரவுகளுக்கு, அவற்றை அளித்த தொடர்புடைய முகமை, துறை, அமைச்சகம், நிறுவனம் போன்றவை முதன்மை உரிமையாளராகவும், தமிழ்நாடு மின் ஆளுமை முகமை இணை உரிமையாளராகவும் இருக்கும்.

[2023 ஏப்ரல் 1

தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் முதன்மை நிருவாக அதிகாரி, இந்த கொள்கை மற்றும் கோட்பாடுகளை செயல்படுத்துவதற்கான மாநில தலைமை தரவு அதிகாரி (Chief Data Officer) ஆவார்.

தரவுக் கொள்கைகளின் பதின்மூன்று கோட்பாடுகள் பின்வருமாறு:

1. வெளிப்படைத்தன்மை
2. தனியுரிமை
3. நெறிமுறைகள் மற்றும் சமபங்கு
4. இளக்கத்தன்மை
5. வெளிப்படைத் தன்மை
6. சட்ட இணக்கம்
7. அறிவுசார் சொத்துப் பாதுகாப்பு
8. இடையியக்கம் மற்றும் தரநிலைகள்
9. தரம்
10. பாதுகாப்பு
11. பொறுப்பு மற்றும் கடமை
12. நிலைத்தன்மை
13. பயன்பாடு

தற்போது இந்த கொள்கை நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது.

10. இந்திய அரசு இணைய தளங்களுக்கான தரநிர்ணயம்

அரசாங்க இணையதளங்கள்/செயலிகளில் தகவல் மற்றும் சேவைகளின் பயன்பாடு, பயனர் மையத்தன்மை மற்றும் அனைவரும் எளிதாக அணுக இணையதளங்களை வடிவமைத்தல், மேம்படுத்துதல் மற்றும் பராமரிப்பதற்கான வழிகாட்டுதல்களை, இந்திய அரசு (GIGW) வெளியிட்டுள்ளது. இந்த வழிகாட்டுதல்களை உறுதியாகப் பயன்படுத்தினால், அது உள்ளடக்கம், விளக்கக்காட்சி மற்றும் அணுகுமுறையில் அதிக அளவு நிலைத்தன்மை மற்றும் சீரான தன்மையை உறுதி செய்து, இணையவழியான அரசு தீர்வுகளை மேம்படுத்தும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2023 ஏப்ரல் 1]

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை, தொடர்ந்து அரசு வலைத்தளங்களை சரிபார்த்து, இந்திய அரசின் இணையதளங்களுக்கான வழிகாட்டுதல்களுக்கு (GIGW) இணங்க அரசு வலைதளங்கள்/ செயலிகளைப் புதுப்பிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க அனைத்து அரசு துறைகளுக்கும் வழிகாட்டுகிறது. மார்ச் 16, 2023 அன்றைய நிலையில், 424 அரசு இணையதளங்கள் மாதத்திற்கு இருமுறை சோதனைக்கு உட்படுத்தப்பட்டு, 80 இணைய தளங்களில் ஸ்க்ரீன் ரீடர் இருப்பதும், 100 இணைய தளங்களில் எழுத்தளவு அதிகரித்தல் / குறைத்தல் அம்சம் உள்ளதும் கண்டறியப்பட்டது. தமிழ்நாடு மின் ஆளுமை முகமை, ஸ்கிரீன் ரீடர், வண்ண மாறுபாடு, எழுத்துரு அதிகரிப்பு மற்றும் குறைப்பு அம்சத்தைச் செயல்படுத்த அரசுத் துறை தலைமையிடத்துடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறது.

11. சாதனைகள் மற்றும் விருதுகள்

- NeSDA – 85 சதவிகிதத்திற்கும் அதிகமான இணக்கத்துடன் மக்களுக்கு ஆன்லைன் சேவைகளை வழங்குவதில் உள்ள செயல்திறன் அடிப்படையிலான தேசிய மின் ஆளுமை சேவை வழங்கல் மதிப்பீடு 2021-ல் (NeSDA 2021) தமிழ்நாடு 2-வது இடத்தில் உள்ளது.
- உழவன் கைபேசி செயலியைப் பயன்படுத்தி செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான பூச்சி மற்றும் நோய் கண்டறிதல், 2022 ஆம் ஆண்டிற்கான முன்மாதிரி வகையின்கீழ் NASSCOM 'AI & கேம் சேஞ்சர்ஸ்' விருதை வென்றது.
- மூன்று செயற்கை நுண்ணறிவு (AI) திட்டப் பணிகள் – FRAS, செயற்கை நுண்ணறிவு (AI) சார்ந்த பூச்சி மற்றும் நோய் கண்டறிதல், e-Paarvai ஆகியவை "இந்திய செயற்கை நுண்ணறிவு (AI) 75 @ 75 ஆராய்ச்சி பயண அறிக்கையில்" பட்டியலிடப்பட்டுள்ளன.
- மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டத்திற்கான மின் ஆளுமை தங்க விருது 2022.
- இ-முன்னேற்றம் பயன்பாட்டிற்கான மின் ஆளுமை வெள்ளி விருது 2022.

12. தமிழ்நாடு தொழில்நுட்ப மையம் (iTNT Hub)

"தமிழ்நாடு தொழில்நுட்ப மையம் (iTNT Hub)" *ஒன்றிய அரசின் பங்களிப்புடன் பொது-தனியார் கூட்டாண்மை மாதிரியில் நிறுவப்பட்ட இந்தியாவின் முதல் புதுமை முயற்சிகளுக்கான மையமாகும்.*

iTNT Hub *சென்னை கிண்டியில் உள்ள அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் 30,000 சதுர அடி பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது. வளர்ந்து வரும் மற்றும் புதிய ஆழ்நிலைத் தொழில்நுட்ப* (Deep Tech) *நிறுவனங்களை ஊக்குவித்தல், தொழில் மற்றும் கல்வித் துறைகளுக்கிடையே ஒத்துழைப்பை ஏற்படுத்துதல், உலகளவில் சுற்றுச்சூழல் கூட்டாண்மைகளை உருவாக்குதல், தொழில் வடிவமைப்பு மற்றும் உற்பத்திக்கான ஆதரவினை குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள், புதுமைக் கண்டுபிடிப்புகளுக்கான புதிய நிறுவனங்களுக்கு அளித்தல் மற்றும் தமிழ்நாட்டின் புதிய தொழில் முனைவோர் உலகளாவிய சந்தையை அணுகுவதற்கான திட்டங்களை வகுத்தல் ஆகியவற்றில்* iTNT Hub *முக்கிய கவனம் செலுத்தும்.*

13. நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDG)

நிலையான வளர்ச்சி இலக்குகள் என்பது 17 இலட்சியங்களுடன் 169 இலக்குகளை அளவிடக்கூடிய தொகுப்பு ஆகும். இந்த 17 இலட்சியங்கள் பொருளாதாரம், சுற்றுச்சூழல் மற்றும் சமூகக் கூறுகளை சமநிலைப்படுத்துவதுடன், அனைவருக்கும் நிலையான எதிர்காலத்தினை வழங்க ஒரு முயற்சியாகும்.

தமிழ்நாட்டில் இதன் செயல்பாட்டை கண்காணிக்க தலைமைச் செயலாளர் தலைமையில் உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த வளர்ச்சி இலக்குகளை ஆய்வு செய்ய மற்றும் கண்காணிக்க 8 பணி குழுக்களும் உருவாக்கப்பட்டுள்ளன. இது திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் செயலாக்கத் துறை மற்றும் தமிழ்நாடு மாநில திட்டக் குழு வாயிலாக செயல்படுத்தப்படுகிறது.

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை இந்தத் திட்டத்திற்கான தரவுகளை அனைத்து துறைகள் மற்றும் வாரியங்களில் இருந்து சேகரிக்கும்.

2023 ஏப்ரல் 1]

தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின்கீழ் ஒரு நிலையான வளர்ச்சி இலக்குக் குழு, கீழ்க்கண்ட உறுப்பினர்களுடன் உருவாக்கப்பட்டுள்ளது:—

1. இணை முதன்மை செயல் அலுவலர், தமிழ்நாடு மின்னாளுமை முகமை (TNeGA) – குழுத் தலைவர்.
2. இணை இயக்குனர் (தொழில்நுட்பம்), தமிழ்நாடு மின்னாளுமை முகமை (TNeGA) – உறுப்பினர்.
3. பொது மேலாளர் (நிர்வாகம்), தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் (TACTV) – உறுப்பினர்.
4. பொது மேலாளர் (மனிதவளம் மற்றும் நிர்வாகம்), தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (TANFINET) – உறுப்பினர்.
5. பொது மேலாளர் (மனிதவளம்) தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT) – உறுப்பினர்.

தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் நிலையான வளர்ச்சி இலக்கக் குறியீடு மற்றும் சாதனைகள்

வ. எண்	**குறியீடுகள்**	**2022-2023 செயல்பாடுகள் (20-3-2023 வரை)**
1	16.6.1: பொதுமக்களுக்கு இணையதளம் வழியாக வழங்கப்படும் அரசு சேவைகளின் எண்ணிக்கை	235
2	16.6.1a: கைபேசிவழி ஆளுமைக்காக ஒன்றிணைக்கப்பட்ட துறை / முகவர் எண்ணிக்கை	64
3	16.6.1b: இ-தால் (e-Taal) வலை தளத்தில் மின் பரிமாற்றங்களின் எண்ணிக்கை (கோடியில்)	241.42 கோடி
4	16.6.1c: செயல்பாட்டில் இருக்கும் பொது சேவை மையங்களின் எண்ணிக்கை	9,455

அத்தியாயம்-IV

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் (TACTV)

1. முன்னுரை

தமிழ்நாடு அரசு, அரசாணை (நிலை) எண்.22, தகவல் தொழில்நுட்பவியல் துறை, நாள் 13-8-2007-ன்படி, அரசு கேபிள் டிவி நிறுவனம், இந்திய நிறுவனங்கள் சட்டம் 1956-ன்கீழ், உள்ளூர் கேபிள் டிவி ஆபரேட்டர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கவும், குறைந்த கட்டணத்தில் சிறந்த கேபிள் டிவி சேவையை பொதுமக்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டும் 4-10-2007 அன்று உருவாக்கப்பட்டது. "அரசு கேபிள் டிவி நிறுவனம்" பின்னர் "தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்" (TACTV) *என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.*

2. தொலை நோக்குப் பார்வை

பொதுமக்களுக்கு தரமான டிஜிட்டல் கேபிள் டிவி சேவைகள், அரசு இ-சேவை மைய சேவைகள் மற்றும் இணைய தள சேவைகளை புதிய மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி குறைந்த விலையில் வழங்குவது இதன் முக்கிய நோக்கமாகும்.

3. குறிக்கோள்

- *உயர்தரமான கேபிள் டிவி சேவையைக் குறைந்த கட்டணத்தில் உள்ளூர் கேபிள் டிவி ஆபரேட்டர்கள் மூலமாகப் பொது மக்களுக்கு வழங்குதல்.*
- *உள்ளூர் கேபிள் டிவி ஆபரேட்டர்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்திடும் வகையில் கேபிள் டிவி மற்றும் இணைய சேவையை வழங்குதல்.*
- *பொது மக்களுக்கு உயர்தர இணைய சேவையை குறைந்த கட்டணத்தில், உள்ளூர் கேபிள் டிவி ஆபரேட்டர்கள் மூலமாக வழங்குதல்.*

4. டிஜிட்டல் கேபிள் டிவி சேவை

மத்திய அரசின் தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம் 17-4-2017 அன்று டிஜிட்டல் கேபிள் டிவி சேவைகளை வழங்க

2023 ஏப்ரல் 1]

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு டிஜிட்டல் ஒளிபரப்பு உரிமம் (DAS License) *வழங்கி உள்ளது. மாநில அரசு நிறுவனமான தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் இந்தியாவிலேயே டிஜிட்டல் உரிமம் பெற்ற முதல் நிறுவனமாகும். சிறந்த டிஜிட்டல் கேபிள் டிவி ஒளிபரப்பினை உறுதி செய்வதற்காக, சென்னையில் உள்ள கட்டுப்பாட்டு அறை* MPEG2 *தொழில்நுட்பத்திலிருந்து* MPEG4 *தொழில்நுட்பத்திற்க்கு தரம் உயர்த்தப்பட்டது.*

டிஜிட்டல் கேபிள் டிவி சேவைக்காக சென்னையில் உள்ள கட்டுப்பாட்டு அறை MPEG4 *தொழில்நுட்பத்திற்குத் தரம் உயர்த்தப்பட்டு 01.09.2017 முதல் விலையில்லா வரையறை செட்டாப் பாக்ஸ்களை* (SD) *தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் வழங்கியது. சென்னை, சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய 5 இடங்களில் உயர் வரையறை செட்டாப் பாக்ஸ்கள்* (HD) *சேவையை 02.07.2018 அன்று முதல் வழங்கி வருகிறது.*

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், டிஜிட்டல் முறையில் 218 சேனல்களை (136 கட்டணமில்லா சேனல்கள் + 82 கட்டண சேனல்கள்) ரூ.140/ – + GST *என்ற சந்தா கட்டணத்தில் வழங்குகிறது. இது நாட்டிலேயே மிகக் குறைந்த கேபிள் டிவி சந்தா கட்டணமாகும். இதில் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு ரூ.70/ – +* GST *என்றும் உள்ளூர் கேபிள் டிவி ஆபரேட்டர்களுக்கு ரூ.70/ – +* GST *என்றும் வருவாய் பங்கீடு நிர்ணயம் செய்யப்பட்டது.*

குறைந்த கட்டணத்தில் புதிய தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய செட்டாப் பாக்ஸ்கள்மூலம், தரமான டிஜிட்டல் கேபிள் டிவி ஒளிபரப்பினை பொது மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

5. அரசு இ-சேவை மையங்கள்

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், அரசின் சேவைகளை மக்களுக்கு வழங்குவதற்காக, மாநிலம் முழுவதும் 2014 ஆம் ஆண்டு அரசு இ-சேவை மையங்களை நிறுவியது. தற்பொழுது, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் 511 அரசு இ-சேவை மையங்களை தமிழ்நாடு முழுவதும் நகர்ப்புறங்களில் நிர்வகித்து 136 வகையான சேவைகளை வழங்கி வருகிறது. இவற்றுடன் கூடுதலாக பின்வரும் சேவையை பிரத்தியேகமாக வழங்கி வருகிறது.

[2023 ஏப்ரல் 1

- தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின்மூலம் தேர்வு செய்யப்படுபவர்களின் சான்றிதழ்களைப் பதிவேற்றம் செய்யும் சேவை.

அரசு இ-சேவை மையங்களின் சேவைகளை பொது மக்களுக்கு வழங்குவதை விரிவுபடுத்தவும், தமிழ்நாட்டில் உள்ள வேலையில்லா இளைஞர்கள் சுயதொழில் புரிவதற்காகவும், இந்நிறுவனத்துடன் இணைந்து வருவாய் பங்கீட்டு முறையில் செயல்பட விருப்பமுள்ள நகர்ப்புற இன்டர்நெட் பிரௌசிங் சென்டர் உரிமையாளர்களை, விருப்பமனு அளிக்கக் கோரி அறிவிப்பு வெளியிடப்பட்டு, நாளதுவரை, 2148 விண்ணப்பதாரர்களுக்கு அரசு சேவைகளை வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

6. நிரந்தர ஆதார் சேர்க்கை மையங்கள் (PECs)

தமிழ்நாட்டில் புதிய ஆதார் சேர்க்கை மேற்கொள்ளும் பணிக்காக தமிழ்நாடு மின் ஆளுமை முகமை/ மின் ஆளுமை ஆணையரகத்தை பதிவாளராக தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது. ஆதார் சேர்க்கை பணிகளை மேற்கொள்வதற்காக தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு 01.10.2016 முதல் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை அங்கீகாரம் வழங்கியது. தற்பொழுது, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், 318 நிரந்தர ஆதார் சேர்க்கை மையங்களை மாநிலம் முழுவதும் அமைத்துள்ளது. மேலும் பொது மக்களின் தேவைக்கேற்ப, தற்போதுள்ள 318 அரசு நிரந்தர ஆதார் சேர்க்கை மையங்களின் எண்ணிக்கையை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.

7. தமிழ்நாடு இணையம் மற்றும் இணைப்பு சேவை நிறுவனம் மூலம் இல்லங்களுக்கு இணைய சேவை (TANICS)

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், இன்டர்நெட் தொடர்பான சேவைகளை பொதுமக்களுக்கு, குறைந்த விலையில் வழங்குவதற்காக தமிழ்நாடு இணையம் மற்றும் இணைப்பு சேவை நிறுவனம் (TANICS) என்ற துணை நிறுவனத்தினை 5-11-2020 அன்று துவக்கியது. மத்திய அரசின் தொலைதொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறையிடமிருந்து இன்டர்நெட் சேவை வழங்குவதற்காக ISP உரிமம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2023 ஏப்ரல் 1]

அத்தியாயம்-V

தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (TANFINET)

தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனமானது (TANFINET) *தமிழ்நாட்டின் கிராமப் பகுதிகளுக்கு "பாரத்நெட்" இரண்டாம் கட்டம் திட்ட செயலாக்கத்தின்மூலம், அதிவேக அலைக்கற்றை இணைப்பை வழங்கும் பொருட்டு, தமிழ்நாடு அரசினால் ஏற்படுத்தப்பட்ட ஒரு சிறப்பு நோக்கு நிறுவனம் ஆகும். அதிவேக அலைக்கற்றை இணைப்பினை, நகர்ப்புறம் மற்றும் புறநகர் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தும் பொருட்டு 'தமிழ்நெட்' திட்டத்தினைச் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. "பாரத்நெட்" மற்றும் 'தமிழ்நெட்' ஆகியவற்றை இணைத்து ஒருங்கிணைந்த டிஜிட்டல் கட்டமைப்பினை நிறுவுவதன் வாயிலாக தகவல் தொழில்நுட்பத்தின் அறிவுசார் ஆற்றலை மாநிலம் முழுவதும் உள்ள பொது மக்கள் பயன்படுத்தி மேன்மையடைய இயலும்.*

1. பாரத்நெட்

பாரத்நெட் திட்டத்தினை, தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனத்தின்மூலம் செயல்படுத்த, ஒன்றிய அரசு ரூ.1815.31 கோடி (USOF *நிதி) ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் 57,500 கி.மீ தொலைவிற்கு மாநிலம் முழுவதும் உள்ள 12,525 கிராம பஞ்சாயத்துகளையும் இணைக்க கண்ணாடி இழை வடம் பதிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்து கிராமப் பஞ்சாயத்துகளிலும் 1* Gbps *அளவிலான அலைக்கற்றைமூலம் கிராமப்புறப் பகுதிகளில் சேவை வழங்குநர்கள்மூலம் அதிவேக அலைக்கற்றை இணைய சேவையினை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதன்மூலம் தொலை மருத்துவம்* (Tele Medicine), *தொலை தூரக் கல்வி* (Tele Education) *மற்றும் புதிய தொழில்நுட்பங்களின் பயன்பாடுகள் போன்றவை கிராமப்புற மக்களுக்குக் கிடைக்கச் செய்திட இயலும்.*

இத்திட்ட செயலாக்கம், புவியியல் ரீதியாக நான்கு தொகுப்புகளாக (A, B, C *மற்றும்* D) *கீழ்க்கண்டவாறு பிரிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்றது.*

தொகுப்பின் பெயர்	வட்டாரங்களின் எண்ணிக்கை	கிராம பஞ்சாயத்துகளின் எண்ணிக்கை	கண்ணாடி இழை வட வழித்தடம்	
			உயர்மட்ட கம்பத்தின் வழியாக (கிலோ மீட்டரில்)	நிலத்தட வழியாக (கிலோ மீட்டரில்)
A	*75*	*3,095*	*12,221*	*1,696*
B	*94*	*3,001*	*12,142*	*1,558*
C	*110*	*3,326*	*14,071*	*1,438*
D	*109*	*3,103*	*12,703*	*1,924*
மொத்தம்	**388**	**12,525**	**51,137**	**6,616**

தமிழ்நாட்டில் பாரத்நெட் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தைச் செயல்படுத்துவதற்காக நான்கு தொகுப்புகளுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்ததாரர்களுடன் "முதன்மை சேவை ஒப்பந்தம்" மேற்கொள்ளப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 9-6-2022 அன்று கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை ஊராட்சி ஒன்றியம், முத்தலகுறிச்சி கிராமப் பஞ்சாயத்தில் கண்ணாடி இழை கம்பி வடம் பதிக்கும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

மாவட்டங்களில் பாரத்நெட் திட்டத்தின் செயலாக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. இதுவரை 2,007 கிராமப் பஞ்சாயத்துகள் கண்ணாடி இழை வடம் (OFC) *மூலம் அருகில் உள்ள வட்டார ஊராட்சி ஒன்றிய அலுவலக தலைமையிடத்துடன் இணைக்கப்பட்டு, அதன் செயல்பாடுகள் சென்னையிலுள்ள வலையமைப்பு இயக்க மையத்தில்* (NOC) *தெரியும்படி செய்யப்பட்டுள்ளது. ஓராண்டிற்குள் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிராமப் பஞ்சாயத்துகளும் பாரத்நெட் திட்டத்தின்மூலம் இணைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

2023 ஏப்ரல் 1]

2. இறுதிக் கட்ட இணைய இணைப்பு

2022-2023 ஆம் ஆண்டின் மூலதன முதலீட்டிற்கான மாநிலங்களுக்கான சிறப்பு உதவித் திட்டத்தின்கீழ் “பாரத்நெட் இறுதிக் கட்ட இணைய இணைப்பு (BharatNet Last Mile Connectivity)” *திட்டத்தைச் செயல்படுத்த ரூ.184 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் பாரத்நெட் வலையமைப்பின் வழியாக ஏறக்குறைய 20,000 அரசு அலுவலகங்களை இணைக்க இயலும். மேலும், தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பில்* (TNSWAN) *இணைக்கப்பட்டுள்ள அரசு அலுவலகங்களையும் படிப்படியாக இத்திட்டத்தின் வலையமைப்பிற்கு மாற்றிட திட்டமிடப்பட்டுள்ளது.*

3. ஒருங்கிணைந்த டிஜிட்டல் கட்டமைப்பு

தகவல் தொழில்நுட்பப் புரட்சியின் நன்மைகளை, பொது மக்கள் குறைந்த விலையில் அடையும் வகையில் மாநிலத்தில் உள்ள அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளை கண்ணாடி இழை வடம் கொண்டு இணைப்பதே “தமிழ்நெட்” திட்டத்தின் நோக்கமாகும். “பாரத்நெட்” திட்டம் கிராமப்புறங்களுக்கு மட்டுமே அதிவேக அலைக்கற்றை இணைப்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், “பாரத்நெட்” திட்டம் அணுகல் வலையமைப்பாக (Access) *மட்டுமே செயல்படும். ஆனால் “தமிழ்நெட்” திட்டமானது நகர்ப்புறம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு அதிவேக அலைக்கற்றை இணைப்பை வழங்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், “தமிழ்நெட்” திட்டம், மைய* (Core) *மற்றும் ஒருங்கிணைப்பு* (Aggregrate) *வலையமைப்பாகவும் செயல்படும்.*

“தமிழ்நெட்” திட்டம், “பாரத்நெட்” திட்டத்தின் செயல்பாட்டினை மேம்படுத்தும் வகையில் பேக்ஹால் (Backhaul) *கண்ணாடி இழை உட்கட்டமைப்பாகச் செயல்படும். இத்திட்டம் பாரத்நெட் திட்டத்துடன் இணைந்த, ஒருங்கிணைந்த டிஜிட்டல் கட்டமைப்பை* (UDI) *உருவாக்க உதவும். இது தமிழ்நாட்டு மக்களுக்கு குறைந்த விலையில் தரமான டிஜிட்டல் சேவைகளை வழங்குவதற்கு முக்கிய கட்டமைப்பாகத் திகழும்.*

4. ஒருங்கிணைந்த டிஜிட்டல் கட்டமைப்பின் (UDI) நன்மைகள்

பள்ளிக் கல்வி, உயர் கல்வி, காவல் துறை, சுற்றுலா துறை, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள்,

சுகாதாரம், கூட்டுறவு, உணவு (ம) நுகர்வோர் பாதுகாப்புத் துறை, பதிவுத் துறை போன்ற பல்வேறு அரசுத் துறைகள், அரசு சேவைகளை பொது மக்கள் பயன்படுத்தும் வகையில் இணையவழி (Online) *சேவைகளை வழங்கி வருகின்றன. இச்சேவைகளுக்காக அனைத்து துறைகளும் அதிக அளவில் செலவு செய்யும் நிலையே தற்போது உள்ளது. இந்த ஒருங்கிணைந்த டிஜிட்டல் கட்டமைப்பு (பாரத்நெட் மற்றும் தமிழ்நெட்)-க்கு மாறுவதன்மூலம், இத்தகைய இணையவழி சேவைகளைப் பயன்படுத்துகின்ற அரசுத் துறையினர், செலவினங்களைக் குறைத்து, அதிக அலைவரிசையுடன் கூடிய இணைப்புகளின் வழியாக இணையவழி சேவைகளையும், அதன்மூலம் துறைத் தேவைகளையும் பூர்த்தி செய்ய இயலும். குறிப்பாக கிராமப்புறங்களில் இதன்மூலம் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப் பெற்று, பொது மக்கள் அனைவரும், அவர்களின் இல்லங்களிலேயே அரசின் பல்வேறு இணையவழிச் சேவைகளைப் பெறும் வகையில் மாற்றத்தை ஏற்படுத்துவது, மாநிலத்தின் சமூகப் பொருளாதார நிலையினை மேம்படுத்த உதவும்.*

அத்தியாயம்-VI

தமிழ் இணையக் கல்விக் கழகம் (த.இ.க.)

1. அறிமுகம்

தமிழ் இணையக் கல்விக் கழகம், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் 1975, பிரிவு 27-ன் கீழ் தமிழ் இணையப் பல்கலைக்கழகமாக (த.இ.ப.) நிறுவப்பட்டு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின்கீழ் இயங்கி வருகிறது. தமிழ் இணையப் பல்கலைக்கழகமானது தமிழ் இணையக் கல்விக் கழகமாக 2010 ஆம் ஆண்டு ஜூலை 16 ஆம் நாள் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் முக்கியமான குறிக்கோள் தமிழ்க் கல்வியை இணையம்மூலம் புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு அளிப்பது, தமிழ் நூல்களை மின்னுருவாக்கம் செய்தல் மற்றும் கணினித் தமிழை வளர்ப்பதாகும்.

2. நோக்கங்கள்

- *தமிழ் மொழியில் சான்றிதழ், மேற்சான்றிதழ், பட்டயம், மேற்பட்டயம், பட்டம் முதலிய கல்வித் திட்டங்களை நடத்துதல்.*

- ❖ *கணினித் தமிழை மேம்படுத்துதல்.*
- ❖ *தமிழ் மின் நூலகம் மற்றும் பண்பாட்டு மின்களஞ்சியத்தை நிர்வகித்தல்.*
- ❖ *தமிழர் பண்பாடு மற்றும் நாகரிகம் பற்றிய தகவல்களை உலகம் முழுவதும் புலம்பெயர்ந்த தமிழர்களுக்கும், மற்றவர்களுக்கும் அளித்தல்.*

3. கல்வித் திட்டங்கள்

தமிழ் இணையக் கல்விக் கழகத்தால் மழலைக் கல்வி, சான்றிதழ்க் கல்வி, மேற்சான்றிதழ்க் கல்வி, பட்டயம், மேற்பட்டயம், இளநிலைப் பட்டம் (தமிழியல்) முதலான கல்வித் திட்டங்கள் அளிக்கப்படுகின்றன. அதன் விவரங்கள் பின்வருமாறு:

3.1 மழலைக் கல்வி

மழலைக் கல்வி என்பது இளஞ்சிறார்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

3.2 சான்றிதழ் கல்வி

சான்றிதழ் கல்வி பின்வரும் மூன்று நிலைகளில் வழங்கப்படுகின்றன:—

- *அடிப்படை நிலை (1 மற்றும் 2 ஆம் வகுப்புகளுக்கு இணையானது)*
- *இடை நிலை (3 மற்றும் 4 ஆம் வகுப்புகளுக்கு இணையானது)*
- *மேல் நிலை (5 மற்றும் 6 ஆம் வகுப்புகளுக்கு இணையானது)*

இக்கல்வித் திட்டத்தின் வாயிலாக இதுவரை மொத்தம் 11,162 மாணவர்கள் தேர்ச்சிப் பெற்றுள்ளனர்.

3.3 மேற்சான்றிதழ் கல்வி

மேற்சான்றிதழ் கல்வி பின்வரும் மூன்று நிலைகளில் வழங்கப்படுகின்றன:—

- *நிலை 1 (7 மற்றும் 8 ஆம் வகுப்புகளுக்கு இணையானது)*
- *நிலை 2 (9 மற்றும் 10 ஆம் வகுப்புகளுக்கு இணையானது)*
- *நிலை 3 (11 மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கு இணையானது)*

[2023 ஏப்ரல் 1

இக்கல்வித் திட்டத்தின் வாயிலாக இதுவரை மொத்தம் 1,225 மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

3.4 இளநிலைப் பட்டக் கல்வி (தமிழியல்)

இளநிலைப் பட்டக் கல்வி (தமிழியல்) பாடத் திட்டமானது பட்டயம், மேற்பட்டயம், பட்டம் முதலான கூறுநிலைகளை உள்ளடக்கியது. இக்கல்வித் திட்டத்தின் வாயிலாக இதுவரை தேர்ச்சி பெற்றுள்ள மாணவர்களின் எண்ணிக்கை விவரங்கள் பின்வருமாறு:

- *பட்டயப் படிப்பு – 2372*
- *மேற்பட்டயப் படிப்பு – 1755*
- *பட்டப் படிப்பு – 1394*

மேற்கூறிய கல்வித் திட்டங்கள் 27 நாடுகளில் உள்ள 135 தொடர்பு மையங்களின் மூலமாக வழங்கப்படுகின்றன. அதன் விவரங்கள் தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் இணைய தளத்தில் (www.tamilvu.org) *பதிவேற்றப்பட்டுள்ளன.*

4. இதர திட்டங்கள்

4.1 தீராக் காதல் திருக்குறள்

தமிழ் இணையக் கல்விக்கழகம் திருக்குறளின் பெருமைகளை இன்றைய தலைமுறையினர் அறியும் வண்ணம் 'தீராக் காதல் திருக்குறள்' என்ற பெயரில் தீந்தமிழ் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து நடத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதன் முதல் நிகழ்ச்சியாக தமிழ்நாட்டில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்குக் 'குறளோவியம்' என்ற தலைப்பில் ஓவியப் போட்டி நடத்தப்பட்டு, சிறந்த ஓவியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அம்மாணவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 15.01.2022 (திருவள்ளுவர் தினம்) அன்று வள்ளுவர் கோட்டத்தில் பரிசுகள் வழங்கப்பட்டன. அவ்வோவியப் போட்டியில் சிறப்பான 365 ஓவியங்கள் தேர்வு செய்யப்பட்டு நாட்காட்டி புத்தகமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது. இந்நாட்காட்டிப் புத்தகம் ஒரு முடிவில்லா நாட்காட்டியாக வடிவமைக்கப்பட்டு தமிழ் இணையக் கல்விக் கழகத்தில் கிடைக்கிறது.

2023 ஏப்ரல் 1]

21-12-2022 அன்று கலைவாணர் அரங்கத்தில் 'குறள் இனிது' என்ற தலைப்பில் திருக்குறள் நாட்டிய நாடகம் நடத்தப்பட்டது.

4.2 தமிழ்ப் பரப்புரைக் கழகம்

தமிழ் மொழியை இரண்டாம் மற்றும் மூன்றாம் மொழியாக வெளிநாடுகளில் கற்பிக்கும் அமைப்புகளுக்கு நிதியுதவி வழங்குதல், ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தல் ஆகியவற்றிற்காக "தமிழ்ப் பரப்புரைக்கழகம்" உருவாக்கப்பட்டு ரூ.1 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இணையவழி தமிழ்க் கல்வி, தற்பொழுது 6 நிலைகளில் வழங்கப்பட்டு வருகின்றது. இது இப்பொழுது 5 நிலைகளாக (திறன் அடிப்படையில்) மாற்றியமைக்கப்பட்டு, பாடங்களை எழுதும் பணிகள் நடைபெற்று வருகின்றன. தமிழ் கற்கும் மாணவர்களுக்கு நிலை-1 முதல் பருவத்திற்கான பாடநூல்கள், துணைக்கருவிகள் வெளியீடு மற்றும் தமிழ்ப் பரப்புரைக் கழகச் செயல்பாடுகளின் தொடக்க விழா மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 24-9-2022 அன்று நடைபெற்றது.

தமிழ்ப் பரப்புரைக் கழகத்தால் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- *சிலம்பாட்டப் பயிற்சிக்கான அடிப்படை பயிற்சி காணொலிகளாகப் படமாக்கம் செய்யப்பட்டுள்ளது.*
- *தேவாரப் பாடல்கள் சமகால இசை மற்றும் காட்சிகளாக வழங்கப்படுகின்றன.*
- *தன்னார்வல ஆசிரியர்களுக்கான "தமிழ் கற்பிப்பதற்காக ஆசிரியர் பட்டயப் பயிற்சி" என்ற கல்வித்திட்டம் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்துடன் இணைந்து வழங்கப்படவுள்ளது.*
- *இணையவழியில் தமிழ் கற்பிப்பதற்குத் தேவையான ஆசிரியர் தொகுப்பு உருவாக்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு இணைய வழியில் தமிழ் வகுப்புகள் நடத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

4.3 உயர்கல்வி

- *"தமிழைப் பிழையின்றி எழுதுவோம்" என்ற தமிழ் இலக்கணப் புத்தகமானது உருவாக்கப்பட்டுள்ளது.*

[2023 ஏப்ரல் 1

- இளநிலைத் தமிழியல் பட்டக் கல்விக்கான பாடத்திட்டம் சீராய்வு செய்யப்பட்டு, பாடங்கள் எழுதும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- முதுகலைத் தமிழ்ப் பட்டக் கல்விக்கான புதிய பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

5. மின்-நூலகம்

5.1 தமிழிணையம் – மின்நூலகம்

தமிழ் இணையக் கல்விக்கழகம், தமிழிணையம் மின் நூலகத்தை (www.tamildigitallibrary.in) உருவாக்கியுள்ளது. இம்மின் நூலகத்தில் 18 ஆம் நூற்றாண்டு முதல் தமிழ் இலக்கியம், சமயம், வரலாறு, மருத்துவம் முதலிய பொருண்மைகளைக் கொண்ட அரிய நூல்கள், பருவ இதழ்கள், பனை ஓலைச்சுவடிகள் உள்ளன. இந்த மின் நூலகம் தெற்காசிய மொழிகளில் மிகப் பெரிய மின் நூலகமாகத் திகழ்கிறது. 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நூல்கள், பருவ வெளியீடுகள் மற்றும் 7,68,097 பனை ஓலைச்சுவடிகள் இடம் பெற்றுள்ளன. தமிழிணையம் மின் நூலகம் தொடர்ச்சியாக மேம்படுத்தப்பட்டும், அரிய ஆவணங்களை வழங்கியும் வருகிறது. இந்த இணைய மின் நூலகத்தை 4,41,22,519 முறை பயனர்கள் பார்வையிட்டுள்ளனர்.

5.2 உள்ளடக்கத் தமிழ் மின்நூலகம்

மின்நூலக இணையதளத்தை பார்வைக் குறைபாடுடையவர்களும் பயன்படுத்தும் வகையில் உள்ளடக்கத் தமிழ் மின்நூலகமாக மாற்ற ரூ.1.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது, 14 இலட்சம் பக்கங்களை உருபடத்திலிருந்து எழுத்துணரி முறையில் (OSR Technology) மாற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

5.3 அரிய ஒளி-ஒலி, ஒளிப்படங்கள் மற்றும் பிற வரலாற்று ஆவணங்கள் மின்னுருவாக்கம்

அரிய ஒளி-ஒலி, ஒளிப்படங்கள் மற்றும் பிற வரலாற்று ஆவணங்களை மின்னுருவாக்கம் செய்ய ரூ.1.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை 5,535 ஒளி-ஒலி, ஒளிப்படங்கள் மற்றும் பிற ஆவணங்கள் மின்னுருவாக்கப்பட்டுள்ளன. மின் நூலக இணையதளத்தை மறுசீரமைக்கும் பணிகள் நடைபெற்று

2023 ஏப்ரல் 1]

வருகின்றன. இப்பணிகள் முடிவடைந்தபின் மேற்கண்ட பொருண்மைகள் இணையத்தில் பதிவேற்றப்படும்.

5.4 தமிழர் தகவலாற்றுப்படை

தமிழ்மொழி, இலக்கியம், கலைகள் பற்றிய விரிவான மற்றும் ஒருங்கிணைந்த களஞ்சியமாகத் தமிழர் தகவலாற்றுப்படையினைத் த.இ.க. உருவாக்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் தமிழக வரலாறு மற்றும் பண்பாடு சார்ந்த 31,158 ஒளிப்படங்களைக் கொண்ட www.tagavalaatruppadai.in *என்ற இணையதளத்தையும் உருவாக்கியுள்ளது. இந்த தகவலாற்றுப்படை களஞ்சியம் தொடர்ச்சியாக மேம்படுத்தப்பட்டும், கூடுதல் கலைப்பொருட்கள் மற்றும் நினைவுச் சின்னங்களின் தகவல்கள் பதிவேற்றம் செய்யப்பட்டும் வருகின்றன. இந்த இணையதளத்தை 27,71,565 முறை பயனர்கள் பார்வையிட்டுள்ளனர்.*

5.5 மெய்நிகர் அருங்காட்சியகம் உருவாக்குதல்

தமிழக வரலாறு மற்றும் பண்பாடு சார்ந்த பொருண்மைகளுக்கான மெய்நிகர் அருங்காட்சியகம் அமைக்க ரூ.7.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, முதலாம் ஆண்டிற்கு ரூ.1.50 கோடி வழங்கப்பட்டுள்ளது. இராஜேந்திர சோழனின் கடற்பயணங்கள் மற்றும் தென்கிழக்கு ஆசிய கடல் வாணிபம், சிலப்பதிகாரம் – புகார்க் காண்டம் – இந்திரவிழா ஆகியவற்றிற்கான கருப்பொருளுக்காக விருப்ப ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

6. இதர திட்டங்கள்

6.1 கப்பலோட்டிய தமிழன்-150-வது பிறந்த நாள் விழா-நூல்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிகளை இணையத்தில் வெளியிடல்

'கப்பலோட்டிய தமிழன்' வ.உ. சிதம்பரனார் அவர்களின் 150-வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அவரது நூல்கள் மற்றும் கையெழுத்துப்பிரதிகள் மின்மயமாக்கப்பட்டு தமிழ் இணையக் கல்விக் கழக இணையத்தில் வெளியிடுதலுக்கான திட்டப் பணிகளில், 127 நூல்கள், கையெழுத்துப்பிரதிகள், ஒளிப்படங்கள், ஆவணங்கள் மற்றும் பல்லூடக ஆவணங்கள் மின்னுருவாக்கம் செய்யப்பட்டு, வ.உ.சி. அவர்களுக்காக சிறப்பாக உருவாக்கப்பட்ட இணையப்பக்கம் 18.11.2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டது. (https://www.tamildigitallibrary.in/voc)

[2023 ஏப்ரல் 1

6.2 அனைத்து பல்கலைக்கழகங்களின் முனைவர் பட்ட ஆய்வுச் சுருக்கம், ஆய்வுத் தொகுப்புகள் மற்றும் கலைச்சொற்களின் பட்டியலை ஆவணப்படுத்தல்

தற்போது வரை 354 முனைவர் பட்ட ஆய்வேட்டின் ஆய்வுச் சுருக்கம் மற்றும் ஆய்வுத் தொகுப்புகள் உயர் கல்வித் துறையின் கீழுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்கள் மற்றும் பிற துறைகளிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இப்பொருண்மைகளுக்கான ஒப்புகைச்சான்று வழங்கப்பட்டு வருகிறது. மின் நூலக இணையதளத்திலும் இவை வெளியிடப்பட்டு வருகின்றன.

7. ஆய்வு மற்றும் உருவாக்கம் – கணினித் தமிழ்ப் பிரிவு

7.1 கணினி மொழியியல்

கணினி மொழியியல் பிரிவானது இலக்கணக் குறிப்புடன் விரிதரவு, இருமொழி இணை தரவு (தமிழ் – ஆங்கிலம்) வரைபட தரவுதளம், தமிழ் இலக்கியங்களுக்கான சொல்லடைவு மற்றும் தொடரடைவுகள், கணினிக்கான தமிழ் இலக்கணம் உருவாக்குதல், கணினித் தமிழ்க் கருவிகள், இலக்கணக் குறிப்பு அளிக்கும் கருவிகள், வட்டெழுத்துக்கள் போன்ற எழுத்துருக்கள், ஒருங்குறி செயல்பாடுகள் போன்றவற்றைச் செயல்படுத்துகிறது.

7.2 Use case மற்றும் கணினிக் கருவிகள் உருவாக்கம்

தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் பாடங்களுக்கான Usecase *எழுதப்பட்டுள்ளது மற்றும் தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் மின் நூலகத்திற்கான* Usecase *எழுதும் பணி நடைபெற்று வருகிறது.*

7.3 கணித்தமிழ்ப் பேரவை (KTP)

கணித்தமிழ்ப் பேரவை என்பது கணினித் தமிழ் குறித்து மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் உருவாக்கப்பட்ட திட்டமாகும். கல்லூரி மாணவர்கள் தமிழ் உள்ளடக்கம், செயலி உருவாக்கம், தமிழ் கட்டுரைகள் எழுதுதல் போன்றவற்றைச் செயல்படுத்துவதற்கு துறைசார்ந்த வல்லுநர்கள் அவர்களை ஊக்குவிக்கின்றனர். இதுவரை தமிழகம் முழுவதும் பல்கலைக்கழகங்கள் / கல்லூரிகளில் 212 கணித்தமிழ்ப் பேரவை மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 1]

7.4 கணினித் தமிழ்க் கருவிகள் உருவாக்கம்

கடந்த 2022-2023 ஆம் ஆண்டு அறிவிப்பின்படி கணினித் தமிழ்க் கருவிகள் உருவாக்குவதற்கான பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன, அவை பின்வருமாறு:—

1. Chatbot and Question Answering System for Tamil
2. A Syntactic Parser for Tamil: A Data driven Approach
3. POS and Semantic role of labelling
4. Developing a sentiment Analyzer Tool for Code Mixed Tamil Online Text
5. Real–time multi-dialect automatic speech recognition system for Tamil
6. Multimodal Fused Tamil Hand written and Palm-leaf character recognition tool based on neural network
7. Hyphenation Support for Tamil typesetting.

7.5 கணினித் தமிழில் நிரலாக்கப் போட்டி

தமிழ் இணையக் கல்விக்கழகம் வேலூர் தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணைந்து 19-12-2022 அன்று மாணவர்களை ஊக்குவிப்பதற்காக ஒரு நிரலாக்கப் போட்டியை நடத்தியது. அதில் கீழ்க்கண்ட தலைப்புகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

1. Identifying context based precedent rulings for a given case in Tamil.
2. Identifying name boards on the bus stop (Udhavi)
3. Sign language subtitle generator in Tamil.

[2023 ஏப்ரல் 1

அத்தியாயம்-VII

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம் (ICTACT)

1. முன்னுரை

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம் (ICTACT) என்பது ஒரு இலாப நோக்கற்ற அமைப்பாகும். இது 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் பொதுத் துறை மற்றும் தனியார் கூட்டு முயற்சியால் தொடங்கப்பட்ட அமைப்பாகும். ICTACT-ன் நோக்கம் இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் உள்ள உயர்கல்வி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்குப் பல்வேறு தொழில்நுட்பக் களங்களில் பயிற்சி அளிப்பதாகும்.

ICTACT நிறுவனம் ஆசிரியர் திறன் மேம்பாடு, மாணவர் திறன் மேம்பாடு, தொழில்முனைவோர் மேம்பாடு, இளைஞர் திறன் மேம்பாடு, ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள், டிஜிட்டல் திறன் மேம்பாடு மற்றும் தொழில் நிறுவன தொடர்பு போன்றவற்றை ஏழு தூண்களாகக் கொண்டு செயல்படுகிறது. இந்நிறுவனம், தமிழ்நாடு அரசின் பிரதிநிதிகள் மற்றும் தொழில்துறைசார் முன்னணி நிறுவனங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு தன்னாட்சி நிர்வாகக் குழுவால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

2. செயல்பாடுகள்

2022-2023 ஆம் ஆண்டிற்கான ICTACT-ன் செயல்பாடுகள் மற்றும் சாதனைகள்:

2.1 ஆசிரியர் திறன் மேம்பாடு

மாநிலத்தில் உள்ள பல்வேறு பகுதிகளில் 137 ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டங்கள்மூலம் 4,700 ஆசிரியர்கள் பல்வேறு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் (ICT) திறன்களில் பயிற்சியைப் பெற்றுள்ளனர்.

2.2 திறன் மேம்பாடு

ICTACT மாநிலத்தில் உள்ள கிராமப்புற கல்லூரிகளில் பயிலும் 68,772 மாணவர்களுக்கு அவர்களின் வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்த பயிற்சி அளித்து சான்றிதழ் வழங்கியுள்ளது.

2023 ஏப்ரல் 1]

2.3 தொழில் முனைவோர் மேம்பாடு

தமிழ்நாடு முழுவதும் உள்ள 131 கல்லூரிகளைச் சேர்ந்த 33,968 மாணவர்கள் பயனடையும் வகையில், தொழில்முனைவோர் விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

2.4 இளைஞர் திறன் மேம்பாடு

1. கல்லூரி மாணவர்களின் சுயமாக கற்கும் பழக்கத்தை வளர்ப்பதற்கும், முன்னணி தொழில்நுட்பங்களின் அடிப்படைகளை மாணவர்களே கற்கும் வகையிலும் "நியூ இந்தியா லெர்னாதன் 2022" ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த முன்னெடுப்பில் 2,01,949 மாணவர்கள் பங்கேற்று 1,68,727 ஆன்லைன் சான்றிதழ் பயிற்சிகளை முடித்துள்ளனர்.

2. தமிழக மாணவர்களுக்கான இளைஞர் தலைமைத்துவ உச்சி மாநாடு 2022-ன் ஒரு பகுதியாக "யூத் டாக் 2022" நடத்தப்பட்டது. இந்நிகழ்வு தேர்ந்த இளம் பேச்சாளர்கள் மற்றும் தம் வயதொத்த சமூகத்தினருக்கு ஊக்கமளிக்கும் வகையில் தங்கள் எண்ணங்களைத் தெரிவிக்கக்கூடிய தலைவர்களை அடையாளம் காணும் நோக்கில் நடத்தப்பட்டது. சென்னை, கோவை, சேலம், கன்னியாகுமரி, மதுரை, புதுச்சேரி உள்ளிட்ட 6 மண்டலங்களில் "யூத் டாக்" நடத்தப்படுகிறது. இறுதிச் சுற்றில் பங்கேற்க, பிராந்திய இறுதிப் போட்டியில் வெற்றிபெறும் முதல் 100 மாணவர்களும், மண்டல இறுதிப் போட்டியில் முதல் 6 வெற்றியாளர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்நிகழ்வில் 15,119 மாணவர்கள் கலந்துகொண்டனர். பிராந்திய இறுதிப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள், பேச்சுத் திறனை வெளிப்படுத்தும் வகையில் இறுதிப் போட்டியில் கலந்து கொண்டனர்.

2.5 ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள்

ICTACT *நிறுவனம் காலாண்டு அடிப்படையில் சக மதிப்பாய்வு செய்யப்பட்ட 6 சர்வதேச ஆராய்ச்சி இதழ்களை வெளியிடுகிறது. 2022-2023 ஆம் ஆண்டில், 187 ஆய்வுக் கட்டுரைகள் வெளியிடப்பட்டன. இவை பல்வேறு சர்வதேச தரவுத்தளங்களில் நிரலிடப்பட்டுள்ளன.*

➢ *ஐசிடிஏசிடி (*ICTACT*) தகவல் தொழில்நுட்ப ஆய்விதழ் (*IJCT*)*

- ஐசிடிஏசிடி (ICTACT) ஒளிப்பேழை மற்றும் காட்சி ஒளிப் பேழை ஆய்விதழ் (IJIVP)
- ஐசிடிஏசிடி (ICTACT) மென் கணினி ஆய்விதழ் (IJSC)
- ஐசிடிஏசிடி (ICTACT) நுண் மின்னணுவியல் ஆய்விதழ் (IJME)
- ஐசிடிஏசிடி (ICTACT) மேலாண்மைக் கல்வி ஆய்விதழ் (IJMS)
- ஐசிடிஏசிடி (ICTACT) தரவு அறிவியல் மற்றும் இயந்திர கற்றல் ஆய்விதழ் (IJD SML)

2.6 டிஜிட்டல் திறன் மேம்பாடு

ICTACT நிறுவனம் ஒன்றிய அரசின் திட்டமான "பிரதான் மந்திரி கிராமின் டிஜிட்டல் சக்ஷர்தா அபியான் (PMGDISHA)"-க்கான மதிப்பீடு மற்றும் சான்றளிப்பு முகமையாகும். 2022-2023 ஆம் ஆண்டில் 15,14,418 விண்ணப்பதாரர்களுக்கு டிஜிட்டல் கல்வியறிவுக்கான மதிப்பீடு செய்யப்பட்டு சான்றிதழ் வழங்கப் பெற்றுள்ளது.

2.7 தொழில் நிறுவனத் தொடர்பு

ICTACT கல்வித் துறையில் வரவிருக்கும் தொழில்நுட்பங்கள் மற்றும் அவற்றின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை வழங்குவதற்காக முன்னணி பெருநிறுவனங்களின் ஆதரவுடன் கீழ்க்காணும் மாநாடுகளை நடத்தியது. இந்த நிகழ்வுகளின்மூலம் 4,704 மூத்த கல்வியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

1. BRIDGE – கன்னியாகுமரி, சென்னை 2022 மற்றும் சென்னை 2023
2. 5G கான்ஃப்ளுயன்ஸ் 2022
3. ஆட்டோடெஸ்க் – சிந்தனை தலைமை சந்திப்பு 2022
4. சிம்போசியம் ஆன் ஆண்ட்ராய்டு அப்ளிகேஷன் டெவெலப்மென்ட் வித் கோட்லின்
5. ஹனிவெல் டிஜிட்டல் இளைஞர் திறன் மேம்பாட்டு உச்சிமாநாடு 2022

2023 ஏப்ரல் 1]

6. *இன்ஃபோகாம் இந்தியா உச்சி மாநாடு 2022*
7. UiPath *கல்வித் தலைவர்கள் வட்டமேசை*
8. *சர்வீஸ் நவ் பார்ட்னர்ஷிப் துவக்கம்*
9. *ஆரக்கிள் உறுப்பினர் மைய அமர்வு*
10. *ஹனிவெல் கல்வி உச்சி மாநாடு 2022*

2.8 செயல்படுத்தப்பட்ட புதிய அரசுத் திட்டங்கள் (2022-2023)

நான் முதல்வன் – ஒரு அனுபவத் திட்ட அடிப்படையிலான கற்றல்

*"நான் முதல்வன்" திட்டத்தின்கீழ், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (*TNSDC*) ஒரு அனுபவத் திட்ட அடிப்படையிலான கற்றல் திட்டத்தை ஒருங்கிணைத்தது. அண்ணாப் பல்கலைக்கழகம் பல்கலைக்கழக பங்குதாரராகவும்,* IBM *தொழில்நுட்ப பங்குதாரராகவும்,* ICT *அகாடமி ஆதரவு பங்குதாரராகவும் உள்ளனர். மேலும்* NASSCOM *திறன் சான்றிதழுக்கான பங்குதாரராக உள்ளது.*

IBM *நிறுவனம் 50 தொழிற்துறை சிக்கல்களை சவால்களாக வழங்கியது. பொறியியல் கல்வி பயிலும் மாணவர்கள் 100 மணிநேர அளவில் திட்ட அடிப்படையிலான கற்றலை 3 கல்வி கிரெடிட்களுடன் தேர்வு பாடமாகத் தெரிவு செய்து அச்சவால்களுக்கான தீர்வினை நல்கினர்.*

ஆசிரியர்கள் மற்றும் தொழில் துறை வழிகாட்டிகளின் உதவியுடன் சுறுசுறுப்பான அணுகுமுறைகளுடன் இத்திட்டங்களை முடிக்க மாணவர்கள் நான்கு குழுக்களாகப் பணிபுரிந்தனர்.

திட்டத்தை வெற்றிகரமாக முடித்த மாணவர்களுக்கு "நாஸ்காம்" நிறுவனம் தேசிய திறன் சான்றிதழை வழங்கியது. ICTACT *நிறுவனம், ஒருங்கிணைப்பு முகமையாக இருப்பதால் ஆசிரியர் பயிற்சியை எளிதாக்கியதுடன், தமிழ்நாட்டில் மாணவர்களை அணிதிரட்டவும் உதவியது.*

மொத்தம் 397 கல்லூரிகள் பதிவு செய்யப்பட்டு, 30 பயிலரங்குகள் நடத்தப்பட்டதுடன், 428 கல்லூரிகள் இணைந்து செயல்பட்டன. மேலும், 616 தனித்த தொடர்பு அலுவலர்கள் இணைக்கப்பட்டனர், 12,967 திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

[2023 ஏப்ரல் 1

அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைந்த மற்றும் தன்னாட்சி நிறுவனங்களில் இருந்து 2,313 ஆசிரியர்கள் மற்றும் 6-வது செமஸ்டர் படிக்கும் 54,421 CSE/IT/ECE மாணவர்கள் இத்திட்டத்தினால் பயனடைந்தனர்.

நான் முதல்வன் – கல்லூரி கனவு

12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு உயர் கல்விக்கு வழிகாட்டுவதற்காக "நான் முதல்வன்" திட்டத்தின்கீழ் "கல்லூரி கனவுகள்" திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரு உள்விளையாட்டு அரங்கில் தொடங்கி வைத்தார். பல்வேறு படிப்புகள், கல்லூரிகள், நுழைவுத் தேர்வுகள், கல்விக் கடன்கள் மற்றும் உதவித்தொகை போன்றவை பற்றிய விரிவான தகவல்களை இத்திட்டம் மாணவர்களுக்கு வழங்கியது.

ICTACT நிறுவனம் மாநிலம் முழுவதும் உள்ள உயர்கல்வி நிறுவனங்களுடன் பரந்த தொடர்பை ஏற்படுத்தியுள்ளதன்மூலம் "நான் முதல்வன் – கல்லூரி கனவு" எனும் இத்திட்டத்தின் அற்புதமான வெற்றிக்குக் காரணமாக அமைந்தது. வெற்றிகரமாக 4 நாட்கள் நடைபெற்ற நிகழ்ச்சியில், அனைத்து மாவட்டங்களிலும் 100—க்கும் மேற்பட்ட பேச்சாளர்கள் மற்றும் 70,000-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர்.

2.9 உள்ளடக்கத்திற்காக பெருநிறுவனங்களுடன் புதிய கூட்டுப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (2022-2023)

ICTACT நிறுவனம், சர்வீஸ் நவ் மற்றும் டேலி ஆகிய நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இது வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் மாணவர்கள் தங்கள் திறன்களை வளர்க்க உதவும்.

2.10 வேலைவாய்ப்புக்காக பெருநிறுவனங்களுடன் புதிய கூட்டுப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (2022-2023)

ICTACT நிறுவனம், ஒமேகா ஹெல்த் கேர், கோரோ ஹெல்த், டீச் நூக், சிரஸ் லேப்ஸ், எம்எம்சி இன்ஃபோடெக் சர்வீசஸ், மேக்ஸ்டர், விஷனரி ஆர்சிஎம், க்ரூடன் டெக்னாலஜிஸ், லுமினா டேட்டாமேடிக்ஸ், ஈக்வினிட்டி, க்வெஸ் கார்ப், டிரினிட்டி ஸ்கில் ஒர்க்ஸ், ஃபோகஸ் எடுமேட்டிக்ஸ், ஆல்செக் டெக்னாலஜிஸ், பேங்க்ஸோன், ரெனால்ட், ஒலம் இன்ஃபர்மேஷன், ருத்ரம் டெக்னாலஜிஸ், டெலிகாம் துறை, வாக்கன் டெக்னாலஜிஸ்,

2023 ஏப்ரல் 1]

ஜென்பேக்ட், வின் வேஸ், தாஜ் சொல்யூஷன்ஸ், டிரான்பேக் ஸாஃப்ட்வேர் மற்றும் E2E பணியமர்த்தல் ஆகிய நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இதன்மூலம் மாணவர்கள் நல்ல நிறுவனங்களில் வேலைவாய்ப்புகளைப் பெற்றிட இயலும்.

2023 ஆம் ஆண்டில் படித்து பட்டம் பெற்று வெளிவரும் (ஏப்ரல் 2022 முதல் ஜனவரி 2023 வரை) மாணவர்களுக்கான வேலைவாய்ப்பின் தாக்கம் பின்வருமாறு:—

நிறுவனங்களின் எண்ணிக்கை – 287

நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு நேர்காணல்களின் எண்ணிக்கை – 279

வேலைவாய்ப்பு பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை – 14,494

சராசரி சம்பளம்: ரூ.2.4 இலட்சம் (ஆண்டிற்கு)

2.11 புதிய அரசு ஒப்பந்தங்கள்

ICTACT நிறுவனம், தமிழ்நாடு காவல் துறை வீட்டு வசதிக் கழகம், தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம், நான் முதல்வன் மற்றும் TICEL பயோ பார்க் ஆகியவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இது வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களில் மாணவர்கள் தங்கள் திறன்களை மேம்படுத்த பெரிதும் உதவும்.

2.12 2022-2023 ஆண்டில் செயல்படுத்தப்படும் சமூகப் பொறுப்புணர்வுத் (CSR) திட்டங்கள்

ICTACT நிறுவனம், TACTV, ELCOT, Atos, Capgemini, Finastra, PayPal, Microsoft, Inspirisys Systems, Bajaj Finserv, Cisco, ITC Infotech, Cognizant, Honeywell, Lenovo, FedEx மற்றும் R Systems போன்ற முன்னணி பெருநிறுவனக் கூட்டாளர்களுடன் இணைந்து புதிய சமூகப் பொறுப்புணர்வுத் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. இத்திட்டங்களின்மூலம் வளர்ந்து வரும் தொழில்நுட்பத் திறன்கள், தொழில்முனைவு திறன்கள் மற்றும் டிஜிட்டல் கற்பித்தல் திறன்கள் ஆகியவற்றில் அளிக்கப்பட்ட பயிற்சியால் தமிழ்நாட்டில் உள்ள மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயன்பெற்றனர்.

எண்	திட்டத்தின் பெயர்	செயல்படுத்தும் அமைப்பு/துறை
1	1,750 வேலையில்லாத இளைஞர்கள் மற்றும் நலிந்த பிரிவினருக்கான வேலைவாய்ப்புத் திறன் திட்டம்	தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி நிறுவனம்
2	1300 கல்லூரி ஆசிரியர்களுக்கான IT & Soft Skill அளிக்கும் ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டம்	தமிழ்நாடு மின்னணு நிறுவனம்
3	1,000 மாணவியருக்கான மேம்பட்ட தகவல் தொழில்நுட்பத் திறன்கள் அளிக்கும் மகளிரை உருமாற்றும் திட்டம்	கேப்ஜெமினி
4	2,500 மாணவர்களுக்கான மேம்பட்ட தகவல் தொழில்நுட்பத்திறன் அளிக்கும் மாணவர் அதிகாரமளிக்கும் திட்டம்	பேபால்
5	500 மாணவர்களுக்கான BFSI திறன்கள் அளிக்கும் மாணவர்கள் உருமாற்று திட்டம்	Finastra
6	400 கல்வியாளர்கள் மற்றும் 2,500 உயர்கல்வி மாணவர்களுக்கு இணையப் பாதுகாப்பு பயிற்சி	மைக்ரோசாப்ட்
7	5000 மாணவிகளுக்கான மேம்பட்ட தகவல் தொழில்நுட்பத் திறன்கள் அளிக்கும் Tech4ALL அனைத்து பெண்களுக்கும் அதிகாரமளிக்கும் திட்டம்	Cognizant
8	8,150 மாணவர்களுக்கான மேம்பட்ட தகவல் தொழில்நுட்பத் திறன் அளிக்கும் ஹனிவெல் மாணவர் அதிகாரமளிக்கும் திட்டம்	ஹனிவெல்
9	400 மாணவர்களுக்கான தகவல் தொழில்நுட்பத் துறையின் தயார்நிலை அளிக்கும் Aspire STEM கல்வித் திட்டம்	ஐடிசி இன்ஃபோடெக்

2023 ஏப்ரல் 1]

எண்	திட்டத்தின் பெயர்	செயல்படுத்தும் அமைப்பு/துறை
10	4,000 மாணவர்களுக்கான சில்லறை விற்பனை திறன் அளிக்கும் வேலைவாய்ப்புத் திறன் பயிற்சி	பஜாஜ் ஃபின்சர்வ்
11	350 மாணவர்களுக்கு மேம்பட்ட தகவல் தொழில்நுட்பத்திறன் பயிற்சி	இன்ஸ்பைரிசிஸ்
12	382 மாணவர்களுக்கான மேம்பட்ட தகவல் தொழில்நுட்பத்திறன் பயிற்சித் திட்டம்	லெனோவா
13	432 மாணவிகளுக்கான மேம்பட்ட தகவல் தொழில்நுட்பத்திறன் அளிக்கும் பெண்களுக்கு அதிகாரமளித்தல் திட்டம்	FedEx
14	5012 மாணவர்களுக்கு இணையப் பாதுகாப்பு குறித்த தொழிற்பயிற்சி	சிஸ்கோ
15	2768 மாணவர்களுக்கு IT, BFSI மற்றும் KPO திறன் பயிற்சி அளித்தல்	அடோஸ்

சமூகப் பொறுப்புணர்வுத் (CSR) திட்டங்கள் வழி பயனடைந்த மொத்த பயனாளிகள்: 35,144

2.13 2023 – 2024 ஆண்டிற்கான முன்மொழியப்பட்ட திட்டங்கள்

வ. எண்	திட்டத்தின் பெயர்	அமைப்பு/துறை
1	SC/ST/SCA சமூகத்தினருக்கான அரசு மற்றும் சுயநிதி நிறுவனங்களில் இறுதியாண்டு பயிலும் 6000 பொறியியல், கலை மற்றும் அறிவியல் மாணவர்களுக்கான சில்லறை விற்பனை, IT, ITeS, BFSI & டெலிகாம் தொடர்பான வேலைத் தயார்நிலைத் திட்டம்.	தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு கழகம் (TAHDCO)

வ. எண்	திட்டத்தின் பெயர்	அமைப்பு/துறை
2	*மாநில திட்டக்குழு – தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் – 500 ஆசிரிய உறுப்பினர்கள் மற்றும் 10,000 மாணவர்களுக்கான திட்ட அடிப்படையிலான கற்றல் திட்டம்*	*மாநில திட்டக்குழு* (SPC) – *தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள்* (TANII)
3	*5 ஆண்டுகளில் 35,000 மக்களுக்கு வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் பயிற்சி மற்றும் சான்றிதழ் வழங்க உயர்தனிச் சிறப்பு நிறுவனம் நிறுவப்படும். இதில் தொழில் வல்லுநர்கள், அரசு அதிகாரிகள், ஆசிரிய உறுப்பினர்கள் மற்றும் மாணவர்கள் உள்ளிட்டோர் பயன்பெறுவர்.*	*தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம்* (ICTACT)
4	CSR *திட்டத்தின்கீழ் திறன் மேம்பாட்டு திட்டம்*	*ஃபினாஸ்ட்ரா, ஆர் சிஸ்டம்ஸ், தமிழ்நாடு காவலர் குடியிருப்பு வாரியம், ஹனிவெல், அடோஸ், பஜாஜ் ஃபின்சர்வ் மற்றும் சிபிசிஎல்*
5	*தமிழ்நாடு முழுவதும் உள்ள மாணவர்களுக்கான திறன் மற்றும் ஆராய்ச்சிக்கான உயர் தனிச் சிறப்பு நிறுவனம் நிறுவப்படும்.*	TICEL *பயோ பார்க்*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 1]

வேலைவாய்ப்புக்காக முன்மொழியப்பட்ட திட்டங்கள்:

வேலைவாய்ப்பு முகாம் நிகழ்வுகளின் எண்ணிக்கை: 24

நிர்ணயிக்கப்பட்ட வேலைவாய்ப்பு எண்ணிக்கை இலக்கு: 5,000 மாணவர்கள்

வேலைவாய்ப்பு முகாம்களின் எண்ணிக்கை: 200


நிர்ணயிக்கப்பட்ட வேலைவாய்ப்பு எண்ணிக்கை இலக்கு: 20,000 மாணவர்கள்

பங்குதாரர்களின் எண்ணிக்கை: 200 அமைப்புகள்


குறிப்பிட்ட திறன் பெற்றோர் – ஆட்சேர்ப்புமூலம் –பயிற்றுவித்து பணியமர்த்தும் மாதிரி: 2,000 மாணவர்கள்

கல்லூரியில் தொழில் நிறுவன நேரடி ஆட்சேர்ப்பு: 500 – 1000 மாணவர்கள்

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



[2023 ஏப்ரல் 1



TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai, Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the
Tamil Nadu Legislative Assembly Rules and
printed by the
Commissioner of Stationery and Printing,
Chennai-600 002.